தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - ரு



முக வெளியீடு : அசுஉ

தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - ரு

[கஉ முதல் கரு புத்தகங்கள்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
மைசவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Nov., 1956

THAMIZHP PULAVAR VARISAI
Vol. V

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office ;

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, Z/140, Broadway, Madras - 1—C. 800.

பதிப்புரை

நாடு, மொழி ஒன்றிலேயே உயர்ச்சிபெறும்; மொழியை வளர்ப்போர் புலவர் பெருமக்கள்; அவர்கள் வரலாற்றை அறிவது, அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவதாகும்.

பெயர் தெரியாது மறைந்துபோய் அவர் பாடிய பாட்டுக்களில் கருத்துச் செறிவுடைய சொற்றொடர்களானும், உறுப்பு முதலிய சிறப்பானும் பிறவற்றானும் பெயர்கொண்டு நிலவும் புலவர் பெருமக்களும் அஃதன்றி மறைந்து பெயரே தெரியாது, அவர் பாடித்தந்த நூல்கள் மட்டில் இருக்கும் புலவர் பெருமக்களும் பலராவர்.

இத்தகைய மாண்புமிக்க கலைச்செல்வர்களின் வரலாற்றை இயன்றவரை தொகுத்து நம் தமிழ்கூறு நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு முதற்கண் சங்ககாலத்து வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் வரலாற்றைச் **'சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை'** என்னும் தொகுப்பில் பதிறொறு தனி நூல்களாக வெளியிட்டோம். பின்னர் அவைகளைத் தொகுத்துக் கட்டடஞ்செய்து நூல்நிலையங்கட்கு ஏற்றவாறு அமைத்து **ஆறு பகுதிகளாக வெளியிட்டுள்ளோம்.**

பின்னர்ச் சங்க காலத்துக்குப் பின்பு விளங்கியிருந்த புலவர் பெருமக்களின் வரலாற்றைத் தொகுக்க எண்ணித் **தமிழ்ப் புலவர் வரிசை** என்னும் பெயருடன் முயன்று இதுகாறும் ஒன்று முதல் **பதினைந்து** நூல்கள்வரை கிடைத்த வரலாற்றைக்கொண்டு **திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்களை** எழுதச்செய்து வெளியிட்டுள்ளோம்.

இவ்வரலாறு வெளியிடுவதற்குப் புலவர்களும் அறிவுமிக்க மாண்பினரும் தத்தமக்குத் தெரிந்த புலவர்களின் வரலாற்றைத் தாங்கள் அறிந்தவரையில்—கேட்ட அளவில்—தெரிந்து வரைந்

தனுப்பிஞல் மேலும் தொடர்ந்து புலவர்கள் வரலாற்றைத் தொகுத்தற்குப் பேருதவியாக இருக்கும். இதனல் புலவர்கள் வரலாறு ஒருவாறு எங்கும் யாவரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.

புலவர் வரலாறுகளை, அவர்கள் ஆக்கிய நூல்களின் துணை கொண்டும், நூலினைப் புவவர்களைக் கொண்டும் நன்கு அறியலாம். ஆகவே, இந் நன்முயற்சியில் மூனைந்து சங்க காலத்துக்குப் பிற்கால முதல் இதுவரை வாழ்ந்திருந்த புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து முடிப்பதையே முதற்பெருங் கடனுகக் கொண்டுள்ளோம்.

இதுவரை வெளிவந்துள்ள **பதினைந்து** தனித்தனி நூல்களில் ஒன்று முதல் மூன்று **வரை**யுள்ள மூன்றையும் ஒன்ருகத் தொகுத்துக் கட்டடஞ் செய்து, அதை **முதற்** பதுதியாகவும் நான்கு முதல் ஆறு **வரை**யுள்ள மூன்றையும் **இரண்டாம்** பதுதியாகவும், ஏழு முதல் ஒன்பது **வரை**யுள்ள மூன்றையும் **மூன்றும்** பதுதியாகவும், பத்துமுதல் பன்னிரண்டு **வரை**யுள்ள மூன்றையும் **நான்காம்** பதுதியாகவும், பதின்மூன்றுமுதல் பதினைந்து வரையுள்ள மூன்றையும் கட்டடம் செய்து **ஐந்தாம்** பதுதியாகவும் தொகுத்துள்ளோம்.

தமிழுலக நன்மக்கள் இவைகளை வாங்கிக் கருவூலங்களில் வைத்துப் போற்றுவதுடன் கற்றும் கற்பித்தும் நாடு மொழி கலைகள் வளரத் துணைபுரிவதோடு எம்மையும் இன்னனபோன்ற அரிய பணிபுரிய ஊக்குவிப்பார்களென நம்புகின்ருேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

க. தமிழ்ப் புலவர் வரிசை

பதின்மூன்றும் புத்தகம் (கூடு புலவர்கள்) 1—144

உ. தமிழ்ப் புலவர் வரிசை

பதினன்காம் புத்தகம் (கூ0 ,,) 1—146

கூ. தமிழ்ப் புலவர் வரிசை

பதினைந்தாம் புத்தகம் (கூ0 ,,) 1—144

கழக வெளியீடு : அசஉ

தமிழ்ப் புலவர் வரிசை

[பதின்மூன்றும் நூத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப்புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி : : சென்னை-1

First Edition: Aug., 1956.

THAMIZHP PULAVAR VARISAI - XIII

(All Rights Reserved)

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C.—1200

பதிப்புரை



முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப்புலவர்கள் வரலாற்றைச் சிறப்புடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக் கருதித் **தமிழ்ப் புலவர் வரிசை**யில் இது காறும் பன்னிரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் **பதின்மூன்றும்** புத்தகமாகும்.

இதன்கண் **வரந்தருவார்** முதல் **சுவராயலு நாயகர்** ஈறாக **நூறு** புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த **திரு. சு. அ. இராமசாமிப்புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் பன்னிரண்டு புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் உயர்க்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	வரந்தருவார்	1
உ.	சம்பந்தமுனிவர்	4
ங.	வரதுங்கராம பாண்டியன்	6
ச.	அநந்தாரியப்பர்	10
ஞ.	ஆண்டிப்புலவர்	15
ஙு.	திருவம்பல தேசிகர்	16
எ.	தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை	21
அ.	கந்தப்ப ஞானதேசிகர்	23
கூ.	கந்தசாமிப் புலவர்	30
கo.	சோலைய அடிகள்	35
கக.	பத்திரகிரியார்	41
கஉ.	சவாதுப் புலவர்	46
கங	மழவை மகாலிங்கையர்	49
கச.	சோமசுந்தர குரு	55
கஞ.	மதுரகவி	56
ககூ.	காஞ்சிபுரம் சபாபதி முதலியார்	57
கஎ	முத்துச்சாமி ஐயங்கார்	60
கஅ.	முத்துராமலிங்க சேதுபதி (க)	61
கஙூ.	கனம் கிருட்டிணை ஐயர்	64
உo.	முகவூர்க் கந்தசாமிக் கவிராயர்	70
உக.	வேங்கட்டராயலு நாயுடு	73
உஉ.	முதுகுளத்தூர் ஆறுமுகம் பிள்ளை	74
உங.	சரவணப் பெருமாட் கவிராயர் (உ)	76
உச	மகாவைத்தியநாதையர்	80
உஞ.	புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்	87
உஙூ.	சுந்தரதாசப் பாண்டியர்	91
உஎ.	ச. மு. கந்தசாமிப் பிள்ளை	97
உஅ.	தாண்டவராயத் தம்பிரான்	100
உகூ.	தேவராசபிள்ளை	105
ஙo.	மு. இராமசாமிக் கவிராயர்	109
ஙக.	வீ. ல. சின்னையச் செட்டியார்	120
ஙஉ.	இராமசாமி ஐயர்	123
ஙங.	தேவிபட்டினம் முத்துசாமிப் பிள்ளை	128
ஙச.	கருப்பையாப் பாவலர்	134
ஙஞ	சவராயலு நாயகர்	140

தமிழ்ப் புலவர் வரிசை

[பதின்மூன்றும் புத்தகம்]

க. வரந்தருவார்

தோற்றம்

"குறும்பியளவாகக் காதைக் குடைந்து தோண்டி, எட்டின மட்டறுப்பதற்கோ வில்லியில்லை" என்று எடுத் துக்கூறப்பெற்ற வில்லிபுத்தூராருக்கு அருமைத் திருமக ளாக வரந்தருவார் தோன்றினர்.

கல்வி

இவர் இளமைப் பருவத்தில் தம் தந்தையாரிடமே கல் வியைக் கற்றுக்கொண்டிருந்தார். நுண்மாணுழை புல மிக்கவராக விளங்கியபடியால் படிக்கும்போது தந்தையா ரிடமே சொற்போரிடத் தொடங்கினர். இதனல் சினங் கொண்ட வில்லிபுத்தூரார், தம் மைந்தனைப் பார்த்து, "நான் உனக்குக் கல்வி கற்பிக்கமாட்டேன். இல்லத்தை விட்டு யாண்டேனும் செல்க," என்று கூறினர். வரந்தரு வார் தந்தையார் கட்டளைப்படி இல்லத்தை விட்டு வெளியே புறப்பட்டார். தகுந்த ஓர் ஆசிரியரையடைந்து அவரிடம் பல ஆண்டுகள் கல்வியை நன்கு கற்றுத் தேறினர்.

பாரத அரங்கேற்றம்

வரந்தருவார் கல்வி கற்றுச் சிறந்த புலமையடைந்து ஆசிரியரிடமே தங்கியிருக்கு நாளில் வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பாடி அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கினார். அரங்கேற்றம் நிகழும் இடத்திற்கு வரந்தருவார் மாறு கோலம் பூண்டு சென்றிருந்தார். அரங்கேற்றம் தொடங்கியது.

" ஆக்கு மாறய னாம்முத லாக்கிய வுலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாம்அவை விந்தநாள் மீனப்
பூக்கு மாமுதல் ஏவனவன் பொன்னடி போற்றி "

என்னுஞ் செய்யுளைக் கூறி வில்லிபுத்தூரார் அரங்கேற்றத்தைத் தொடங்கினார். அவையோர், "பாரதம் விநாயகரால் எழுதப்பட்டது என்பர். ஆகவே அக்கடவுள் வணக்கம் இந்நூலுக்கு இன்றியமையாததாகும். விநாயக வணக்கங் கூறாவிடில் யாம் இதனை ஒப்புக்கொள்ளமாட்டோம்," என்று மறுத்துரையாடத் தொடங்கினர். அரங்கேற்றந் தடைப்படும்போல் தெரிந்தது.

வரந்தருவார்

அப்பொழுது அவ்வவையில் மாறு கோலத்துடன் இருந்த வரந்தருவார் எழுந்தார். "இவ்வவையில் பல சமயத்தாருங் கூடியுள்ளபடியால் பிள்ளையார் வணக்கத்தை எந்தையார் வெளிப்படையாகக் கூறவில்லை. மனதிலேயே,

" நீடாழி உலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்ன நாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வா மரோ "

என்று பின்னோர் வணக்கம் கூறியுள்ளார். யான் அவருடைய மகளைகபால் இதனை நன்குணருவேன்," என்றார். வில்லிபுத்தூரார் எழுந்து தம் அருமை மைந்தனைத் தழுவிக்கொண்டார். பின்னர் பாரத அரங்கேற்றம் இனிது நடைபெற்றது.

இவர் செய்தவை

வரந்தருவார் தனிநூல் செய்ததாகத் தெரியவில்லையினும் வில்லிபுத்தூரார் பாடாது விட்ட பாரதத்தின் எஞ்சிய பகுதியை இவர் பாடினர் என்று தெரிகிறது. மேலும் இவர் தம் தந்தையாரால் செய்யப்பட்ட பாரதத்திற்கு இருபத்து மூன்று பாடல்களால் சிறப்புப் பாயிரம் வழங்கினர். வில்லிபாரதத்தின் சிறப்புப்பாயிரம் இவரால் பாடப்பட்டதென்னும் செய்தி,

"இருக்கதி மறைமொழிந்தோன் இயம்பிய இப்
பெருக்கதையை யாருங் கேட்பச்
சுருக்காகப் புராணமுறை சொல்லுகவென்
றவில் அவனுஞ் சொல்ல லுற்றான்
பெருக்காளர் முதலாய பெருங்குலத்தோர்
இக்கதையின் பெற்றி கேட்டார்
செருக்காக அவண்மைத்தன் வரந்தருவான்
இப்பதிகஞ் செப்பி னனே"

என்னுஞ் சிறப்புப்பாயிர இதனைச் செய்யுளால் பெறப்படும் இப்பாட்டின் நடைசெல்லும் பெருமிதம் முதலியவைகளைக் கொண்டே வரந்தருவாரின் கல்விச் செருக்கு முதலியனவும் நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

---

2. சம்பந்த முனிவர்

தோற்றம்

தென்பாண்டி நாட்டில் அனகாபுரி என்னும் ஊரில் சைவ வணிகர் குலத்தில் சம்பந்தர் தோன்றினர். இளம் பருவத்தில் கற்கவேண்டிய கல்வியைக் கற்றுச் சிறப்புடன் திகழ்ந்தார்.

துறவு

சம்பந்தருடைய உள்ளம் புலமைக் கல்வியை நாடியது. நிரம்பவழகிய தேசிகர் அந்நாளில் நிரம்பப் புலமை பெற்ற வராகச் சிறந்து திகழ்ந்தார். சம்பந்தர் நிரம்பவழகிய தேசிகரை யடைந்து இலக்கண இலக்கியப் பயிற்சி, சமய நூற்பயிற்சி முதலியவைகளைப் பெற்றார். இவருடைய உள்ளம் துறவுநிலையை நாடியது. நிரம்பவழகிய தேசிகரிடமே துறவு நிலையையும் பெற்றார்.

ஆரூரை அடைதல்

சைவத் துறவை மேற்கொண்ட சம்பந்தர், சம்பந்த முனிவர் என்னும் பெயரைப் பெற்றார். சிவப்பதிகள் தோறும் இறைவழிபாடு செய்துகொண்டு திருவாரூரை அடைந்தார். பிறக்க வீடு பேறளிக்கும் அவ்வூரிலே பிறக்காமற் போயினும் சிறிது காள் வாசமாவது செய்து கொண்டு தங்கியிருக்கவேண்டும் என்று எண்ணினர். புற நிடங் கொண்டாரை வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தார்.

திருவாரூர்ப் புராணம்

திருவாரூரில் வாழ்ந்திருந்த அன்பர்கள் சம்பந்த முனி வருடைய கல்விச் சிறப்பையும் நல்லொழுக்கம் முதலியவை களையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தார்கள். இவரைக் கொண்டு திருவாரூரின் புராணத்தைப் பாடச் செய்யலாம் என்று எண்ணினார்கள். தங்களுடைய நோக்கத்தைச் சம்

பந்த முனிவருக்குத் தெரியப்படுத்தினர்கள். சம்பந்த முனிவர் அவ்வாறே செய்வதாக வாக்களித்து 2929 பாடல்களால் திருவாரூர்ப் புராணத்தைப் பாடிச் சாலிவாகன சகம் 1514-ல் அரங்கேற்றஞ் செய்தார். இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்கதாய்ச் சிறந்து விளங்குகிறது. திருவாரூர் அன்பர்கள் வேண்டுகோளின்படியே இவர் திருவாரூர்ப் புராணத்தை இயற்றி சாலிவாகன சகம் 1514-ல் அரங்கேற்றினர் என்பது,

"பூமுகை முறுக்கு மடைத்துப் பொரியளி மிழற்றுஞ் செய்ய
தாமரை முதல்வ ணண்ணுச் சங்கநூற் பலகை தாவா
ஏமரல் அறிவின் மிக்கோர் இதயம்போல் இனிதி லங்கும்
காமரு செல்வத் தேவா சிரயனங் காவணத்தில்

"ஆதிபங் குனிவி ழாவில் ஆரூர்நற் காதை அவ்வூர்
மாதவங் கல்வி மிக்க வைதிக சைவ மேலோர்
ஓதுசீர்த் தலந்தா னத்தோர் உயர்தொண்டர் உடனிருந்து
மூதுயர் தமிழினுலே மொழிகென மொழிந்தேன் அன்றே.

"பார்புகழ் சகாப்தமா யிரத்தைஞ் ஞூற்றுப்
பதினென்கா கியபிங்க லப்பே ராண்டில்
சீர்பரவு பங்குனியுத் திரத்துத் தேவா
சிரயனெனுங் காவணத்தில் தேவர் போற்றும்
கார்பரவு கண்டரா ஞர்ப்பு ராண
கதைதனாக ராகண்டங்க லேவல் லோர்முன்
ஏர்பரவு பேரளை வணிகர் கோமான்
இசைவளர்சம் பந்தனைநன் கேற்றி னனே."

என்னுஞ் செய்யுட்களால் பெறப்படும்.

இறுதி

இத்திருவாரூர்ப் புராணத்தைத் தவிர வேறு நூல்கள் இவர் செய்ததாகத் தெரியவில்லை. இவருடைய இறுதி முதலிய கால விவரங்களும் விளக்கமாகவில்லை.

௬. வரதுங்கராம பாண்டியன்

தோற்றம்

வரதுங்கராமர் அதிவீரராமபாண்டியனுடைய தமையனாராவார். இவருடைய தந்தையார் பெயர் வீரபாண்டியன் என்று தெரிகிறது. காலம் ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னராம்.

கல்வி

வரதுங்கராமர் தம்முடைய தம்பியாகிய அதிவீரராம பாண்டியனுடன் இளமையிலேயே ஈசானிய முனிவர் என்பவரிடம் கல்வியை நன்கு கற்றுத்தேர்ந்தார். இவரும் இவருடைய இளவலும் புவிவேந்தாகவும் கவிவேந்தாகவும் விளங்கினார்கள். அதிவீரராமபாண்டியர் தென்காசியிலும் வரதுங்கராமர் கருவையம்பதியிலும் தங்கி அரசாட்சி புரிந்துகொண்டிருந்தார்கள்.

வாழ்க்கை

வரதுங்கராமர் அரசாட்சி நேரம்போக எஞ்சிய நேரங்களில் நூலாராய்ச்சி செய்தல் நூலியற்றல் முதலியவைகளிலேயே தமது காலத்தைப்போக்கினார். நைடதத்தினால் இவருக்கும் அதிவீரராம பாண்டியனுக்குஞ் சிறிது பகையுண்டாயிற்றென்றுங் கூறுவர்.

மனைவி

வரதுங்க ராமரைப்போலவே அவருடைய மனைவியுங் கல்வியறிவிற் சிறந்து விளங்கினாள். வரதுங்கராமரைச் சில திங்கள் பிரிந்திருக்க நேரிட்டபோது,

"செப்பாரு முகிழ்முகையார் எல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ,
ஒப்பாரும் இல்லாவென் கணவனுடன்
யான்கூடி உறவா டாமல்,

வெப்பாலும் மிகுகாமத் தயராலும்
நாள்தோறும் மெலிந்து வாடி,
இப்பாடு படவென்றே இறையவனென்
தலையோட்டில் எழுதி னானே.

" என்னை அவர் அறமறந்தும் யான் அவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்தானே அப்பிறப்பில்
செய்ததவம் முடிந்த வாறே
கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமன்இயற் காசி காட்டில்
அன்னவயற் குருகினங்கள் இனியெவ்வா
றயிர்தரித்திங் காற்று மாறே."

" எண்டிசா முகமும் திங்கள் இளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந் தோறும் கொழுங்கணீர் முகையிற் சோப்பப்
பண்டுநாம் அறியாக் காமத் தயரினல் படுவ தெல்லாம்
வண்டுகாள் உரையீர் உங்கள் வரதுங்க ராம னுக்கே.

என்னும் பாடல்களைக் கூறி வருந்தினள்.

பெயர்

வரதுங்கராம பாண்டியனுக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் அபிராம சுந்தரேசுரன் என்பதாம். இப் பெயர் அபிராமன் எனச் சுருக்கமாகவும் வழங்கப்பட்டதாம். அது பாடலுக்குள்ளும் அபிராமன் என்று சேர்ந்துள்ளது.

அரசனைக் கவிஞர்

வரதுங்கராமர் புலவராதலின் தமது அவையில் கவிஞர் பலரை வைத்து ஆதரித்தார். காசிக்கவியன் கவிராயர் என்பவர் அவர்கட்குத் தலைவராக இருந்தார். இவர் அரசன் மீது,

" சிற்கொண்ட செங்கமலை வாழுத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட

கானுலா மாலைக் கனகமகு டம்புனைந்தான்
மானவே லானபிரா மன்."

என்று ஈண்மங்கலமும்,

"சேணுலவு வெண்திங்கள் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழும் நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்தர் ஏத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை."

என்று குடைமங்கலமும்,

"பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்."

என்று வாண்மங்கலமும் பாடியுள்ளார்.

இவர் இயற்றிய நூல்கள்

பிரமோத்தர காண்டம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதி, கொக்கோகம் என்பன இவரியற்றிய நூல்கள். இவற்றுள் கொக்கோகம் அதிவீரராம பாண்டியனால் செய்யப்பட்டு இவர் பெயரால் வழங்குகின்றதென்பர். பிரமோத்திரகாண்ட நூலின் முதற்கண்,

"தேசான சிவஞானச் செஞ்சுடரால் மும்மலமாம்
மாசான இருளகற்றி மன்னுயிரைப் புரந்தளித்துத்
தூசானை உரியசைத்தோன் தொல்சமய நிறுத்துநிம்பை
ஈசான முனிவன் இணையடியை இறைஞ்சுவாம்."

என்று குருவணக்கம் கூறியிருத்தலால், இவருக்கு ஆசிரியர் ஈசான தேசிகர் என்பது பெறப்படும். இவருடைய வணக்க நூல்களாகிய அந்தாதிகள் மூன்றும் சொற்சுவையும் பொருட்சுவையும் நன்கு அமையப்பெற்றனவாகவும்

சிவபெருமான் மீது பேரன்பையும் உருக்கத்தையும் உண்டாக்குவனவாகவும் சிறந்து விளங்குகின்றன. பதிற்றுப்பத்தந்தாதியின் கனிவினை நோக்கிய சான்றோர் அதற்குக் குட்டித்திருவாசகம் என்று பெயர் கொடுத்துள்ளனர்.

"உன்னாமம் ஓதி உனையே வணங்கி
உறுபூசை பேணும் உரவோர்,
பொன்னா டளிக்க வரநல்கு மாதி
புனிதா களாவில் உறைவோய்!
முன்னே உனக்கியான் அடியேனும் அல்லேன்
முழுஞானி அல்லன் எளியேன்,
என்னே பிழைத்த பிழைகோடி உள்ள
எனினும் புரத்தல் கடனே.

"ஒளிமதி முடித்த வேணி ஒருவனே! கருவை யானே!
தெளிவுறா நெஞ்சந் தன்னைத் தெருட்டிநின் னிலையைக் காட்டி
அளியினால் என்னை ஆண்ட அருட்குன்றே! உன்னை யின்னும்
எளியனேன் பிறவி வேட்டோ ஏத்திடா திருக்கின்றேனே?"

என்பன பதிற்றுப்பத் தந்தாதியில் இரண்டு செய்யுட்கள்.

பிரமோத்திர காண்டம்

பிரமோத்திர காண்டம் என்னும் நூல், ஐந்தெழுத்து, திருநீறு, திங்கட்கிழமை; பிரதோடம் ஆகியவைகளின் பெருமையைக் கூறுவது. இருபத்திரண்டு பிரிவுகளையும் ஆயிரத்து முந்நூற்றுப்பத்துப் பாடல்களையும் உடையது. இந்நூல் சைவர்களால் பெரிதுங் கொண்டாடப்படுகிறது.

இறுதி

இவர் மூப்பினையடைந்து இறுதிக்காலத்தையடைந்த சமயத்தில் இவருடைய மனைவி இவரைப்பார்த்து, "சாவுக்கு அஞ்சுகிறீர்களோ?" என்று உசாவினாராம். அப்போது இவர்,

"அஞ்சலென்ற கரதலமும் கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச் செஞ்சடையும்,
கஞ்சமலர்ச் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்,
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியும் மறிமானும் மழுவும்,
பஞ்சடிச்சிற் றிடையுமையாள் ஒப்பனைபா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப் பயமும்உண்டோ எமக்கே"

என்று பாடினாராம்.

ச. அநதாரியப்பர்

தோற்றம்

தொண்டைமண்டலத்துள்ள வாயல் என்னும் ஊரிலே அநதாரியப்பர் ஏறக்குறைய முந்நூற்றைம்பது யாண்டுகளுக்குமுன் தோன்றினார். இவர் தொண்டைமண்டலத்தில் தோன்றியவர் என்பது,

"மிண்டரை வெல்லும் வளர்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ் மேக முறத்தூரில் வேதியன் தானும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்பன் அநதாரி யுந்தொண்டை மண்டலமே"

என்னும் தொண்டைமண்டல சதகத்தானும் பெறப்படுகின்றது.

கல்வி

அநதாரியப்பர் நன்றாகக் கல்வி கற்க விரும்பினார். பல நாடுகளினுஞ் சுற்றிக்கொண்டு சோழவள நாட்டையடைந்தார். சோழவளநாட்டில் உறத்தூரில் அந்தணர் ஒருவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். அந்த அந்தணரிடத்தில் அநதாரியப்பர் கல்வி கற்றுச் சிறப்படைந்தார்.

செப்நன்றி மறவாமல் தாம் அந்த அந்தணருக்கே அடிமை யாக அமைந்தொழுகி நின்றார். காலடைவில் அததானியப் பரின் கல்விச் சிறப்பு எல்லா இடங்களிலும் பரவியது.

சிங்காயன்

திருவாரூர்க்கு அணிமையில் உள்ள கன்றாப்பூர் எனும் ஊரிலே அந்நாளில் சிங்காயன் என்னும் பெயருடைய பெருஞ்செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். இவனை ஓர் சிற்றரசன் என்றும் செப்புவர். இவன் உறந்தூர் அந்தண ரைப் பார்ப்பதற்குச் சென்றான். அங்கு அததானியப்பரைக் கண்டான். அததானியப்பருடைய கல்விப்பெருமை சிங்க ராயனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அததானியப் பரைத் தனக்குத் தாவேண்டுமென்றும் தக்கவாறு பொருள் உதவி செய்வதாகவும் அந்தணரிடங் கூறினான். அந்தணரும் அதற்கு இணங்கினர். சிங்காயன் கொடுத்த பொருளைப் பெற்றுக்கொண்டு அததானியப்பரை அவ்வூரை அனுப்பி விட்டார். இச் செய்தி மேற்கூறிய தொண்டைமண்டல சதகத்துள்ளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தண்டாயுதனுக்குப் பட்டு

அததானியப்பர் சிங்காயனூரை கன்றாப்பூருக்குச் சென்று தங்கியிருந்தார். கல்வித் தொடர்பான செயல் களுக்குச் சிங்காயன் இவரைப் பயன்படுத்திக்கொண் டிருந்தான். அப்பொழுது மேற்கடலுக்குப் பக்கத்தில் உள்ளன என்ற ஊரில் தண்டாயுதன் என்னும் பெயருடைய வேளாளச் செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அத் தண்டாயுதனுக்கும் சிங்காயனுக்கும் பகைமேற்பட்டிருந் தது. சிங்காயன் அததானியப்பரைக் கொண்டு,

"நம்பெறுகன் றுப்புடைய சிக்கப் பெருமான்
உம்பெறுதண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே

அந்திவரு நீனினைந்தால் அல்லவென்று லுங்காலம்
பிந்திவரும் முந்திவரும் பேச்சு"

என்னும் வெண்பா ஒன்றை எழுதியனுப்பிவைத்தான். சிங்காரயன் ஆன்பசு ஒன்று கேட்டு இந்தப் பாட்டை எழுதியனுப்பினன். ஆயினும் கண்டாயுதன் பாட்டின் உண்மைக் கருத்தை உணர்ந்துகொண்டான். அவனிடமும் அறிஞர் ஒருவர் நண்பராக இருந்தார். அவைக்கொண்டு கண்டாயுதன்,

"கனைத்திருந்த கடல்புடைசூழ் கன்னைத்தண்
டாயுதனைக் கன்றுப் புடையான்
னினைத்திருந்த கன்மையினல் குறைவில்லை
என்றெழுது நிருப ருக்கு
முனைத்திருந்த வாணியயன் அகதாரி
யான்சிவன்தான் முகுந்த னேதான்
உனைத்திருத்த னினைத்திருந்து மடப்புறத்தும்
இத்தனையென் உபாதி தானே"

என்னுஞ் செய்யுளை எழுதியனுப்பினன். இதனைப் பார்த்த பின்னர் சிங்காரயன் அடங்கிவிட்டான். அகதாரியப்பரையும் அவருடைய விருப்பம்போல் செல்லுமாறு விட்டுவிட்டான்.

"நாட்டிற் பொலிய ஆன்பசுவன் றெழுதுங்கன் றுப்புடையாயன்
சீட்டுக் கவிதை அகதாரி செப்புந் தமிழின் திறனறிந்தோன்
நாட்டிற் புகழ்கன் னைக்குடையா னளுந் தண்டா யுதன்பெருமை
வாட்டுப் படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழ மண்டலமே"

என்பது சோழமண்டல சதகம்.

சுந்தர பாண்டியம்

விருப்பம்போற் செல்வதற்குச் சிங்காரயனுடைய உடன்பாடுபெற்ற அகதாரியப்பர் பலவிடங்களினுஞ் சுற்றிக்கொண்டு மதுரையை அடைந்தார். அங்கிருந்த அறிஞர்க

ளோடு அளவளாவி மகிழ்ந்தார். அப்போதங்கிருந்த திரு விருந்தான் என்பவன் மதுரைக்கடவுளாகிய சோமசுந்தரப் பெருமானது திருவிளையாடலைத் தமிழிற் பாடித்தர வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். சுந்தர பாண்டியம் என்னும் வடமொழித் திருவிளையாடலை அததாரியப்பர் தமிழில் மொழிபெயர்த்தார். இவர் வடமொழித் திருவிளையாடலைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினரென்னுஞ் செய்தி,

"மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடதால்
கதிரு லாமணி அறுகாற் பீடத்திற் கல்லார்
அதிப னந்திரு விருந்தவன் அவையினில் வாயல்
பதியில் வாழுந தாரிசந் தமிழினில் பகர்ந்தான்.

"ஆய சொக்கர் அருட்கடல் வெள்ளமார்
சேயன் வெண்குடை நீழலில் சேடன்போல்
சேய பார்ச்சுமை செற்றுகந் தாங்கினன்
தூய நெஞ்சினன் நீதி தொடர்ந்துளான்.

"அன்னவன் அரசர் சூழுங்
கச்சிமீ ரப்பன் என்னும்
மன்னவன் அருள்சேர் மன்றைச்
செவ்வந்தி தூணவன் வாய்மைத்
தென்னவன் திருவி ருந்தான்
சவுந்தரன் தேவ பாடைத்
தன்னிருங் கதைதென் னூலால்
சொல்லெனச் சொல்ல லுற்றேன்"

என்னுஞ் செய்யுட்களால் விளங்கும். இத் திருவிளையாடற் புராணத்தைத் தவிர இவர் வேறு நூல் யாதுஞ் செய்ததாகத் தெரியவில்லை.

புலமைச் சிறப்பு

அததாரியப்பர் கல்வியறிவில் தக்கிகரில்லாத் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினர். இவருடைய புலமைத்திறம்

எல்லோராலும் நன்கு போற்றப்பெற்று விளங்கியது. பிற் காலப்புலவர் ஒருவர் அருகாரியப்பருடைய அறிவுச் சிறப் பைப் பெரிதும் பாராட்டினர். போலிப் புலவர்களுடைய பலவகைப் பெயர்களும் ஆர்ப்பாட்டங்களும் அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அந்தோ இச் சிற்றறிவாளர்கள் இவ்வாறு கருக்கிக் குதிக்கின்றனரே அருகாரியப்பரைப் போன்ற பெரும் புலவர்கள் இந்நாளில் இருந்தால் இவர்கள் இவ்வாறு துள்ளிக்குதிப்பார்களா என்று எண்ணமிட்டார். அவருடைய உள்ளத்திலே பாட்டொன்று தோன்றியது.

"கம்பனென்றுங் கும்பனென்றுங் காழியெயாட்டக் கூத்தனென்றும்
கும்பமுனி என்றும்பேர் கொள்வதோ—அம்புவியின்
மன்ன வலர்பாவும் வாயலர காரியப்பன்
இந்நாளி லேயிருந்தக் கால்"

என்று பாடினர். அந்நாளிலே யிருந்தக்கால் என்று பாட மோதி, கம்பர் அகத்தியர் ஒட்டக்கூத்தர் முதலியோர்கூட அஞ்சி நடந்திருப்பர் என்று கூறுவாருமுளர்.

இவர் இயற்றிய நூல்

இவர் இயற்றிய சுந்தர பாண்டியம் வெகுநாள் ஓலைச் சுவடியாக இருந்தது. அந்நாளில் அச்சேற்றும் முறையும் பரவவில்லை யாகையால் அச்சாகவில்லை. நாளடைவில் வேம்பத்தூராரர் திருவிளையாடல், பரஞ்சோதி முனிவர் திரு விளையாடல் முதலியனவுகளுந் தோன்றவே மறைந்தொழி யத் தொடங்கியது. சில பகுதிகள் கறையானுக்கும் இரை யாயின. ஆகவே தற்காலத்தில் முழுவதும் கிடைக்கவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்க்கு இரண்டாயிரம் பாடல்கள் அடங்கிய ஒரு குறைப்பிரதி அகப்பட்டது. அதனைப் பாது காப்பாக வைத்துள்ளனர்.

5. ஆண்டிப்புலவர்

தோற்றம்

இவர் ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்னர் தொண்டை வளநாட்டிலே செஞ்சிக்கு அண்மையில் உள்ள ஊற்றங்கால் என்னும் ஊரிற் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பாவாணை உபாத்தியாயர். பாவாணை உபாத்தியாயர் கல்வி கேள்விகளிற் சிறந்தவராக விளங்கினர். அவர் அக்கால முறைப்படி பள்ளிக்கூடம் அமைத்து மாணவர் பலருக்குக் கல்வி கற்பித்தார்.

கல்வி

ஆண்டிப்புலவர் தம்முடைய தந்தையாரிடமே ஐந்திலக்கணங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து தாமும் தம்முடைய தந்தையாரைப்போலச் சிறந்த புலவரானார். பாக்கள் இயற்றுவதில் இவருக்கு அதிகத்திறமை இயற்கையாகவே அமைந்திருந்தது.

நூல்கள் இயற்றல்

ஆசிரிய விருத்தப்பாக்களை எளிதாகவும் இனிமையாகவும் பாடத் தொடங்கினர். ஆசிரிய விருத்தத்தில் 'ஆசிரிய நிகண்டு' என்னும் பெயருடன் நிகண்டு ஒன்று செய்தார். நன்னூற்பொருளை எல்லோரும் எளிதாகவும் விளக்கமாகவும் உணர்ந்து கொள்ளுமாறு, நூற்பாக்களால் அமைந்த நன்னூலை ஆசிரிய விருத்தப் பாக்களால், 'நன்னூலாசிரிய விருத்தம்' என்னும் பெயருடன் பாடினர். தாமியற்றிய நூல்களைத் தம்முடைய மாணவர் பொருட்டே இவர் இயற்றினாதலின் மாணவர்கட்குக் கற்பித்தார். நன்னூலில் வரும், "செம்மை சிறுமை" என்னுஞ் சூத்திரத்தை,

"செம்மையுங் கருமையும் பசுமையும் வெண்மையும்
திண்மையும் நுண்மை யுடனே
சிறுமையும் பெருமையும் குறுமையும் நெடுமையும்
தீமையும் தாய்மையும் அலால்,
வெம்மையும் குளிர்மையும் கொடுமையும் கடுமையும்
மேன்மையும் கீழ்மை யும்பின்
மெய்ம்மையும் வறுமையும் பொய்ம்மையும் வன்மையும்
மென்மையும் நன்மை யுஞ்சொல்
லும்மையும் பழமையும் புதுமையும் இனிமையும்
அனிமையும் நிலைமை யுஞ்சேர்
ஆன்மையும் மும்மையும் ஒருமையும் பன்மையும்
அறுமையும் இருமையும் மிக்க
கைம்மையும் கூர்மையும் கேண்மையும் சேண்மையும்
கடிய வளமையும் இளமையும்
காணிய முதுமையும் பண்புப் பகாப்பதம்
காட்டுமின் னீனைய மாதே."

என்று பாடியிருக்கிறார். சிறந்து மிளிர்ந்த அறிவாளி யாகிய இவர் மாணவர்கட்குக் கல்வி கற்பித்தல் தூலியற்றல் ஆகியவற்றிலேயே தமது வாணாளைச் செலவிட்டுத் தமிழ்த் தொண்டுபுரிந்தார்.

ஊ. திருவம்பல தேசிகர்

தோற்றம்

இவர் தருமபுர ஆதீனத்திலே ஆறுவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்த தேசிகர்பால் அருளுரைபெற்று ஏழாவது பட்டத்திலே அமர்ந்திருந்தவர். பெருந்திருவுருள் நிறைந்த அருந்தவச் செல்வர். இறைவன் திருவருள் இவரிடம் நன்றாக அமைந்திருந்தது.

கருப்பத்தில் இருந்த ஆன்மாவுக்குத் தீட்சை

இவர் ஆதீனத் தலைவராக அமர்ந்து அருட்செங்கோல் செலுத்திக் கொண்டிருக்குங்காலத்தில் சூலவூர் என்னும்

ஊரிலே சுப்பராயச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த சிவபக்தி நிறைந்தவர். அவருடைய தாயார் காலமானார். செட்டியார் தம்முடைய தாயாருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளெல்லாம் செய்து முடித்தார். பிறகு திருவம்பல தேசிகர் பால் வந்தார். தேசிகரை வணங்கிப் போற்றினர். தேசிகரைப் பார்த்து, "தாயினை நற்கதியிற் சேர்ப்பிக்க வேண்டியது சேயினது கடமையாகையால், தேவரீர் திருவுள்ளஞ்செய்து என் தாயாருக்கு வீடு பேற்றினை வழங்கியருளுதல் வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். தேசிகர் தமது மெய்யறிவுப் பார்வையினால் செட்டியாருடைய தாயாரின் ஆன்மா எங்கிலையில் உள்ளது என்று பார்த்தார். அது செட்டியாருடைய மனைவியின் கருப்பத்தில் சேர்ந்திருப்பதாகத் தெரிந்தது. செட்டியாரைப் பார்த்து, "உமக்குப் பிள்ளை வேண்டுமா அல்லது தாயார் வீடுபெறுதல் வேண்டுமா?" என்று உசாவினர். "அடியேன் முதலில் விரும்புவது தாயார் வீடுபெறுதலையே," என்று செட்டியார் தெரியப்படுத்தினர். தேசிகர் அவ்வாறே செய்வோம் என்று திருவுளம்பற்றினர். நீராடலை முடித்தக்கொண்டு சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்தார். அவ்வான்மாவைக் கொணர்ந்து தீட்சை செய்து வீடு பேற்றைக் கொடுத்தார்.

தஞ்சையரசன் வருகை

அந்நாளில் தஞ்சையை ஆண்டுகொண்டிருந்த அரசன் கடலாட விரும்பினன். படைகள் புடைசூழக் காவிரிப்பூம் பட்டினம் நோக்கிச் சென்றனன். செல்பவன் தருமபுரத்தை அடைந்தான். ஞானபுரீசுரர் திருக்கோயிலில் கள்ளிரவு வழிபாடு நடந்தது. அவ்வழிபாட்டின்போது அடிக்கப்பட்ட மணியொலி அரசனுடைய காதிலே

கேட்டது. அரசன் உடனே தன்னது ஊர்தியைவிட்டு இறங்கி மனத்தினால் வணங்கினான். பிறகு ஊர்தியிலேறிப் புறப்பட்டான். அப்பொழுது அரசனேழுந்த பார்ப்பனர் சிலர் அரசனைப் பார்த்து, "இப்பொழுது நீங்கள் வணங்கியது சூத்திரசமாதி. சூத்திரியர்கள் சூத்திரர்களை வணங்குதல் கூடாது. அவ்வாறுக நீங்கள் வணங்கிய படியால் தீவினைக்கு உள்ளானீர்கள். இதன் பொருட்டுக் கழுவாய் செய்துகொள்ளுதல் வேண்டும். மேலும் மற்றை யோரும் இத்தகைய குற்றத்திற்கு உள்ளாகாதபடி இக் கோயிலை இடித்துவிடுதலே நன்றாகும்," என்று கூறினர். அரசன் உடனே தன்னுடைய பணியாளர்களை அழைத் தான். கோயிலை இடிக்குமாறு கட்டளையிட்டுவிட்டுத் தான் மேலே செல்லலானான். பணியாளர்கள் கோயிலை இடிக்கத் தொடங்கினார்கள். அடியார் கூட்டம் விரைந் தோடி இச் செய்தியைத் தேசிகருக்குத் தெரியப்படுத் தியது.

தேசிகர் திருவருளை நாடல்

தேசிகர் உடனே திருவருளை எண்ணினார்.

"ஈசன் பலதினன் என்றக்கால் ஆலயத்தின்
மோசம்வந்த தென்று மொழியலாம்—ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவுந் தானுனால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து."

என்று அடியவர்கட்குக் கூறினர். திருவருட்குறிப்பு உண்டாயிற்று. தேசிகர் இறைவன் திருவருளை வியந்து,

"தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம்வந்த தைதியோ முதல்வனே—தேசத்து
மன்னவெறுப் பேனே வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னவெறுப் பேனே உரை"

என்று விண்ணப்பித்துத் திருவளர்ந்தருளுமாறு வேண்டினர்.

திருவருட் செயல்

இவ்வாறு தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய அளவில் இருப்புக்கோல் தாக்குமிடந்தோறும் உதிரம் பெருகத் தொடங்கியது. அரசன் பணியாளர்கள் மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்ந்தனர். நகரத்தின் எல்லையைத் தாண்டிச்சென்ற அரசனுடைய கண்ணொளி மழுங்கியது. அரசன் உடனே கோயிலை இடிக்குமாறு கூறியவர்களைப் பார்த்தான். அவர்கள் ஊமையர்களாகிப் பேசமுடியாமல் திகைத்து நின்றார்கள். அரசன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்தான். திரும்பித் தருமபுரத்திற்கு வந்தான். தன்னுடைய பணியாளர்களின் நிலைமையைக் கண்டான். மடாலயத்திற்குட் சென்று தேசிகர் திருமுன் வீழ்ந்து வணங்கினன். தன்னுடைய குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். தேசிகர் "இறைவன் திருவருள் புரிவான்," என்று திருவாய்மலர்ந்தருளினார். அரசனையும் அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றார். அரசன், "இறைவனைக் கண்டு போற்றி வழிபடுவதற்குக் கண்ணொளி இல்லையே எவ்வாறு கண்டு போற்றுவேன்," என்று வருந்தினன். குருஞான சம்பந்தர் திருவருளால் ஒரு கண் நன்றாகத் தெரிந்தது. பணியாளர்கள் கீழே விழுந்துகிடப்பதையும் இருப்புக்கோலால் இடித்த இடங்களில் இருந்து உதிரம் பெருகுவதையும் பார்த்தான். உதிரம் பெருகுதலை நிறுத்தவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். தேசிகர் திருநீற்றினைத் தூவினார். உதிரம் பெருகுதல் உடனே நின்றது. பணியாளர்களும் எழுந்து தேசிகரை வணங்கினார்கள்.

மன்னன் பந்தல்

பிறகு அரசன் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்று கடலாடித் திரும்பினான். தருமபுரத்திற்குத் தென்கிழக்

குத் திக்கில் கூடாரம் அமைத்துக்கொண்டு தன் உறுதிச் சுற்றத்தினருடன் தங்கித் திருக்கோயில் வழிபாடு செய்து கொண்டிருந்தான். அரசன் தங்கியிருந்த இடம் மன்னன் பந்தல் என்று பெயர்பெற்றது.

வருணைச்சிரம சந்திரிகை

அரசன் ஒருநாள் தேசிகரைப்பார்த்துச், "சூத்திரர் களுக்குச் சந்தியாசம் பெற உரிமையில்லையென்று கூறிச் சிலர் அடியேனை மயக்கிவிட்டார்கள். அதன் உண்மை யைத் தெரிவித்தருளவேண்டும்" என்று கூறி வேண்டிக் கொண்டான். தேசிகர் பல எடுத்துக்காட்டுகளால் அர சனுடைய ஐயத்தைத்தீர்த்து வருணைச்சிரம சந்திரிகை என் னும் நூலை இயற்றியருளினர். சந்தியாசத்தில் அதிகாரம் இல்லையென்று கூறியவர்கள் நாணித் தலைகுனிந்தனர். அரசன் நாற்பத்தைந்து நாட்கள் அங்குத் தங்கி இறைவழி பாடு செய்துகொண்டிருந்தான். குருவருளால் மற்றொரு கண்ணும் நன்றாக விளக்கம் பெற்றது. ஊமைகளாயினை ரும் ஊமை நீங்கப்பெற்றார்கள். மனமகிழ்ச்சியடைந்த அரசன் நன்னிரவுப்பூசை சிறப்பாக நடைபெறுதற்கு வேண் டிய நிலங்கள் வழங்கி விடைபெற்றுச் சென்றான். தேசிகர் தம்முடைய அடியார்களுள் ஒருவருக்கு அறிவுரை வழங் கித் தலைமைப்பீடத்தில் இருத்தி வீடுபேற்றை யடைந்தார்.

எ. தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை

தோற்றம்

சோழவளநாட்டிலே திருத்தில்லையம்பதிக்கு அண்மையில் உள்ள தில்லைவிடங்கன் என்னும் ஊரிலே இவர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் தெய்வப்பெருமாள் பிள்ளை.

கல்வி

இவர் தக்காரிடம் கல்வியை நன்கு கற்றுச் சிறந்த புலவரானர். மாணவர்கட்குக் கல்வி போதித்தல் நூலியற்றல் இறைவழிபாடு செய்தல் முதலியவைகளிலே தமது காலத்தைப் போக்கினர்.

நூல்கள்

சிதம்பரேசர் விறலிவிடு தூது, புலியூர் வெண்பா, அம்பலப்பள்ளி, கோவிந்தப்பள்ளி, ஏசற் பள்ளு, வருணபுரி ஆதிமூலேசர் குறவஞ்சி, நொன்டி, நடராசர் கீர்த்தனை, பலவித வண்ணங்கள் முதலியவைகளை இவர் இயற்றியிருக்கிறார். இவருடைய பாடல்கள் சிலேடை நயம், பொருட் சிறப்பு, அகப்பொருள் நுட்பம் முதலியவைகள் அமையப் பெற்றனவாய்ச் சிறந்து விளங்கும். வெறி விலக்கல் துறைகளாக இவர் இயற்றியுள்ளனவான செய்யுட்கள் மிகுந்த சுவையுடையனவாகும்.

"குவளைமலர் தோறுங் குருகார்வே லூரில்
பவளவிதழ்ச் செங்கமலப் பாவாய்—இவள்கண்ணேய்
மைபட்டால் தீருமோ வந்து வயித்திரைர்
கைபட்டால் தீருஞ்சங் காண்."

[குருகு-பறவை. மைபட்டால்-ஆட்டை வெட்டிக் கொன்றால்.]

"மின்னாசி காம வெறிபிடித்தால் உன்னையிந்தச்
சின்ன வெறிபிடிக்கச் செய்ததார்—இன்னவெறி
தீராது தில்லைச் சிவன்வந்து சேர்ந்துமுத்தம்
தாராத காளளவுந் தான்.

[காம வெறி - காம மயக்கம். சின்ன வெறி - சிறிய ஆடு]

"வெறிபடுபூந் தொங்கலணி வேட்கையாள் ஆசை
மறிபடப்போ காததற்கு மாற்று—நறைபருகி
வண்டார்த்த கொன்றையணி வார்சடைக்கூத் தாடிதான்
கண்டால் தணியுமுய்வள் தான்."

[வெறி - மணம். தொங்கல் - மாலை. மறிபட - ஆடு சாக. நறை - தேன். கூத்தாடி - தில்லைக்கூத்தப்பிரான்.]

புகழ்

இவருடைய கல்வியறிவாற்றல் முதலியவைகளைப் புகழ்ந்து இவர் காலத்தில் இருந்த பாலபாரதியார் என்பவர்,

" தில்லை வீடங்கன் தனில்வாழும்
தெய்வப்பெருமாள் திருப்புதல்வன்
தெளிந்த மனத்தன் முத்தமிழோர்
தினமும் புகழுங் குறுமுனிவன்,
முல்லை நகையார் மதன்மாரி
முத்துப்புலமைத் திறம்போல
முயன்ற சுகுணம் அதுபோல
முழுதுந் தெளிந்த மனம்போல,
எல்லை இகந்த பாரதலம்
எழில்வான் தனிலு மேகாண
இதயத் தெண்ணி விழிதுயிலா
திருந்தும் அதுவே நினைவாகி
ஒல்லை அரன்மால் அயன்பிச்சைக்
குழன்றும் பன்றி வடிவெடுத்தும்
ஓங்கிப் பறக்கும் ஓதிமமாய்
உயர்ந்து திரிந்துங் காணரே."

என்று வியந்து பாடிப் போற்றியுள்ளார்.

இறுதி

இவர் சாலிவாகன சகாப்தம் கஎ0கூ-ஆம் ஆண்டிற்கு நேரான பிலவங்க ஆண்டு சித்திரைத் திங்கள் கச-ஆம் நாள் இறைவன் திருவடிநீழலை யடைந்தார்.

அ. கந்தப்ப ஞான தேசிகர்

தோற்றம்

தொண்டைவள நாட்டிலே இராயவேலூரிலே ஏறக் குறைய இருநூற்று இருபது ஆண்டுகட்குமுன்னர் கந்தப்ப ஞானதேசிகர் தோன்றினர். இவர் திருவண்ணா மலையின் ஈசான்ய பாகத்தில் தங்கியபடியால் பின்னளில் ஈசான்ய ஞானதேசிகர் என்று கூறப்பெற்றார். தந்தை யார் பெயர் திருநீலகண்டதேசிகர், முருகக்கடவுள் திரு வருளால் தோன்றியமையின் கந்தப்பன் என்று பெயரிடப் பெற்றார். தோன்றிய குலம் வேளாளர் குலம்.

கல்வி

கந்தப்பர் தகுந்த பருவத்தில் பள்ளிக்கு அனுப்பப் பெற்றார். திருவருட்செல்வராகத் தோன்றிய இவருக்குக் கலையறிவு இயற்கையாகவே அமைந்திருந்தது. கணக்கா யர் கற்பிப்பதற்கு முன்னரே எல்லாக் கலைகளின் உணர்ச்சி யும் இவருக்கு உண்டாயின. சிறிய இளமைப்பருவத்தி லேயே பெருந்துறவியாக விளங்கினர். வியக்கத்தக்க சில திருவிளையாடல்களையும் இயற்றினர். ஒருமுறை ஒரு வரும் அறியாவண்ணம் மூன்று நாட்கள் மறைந்திருந் தார். திருநீலகண்டதேசிகர் இவருக்கு ஏழாவது அகவை யிலேயே சிவபூசை முறைகளைக் கற்பித்தார். பதினறு வயதுவரை சிவபூசை செய்துகொண்டிருந்தார்.

இல்லந்துறந்தல்

தந்தையார் தம்மைந்தருக்குத் திருமணஞ்செய்து வைக்க எண்ணினர். உறவினர் வீடுகளில் பெண் தேடி னர். கந்தப்பர் தாயாரைப் பார்த்து, "அம்மா! நான் குடும்பியாகமாட்டேன். என் உள்ளம் பற்றற்ற பரம நிலையைப் பற்றி நிற்கின்றது," என்று பகர்ந்தார். தாயார்

மைந்தருடைய விருப்பத்திற்குத் தடையாகக் குறுக்கிட வில்லை. தாயின் உடன்பாட்டைப் பெற்றுக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டார். பல சிவப்பதிகட்குஞ் சென்று இறை வழிபாடு செய்துகொண்டு திருத்தில்லையை அடைந்தார். சில காலந்தங்கிக் கூத்தப்பிரானைப்போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார்.

குருவைக் காண்டல்

கந்தப்பதேசிகர் திருத்தில்லைக்குச் சென்ற காலத்தில் அங்கு மௌன சுவாமிகள் என்னும் பெரியார் ஆயிருளம் வடகரையில் எழுந்தருளியிருந்தார். அவர் மெய்யறிவு கைவரப்பெற்ற அருந்தவச்செல்வர். மௌன தேசிகரின் பெருமையை உணர்ந்த கந்தப்பதேசிகர் நாளும் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் அருளுரைபெற்று மெய்யறிவுப் பெருவாழ்வை மேவ வேண்டும் என்று உள்ளத்தில் துணிந்தார். காலை மாலை இருவேளைகளிலும் மௌன தேசிகரைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். சிறிது நாட்கள் சென்றன.

அருள்பெறுதல்

"நாம் பக்குமடையாததுபடியால்தான் இப் பெரியார் நமக்கு அருள் வழங்கவில்லை," என்னும் எண்ணம் கந்தப்ப தேசிகருக்கு எற்பட்டது. மனவுறுதி மிகுதிப்பட்டது. தாம் அணிந்திருந்த ஆடைகளை அகற்றிவிட்டுக் கோபீனத்துடன் மௌன தேசிகர்பாற் சென்றார். மார்கழித் திங்கள் பனியுங்குளிரும் மிகுதியாக இருந்தன. அன்று மழையும் பெய்தது. கந்தப்பதேசிகர் எதையும் பொருட்படுத்தாமல் அந்த மழையில் நனைந்துகொண்டே சென்று தேசிகரைப் போற்றினர். மௌன தேசிகர் கந்தப்ப தேசிகர்மீது கடைக்கண்ணேக்கம் செலுத்தியருளினர்.

யாரோ அண்ணைக்குத் தம்மீது போர்த்தியிருந்த கம்பளத்தை யெடுத்துக் கந்தப்பதேசிகருக்குப் போர்த்திவிட்டார். அருளுரை வழங்கி அவ்விடமே அமரச்செய்தார். அவ்வளவில் கந்தப்பதேசிகருக்கு மெய்யறிவு உண்டாகி விட்டது. உடனே தம்முடைய குருவின்மீது,

"கந்யபரி பூரண அகண்டசாட் சாத்காத
நிர்மலா நந்த மயமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமனம் அறிதாத
நிர்வாண மோன வடிவாய்ச்,
சத்யஅருள் மேனிகொண் டுலகிலவ தாரமாய்த்
தானெழுந் தருளி வந்து
சமயநிலை யாவையும் ஒருசமன தாகவே
தான்கண்டு மேலா கவே,
முத்திமுத லானவின் அருள்சேர்ந்த அன்பரடி
முடியாக வைத்து நின்னை
மூவுலகு தொழுதில்லை அம்பல நடம்புரியும்
முதல்வனென வேகம்பி னேன்
அத்தியுரி போர்த்தவா மத்தமதி கூவிளம்
அணிந்தவா கங்கா தரா
ஆயிருளம் மேவிவளர் மோனகுரு நாதனெனவும்
ஆனசிவ ஞான குருவே."

என்பது முதலிய ஐந்துபாடல்களினைக் குரு வணக்கமாக (பஞ்சரத்தினம் என்னும் பெயரோடு விளங்குவ)ப்பாடிப் போற்றினர். மேலும்,

"திருவளர் சிகராத் திரியிம மலைதன்
செல்விமான் மழுக்களை விடமும்
திகழ்சதுர்ப் புயமும் பாவலோ சனமும்
திரள்சடை புறைநதி மதியும்,
கருமிதக் களிற்றின் உரிவையும் பணியும்
காத்தவிர்க் கொண்டியித் தனைக்கண்

கருணையே வடிவாய் மதனழுத் திரைசேர்
கரசர ணதிசாக் கமதாய்
இருவினை சமமாய் மலபரி பாகம்
இசைந்தகான் தன்னில்வந் தெனையாண்
டின்பவீ டளிக்க மென்பதற் கூட்டும்
இறைவனே குருபைவா சிதியே
மருமலி வனஞ்சூழ்ந் திருளற விளங்கும்
வளர்அருள் தில்லைமா நகரின்
மன்னிவா ழுசே உன்னுமா றருளே
மதனதே சிகசிகா மணியே."

என்பது முதலிய பத்துப்பாடல்களால் சிகாமணிப் பதிகம் ஒன்றும் பாடினர். இச்செய்யுட்களால் இப்பெரியாரின் புலமைத் திறத்தை நாம் ஒருவாறு ஊகித்துணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு அறிவாசிரியரிடத்தில் அறிவுரை பெற்று மெய்யறிவு கைவரப்பெற்றபின் குருநாதனுடைய இணக்கம் பெற்றுக்கொண்டு தில்லையை விட்டுப் புறப் பட்டார்.

பெரியோர்கள் கூட்டுறவு

தில்லையை விட்டுப் புறப்பட்ட தேசிகர் திருவாரூரை அடைந்தார். தியாகப்பெருமானைப் போற்றி வணங்கினர். அப்போது அங்கு மெய்ஞ்ஞானியாக விளங்கியிருந்த தட்சணாமூர்த்தியடிகள் என்னும் பெரியோரோடு சிலநாள் தங்கியிருந்தார். பிறகு நாகைபட்டினத்திற்குச் சென்றார். நாகைக்கண்மையில் உள்ள சிக்கலில் உகந்தமிக்கஞான தேசிகர் என்னும் பெரியார் அப்போது அடியார் பலருக்கு அருள்செய்துகொண்டிருந்தலைக் கேள்விப்பட்டார். அப் பெரியாரோடு சிலநாள் தங்கியிருந்தார்.

குகைமடம்

பிறகு கந்தப்ப ஞானதேசிகர் தனித்திருந்து தவஞ் செய்யவேண்டும் என்று எண்ணினர். வடதிசையை

நோக்கிச் சென்றார். வேட்டவலம் என்னும் ஊர் திரு வண்ணாமலைக்கு அண்மையில் உள்ளது. அவ் வேட்ட வலத்திற்கு அண்மையில் உள்ள ஒருமலையின் முனையில் எவரும் உணராவண்ணம் பல ஆண்டுகள் தவஞ் செய்து கொண்டிருந்தார்; அப்போது அவ்வூரிலே முத்துச்சாமி உடையார் என்பவர் வாழ்ந்திருந்தார். அவரிடம் பல மாடுகள் இருந்தன. அவர் தேசிகருக்கு நாள்தோறும் பால் கறந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

உதவி வீண்போகாது

நாம் மற்றவர்கட்கு உதவிசெய்வோமாயின் அவ்வுதவி வீண்போகாது. அவ்வாறாக மெய்யறிவாளர்கட்குச் செய்யும் உதவி வீண்போகுமா? உடையார் ஒரு வீடு கட்டத் தொடங்கினர். நிலத்தைத் தோண்டியபோது புதையல் ஒன்று அகப்பட்டது. அதனால் அவர் பெரும் பணக் காரரானார். ஊரிலுள்ள மற்றவர்கட்குப் பொறாமை உண்டா கியது. உடையார் கந்தப்பதேசிகரின் இரசவாத வேலை யால் செல்வரானதாக நினைத்தார்கள். தங்களுக்கும் பொருள் வளிக்கவேண்டுமென்று தொல்லை செய்தார்கள். தேசிகர் தவத்திற்கு ஊறார்கள் தொல்லை முட்டுக் கட்டையாக இருந்தது. தேசிகர் யாருக்கும் தெரியாமல் வேறிடஞ் சென்றார்.

அருணையில் அமர்தல்

பிறகு தேசிகர் அருணையை அடைந்து கோபுரக்கரை குளக்கரையில் அமர்ந்திருந்தார். அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் தேசிகருக்குப் பால் முதலிய உணவுப் பொருள்களை அளித்துப் போற்றினர். அங்குத் தங்கியிருந்த போது தேசிகர் தம்மைப் போற்றி வழிபட்டவர்களின் விருப்பங்களை நிறைவேற்றியருளினர். பிறகு அண்ணாமலை

யார்கட்டளைப்படி ஈசான்யதிக்கில் உள்ள குளக்கரைக்குச் சென்று அமர்ந்து தவஞ்செய்து கொண்டிருந்தார். முத்துச்சாமி உடையார் முதலிய அன்பர்கள் அருணையை அடைந்து தேசிகருக்கும் அடியவர்கட்கும் வழிபாடுகள் செய்து சென்றனர். அக் காலத்தில் தேசிகருக்கு அகவை அறுபது ஆகியது.

புலி காவல்

தேசிகர் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது அவருக்கு எத்தகைய இடையூறும் நேராமல் புலிகள் காவலாகப் படுத்திருக்கும். தேசிகரைக் கண்டு போற்றி வழிபாடு செய்தற்கு வருகிற அடியவர்களையும் புலிகள் யாதுஞ் செய்வதில்லை. காட்டுக்குள் சென்றுவிடுமாறு தேசிகர் கட்டளையிட்டால் கட்டளைப்படியே போய்விட்டுப் பிறகு வரும். இந்தக்காலத்திலும் பல மெய்யன்பர்கள் தேசிகரைப் போற்றி வழிபட்டு நோய் முதலியன நீங்கப் பெறுகிறார்கள்.

ஐடன் துரை

அக்காலத்தில் ஐடன் துரை என்பவர் மாவட்டத் தலைவராக இருந்தார். அவருக்குக் காச நோய் இருந்தது. துரை எவ்வளவோ மருத்துவங்கள் செய்தும் அந் நோயைப் போக்கிக்கொள்ள முடியவில்லை. சில அன்பர்கள் ஞான தேசிகரின் அருட்பெருமையை மாவட்டத்தலைவருக்குக் கூறித் தேசிகரைப் போற்றினால் காசநோய் அகன்று விடும் என்றனர். ஐடன் துரை கந்தப்பிள்ளையைத் தேசிகரைக் கண்டு வணங்கிப் போற்றினார். தமக்குள்ள நோயைப் போக்கியருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். நோய் விரைவில் ஒழிந்தது. அதனால் களிப்படைந்த துரை தேசிகருக்கு

நிலந்தருவதாகச் சொன்னர். தேசிகரோ, "எனக்கு நிலம் வேண்டாம். அதோ அங்கிருக்கும் குடும்பிக்கு எவ்வளவு நிலங் கொடுத்தாலும் தகும்," என்று கூறி அண்ணாமலை யாரைச் சுட்டிக்காட்டினர். தேசிகரை நம்பி ஐடன் துரை ஒருமுறை ஆற்றவெள்ளத்தில் குதிரையோடு இறங்கி ஆற்றைத் தாண்டி அல்லல் பாதும் இல்லாமல் நல்லபடியாகக் கரையேறிவிட்டார். தேசிகர்பால் மக்கள் பலர் திரண்டு வந்து அறிவுரை பெற்றனர். அவர்களின் பொருட்டு ஞானக்கட்டளை என்னும் நூலை இயற்றி அறிவுறுத்தினர். மற்றும் தம்மைக் காண வந்த அடியவர்கட் கெல்லாம் அறிவுரை வழங்கினர்.

சிக்கல் செல்லுதல்

சிக்கலில் எழுந்தருளிய உகந்தசிங்க ஞானதேசிகர் வீடு பேற்றையடையுங்காலம் நெருங்கிவிட்டதென்பதை யுணர்ந்த தேசிகர் உடனே புறப்பட்டுச் சிக்கலுக்குச் சென்றார். இவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த உகந்தசிங்க ஞானதேசிகர் அருணைத் தேசிகனைக் கண்டதும் வீடுபேற்றை யடைந்தார். பிறகு கந்தப்ப ஞானதேசிகர் அருணையை அடைந்து வழக்கம்போல் தங்கியிருந்தார். தாம் வீடுபேற்றை அடையுங் காலத்தை முன்னரே உணர்ந்துகொண்டார்.

இறுதி

பிறகு ஞானதேசிகர் வடக்கு நோக்கி உட்கார்ந்தபடி நிட்டை செய்து பொறிபுலன்களை அடக்கி (1829-ஆண்டு) விரோதி யாண்டு மார்கழித் திங்கள் இருபத்தாறும் நாள் ஒருவாரத்தில் மிருக சிரீட நிண்மீனில் வீடுபேற்றை அடைந்தார்.

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. அண்ணாமலையார் தோத்திரப்பாமாலை
2. ஞானக்கட்டளை
3. அண்ணாமலையார் வெண்பா
4. அண்ணாமலை யந்தாதி
5. அண்ணாமலைக் கண்ணி
6. மௌனகுருதேசிகர் சிகாமணிப்பதிகம்
7. மௌனகுருஞான தேசிகர் பஞ்சாத்தினம்

முதலியன இவர் இயற்றிய நூல்கள். தேசிகருடைய சமாதி ச்சானியமடம் என்னும் பெயருடன் இப்பொழுது சிறந்து விளங்குகிறது.

ஈ. கந்தசாமிப் புலவர்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே சழுவர் குலத்திலே கந்தசாமிப் புலவர் தோன்றினர். அக்காலத்தில் இக்குலத்தினர் ஆடைநெய்து விற்றல், கள் இறக்கி விற்றல் முதலிய தொழில்களை மேற்கொண்டிருந்தனர். கந்தசாமிப் புலவர் இளமைப் பருவத்தில் கல்வியை நன்கு கற்றார். பெரியோர் ஒருவரிடம் திருமுருகனுடைய ஆறெழுத்து மந்திரத்தைப் பெற்று அதனை நாளும் முறையாக உருவேற்றினர். அதனால் முருகப்பெருமானுடைய திருவருள் நாளும் பெருகியது.

நெய்தல் தொழில்

வாழ்க்கையை நடத்துதற்குக் கந்தசாமிப் புலவர் யாதேனும் ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டியது

இன்றியமையாததாயிற்று. கம்மிணத்தாரில் செல்வராக விளங்கிய ஒருவருடைய இல்லத்தில் நெய்தல் தொழிலைச் செய்து அதனைப்பெறும் ஊதியத்தைக்கொண்டு காலங் கள்ளினர். இவர் நெய்தற் தொழிலைப் பார்த்துக்கொண்டி ருந்த இல்லத்துச் செல்வரின் அருமைப் பெண் சிறந்த பேரழகியாக விளங்கினள். அவளுடைய அழகு இவ ருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. மயலால் வருந்திய இவர் அம் மங்கையின் அழகை வியந்து புதிய செய்யுள் ஒன்றைப் பாடினர். அச்செய்யுள் செல்வரின் செவிக்கு எட்டியது. நம்முடைய கூலியாளாகத் தொழில் புரியும் இவன் நம்முடைய மகளை விரும்பினனே என்று அவர் உள்ளம் பொங்கினர். கந்தசாமிப் புலவரைப் பார்த்து, "இனிமேல் நீ என்னுடைய இல்லத்தில் அடி யெடுத்து வைத்தல் கூடாது," என்று கூறி இல்லத்தை விட்டு வெளியேற்றினர்.

பொருளும் மருளும்

வெளியேறிய கந்தசாமிப்புலவர் வியக்கத்தக்க பாடல் களை விரைவாகப் பாடலானார். முருகன் திருவருள் பெற்ற இவருடைய வாய்மொழி வாய்மையாகப் பலித்தது. இவன் நம்மீது வசைப்பாடல்களைப் பாடுவானையின் நமக்கு எதம் பலவும் போதருமே யாது செய்வோம். தீது நேரா திருக்க வேண்டுமே என்று செல்வர்கள் பலரும் அஞ்சினர். இவருக்குப் பெரும்பொருள் வழங்கிச் சிறப்புச்செய்து பல்லக்கு முதலிய வரிசைகள் தந்தனர். பரம்பொருளின் அருள்பெற்றால் பெரும்பொருள் குவிதல் அருமையாமோ? முன்பு இவரைத் தன் வீட்டில் இருந்து வெளியேற்றிய செல்வன் இப்பொழுது இவருடைய சிறப்பைப் பார்த்து வியந்தான். இவரைத் தன் மருகனைக்கிக் கொள்ளவேண்டு

மென்று அளவுகடந்த ஆர்வங்கொண்டான். தக்கவாறு வரவேற்றுப் போற்றித் தன் மகளைத் திருமணமுஞ் செய்து கொடுத்தான். புலவர் சிறிதுகாலம் அப் பொற்றொடியோடு இனிது வாழ்ந்திருந்தார். பிறகு பலவிடங்கட்குஞ் சென்று சுற்றத் தொடங்கினர்.

செந்தின்மா நகருக்குச் செல்லுதல்

தமக்குப் பேரருள்புரிந்த முருகனைப் போற்றி வழிபட எண்ணினர். பல்லக்கில் புறப்பட்டுச் சென்றார். குருகையூரை ஆள்வார் திருநகரில் அடைந்தார். அவ்வூரில் வாழ்ந்திருந்த அந்தணர்கள் கந்தசாமிப் புலவருக்கு முன்னல் வந்தனர். அவரைப் பார்த்து, "இவ்வூரில் பல்லக்கில் ஏறி இவ்வாறு செல்லுதல் தகாது. இச்செயல் எங்களையெல்லாம் இழிவு படுத்துவதாகும். எவரும் இவ்வாறு செல்லத் துணியார். நீ உடனே கீழே யிறங்கி இவ்வூர் எல்லை தாண்டுமளவும் நடந்து செல்வாயாக," என்று கூறினர். கந்தசாமிப்புலவர் அந்தணர்களைப் பார்த்து, "முருகனுடைய திருவருளை நான் இனிது பெற்றுள்ளேன். அறுமுகன் அருளைப் பெற்றபின் நான் மனிதனல்லேன். தேவர்களைப் போன்றவன். என்னைத் தடை செய்யாமல் அப்பாற் செல்லுங்கள். செல்லமாட்டீர்களாயின் உங்கள் மீது வசைப்பாடல் பாடித் தீமையை உங்களுக்கு உண்டாக்குவேன். இதனை நன்முகத் தெரிந்து கொள்ளுங்கள்," என்று கூறினர். இதனைப் புலவர்புராண ஆசிரியர்,

"தடுத்தவர் தம்மைநோக்கிச் சண்முகன் அருட்பேராண்மை
அடுத்தபின் மனிதனல்லேன் அமரரை அனைய னேயான்
விடுத்தயங்கின் இன்றேல்அந்தோ வெங்கலி உலைத்து நும்மைக்"
கெடுத்திங்கன் செல்லேன் சாட்சிகேட்டனை உணர்மினென்றான்

என்று உரைத்துள்ளார்.

அருமை ஆராய்தல்

இவ்வாறு இயம்பியதைக் கேட்டு அந்தணர்கள் திகைத்தனர். கூட்டத்தில் இருந்த ஒருவன் புலவரின் அருட்டிறத்தை ஆராய்ந்து பார்க்க எண்ணினான். எவரும் மறியாதவாறு தெருமண்ணிற் சிறிது அள்ளிக் கையில் இறுக மூடி வைத்துக்கொண்டு புலவரைப் பார்த்து, "இப் பொழுது என்னுடைய கைக்குள் இருப்பது யாது? இதனை ஒரு செய்யுளால் கூறவேண்டும். அவ்வாறு கூறிவிட்டால் பல்லக்கில் செல்லலாம். இன்றேல் உனது பல்லக்கை முறித்துப் பொடிசெய்து விடுவோம்," என்று கூறினன். உடனே கந்தசாமிப் புலவர்,

"கொங்கைக்குச் சந்தனமாம் கோலவிழிக் கஞ்சனமாம்
திங்கள்நுத லுக்குத் திலகமாம்—மங்கையர்கின்(று)
ஆடல் புரிகின்ற ஆழ்வார் திருநகரி
மாடத் திருவீதி மண்."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். இதனைக் கேட்டவுடன் கைக்குள் மண்ணை வைத்துக் கொண்டிருந்தவன் உடனே தனது கையைத் திறந்து காட்டிவிட்டான். கூட்டத்தினர் மிகுந்த வியப்படைந்தனர். அவர்கள் நாம் இப் புலவன் வாயால் வசைகவிகேட்டுத் தொல்லைக்கு உள்ளா காமல் தப்பியது சடகோபருடைய திருவருள்தான் என்று எண்ணி மகிழ்ந்து அப்பாற் சென்றனர்.

வியத்தகு புதுமை

பிறகு புலவர் செந்தில்மாநகரை அடைந்தார். கந்த நாதனைப் போற்றி வழிபட்டார். அங்குள்ளவர்கள் இப் புலவருடைய பெருமையை அறிந்து மகிழ்ந்து ஆதரவு செய்து போற்றினர். பிறகு இவர் கடற்கரையில் ஓரிடத் தில் அமர்ந்து முருகன்மீது பல செய்யுட்களைப் பாடினர். பலர் கூடிக் கேட்டுக் கொண்டிருந்தனர். இவர் தமது

வாயில் பாக்கு வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த படியால் அடிக்கடி பக்கத்தில் எச்சிலைத் துப்பிக்கொண்டே யிருந்தார். இஃதிவ்வாறாக, கருவறையில் (மூலத்தானம்) எழுந்தருளியிருந்த முருகப் பெருமானது ஆடையில் வெற்றிலை பாக்கின் எச்சல் படிந்திருந்தது. தூசை புரிபவன் அதனைப் பார்த்தான். உள்ளந் திடுக்கிட்டான். "அந்தோ இன்னீது இவ்வாறு துணிந்து எச்சிலைத் துப்பியவர் யாவர்? இவ்வாறு செய்யக்கூடியவர்களும் உலகில் உள்ளனரோ?" என்று கூறி வருந்தினன்; அழுதான்; தொழுதான். அப் பொழுது ஒருவன்மீது முருகனது அருள்வெறி வந்தது. அவன் அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "எனது பெயர்கொண்ட புலவன் ஒருவன் என்மீது இனிய செய்யுட் களைப் பாடினன். நான் அப்பொழுது அங்குச்சென்று அவன் பாடுதலைக் கேட்டுக்கொண்டு பக்கத்தில் நின்றிருந் தேன். நான் நின்றிருத்தலை அவன் அறியாமல் எச்சிலை உமிழ்ந்தான். அதனால்தான் அவ்வெச்சில் ஆடைமீது பட்டுவிட்டது," என்று கூறிப் பின் தன் உணர்வு வரப் பெற்றான்.

தொண்டி நாடகம்

இவர் அங்குத் தங்கியிருந்தபோது முருகக் கடவுள்மீது 'திருச்செந்தூர் தொண்டி நாடகம்' என்னும் நூல் ஒன்றை இயற்றினர்.

கோளுஞ் செல்லுதல்

கந்தசாமிப்புலவர் தம் குடும்பத்தை இனிது நடத்தற்குப் பொருள் விரும்பினர். அதன் பொருட்டுக் கோளுஞ் சென்று வரலாம் என்று எண்ணினர். தமது நோக்கத்தை முருகப் பெருமானிடம் கூறினர். முருகக் கடவுள், "அவ்வாறே செல்வாயாக," என்று இவருடைய கனவில்

தொண்டி உரைத்தருளிடுதோடு கோள மன்னரது உள்ளத் திலுந் தோன்றிப் பொருளை விரும்பி என்னுடைய அடி யவன் ஒருவன் இன்னிடத்திற்கு வருவான். அவனுக்கு ஐயாயிரம் பொன் வழங்குவாயாக," என்று கட்டளையிட் டருளினர். இவர் கோளனுஞ் சென்று அரண்மனையை நோக்கிச் சென்றார். இவர் தாழ்ந்த குலத்தினர் என்பதை உணர்ந்த அரசன் சிறிது வெறுப்புடன் இருந்தான். இவர் அரசனுக்குத் தக்கவாறு அறிவுரைகள் கூறி அவனுடைய ஐயத்தையும் அகற்றிப் பொருள்பெற்றுத் திரும்பினர்.

இறுதி

இவர் மற்றும் பல புதுமைகள் செய்துகொண்டு சில காலம் உலகில் வாழ்ந்திருந்து பிறகு முருகனுடைய திரு வடியை அடைந்தார். இவருடைய மகனைத் தொண்டிய ஆறுமுகப் புலவரும் அறுமுகன் அருட்புலமை நிரம்பப் பெற்றுச் சிறந்து விளங்கினர். கந்தசாமிப் புலவருடைய தனிப்பாடல்களில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை மறைந்து போயின. சொண்டி நாடகம் இருப்பதும், மறைந் ததும் தெரியவில்லை.

---

10. சோழிய அடிகள்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே பொதியமலைக்கு அண்மையில் உள்ள ஓர் ஊரிலே, செல்லிசில் வடமலையப்பபிள்ளையன் அரசாட்சி செய்துகொண்டிருந்த காலத்தில் சோழிய அடி கள் பிறந்து வளர்ந்து கல்வி கற்றுச் சிறந்து விளங்கினர்.

கல்வி

இவர் இளைஞராக விளங்கிய காலத்தில் ஓர் ஆசிரிய ரிடம் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அவ்வாசிரியர் முத

மைப் பருவத்தில் ஓர் இளம் பெண்ணைத் திருமணஞ் செய்தார். சிலகாலத்தில் அவ்வாசிரியர் இறந்திபடையுங்காலம் நெருங்கிவிட்டது.

ஆசிரியர் கட்டளை

அவ்வாசிரியர் தம் இளமனைவியின் பிற்கால வாழ்க்கைக்கு யாதும் பொருள் தேட்டி வைத்தில். அவர் தாம் கூற்றுவன் உலகு குறுகுவது திண்ணம் என்பதை உணர்ந்தவுடன் தம்முடைய அருமை மாணவராக விளங்கிய சோழியனைப் பார்த்து, "அன்புள்ள மாணவனே! நான் என் இளமனைவியை வறிய நிலைமையில் விட்டுவிட்டு மாளும்படியாக நேர்ந்திருக்கிறது. முதுமைப் பருவத்தில் திருமணஞ் செய்துகொண்ட தவற்றினை இப்பொழுதுதான் உணர்கிறேன். உணர்ந்து என்ன செய்வது? நான் உனக்குக் கல்வியை நன்கு கற்பித்திருக்கிறேன். நான் நடத்திவந்த பள்ளிக்கூடத்தை நீ நடத்தலாம். அதற்குத் தக்க அறிவு உனக்கு அமைந்திருக்கிறது. ஆகவே நீ பள்ளிக்கூடத்தை நடத்துவதுடன் என் மனைவியையும் உன் தாயாகமதித்துப் பாதுகாக்கவேண்டும்," என்று கூறினர். சில நாட்களில் மாண்டுபோனர்.

விண்ணப்பம்

சோழியர் ஆசிரியர் சொல்லைத் தலைமேற்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்தினர். ஆசிரியர் மனைவிக்கு ஆக வேண்டிய உதவிகளையெல்லாஞ் செய்து காப்பாற்றினர். ஊரில் உள்ளவர்கள் சோழியர்மீது தவறான எண்ணங் கொண்டுவிட்டார்கள். அவரைப் பார்த்து, "ஓ சோழியனே! நீ என்ன காரியஞ் செய்யத் துணிந்தனை! உனக்குக் கல்வியைப் போதித்த ஆசிரியனுடைய மனைவியென்று ஒரு சிறிதும் எண்ணிப் பார்க்காமற் போனாய்! இத்தகைய தீய

வழியிலே நீ நடக்கலாமா? இது நரகிலே புகுதற்கு வழி என்று நீ சிறிதும் உணர்ந்துகொள்ளவில்லையா? உடனே இத்தீவினைத் தொழிலை விட்டொழிப்பாயாக," என்று எல்லோரும் ஒரே முகமாக உரைத்தனர்.

சோலையர் துறவியாதல்

ஊரினர் உரைத்த வீண்பழிமொழிகளைச் சோலையர் கேட்டார். அவருடைய உள்ளம் எரிந்தது. அவர் உடனே தம் ஆசிரியர் மணிவிழையைக் கண்டு, "அருமைத் தாயே! உன்னை என்னை ஈன்ற தாயினும் பன்மடங்கு மிகுதியாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணினேன். எத்தீவினையோ வந்து அதனைத் தடுத்துவிட்டது. நான் இனிமேல் இவ்வூரில் தங்கியிருக்கமாட்டேன். நீ இறைவன் திருவருளையே துணையாக நம்பியிருப்பாயாக," என்று கூறித் துறவுக்கோலம் பூண்டு எல்லாவற்றையும் வெறுத்துச் சென்றுவிட்டார்.

வியாழம் தவற்றின உணர்தல்

சோலையரது நிலைமையைக் கண்ட ஊரினர் இரங்கினர். நாம் வீண் பதற்றங்கொண்டு குற்றமற்றவன்மீது அடாப் பழியைச் சுமத்திவிட்டோம் என்று உணர்ந்தனர். ஆசிரியன் மணிவிழையைப் போற்றி வணங்கினர்கள். "நாங்கள் யாதும் ஆராய்ந்து பாராமல் பழியுரையைப் பகர்ந்துவிட்டோம். எங்கள்மீது சினங்கொள்ளவேண்டாம். உங்கட்கு ஆகவேண்டியவைகளையெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்',' என்று சொல்லி வேண்டிக்கொண்டு அவ்வாறே பாதுகாக்கத் தொடங்கினர். துறவியாகச் சென்ற சோலையரோ உலகிடங்களினும் தங்கித் தவஞ் செய்துகொண்டிருந்தார்.

வடமலையப்பபிள்ளையன்

சோலைய அடிகள் தவத்தாற் சிறந்த மெய்ஞ்ஞானியாக விளங்கினர். அவருடைய பெருமை யாண்டும் பரவியது. சோலைய அடிகள் தவத்தால் பெரியவர் என்பதை அந்நாளில் நெல்லையில் இருந்த ஆட்சி புரிந்துகொண்டிருந்த வடமலையப்பபிள்ளையன் உணர்ந்தார். அவர் பூவேந்தராக விளங்கியதன்றிப் பல நூல்களையும் ஆராய்ந்து கல்வியறிவு பாவேந்தராகவும் விளங்கியிருந்தார். அவரை அடுத்துப் புலவர்கள் பலர் தூலாராய்ச்சி செய்து பொழுது போக்கியிருந்தனர். வடமலையப்பபிள்ளையன் ஒருநாள் சோலையரைக் கண்டு பணிந்து வணங்கினர். "அடியேனுக்கு அருளுரை கூறவேண்டும்" என்று பணிந்து வேண்டினர். சோலைய அடிகள் அவ்வாறே அவ்வேந்தனுக்கு அருள் புரிந்தார்.

குருகையூரில் நடந்தது

சோலைய அடிகள் தனிப்பாடல்கள் பலவற்றை இயற்றிக்கொண்டு எல்லா இடங்களிலுஞ் சுற்றிக்கொண்டிருந்தார். ஒருநாள் குருகையூரை அடைந்தார். ஓர் அந்தணன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து, "சிவசிவா" என்று சொல்லிக்கொண்டிருந்தார். இதனைக் கேட்டதுந் திருமால் அடியவனை அந்தணனுக்குப் பெருஞ்சினம் மூண்டது. "நீ வினைவாக இவ்விடம் விட்டுப் புறப்பட்டு அப்பால் ஓடிப்போ. என்பு மாலையைப் புனையும் சிவனுடைய அடியவனை உன்னினக் கண்ணாற் பார்த்தாலும் தீவினை வந்து சூழுநும்," என்று பலவாறு வைது விரட்டினன். அவ்வளவில் சோலைய அடிகளுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. விரைந்து அவ்வூர்ச் சுடுகாட்டிற்குச் சென்றார். அங்கு இறைந்து கிடந்த எலும்புகளைப் பொறுக்கி மாலையாக அணிந்தார். உடல் முழுதும் திருவெண்ணீற்றைப் பூசினர். ஊமத்தை மாலை,

எருக்குமாலை ஆகியவைகளைப் புனைந்தார். கையில் மண்டை யோடு ஒன்றைத் தாங்கினர்; இவ்வாறு சிவபெருமானைப் போலத் திருக்கோலம் பூண்டு குருகையூருக்குள் நுழைந்தார். அந்தணர் தெருக்களில் நடந்தார். இவரைக் கண்டு சில அந்தணர்கள் அஞ்சியோடினர். சிலர் தமது வீட்டுக் கதவுகளை மூடிக்கொண்டனர். சோழிய அடிகள் அந்தணர் அஞ்சி நிலைகுலைவதைக் கண்டு அந்த அளவில் விட்டு விடவில்லை. அவ்வூர்க் கோயிலுக்குள் நுழையத் தொடங்கினர். கோயிற் கதவை உடனே அடைத்தனர். சிலர் சோழிய அடிகளைத் தாக்கவும் முற்பட்டனர். ஆனால், அவ்வாறு முற்பட்டவர்களைப் பேய் பூதங்கள் தாக்க முற்பட்டாற்போல ஒரு காட்சி இறைவன் திருவருளால் காணப்பட்டது. அவர்கள் அஞ்சி நீங்கினர்.

அரசன் வருதல்

அச்சமயத்தில் வடமலையப்பபிள்ளையன் குருகையூருக்கு வந்தார். எவரைவர் சிலர் அரசனுடைய வடமலையப்பபிள்ளையனைக்கண்டு சோழிய அடிகளின் திருவிளையாடல்களைக் கூறினர். உடனே வடமலையப்பபிள்ளையன் சோழிய அடிகளைக் கண்டு வணங்கினர். "அடிகள் ஏன் இவ்வாறு திருவிளையாடல் செய்கின்றது?" என்று உசாவினர். உடனே சோழிய அடிகள் அரசனைப் பார்த்து, "நான் முற்பிறவியில் இவர்களுடைய சமயத்தில் இருந்தேன். அப்பொழுது இயற்றிய நூல் ஒன்றை இக்கோவிலுக்குள் வைத்திருக்கிறேன். அதனை எடுத்துக்கொண்டு போதல்வேண்டும். அதன்பொருட்டே கோவிலுக்குள் செல்லத் துணிந்தேன்," என்றார். இதனைக் கேட்டவைணவர்கள் வியப்படைந்தனர். மிகுந்த ஐயங்கொண்டனர்; சோழிய அடிகளைப் பார்த்து, "நீர் கோவிலுக்குட் சென்று அந்நூலை எடுக்காமற் போவீராயின் நாங்கள் எல்லோரும்

இறந்துபோவோம். சொன்னவாறு அந்நூலை எடுப்பீராஞல் உம்மைப் பணிந்து உம்மையே இறைவனுகக் கொள்வோம்," என்று கூறினர்.

கோவிலுக்குட்போய் நூல் எடுத்தல்

சோழிய அடிகள் அரசனையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குள் நுழைந்தார். ஒரு பெரிய கருங்கல்லைப் புரட்டினர். அதன்கீழ் ஒரு பெட்டியிருந்தது. அப் பெட்டியில் இருந்து தாம் கூறியநூலை வெளியே எடுத்து எல்லோருக்கும் காட்டினர். இதனைக்கண்டு எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். சோழிய அடிகள் அவ்விடம் விட்டு அகன்று வேறு ஊரையடைந்தார்.

சச்சிதானந்தமாலை

பலவிடங்களிலும் சுற்றித்திரிந்த அடிகள் தனிப் பாடல்கள்பல இயற்றியதன்றிச் சச்சிதானந்தமாலை என்னும் பெயருடன் சிறுநூல் ஒன்றும் இயற்றினர்.

இறுதி

இப்பெரியாருடைய இறுதியைப் பற்றிப் பலர் பலவாறு அங்ஙனில் பகர்ந்தனர். சிலர் சோழிய அடிகளின் உடல் மாயமாகப் போய்விட்டதென்றனர். சிலர் சோழிய அடிகள் அறிதுயிலில் அமர்ந்திருக்கும்போது தீயோர் சிலர் எரிமூட்டி விட்டனரென்றும், உட்ல் முழுவதும் வெந்தபோனபின் தலைமட்டும் பறந்துபோய் அவருடைய மாணவன் ஒருவன்முன்பு விழுந்ததென்றும், அம்மாணவனுக்குப்பல அறிவுரை வழங்கிச் சச்சிதானந்த மாலையைக் கூறியதென்றும் உரைக்கலாயினர். இவர் அருட்புலவர்களில் ஒருவராவர். இவ் வரலாறு தண்டபாணி யடிகளால் இயற்றப்பெற்ற புலவர்புராணச்செய்தியை அடிப்படையாகவைத்து எழுதப்பட்டது.

கக. பத்திரகிரியார்

தோற்றம்

பத்திரிகிரியார் துளுவநாட்டிலே உஞ்சேனை மாகாளம் என்னும் நகரிலே பட்டினத்தடிகள் காலத்திலே அரசாட்சி செய்துகொண்டிருந்தார். இவர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினமையின் இவருடைய புகழ் யாண்டும் பரவியது.

பட்டினத்தடிகள்

பட்டினத்தடிகள் அந்நாளிலே, பல சிவப்பதி கட்கும்போய் இறைவழிபாடுசெய்து கொண்டிருந்தார். உஞ்சேனை மாகாளத்தை அடைந்து இறைவனைப் போற்றி வழிபட்டார். பிறகு நகரை யடுத்த சிறுபுறங் காட்டில் இருந்த ஓர் ஆனைமுகக் கடவுளின் கோயிலில் அமர்ந்து அறிதுயிலில் இருந்தார்.

கள்ளர்கள்

அந்நாளிற் கள்ளர்கள் பலர் கொள்ளையடித்தற்குப் புறப்பட்டார்கள். பிறகு அவர்கள் எங்கேபோய்க் களவு செய்யலாம் என்று எண்ணினர். பத்திரகிரி மன்னனுடைய அரண்மனைக்குப் போய்க் களவுசெய்வது என்றுமுடிவாகியது. நகரை நெருங்கும்போது காட்டில் இருந்த பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தங்களுடைய எண்ணம் இனிது நிறைவேறவேண்டும் என்றும், அவ்வாறு நிறைவேறினால் விலைஉயர்ந்த அணிகலன் ஒன்றை வரும் போது செலுத்திவிட்டுப் போவதாகவும் வேண்டிக் கொண்டனர். கள்ளர்கள் எண்ணம் இனிது நிறைவேறியது. கள்ளர்கள் விரும்பியவாறு பொருள்கள் அகப்பட்டன. திரும்பிச்சென்றபோது வேண்டுதலை மறக்காமல் பிள்ளையாருக்கு ஓர் அணிகலத்தை அணிய விரும்பினர்.

ஓர் உயர்ந்த அணிகலத்தை யெடுத்துப் பின்னோர் கழுத்திற் போட்டுவிட்டுச் சென்றனர். அம்த அங்கே அறிதுயிலில் இருந்த பட்டினத்தடிகளுடைய திருக் கழுத்தில் விழுந்தது.

காவலர் தேடிவருதல்

அரண்மனையிற் களவு போனதை மறுநாள் காவலர் உணர்ந்தனர். எல்லா இடங்களிலும் கள்ளர்களைத் தேடினர். சில் காலடியை அறிகுறியாகப் பிடித்துக் கொண்டு பின்னோர் கோயிலுக்கு வந்தனர். பட்டினத்தடிகளுடைய கழுத்தில் ஓர் அணிகலம் இருப்பதைக் கண்டு அடிகளும் கள்ளர்களில் ஒருவராக இருத்தல் கூடுமென்று எண்ணினர். உண்மையை உரைக்குமாறு வற்புறுத்திப் பலவாறு வருத்தினர். அடிகளாரோ எல்லாவற்றிற்குஞ், "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டிருந்தனர். சில் விரைந்து சென்று பத்திரகிரி மன்னனைக் கண்டு, "அரசே! கள்வர் தலைவன் காட்டில் அகப்பட்டனன். அவனை யாது செய்வது? அவனைத் தக்கவாறு ஒறுக்காமல் விடின் அரண்மனைப் பொருள்கள் நாள்தோறும் களவு போய்க்கொண்டே யிருக்கும்," என்று உரைத்தனர். எவலர் இயம்பியதைக் கேட்ட காவலன், "அக் கள்ளனைக் கழுவில் ஏற்றுக," என்று கட்டளையிட்டனன்.

கழுமரம் பற்றியெரிதல்

காவலர்கள் அடிகளாரைப் பிடித்துக்கொண்டு போய்க் கழுமரத்திடம் நிறுத்தினர்கள். பட்டினத்தடிகள் எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணியவராய், "என் செயலாவது" என்னுஞ் செய்யுளைப் பாடினர். அவ்வளவில் கழுமரம் தீப்பற்றி எரிந்துபோய்விட்டது.

மன்னன் துறவியாதல்

கழுமரம் தீப்பற்றி எரிந்துபோன புதுமையைக் காவலர் கண்டனர். விரைந்து அரசனிடம் ஓடினர். அரசனைப்பார்த்து, "அரசே! நாங்கள் இந்தப் புதுமையை என்னவென்று இயம்புவோம்? கள்ளர் என்று எண்ணிய அந்த மனிதனைக் கொண்டுவந்து கழுமரத்திடம் விடுத்திய அளவில் அவர் ஒரு பாடலைப் பாடினர். பாடினவுடனே கழுமரம் தீப்பிடித்து எரிந்துபோய்விட்டது," என்று கூறினர். உடனே பத்திரகிரி மன்னன் எழுந்தான். விரைந்து கழுமரம் தீப்பிடித்த இடத்திற்கு ஓடினன். பட்டினத்தடிகளைப் பார்த்தான். அவர் பெரியமெய்ஞ்ஞானி என்று எளிதில் உணர்ந்தான். "பெரியீர்! நான் நன்முக உசாவாமல் செய்த இக் குற்றத்தைப் பொறுத்து அடியேனுக்குத் திருவருள் புரிந்து ஆட்கொண்டருளல் வேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். பட்டினத் தடிகள் கடைக்கணிக்கம் செய்தருளினர். அவ்வளவில் பத்திரகிரி மன்னனுடைய மனந்தெளிவடைந்தது. அரசாட்சியிலும் உலகவாழ்க்கையிலும் விருந்த வெறுப்புக் கொண்டான். அப்பொழுதே அரசகோலத்தை நீக்கினன். தம்மைச் சூழ்ந்திருந்த உறுதிச்சுற்றத்தினரையுந் திரும்பிப் பார்க்கவில்லை. அடிகளின் அடிகளில் அடியற்ற பனை யைப்போல் வீழ்ந்தான். அடிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டு அப்படியே கிடந்தான். பிறகு அடிகள் அரச னுக்கு அருளுரைவழங்கி ஆட்கொண்டருளினர்.

திருவிடைமருதூர்

பிறகு பத்திரகிரியாரைப் பார்த்து, "அன்பனே நீ திருவிடை மருதூருக்குச்சென்று ஐயமேற்றுண்டு அவ் விடமே தங்கியிருப்பாயாக," என்று திருவருள்புரிந்தார். பத்திரகிரியார் தம்முடைய ஆசிரியர் கட்டளைப்படி

திருவிடை மருதூரை நோக்கிப் புறப்பட்டார். வழியில் உள்ள பல சிவப்பதிகளிலும் இறைவழிபாடு செய்து கொண்டு திருவிடை மருதூரை யடைந்தார். மேலைக் கோபுர வாசலில் தங்கியிருந்தார். பட்டினத்தடிகளுந் திருவிடை மருதூரை யடைந்து கீழைக்கோபுர வாயிலில் தங்கினர்.

ஒரு நாய்

ஒருநாள் பத்திரகிரியார் பிச்சையேற்றதைக் குருவுக்குப் படைத்து உண்ணத் தொடங்கினர். அப்பொழுது ஒருநாய் அவ்விடத்தை யடைந்து வாலைக்குழைத்து எளிய முகங்காட்டி நின்றது. பத்திரகிரியார் அந்நாய்க்குஞ் சிறிது உணவளித்தார். அஃது அன்றுமுதல் பத்திரகிரியாரைப் பிரியாமல் அவருடனேயே இருந்தது.

இறைவன் காட்சி

ஒருநாள் இறைவன் ஒருதுறவியைப் போல் பட்டினத் தடிகளிடத்திற்கு எழுந்தருளி, "அன்பனே! பசியால் வாடுகிறேன், எனக்குச் சிறிது உணவளிப்பாயா?" என்று உசாவினர். இதனைக்கேட்ட அடிகள், "பெரியீர்! நான் கோவணந்தாங்குவதே பாரம் என்று இருக்கிறேன். உமது பசிக்கு உணவிட எவ்வாறு முடியும்? ஆயினும் ஒன்று சொல்லுகிறேன்; மேலைக்கோபுர வாசலில் குடும்பி ஒருவன் உளன். அவனிடஞ் சென்றால் கட்டாயம் உணவளிப்பான். அங்குப்போம்," என்று கூறினர். துறவிக் கோலத்தில் வந்த இறைவன் உடனே மேலைக் கோபுர வாசலுக்குச் சென்றார். பத்திரகிரியாரைக் கண்டார். பட்டினத்தடிகள் கூறிய செய்தியைக்கூறி, "நீராவது என்னுடைய பசியைப் போக்குவீரா?" என்று உசாவினர். இதனைக் கேட்ட பத்திரகிரியார் தமது

திருவோட்டைக் கையில் எடுத்தார், "பெரியீர்! இந்த நாயும் ஓடும் என்னைக் குடும்பி யாக்கிவிட்டன," என்று கூறி அந்நாயின்மீது ஓட்டை வீசினர். ஓடு நாயின்மேல் வீழ்ந்து உடைந்தது. நாயும் இறந்தது. பிச்சைக்கு வந்த கடவுளும் மறைந்தார். அப்பொழுது பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல், அருட்புலம்பல் முதலிய ஞான் கனைப் பாடியருளினர். பிறகு அறிதுயிலில் அமர்ந்தார்.

விந்தை

இறந்துபோன நாய் வடநாட்டில் ஓர் ஊரில் ஓர் அழகிய பெண்ணாகப் பிறந்து வளர்ந்து மங்கைப் பருவத்தை யடைந்தது. உற்றார் உறவினர் அப்பெண் ணுக்குத் திருமணஞ் செய்து வைத்தற்கு ஏற்பாடு செய்த னர். அப்பெண், "தென்னாட்டில் திருவிடை மருதூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள என் ஆசிரியரிடத்திலே கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். நான் திருமணஞ் செய்து கொள்ள மாட்டேன்," என்று கூறி விட்டனள். உற்றார் உறவினர் வியப்படைந்து அப்பெண்ணை அழைத்து வந்து பத்திரகிரியாரிடஞ் சேர்த்தனர். பத்திரகிரியார் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு பட்டினத்தடிகளின் திருமுன் சென்றார். "குருநாதனது அருட்பொருளை உண்ட நாய்க்கும் பிறவிப்பிணி உண்டாகலாமோ?" என்று கூறிக் கண்ணீர் சொரிந்தார். பட்டினத்தடிகள், "எல்லாம் இறைவன் திருவருள்" என்றார். அவ்விடத்தில் அப் பொழுது ஒரு பேரொளி உண்டாயிற்று. இறைவன் திருவருள் நோக்கப்படி பத்திரகிரியார் அப்பெண்ணோடு அப்பேரொளியிற் புகுந்து மறைந்தார். (இவர் வரலாறு புலவர்புராணம் உடையாரால் வேறுவகையாகவும் கூறப் பெறுகிறது.)

கூ. சவாதுப் புலவர்

தோற்றம்

பாண்டிவளநாட்டில் பரம்பைக்குடிக்கு அடுத்த எம னேசுவரம் என்னும் ஊரிலே முகமதியர் குலத்திலே சவா துப புலவா பிறந்தார். தமிழக கலஷ்யைக கருத்துட்ன சிறப்பாகக் கற்றுப் புலமைபெற்று இராமநாதபுரம் சமத் தானப் புலவராக இருந்தார். இவர் காலத்தில் இரகுநாத சேதுபதி என்பவர் அங்கு ஆட்சிபுரிந்துகொண்டிருந்தார். சவாதுப்புலவரின் திறமை தனிச் சிறப்புடையதாக விளங் கியது.

பரிசில் வாழ்க்கை

இவர் சேதுபதியின் அவைக்களப் புலவராக அமர்ந் திருந்தபோது சமயங் கிடைத்தபோதெல்லாம் பிற சமத் தானங்கட்குஞ் சென்று தமது புலமையைக் காட்டிப் பரிசு கள் பெற்று வந்தார். திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்த போது திருவனந்தபுர அரசர் இவரைப் பார்த்து "உங்க ளுடைய சேதுபதி எத்தன்மையுடையவர்?" என்று உசாவி னர். இவர் உடனே,

"கினையாளன் சேது பதிரகு நாயகன் கிஞ்சுகவாய்
இனையார் கலவி யிடத்துகம் மீசர் இடத்துமன்றி
வனையாத பொன்முடி சற்றே வளையு மகுடமன்னர்
தனையா டியகையில் காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே"

என்று பாடினர். இதனைக் கேட்ட திருவனந்தபுரவரசர் நகைத்து, "உங்கள் அரசர் இவ்வளவு பெரிய வணங்காமுடி மன்னரா?" என்றார். பிறகு தக்கவாறு நன்கொடைகள் வழங்கியனுப்பினர்.

புதுக்கோட்டை அரசர் அவைக்கு ஒருமுறை சென் றார். அப்பொழுது அங்கு அரசராக இருந்தவர் நன்கு கல்வி

கற்றவர். ஆயினும் புலவர்களைக் கண்டு அவர்களுடைய குறையைக் கேட்டுத் தக்கவாறு பரிசில் வழங்கிப் போற்றுமல் இருந்தார். இதனைச் சுட்டிக்காட்டி அரசருக்கு அறிவுறுத்தவேண்டும் என்று எண்ணிய இப்புலவர் சிறிதும் தயங்காமல்,

"காயாத பாலுமில்லை பாயாத புலியுமில்லை
கற்றோர் வந்தால்
ஆயாத வேந்தரில்லை மடிகனத்தால் வழிபயமுண்
டாகுங் கண்டாய்
சாயாத முடிவேந்த ராகுநாத தொண்டைமான்
சாற்றக் கேண்மோ
நீயாதி சேடனெப்பாய் கற்றிருந்துங் கேள்வியிலை
நிசஞ்சொன் னேமே"

என்று பாடினர். புதுவை ஆநந்தரங்கப் பிள்ளையிடஞ் சென்று அவர்மீதுஞ் செய்யுட்கள் பாடிப் பரிசு பெற்றார்.

சந்திரசேகரவண்ணம்

அந்நாளில் சந்திரசேகர பிள்ளை என்பவர் பெருஞ் செல்வராக விளங்கியிருந்தார். இவர் அவர்மீது வண்ணம் ஒன்று பாடினர் அச் செய்தியைப் பின்வருஞ் செய்யுளால் மேற்படி சந்திரசேகர பிள்ளைக்குத் தெரியப்படுத்தினர்.

"விருதிலக் கணகா வியப்பாசங் கத்தின்மலை
வேந்தர்கள் சபாரஞ்சித
வித்துவே கான்கண்ட மூதண்டம் வென்றமா
வெகுவித்தை யாடம்பரன்,
கருதியெதி ரிடுபுலவர் தக்கமிடு வாயிலே
கவியாப் பிணைக்கடாவும்
காலமா ருதமதுர கவிசொரி சவாதுவளர்
கவிராச சாபமிருபம்
கருவிதவி ரணவிரு திலக்கண கலக்கணம்
தாங்குகை லாசண்மகமே

தந்த்ரசே கரவருண சந்த்ரசே கரமதா
சலமகா முனிவயாமும்
இருநிலம் புகழ்வண்ணம் என்றஒரு பிரபந்தம்
இசையினூற் படிபாடிலேம்
இருநூறு பொன்னெரு முடிப்பாக வேகபரிக்
திக்கணம் அனுப்புவாயே."

நற்புகழ்ச்சி

தன் பெருமையை அறியாதவர்களிடத்திலே தம்மைப் புகழ்தலும் புலவர்கட்குத் தகும் என்றனர் பெரியோர். இவர் தமது கல்விச் சிறப்பைக், "கவி மதங்கொண்டிடுச வாதக் கவிச் சரப காம்பீர்ய துங்கன்" என்றும் வேறு பல வகையாகவும் அமைத்துப் பாடியுள்ளார்.

"சொல்லக் கணக்கவிதை சூட்டுவோர் காவலரை
வெல்லக் கணக்கவிதை வீசுவோம்—நல்ல
தனிச்சவா துப்புலவன் சாற்றுகவி எல்லாம்
இனிச்சவா துப்புதுமை யே."

என்பதும் இவருடைய பாடல்தான். வேறொரு புலவர் இவரைப் பாராட்டி,

"வெண்டா மரையனந்தன் வேறுருக்கொண் டுற்றனளோ
தண்டா மரையனந்தன் தானிவளே—வண்டமிழின்
எண்ணே எழுத்தோ இசையோ இயற்புலவர்
கண்ணேசை வாதக் கவி"

என்று பாடியுள்ளார்.

இராசராசேசுவரி பஞ்சரத்தினம்

ஒருமுறை சேதுபதி வைசூரி கண்டு வருந்தினர். அப் பொழுது இவர் அம்பிகைமீது, 'இராசராசேசுவரி பஞ்ச ரத்தினம்' என்னும் பெயரோடு ஐந்து பாடல்களைப் பாடினர்.

வைசூரி நோய் வினையில் நீங்கி உடல்நலம் ஏற்பட்டது. அதனல் மகிழ்ச்சி பூண்ட சேதுமன்னர் சுவாத்தன் என் னும் வினாபுலவுரை முற்றாட்டாக வழங்கினர். முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ் என்னும் நூலும் இவரால் இயற் றப்பட்டது.

கூடு. மழலை மகாலிங்கையர்

தோற்றம்

மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தல் என் னும் ஊரிலே மகாலிங்கையர் ஏறக்குறைய நூற்றைம்பது யாண்டுகட்கு முன்பு தோன்றினர். மழவராயனேந்தல் என்னும் பெயர் மழலை என்று மருவி வழங்கும். இவர் பிறவூர்களிற் சென்று தங்கியபடியால் இவரை அவ்வூரினர் மழலை என்னும் ஊர்ப்பெயரோடு சேர்த்து மழலை மகா லிங்கையர் என்று வழங்கலாயினர். குலம் ஆதிசைவ குலம்.

கல்வி

இவர் பள்ளிக்கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்தபின் மதுரை யடைந்து அங்கிருந்த அறிஞர்கள் சிலர்பால் இலக் கண இலக்கியங்களைப் பயின்றார். பிறகு சென்னையை அடைந்து அங்கிருந்த பெரும் புலவர்கள் சிலரிடமும் திருத் தணிகை விசாகப் பெருமாள் ஐயர், சரவணப் பெருமாள் ஐயர் ஆகியவர்களிடமும் இராமாயணம், திருத்தணிகைப் புராணம் முதலியவைகளை இரண்டோராண்டு நன்கு பயின் றார். தண்ணுணர்வை இயற்கையாகவே பெற்றிருந்த இவர் சிறந்த அறிஞராவதற்கு அதிகக் காலம் பிடிக்கவில்லை.

ஆசிரியத் தொழில்

சிறந்த அறிஞராக இவர் ஆனவுடன் இவருடைய பேரும் புகழும் யாண்டும் பரவலாயின. பலர் இவரிடம்

இலக்கண இலக்கியங்களைப் பாடங் கேட்கத் தொடங்கினர். சென்னைக் கல்லூரியின் தலைவர்கள் இவரைத் தமது பள்ளியில் ஆசிரியராக அமரும்படி வேண்டினர். இவரும் அவ்வாறே ஒரு கல்லூரியில் அமர்ந்து ஆசிரியராகத் தொழில் புரிந்ததோடு இல்லத்திலும் பலருக்குக் கல்வி கற்பித்தார். நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டார். இவருக்கு இலக்கண அறிவு நன்கு அமைந்திருந்தது. இலக்கணச் சுருக்கம் ஒன்றும் இவர் எழுதி வெளிப்படுத்தினர்.

இராமாநுச கவிராயர்

பெரும் புலவர்களில் இராமாநுசகவிராயரும் ஒருவர். நன்னூலுக்கு இவரும் ஓர் உரை எழுதியுள்ளார். மகாலிங்க ஐயருடைய ஆசிரியர்களான சரவணப் பெருமாள் ஐயருக்கும் விசாகப் பெருமாள் ஐயருக்கும் ஆசிரியர் இவரே. நாளடைவில் சரவணப் பெருமாள் ஐயருடைய புகழும் விசாகப் பெருமானையருடைய புகழும் யாண்டும் மிகுதியாகப் பரவியது. எக்காரணத்தினலோ இராமாநுச கவிராயருக்குத் தம் மாணவர்களாகிய மேற்கூறிய ஐயர்கள் இருவரிடத்திலும் அழுக்காறுண்டாயிற்று. "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்," என்னும் குறளை இராமாநுச கவிராயர் ஒரு பொருட்படுத் தாமல் பலபேரிடமும் மேற்படி இருவரையும் இழித்தரைத் துக்கொண்டு திரிந்தார். சில் மகாலிங்கையரை படுத்து இராமாநுச கவிராயரை எவ்வாறுவது அடக்கவேண்டு மென்று வேண்டிக்கொண்டனர். மகாலிங்கையர் அதற்கு இணங்கினர். இராமாநுச கவிராயரை எந்தவிடத்தில் எவ் வளவு கூட்டத்தில் கண்டாலும் மிகக் கடினமான கேள்வி களைக் கேட்டுத் திணறச் செய்தார். இதனால் இராமாநுச கவிராயர் நாளடைவில் அடங்கிவிட்டார்.

ஐயரும் பிள்ளையும்

திருவாவடுதுறையாதீனப் புலவராக விளங்கிய பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சென்னைக்குச் சென்றார். மகாலிங்கையரைப்பற்றிப் பலர் மூலமாகக் கேள்விப்பட் டிருந்தபடியால் ஐயரைப் பார்க்க விரும்பினர். காஞ்சிபுரம் பெரும்புலவர் சபாபதி முதலியாரை அழைத்துக்கொண்டு ஐயருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கு வேறு பல புல வர்களும் இருந்தனர். ஐயர் முதலியாரையும் பிள்ளையையும் வரவேற்றார். முதலியாரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது மீனாட்சிசுந்தரம்பிள்ளை இளைஞர். ஆகவே அடக்க ஒடுக்கமாக ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்தார். மகா லிங்கையர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைச் சுட்டிக்காட்டி, "இவர் யார்?" என்று சபாபதி முதலியாரைப் பார்த்துக் கேட்டார்.

முதலியார் ஐயரைப் பார்த்து, "இவருடைய ஊர் திருநெல்வேலி. பெயர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றிருக்கிறார். செய்யுளும் செய் வார். சிலவேலைகளை முன்னிட்டுப் பட்டினத்துக்கு வந் திருக்கிறார். தங்களைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினர். அழைத்துக்கொண்டு வந்தேன்," என்று கூறினர்.

ஐயர் பிள்ளையைப் பார்த்து, "என்ன என்ன நூல்கள் படித்திருக்கிறீர்?" என்று கேட்டார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை தாம் படித்த நூல்களைச் சொன்னார். பிறகு ஐயர் "ஏதாவதொரு பாடல் சொல்லும்" என்று சொன்னார். உடனே மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தாம் இயற்றிய அகி லாண்ட நாயகி பிள்ளைத்தமிழில் இருந்து,

" இரசத வரையமர் பவள வீலக்கல்
இடம்படர் பைங் கொடியே
இமையவர் மகிழ்வொடு புகழுஞ் சிமயத்
திமயம் வரும்பிடியே,
சணிவே பவருட்டிமிரம் சிதறச்
சாரும் இவக்கதிரே
சதுமறையாலும் அளப்பரி தான
தயங்கு பொலாமணியே
மாகத வரையின கியவெழில் எனவெழில்
வாய்த்த செழுஞ்சுடரே
மதரித நவரசம் ஒழுகக் கனியும்
வளத்த நறுங்கனியே
தாணி மிசைப்பொலி தருமக் குயிலே
தாலோ தாலேலோ
தணழயுந் தந்தி வணத்தமர் மயிலே
தாலோ தாலேலோ."

என்னுஞ் செய்யுளைச் சொன்னர். இதனைக் கேட்ட ஐயர், "பாடல் மிக அருமையாக இருக்கிறது. இஃது ஒரு பிள்ளைத் தமிழின் தாலப்பருவப் பாடலன்றே? இப்பிள்ளைத் தமிழின் பெயர் என்ன? இதனை இயற்றிய ஆசிரியர் யாவர்? இப்பிள்ளைத் தமிழ் இப்பக்கங்களில் வழக்கமில்லை" என்று கூறினர். இதனைக் கேட்ட மீனாட்சிசுந்தரம் பிள்ளை, "இப் பாடல் அடியேன் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழில் உள்ளது" என்று சொன்னர். இம்மறுமொழியைக் கேட்ட மகாலிங்கையர் மிகுந்த வியப்படைந்தார். இவ்வளவு அருமையான செய்யுள் அமைந்த பிள்ளைத்தமிழைப் பாடியவர் எவ்வளவோ நூல்களைப் படித்திருக்க வேண்டுமே. இத்தகைய நூலைச் செய்தவர் இவ்வளவு அடக்கமாக அமைந்திருப்பது வியப்பாக இருக்கிறதே. "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்று பெரியோர்கள் கூறியிருப்பது இவரிடம் நன்றாக விளங்குகிறது. அரை

குறைக் கல்விதான் ஓர்ப்பாட்டத்தைச் செய்யும். நிரம்பிய கல்வி இவ்வாறுதான் இருக்கும். குறைகுடங் கூத்தாடுமே தனிர நிறைகுடம் அமைதியாகத்தான் இருக்கும். இவரிடம் இன்று நான் இதனை நன்றாக உணர்ந்துகொண்டேன்," என்றார். பிறகு பிள்ளைத்தமிழில் இருந்தமேலும் பல பாடல்களைச் சொல்லக் கேட்டு மகிழ்ந்தார். பிறகு மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பார்த்து, "நான் ஒரு பாடல் சொல்லுகிறேன் கேட்கவேண்டும்," என்று கூறிவிட்டு,

" தருமைவளர் குமரகுரு முனிவன் கல்வி
சார்பகழிக் கூத்தனெனத் தானி யோர்சொல்
இருவருமே கன்குபிள்ளைத் தமிழைச் செய்தற்
கேற்றவொன் றிடுமுரைவெற் நிட்ட தம்மா
அருமைபெறு காவையகி லாண்ட வல்லி
அம்மைமேல் மேற்படிகத் தமிழை யாய்ந்து
சுருதிநெறி தவறுத குணன்மீ னாட்சி
சுந்தரமால் அன்பினொடு சொல்லும் போதே."

என்னுஞ் செய்யுளைக் கூறினார். "தாங்கள் பாடியுள்ள இப் பிள்ளைத்தமிழைக் கட்டாயம் அச்சியற்றி வெளியிடவேண்டும்" என்று கூறினர். மேலும், "தாங்கள் சென்னையில் இருக்கும் வரையில் என்னுடனேயே தங்கியிருத்தல் வேண்டும்; தங்கட்கு ஆகவேண்டிய எச்செயலையும் நான் செய்து முடிக்கிறேன். தங்களோடு பழகுவது எனக்கு மிகுந்த இன்பத்தை விளைவிக்கிறது," என்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிறகு சென்னையில் இருந்தவரையில் மகாலிங்கையருடனேயே தங்கியிருந்தார். தமக்கு நன்னூல் விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை உரை, தண்டியலங்கார உரை, நம்பியகப்பொருளுரை முதலிய இலக்கண நூல்களினும் பிறநூல்களினும் இருந்த ஐயங்களைக் கேட்டுப் போக்கிக் கொண்டார். இலக்கணக் கொத்துரையை ஐயரிடம் பாடங் கேட்டார். பிறகு இருவரும் ஒன்றாகத் தங்கியிருந்தனர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஐயரால் தெரிந்து கொண்ட செய்திகள் பல.

பிரிவுத் துயர்

திருவாவடுதுறை ஆதீனப்புலவர் தாண்டவராய அடிகள் சென்னையில் இருந்தபோது ஐயரும் அடிகளும் ஒருங்கிப் பழகினர்கள். அடிகளார் திருவாவடுதுறைக்குச் சென்றுவிட்டபின் ஐயரவர்கட்கு மிகுந்த வருத்தமுண்டாகியது.

" விரிந்தமக ராலயத்து மின்னுருக் கணியாகி
மேம்பா றற்றுப்
பரிந்த சிவ யோகியர்வாழ் துறைசையுளாய் இருகலையின்
பண்பை நன்கு
தெரிந்ததாண் டவராய மாதவசித் தாந்தமுணர்
செல்வா நின்னைப்
பிரிந்ததனல் மணியிழந்த கண்ணதுபோல் வாடுகின்றேன்
பேதை யேனே."

என்னுஞ் செய்யுளை எழுதியனுப்பினர்.

இயற்றிய நூல்கள்

இலக்கணச் சுருக்கம், பஞ்சதந்திர வசனம் முதலிய பல நூல்கள் மகாவித்வான்களால் செய்யப்பட்டன. பிறவற்றின் பெயர் விளக்கமாகவில்லை. இவர் இயற்றிய நூல்களிற் சில இவராலும் சில இவருடைய மாணவர்களாலும் அச்சிடப்பட்டு வெளியில் வந்துள்ளன.

இறுதி

பெரும்புகழ் வாய்ந்திருந்த இவர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாகத் தெரியவில்லை.

கச. சோமசுந்தர குரு

தோற்றம்

இவர் சேதுநாட்டிலே இராமநாதபுரத்திலே தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் நெல்லையப்ப பிள்ளை. வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரஞ் செய்த சாமிநாத பிள்ளை யென்பவர் சோமசுந்தரம்பிள்ளையின் உடன்பிறந்தவராவர்.

கல்வி

இவர் காலத்திலே திருவாவடுதுறை யாதீனத்திலே மாதவச் சிவஞான யோகிகள் விளங்கியிருந்தார். இவர் அங்குச் சென்று அவரிடங் கல்வி கற்றுப் பெருஞ்சிறப்புடன் இராமநாதபுரத்திற்குத் திரும்பினார்.

மாணவர்கள்

சோமசுந்தரம் பிள்ளையிடம் பலர் கல்வி கற்கத் தொடங்கினார்கள். முதுகுளத்தூரில் தோன்றிய அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் என்பவர் இவரிடங் கல்வி கற்றுச் சிறப்புடன் விளங்கியவர்களுள் ஒருவராவர். இவருடைய ஆசிரிய அன்பு பாராட்டத்தக்கது. தமது பாடல்களில் ஆசிரியரைப் பாராட்டிப் பாடுவார்.

> " மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
> வாசற்பிர சண்ட வாக்கி
> வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
> மைக்குமடி மைக்குமடிமை."

என்பது போல் பல இடங்களில் காணலாம். இச்சரவணப் பெருமாட் கவிராயரிடம் இராமாநுச கவிராயர் கல்வி கற்றுச் சிறப்படைந்தார். இவர் இயற்றமிழாசிரியராக விளங்கிப் பல நூல்கட்கு உரையெழுதிய சிறப்புடையவர்.

இவர் இயற்றிய நூல்

சோமசுந்தரம் பிள்ளை மாணவர் பலருக்குக் கல்வி கற்பித்ததன்றி நூல்கள் இயற்றும் பணியில் மிகுதியாகக் கருத்துச் செலுத்தவில்லை. இவரால் இயற்றப்பட்டது திருக்கழுக்குன்றக் கோவை ஒன்றே.

கரு. மதுரகவி

தோற்றம்

இவர் சேதுநாட்டில் தோன்றியவர். இசைப்பாடல்கள் பாடுவதில் வல்லவர். சேதுநாட்டு அமைச்சர் முத்திருளப்ப பிள்ளையையும், சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியனையும் இசைப்பாடல்களாற் புகழ்ந்து பாடியுள்ளார். சேதுநாட்டை அரசாட்சி புரிந்த மங்களேச்வரி ராணி என்னும் அம்மையாரைப் பாடிக் காக்கை குளம் என்னும் விளைபுல ஊரை நன்கொடையாகப் பெற்றார்.

ஆறாயிரம்

மதுரகவியார் காக்கை குளத்தை நன்கொடையாகப் பெற்றபோது அவ்வூரில் உடையான் என்பவன் ஒருவன் இவருக்குப் பல அல்லல்கள் செய்தான். உடையான் செய்தியை மதுரகவியார் வீர சோழன் என்னும் ஊரில் இருந்த ஆறாயிரம் என்பவனிடந் தெரியப்படுத்தினார். ஆறாயிரம் உடையானை அடக்கி ஒடுக்கினார். அப்போது இவர்,

> " காக்கை குளமாங் கடிமலர்ப்பூம் பொய்கையந்த
> ஊர்க்குட் கராவாம் உடையானே—நீர்க்குவந்த
> வாரணமே நல்ல மதுரகவி நேமிதொட்ட
> ஆரணனே ஆறா யிரம்."

என்னுஞ் செய்யுளைப் பாடி ஆறாயிரம் என்பவனைப் பாராட்டினார்.

மாணவர்

இசைப் பாடல்கள் பாடுவதில் வல்லவராக இருந்த கனி குஞ்சரம் ஓயர் என்பவர் மதுரகவியிடம் பயின்றவர்.

இயற்றிய நூல்

இவர் இயற்றியது கந்தபுராணக் கீர்த்தனையும் வேறு பல இசைப்பாடல்களுமாம். இவர் மதுரை அங்கயற்கண் ணியைப் பாடிய, "எப்படியாட்கொள்வாயே" என்னும் முதலியுடைய இசைப்பாட்டு எத்தகையோருடைய உள் ளத்தையும் உருக்கும் தன்மை வாய்ந்தது.

ஆசு. காஞ்சிபுரம் சபாபதி முதலியார்

தோற்றம்

தொண்டைவளநாட்டிலே காஞ்சிபுரத்திலே சபாபதி முதலியார் தோன்றினர். இளமையிலேயே இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் பெரும்புலவரானார். காஞ்சி யில் உள்ள பச்சையப்ப முதலியார் பள்ளியில் தலைமைத் தமிழ்ப்புலவராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். பிறகு சென்னையை அடைந்து பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்தார்.

சென்னையில்

சென்னையில் பலர் இவரிடம் கல்வி கற்றுப் புலவ ராளர்கள். அவர்களுள் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் தலைசிறந்தவர். அந்நாளில் சென்னை மாநகரில் திருவாவடுதுறையாதீன வித்துவான் தாண்டவராயத் தம்பி ரான், எழும்பூர்த் திருவேங்கடாசலமுதலியார், திருத் தணிகை விசாகப்பெருமாளையர், திருவம்பலத்தின்னைமுதம் பிள்ளை, அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார்,

மழவை மகாலிங்கையர் முதலிய பல புலவர்கள் இருந்தனர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்கு ஆசிரியர்

திருநெல்வேலி மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னைக்குச் சென்றார். சபாபதிமுதலியாரைப்பற்றி அறிந்தார். தக்கார் சிலர் மூலமாகச் சபாபதிமுதலியாரைப் பழக்கம் பிடித்தார். அப்பொழுதே பிள்ளையவர்கள் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களியற்றிய புலவராக இருந்தும் சபாபதி முதலியாரிடத்தில் சில நூல்களைப் பாடங் கேட்க விரும்பினர். சபாபதி முதலியாரும் அவ்வாறே கல்லாடம், திருவாசகம், திருக்கோவையார், திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய நூல்களைப் பாடஞ் சொன்னார். மழவை மகாலிங்கையரையும் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆசிரியர் என்று போற்றுதல்

பிற்காலத்தில் ஒருமுறை முதலியார் சேதுவுக்குச் சென்று திரும்பினர். அப்பொழுது குடந்தையில் பிள்ளையவர்கள் கும்பகோணப்புராணம் அரங்கேற்றிக்கொண்டிருந்தலை அறிந்து அரங்கேற்றத்திற்குச் சென்றார். பிள்ளையவர்கள் முதலியாரைப் பெரிதும் பாராட்டி அங்கே சிலநாட்கள் தங்கச் செய்தார். பிறகு திருவாவடுதுறைக்கு அழைத்துச்சென்று ஆதினத்தலைவரைக் காணச்செய்தார். ஆதினத்தலைவரிடம் முதலியார் தம்முடைய ஆசிரியர் என்று அறிமுகப்படுத்தி முதலியாருக்கு முதலிடம் அளித்துத் தாம் அப்பால் இருந்து தமது நன்றியறிதலைப் புலப்படுத்தினர். பிள்ளையவர்கள் முதலியாரிடம் காட்டிய பணிவைக்கண்டு ஆதினத்தலைவரும் பிறரும் மிகுந்த வியப்படைந்தனர்.

சிறப்புப்பாயிரம்

பிள்ளையவர்கள் இயற்றிய அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் நூலுக்கு, முதலியார் சிறப்புப்பாயிரம் அளித்து அந்நூலை விரைவில் வெளியிடவேண்டும் என்று தெரியப் படுத்தினர். வியாசர்பாடி விநாயகமுதலியார் கட்டிய திரு மயிலைச்சித்திரச் சத்திரத்தைப் புகழ்ந்து பாடச்செய்து தக்கவாறு நன்கொடையும் பெறச்செய்தார். விநாயக முதலியார்மீது வியாசைசக்கோவையைப் பிள்ளையவர்கள் பாடுமாறு செய்தவரும் சபாபதி முதலியாரே.

இவர் இயற்றிய நூல்கள்

1. சைவசமய விளக்க விஞ்விடை
2. பிரமோத்திர காண்டப் பொழிப்புரை
3. பெரிய புராண உரை
4. திருவிளையாடற் புராண உரை
5. அருணாசல சதகம்

முதலியன இவர் இயற்றிய நூல்கள். முருகதாச அடி கள் என்னும் தண்டபாணி அடிகள் இயற்றிய நூல்கள் சில சென்னைமாநகரில் இவருடைய தலைமையில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டன.

இறுதி

புகழ்பெற்ற பெரும்புலவராக விளங்கிய இவர் 1870-ஆம் ஆண்டில் இறைவன் திருவடிநீழலை யடைந்தார்.

64. முத்துச்சாமி ஐயங்கார்

தோற்றம்

இவர் இராமநாதபுரத்தினர். ரா. இராகவ ஐயங் காருக்கு மாதுலரும் தமிழாசிரியரும் இவரே. மதுரைத் தமிழ்ச்சங்கத்தை உண்டாக்கிய பொ. பாண்டித்துரைத் தேவருக்குத் தமிழாசிரியர்களாக விளங்கிய பலருள் இவ ரும் ஒருவர். இவர் மிக இளமைப்பருவத்திலேயே கல்வி கற்றுச் சிறந்த அறிவாளியாக விளங்கினர்.

கன்னட அவதானம்

கன்னட மொழியிலும் இவர் மிக வல்லவர். மிக இளமைப்பருவத்திலேயே கன்னட நாட்டரசராகிய கிருட் டிணராச உடையார் முன்பு கன்னடமொழியில் அட்டாவ தானம் செய்து, பல்லக்கு, குடை, முத்துமாலை, பொற் குவை முதலியனவுகளை நன்கொடையாகப் பெற்றார். உரை வன்மையுஞ் செய்யுள் இயற்றுந் திறமும் நன்கு அமையப் பெற்றவர்.

மாணாக்கர்கள்

ரா. இராகவ ஐயங்கார், பொ. பாண்டித்துரைத்தேவர், மு. இராகவ ஐயங்கார், திரு. நாராயண ஐயங்கார், முதலிய பல் இவரிடத்தில் தமிழ் கற்றுச் சிறந்த புலவர்களாக விளங்கினர்கள். சேதுபதியின் பேருதவியால் நூலாராய்ச்சி செய்தல், மாணவர்கட்குப் பாடஞ்சொல்லுதல் முதலிய பணிகளில் எத்தகைய கவலையுமில்லாமல் ஈடுபட்டிருந்தார். இவருடைய அவதானசக்தி பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாலும் நன்கு பாராட்டப் பெற்றது.

இயற்றிய நூல்கள்

இவர் இயற்றிய நூல்கள் சந்திராலோகம், மனவாள மாமுனி நூற்றந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதித் திருப்பதிகங்கள், குருகைக் கலம்பகம் முதலியன. தமிழ்ச் சங்கத்தில் தொண்டுசெய்து வளர்த்தவர்கள் இவருடைய மாணவர்களாதலின் மதுரைத் தமிழ்ச்சங்கத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இவர் பெரிதும் துணைபுரிந்தவராவார்.

கஉ. முத்துராமலிங்க சேதுபதி (க)

தோற்றம்

இவர் இராமநாதபுரத்தில் அரசர் வழிமுறையில் தோன்றியவர். இளமைப்பருவத்திலேயே கல்வியை நன்கு கற்றுச் சிறந்த புலமையடைந்தார். பூவேந்தராக விளங்கிய தோடு பாவேந்தராகவும் விளங்கினர்.

வாழ்க்கை

தவாதரீம் சதாவதானம் சரவணப்பெருமாட் கவிராயர் முதலிய புலவர்கள் பலர் இவருடைய அவையில் அமர்ந்திருந்தனர். அவர்களோடு அருங்கலைகளை ஆராய்தல் செய்யுளியற்றல் முதலிய நற்பணிகளிலே ஈடுபட்டுத் தமது காலத்தைப் போக்கினர். இவருடைய தனிப்பாடல்கள் முந்நூறுக்குமேல் தனிச்செய்யுட் திரட்டாமணியில் இடம் பெற்றுள்ளன. புலவர்களோடு செய்யுளில் உரையாடுவதில் இவருக்கு மிகுந்த விருப்பம் உண்டு. இவர் ஏதேனும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யுளாக முன்னிரண்டடிகளால் வினவுவார்; புலவர்கள் பின்னிரண்டடிகளால் மறுமொழி கூறுவார்கள்.

தனிப்பாடல்

இவருடைய தனிப்பாடல்களில் சிலேடைகள், விடுகதைகள், வணக்கங்கள், நடுவெழுத்தலங்காரங்கள், வினாவுத்தரங்கள் முதலிய எல்லாவகைகளும் உண்டு; மாதிரிக்குச் சில காட்டுவாம்.

சிலேடை

ஆனைமுகக்கடவுளுக்கும் பானைக்குஞ் சிலேடையாகப் பாடியது.

"அங்குசவன் கைக்கொளலால் ஆருங்குட் டிக்கொளலால்
பொங்கலிட்டுப் பூசை புரிதலால்—கங்குல்பகல்
தானநீர் தாங்குகையால் சாரப் பதந்தரலால்
ஆனைமுகன் பானையென லாம்."

[அங்குசம் வன்கைக்கொளலால்: அம் குசவன் கைக் கொளலால்; குட்டிக்கொளல் - பிள்ளையார் முன்பு தந்தலையிற் குட்டிக்கொள்ளுதல்; பானையைத் தட்டிப்பார்த்து வாங்குதல். தானநீர் - மதநீர், தண்ணீர்.]

விடுகதை

"மட்டையணி யும்பூ வணையுமுடிக் குஞ்சீவிக்
கட்டியா டொட்டேறக் காட்டுமே—வெட்டுவாள்
அம்பனைய கண்ணார் அலவிச் சிலேடையொடு
பம்புகதை யின்பயனென் பார்."

முருகக்கடவுள் வணக்கம்

"இடங்கொண்ட தெய்வப் பிடிவள்ளி மேவ இசைந்து விம்மித்
தடங்கொண்ட பன்னிரு தோட்பொருப் பேகின் தனையரெமை
அடங்கொண்ட நோய்வருத் தாதறுத் தாதரித் தாள்முருகா
வடங்கொண் டறிதுயில் மான்மரு காமயில் வாகனனே."

வினாவிடை

சேதுபதி வினாவும் துவாத்ரீம் சதாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் விடையும்:

"நஞ்சுடைய கண்டத்து காதன் முடிமீது
குஞ்சு மதியணிந்து கொள்வானேன்?—அஞ்சாமல்
மூத்தபின்னை அன்று முறித்தகொம்பைக் கேட்குமென்று
சேர்த்துவைத்துக் கொண்ட நிறம்."

இயற்றிய நூல்கள்

புலிராயராகவும் கவிராயராகவும் இருந்த இவர்,

1. வள்ளி மணமாலை
2. நீதி போதம்
3. பால போதம்
4. சரசசல்லாப மாலை
5. சடாக்கரசாரப் பதிகம்
6. முருகரதூபதி
7. பிரபாகர மாலை
8. காயகப்பிரியா

என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

இறுதி

இவ்வாறு கவிபாட்சியும் புலிபாட்சியும் இயற்றிக் கொண்டிருந்த இவர் 1873-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28-ஆம் நாள் மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணுலக வாழ்வைப் பெற்றார்.

கக. கனம் கிருட்டிண ஐயர்

தோற்றம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே உள்ள உடையார் பாளையம் பிரிவில் திருக்குன்றம் என்னும் ஊர் உள்ளது. இந்த ஊரிலே சுமார்த்த அந்தணர் குலத்திலே எண்ணாயிரத்தவர் வகுப்பில் ஏறக்குறைய நூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர் கிருட்டிணையர் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் இராமசாமி ஐயர். இராமசாமி ஐயர் இசைப் பயிற்சியிலும் தமிழ்ப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினார். இசைப்பாடல்களை இயற்றும் ஆற்றலும் இவருக்கு நன்கு அமைந்திருந்தது. இவருக்கு மக்கள் ஐவர் தோன்றினர். அவர்களுள் இறுதியில் தோன்றியவர் கிருட்டிண ஐயர்.

இசைப் பயிற்சி

கிருட்டிண ஐயரும் அவருடைய உடன்பிறந்தவர்களும் பள்ளியிற் கல்வி கற்றபின் தந்தையாரிடம் இசைப் பயிற்சி தொடங்கினர். பிறகு அரியலூர் சண்பகமன்னார் என்னும் வைணவப் பெரியாரிடத்தும் இசைப்பயிற்சி பெற்றனர். அதன்பிறகு தஞ்சையை அடைந்து பச்சை மிரியன் ஆதிப்பையரென்னும் இசைப்புலவரிடத்தில் இசைப்பயிற்சி பெற்றனர். கிருட்டிண ஐயர் தம்முடைய உடன்பிறந்தவர்கள் எல்லோரினுஞ் சிறந்து விளங்கினார். ஊக்கமும் விடாமுயற்சியும் இவர்பால் நன்கு அமைந்திருந்தன. இசைப்பயிற்சி முடிவடைந்தபின் தஞ்சையரசரிடமே இசைப்புலவராக அமர்ந்திருந்தனர். இவர்களுடைய இசைத்திறமை அரசராலும் மற்றைய இசைப் புலவர்களாலும் நன்கு பாராட்டப்பெற்றது.

கனவழி

பொப்பிலி என்னும் ஊரில் அந்நாளில் கேசவையா என்னும் இசைப்புலவர் சிறந்து விளங்கினர். அவர் கனமார்க்கம் என்னும் இசைப்பயிற்சியில் மிகவும் வல்லவர். கனமார்க்கம் என்பது மிகவும் வருந்திக் தொல்லைப்பட்டுக் கற்றுக்கொள்ள வேண்டிய ஒருவகை இசை. அது மிக்க கனமான ஒலியுடன் அமைந்து விளங்கும். கேசவஜ்யா அந்தக் கனமார்க்க இசைப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர். அவர் ஒருமுறை தஞ்சாவூருக்கு வந்தார். தஞ்சை மன்னரிடத்தில் தமது இசைச்சிறப்பைக் காட்டி அரசரையும் அங்கிருந்தவர்களையும் மகிழச் செய்தார். அரசருடைய விருப்பப்படி சிறிதுகாலம் அங்கே தங்கியிருந்தார். கனவழி என்னும் இசையை விரிவாகப் பயிற்சிசெய்த இசைப்புலவர்கள் அக்காலத்தில் இங்கு இல்லை. கேசவ ஐயாவின் இசையைக்கேட்ட இசைப்புலவர்கள் அவரை நன்கு மதித்துப் பாராட்டினர்கள். அவருடைய இசை தஞ்சை அரசருக்கும் விஞ்சிய இன்பத்தை அளித்தது. இவ்வளவு அருமையான இசையைப் பயின்றவர்கள் இங்கு எவரும் இல்லையே என்று உள்ளத்தில் எண்ணினர். தமது அவையில் இருந்த இசைப்புலவர்களைப் பார்த்து, "இவரைப் போல் கனவழியில் இசைபாடக் கூடியவர்கள் இங்கு யாரவது இருக்கிறார்களா?" என்று உசாவினர். தங்களுக்குப் பயிற்சி யில்லாதபடியால் எவரும் பாடமுடியு மென்று சொல்லவில்லை. "இதுவரையில் கற்றிராவிட்டால் இனிமேலாவது கற்றுக்கொண்டு பாட முடியுமா?" என்று உசாவினர். அங்கிருந்த பலரும், "எங்கட்கு அகவை மிகுந்துவிட்டது. இனிமேல் கற்றுக்கொண்டு பாடுவ தென்பது இயலாது," என்று கூறிவிட்டனர்.

கிருட்டிணை ஐயர்

அங்கு கிருட்டிணை ஐயரும் இருந்தார். அவர் மனத் திட்பம் உடையவர். தாம் முயற்சிசெய்து கனவழி இசை யைக் கற்றுவிடலாம் என்று எண்ணினர். ஆகவே இவர் தாம் எழுந்து, "கேசவையா எனக்குக் கனவழியைக் கற்றுக்கொடுத்து முயற்சிசெய்து பாடுகிறேன்" என்று கூறினர். அங்கிருந்தவர்கள் இவர் கற்றுக்கொண்டு பாடுவது அருமை என்று எண்ணினார்கள். கேசவையா தாம் கனவழியைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறினர்.

பயிற்சி

பொப்பிலி கேசவையா தாம் வகுத்தபடி கனவழி யின் இலக்கணங்களைக் கிருட்டிணை ஐயருக்குக் கற்பித்தார். சில நாட்களில் கிருட்டிணை ஐயர் அவைகளையெல்லாம் உணர்ந்துகொண்டார். பிறகு கபிஸ்தலம் என்னும் ஊருக் குச் சென்று தம்மிடம் அன்புடைய நண்பர் ஒருவரின் ஆதரவில் தங்கிப் பல நாட்கள் பயிற்சி செய்தார். தெய் வத் திருவருளால் அவ் இசைப்பயிற்சி இவருக்கு நன்கு கைகூடியது.

கனம்

பிக முயன்று கனவழியைப் பயின்ற கிருட்டிணை ஐயர் தஞ்சைக்குச் சென்றார். தாம் கனவழியைப் பயின்று வந்திருப்பதாகவும் அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்றும் தெரிவித்தார். அரசர் நண்பர் ஒன்றிலே அவை கூட்டினர். இசைப் புலவர்கள் பலரும் பொப்பிலி கேசவையாவும் அவையிற் கூடியிருந்தனர். தாம் கற்ற கைவினைகளை யெல்லாம் கிருட்டிணை ஐயர் காட்டினர். இசைப்புலவர்களும் பிறரும் கருத்தூரு மித்தவர்களாய் ஓவியப்பாவையைப்போல் அசைவற இருந்து கேட்டனர். கிருட்டிணை ஐயர் தம்முடைய முழு ஆற்றலை

யுங் காட்டிப் பாடினர். பொப்பிளி கேசவஜூயர் மிகுந்த வியப்புடன் இசையைக் கேட்டுக்கொண்டிருந்தார். இசை முடிந்தபிறகு அரசர் கேசவஜூயரைப் பார்த்தார். அவர் அரசரைப் பார்த்து, "இத்தகைய ஆண்மையாளர்களை நான் எங்குமே பார்த்ததில்லை. சிலகாலமே இவர் என்னிடம் கனவழினைக் கற்றுக்கொண்டபோதிலும் எனக்கு மேலாகப் போய்விட்டார். இவருக்குக் கடவுள் நீண்ட வாணாளையும் வளமை வாய்ந்த உடலையும் கொடுத்தருள வேண்டும்," என்று வாழ்த்துக் கூறினர். அரசர் கிருட்டிணை ஐயருக்கு நல்ல பரிசுகள் வழங்கினர். அன்றுமுதல் அவருடைய பெயர் கனம் கிருட்டிணை ஐயர் என்று வழங்கலாயிற்று.

இசைப்பாடல்கள் இயற்றல்

இசைப் புலவராக விளங்கிய இவர் இலக்கண இலக்கியப் பயிற்சியும் அமைந்து வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், இசைப் பாடல்கள் முதலியவைகளை நன்கு பாடக்கூடியவராக விளங்கினர். இசைபாடத் தொடங்கும்போதே, அப்போதே இயற்றிக்கொண்டு பாடும் ஆற்றலும் இவரிடம் நன்கு அமைந்திருந்தது. இவருடைய பாடல்கள் எதுகை மோனை முதலியவைகள் அமையப் பெற்றுச் சிறந்து விளங்கும். எக்கடவுளிடத்தும் இவருக்கு வெறுப்புக் கிடையாது. எல்லாக் கடவுள்மீதும் இசைப்பாடல்கள் இயற்றியிருக்கிறார். சிறிது காலம் கபிஸ்தலம் என்னும் ஊரில் மூப்பனர் ஒருவரிடம் தங்கியிருந்தார். பிறகு திருவிடைமருதூரை அடைந்து அங்குச் சிறிதுகாலம் வசித்திருந்தார்.

பனஜூர்கட்குச் செல்லுதல்

பிழரால் புகழ்ந்து பாராட்டப்பெற்றுச் சிறப்புப் பெறும்நிலையில் உள்ள அறிஞர்கள் அரசரிடம் அமர்ந்திருந்

தாலும் பலவூர்கட்குஞ் சென்று தமது பெருமையைப் புலப்படுத்திச் சிறப்படைதல் இயற்கை. அவ்வாறே இவரும் கும்பகோணம், மன்னர்குடி, திருச்சேறை, திருவையாறு, மாயூரம், சென்னை முதலிய பலவூர்கட்குஞ் சென்று தமது இசைத்திறமையைப் புலப்படுத்திச் சிறப்புக்கள் பெற்றார்.

உடையார்பாளையத்தில்

அந்நாளில் உடையார்பாளையத்தில் கச்சிரங்க உடையார் என்பவர் பெருநிலக் கிழாராக இருந்தார். அவர் திருட்டிணை ஐயருடைய அருமை பெருமைகளை யெல்லாம் நன்கு உணர்ந்தார். அவர் இசையிற் சிறந்த பயிற்சியுடையவர். அவர் திருட்டிணை ஐயரைத் தம் அவைக்களப் புலவராக அமர்த்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். தக்க மனிதர்களை அனுப்பிக் திருட்டிணை ஐயரைத் தம்பால் அழைப்பித்தார். இவரைப் பாராட்டிப் போற்றினர். இசையைக் கேட்டு மகிழ்ந்தார். தமது நோக்கத்தைப் புலப்படுத்தினர். இசைப்புலவர் பெருநிலக்கிழாரின் பேரன்பையும், உயர் குணங்களையும் எண்ணி மகிழ்ந்தார். அவ்விடமே தங்கி யிருப்பதற்கு உடன்பட்டார். பெருநிலக்கிழார் இவருடைய இசை யழுதை நாள்தோறும் பருகி மகிழ்ந்ததுடன் தகுந்த நன்கொடைகள் வழங்கிப் பெருமைப்படுத்தினர்

தலையாட்டல் ஒன்றேபோதும்

ஒருமுறை பெரிய இசைப்புலவர்கள் பலர் வேறிடங்களில் இருந்து உடையார்பாளையத்திற்கு வந்தனர். அவர்கள் தமது இசைத்திறமையைப் பெருநிலக்கிழாரிடம் காட்டித் தக்க பரிசு பெற்றதுடன் திருட்டிணை ஐயருடைய இசையையுங் கேட்டு மிகுந்த களிப்படைந்தார்கள். பிறகு

புலவர்கள் கிருட்டிணை ஐயரை அவருடைய வீட்டிற்கண்டு உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் பெருநிலக்கிழாரும் கிருட்டிணை ஐயரும் ஒன்றுபட்ட உள்ளத்தினராய்ச் சிறந்து விளங்குதலை அறிந்துணர்ந்து கொள்ளாது, "அந்தோ! இந்த உடையார்பாளையம் காட்டுக்குள்ளேயன்றே இருக்கிறது. உங்களுடைய இசைப்பெருமை இந்தக் காட்டுக்குள்ளே வீணைகப்போகிறதே. நீங்கள் பெரிய அரச சபைகளில் அமர்வீர்களானால் பெரும் கொடையும் பெரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்கலாமே" என்று கூறினர்கள். இதனைக் கேட்ட கிருட்டிணை ஐயர், "ஆம்; நீங்கள் கூறுவது உண்மைதான்; ஆனால் இங்குக் கிடைக்கும் கச்சியானந்த ரங்கரின் தமிழபாட்டல் போன்ற உண்மைப் போற்றுதல் அவ்விடங்களில் அகப்படாதே. வீண் புகழ்ச்சியும் வெளிப்பகட்டுந்தானே கிடைக்கும். அதற்கு என்ன செய்கிறது?" என்று கேட்டார். இவருடைய மனப்போக்கை உணர்ந்துகொண்ட அவர்கள் தங்கள் வாயை மூடிக்கொண்டார்கள். இவர் மீண்டாரள் அவ்விடமே யிருந்தார். உ. வே. சாமிநாதையருடைய தந்தையாராகிய வேங்கட சுப்பையர் இவரிடம் பன்னிரண்டு ஆண்டுகள் இசைப்பயிற்சி செய்து இசையைக் கற்றுணர்ந்தாராம்.

இறுதி

கிருட்டிணை ஐயர் அறுபது ஆண்டுகட்குமேல் இவ்வுலகில் வாழ்ந்து இசைத்தமிழை வளர்த்து இறுதியில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

20. முகவூர்க் கந்தசாமிக் கவிராயர்

தோற்றம்

இவர் பாண்டி நாட்டிலே சேற்றூருக்கு அண்மையில் உள்ள முகவூரிலே 1823-ஆம் ஆண்டிற் பிறந்தார்.

கல்வி

மிக இளமைப் பருவத்திலேயே திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து சுப்பிரமணிய தேசிகரோடு வித்துவான் தாண்டவராயத் தம்பிரானிடம் கல்வி கற்றுச் சிறப்படைந்தார். பன்னிரண்டாண்டுகள் பலவற்றையும் இவர் தமது நெஞ்சத்திலே ஏடாகக் கொண்டு வளர்ந்திருந்தார். எச்சமயத்திலும் எத்தகைய அவையிலும் பாடல்களை எடுத்துக் கூறி அவையினரைக் களிப்பிப்பதில் மிகவல்லவர். மு. ரா. அருணாசலக் கவிராயர், மு. ரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகிய மூவரின் தந்தையாராகிய இராமசாமிக் கவிராயர் கந்தசாமிக் கவிராயருக்குத் தம்பியாவார். க. மீனாட்சி சுந்தரக் கவிராயரும், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பழநிக்குமாரத் தம்பிரானும் கந்தசாமிக் கவிராயருடைய மாணாக்கர்களாவர்.

பிள்ளையார் கோயில்

இவர் தமது பிறப்பிடமான முகவூரிலே பிள்ளையார் கோயிலொன்றைக் கட்டிப் பூசை முதலிய நடப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இவர் இக்கோயிலைக் கட்டும் போது இவருடைய இளவலாகிய இராமசாமிக் கவிராயர் உறுதுணையாக இருந்து உதவி செய்தார்.

தனிப்பாடல்கள்

இவர் தனிப்பாடல்கள் பல செய்துள்ளார். இவருடன் கல்விகற்ற சுப்பிரமணிய தேசிகர், ஒருநாள் இரவில் நிலா

வெளிச்சத்தில் இவரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது இவரைப்பார்த்து, "இத்திங்களைப்பற்றி ஒரு செய்யுள் பாட வேண்டும்" என்று கூறினார். உடனே இவர்,

"வாடிவரு வார்க்கனையாம் சற்குருசுப்
பிரமணிய மாத வன்தான்
கோடிநிதி யாவருக்குங் காவலர்பெற்
றிடக்கொடுக்குங் குணத்தி னாலே
நாடிநம தணிமதியுங் கலாநிதியென்
றுவந்துநம்மை நல்க வெண்ணித்
தேடிலென்செய் குவம்என்றே திங்களும்அந்
தரத்தோடித் திரிகின் றானே."

என்னுஞ் செய்யுளைப் பாடினார். இதனைக் கேட்ட சுப்பிரமணிய தேசிகர் மகிழ்ந்து இவருடைய புலமையைப் பாராட்டினார்.

திருமணம்

இவர் திருவாவடுதுறையிற் கல்வி கற்று முடிந்தபின் திருமணஞ் செய்து கொண்டு இல்வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணினார். தமது எண்ணத்தைத் தம் ஆசிரியராகிய தாண்டவராயத்தம்பிரானுக்குத் தெரியப் படுத்தினார். அவர் இவருடைய திருமணத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று மேலகரம் வைத்தியலிங்கக் கவிராயருக்கு,

"தேவரெலாம் பரவுதிருக் குற்றாலச்
சிவன்கதைசெந் தமிழாற் செய்த
நாவலர்தம் பரம்பரையில் உதித்தவயித்
தியலிங்க நாவ லோய்இப்
பூவலயம் முழுதுமுன்றன் பெருமையே
பெருமையெனப் புகழும் வண்ணம்
ஆவலுடன் வருகந்த சாமிநா
வலன்மணத்தை அணிசெய் வாயே."

ன்னூற் செய்யுளை எழுதியனுப்பினர். திருமணஞ் சிறப்பாக நடைபெற்றது.

குறவஞ்சி

கந்தசாமிக் கவிராயரும் இவருடைய இளவலாகிய இராமசாமிக் கவிராயருஞ் சேர்ந்து சேற்றூர்ப் பெருங்கிழார் முத்துச்சாமித் துரையின்பேரில் குறவஞ்சி என்னும் நூல் பாடி அரங்கேற்றஞ் செய்தனர். முத்துச்சாமித் துரை இருவருக்குந் தக்கவாறு நன்கொடை வழங்கியதுடன் இருவரையுஞ் சினகையில் வைத்து சுகர்வலமுஞ் செய்வித்தார். அப்போது தாளதிபதியாக இருந்த சுந்தரமகாலிங்கம் பிள்ளை என்பவர் சினகையைச் சிறிது தொலை சுமந்து சென்றார். இராமசாமிக் கவிராயர் தாளதிபதியின் செயலைப் பாராட்டிச் செய்யுள் ஒன்று பாடினர். கந்தசாமிக் கவிராயர் நூல்கள் இயற்றியதாகத் தெரியவில்லை.

இறுதி

இவர் தேவதானம் தவம்பெற்ற நாயகிக்கு மலர்ச் சென்டும் இண்டை மாலையும் நாள்தோறுஞ் சாத்தும்படி நிலையான ஏற்பாடு செய்துள்ளார். இவ்வாறு சிறந்து விளங்கியிருந்த இவர் 1887-ஆம் ஆண்டில் தமது அறுபத்து நான்காவது அகவையில், இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

உக. வேங்கட்டராயலு நாயுடு

தோற்றம்

இவர் உடுமலைப்பேட்டை என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சீநிவாச நாயுடு. அவ்வூரில் தமிழறிஞராகவும் வழக்கறிஞராகவும் இருந்த முனியப்ப பிள்ளை என்பவரிடம் தமிழ் நூல்களை ஓதியுணர்ந்து செய்யுள் பாடும் திறனடைந்தார். மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அந்நாளில் உடுமலைப் பேட்டைப் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்திருந்தார். அதனால் இருவருக்கும் பழக்கம் உண்டாகியிருந்தது. கந்தசாமிக் கவிராயர்மீது சிலேடைப் பாடல்கள் பலவற்றைப் பாடினார்.

முருகனுக்கும் கந்தசாமிக் கவிராயருக்கும்
சிலேடையாகப் பாடியது.

" கனவானந் தியக்குறப்பொற் பணங்கொடுநித்
தமுமின்பாக் களியி சைச்செந்
தினகரவோ துங்கவிநா யகர்க்கிளையாய்
பெரும்புகழ்ச்சத் தியங்கைக் கொண்டாய்
பனிரக்கம் பெறுமனனே யெனவரலால்
திருவதனப் பதிக்கண் மேவும்
புனிதச்சொல் கந்தசுவா மிக்கவிஞன்
குமரனெனப் புகல லாமே."

இதைப்போல் கவிராயர்மீது பாடப்பட்ட பாடல்கள் பல.

இயற்றிய நூல்கள்

1. சீரங்கநாதர் பிரபந்தத் திரட்டு
2. கம்பராமாயண ஆரணிய காண்டவுரை

முதலியன. சீரங்கநாதர் பிரபந்தத் திரட்டில் பல சிறு நூல்கள் அடங்கியுள்ளன.

இறுதி

நூலாசிரியராகவும் வழக்கறிஞரின் எழுத்தாளராகவும் தமிழாசிரியராகவும் விளங்கிய இவர் 1888-ஆம் ஆண்டில் மண்ணக வாழ்வைத் துறந்து விண்ணகம் புகுந்தார்.

22. முதுகுளத்தார் ஆறுமுகம் பிள்ளை

தோற்றம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூரிலே ஆறுமுகம் பிள்ளை பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பூலோகசாமிப் பிள்ளை.

கல்வி

சரவணப்பெருமாள் கவிராயரிடம் இவர் கல்வியை நன்கு கற்றுத் தேறினார். செய்யுள் பாடுந்திறமை மிக நன்முக உண்டாயிற்று. விரைவாகவும் வேடிக்கையாகவும் பல பாடல்களை அடிக்கடி பாடலானார்.

வாழ்க்கை

இவர் காலத்தில் புலவர்கள் வாழ்க்கை வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெற்று அதனைக் கொண்டு காலங்கழிப்பது தான். ஆறுமுகம் பிள்ளையும் அவ்வாறே தமது வாழ்க்கையைத் தொடங்கினர். பழனிநாப் பயனல் கோப் அடிக்கடி இவரைப் பிடித்து வருத்தத் தொடங்கியது. உடற்பிணி யுடையவர்களை வறுமைப்பிணியும் பிடித்துக்கொண்டால் அவர்கள் படும் அல்லலைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? நோயுற்ற ஆறுமுகம் பிள்ளை பாயும் படுக்கையுமாகக் கிடந்தார். நோயின் தொல்லையை மறத்தலுக்குச் செய்யுள் பாடுதலையே மருந்தாகக் கொண்டு காலங்கழித்தார்.

இல்லத்தில் தீப்பிடித்தல்

இவர் நோயும் பாயுமாகக் கிடந்தபோது இவருடைய இல்லத்திலே தீப்பிடித்துக்கொண்டது. எவ்வளவோ முயன்றும் தீயை அணைக்கமுடியவில்லை. வீடு அடியோடு எரிந்து அழிந்ததோடு வீட்டில் இருந்த பொருள்கள் யாவும் நாசமாயின. இவருடைய மனைவி மக்களும் மற்றவர்களும் அழுது புலம்பினர். தங்குதற்குத் தக்க இடமில்லாமற் போய்

விட்டது. முறையூரில் அந்நாளில் வள்ளலாக விளங்கி யிருந்த சண்முகஞ் செட்டியார் இவருக்கு அடிக்கடி பொரு ளுதவி செய்து பாதுகாத்துக் கொண்டிருந்தார். இல்லம் தீப்பிடித்து எரிந்து அழிந்தபின் சண்முகஞ் செட்டியாருக் குப் பின் வருஞ் செய்யுட்களை எழுதியனுப்பினர்.

"இந்தமதி சரைக்தாந் தேதிஅந்தே தா
என்வீட்டில் தீப்பிடித்தே இடைவி டாமல்
வெந்ததனல் சாமான்கள் எல்லாம்வெந் தது
வேட்டிவெந்து சேலைவெந்து வெறும்வீ டாக்கிச்
சந்தியிலே விட்டுவிடத் தேம்பித் தேம்பித்
தாரமழ மக்கள்அழச் சார்ந்தோர் எங்க
வந்திடுமித் துயர்சகிக்க முடியா தாகி
வள்ளால்நின் இடத்திதை வழுத்தி னேனே."

"தீப்பிடித்த என்குடிலைச் செத்தையினல் மூடுதற்கும்
மாப்பிடித்த மார்பா வழியுமிலை—எய்ப்புமிலை
எந்தமட்டில் சித்தம் இரங்குமோ காயேனுக்
கந்தமட்டும் போதும் அருள்."

"சேயுமனை யும்நானும் சேர்ந்தழுத் தீப்பிடித்துப்
பாயுந் துணிமணியும் பாழாக்க—நோயும்
தணியாது நெஞ்சம் தளர்வேற்கே தேனும்
மணியாட்டர் செய்தனுப்பு வாய்."

என்பன முதலிய பல செய்யுட்களை எழுதியனுப்பினர். செட்டியார் முதலிய சிலருடைய உதவி பெற்று வீடு வாசல் கனா ஒழுங்குசெய்தார். உடற்பிணியும் வறுமைப்பிணியும் இறுதிவரை விடாப் பிடியாகப் பற்றியிருந்தபடியால் வாணாள் முழுவதும் வருந்தியே காலமானர்.

தனிப் பாடல்கள்

நோயினல் பற்றப்பட்ட இவர் அவ்வச் சமயங்களில் தனிப்பாடல்கள் பலவற்றை இயற்றிய தன்றி நூலாக யாதுஞ் செய்ததாகத் தெரியவில்லை.

உங. சரவணப்பெருமாட் கவிராயர் (உ)

தோற்றம்

இவர் முன்னர்க் கூறப்பெற்ற அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயருக்குப் பேரர். இவருடைய தந்தையார் பெயர் அருணாசலக்கவிராயர்.

கல்வி

சரவணப்பெருமாட் கவிராயருடைய தந்தையுஞ் சிறந்த புலவர். இவர் தந்தையாரிடமும் பிறரிடமும் கல்வி கற்றுச் சிறந்த புலமையடைந்தார். அவதானங்கள் செய்வதிலும் வல்லவரானார். துவாதசீம் தசாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர் என்று இவரை வழங்குவர். முன்னோர்களைப் போலவே இவரும் சேதுமன்னர்களுடைய அவைக்களப் புலவராக அமர்ந்தார். இவர்காலத்தில் ஆட்சி புரிந்திருந்த மாட்சிமிகு மன்னர் முத்துராமலிங்க சேதுபதி என்பவராவர். சேதுபதியுங் கல்வியறிவிற் சிறந்து உயர்ந்த புலமைபெற்றவர். இருவரும் பேசவேண்டிய செய்திகளெல்லாம் செய்யுள் வடிவமாகவே பேசிக்கொள்வர். அரசருடைய வினா முன்னிரண்டடிகளில் பாட்டாக வரும். இவருடைய மறுமொழி பின்னிரண்டடிகளில் பாட்டாக முடிவுபெறும். மாதிரிக்குச் சிலவற்றை இங்கே காண்க.

மூட்டைப்பூச்சியும் மெத்தையும்

மெத்தையில் மூட்டைப்பூச்சி இருக்கலியுணர்ந்த பணியாளர்கள் மெத்தையைத் தடியால் நன்கு புடைத்து உதறினர். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அரசர்,

> " தஞ்சுவரை மூட்டை துளைக்கச் சுகங்கொடுக்கும்
> பஞ்சணையை மோதுவதென் பாவலவா? —

என்று உசாவினர். உடனே கவிராயர்,

—வஞ்சகரைச்

சேர்ந்தவரும் அன்னவர்தந் தெண்டனைக்கு ளாவதுபோல்
சார்ந்ததனால் வந்தவினை தான்."

என்று கவிராயர் மறுமொழி கூறினார். இன்னும் இவ்வாறே,

"வரங்களுயிர்க் கீந்தளிக்கும் மால்வால் படைத்த
குரங்குதுணைக் கொண்ட குறிப்பென்?—உரங்கொண்ட
வல்லவர்க்குப் புல்லும் வலியபடை என்பாரச்
சொல்வலிகாக் கைக்குமதித் து."

எனப் பலவாறு உரையாடி மகிழ்வர்.

அரசர் பாடல் பெற்றது

உரையாடல் செய்யுள் வடிவில் நிகழும்போது புலவர் பெருமை தோன்றவே அரசர் விளிப்பர். இதனால் புலவர் அரசருடைய பாடல் பெற்றாராயினர். இதனை எண்ணி மகிழ்ந்த புலவர் ஒருநாள்,

"முன்பேறு சீர்படைத்த முத்தமிழ்வல் லோரெவரும்
என்பேறு பெற்றாரென் றியார்புகல்வார்—அன்பேறு
தேவைமுத்து ராமலிங்கச் சேதுபதி என்மேற்சொல்
பாவையொப்பா யாவர்பெற்றார் பார்."

என்று பாராட்டிப் பாடினார். மேலும் இவர் அரசரைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் பல. அட்டநாகபந்தம், நடு வெழுத்தலங்காரம், சமுத்திரவருணனை முதலிய பாடல்களைப் பாடுதலில் இவர் மிகவும் வல்லவர். எட்டையபுரம், ஊற்றுமலை முதலிய சமத்தானங்கட்கும் அடிக்கடி சென்று பரிசுபெற்றுத் திரும்புவார். எட்டையபுரம் பெருநிலக் கிழார்மீது ஒருமுறை இவர் பாடிய பாடல்களுள், பின் வரும் விடுகதைப் பாட்டையும் பாடினார்.

"கொடியேறும் பிஞ்சுவிடும் காயும் முற்றும்
கொடுபழுக்கும் துவையல்செய்தால் கசக்க லாகும்
அடியேறுங் கிள்ளியதைக் கொய்வார் நன்னூல்
ஆராய்ந்து மடிப்புளதாம் அடுத்தார் மானம்

நொடியேனும் அகலாது காக்குங் கண்டாய்
நுவலுகலை கற்றாய்ந்து புகழ்வா யேழு
படியேறும் படிவளர்த்த சிவஞா னேந்த்ரா
பயன்கதைக்குப் பகர்ந்தெம்மைப் பாலிப்பாயே."

[கொடி - வேட்டி காயவைக்கும் கொடி. பிஞ்சுவிடும் - கிழிந்துபோகும். காயும் - உலரும். துவையல் செய்தால் - துவைத்தால். கசக்குதல் - துணி கசக்குதல்.]

சேற்றூர்ப் புலவர்கள்மீது பாட்டு

இவர் சேற்றூருக்குச் சென்றார். இராமசாமிக் கவிராயர் கந்தசாமிக் கவிராயர் ஆகியோர் இவரைப் பாராட்டி இவர் நாடிச்சென்ற காரியத்தை நிறைவேற்றினர். அதனைக் குறித்துத் தமது நன்றியைச் செய்யுள் மூலமாக வெளிப்படுத்தினார். பிறகு முகவூரில் கந்தசாமிக் கவிராயரால் அமைக்கப்பெற்ற பிள்ளையார் கோவிலுக்குச் சென்றார். அங்கு இவரைப் பாராட்டிப் போற்றினர். இனிய மாங்கனிகளை அளித்து உண்ணச் செய்தனர். மாங்கனியை உண்டு கொண்டே,

"கந்தசா மிக்ககவிவல் லவனுமவன்
கனிட்டனெனக் கற்றோர் போற்ற
வந்தசா மியையனைய இராமசா
மிக்கவியும் மகிழ்வாய் எற்குத்
தந்தசா மியமகன்ற மாங்கனித்தித்
திப்பினைநேர் சாற்ற வேண்டில்
பந்தசா மியல்பகற்றும் அரன்மகற்கி
கனியுமினை பகரொண் ணாதே."

என்று செய்யுளொன்று பாடினார். இவருடைய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சுப்பிரமணியக் கவிராயர், (இராமசாமிக் கவிராயருடைய மகன்)

" தனிக்கவிகைப் படையாக்கொண் டவன்பணியும்
சிவன்திருப்பா தத்தை யென்றும்
உனிக்கவியு மால்சரவ ணப்பெருமாட்
கவிச்சிங்கம் உவந்தன் பாக
இனிக்கவிகை மன்னரெலாம் கொண்டாட
எத்தையர்மீ திசைத்த செஞ்சொல்
கனிக்கவிபோல் இனிக்கவினிக் கவிபுகல்வோர்
இவ்வுலகிற் கண்டி லோமே."

என்று பாராட்டிப் பாடினர். இவருடைய பெருமை அந் நாளில் எங்கும் சிறந்து விளங்கியது.

இயற்றிய நூல்கள்

1. மதுரைச் சிலேடை வெண்பா
2. குன்றக்குடிச் சிலேடை வெண்பா
3. கந்தவருக்கச் சந்த வெண்பா
4. திருச்சுழியல் ஒருபொருத்தந்தாதி
5. மகரவந்தாதி
6. கழுகுமலை ஒருபொருத்தந்தாதி
7. பணைசைத்திரிபந்தாதி
8. கயற்கண்ணிமாலை
9. புவனேந்திரன் அம்மானை

முதலிய நூல்கள் இவரால் இயற்றப்பெற்றன.

இறுதி

சிறந்த புலமைபெற்று விளங்கிய இவர் 1888-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

உ.சு. மகாலவத்தியநாதையர்

தோற்றம்

தஞ்சைமாவட்டத்திலே தஞ்சைக்கு அணித்தாக உள்ள வைலைச்சேரி என்னுஞ் சிற்றூரிலே வைத்திய நாதையர் 1844-ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையாருடைய பெயர் துரைசாமி ஐயர். வைத்தியநாதையருக்கு உடன்பிறந் தாரும் மூவர் தோன்றினர். அவர்களில் இருவர் மூத்தவர். ஒருவர் இளையவர். மூத்தவர்களில் ஒருவராகிய இராமசாமி ஐயர் என்பவர் வைத்தியநாதையரோடு எப்பொழுதும் இணைபிரியாதவராக இருந்தார்.

கல்வி

வைத்தியநாதையர் மிகு இளம்பருவத்திலேயே நல்ல இசைப்புலமையை அடைந்தார். அகவை பத்து நிரம்பு வதற்குள் சங்கரக கூடாமணி, சங்கீத ரத்நாகரம் முதலிய இசை நூல்களையும் நன்கு கற்றுத் தேறினர். இவருடைய குரல் மிக இனிமை வாய்ந்ததாக இருந்தது.

இசையரங்குகள்

வைத்தியநாதையர் பத்தாவது அகவையிலேயே தம் உடன்பிறந்தாரோடு பல இடங்களிலும் இசையரங்குகளை நடத்தத் தொடங்கிவிட்டார். குரல் மிக இனிமையாக இருந்தபடியால் இவருடைய புகழ் மிகு விரைவாக எங்கும் பரவத் தொடங்கிவிட்டது.

பல ஊர்களுக்குச் செல்லுதல்

புதுக்கோட்டையில் அந்நாளில் அரசுபுரிந்துகொண் டிருந்த இராமச்சந்திரத் தொண்டைமான் வைத்திய நாதையருடைய இசையருமையைக் கேள்வியுற்றார். இவ ரைத் தம்முடைய ஊருக்கு அழைத்துப் பாடச்செய்து

கேட்க வேண்டும் என்னும் எண்ணம் அவருக்குண்டா கியது. தக்க மனிதர்களை அனுப்பி வரவழைத்தார். பல பெரும் இசைப்புலவர்கள் கூடிய பேரரங்கில் வைத்திய நாதையர் இசைபாடினர். பெரிய பெரிய இசைப்புலவர்கள் எல்லோரும் இவருடைய இசையைக் கேட்டுப் பெரு வியப் படைந்தனர். பலவாறு வாழ்த்துரைகள் கூறி வாழ்த்தி னர்கள். புதுக்கோட்டை மன்னர் மேலும் சிலநாட்கள் இவரை அங்கே பாடச்செய்து இவருடைய பாட்டைக் கேட்டு மகிழ்ந்தார். சிறந்த நன்கொடைகளை வழங்கிப் பாராட்டினர். பிறகு மதுரை இராமநாதபுரம் முதலிய இடங்கட்குச் சென்று இசையரங்கு நடத்தினர். இராம நாதபுரத்தில் மூன்று திங்கள்களுக்குமேல் தங்கியிருந்து இசையரங்கு நிகழ்த்தினர். இவர் இசையரங்கு நிகழ்த்திய ஒவ்வொரு நாளும் பெருந் திருவிழாவாகவே இருந்தது. முத்துராமலிங்க சேதுபதி வைத்தியநாதையரையும் இராம சாமி ஐயரையும் புகழ்ந்து பாராட்டித் தக்கவாறு நன் கொடைகள் வழங்கினர். பிறகு எட்டையபுரம், திரு நெல்வேலி முதலிய ஊர்களுக்குச் சென்று இசையரங்குகள் நிகழ்த்திப் பெரும்புகழும் சிறப்பும் பெற்றார்.

மகா என்னுஞ் சிறப்புப்பெயர்

வைத்தியநாதையர் இவ்வாறு பலவிடங்களிலும் தமது திறமையைக் காட்டிக்கொண்டு கல்லிடைக்குறிச்சிக்குச் சென்றார். அப்போது கல்லிடைக்குறிச்சியில் திருவாவடு துறையாதீனத்தின் இளவரசாகிய சுப்பிரமணிய தேசிகர் இருந்தார். அவர் வைத்தியநாதையருடைய இசைப் பெருமையைப்பற்றிப் பலராலுங் கேள்விப்பட்டு அவரது இசையைக் கேட்கவேண்டு மென்று எண்ணிக்கொண் டிருந்தார். இவ்வாறு எண்ணிக்கொண்டிருந்த தேசிக

நிடத்தில் வைத்தியநாதையர் தமது திறமையைக் காட்டி இசையரங்கு நடத்தச் சென்றார். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று. தேசிகர் ஐயருடைய இசையைக் கேட்டு இன்பக்கடலில் மூழ்கினர். தக்கவாறு நன்கொடைகள் வழங்கியதுடன் அழியாக்கீர்த்தி ஒன்றும் அளிக்க வேண்டும் என்று எண்ணினர். ஒருவருக்கு ஒரு துறையில் தேர்ந்தவர் என்று சிறப்புப்பெயர் வழங்கவேண்டுமென்றால் அத்துறையில் தேர்ச்சிபெற்ற பலரையும் ஒருங்கு சேர்த்து அவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க முறையில் சிறப்புப்பெயரை வழங்குவதுதான் சிறந்ததாகும். அவ்வாறின்றித் தனிமையில் வைத்து வழங்கினிடின் பிறகு அத்துறையில் வல்லவர்கள் குறை கூறற்கு ஏது நேரிடலாம். சுப்பிரமணிய தேசிகர் இதனை நன்குணர்ந்திருந்தார். ஆகவே அந்நாளில் இசைத்துறையில் சிறப்புற்றிருந்த பெரிய வைத்தியநாதையர், சின்ன வைத்தியநாதையர் முதலிய இசைப்புலவர்கள் பலரை ஒருங்கு சேர்த்துப் போனவை ஒன்று கூட்டினர். அங்கு இசைப்போட்டியும் நடைபெற்றது. இசைப்புலவர்கள் பலரும் தனித்தனியே பாடினர். தஞ்சை வைத்தியநாதையருடைய இசையே எல்லோருடைய இசைக்கும் தலைமைபெற்று நின்றது. பெரிய வைத்தியநாதையருடைய உடன்பாட்டையும் பெற்றுத் தேசிகர் இவருக்கு "மகா," என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினர். அஃது இவருடைய பெயரோடு இணைந்து மகா வைத்தியநாதையர் என்று வழங்குமாறு நின்றது. "இவருக்கு இத்தகைய சிறப்புப்பெயர் வழங்கியது தகும்; தகும்," என்று அங்குக் கூடியிருந்த எல்லோரும் ஒரு முகமாக ஒப்புக்கொண்டனர். அப்பொழுது அங்கிருந்த வித்துவான் தாண்டவராயத் தம்பிரான் தாம் அடைந்த மகிழ்ச்சியை இரண்டு கட்டளைக்

கலித்துறைகள் மூலம் தெரியப்படுத்திக் கொண்டார்.* சிறப்புப்பெயர் பெற்ற பின்னர் மேலுஞ் சிலகாலம் மகாவைத்தியநாதையர் சுப்பிரமணிய தேசிகர் விருப்பப்படி கூடத் தங்கியிருந்தார். திருநெல்வேலி முதலிய இடங்கட்குச் சென்று இசையரங்குகள் நடத்தினர். அக்காலத்தில் இவருக்கு அகவை பன்னிரண்டு என்பர்.

சைவதூஷண கற்றல்

மகாவைத்தியநாதையர் இளமை முதற்கொண்டே சிவபெருமானிடத்தில் பேரன்புடையவராக இருந்தார். நாள்தோறும் மாலையில் திருக்கோவிலுக்குச் சென்று சிவ வழிபாடு செய்வதற்கும் காலையில் சிவபூசை செய்வதற்கும் ஒருநாள்கூடத் தவறமாட்டார். கோடக நல்லூர்ச் சுந்தர அடிகள் என்னும் பெரியாரிடத்தில் மறைமொழி கேட்டலையும் (மந்திரோபதேசத்தையும்) முறைப்படி பெற்றிருந்தார். அன்றியும் அவ்வடிகளாரிடம் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சூதசம்மிதை முதலிய வடமொழி நூல்களையும் பாடங் கேட்டார். மற்றும் பலரிடத்தில் பல வடமொழி நூல்களைப் படித்துணர்ந்தார். இதனல் இவருக்கு வடமொழி, சைவ நூல்கள் முதலியவைகளில் நல்ல பயிற்சி யுண்டாயிற்று. சிவத்தொடர்புடைய கதைகளை இசையுடன் சொற்பொழிவு செய்யவுந் தொடங்கினர். இவருடைய இசையரங்கு அல்லது சிவகதைச் சொற்பொழிவுகள் எங்கு நடைபெற்றாலும் அங்கு எண்ணற்ற மக்கள் கூடுவர்.

பெரும்புலவர் நட்பு

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களைப்பற்றி மகாவைத்தியநாதையரும் இராமசாமி ஐயரும் கேள்விப்

* இப் பாடல்களைத் தாண்டவராயத் தம்பிரான் வரலாற்றிற் காண்க.

பட்டு அவரைப் பார்ப்பதற்கு அவா மிக்குடையவர்களாக இருந்தார்கள். இவ்வாறே இவர்கள் இருவருடைய இசைப் பெருமையைப் பற்றியும் பெரும்புலவர் பிள்ளையவர்கள் கேள்விப்பட்டு இவர்களைப் பார்க்க விரும்பியிருந்தனர். ஓராண்டு திருவாவடுதுறையிலே தைத்திங்களிலே குரு பூசை நிகழ்ந்தது. இருபாலாருடைய எண்ணமும் இனிது நிறைவேறியது. சுப்பிரமணிய தேசிகர் இவர்களை ஒருவருக் கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தார். அங்கு இசை யரங்கு நிகழ்ந்தது. மகா வைத்தியநாதையருடைய இசை யைக்கேட்ட பிள்ளையவர்கள் வியந்து பாராட்டினார்.

"பொருவில்மகா வைத்தியநா தன்பாடும்
இசைப்பெருஞ்சீர் பொருவான் எண்ணின்
ஒருவிலருட் டுறைசையெங்கள் குருமணியம்
பலவாணன் ஒளிர்கூ டற்கண்
வெருவில்சிறப் புறமுனம்பா டிசைப்பெருஞ்சீ
ரேபொருவும் விருத்த ரூபம்
மருவிலனிந் தன்ச்சுமையும் எடுத்திலன்வேற்
றுமையிவையே மதிக்குங் காலே."

"அனைநிகர்சப் பிரமணிய மணியொடுமா
வடுதுறையில் அமரா நின்ற
தனைநிகரம் பலவாண பரமசிவன்மற்
றெங்கள்குரு சாமி மேன்மேல்
புனையும்வயித் தியநாதன் இசைவிரும்பி
னான்இதுவும் புகழோ என்னின்
இனையன்வயித் தியநாதன் இசைவிரும்பல்
பரம்பரையில் இயைந்த வாறே."

என்று பாடல்களை இயற்றிப் புகழ்ந்தார். அந்நாள்முதல் மகா வைத்தியநாதையரும் பெரும்புலவர் பிள்ளையவர்களும் நெருங்கிய நட்புமிக்கவர்களாக விளங்கினார்கள். மகா வைத்தியநாதையர் சிருங்ககிரி சங்கராச்சாரியர் முதலிய பெரியோர்களாலும் போற்றிப் பாராட்டப் பெற்றார்.

மைசூர் செல்லுதல்

இவருடைய இசைப்பெருமை மைசூர் மன்னருடைய காதுகட்கும் எட்டியது. அவர் இவரை யழைத்து இசை யரங்கு நடத்தச்செய்து தக்கவாறு நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்தார். மைசூரில் இருந்த செல்வர் களும் இவரைக்கொண்டு இசையரங்குகள் நடத்திச் சிறப் புக்கள் செய்தனர்.

இரங்கற்பாக்கள்

1876-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடிநீழலை எய்தினர். அப்பொழுது மகாவைத்தியநாதையர் தம்முடைய உடன்பிறந்தாரோடு இசையரங்கு நடத்தற்கு ஓர் ஊருக்குச் சென்றிருந்தார். அவ்விடத்தில் பிள்ளையவர்கள் காலமான செய்தி தெரிந் தது. இருவரும் மிகவும் வருந்தி இரங்கற்பாக்கள் பாடினர். மகாவைத்தியநாதையர்,

"தாவலரும் மீனாட்சி சுந்தரப்பேர் கொண்டிலகும்
நாவலர்பி ரானரன்தான் நண்ணினன் ஞாலிடத்தே
ஆவலரா மாணவகர் ஆரிடத்தே தமிழ்பயில்வார்
சேவலர்பி ரான்புகழ்சால் செழுங்கவியாப் பவர்எவரே.

"விண்ணுறும் பெருங்கவிஞன் மீனாட்சி சுந்தரேவன்
மண்ணுத மணியனையான் மாதேவன் மலரடிசார்ந்
தண்ணலின் றனணின்பம் உலப்புறுவார் மாணவரென்
றெண்ணுறின் றனன்இலையே என்னே இவ் வுலகியல்பே."

என்னும் பாடல்களால் தமது ஆற்றுனமையைப் புலப்படுத் தினர்.

புகழ்ப்பாட்டு

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த வேணுவன லிங்கத் தம்பிரான் என்பவர் செவ்வந்திபுரம் என்னும்

னரில் ஒரு திருமடங்கட்டினர். அதற்குச் 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்று பெயரிட்டார். சுப்பிரமணிய தேசிகரை அங்கு அழைத்துச் சிறப்புக்கள் செய்தார். அப் பொழுது தேசிகருடன் சென்றிருந்த மகாலைத்தியோகரை பர் முதலியோர் அம் மடத்தைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினர்கள். அப்பொழுது இவர்,

"மும்மையால் உலகாண்ட மூர்த்தியார்
முன்செய்பணி முட்டும் வண்ணம்
வெம்மையார் ஓர் அரசால் விளைந்ததனும்
சொன்மாற விடைநீத் தீசன்
இம்மையார் பலவரசும் படர்பதிச்சுப்
பிரமணிய இறையாய் மும்மைச்
செம்மையார் வேணுவன லிங்கன்செய்
திருமடத்தில் திகழ்ந்தற் றுலல்."

என்னும் அறுசீர் விருத்தப்பாடலைப் பாடினர்.

தேசிகர்மீது இரங்கற்பா

இவருக்கு மகா என்னும் சிறப்புப்பெயரை வழங்கி, இவருடைய புகழ் எங்கும் பரவுவதற்குக் காரணமாக இருந்த சுப்பிரமணிய தேசிகர் 1888-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழலை யடைந்தார். அப்பொழுது மகாலைத்தியோகரையர் பெரிதும் வருந்தி பல இரங்கற்பாக்கள் பாடினர்.

"எளித்த வடமொழிதென் மொழியளித்தாய் இசையளித்தாய்
சொளித்த துறைசையிற்சுப் பிரமணிய தேசிகன்ன்
நாளித்த போலைக்கண் மகாலைத்ய நாதனெனும்
போளித்தாய் எங்களாவிட் டெங்கொளித்தாய் பேசுகவே."

என்பது அவற்றுள் ஒன்றாகும்.

இறுதி

தமிழ் நாட்டு மக்களாலும் அரசர்களாலுமே பல்லா மல், திருவிதாங்கூர் மைசூர் முதலிய நாட்டு மக்களாலும் அரசர்களாலும் செல்வர்களாலும் போற்றிப் பாராட்டப் பெற்ற இவர் சிவபெருமான்மீது பேரன்புடையவராகவினர். 1893-ஆம் ஆண்டில் இவருக்கு நோயுண்டாயிற்று. அப்பொழுது இவருடைய குடும்பம் வறுமையால் தளர்ச்சி யடையாமல் சேது வேந்தர் முதலியோர் உதவிபுரிந்தனர். பெரிய இசையறிஞராக விளங்கிய இவர் நீண்ட வாழ்நாளைப் பெற்றிருக்கவில்லை. 1893-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தேழாம்நாள் தம்முடைய 49-ஆம் அகவையிலே இவ் வுலக வாழ்வைத் துறந்து சிவபெருமான் திருவடிநீழலை யடைந்தார். இசையுலகம் பெறுதற்கரிய மாணிக்கத்தை இழந்தோமே என்று பெரிதும் கலங்கி வருந்தியது. இவரு டைய தமையனாராகிய இராமசாமி ஐயர் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர்.*

உரு புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்

தோற்றம்

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார் முதலியவர்கள் வாழ்ந்திருந்த காலத்திலே திரு வாவடுதுறை ஆதினத்தில் புலிக்குட்டி இராமலிங்கத் தம்பி ரான், ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவராக இருந்தார். ஆதீனத் தலைவர்களிடமும் வேறு சிலரிடமும் கல்வி கற்றுச் சிறந்த புலமையடைந்து விளங்கினர்.

---

* இரங்கற்பாக்களை இராமசாமி ஐயர் வரலாற்றில் காண்க.

புலிக்குட்டி

இவருக்குப் புலிக்குட்டி என்னும் அடைமொழி எவ் வாறு வந்ததென்று தெரியவில்லை. இவர் பிருந்த வெகுளி யுடையவர். தமக்கு ஆகாத செயல்களைப் புரிந்தவர்கள்மீது வசைப் பாட்டைப் பாடிவிடுவார். இவர் ஆதீனத் தலைவர்க ளுடைய பெருஞ் சினத்திற்கு உள்ளாகி அடிக்கடி ஆதீ னத்தை விட்டு அகற்றப்பட்டார். இவர் பொருட்டுத் தியாகராசச் செட்டியார், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர் அடிக்கடி ஆதீனத் தலைவர்களிடம் பரிவு மொழி கூறி மீண்டும் ஆதீனத்திற் சேர்த்துக்கொள்ளச் செய்தனர்.

பாடல்கள்

ஒருமுறை இவர் சுப்பிரமணிய தேசிகருடைய சினத் திற்கு ஆளானார். தேசிகர் ஆதீனத்தைவிட்டு இவரை வெளியேறுமாறு கட்டளையிட்டுவிட்டார். உடனே இவர், "சுப்பிரமணிய தேசிக சிந்தாமணியே! பேரறிஞர்கள் நிரம்பிய பேரவைக்கண் அடியேனை அழைத்து நடுவிலே இருக்கச் செய்து, 'பெருநாவலர்காள்! இவன் கற்பனை யாகக் கவிகள் பாடுவதில் காளிதாசனைப் போன்றவன்.' என்று கூறி நான் பாடிய பாடல்களை யெல்லாம் அங்குச் சொல்லுமாறு செய்து அப்புலவர்களைப்போல நீயும் வியக் கும் பெரும்பேற்றை அடியேன் அடையாமல் நெடுந்தொலை யில் இருப்பதே பெரிய தண்டனை யன்றே? இதன்மேலுங் கொடிய தண்டனை யாதிருக்கின்றது? கோமுத்தியை (திரு வாவடுதுறை) அடைந்த நான் எமனுடைய ஊருக்கு (தருமபுரத்திற்கு) எவ்வாறு போவேன்? சொக்கபுரம் ஒரு பொருளாகுமோ? தறியான எனக்குச் சிறிய குடிவாழ்க்கைமேல் (குன்றக்குடியில்) நெஞ்சம் பொருந்

தமோ? கூடலும் (மாதர் சேர்க்கை, மதுரையாதீனம்) ஆகுமோ," என்னும் பொருளமைந்த,

"வாசமலர்வாய் திறந்தென்னை வாவென்
றழைத்துப் படித்தோர்கள்
மல்கும் சபையின் நடுவிருத்தி
மாநூ லவர்கள் இவன்கானி
தாசன் அனையான் கற்பனைப்பாச்
சாற்றும் வலிமை யாலென்று
தமியேன் புகன்ற கவிமுழுதும்
சாற்றக் கேட்டப் பெருஞ்சபையில்
சேச அந்தப் பாவலர்போல்
நீயும் வியக்கும் பெரும்பேறு
நீச னேன்பெற் றுய்யாமல்
நெடுந்தூ ரத்தில் இருப்பதுவே
சபை பெருந்தண் டனையன்றே
இதன்மே லுந்தண் டனையுண்டோ
இசைப்பாய் குருசுப் பிரமணிய
எந்தாய் அருட்சிற் றாமணியே.

"கோழுத்தி அடைந்தென்முன் தருமபுரம்
எவ்வாறு சூறுசு வென்பின்
தோழுற்ற சொக்கபுரம் இதுவுமொரு
பொருளாமோ தறவியானேற்(கு)
எழுற்ற குன்றக் குடிவாழ்க்கை
மேல்நெஞ்சம் இசையு மோசொல்
காழுற்ற கூடலுந்தான் ஆமோசுப்
பிரமணிய கருணைக் குன்றே"

என்ற செய்யுட்களை எழுதியனுப்பினர்.

திருவாய்

ஆதீனத்து ஓதுவார் ஒருவருக்கும் இவருக்கும் ஏதோ பகைமைமூண்டு வாய்ப்போர் உண்டாகிவிட்டது. புலிக் குட்டி ஓதுவாரை வாய்க்கு வந்தவாறு இகழ்ந்து பேசத்

தொடங்கிவிட்டது. உடனே ஒதுவார், "சரிதான் சரிதான் போதும் திருவாயை மூடியருளட்டும்," என்று இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற உரைத்தார். உடனே இவருக்குச் சிற்றம் மேலும் மிகுதியாகிவிட்டது.

"செந்தமிழ்பா டும்வாய் திருவாய்மற் றெவ்வாயும்
நிந்தை மலுஞ்சொரிவாய் நீர் சொரிவாய்—முந்தவே
சாறும்வாய் யாரும் கைகக்கும்வாய் மூடனே
தேறுவாய் இச்சங்க தி"

என்று, வசைப்பாட்டு ஒன்றை விசினர்.

முத்துக்கறுப்பன்

மற்றொரு சமயத்தில் முத்துக்கறுப்பன் என்னும் பெயருடையவன் ஒருவனுக்கும் இவருக்கும் வாய்ப்போர் மூண்டது. அப்பொழுது இவர்,

"முத்துக் கறுப்பனென்று முன்னனைக்குப் போமைத்த
பித்தனர் என்னிடத்தில் பேசுவாய்—முத்துக்
கருக்குமா மூடாநீ கற்றிருந்தும் பேதைத்
திருத்திவைக்க லாகாதோ சே."

என்று இகழ்ந்து பாடினர். இவர் வெகுளியுடையவராக இருந்தும் இனிய செய்யுட்களைப் பாடும் அறிவாற்றல் நன்கு பெற்றிருந்தமையின் பலரும் இவரிடத்தில் நன்மதிப்புக் காட்டினர்கள்.

இரங்கற்பா

ஆதீனத் தலைவராக அமர்ந்திருந்த சுப்பிரமணிய தேசிகர் காலமானபோது இவர் பல இரங்கற்பாக்களைப் பாடி வருந்தினர். அவற்றுள் இரண்டைக் கீழே காண்க.

"தனிகர்க்குந் தலைசையிற்சுப் பிரமணிய
எங்கள்குரு சாமி யாங்கள்
உனை யிழந்த வெருந்தயரப் பிணியிலைல்
உயிர்நீங்கி ஒழியா தய்ய

அனையபினை ஒழித்தருளம் பலவான
குருமணியை அளித்த வாற்றல்
இனைவற நீ என்றும் எங்கள் பால்வைத்த
பெருங்கருணை என்னே என்னே!

" மருந்தனைய துறைசையிற்சுப் பிரமனியே
எங்கள்குரு மணிநீ நீங்கும்
பெருந்துயரக் கடல்நடுவே யாங்கள்விழுந்
திறவாது பிழைக்கு மாறு
பொருந்தியவக் கடல்கடத்தி அருள்புகழும்
பலவாண புனிதன் என்னும்
திருந்தியகற் புணையளித்தாய் நினைக்கென்ன
கைம்மாறு செய்வோம் ஐயா."

இறுதி

இவர் தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியதன்றி நூல்கள் செய்ததாகத் தெரியவில்லை. 1893-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து, இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

---

158. சுந்தரதாசப் பாண்டியர்

தோற்றம்

திருநெல்வேலி மாவட்டத்திலேயுள்ள சேற்றூரிலே சுந்தரதாசப் பாண்டியர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் முத்துசாமித்தரை. இவர் புலவர் பாடும் புகழுடையாராக நிலவிப் பல புலவர்களைப் போற்றி யாதரித்து அவர்களால் புகழ்ந்தோதும் பாடப்பெற்ற தகைசால் பெரியார்.

கல்வி

தம் புதல்வரைப் புலவராக்க வேண்டும் என்னும் எண்ணம் தந்தையாருக்குண்டாகியது. அந்நாளில் முக

வூரில் புகழ்பெற்று விளங்கிய இராமசாமிக் கவிராயர் சேற் றூர்ச் சமத்தானப் புலவராக விளங்கியிருந்தார். அவரைக் கொண்டே முத்துசாமித்தரை தம் மைந்தருக்குக் கல்வி கற்பிக்கச் செய்தார். இராமசாமிக் கவிராயர் இலக்கண இலக்கியங்களைத் தெளிவுபெறக் கற்றுப் பெரும் புலவராக மிளிர்ந்த பெற்றிமிக்காராதலின் சுந்தரதாசுத்துரை கவி ராயர்பால் அரிய கல்வியை உயரிய முறையில் கற்றார். தம் ஆசிரியராகிய இராமசாமிக் கவிராயரைப்போலவே செய்யுள் பாடும் ஆற்றலும் சொற்பொழிவு செய்யுந் திறனும் சுந்த ரதாசுத் துரைக்கும் நன்கு உண்டாயின.

புலவர்களைப் போற்றுதல்

தந்தையாருக்குப்பின் தாம் நாட்டுரிமையை மேற் கொண்டபிறகு, தந்தையாரைப்போலவே புலவர்களைப் போற்றி யாதரிக்கும் சிறிய வள்ளன்மையை மேற்கொண் டார். இராமசாமிக் கவிராயராகிய ஆசிரியரையும் மற்றும் பல புலவர்களையும் தமது அண்மையில்வைத்து ஆதரித்து அவர்களோடு கலையாராய்தலில் ஈடுபட்டதோடு தம் பெரு மையைப் புகழ்ந்து பாடி வருவாரின் பாவின் பண்பையும் சீர்தூக்கித் தக்கவாறு நன்கொடை வழங்கினர்.

செய்யுள்பாடுந் திறன்

செய்யுள் பாடுந் திறம் நன்கு அமையப்பெற்ற இவர் தம்ஊரிற்கோயில்கொண்டுள்ள இறைவன்மீது செய்யுட்கள் பல பாடினர். அவைகள் சொற்சுவையும் பொருட்செறி வும் நன்கு அமையப்பெற்று இனிமை பொருந்தியவை.

" ஆசையே பெருக்கி மோசமே விளைக்க
அன்பனு ராகமே விளைத்துக்
காசையே விரும்பு கனக்குழல் மடவார்
கண்வலைப் படாதுனின் புகழைப்

பேதியே உருகி நேசமே கனியும்
போதிவென் றருள் புரிவாய்
மாதிலா மணியே கருணைவா ரிதியே
வளமிகு சேறைநா யகனே."

என்பது சேற்றூரில் எழுந்தருளிய நச்சாடை தவிர்த்தவர் மீது பாடப்பட்ட பாடல்களில் ஒன்றாகும்.

சிவப்பதிக் கவிகள்

இவர் சிவப்பதிகள் பலவற்றிற்குச் சென்று இறை வழிபாடு செய்தார். தாம் சென்ற ஒவ்வோரூர்க் கோயிலிலும் எழுந்தருளிய இறைவன்மீது ஒவ்வொரு செய்யுள் உரைத்தார்.

"மருவாரூர் பொழியாக அசுரர்குலம் முழுவாக
வானேர்க் கின்பம்
தருவாரூர் தியும்விடையாய்த் தாங்கியமா
லறியாதார் தமையே போற்றி
வருவாரூர் வனமுதலாம் பலபிறப்பில்
உழலாது மாற்றி வைப்பார்
திருவாரூர்த் தியாகேசர் எனதுசெஞ்சே
எப்போதுஞ் சிந்திப் பாயே."

என்பது திருவாரூரில் இயற்றியதாகும். திருவிழாச் சமயத்திலும் மற்றைச் சமயங்களிலும் காலத்தையும், இடத்தையும் நோக்கிப் பல செய்யுட்கள் பாடியுள்ளார். அவைகள் தனிச்செய்யுட் சிந்தாமணியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவனந்தபுர அரசர்மீது வண்ணம்

இவர் காலத்தில் திருவனந்தபுரத்தில் அரசராக இருந்த இராமவர்மா என்பவருக்கும் இவருக்கும் நட்பு ஏற்பட்டிருந்தது. சுந்தரதாசப் பாண்டியர் இராமவர்மாமீது வண்ணம் ஒன்று பாடினர். பெரும்புலவர் ஒருவரிடமிருந்து சிறப்புப்பாயிரம் பெறவேண்டுமென்பது இவ

நூடைய எண்ணமாக இருந்தது. சேற்றூர்ப் புலவர்கள், "திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடமிருந்து பெற்றால் மிக நன்றாக இருக்கும். அவர் மிகப் புகழ்பெற்ற பெரும் புலவர்," என்று கூறினர்கள். சுந்தரதாசப் பாண்டியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடமிருந்தே பெறுவ தென்று முடிவுசெய்தார். பெரும்புலவர் பிள்ளையவர்கட் கும் இவருக்கும் முன்பழக்கம் இல்லை. பழக்கம் இல்லாம லிருக்கும்போது கேட்டால் கொடுக்கிறாரோ இல்லையோ என்று தயங்கினர். பிறகு வண்ணத்தை ஆதீனத்தலைவர் சுப்பிரமணிய தேசிகருக்கு அனுப்பி எண்ணத்தையுந் தெரியப்படுத்தினர். சுப்பிரமணிய தேசிகர் பிள்ளையவர் களிடம் வண்ணநூலைக் கொடுத்து, "சுந்தரதாசப் பாண்டி யர் நல்ல அறிவாளி. அவர் வண்ணத்திற்குச் சிறப்புப் பாயிரம் கொடுக்கவேண்டும்" என்று கூறினர். பிள்ளை யவர்கள் தேசிகருடைய திருவுளப்படி ஐந்து பாடல்களைச் சிறப்புப்பாயிரமாகப் பாடிக் கொடுத்து அனுப்பச் செய் தார். சிறப்புப்பாயிரத்தைப் பெற்ற சுந்தரதாசப் பாண்டி யர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து பிள்ளையவர்கட்கு நன்றியறி விப்பதாகச் சில செய்யுட்கள் எழுதியனுப்பினர்.

சொற்பொழிவாற்றல்

செய்யுள் இயற்ற நன்கு பழகியிருந்ததைப் போன்றே சொற்பொழிவு செய்வதற்கும் இவர் நன்கு பழகியிருந்தார். திருக்குற்றாலத்திற்குச் சென்றிருந்த இடத்தில் பாரதச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். சொற்பொழிவு மிகவுஞ் சிறந்ததாக இருந்தது. அப்பொழுது இவருடைய ஆசிரியராகிய இராமசாமிக் கவிராயரும் உடனிருந்தார். அவர் இவருடைய சொற்பொழிவைப் பாராட்டி,

"திடபுருட சிங்கம்வக்கள் சுந்தரதா
சேந்திரன்தான் செயும்பி நசங்கம்
வடவருவி வண்பரது மேற்போமா
செவிக்கினிக்கு மாமுங் கீர்சூழ்
புடவியெங்குந் தொனித்திடுமா பன்னூலே
ஹாய்ந்த புலவீர் என்றும்
உடலழுக்கை ஒழிப்பதன்றி அகத்தழுக்கை
ஒழித்திடுமா உரைசெய் வீரே"

என்னும் இப்பாடலைச் சொல்லத் தொடங்கி, 'உடலழுக்கை' என்று கவிராயர் சொல்லும்போதே மேற்கொண்டு அவர் சொல்லப்போகிற செய்தியைச் சுந்தரதாசர் ஊகித்துணர்ந்துகொண்டு, "சபாசு" என்று கூறினர். பெருநிலக்கிழாரின் தண்ணுணர்வை எண்ணி மகிழ்ந்த கவிராயர்,

"முன்னம்உப காங்கமன்னன் கவிகேட்டுச்
சோமனைசப்பு மொழியும் லக்கம்
பொன்னனைச்சொல் லும்புலவீர் சுந்தரதா
சேந்திரனைப் போலப் பாவின்
பின்வருங்கற் பனையிஃதென் றறிந்துசபா
சென்பதுண்டோ பேசுங் காலிம்
மன்னரிரு வரிலெவரே தமிழ்த்திறமுற்
றுந்தெரிந்தோர் சாற்று வீரே."

என்று புகழ்ந்து கூறினர். மற்றும் பல புலவர்கள் இவருடைய சொற்பொழிவுத்திறன் முதலியவைகளைப் பாராட்டிப் புகழ்ந்திருக்கின்றனர். கல்போது பிச்சுவையைப் இவர்மீது இயற்றிய விடுகதைப் பாடல்கள் வேடிக்கையானவை.

இறுதி

சிறந்த கல்விமானாக விளங்கிய இவர் 1895-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அப்போது இவருடைய ஆசிரியராகிய கந்தசாமிக் கவிராயர்,

"கல்லாத கலேயிலேயென் றெக்கலேயுங்
கற்றதனுல் கனவி லும்பொய்
சொல்லாமை முதலாகற் குணநிறைசுந்
தரதாசுத் தரையை இக்காட்(டு)
எல்லாருங் கலறுதக்கொல் அந்தகனே
உனேடுவன் என்னும் வார்தத்தை
பொல்லாத விடப்பாம்பை கல்லபாம்
பென்பதொப்பாம் பேசுங் காலே.

"இந்திரன்சுந் தரதாசன் தனக்கெதிராப்
புலிகரடி எதிர்த்துப் பாய
வந்தவையெல் லாம்செயித்த வல்லவன்இச்
சமன்எருமை மாட்டுக் காரன்
அந்தகன்ஓர் காலன்இவன் தனேச்செயிக்கின்
சுமதாண்மைக் கழுகா என்று
சிந்தையில்என் னினன்அதனுல் செயித்தான்இன்
றேல்அவன்என் செயவல் லானே."

என்பன முதலிய இரங்கற்பாக்களேப்பாடி உள்ளம் வாடினர். மற்றைப் புலவர்களும் இவர்மீது இரங்கற்பாப் பாடியேங்கினர். "பூவின் கிழத்தி பொருந்திய இடத்தில் காவின் கிழத்தி காடுதல் செய்யாள்," என்னும் மொழியைப் பொய்யாக்கியவர்களில் இச்சுந்தரதாசப் பாண்டியரும் ஒருவராவர்.

உ. ச. மு. கந்தசாமிப்பிள்ளை

தோற்றம்

இவர் தென்னங்காடு மாவட்டத்திலே காரணப்பட்டு னன்னும் ஊரிலே தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் முத்துச்சாமிப் பிள்ளை. குலம் கருணீக குலம். இராமலிங்க அடிகள் காலத்தினராகிய இவர் இராமலிங்க அடிகளாரின் அருமைபெருமையை நன்குணர்ந்து தொண்டு பூண்டொழுகினர். அடிகளாரோடு நெருங்கிப் பழகிய இவர் அடிகளாரின் வரலாற்றுக் குறிப்புக்களை னெக்கமாக எழுதினர். இக்குறிப்புக்கள்தாம் பின்னர் அடிகளாருடைய வரலாறு எழுதுவதற்கு இன்றியமையாத் துணையாயிற்று.

இவர் ஒருமுறை மாயூரத்திற்குச் சென்றார். அப் போது இவருடைய கையிலே இராமலிங்க அடிகள் திருவாய் மலர்ந்தருளிய மகாதேவமாலை இருந்தது. அப்பொழுது அங்ஙகரிலே வசித்திருந்த பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப் பார்க்கச் சென்றார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மகாதேவமாலையை வாங்கிப் படித்துப் பாட்டின் அருமையைப் பெரிதும் பாராட்டினர். இவர் வள்ளலார் இராமலிங்க அடிகளாணையே வழிபடு தெய்வமாகவும் குருவாகவும் கொண்டிருந்தபடியால் இவருக்கு எல்லாஞானமும் எளிதாக உண்டாயின.

இயற்றிய நூல்கள்

1. வள்ளலார் வரலாறு
2. வரலாற்று இசைப்பாட்டு
3. சுத்தாவிதாயகர் மாலை
4. சாமிமலை சோடச வெண்பா

5. சற்குருவெண்பாவந்தாதி
6. குருநேச வெண்பா
7. கொலைமறுத்தல்
8. சாமிமலை வெண்பா
9. அருட்பிரகாசர் அற்புதவந்தாதி
10. வெறிவிலக்கு
11. வடசிற்சபை மாலை
12. அருட்பிரகாசர் அற்புதமாலை
13. நன்னிமித்தம் பராவல்
14. விபூதிப் பிரசாத மகிமை
15. கிளிக்கண்ணி
16. ஆநந்தக்கண்ணி
17. புலம்பற் கண்ணி
18. பாதார்ச்சனைக் கீர்த்தனை
19. சண்மத சமரசாதீத சித்விலாச நாமாவளி
20. உத்தரஞான சிதம்பர நாமாவளி
21. ஆளுடைய பிள்ளையார் நாமாவளி
22. சடகோபர் நாமாவளி
23. திருவருட்பிரகாச வள்ளலார் நாமாவளி
24. கற்பிலாப் பெண்டிர்
25. கற்புடைப் பெண்டிர்

முதலியன இவர் இயற்றிய நூல்கள். இவருடைய நூலைப் பாராட்டித் தண்டபாணியடிகள், பூவை கலியாண சுந்தர யதீந்திரர், காஞ்சி நாகலிங்க முனிவர், வல்லை சண்முகசுந்தர முதலியார் முதலிய அறிஞர்கள் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளனர்.

"அந்தண் வடலூரான் அன்பர்களில் சீரியனாம்
கந்த சுவாமிக் கவிப்புலவன்—இந்த
உலகத் தினர்மகிழ ஓதுமிசைப் பாடல்
இலகற்குஞ் சாட்சிதெய்வ மே."

என்பது தண்டபாணி யடிகள் பாட்டு.

"குருமொழியே இலக்காகக் கொண்டுசென்
மார்க்கமெறி குலவித் தெய்வ
அருண்மலையி னில்நினைக்கும் கந்தசா
மிப்பெயரோன் அருளிச் செய்த
திருவனைச்சத் குருவெண்பா அந்தாதி
பலவிணையத் தேர்ந்து ஞானம்
மருவியசித் சபைபொலிரும் வடதூர்சன்
முனிவரனே மகிழ்வன் மாதோ."

என்பது பூவை கலியாணசுந்தர பதிற்றிரட் பாட்டு.

கொலை மறுத்தல்

"ஆண்டவனெல் லாவுயிர்க்குள் ளார்த்திருப்ப தாயாமல்
சண்டரிய இன்னுயிர்கொன் றிட்டாரை—வீண்ட
இருப்புருட்டிப் பாய்க்குன்றே சட்டியிலுல் தன்னி
உருட்டுவார் தாதுவர்பல் லோர்."

என்பது இவரியற்றிய கொலை மறுத்தற் பாடல்களுன் ஒன்று.

"காலத்தி லேமழை பெய்யாத தால்வருங் கட்டமென்ன
ஞாலத்தி லேவிரத் தாப்பியத் தால்மிகு நன்மைகெட்டக்
கோலத்தி லேயரில் அந்தோளன் செய்குவன் கூறரிய
சீலத்தி லேநிலைப் பேரேவடல் வருஞ்செவ் வண்ணனே."

என்பது அருட்பிரகாசர் அற்புத அந்தாதிப் பாடல் களுள் ஒன்று.

இவருடைய நூல்களைப் புதுக்கோட்டையைச் சேர்ந்த இராமச்சந்திர புரத்தில் வள்ளலாராக வினங்கியிருந்து காலஞ்சென்ற முத்தையாச் செட்டியார் அச்சிற் பதிப் பித்து வெளியிட்டுள்ளார்.

உ அ. தாண்டவராயத் தம்பிரான்

தோற்றம்

இவர் திருவிடைமருதூரிலே வழிவழியாகச் சைவத்தை மேற்கொண்டொழுகும் சைவ வேளாளர் குலத்திலே தோன்றியவர். வேளூர் சுப்பிரமணிய தேசிகரிடத்திலே மூவகைத் தீக்கைகளையும் முறையே பெற்றுச் சைவத் துறவும், தாண்டவராயத் தம்பிரான் என்னும் தீக்கைப் பெயரும் பெற்றவர். இலக்கண இலக்கியங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் திருவாவடுதுறை ஆதீனத்திலே கற்றுத் தெளிந்தார். பிறகு சென்னையில் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவில் உள்ள திருவாவடுதுறை ஆதீன மடத்திற் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்பொழுது காஞ்சீபுரம் பெரும்புலவர் சபாபதி முதலியார் சென்னைமாநகரில் புகழ் பெற்று விளங்கினார். பிற்காலத்தில் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஆன மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னைமாநகர்க்கு முதன் முறையாகச் சென்றபொழுது இவரைக் கண்டார். அப்பொழுது இவர் மேற்படி சபாபதி முதலியாரிடம் நூல்கள் சிலவற்றில் இருந்த ஐயங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். அந்நாளிற் சென்னையில் இருந்த மழவை மகாலிங்கையர் தம்பிரானுக்கு ஆருயிர்த் தோழராக அமைந்திருந்தார். தம்பிரான் சென்னையை விட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்றபிறகு மகாலிங்கையர் தம் நண்பராகிய தம்பிரான் பிரிவு குறித்து வருந்தி,

" விரிந்தமக ராலயத்து மின்னாளுக்
கணியாகி மேம்பா டுற்றுப்
பரிந்தசிவ யோகியர்வாழ் துறைசையுளாய்
இருகலையின் பண்பை நன்கு.

தெரிந்ததாண் டவராய மாதவசித்
தாந்தமுணர் செல்வா நின்னைப்
பிரிந்ததனால் மணியிழந்த கண்ணது போல்
வாடுகின்றேன் பேதை யேனே."

என்னுஞ் செய்யுளை எழுதியனுப்பினார்.

பேரூர்ப் புராண உதவி

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்கு நண்பராக அமைந்திருந்த இவர் ஒருமுறை கல்லிடைக்குறிச்சிக்குச் சென்றபோது திரிசிரபுரத்தில் வந்து சிலநாள் தங்கினார். தம்பிரான்பால் அப்போது பேரூர்ப் புராணம் என்னும் நூல் இருந்தது. அதனைப் பிள்ளையவர்கள் உணர்ந்து அந்நூலைப் பெற்று வேறுபடி எழுதிக்கொண்டு நூலைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

மாணவர்களை ஆராய்தல்

தம்பிரான் அவர்கள் பல நல்ல அறிஞர்களிடம் நூல்களைக் கற்றுச் சிறந்த புலமை நிறைந்தவராதலின், பிள்ளையவர்களுடைய மாணவர்களின் அறிவுத்திறனை ஆராய்ந்து பார்த்தார். நன்கு கற்பிக்கப்பட்டிருத்தலை உணர்ந்தார். பெரும்புலமை வாய்ந்த பிள்ளையவர்கள் திருவாவடுதுறை போன்ற பெரிய இடங்களில் இருந்து கல்வி கற்பிக்கத் தக்கவர் என்று உள்ளத்தில் முடிவு செய்துகொண்டார்.

சுப்பிரமணிய தேசிகருக்குச் சொல்லுதல்

நாட்கள் சில சென்றன. தம்பிரான் கல்லிடைக்குறிச்சிக்குச் சென்றார். அப்பொழுது கல்லிடைக்குறிச்சியில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் இருந்தார். அவர் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சின்னப்பட்டமாக ஏற்படுத்தப் பெற்றவர். தாண்டவராயத் தம்பிரானிடம் பல நூல்களைப் படித்துணர்ந்தவர். அவர் தாண்டவராயத்

தம்பிரானைப் பார்த்து, "நீங்கள் சென்னையிலே இருந்து கொண்டிருக்கக்கூடாது. அவ்வாறிருப்பீர்களாயின் தங்களுடைய ஒப்புயர்வற்ற கல்வி நன்கு பயன்படமாட்டாது. நம்முடைய ஆதீனத்தில் இருந்துகொண்டு மாணவர்கட்குக் கல்வி பயிற்றவேண்டும். இதனை நான் முன்னரே முடிவு செய்து வைத்துக்கொண்டிருக்கிறேன்," என்று கூறினர்.

இதனைக் கேட்ட தம்பிரான், "அவ்வாறு சொல்வதற்கு என்னுடைய உடல்நிலை இடந்தரமாட்டாது. திருசிரபுரத்திலே மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்னும் பெயருடைய பெரும்புலவர் ஒருவர் இருக்கிறார். அவர் இரண்டொரு முறை சென்னைக்கு வந்திருந்தார். அங்கு அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். இப்பொழுது திருசிரபுரத்தில் தங்கியிருந்தபோதும் பார்த்தேன். இதற்குள்ளேயே பல நூல்களை இயற்றியிருக்கிறார். இவர் பாடிய அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் என்னும் அரிய நூலின் பாடல்கள் சிலவற்றைக் கேட்டுச் சென்னையிற் சிறந்த புலவர்களாக விளங்கும் பெரும்புலவர் சபாபதி முதலியார், மழவராய னேந்தல், மகாலிங்கையர் முதலியோர் பெரு வியப்படைந்தார்கள். அத்தகைய அரிய புலவர் நம் ஆதீனப் புலவராக அமர்வாராயின் நம் ஆதீனத்தின் சிறப்பு எல்லாவிடங்களினும் பரவும். ஆகையால் இதனைச் செய்தல் இன்றியமையாததாகும்," என்று கூறினர். சுப்பிரமணிய தேசிகர், "அப்படியொருவர் இருப்பாராயின் கட்டாயம் ஆதீனப்புலவராக அமர்த்திவிடுவோம்," என்று கூறினர். தாண்டவராயத் தம்பிரான் அவ்விடமே சிலகாலந் தங்கியிருந்தார்.

மகாவைத்தியநாதவையர்மீது பாட்டு

அங்குத் தாண்டவராயத்தம்பிரான் தங்கியிருந்தபோது தஞ்சை மாவட்டத்தில் இருந்துவந்த வைத்தியநாதையர்

என்னும் இசைப்புலவர் சிறப்பான இசையரங்கு நடத்தினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த தேசிகர் பல இசைப் புலவர்களுக்கு முன் "மகா" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார். அப்பொழுது இவர்,

"வையை வயித்திய நாத மறையவன் வாய்மலரும்
துய்யசங் கீதச் சுவையமு தார்ந்திடில் துங்கவிண்ணோர்
பையர வார்த்துப் பருவரை நட்டுமுன் பாற்கடலைக்
கைகள் வருந்தக் கடையப் பெறாரென்பர் கற்றவரே."

"கற்றுத் திகழும் வயித்திய நாதக் கவின்மறையோன்
கொற்றத்தி னாற்களி கூர்ந்திசை பாடுமிக் கொள்கைதனை
முற்றத் துறந்த முனிவரும் கேட்க முயல்வரென்றால்
மற்றத் துறையினர்க் குண்டாகும் வேட்கைக்கு மட்டுளதே."

என்று இரண்டு பாடல்களைக் கூறினார். மற்றொருநாள் இசையரங்கு நிகழ்ந்தபோது,

"நிலைபெறுநல் இசைத்தமிழ்முந் நீர்கடக்கும்
பாரதியாய் நிலவும் வையைத்
தலைநகர்வாழ் மாவைத்ய நாதன்எனும்
பூசுரன்சங் கீதம் கேட்டுக்
கலைமகளும் வேதனையுற் றுடல்வெளுப்புண்
டன்னமிறங் காமல் கற்பான்
அலைகடல்சூழ் புவியிடத்தும் அம்பரத்தும்
பம்பரம்போல் அலைகின் றாளே."

என்று புகழ்ந்து பாடினார். திருநெல்வேலியில் வீரபத்திர பிள்ளை என்பவருடைய இல்லத்தில் இசையரங்கு நடந்தபோது,

"பொன்னாடும் புகழ்வையை மாவைத்ய
நாதன்எனும் பூசுரன்தன்
நன்னாவால் பாடும்இசை தனைக்கேட்டு
நாமகளும் நயந்து நாடி

இந்நாளில் இழந்திடுபூக் கண்றேயீர்ந்
தென்மானம் எனக்குத் தந்த
மன்னாவென் றருள்வீர பத்திரனை
வாழ்த்தியுளம் மகிழ்வுற் றாளே."

என்று பாடினார். இப்பாடல்களின் கற்பனை நயத்தைக் கேட்டு எல்லோரும் இவருடைய கல்விப் பெருமையை வியந்து கொண்டாடினார்கள்.

இறுதி

பெரும்புலமை வாய்ந்து விளங்கிய இவர் நன்னாள் ஒன்றிலே இறைவன் திருவடிநீழலை யடைந்தார். இவருடைய மறைவு இவரிடம் பல நூல்களைக் கற்றுணர்ந்த சுப்பிரமணிய தேசிகருக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. அவர் பலரிடமும் இவருடைய கல்வித் திறமை, நல்லியல்பு, தூய ஒழுக்கம் முதலிய அரிய பண்புகளைப் பாராட்டிக்கொண்டிருப்பது வழக்கம். ஒருநாள் தேசிகர் சிலரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது தாண்டவராயத் தம்பிரானுடைய குண நலன்களைப் பாராட்டிப் பேசிவிட்டு, "நாம் வழிபடுந் தெய்வம் நமக்கு முன் தோன்றி என்ன வேண்டுமென்று கேட்டால் தாண்டவராயத் தம்பிரான் அவர்களை ஒருமுறை பார்க்குமாறு செய்யவேண்டுமென்று கேட்போம்," என்று கூறினார். இவர் அவ்வச்சமயங்களில் தனிப்பாடல்கள் பலவற்றை இயற்றியதல்லாமல் நூல் யாதுஞ் செய்ததாகத் தெரியவில்லை.

---

2. தேவராசபிள்ளை

தோற்றம்

தேவராசபிள்ளை என்பவர் பெங்களூர் தண்டல் வாழ்ந் திருந்தார். தேவராசபிள்ளையின் தந்தையார் மொழி பெயர்ப்பாளர் அலுவலில் அமர்ந்து பெரும்பொருள் திரட்டிச் செல்வச் சிறப்புமிக்கவராக வாழ்ந்திருந்தார். ஆகவே தேவராசபிள்ளையும் சிறப்புடன் வாழ்ந்திருந்தார்.

கல்வி

தேவராசபிள்ளைக்குச் செல்வச்சிறப்பு நன்கு அமைந் திருந்தபடியால் யாதொரு கவலையும் அற்றவராய்க் கல்வி கற்க விரும்பினர். அங்கிருந்த தமிழறிவாளர்களிடத்தில் தமிழ்நூல்களைப் பாடங்கேட்டுச் சிறிது தமிழ்ப்புலமை பெற்றார். மேலும் மிகுதியாக நூல்களைக் கற்கவேண்டும் என்னும் அவா அவருக்கு மிகுதியாக இருந்தது. பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் பெருமையைச் சிலரால் அவர் அறிந்தார். தக்கார் சிலரை மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள்பால் அனுப்பிப் பெங்களூருக்கு வந்து சிலகாலந் தங்கிப் பாடஞ்சொல்ல வேண்டுமென்று வேண்டச் செய்தார். தேவராச பிள்ளையின் வேண்டுகோளுக்கு மீனாட்சிசுந்தரம்பிள்ளை உடன்பட்டார். தம் மாணவர்க ருடன் பெங்களூரை யடைந்து தேவராசபிள்ளையின் வீட்டில் தங்கினர். தேவராசபிள்ளைக்கு நன்னூல் ஒன்றில் இலக்கண இலக்கியங்களைப் போதிக்கத் தொடங்கினர். தேவராசபிள்ளை தாம் முன்பு படித்திருந்த நூல்களில் இருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்ததுடன் திருவிளை யாடல் புராணம், திருத்தொண்டர் புராணம், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய நூல்களைப் பாடங் கேட்டுத் தெளிந்தார். செய்யுள் பாடுந் திறமும் நன்கு அமைந்தது.

"பூவின் கிழத்தி பொருந்தியிருக்குமிடத்தே நாவின் கிழத்தி நாடாள்" என்னும் உரை இவர்பால் பொய்யா மிற்று. மீனாட்சிசுந்தரம் பிள்ளைமீது,

"சிவபரஞ் சுடரின் இணையடி மலரைத்
திரிகர ணத்தினும் வழாது
பவமறத் தினமும் வழிபடு குணனன்
பகர்திரி சிரபுரத் தலவன்
சிவமுறு தென்சொல் ஐந்திலக் கணத்தில்
தெளிவுறச் சிறியனேற் கருளும்
நவமுறு புகழ்மீ னாட்சிசுந் தரமேவள்
நாண்மலர் அடிமுடி புனைவாம்."

என்னும் செய்யுளையும் பாடிப் பரவினர்.

குசேலோபாக்கியானம்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தேவராசபிள்ளைக்குப் பாடஞ் சொல்லும் நேரம்போக எஞ்சிய நேரங்களில் புராணங்கள் நூல்கள் முதலியனவைகளை இயற்றுவதில் ஈடுபட்டிருந்தார். இதனைப் பார்த்த தேவராசபிள்ளை தாமும் நூல்கள் இயற்றவேண்டுமென்று விரும்பினர். தெலுங்கு மொழியில் வழங்கிவந்த குசேலோபாக்கியானத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடுவதென்று முடிவு செய்தார். முதலில் அந்தத் தெலுங்குக் குசேலோபாக்கியானத்தைத் தமிழில் உரைநடையாக எழுதி வைத்துக் கொண்டார். பிறகு செய்யுளாகப் பாடத் தொடங்கினர். பாடல்களைப் பிள்ளையவர்களிடம் காட்டித் திருத்திக் கொண்டார். ஒரு பாடலைச்செய்து முடிப்பதற்குள் பல தடவை அடித்துத் திருத்தியும் கால்களைக் கிழித்தும் தேவராசபிள்ளை பலவாறு துடுமாறினர். இதனை யுணர்ந்த பிள்ளையவர்கள் எஞ்சிய பாகத்தைத் தாமே செய்து முடித்தார்.

சூதசங்கிதை

மேலும் பல இலக்கண இலக்கியங்களைப் பயின்றமை பின் தேவராசபிள்ளைக்கு கல்வியறிவு பிருதியாயிற்று. வேறொரு நூலைத் தாமேசெய்து முடிக்க வேண்டும் என்று எண்ணினார். சூத சங்கிதையைத் தமிழில் உரைநடையாக மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு செய்யுளாகப் பாடத் தொடங்கினர். இதனைப் பாடி முடிப்பதும் அவருக்குத் தொல்லையாகவே யிருந்தது. அடிக்கடி பாடல்களை இயற்றிக் கிழித்துக் கொண்டிருந்தார். செய்தியை உணர்ந்த பிள்ளையவர்கள் "இதனை என்னிடமே கொடுங்கள் நான் பாடி முடித்துவிடுகிறேன்" என்று கூறி வாங்கித் தாமே செய்து முடித்தார். இந்நூலும் இருவராலும் செய்யப் பெற்றுச் சிறப்பாக முடிவுபெற்றது.

"பல்லெலாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி காட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்,"

என்பது சூசேலோபாக்கியானம்.

"ஒற்றைமாக் கனிமெய் அடியவர்க் குதவி
உம்பர்க்கும் அரியனன் கதியை,
உற்றசீ ரம்மை யார்தொழில் நன்றென்
றுவந்தனப் பண்முகக் கலைகள்,
சொற்றவவ் வனத்தில் சொற்றதே மாவில்
தங்கிய தேங்கனி பலவும்,
கற்றவச் சைவர் பெரியவர் கொள்ள
நான்தொறும் நான்தொறும் உதிர்க்கும்."

என்பது சூதசங்கிதை.

சைப்மாது

பிள்ளையவர்கள் திருசிரபுரத்திற்கு மீள எண்ணினர். தமது நோக்கத்தைத் தேவராச பிள்ளைக்குத் தெரியப்

படுத்தினர். பிள்ளையவர்களைப் பிரியத் தேவராசபிள்ளை உள்ளம் வருந்தினர். பிறகு ஒருவாறு தெளிந்தார். வெண் பொற்காசுகள் (ரூபாய்) ஐயாயிரமும் பொன்னாடை முதலி யவைகளையும் பிள்ளையவர்கட்கு முன்வைத்துக் கீழே விழுந்து வணங்கினர். தேவராசபிள்ளையின் நன்கொடை பிள்ளையவர்கட்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. "நான் கைம்மாறு கருதாமலேதான் எல்லோருக்கும் கலை யறத்தைச் செய்கிறேன். தாங்கள் வழங்கும் இப்பொருளை அன்புக் காணிக்கையாகவே பெற்றுக் கொள்ளுகிறேன். சேலோபாக்கியானத்தின் பெரும் பகுதியையும், சூத சங்கிதையின் பெரும் பகுதியையும் நான் செய்திருந்தா லும் இவைகளில் என்னுடைய பெயரையுஞ் சேர்த்தல் வேண்டாம். இந்நூல்கட்கு மூலகாரணம் தாங்களே யாகையாலும் தாங்களே தொடங்கிப் பாடியிருத்தலாலும் இவைகளைத் தங்கள் பெயராலேயே வெளியிட்டுக்கொள் ளுங்கள்," என்று கூறி அவரிடம் அளித்துவிட்டுப் புறப் பட்டார். பிறகு இந்நூல்கள் தேவராசபிள்ளை பெயரால் அவர் இயற்றியதாகவே வெளியாயின.

வேறு நூல்கள்

பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திற்கு மீண்டபிறகு மேலும் தேவராசபிள்ளை நூலாராய்ச்சியில் சுறுபட்டுத் தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார். செய்யுள் பாடுந் திறம் நாளடைவில் வளர்ச்சியடைந்தது. வேறு பல நூல்களைத் தாமே முழுதும் செய்து பிள்ளையவர்கட்கு அனுப்பினர். பிள்ளையவர்கள் அந்நூலைத் திருத்திச் சிறப்புப்பாயிரமும் பாடியனுப்பினர். அடிக்கடி பிள்ளை யவர்கட்குக் கடிதமும் எழுதிக்கொண்டிருந்தார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கட்கு இவ்வாறு பெரும் பொருளுதவி

யைப் பாடங் கேட்டதன் பொருட்டுச் செய்தவர்கள் வேறு எவரும் இலர். பிள்ளையவர்கள் பெங்களூருக்குச் சென்றிருந்தபோது தம்முடைய மாணவர் குழாத்துடனும் குடும்பத்துடனும் சென்றிருந்தார். எல்லோருக்கும் உண்டி உறையுள் முதலிய எல்ல வசதிகளையுஞ் செய்தமைத்து நன்கு போற்றினர். பிள்ளையவர்கள் தேவராசபிள்ளையின் குணநலம், அடக்க ஒடுக்கம் முதலிய பெருங்குணங்களைப் பாராட்டியதுடன், "எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளரும், செல்வர்க்கே செல்வர் தகைத்து" என்னும் குறளைச் சுட்டிப் பணிவுடைமை தேவராசபிள்ளைக்குப் பிறிதொரு செல்வமாக விளங்கியதனைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

கூ0. மு. இராமசாமிக் கவிராயர்

தொற்றம்

பாண்டி வளநாட்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே சிவில்லிபுத்தூர்ப் பிரிவிலே சேற்றூருக்கு அண்மையில் உள்ள முகவூரிலே இராமசாமிக் கவிராயர் கொல்லமாண்டு கூ00கூ-ல் பிறந்தார். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுச் சிறந்த புலவராவர். முகவூர் கந்தசாமிக் கவிராயர் இவருடைய தமையனாராவார். மு. ரா. அருணாசலக் கவிராயர், சோ. சுப்பிரமணியக் கவிராயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகிய மூப்பெரும் புலவர்களும் இவருடைய அருமைமிக் கான்முளைகளாவர்.

வாழ்க்கை

இராமசாமிக் கவிராயர் சேற்றூர்ப் பெருநிலக்கிழார் சுந்தரதாசத் தேவர் அவர்களுக்கு ஆசிரியராக அமர்ந்து

சேற்றூர்ப் புலவராகத் திகழ்ந்தார். கற்பனை மிகுந்த செய்யுட்களை மிகவினைவாகப் பாடுவதில் இவர் ஆற்றல் மிக்கவர்.

பெருநிலக்கிழார் வருகை

அந்நாளில் கொண்டலொம்மு நாயக்கர் என்பவர் தேவாரம் பெருநிலக்கிழாராக இருந்தார். அவர் ஒருநாள் இராமசாமிக் கவிராயர் வீட்டிற்கு வந்தார். அவருடைய வருகை கவிராயருக்கு மிகுந்த மகிழ்ச்சியை யளித்தது.

"கவிதியங் கடலுமுத நாவலர்தந்
திருசெல்வ நான்முன் செய்த
தவபலந்தன் றுறைசூரு சாமியரு
ளால்வந்த தகைமை போலச்
சிவசமய பரிபாலன் தேவாசங்
கொண்டலொம்மு தீரன் இந்தப்
புவனமெலாம் புகழுவன்றன் புண்குடில்தன்
குடிலாகப் போந்த தாமே."

என்னுஞ்செய்யுளைப் பாடினர்.

அறச்சாலை மடையன் சூழ்ச்சி

சேற்றூரிலே அறச்சாலையில் சமையலாளாக இருந்த வேங்கடாசலம் என்பான் ஒருவன் இராமசாமிக் கவிராயர் வாக்கால் பாடல் ஒன்றுபெற விரும்பினன். பொருளைக் கொடுத்தாலும் கவிராயர் பாடமாட்டார். அவர் பொருளுக்கு அடிமை அல்லர். அன்புக்குத்தான் அடிமை. சமையல்காரன் இதனை நன்கு உணர்ந்தான். ஒருநாள் அறுவகைச் சுவையும் நன்கு அமையுமாறு கவிராயருக்காகத் தனிவிருந்து ஒன்றுசெய்தான். கவிராயரைக்கண்டு, "பெரியீர் தாங்கள் அடியேன் விருந்தை உண்ணவருதல் வேண்டுமென்று விரும்பியழைத்தான். வேங்கடாசலத்

தின் வேண்டுகோளை யேற்றுக்கொண்டு அறச்சாலைக்குச் சாப்பிடச்சென்றார். சாப்பாடு மிக அருமையாக இருந்தது. கவிராயர் வாக்கில் இருந்து அரிய செய்யுள் ஒன்று,

"செய்மணக்கும் வளச்சேறைச் சுந்தரதா
சேந்திரன்சத் திரத்தில் உள்ளன்
பைமணக்கச் செய்வேங்க டாசலமான்
நமக்களித்த பாய சத்தின்
செய்மணக்கும் ஒருகாதம் பான்மணக்கும்
முக்காதம் நேசித் துண்ட
கைமணக்கும் அறுகாதம் வாய்மணக்கும்
பன்னிரண்டு காதந் தானே."

என்று புறப்பட்டது. சமையலாளினுடைய எண்ணம் இனிது நிறைவேறியது.

தானாபதிக் கரையாளன்

ஒருநாள் சேற்றூர்ப் பெரிய கோவிலுக்குக் கவிராயர் சென்றிருந்தார். மரம் வெட்டி விற்கும் தாசரிராசா என்பவனும் கோயிலுக்குச் சென்றிருந்தான். தானாபதிக் கரையாளன் என்பவன் அங்குக் கோயில் அலுவல்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கவிராயர் வாக்கால் பாடல்கேட்க விரும்பினான். தாசரிராசாவுக்கு அறுவகைச் சுவையுடன் தட்டில் அமுது கொண்டுவருமாறு கவிராயருக்கு முன்னாலேயே பணியாள் ஒருவனை அனுப்பிவிட்டுக், கவிராயரை மடைப்பள்ளி உணவு கொள்ளுமாறு சீட்டுக்கொடுத்தான். இதனைப்பார்த்த கவிராயர்,

தாசரிக்குத் தட்டமுதும் சட்சாதி யோடாளும்
தேசமெய்க்கத் தந்தெனக்குச் சீட்டமுது—நேசமின்றித்
தந்தாய் வயதுகல்வி சாதியொழுக் கம்பழமை
இந்தவைந்தில் யாதைநினைந் தே

என்று பாடினர். தாளபதிக் கரையாளன் மறந்து சொல்லி விட்டேன் என்று ஒப்புரை உரைத்து விட்டுக் கவிராயருக்குச் சிறப்பாகச் சாப்பாடு கொண்டுவரச் செய்தான்.

ஆதினத்தில்

குருபூசை விழாவை முன்னிட்டுக் கவிராயர் திருவாவடுதுறை ஆதினத்துக்குச் சென்றார். அப்பொழுது சுப்பிரமணிய தேசிகர் என்பவர் பதினேழாவது பட்டத்தில் எழுந்தருளி யிருந்தார். அவர் திருமுன் இசைக்கச்சேரி நடைபெற்றது. திருவையாற்றுப் பாடகர்கள் இருவர் நீண்டநேரம் வீணை வாசித்தார்கள். அவர்களுடைய இசைக்கச்சேரி மிக இனிமையாக இருந்தது. தேசிகர் அந்தப் பாடகர்களைப்பார்த்து, "உங்களுடைய பாட்டைக் கேட்பதற்கு எட்டு ஆண்டுகள் ஆனாலும் எனக்கு விருப்பந்தான்," என்று கூறினர். இதனைக்கேட்டுக் கொண்டிருந்த கவிராயர்,

"மட்டுவரு டம்பொழிகா வுயர்துணைசச்
சுப்ரமண்ய வள்ள லாரி
தட்டுவரு டன்பலைகக்குந் திருவாயால்
உமதிடஞ்சங் கீதங் கேட்க
எட்டுவரு டம்பிரியம் எனச்சொலையாற்
றப்புலவீர் இனிமேல் உம்முன்
மெட்டுவரு டவுந்தெரியா திருப்பர்சங்
கீதங்களின் மிகவல் லோரே."

என்னுஞ் செய்யுளைப்பாடினர்.

கடையரிசி

கவிராயர் எட்டையபுரத்திற்குச் சென்றார். அங்கு மேலாளராக இருந்த இராமசாமிப் பாண்டியனும் கவிராயரும் யானைக்கொட்டாரம் பார்க்கச் சென்றனர். அப்பொழுது யானைப்பாகன் யானைக்கு அரிசிக் கவளம்

கொடுத்துக் கொண்டிருந்தான். மேலாளர் யானைப்பாகனைப் பார்த்து, "இந்த அரிசி எந்த அரிசி?" என்று கேட்டார். பாகன், 'கடையரிசி' என்று மறுமொழி பகர்ந்தான். அரிசி நல்லதாக இருப்பதைப் பார்த்த மேலாளர், கடையில் வாங்கப்பட்ட தாயினும் முதன்மையான அரிசி என்னுங் கருத்தை வைத்துக் கொண்டு "இது கடையரிசியல்ல" என்று கூறினார். பாகன், "கடையரிசிதான்" என்று மேலுமேலுங் கூறினான். இருவர் கருத்தையும் உணர்ந்த கவிராயர்,

"விடையரிசி வசம்புவையே பணிராம
சாமிமன்னா வியந்து நீசொல்
கடையரிசி அல்லவெனும் கருத்ததனைத்
தென்றல்வந்து கமழுந் தென்வெற்
புடையவனும் யானுமலைத் தவனென்றால்
ஏவரறிந் துரைப்பார் சொல்வாய்
நடையரிகள் உலவுமலர்ப் பொழில்குழுந்
தென்னினசை ராச ரேறே."

என்னுஞ் செய்யுளைக் கூறினார்.

ஈற்றடியைப் பாடியது

இராமநாதபுரத்தில் நவராத்திரி விழா எப்பொழுதுஞ் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். ஓராண்டில் விழா நடைபெற்றது. பாற்கர சேதுபதிமன்னர், பாண்டித்துரைத் தேவர், இராமசாமிக் கவிராயர் முதலானவர்களைத் தேர்வாளர்களாக ஏற்படுத்தி விழாவுக்கு வந்த புலவர்களின் அறிவுத்திறனை ஆராயச் செய்தார். அரசரே, "கடைக் கிணையோ ஈற்றையர்தங் கால்" என்று ஈற்றடிகொடுத்து ஏனைய அடிகளை நிறைத்துப் பாடுமாறு கூறினார். ஒருவராலும் முடியவில்லை. எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். இராமசாமிக் கவிராயர் பாற்கரசேதுபதியைப்

போந்து, "இனி, தேர்வாளர்களாக இருக்கும் நாங்கள் யாராவது இப் பாட்டை முடிக்கலாமா?" என்று கேட்டார். முடிக்கலாமென்று அரசர் மறுமொழி கூறினர். உடனே கணிராயர்,

"வெற்றிவேலைக் கையிலேந்தியுள்ளவனும் திருச்செந் தூரில் எழுந்தருளி யுள்ளவனும் விமலனும் ஆகிய முருகப் பெருமானை அன்போடு வழிபடுகின்ற பாற்கர சேதுபதி மன்னனே! இடபக்கொடியைத் தாங்கியுள்ள சிவபெருமா னுடைய அன்பனாகிய மிருகண்டு முனிவருடைய பின் னோக்கு மற்றவர்களுடைய பின்னோக்கள் ஒப்பாவார்களோ" என்னும் பொருளை அமைத்து,

"வேற்கரனைச் செந்தூர் விமலனை அன் பாற்பரவும்
பாற்கர சேதுபதி வேந்தே—மேற்கொள்
விடைக்கொடியோற் கன்பன் மிருகண் டுபிறங்
கடைக்கிணையோ மற்றவர்தங் கால்."

என்று பாடினர். உடனே அரசர் மிகுந்த வியப்படைந் தார். எழுந்து வந்து மிகுந்த விலையுள்ள பெரிய பொன் னாடையை எடுத்துக் கணிராயருடைய தோளிலே சாத்தி மிகவும் புகழ்ந்து கொண்டாடினர்.

சுந்தர விலாசம்

கணிராயர் ஊற்றுமலைக்குச் சென்றார். ஊற்றுமலைப் பெருநிலக்கிழார் தாம் புதிதாகக் கட்டிய சுந்தரவிலாசம் என்னும் மாளிகையைக் கணிராயருக்குக் காட்டினர். அம் மாளிகையைப் பார்த்த கணிராயர்,

"முத்தாவி லாசகல கடித்தவுயர்
திருமாலே முப்பு நந்தன்
பத்தாவி லாசமதால் வென்றவனைப்
பணியிதயா லயபண் பாதின்

சுந்தரவி லாசனிறை சுந்தரத்தைப்
பார்த்திடலத் துறக்க வாழ்வு
மந்தரவி லாசபலே யாவெனச் சொல்
வார்க்கும்விருப் பாகுந் தானே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

திருமணத்திற்கு வராத காரணம்

ஊர்க்காட்டுப் பெருநிலக் கிழாருக்குத் திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்திற்கு வரவேண்டு மென்று கவிராயருக்கும் அழைப்பு வந்தது. எக்காரணத்தாலோ கவிராயர் திருமணத்திற்குச் செல்லவில்லை. சிலநாட்கள் கழித்துச் சென்றார். "திருமணநாளன்று ஏன் வரவில்லை?" யென்று பெருநிலக்கிழார் உசாவினர். அதற்குக் கவிராயர், "தங்கள் திருமண வரையின் சிறப்பைப் பார்ப்பதற்காகத் தேவேந்திரன் ஆயிரங்கண்களை அடைந்தான். நான்முகன் எட்டுக்கண்களைப் பெற்றான். அறுமுகக் கடவுள் பன்னிரண்டு கண்களை அடைந்தார். எனக்கோ இரண்டு கண்களுக்குமேல் இல்லை. அதனால், என்னுடைய இரண்டு கண்களைக் கொண்டு தங்கள் திருமணச் சிறப்பைப்பார்ப்பதற்கு முடியாது என்று வராமல் இருந்துவிட்டேன்," என்னுங் கருத்தை அமைத்து,

"தனெயனச்சொல் லேவார்க்கருளும் சிவன்சேது
ராயசெய துரைகல் யாண
மணவரையின் சிறப்பதனைப் பார்ப்பதனுக்
காயிரங்கண் வான்கோன் உற்றான்
குணமுடைய பிரமனுமே எண்கணுற்றான்
பன்னிருகண் குமரன் உற்றான்
இனைவிழியாற் பார்ப்பதனுக் கடங்காதென்
றன்றுவரா திருந்தேன் யானே."

என்னும் பாடலால் மறுமொழி கூறினர்.

பாரதச் சொற்பொழிவைப் பாராட்டல்

கனிராயரின் மாணவரும் சேற்றூர்ப் பெருநிலக்கிழாரும் ஆகிய சுந்தரதாசுத்துரை திருக்குற்றாலத்திற்குச் சென்றார். அங்குச் சிலருடைய விருப்பப்படி பாரதச் சொற்பொழிவு செய்தார். அச் சொற்பொழிவு மிக அருமையாக இருந்தது. அச்சொற்பொழிவைப் பாராட்டிக் கனிராயர்,

"திடபுருட சிங்கம்எங்கள் சுந்தரதா
சேந்திரன்தான் செயும்பீட சங்கம்
வடவருவி என்பரது மேற்போமா
செவிக்கினிக்கு மாமும் நீர்சூழ்
புடவியெங்கும் தொனித்திடுமா பண்ணூலே
யாதாய்ந்த புலமீ ரென்றும்
உடலழுக்கை ஒழிப்பதன்றி அகத்தழுக்கை
ஒழித்திடுமா உரைசெய் வீரே."

என்று பாராட்டிப் பாட்டொன்று பாடினர். கனிராயர் இப் பாட்டின் நான்காவது அடியில் 'உடலழுக்கை' என்று உரைத்த அளவிலேயே மேற்கொண்டு கனிராயர் இந்த வகையாகத்தான் சொல்லப் போகிறார் என்பதை உணர்ந்து கொண்ட பெருநிலக் கிழார் 'சபாசு' என்று கூறி பாராட்டினர். பெருநிலக்கிழாரின் தன்னறிவு கனிராயருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. கனிராயர் மீண்டும்,

"முன்னமுப சங்கமன்னன் கவிகேட்டுச்
சமமைசப்பு மொழியும் லக்கம்
பொன்னனைச்சொல் லும்புலவீர் சுந்தரதா
கேந்திரனைப் போலப் பாவின்
பின்வருங்கற் பனையீதென் றறிந்தீசபா
சென்பதுண்டோ பேசுங் கால்இம்
மன்னரிரு வரிலெவரே தமிழ்த்திறமுற்
றுந்தெரிந்தோர் வழுத்து வீரே."

[உபசங்க மன்னன்-உடையார்பாளையம் பெருநிலக்கிழார்.]

என்று பாடினர்.

குதிரை தண்டகாடை பெறுதல்

பெரியகுளத் தாலுகா இரசக்க நாயக்கனூரைச் சேர்ந்த இராயப்பன்பட்டியில் இராயப்ப உடையார் என்னுஞ் செல்வர் ஒருவர் கவிராயர் காலத்தில் இருந்தார். அவர் அறிஞர்கட்குப் பரி பரிசில் வழங்கும் இயல்பினர். அவருடைய நல்லியல்பை அறிந்த கவிராயர் அவரைப் பார்க்கச் சென்று,

"அகத்தபத்ம நாபன்மன்று ளாடுமுதல்
செல்வமெலாம் அகத்து மெச்சக்
கனத்திகழக் கொடுத்தவென் றுரைசெய்வார்
அவர்தம்மைக் காணுங் காலைத்
தினங்கவிசொல் வேர்க்குமிகு வாசிகொடுப்
பாயுனைப்போல்செய் தாரா ரோவித்
தனம்பொருந்து ராயப்பேந் திரவுடையாய்
உனையவர்போற் பகரொ ணாதே."

என்னுஞ் செய்யுளைப்பாடினர். உடையார் கவிராயருக்கு ஒரு குதிரை கொடுத்தார். கவிராயருடன் அவருடைய மகனுகிய சுப்பிரமணியக் கவிராயருஞ் சென்றிருந்தார். அப்பொழுது அவர் சிறுவராக நிகண்டு முதலிய நூல்களைக் கற்றுக் கொண்டிருந்தார். உடையார் சுப்பிரமணியக் கவிராயருடைய அறிவுத்திறனையும் ஆராய்ந்து பார்த்துக் "குட்டிக் கவிராயர் குட்டிக்குதிரை கொள்க," என்று கூறிக் குதிரைக் குட்டி ஒன்றை வழங்கினர்.

நீதித்தலைவரிடம் வழக்கு

கந்தசாமிக் கவிராயர் இராமசாமிக் கவிராயருடைய தமையனர். இவர் தம்முடைய பொருள்களைக்கொண்டு முகவூரிலே நாயக்கர்மார் தெருவின் மேற்புறமக்கையில் ஒரு பிள்ளையார்கோயில் கட்டத்தொடங்கினர். கோயில் கட்டுவதை நாயக்கர்மாரிற் சிலர் தடுத்தனர். உடனே

கவிராயர் தடுத்தவர்கள்மீது வழக்குத் தொடுக்க எண்ணினார். அப்பொழுது சிவில்லிபுத்தூரிலே சரவண முத்துப் பிள்ளை என்பவர் தாசில் அதிகாரமும், நீதித்தலைவர் அதிகாரமும் பெற்றிருந்தார். கவிராயர் சரவணமுத்துப் பிள்ளை யிடஞ் சென்று,

"மன்னவனின் திருமுகத்தைதக் கண்டமைட
வார்கரத்து வலோபோ காமல்
முன்னமொரு தடையிடுவ தியற்கையன்றி
ஒருதருமம் முடிக்கும் போது
பின்னமுறத் தடையிடுதல் நின்னதிகா
ரத்திறமுண்டேல் பிறர்யார் காப்பார்
பன்னுதமிழ் அருணையனி சரவணமுத்
தேந்திரசம் பனடி மானே."

"அரக்கரைவென் றவனெனச்சொல் சரவணமுத்
தேந்திரனின் னதிகா ரத்தில்
இரக்கமில்லா தவர்களுக்குஞ் செல்வருக்குங்
கலகமுண்டாரம் இதுவல் லாலேலார்
வருக்கொருவர் கலகமியற் றுதபடி
ஒடுக்கியதை மறந்து செய்யும்
குரக்குமனத் தனையொடுக்க உத்தரவு
கொடுத்துச்சீர் கொன்ற வாயே."

என்று இரண்டு செய்யுட்கள் மூலம் தெரியப்படுத்திக் கொண்டார். இதனைக் கேட்ட சரவணமுத்துப்பிள்ளை, "எதற்காகத் தடுக்கிறார்கள்? தடுக்கவேண்டிய காரணம் என்ன" வென்று உசாவினர். அதற்கு மறுமொழியாக,

"இக்கடவுள் முகந்தனங்கல் அடிக்கடிதாம்
பார்ப்பதனுக் கெட்டா தென்றே
தக்கதறிந் தண்டிபெரு வயிறுநிரம்
பாதென்றே சந்தி யெல்லாம்

மிக்கவந்தம் வாகனத்தால் சமதகத்தைதத்
தூளைப்பரென்றே விலக்கு தற்கே
அக்கரையுற் றனர்தவஞ்சேர் சரவணமுத்
தேந்த்ரமன்ன அறைகு வாயே.”

என்னுஞ் செய்யுளைக் கூறினர். இதனைக் கேட்ட சரவண முத்துப்பிள்ளை சகைதத்துக் கோயில்கட்டுவதைத் தடுத்தவர் களை யழைத்துக் கண்டித்தார். அதன் பிறகு கோயில் திருப்பணி இனிது நிறைவேறியது.

குறவஞ்சி

இவரும் இவருடைய தமையனாராகிய கந்தசாமிக் கவி ராயரும் சேற்றூர்ப் பெருநிலக்கிழார் முத்துச்சாமித் தளை யின்மீது குறவஞ்சி என்னும் நூல் ஒன்றுபாடி அரங்கேற் றஞ் செய்தனர். தளை இருவருக்கும் நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்ததோடு இருவரையும் சிவிகையில் வைத்து சகர்வலமுஞ் செய்வித்தார். அப்பொழுது அங்குத் தாணதிபதியாக இருந்த சுந்தர மகாலிங்கம் பிள்ளை என்ப வர் சிறிது தொலை சிவிகையைச் சுமந்தார். அப்பொழுது இராமசாமிக் கவிராயர்,

“செய்தாங்குஞ் சேறைத் தளைமுத்துச் சாமிநிங் கேறுமைச்சன்
மெய்தாங்கு சொற்சுந் தரமகா லிங்க விவேகனென்று
மைதாங் குலகில் பெருங்கீர்த்தி தாங்கிட வாணர்சிவி
கைதாங்கி மிக்க னைத்தாங்கி னனெந்தக் காலத்துமே.”

என்று பாடினர்.

இறுதிக்காலத்தினும் பாவியற்றும் வன்மை

இராமசாமிக் கவிராயர் அகவைமுதிர்ந்து இறுதிக் காலத்தை யெருங்கியவராய் இருந்தார். இதனையுணர்ந்த பாண்டித்துரைத் தேவர் இராமசாமிக் கவிராயரைப் பார்ப் பதற்காகக் கவிராயருடைய இல்லத்திற்குச் சென்றார். கவி

ராயரின் நிலையைக் கண்டு உள்ளம் வருந்தினார். அப்பொழுது கவிராயர்,

"முன்பாண்டிப் புரவலனும் சங்கம்வைத்தோர்
சாமமதின் முடுக்கிவிட்டான்
இன்பாண்டித் துரையோசங் கப்புலவர்
தனிகரென இருத்தற் கெண்ணித்
தன்பாண்டில் தனைநடத்திப் பொருள்தேடிக்
கொண்டுவந்து தந்து காத்தே
என்பாண்டி எனுங்கடவுள், திருவருட்செல்
வமும்எய்தி இருக்கின் றானே."

என்னுஞ் செய்யுளைப் பாடினார். இதனைக்கேட்ட பாண்டித் துரைத்தேவர் மகிழ்ச்சியடைந்தார். "நான் சொல்லுகிற சொல்லைக் கருதாது கருத்தை மட்டும் நோக்க வேண்டும். 'மழைக்கா லிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது' என்னும் பழமொழி தங்களிடத்தில் நன்கு பொருந்தியிருக்கின்றதென்றார்.

---

௩௯. வீர. லெ. சின்னையச் செட்டியார்

தொற்றம்

செட்டிமார் நாட்டிலே தேவகோட்டையிலே சின்னையச் செட்டியார் பிறந்தார். இவர் இளைஞராயிருக்கும் போதே, வன்தொண்டர் என்னும் நாராயணச் செட்டியார் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய பலரிடங் கல்வி கற்றுச் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். காரைக்குடி சொக்கலிங்கையா, வேம்பத்தூர்ப் பிச்சுவையர் போன்ற பலர் வன்றொண்டரிடம் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டுக் கொண்டிருந்தனர். சின்னையச் செட்டியாரும் வன்தொண்டரிடத்தில் கல்வி கற்கத் தொடங்கிப் பல ஆண்டுகள் இலக்கண இலக்கியங்களையும் புராணங்களையும் ஐயந்திரி

பறக் கற்றுணர்ந்தார். சின்னையச் செட்டியாருடைய புகழ் ஆசிரியராகிய வள்ளதொண்டருடைய புகழைப்போல் எங்கும் பரவியது. மதுரையில் தமிழ்ச் சங்கத்தை அமைத்த பாண்டித்துரைத் தேவரும் சின்னையச் செட்டியாருக்கு நண்பராஞர்.

ஐயங்காருக்கு நற்சான்று

செட்டியார் நல்ல புலவராகப் புகழுடன் விளங்கியிருந்த காலத்தில் ரா. இராகவ ஐங்கார் இவரிடம் தமது புலமையைக் காட்டி நற்சான்று பெற்றிருந்தார் என்பது, "சேது சம்ஸ்தான மகாவித்துவான். ரா. இராகவ ஐயங்கார் அவர்கள் 1906 முதல் 1911 வரை தேவகோட்டையில் பெரிய மைனர் அருணாசலம் செட்டியாருக்குத் தேவாரம், திருவாசகம் முதலியன சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்திலேயே பெரும்புகழ் பெற்றிருந்த சின்னையச் செட்டியார் அவர்கள் கொடுத்திருந்த சான்றிதழ் ஒன்றிலேயே இராகவ ஐயங்கார் அவர்கள் தேவகோட்டையில் பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டது. இராகவ ஐயங்கார் அவர்கள், சின்னையச் செட்டியார் அவர்கள் சான்றிதழையும், பூண்டி அரங்கநாத முதலியார் அவர்களுடைய நற்சான்றிதழையுந்தான் பெரிதும் மதித்துத் தம் இறுதிக் காலம் வரை பேணி வைத்திருந்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது," என்று செட்டிநாடுந் தமிழும் என்னும் நூலில் அதன் ஆசிரியர் எழுதியிருப்பதனைப் பதிப்படுகிறது.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் காண்டல்

சின்னையச் செட்டியார் தம் ஆசிரியரின் ஆசிரியரான மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைத் தம் ஆசிரியரோடு திருவாவடுதுறைக்குச் சென்று பார்த்தார். சின்னையச்

செட்டியாரின் பண்புகள் பிள்ளையவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இவரைப்பார்த்ததனால் பிள்ளையவர்கட்கு மகிழ்ச்சியும் உண்டாகியது. உடனே பிள்ளையவர்கள்,

"வண்தொண்டன் வார்த்தை மரீஇயென் செவிவழிப்புக்
தின்றொண்ட நீயமர்ந்தாய் என்னிதயத்—தின்றொண்டன்
அல்லனென வோவெளிவந் தாய்சிற் கயேலேல
செல்லவிடு வேன்சொல்புறத் தே."

என்று இனிய வெண்பா ஒன்றைப் பாடினர்.

இவர் இயற்றிய நூல்கள்

திருவொற்றியூர்ப் புராணம், குன்றக்குடிப் பிள்ளைத் தமிழ், நகரத்தார் வரலாறு, பிரபஞ்சபந்தகம், தேவைத் திரிபந்தாதி முதலியன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவருடைய நூல்கள் சொன்னயம் பொருணயம் அமைந்து சங்ககால நூல்களைப்போல் சிறந்து விளங்குகின்றன. இவருடைய தேவைத் திரிபந்தாதியை ரா. இராகவ ஐயங்கார் இவரிடம் பாடங்கேட்டுத் தெளிந்ததுடன் அந்நூலைப் பதிப்பித்தும் பாராட்டிப் பேசினர். அந்நூலைத் தாமும் பாடங்கேட்க விரும்புவதாகச் சொல்லியே மு. இராகவ ஐயங்காருக்கு, ரா. இராகவ ஐயங்கார் பாடமுஞ் சொன்னர்.

இறுதி

இவ்வாறு சிறந்த நூலாசிரியராகவும் அறிஞராகவும் விளங்கியிருந்த இவர் காலமான ஆண்டு முதலியன விளக்க மாகவில்லை.

௩௨. இராமசாமி ஐயர்

தோற்றம்

இசைப் புலமையில் இசைமிகப் பெற்று இலங்கிய மகா வைத்தியநாத ஐயருக்கு முன் பிறந்தவராகிய இவர் தம் உடன் பிறந்தாராகிய வைத்தியநாத ஐயரோடு கல்வியைப் பயிலத் தொடங்கினார். இசைப் பயிற்சி, தமிழ் நூற் பயிற்சி, வடநூற் பயிற்சி ஆகியவைகளை இருவரும் பெற்றனர். இவர் தம்முடைய உடன் பிறந்தவராகிய வைத்தியநாதையரை எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் அவரை உடன் வைத்துக்கொண்டே இருந்தனர். இவருடைய இசைப் பெருமையைப் பார்க்கினும் இவருடைய இளவலாகிய வைத்தியநாதையருடைய இசைப் பெருமைதான் மிகவுஞ் சிறந்தோங்கியது. ஆயினும் வைத்தியநாதையர் தம் தமையனாரிடம் பணிவாகவே நடந்துகொண்டார்.

செய்யுள் இயற்றுதல்

தமிழ்ப் பயிற்சியை மிகுதியாகப் பெருக்கிக் கொண்ட இவர் செய்யுள் இசைப்பாட்டு முதலியவைகளை இயற்றத் தொடங்கினார். நினைத்த பொருளை அமைத்து விரைவாகப் பாடலை இயற்றலானார். இவர் தம்முடைய தம்பி வைத்தியநாதையரோடு புதுக்கோட்டைக்குச் சென்று அங்குத் தங்கியிருந்தார். அப்பொழுது மழவராய னேந்தலில் இருந்து வந்த தமிழறிஞர் ஒருவர் புதுவை யரசர் முன்னிலையில் அவதானஞ் செய்தார். அதனைப் பார்த்து மகிழ்ந்த இவர் இசைப்பாட்டு ஒன்றை இயற்றி அவைக்களத்தில் பாடினார். அவையோர் இவருடைய செய்யுளாற்றலையும் இசையாற்றலையும் பாராட்டிப் போற்றினார்கள்.

பெரியபுராண இசைப்பாட்டு

இவர் நன்றாகச் செய்யுள் இயற்றும் ஆற்றலும் இசையிலக்கணத் தேர்ச்சியும் உடையவராக இருந்தபடியால் பல

அன்பர்கள் பெரியபுராணத் தொண்டர்கள் வரலாற்றை இசைப்பாட்டாக இயற்றினால் திருத்தொண்டர்கள் வரலாறு உலகத்திலே நன்றாகப் பரவும் என்று தங்கள் நோக்கத்தைத் தெரியப்படுத்தினார்கள். சிவகதை செய்வதற்கு இத்தகைய இசை நூல்கள் மிக உதவியாக இருக்குமென்று இவரும் எண்ணினார். பெரியபுராணத்தை இசைப்பாட்டாகப் பாடித் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் கொண்டுபோய் அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய பெரியோர் களின் முன்பு அரங்கேற்றினார். இவரும் இவருடைய இளவலாகிய மகாவைத்தியநாதையரும் இசையோடு பாடி யதைக் கேட்டு அவையினர் யாவரும் மன மகிழ்ந்து உள்ளம் உருகினார்கள். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்,

"நாடுவா னவர்முனிவர் தொழுதேத்த
ஆனந்த நடன மன்றுள்
ஆடுவான் அடியெடுத்துக் கொடுப்பவுயர்
சேக்கிழார் அருளிச் செய்த
பாடுவான் புராணத்தை எழுதுவார்
வாயாரப் படிப்பார் இன்பம்
நீடுவான் சிந்திப்பா ரானார்கள்
ஆனாலும் நிலத்து வாழ்வார்." (க)

"அடியெடுத்துக் கொடுத்தவன்போல் தண்ணுமையா
திகள்தழுவி அளவா இன்பம்
படியெடுத்துக் கொளப்புரியா விதமுணர்ந்தாங்
கதினுளநாற் பதமுங் கண்டோர்
கொடியெடுத்த நிறத்தவன்வாழ் பதமுதற்பல்
பதங்கடத்து குணரும் வேட்கக்
கடியெடுத்து வீசுபல பதஞ்செய்தான்
அனையவன்யார் கரைவாய் என்னின்." (உ)

"பொன்னிவளந் தருநாடு புரிதவத்தால்
வையையெனும் புரிதோன் றிற்று
மின்னியது செய்தவத்தால் பஞ்சாத
மாமறையோன் விருப்பின் வந்தான்
மன்னியவன் புரிதவத்தால் மறைநான்கும்
எனவுதித்த மைந்தர் தம்முள்
பன்னியது தன்னெதனைத் தன்னியல்பின்
உணருமொரு பான்மை மேயோன்." (கூ)

"சாம்பமூர்த் திக்கினையான் என்பதலால்
இனையான்வத் தமிழ்வல் லோர்க்கும்
மேம்படுமா வயித்தியநா தனுக்குமூத்
தானென்று விளம்பல் போல
ஆம்பலவாம் இசையினுமூத் தாமெனுழுக்கம்
பலதிரண்டால் அன்ன மெய்யான்
ஓம்பல்புரி இராமசா மிச்சுகுண
மாமறைதேர் உயர்ச்சி யோனே. (சு)

"ஓங்குபுகழ் இராமசா மிச்சுகுண
மறையவன்பாட் டுவந்தான் வாமம்
தாங்குகற்றே கையுமருட்செய் பிரமணிய
குருவெனுஞ் சேய் தானு மேவ
வீங்குதுறை சையினுரு மெய்கண்டான்
சந்தானம் விளங்க மேயோன்
பாங்குபுனை போருளம் பலவான
தேசிகன்னெம் பரமன் தானே." (எ)

என்னும் ஐந்து பாடல்கள் சிறப்புப் பாயிரம் வழங்கினர்.

பார்வதி வரலாற்று இசைப்பாட்டு

திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் விருப்பப்படி, மகா வைத்தியநாதையர் திருவிடை மருதூர் திருக்கோயிலில் பார்வதி திருமண வரலாற்றைக் கதையாக நடத்தினர். பிறகு ஆதீனத் தலைவருடைய விருப்பப்படி இவர் அதனை இசை நாடகப் பாடி முடித்தார்.

இரங்கற் பாக்கள்

இவருடைய இளவலாகிய மகாவைத்தியநாதையர் தாம் தம் தமையனாரைவிட இசையிற் சிறந்த சீர்த்தி பெற்றிருந்தும் தமையனாராகிய இவரிடம் அன்பாகவும் பணிவாகவும் இவருடைய குறிப்பறிந்தும் நடந்து வந்தார். இசையரங்கைப் பொறுத்த எல்லாவகையான ஏற்பாடுகளையும் இவரே நடத்தினார். கிடைக்கிற நன்கொடைப் பொருளை யெல்லாம் அவர் இவரிடமே கொடுத்துவிடுவார். 1893-ஆம் ஆண்டில் மகாவைத்தியநாதையர் காலமானபோது இவர் பெரிதும் வருந்தினார். பல இரங்கற்பாக்களைப் பாடினார்.

"கானதூற் கற்பகமே! அறுபத்து
மூவர்முதற் கடவுட் காதை
ஆனசீர் வளந்தருசிந் தாமணியே!
அமுதடியார்க் களிக்குங் காம
தேனுவே! எனக்கிளைய சிங்கமே!
என்னுயிரே! சிவமெய்ஞ் ஞான
பானுவே! கலைக்கடலே! உனைப்பிரிந்திங்
காற்றகிலேன் பாவி யேனே. (க)

உயிர்இழந்த காத்திரம்போல் ஒளிஇழந்த
நேத்திரம்போல் உயர்செஞ் சாலிப்
பயிரிழந்த பண்ணையைப்போல் மதியிழந்த
மங்கையைப் போல் படர்கொள் கொம்பின்
இயலிழந்த இளங்கொடிபோல் இறகிழந்த
பறவையைப்போல் இறைவன் காக்கும்
செயலிழந்த குடிகளைப்போல் உனையிழந்திங்
கிடர்உழந்தேன் தீமை யேனே." (உ)

என்பன அவற்றுள் இரண்டு பாடல்கள். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலமான செய்தியை அறிந்தவுடன் இவர்,

"கும்பனெனில் அன்னேன் குறியவனும் வானுலகில்
கம்பனெனில் அன்னேனுங் கம்பனும்—அம்புவியில்
வேறுளார் வேறுளராம் மீனாட்சி சுந்தரனின்
கூறெவனென் றேயகன்றாய் கூறு."

"எனைவைத்தி எனைவைத்தி எனப்பதங்கள்
இடையிடைநின் றிரந்து வேண்ட
இனிவைப்பாம் இனிவைப்பாம் பொறுத்திடுமின்
பொறுத்திடுமின் என்று கூறி
னினைவுற்ற ஒருகடிகைக் களவில் கவித்
தொடைதொடுத்து நிமலர் பூணப்
புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்
ளலைப்போல்வார் புவியில் யாரே."

என்னும் பாடல்களைப் பாடி உள்ளம் வருந்தினர்.

இறுதி

மகாவைத்தியநாதையருக்குப் பின்னுஞ் சில காலம் இவர் வாழ்ந்திருந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

இயற்றிய நூல்கள்

1. திருச்செந்தில் சந்த விருத்தம்
2. திருச்செந்தில் யமக வந்தாதி
3. பெரிய புராணக் கீர்த்தனை
4. பார்வதி சரித்திரக் கீர்த்தனை.

முதலியன இவரியற்றிய நூல்கள்.

66. தேவிபட்டினம் முத்துச்சாமிப் பிள்ளை

தோற்றம்

பாண்டிநாட்டில் தேவிபட்டினம் என்னும் ஊரில் முத்துச்சாமிப் பிள்ளை பிறந்தார். கல்வியை வரன் முறையாகக் கற்றுச் சிறந்த புலமையடைந்தார். அவதானங்கள் செய்வதிலும் வல்லவர் என்றும், அவதானங்களை எண்ணிக்கை யில்லாமற் செய்தபடியினல் "கணக்கிலவதானி" என்றும் (கணக்குகளை விரைந்து பலரும் வியக்குமாறு போட்டுக் காட்டியபடியினல் என்றுங் கூறுவர்) பெயர் பெற்றுச் சிறந்து விளங்கினர். திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியவர்களுடைய காலத்தில் வாழ்ந்திருந்தவர்.

வாழ்க்கை

இவர் சிவப்பதிகள் தோறும் இறை வழிபாட்டிற்காகச் செல்லுவதையும் செல்லுமிடங்களி லெல்லாம் ஒவ்வொரு வெண்பாப் பாடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ் வெண்பாக்கள் பதியின் பெயரையாவது இறைவன் பெயரையாவது கொண்டு, திரிபிலேலும் யமகத்திலேலும் அமைந்து சிறப்புடன் விளங்குவனவாம்.

"திருப்பனந்தாள் முக்கட் சிவக்கனியே நின்பால்
விருப்பனந்தாள் போற்றமுத விந்தே—ஒருப்பனந்தாள்
செங்கைகளங் காதின்னே தீனவிருட் காதின்னே
சங்கைகளங் காதிமுத்தி தா.

வீழி மிழலையுறை வேதியனே முன்னெருமன்
வீழி மிழலை மின்மேரு வேணியனே—வீழியின்முன்
மாத்திரையொன் றற்றமலர் மால்புனைதாட் பூபதியென்
மாத்திரைதந் தென்மவமோய் மாற்று."

என்பன அத்தகைய வெண்டாக்களுள் இரண்டாம். இவ் வாறு இவரால் இயற்றப்பெற்ற தனிப்பாடல்கள் பல. அவற் றுள் ஒரு சில பாடல்களைத் தவிர மற்றவை மறைந்து போயின.

பெரும் புலவரைக் காண்டல்

முத்துச்சாமிப் பிள்ளை கும்பகோணத்திற்கு அண்மை யில் உள்ள பட்டீச்சுரம் என்னும் ஊரில் அங்காளில் சிறந்து விளங்கிய சுமச்சிவாயபிள்ளை என்னும் செல்வரால் ஆதரிக் கப்பெற்று அங்கு நீண்டகாலம் தங்கியிருந்தார். அங்காளில் இவ்வாறாகவிளங்கிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை பட்டீச்சுரஞ் சென்றார். முத்துச்சாமிப் பிள்ளை மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுடைய கல்வியாற்றல், செய்யுளியற்றுந்திறன், அடக் கம், பொறுமை முதலிய அரிய குணங்களைக் கண்டு வியந் தார். சிலநாள் அவரோடு அளவளாவியிருந்தார்.

திராமலிங்க அடிகள் தொடர்பு

முத்துச்சாமிப் பிள்ளை ஒருநாள் மதுரை மடம் ஒன் றில் திருச்சிற்றம்பல ஞானியார் என்னும் பெரியார் ஒரு வரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளிடம் இருந்து மேற் படி திருச்சிற்றம்பல ஞானியார்க்கு ஒரு கடிதம் அஞ்சல்வழி யாக வந்தது. ஞானியார் அக்கடிதத்தைப் படித்துப்பார்த்து விட்டு, முத்துச்சாமிப் பிள்ளையிடம் காட்டினர். அக்கடிதம் பொதுவான முறையில் அமைந்திருந்தது. அதனைப் படித் துப்பார்த்த முத்துச்சாமிப் பிள்ளை, "பெரிய மேதாவியான இராமலிங்க அடிகளார் எழுதிய கடிதத்தில் இலக்கண இலக்கியச் சிறப்பு ஒன்றும் இல்லையே" என்று பதற்றமாகக் கூறினர். இதனைக் கேட்ட திருச்சிற்றம்பல ஞானியார், "வள்ளலார் உரையாடும்போது சிந்தனை இலக்கணந்தான்

இந்த உலகில் பரவியிருக்கின்றது," என்று கூறினார். இதனைக் கேட்ட முத்துச்சாமிப் பிள்ளை, "அவ்வாறாயின் இலக்கணச் செறிவு பொருந்திய கடிதம் ஒன்றை அவர்களிடமிருந்து வரவழையுங்கள் பார்ப்போம்," என்று கூறினார்.

ஞானியார் இலக்கணச் செறிவுள்ள கடிதம் ஒன்று எழுதியனுப்ப வேண்டுமென்று தமது நோக்கத்தை வள்ளலாருக்குத் தெரிவித்துக் கடிதம் ஒன்று எழுதினார். கடிதத்தைப் பார்த்த வள்ளலார், தமது வழக்கப்படி, "பிச்சு" என்று கூறி அக்கடிதத்தைப் போட்டுவிட்டனர். அங்கிருந்தவர்கள் அக்கடிதத்தை எடுத்துப் பார்த்துவிட்டுத் தொழுவூர் வேலாயுத முதலியாரிடங் கொடுத்துத், "திருச்சிற்றம்பல ஞானியார் விருப்பப்படி இலக்கணக் கடிதம் ஒன்று எழுதவேண்டும்," என்று வேண்டிக்கொண்டனர். உடனே தொழுவூர் முதலியார் கடிதம் எழுதலானார்.

இலக்கணக் கடிதம்

அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணை இலக்கண வியனடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை

உணர்ந்தோரானியல் வகையவின்ன வென்ற வற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழியடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு.

பொய்யற்கெதிர்சார்புற்றமூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த ககன நீரெழிலென்றும் வான் வழங்கு பண்ணிகாரமென்றும் நாகச்சுட்டு மீனென்றும் வேறுகுறிப்பதொன்று.

அண்மைச் சுட் டடுத்த வேழாவதன் பொருண்மையும்மையடுத்த பல்லோர் வினாப் - பெயர்ப்பொருள் குறிஞ்சியிறைச்சிப் பொருளொன்றனோ புணர்ப.

சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல்யாது. இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மையாறாவதன் பொருட்டாக்கினார்க்குய்த்த கற்பியலதிகரிப்பின் வருந்தலைமகட் பெயரவிரண்டனோ டிரண்டிரண்டுகக் கழிவிலைப் பெயரவு மாகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத்தனவாகக் கலம்பகச் செய்யு ளுறுப்பாற் சிறத்தும்.

இருவகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட்டுறுப்பிற் குறித்தவைம்பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற்பெயரவுயிர்ப்பெயராக வெதிர் காலங் குறித்து நின்றது.

சில வினைச்சார்பான் விலங்கு சூடியவரைவில் வெளியாம். இதனோடீரிரு வகைப்பட்ட வோர்சார் புது நிலஞ் செலவுய்த்தனம். வேண்டுழி வேண்டியாங் குய்க்க. மற்றைய பின்னர் வரைதும். இற்றே விசும்பிற் கணைச்சலம்.

பார்வதிபுரம்
சுக்கில-௵
துலா ரவி ௨௭௨

இங்ஙனம்
நங்கோச்சோழன் வீரமணிச்
சூடியார் திருவாணைப்படிக்கு அடிமை
தொழுவூர் — வோலாயுதம்.

இவ்வாறெழுதப்பட்ட கடிதம் திருச்சிற்றம்பல ஞானியார்க்கு அனுப்பப்பட்டது. ஞானியார் படித்துப்பார்த்துவிட்டு முத்துச்சாமிப்பிள்ளையிடங் கொடுத்தனர். பெரும் புலவராக விளங்கிய முத்துச்சாமிப்பிள்ளைக்கே பொருள்

தெளிவாக விளங்கவில்லை. அவர் ஞானியாரைப் பார்த்து, "வேண்டுமென்று ஓர் அறிஞர் பூட்டுப் போட்டால் அந்த அறிஞர்தாம் திறக்கவேண்டும்," என்றார். இதனைக் கேட்ட, ஞானியார், "அவ்வாறுயின் நீவிர் ஒரு பூட்டுப் போடும்," என்றனர். உடனே முத்துச்சாமிப்பிள்ளை,

"தகரவரிக் கூந்தலர்கா மாதிமுன்நீர் தாமும்
தரவரி நாலைந்து சாதும்—தகரவரி
மூவொற்றி யூர்பொருளை மூன்றுமங்கை யேந்தலமொரு
சேவொற்றி யூரனைச் செப்பு."

என்று ஒரு செய்யுளை இயற்றினர். ஞானியார் இதனை விங்க அடிகட்கு அனுப்பினர். அதற்கு அடிகள் பின்வருமாறு உரையெழுதியனுப்பினர்.

தகரவரி - மைச்சாந்தணிந்த, கூந்தலர் - மயிலை யுடைய பெண்கள், காமாதி முன்நீர் - காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குணத்தில் சூழ்ந்தும்படியான, தகவரி நாலைந்து - 'த' என்னும் எழுத்து வரிசையில் நான்காவது ஐந்தாவது எழுத்துக்களை (தி, து) சாதும் - ஒழிக்கும், தகரவரி மூவொற்று - த், க், ர், இ - இகர எழுத்து, ஊர் பொருளை மூன்றும் - சேர்ந்தபொருள் மூன்றும் திகிரி, த்+இ, க்+இ, ர்+இ, தி, கி, ரி, இந்த திகிரி என்னும் சொற்குப் பொருள் மூன்று; திகிரி - மலை, சக்கரம், மூங்கில் - சண்டுமலை கோவர்த்தன கிரியைத் தாங்கினது, சக்கரம் - கையில் ஏந்தியுள்ளது, மூங்கில் - புல்லாங்குழல், ஆகிய இம்மூன்றையும். அம்கை ஏந்தும் - அழகிய கையில் ஏந்தும், ஒரு - ஒப்பற்ற. சே - (திருமாலாகிய) காளையை உடைய, ஒற்றியூரனை - திருவொற்றியூர்க் கடவுளை, செப்பு - போற்று. (திருவொற்றியூரனைப் போற்றினால் காமம், வெகுளி மயக்கம் நீங்கும்.)

இவ்வுரையால் முத்துச்சாமிப் பிள்ளையின் கருத்தை அடிகளார் வெளிப்படுத்தியதுடன் முத்துச்சாமிப் பிள்ளைக்கு விளங்காத மற்றுமொரு சிறப்புரையையும் எழுதியனுப்பினர்.

வள்ளலார் உரையைக் கண்ட முத்துச்சாமிப்பிள்ளை மிகுந்த வியப்படைந்தார். உடனே புறப்பட்டு அடிகள் எழுந்தளியிருந்த ஊருக்குச் சென்றார். வள்ளலார் எழுந்தருளிய தெருவின் கோடியில் வண்டியை விட்டு இறங்கினர். தெருவில் வெயிலில் விழுந்து திக்கு நோக்கி வணங்கிக்கொண்டே வந்து வள்ளலார் திருமுன் வீழ்ந்து நமஸ்காரமானர். வள்ளலார் அவருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்யச் செய்து உளந் தெளிவடையச் செய்தார். முத்துச்சாமிப் பிள்ளை அடிகளாரைப் பார்த்து, வணங்கி, "எனது குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும். தங்களை ஒரு புலவர் என்று எண்ணிவிட்டேன். தாங்கள் ஒரு பெரிய மெய்ஞ்ஞானியென்பது பிறகுதான் விளங்கிற்று" என்று கூறி அடிகளாரின் தொண்டர்களில் ஒருவரானார்.

இறுதி

இவர் காலமான ஆண்டு திங்கள் நாள் முதலியன விளக்கமாகவில்லை. இவர் செய்த நூல்கள் சில பதிப்பாகாமலே மறைந்துபோனதாகத் தெரிகிறது.

6. கருப்பையாப்பாவலர்

தோற்றம்

மதுரைமாவட்டத்தைச் சேர்ந்த மேலூர்த்தாலுகா கொட்டாம்பட்டியிலே, 1864-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் ஒன்பதாம்நாள் பிறந்தார் கருப்பையாப்பாவலர். இவருடைய தந்தையார் பெயர் மருதக்கொத்தனர். இவர் தோன்றிய குலம் யாதவர் குலம்.

கல்வி

இவர் பள்ளிக்கல்வியைப் பாதுகாக்கற்று முடித்தபின் அறிஞர் சிலரை அடுத்துப் புலமைக்கல்வியைக் கற்றுச் செய்யுள் பாடுந் திறமைடைந்தார். செல்வர்கள்மீது செய்யுட்கள் பல பாடினர்.

முறையூர் சண்முகம் செட்டியார்

அந்நாளிலே முறையூரிலே சி. சண்முகம் செட்டியார் என்பவர் சிறந்த வள்ளலாக விளங்கியிருந்தார். செட்டியாரின் வள்ளன்மையை உணர்ந்த இவர் அவர்மீது பாக்கள் பல இயற்றிக்கொண்டு போய்ப் பார்த்தார். செட்டியார் பாவலரை வரவேற்றுப் போற்றினர். தம்மிடமே தங்கியிருக்குமாறு பணித்தார். பாவலரும் அவ்வாறே செட்டியாரோடு தங்கிச் செட்டியார் முன் நூல்கள் பலவற்றைப் படித்துணர்ந்தினர். பல இடங்கட்குஞ் சென்று தமது புலமையைப் புலப்படுத்தி நன்கொடைகள் பெற்றார்.

குன்றக்குடியில்

பாவலர் முருகப்பெருமானைப் போற்றி வழிபடுவதற்குக் குன்றக்குடிக்குச் சென்றார். அப்போது,

"குன்றுக் குடியாய் குமரா குகனென்னைக்
குன்றுக் குடியாயாட் கொண்டருள்வாய்—அன்றுலகம்

மன்றுடி னர்க்கு வருகுருவே யாலுனின்பால்
மன்றுடி னேன்கைவிடா மல்.''

என்னும் வெண்பாவைப் பாடினர்.

திருப்பரங்குன்றத்தில்

திருப்பரங்குன்றத்திற்கு முருகனை வழிபடச் சென்றிருந்தபோது தம் நண்பர் ஒருவர் அங்கு பாற்காவடி செலுத்துதலைப் பார்த்து,

''விண்ணப்பாற் காவடியான் வேண்டும் பரங்கிரியாய்
வண்ணப்பாற் காவடியான் வாழ்த்துநர்கள்—எண்ணப்பாற்
காவடிவாய்ப் பக்கங் கனிந்துதுணை யாகின்றுன்
சேவடிவாய்ப் பக்கருணை செய்.''

என்றொரு வெண்பாப் பாடினர்.* மற்றும் பல இடங்கட்குச் சென்று சமயத்திற்குத் தக்கவாறு பல செய்யுட்கள் பாடினர். இவர் சென்னைக்குச் சென்றிருந்தபோது அங்குத் திருமயிலையில் செந்தில்வேலுமுதலியார் என்பவர் சிறந்த செல்வராகவும் கொடையாளியாகவுமிருந்தார். அவர்மீது பன்னிரண்டு ஊர்களின் பெயரை அமைத்து,

''திருமயிலை வான்மியூர் முகிலேயன சாயல்
திகழ்கோதைத் திருவல்லிக் கேணிலைமை யுற்ற
ஒருமுல்லை வாயினைகை யாலங்காட் டுவிழி
ஒற்றியூர் வதவசமோ எனவொருத்தன் மயலால்
வருமணிமே கலைக்காஞ்சித் துகில்வளைகள் கழுவ
மலைத்தண்ணு மலைமுலைபின் வார்குழிய வந்தான்
தருமதுரை யேசெந்தில் வேலாசே யன்னுள்
தனைப்புலியூ ருக்கணுப்பில் சார்பாக்கம் உனதே.''

என்னுஞ் செய்யுளைப் பாடினர். இதில், 1 திருமயிலை, 2 திருவான்மியூர், 3 திருவல்லிக்கேணி, 4 திருமுல்லை

* சென்னையில்.

வாசல், 5 திருவாலங்காடு, 6 திருவொற்றியூர், 7 காஞ்சி புரம், 8 திருவண்ணாமலை, 9 மதுரை, 10 சென்னார், 11 புலியூர், 12 பாக்கம் என்னும் பன்னிரண்டு ஊர்ப் பெயர்கள் அமைந்துள்ளன. மேலும், தேங்குழல், அப்பம், தோசை, வடை, பணியாரம், லட்டு, பாயசம், பூந்தி, அதிரசம், பிட்டு, பாலாடை, முறுக்கு என்னும் பன்னிரண்டு பலகாரப் பெயர்களை யமைத்து,

"தேங்குழலப் பந்தோசை யித்தியமா வுடலில்
திகழ்வடையப் பழம்பணியா ரங்களெலாம் நீத்தே
ஓங்கியழு தலட்டுபல காரமுள வனைமார்க்
கொடுங்கிப்பா யசங்கர்த்த உற்றார்க்கும் அஞ்சி
ஸ்ங்கியக்கோ டாழுலையில் பூந்தினவு கொண்டுன்
னிரகத்தில் அதிரசமும் நன்பிட்டு வந்தான்
தாங்குதல்னின் கடன்செந்தில் வேலரசே அவள்னின்
தன்பாலா யடைதலெழில் தருமுற்குத் தானை."

என்னும் பாடலைப் பாடினர். மற்றும், வேலமரம், ஆல மரம், அரசமரம், அத்திமரம், கோங்குமரம், பாலைமரம், வேப்பமரம் என்னும் எழு மரப்பெயர்களை அமைத்து,

"செந்தில்வேல் வள்ளால்னின் திண்புயத்தார் பற்றிறைத்தம்
வந்தில்வேண் டுஞ்சீர் வளப்புடைய—வந்தமில்வேல்
ஆலமரங் கண்ணரசா மல்குலத்திக் கோங்குமுலை
பாலைவேம் பென்றுண்ணன் பார்."

என்னும் வெண்பாவைப் பாடினர். சென்னையில் க. வ. திருவேங்கட நாயுடு என்பவர் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். அவர் ஒருநாள் அருமையான சொற் பொழிவு ஒன்று செய்தார். அதனைக் கேட்டு மகிழ்ந்த இவர்,

"திருவேங் கடநா யுடவர்கள் செய்த
வரும்பிரசங் கத்தை மகிழ்ந்தெ—வருங்கேட்கில்

அன்பும் அருளுங்கொண் டாசந்த மாப்பக
வண்பதத்தைதச் சார்ந்துவாழ் வார்.”

என்னும் உரைநடை வெண்பாவைக் கூறினர். இதனை வெண்பாவாகவும் பாடலாம்: உரைநடையாகவும் படிக்கலாம்.

அண்ணாமலைச் செட்டியார்மீது பாடல்

சக்கந்தி என்னும் ஊரில் இருந்த அண்ணாமலைச் செட்டியார் என்பவர் பாவலருக்கு இனிய நண்பராக அமைந்திருந்தார். அவர் ஒருநாள் பாவலரைப் பார்த்துப், “ பரிசின்பொருட்டுத் தாங்கள் எல்லோருக்கும் பாடல்கள் இயற்றிக்கொண்டு செல்கின்றீர்களோ? பொருளின் பொருட்டுத் தமிழின் அருமையறியாதவர்களுடைய பேரி லெல்லாம் பாடல்கள் பாடலாமா?” என்று உசாவினர். உடனே பாவலர்,

“செந்தமிழின் அருமையறி யாதவர்பால்
கவிகளொன்றுஞ் செப்போ மன்னர்
தந்தபரி செவையெனினுந் தக்கதென
வேமதிக்கோம் தாணி மீது
சந்ததமும் எமக்குரிய தகமைகண்டாய்
நினதருமை தருநண் புக்கே
வந்தனமண் ணுமலையாம் வணிகர்குல
மணியேநீ வாழ்க மாதோ.”

என்னும் பாடலால் மதுமொழி கூறினர்.

திருமண வாழ்த்து

சண்முகம் செட்டியாருக்குத் திருமணம் பெருஞ் சிறப்பாக நடைபெற்றது. அதனைச் சிறப்பித்துப் பாவலர் பல திருமணவாழ்த்துப் பாக்கள் பாடி வாழ்த்தினர் அவற்றுள்,

"இத்தனை மகத்வ மணிவிழாக் காட்சி
இன்பதை ஈந்தளம் இறையாம்
உத்தம மகிபற் குலகினில் தீர்க்கா
யுள்புகழ் கீர்த்திநற் செல்வம்
புத்திர பாக்யம் இவைகள்மேன் மேலும்
பொற்பொடு பெருகிட அருள்வான்
சத்தன்மான் மருகன் முருகனை யேத்தி
நாள்தொறும் பணிகுவம் நாமே."

என்பது இறுதிப் பாடலாகும்.

தனிச்செய்யுட் சிந்தாமணி

தனிப்பாடல் திரட்டுக்குப்பின் புலவர்களால் பாடப் பெற்றுள்ள பாடல்களையும் மற்றும் உள்ள தனிப்பாடல் களையும் ஒரே நூலாகத் திரட்டவேண்டும் என்னும் நோக்கம் சண்முகம் செட்டியாருக்குண்டாகியது. தமது நோக்கத்தைக் கருப்பையாப் பாவலரிடந் தெரிவித்தார். கருப்பையாப்பாவலர் தனிப்பாடல்திரட்டு ஒன்றிரண்டு பாகங்களையும் அவைகட்குப் பின் பாடப்பெற்ற பாடல் களையும் ஒன்றுகத் தொகுத்துத் 'தனிச் செய்யுட் சிந்தா மணி' என்னும் பெயருடன் ஒரு நூலாக வெளிப்படுத் தினர். இந்நூலே பிறகு மு. ரா. கந்தசாமிக் கவிராயரால் மேலும் பல பாடல்கள் சேர்க்கப்பெற்று 1908-ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பெற்றது.

இறுதி

தனிப்பாடல்களையன்றி நூல்கள் பலவும் இயற்றிய இவர் 1907-ஆம் ஆண்டில் தமது நாற்பத்துமூன்றும் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. திருப்பரங்கிரிமாலை
2. அழகர்பதிகம்

3. நவரத்தினம்
4. திருப்போரூர் ஆண்டவர் திரிபந்தாதி
5. கட்டளைக்கலிப்பா
6. திருப்பல்லாண்டு
7. சிதம்பரசுவாமி கலாமாலை
8. வண்ணங்கள்
9. திருக்கோட்டியூர்த் திரிபந்தாதி
10. திருச்செந்தில் திரிபந்தாதி
11. ஒருழுத்தந்தாதி
12. திருக்குரம்பைத் திரிபந்தாதி
13. இலக்குமியந்தாதி
14. திருமெய்யம் ஒருழுத்தந்தாதி
15. மருதூர் நாகநாதர்மாலை
16. திருமயிலைக் கற்பகாம்பிகைமாலை
17. நாமகள் இரட்டைமணிமாலை
18. திருஞானசம்பந்தமாலை
19. வடமுல்லைவாயில் மாசிலாமணிமாலை
20. பராசக்திமாலை
21. திருக்கோட்டாற்றுக்கலம்பகம்
22. விக்டோரியாராணி சரித்திரம்
23. மயிலைச்செந்தில் வேல்முதலியார் ஐந்திணைக்கோவை
24. பதிகங்கள்
25. முறையூர் மீனாட்சிசுந்தரேசுரர் பிரபந்தத்திரட்டு

முதலியன.

A.4257

கு. சவராயலு நாயகர்

தோற்றம்

செ. சவராயலு நாயகர் என்பவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை காலத்திலே வாழ்ந்திருந்தவர். அந்நாளிற் புதுச்சேரியில் இருந்த ஒரு புலவரிடம் சில நூல்களைப் பாடங் கேட்டுச் செய்யுள் இயற்றுதற்கும் சொற்பொழிவுகள் செய்வதற்கும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தார். மேலும் மேலும் கல்வி கற்றுச் சிறப்படைய விரும்பிய அவருக்குத் தக்கவாறு கல்வி போதிப்பதற்குத் தக்க அறிவாளிகள் அகப்படவில்லை. தகுந்த ஆசிரியரை அவர் தேடிக்கொண்டிருந்தார். அப்போது பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் புலமையைப்பற்றியும் பெருமையைப்பற்றியும் உணர்ந்தார். இவர் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்தவர். பிற சமயத்தைச் சேர்ந்த தமக்குப் பிள்ளையவர்கள் பாடஞ் சொல்லுவார்களோ மாட்டார்களோ என்று ஐயுற்றுச் சில திங்களைப் போக்கினர். பிறகு எவ்வகையேனும் பிள்ளையவர்களிடஞ் சென்று பாடங் கேட்க வேண்டும் என்று உறுதிசெய்தார்.

தாசில்தார் உதவி

சவராயலு நாயகருக்குப் பழக்கமான தாசில்தார் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் சஞ்சீவி நாயகர். தாம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அத் தாசில்தாரிடம் வேண்டிக் கொண்டார்.

“ஆர்கொள் புகழ் சேர்சிராப் பள்ளியின் மகத்துவ
அகத்திய னெனத் தோன்றிவந்
தவதரித் திட்டமீ னாட்சிசுந் தரகுருவை
அண்டிநற் றமிழை யோர்தற்
காயவழி காட்டவுனை அன்றிவே றிலையென்
றடுத்துளம் இரங்கு மென்றன்
அனுபவ மறிந்தெனக் காதரவு செய்யுனை
தகங்கனிந் திடல் வேண்டுமே.”

என்னும் பெரிய செய்யுள் ஒன்றையும் இயற்றிப் பாடினர். சஞ்சிவி நாயகர் தக்கவர்களைக் கொண்டு பிள்ளையவர்களிடம் வேண்டச் செய்தார். பிள்ளையவர்களோ ,“ எச்சமயத்தவராயினும் ஆகுக. தமிழ் நூல்களைக் கற்பிப்பதற்கு யாதொரு தடையும் இல்லை,” என்று தமது உடன்பாட்டைத் தெரியப்படுத்தினர். சவராயலு நாயகர் தமது எண்ணங் கைகூடுமென்று மகிழ்ந்தார்.

பிள்ளையவர்களை அடைதல்

சவராயலு நாயகர் படிக்க விரும்பிய அக்காலத்தில் பிள்ளையவர்கள் திருசிரகிரியில் தங்கியிருந்தனர். தியாகராயச் செட்டியார் முதலிய சிலரை உடன் கூட்டிக்கொண்டு சவராயலு நாயகர் பிள்ளையவர்களைப் போய்ப்பார்த்தார். தாம் வீரமாமுனிவரால் இயற்றப்பெற்ற தேம்பாவணி, திருக்காவலூர்க்கலம்பகம் முதலிய கிறித்துவ சமய நூல்களைப் படித்தற்கு விரும்பி யிருப்பதாகவும் அந் நூல்களைப் பாடஞ் சொல்லத் தக்க அறிஞர்கள் அகப்படவில்லை யென்றும் தெரியப்படுத்திக் கொண்டார். பிள்ளையவர்கள் நாயகர் அது வரையில் பாடங் கேட்டுத் தேர்ந்துள்ள நூல்களை உசாவியுணர்ந்தார். பிறகு சில கருவி நூல்களைப் பாடஞ் சொன்னர். அதன் பிறகு இவர் விரும்பிய தேம்பாவணி, திருக்காவலூர்க்கலம்பகம் முதலிய நூல்களைப் பாடஞ் சொன்னர். மற்றும் சில இலக்கண இலக்கியங்களையும் நன்கு போதித்தார். இதனல் சவராயலு நாயகருடைய புலமை சிறந்து விளங்குவதாயிற்று. இவ்வாறு இவர் பெரும் புலவர் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்ட பின்பு தமது சமயத்தாரிடத்தும் பிறரிடத்தும் சிறந்த நன்மதிப்பை அடைந்து உயர்ந்து விளங்கினர்.

நன்றிமறப்பது நன்றன்று

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது தன்று" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியிருக்கிறார். நம் இந்து சமயத்தவர்களில் எத்தனையோ பேர் "தென்னாறு வித்தை கற்றால் சீடனும் குருவைத் தேடான்" என்பதற் கேற்பக் கல்வி கற்றுக்கொண்ட பிறகு தம் ஆசிரியரை அடியோடு மறந்துவிடுகிறார்கள். சவராயலு நாயகர் அவ்வாறு மறந்து செய்ந்நன்றி கொன்ற மகனுகவில்லை. பிள்ளையவர்களிடத்திலும் அவருடைய மாணவர்களிடத்திலும் பேரன்பு பாராட்டினர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மகனுக்குத் திருமணம் நிகழ்ந்தபோது பெருந் தொகையைத் திருமணச் செலவுக்கு அனுப்பி வைத்தார். இவருடைய அன்புடைமையை எண்ணி உள்ளம் உருகிய பிள்ளையவர்கள் இவர்மீது 'சவராயலு நாயகர் மாலே' என்னும் நூல் ஒன்றையும் பாடிக் களிப்பித்தார்.

சொற்பொழிவுக்கு முன்

எங்கேனும் சொற்பொழிவு செய்தற்குச் சவராயலு நாயகர் சென்றுரைனின்,

"ஒதுதற் கருநூல் யாவையும் உணர்ந்த
உணர்வினன் திரிசிர புரியாம்
மேதகு பதியில் ஒளிர்தரு ஞான
விளக்கமா யடியவர் உளத்தில்
தீதறும் அவிச்சை யாமிருள் சீத்துத்
திகழுமெந் தேசிக னுய
கோதின்மீ னாட்சி சுந்தரன் அருளால்
கூறுதும் இஃதுளந் தணிந்தே."

என்னுஞ் செய்யுளைப் பாடுவார். தேம்பாவணியை விரித்துரைத்துத் தேம்பாவணிச் சொற்பொழிவு செய்யத் தொடங்கினாலோ,

"விளங்குறுவெண் புகழ்வளைத்த மீனுட்சி சுந்தரப்போர்க்
களங்கமில்தே சிகனென்பால் கருணைனி புரிந்ததனால்
துளக்குறுதேம்பாவணிக்குச் சொலத்துணிந்தேன் உலைவிரித்து
வளங்கெழும்அவ் வருளிலேயேல் வருத்தலரி தரிதரிதே."

என்னுஞ் செய்யுளைக் கூறுவார். இவருடைய ஆசிரிய அன்பு எல்லோராலும் பாராட்டத்தக்க வகையில் அமைந் திருந்தது. ஆசிரியர் எச்சமயத்திலேனும் பொருள் நெருக் கடியால் தளர்ச்சியுறுகிறார் என்று அறிந்தால் தம்மால் இயன்ற உதவியைச் செய்யாமல் இரார். இவருடைய ஆசிரிய அன்பு இவரை நன்னிலையிற் சிறப்பாக வைத்திருந்தது.

"முத்திக்கு வித்தாம் முரிமனத்துக் காறுதலாம்
எத்திக் கிறும்பொருளா யீவதுவாம்—சுத்தகலை
ஓது கருணைமிகும் உத்தமவென் சற்குருநிற்(கு)
ஏதுசெய்கு வண்கைம்மா றின்று."

"கற்றற் கெளியனவாக் காட்டியரும் பாடலெலாம்
பற்றச்செய் நற்குணவென் பண்ணவனும்—உத்தமீ
ஞானப் பொருள்வழங்கி நற்றருமம் செய்வதுபோல்
தானமுண்டோ இவ்வுலகில் தான்."

"இலக்கண இலக்கியம் இனிதுற எவர்க்கும்
கலக்கம் அறப்புகல் கரிசில் குணனன்
தன்னிடைக் கற்பவர் மன்னவைக் களத்துள்
என்னையும் ஒருவனுத் தன்னுவமித் தருளி
மெய்யருள் சுரந்த மீனுட்சி சுந்தர
நல்லா சிரியன்....."

என்னும் செய்யுட்களும் சவராயலு நாயகருடைய ஆசிரிய அன்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

சிறப்புப் பாயிரம்

சென்னை திருமயிலையில் வினாயக முதலியார் அமைத்த ஓவிய ஆறுச் சாலையைக் குறித்து மீனுட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள், "சித்திரச் சதுரப் புகழ்ச்சி மாலை" என்னும்

நூலைப் பாடினார். அந் நூல் பலபேருடைய பாராட்டுப் பாக்களோடு பதிப்பிக்கப்பட்டது. அந் நூலைப் புகழ்ந்து சவராயலு நாயகர்,

"பார்புகழும் விநாயகவேள் திருமயிலைச்
சத்திரமாம் பாத்தி ரத்தில்,
ஏர்குடிகொண் டோங்கிவளர் மீனாட்சி
சுந்தரப்பே ரெங்க ளாசான்,
நார்நனிகொண் டமைத்துவைத்த நற்பாவாஞ்
செவியுணவை நயந்தே விண்ணோர்
சீர்தருதெய் வதவணவை அவிஅவிஎன்
றேவெறுத்துச் செப்பு வாரால்."

என்பது முதலியப் பாடல்களைப் பாடினார்.

இவர் இயற்றிய நூல்கள்

இவர் கிறித்துவ சமயத் தொடர்பான நூல்கள் சில வற்றைப் பாடியுள்ளார். அந் நூல்களைப் புகழ்ந்து வேத நாயகம் பிள்ளை,

"சாதிநா யகனான சவராய லுத்தமனே
சவரி யாரென்
சோதிநா யகன்நாமம் நீதரித்தாய் மீனாட்சி
சுந்த ரப்பேர்
நீதிநா யகன்அன்றோ நினக்காசான் உலகமெலாம்
நியமித் தாளும்
ஆதிநா யகன்அனைமேல் நீபாடில் உன்கவியை
யார்மெச் சாரே."

என்பது முதலிய பாடல்களைப் பாடியுள்ளார்.

இறுதி

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்தவரான இவர் காலமான, பிறந்த ஆண்டுகள் முதலியன விளக்கமாக வில்லை.

நமது வெளியீடு: அசச

தமிழ்ப் புலவர் வரிசை

[பதினான்காம் புத்தகம்]

ஆசிரியர்:

திரு. சு. அ. இராமசாமிப்புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை-1

First Edition: Aug., 1956.

THAMIZHP PULAVAR VARISAI - XIV

(All Rights Reserved)

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVÉLI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C.—1200

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தக்கலமின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக் கருதித் **தமிழ்ப் புலவர் வரிசை**யில் இது காறும் பதின்மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் **பதினான்காம் புத்தகமாகும்.**

இதன்கண் **கோபாலகிருட்டிண பாரதியார்** முதல் **மணிவாசக சரணாலய அடிகள்** ஈறாக ௩௦ புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த **திரு. கு. அ. இராமசாமிப்புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் பன்னிரண்டு புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	கோபாலகிருட்டிண பாரதியார்	1
உ.	தண்டலம் பாலசுந்தர முதலியார்	9
௩.	பிச்சுவையர்	13
௪.	பால்வண்ண முதலியார்	25
௫.	கோபால பிள்ளை	27
௬.	இலக்கண முத்தையா	29
௭.	அழகிரிராசு	33
௮.	பாலகிருட்டிண கவிராயர்	35
௯.	பீமகவிப்புலவர்	40
க0.	மாகறல் கார்த்திகேய முதலியார்	42
கக.	கரபாத்திர சிவப்பிரகாச அடிகள்	48
கஉ.	மு. ரா. கந்தசாமிக் கவிராயர்	57
கஙு.	அப்துல் காதிறு ராவுத்தர்	60
கச.	வெ. குப்புசாமிராசு	62
கஞ.	சங்கரதாசர்	70
கசு.	இரெட்டியப்பட்டி அடிகள்	77
கஎ.	சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்	83
கஅ.	முத்துராமலிங்ககேதுபதி (உ)	86
கக.	கே. எஸ். சீனிவாச பிள்ளை	89
உ0.	சிவானந்தசாகர யோகீசுவரர்	93
உக.	சச்சிதாநந்த யோகீசுவரர்	97
உஉ.	அரங்கசாமி ஐயங்கார்	99
உஙு.	குன்னூர்க் குமரசாமி முதலியார்	103
உச.	அ. சண்முகஞ் செட்டியார்	109
உஞ.	டி. என். சேஷாசல ஐயர்	113
உசு.	மு. பொ. ஈசுரமூர்த்தியா பிள்ளை	117
உஎ.	உலகநாத பிள்ளை	123
உஅ.	சத்தியமூர்த்தி	129
உக.	வயிகாகரம், அ. இராமநாதச் செட்டியார்	137
௩0.	மணிவாசக சரணாலய அடிகள்	141

தமிழ்ப் புலவர் வரிசை

[பதினன்காம் புத்தகம்]

14. கோபால கிருட்டிணை பாரதியார்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப்பற்றி அறியாத தமிழ்மக்கள் எவரும் இரார். புகழ்பெற்ற அக் கீர்த்தனை நூலைப் பாடிய கோபால கிருட்டிணை பாரதியார் சோழவள நாட்டிலே காகபட்டினத்திற்கு அண்மையில் உள்ள நரி மணம் என்னும் ஊரிலே, ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டு கட்கு முன்பு பிறந்தார். தந்தையார் பெயர் இராமசாமிப் பாரதி. குலம் அந்தணர் குலம்.

கல்வி

நரிமணத்தில் பிறந்த பாரதியார் இளமைப் பருவத்தை முடிகொண்டான் என்னும் ஊரில் கழித்தார். இளமையில் வடமொழியை முறையாகப் படித்துக் காவிய நாடகங்களைக் கற்றார். அத்வைத நூல்களையும் படித்தார். மாயூரத்தில் அந்நாளில் கோவிந்த சிவம் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். பாரதியார் அவரையே தம்முடைய அறிவாசிரி யராகக் கொண்டு மெய்ப்பொருள் நூல்களையும் யோக நூல்களையும் பயின்றார்.

இசைப் பயிற்சி

பாரதியாருக்கு இளமையிலேயே இசையில் பற்று உண்டாயிற்று. எங்கு இசைக் கச்சேரி நடந்தாலும் அங் கெல்லாஞ் சென்று கேட்கலானார். தாமும் இசைப்பாடல் களைப் பாடிப் பழகலானார். அதனல் இவருக்கு இசைப் பயிற்சி மிகுதியாக உண்டாயிற்று. தமிழ்நூல்களையும் அடிக்கடிப் படித்தார். வேதாந்த நூல்களிலும் வேதாந்தக் கொள்கையிலும் இவருக்குப் பற்று மிகுதியாக இருந்த படியால் கைவல்ய நவநீதம், பிரபோத சந்திரோதயம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம், தத்துவராய அடிக ளுடைய பாடுதுறை, பட்டினத்தடிகளின் பாடல்கள், தாயு மான அடிகளின் பாடல்கள் ஆகியவைகளைக் கருத்தூன் றிக் கற்றபடியால் தமிழ்ப் பயிற்சியும் நன்கு அமைந்தது. தமிழ்ப் பயிற்சியின் ஆற்றலைக்கொண்டு இசைப்பாடல் களைத் தாமே இயற்றிப் பாடவும் தொடங்கினர்.

திருவிடைமருதூரில்

அந்நாளில் திருவிடைமருதூரில் இராமதாசு என்னும் பெயரிய இசைப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் இந்துத் தான இசையிலும் வல்லவர். அவரிடஞ் சென்று அவரை ஆசிரியராகக்கொண்டு சிலகாலம் இசை பயின்றார். இறைவழி பாடு முதலியன செய்துகொண்டு அவ்விடமே தங்கியிருந் தார். இவர் பிரமசரிய நெறியை மேற்கொண்டு ஒழுகி வந்தமையால் பலரும் இவரிடத்தில் அன்பு பாராட்டினர் கள்.

மன்றுளாடியால் மட்டிலா அன்பு

தில்லை மன்றுள், சிற்சபை பொலியத் திரு நடம் புரியும் அற்புதக் கூத்தனின் அடிமலரிடத்திலே இவருக்கு எல்லையில்லாத அன்பு இயற்கையாக அமைந்திருந்தது.

தில்லிக்கு அடிக்கடி சென்று கூத்தப்பிரானைப் போற்றி வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். ஆண்டு தோறும் கடைபெறும் ஆறு திருமுழுக்குகளுக்கும் சென்று போற்றுவார். கூத்தப்பிரானைப் போற்றி உள்ளம் உருகுவ தன்றி வீண்டகோரம் மன வெளியில் எண்ணிப் போற்றிக் கொண்டும் இருப்பார்.

மாயூர வாழ்க்கை

இடைமருதில் இசைப்பயிற்சியை ஓரளவாக முடித்துக் கொண்டபிறகு மாயூரத்தை அடைந்து ஓர் அன்பருடைய இல்லத்திலே தங்கினர். அடிக்கடி புதிய புதிய இசைப் பாடல்களைக் கூத்தப்பிரான் மேல் இயற்றுதல் அவைகளைத் தாமே பாடி மகிழ்தல் தம்மைபடுத்தவர்கட்கு அவ்விசைப் பாக்களைக் கற்பித்தல் முதலியன பாரதியாருடைய செயல் களாக இருந்தன. பலர் இவரிடம் இசைப் பாடல்கள் இயற்றச் செய்து அவைகளைத் தாம் பாடிப் பலனடைந் தனர்.

தியாகையரைக் காண்டல்

அந்நாளில் ஐயாற்றிலே தியாகையர் இருந்தார். தியாகையருடைய இசைப்பாடற் சிறப்பைப் பலர் மூலமாக வும் உணர்ந்த பாரதியார் திருவையாறு சென்று தியாகை யரைக் கண்டு மகிழ எண்ணினர். ஒரு நாள் புறப்பட்டுத் திருவையாற்றுக்குச் சென்றார். தியாகையரை அவருடைய இல்லத்தில் பார்த்தார். கை குவித்து வணங்கினர். பாரதி யாரைப்பற்றித் தியாகையர் கேள்விப்பட்டிருந்தார். ஆயினும் அவர் பாரதியாரைப் பார்த்ததில்லை. ஆகவே அவர் தம்மைக் கண்டு வணங்கிய பாரதியாரைப் பார்த்து, "எந்த ஊர்?" என்று உசாவினர். பாரதியார், "அடியேன் மாயூரம்" என்று மறுமொழி பகர்ந்தார். இதனைக்கேட்ட தியாகையர்,

"அப்படியா? நல்லது; அங்கே கோபால கிருட்டிண பாரதியார் என்னும் இசைப் புலவர் ஒருவர் இருக்கிறாரே அவரை உமக்குத் தெரியுமா? அவர் நலமாக இருக்கிறாரா?" என்றார். உடனே பாரதியார், "அடியேன்தான் கோபால கிருட்டிண பாரதி" என்றார். இதனைக்கேட்ட தியாகையர் வியப்படைந்து இவருடைய பெருமிதமின்மையையும் பணிவையும் பாராட்டினர்.

ஆபோகி

அப்பொழுது தியாகையருடைய மாணவர்கள் ஆபோகி யென்னும் இராகத்தில் ஓர் இசைப்பாட்டைப் பாடிக் கொண்டிருந்தார்கள். அப் பாட்டு முடிந்த பின் தியாகையர் பாரதியாரைப் பார்த்து, "இந்த இராகத்தில் நீங்கள் இசைப் பாட்டுகள் இயற்றியிருக்கிறீர்களா?" என்று கேட்டார். பாரதியார் எத்தகைய மறுமொழியும் இயம்பவில்லை. அன்றிரவு பாரதியார் அந்த இராகத்தில் ஓர் இசைப்பாட்டை இயற்றினர். மறுநாள் பாரதியார் தியாகையரோடு உரை யாடிக் கொண்டிருந்தார். "அடியேன் இயற்றிய பாட்டு ஒன்றைப் பாடிக் காட்டலாமா?" என்றார். உடனே தியாகையர், "இதற்குக்கூடக் கேட்கவேண்டுமா? சொல் லுங்கள் கேட்கிறேன்," என்றார். இரவு நாம் ஆபோகி இராகத்தில் பாடியிருந்த இசைப்பாட்டை இசையுடன் பாடிக்காட்டினர். கேட்ட தியாகையர் வியப்படைந்தார். "நேற்று ஆபோகியில் ஏதேனும் பாடியிருக்கிறீர்களா என்று கேட்டபொழுது பேசாமல் இருந்தீர்களே?" என்று கேட்டார். "இரவுதான் புதிதாகப் பாடினேன்" என்று பாரதியார் பகர்ந்தார். பிறகு தியாகையரிடம் விடைபெற் றுக் கொண்டு புறப்பட்டார்.

சிதம்பரக்கும்மி

இவர் அடிக்கடி திருத்தில்லைக்குச் சென்று கூத்தப் பிரானைப் போற்றி வழிபடுவார். அவ்விடமே தங்கியிருப் பதும் உண்டு. கோயிலில் ஓரிடத்தில் உள்ள நந்தனர் உருவத்தின் அண்மையில் அமர்ந்து மன வெளியில் எண்ணிக்கொண்டிருப்பது (செபந் செய்து கொண்டிருப் பது) இவருடைய வழக்கம். அப்பொழுது அங்கிருந்த அன்பர்கள் இவரிடம் பல இசைப் பாடல்களை இயற்றித் தரச் செய்தனர். இவ்வாறே பெண்கள் கேட்டுக்கொண்ட படி சிதம்பரக்கும்மி என்னும் நூல் ஒன்றையும் பாடிக் கொடுத்தார்.

நந்தனர் சரித்திரக் கீர்த்தனை

பாரதியார் பல இடங்கட்குச் சென்று இசையரங்குகள் நிகழ்த்தி அன்பர்களுடைய உள்ளங்களை மகிழச் செய்து கொண்டிருந்தார். பாரதியாருடைய அன்பர்களிற் பலர் பாரதியாரைப் பார்த்து, "ஏதேனும் நல்ல சிவகதை ஒன்றை முழுமையும் இசைப்பாட்டாகப் பாடுங்கள். அவ்வாறு பாடினால் நன்றாக இசையரங்கு நிகழ்த்துவதற்கு உதவியாக இருக்கும்," என்று வேண்டிக்கொண்டனர். நாகப்பட்டினத் திற்கு இவர் சென்றிருந்தபோது அங்கிருந்த பெருஞ் செல்வராகிய கந்தப்ப செட்டியார் என்பவரும் அவ்வாறே வேண்டிக்கொண்டனர். பாரதியாருடைய வரலாற்றை இசைப்பாட்டாக்கலாம் என்று எண்ணமிட்டார். நந்தனர் உருவம் இவருடைய உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது. ஆகவே, நந்தனர் வரலாற்றை இசைப்பாட்டாக்க முடிவு செய்தார். நல்ல நாள் ஒன்றில் பாடத்தொடங்கினர். பெரிய புராணத்திலுள்ள நந்தனர் புராணத்தை மூலமாக வைத்துக்கொண்டார். காலப் போக்கிற்கும் கதைப் போக்கிற்கும் ஏற்றவாறு அதனை விரிவுபடுத்திக் கொண்

டார். கூத்தப்பிரான் மீது இவர் அவ்வப்போது பாடிய இசைப் பாடல்களையும் அதிற் சேர்த்துக்கொண்டார். சில திங்கள்களில் நந்தனர் சரித்திரக் கீர்த்தனை இனிது முடிவு பெற்றது.

அரங்கேற்றம்

நந்தனர் வரலாறு இசைப்பாட்டாக முடிவு பெற்ற செய்தியை இவர் நாகப்பட்டினம் கந்தப்ப செட்டியாருக்குத் தெரியப்படுத்தினர். மாயூரத்திற்கு அவர் தகுந்த மனிதர் களை அனுப்பி நாகைக்குப் பாரதியாரை அழைத்துவரச் செய்தார். பாரதியார் தம் மாணவர் சிலரோடு புறப்பட்டு நாகையை அடைந்தார். அரங்கேற்றத்திற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வெளியூர்களில் இருந்து இசைப்புலவர்களும் செல்வர்களும் பிறரும் வந்து கூடினர். காரைக்கால் முதலிய இடங்களில் இருந்து அலுவலாளர்கள் பலரும் வந்து சேர்ந்தனர். நல்ல நாள் ஒன்றில் அரங்கேற்றம் தொடங்கப்பட்டது. அது மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் பெருந்திரளான அன்பர்கள் வந்து கேட்டு இன்புற்றனர். கேட்டவர்கள் எல்லோரும் வியந்து பாராட்டினர்கள். அரங்கேற்ற முடிவில் பாரதியாருக்கு நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்தனர். நாகப்பட்டினம் முழுவதும் இதே பேச்சாக இருந்தது.

பதிப்பித்தல்

நந்தனர் சரித்திரக் கீர்த்தனையின் புகழ் காரைக்கால் முதலிய இடங்களிலும் பரவியது. அப்பொழுது காரைக்காலில் இருந்த சிவசேதுரை என்னும் கலெக்டர் சிறிது தமிழறிவு பெற்றவராயிருந்தார். அவர் நந்தனர் சரித்திரக் கீர்த்தனை யைக் கேட்க விரும்பிப் பாரதியாரைக் காரைக்காலுக்கு

அழைத்துக் கேட்டு மகிழ்ந்ததன்றி அது முதல் முதலாக அச்சாதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளையுஞ் செய்தார். புத்தகம் வெளியான பின் பாரதியார் புகழும் சுந்தரம் புகழும் எங்கும் பரவியது.

பொறாமையும் பகைமையும்

அந்நாளில் மாயூரத்தைஅடுத்த கூறைநாட்டில் புலவர் ஒருவர் இருந்தார். அவர் தமிழ்ப்பயிற்சியும் இசைப் பயிற்சியும் உடையவராக இருந்தார். ஆயினும் அழுக்கா றென்னும் தீவினையாளன் அவரை அழுத்தமாகப் பற்றி யிருந்தான். "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி உய்த்து விடும்" என்பது அந்தப் புலவருக்கு அடி யோடு மறந்துபோய்விட்டது. அவர் திருநாவுக்கரசு நாய னார் வரலாற்றை இசைப்பாட்டாக இயற்றியிருந்தார். அவர் இலக்கணப் பயிற்சியும் அமையப் பெற்றவராகலின் இலக் கண விதிக்கு மாறுபடாமல் தமது இசைநூலை இயற்றி யிருந்தார். ஆயினும் அது எடுபடவில்லை; பாரதியார் இலக்கணம் முதலியவைகளை உணராமல் பாடியிருந்தாலும் கூத்தப்பிரான் மீது உண்மையான மெய்ப்பண்போடு பாடிய தாகையால் பாரதியாருடைய பாட்டே புகழடைந்து பரவி யது. ஆகவே புலவர் பாரதியார்மீது பலவகையான குற் றங்களைக் கூறி இகழ்ந்துரைத்துக்கொண்டு திரிந்தார். பல வகைப்பாட்டுக்களை இசைப்பாட்டுக்களாக,

பல்லவி

சுந்தன் சரித்திரத்தைத் கேளாதே—சனமும்
வந்த தரித்திரத்தான் மாளாதே

அநுபல்லவி

தந்தன மாகத்கொள்வான் தடிப்பிரமசாரி
வைபவம் மேற்பெரும் காம வி கரி (சுந்தன்)

சரணம்

பெரியபுராணத்திலே இருப்பதைவிட்டுப்
பேய்த்தனமாகஇவன் சொன்னதைத் தொட்டு
அரியபுலவர்க்கு வந்ததே சொட்டு
ஐயையோ அத்தனையுங்கதைக் கட்டு (நக்கன்)

என்பதைப்போல் பாடித் தம் மாணவர்கட்குங் கற்பித்து எல்லா இடங்களிலும் பாடஞ்செய்தார். இதனைக் கேட்டும் பாரதியார் சினங்கொள்ளவில்லை. பாரதியாருடைய மாணவர்கள் சினங் கொண்டார்கள். தம் ஆசிரியரையும் எதிரிமீது வசைபாடித் தாக்கிச்சொன்னார்கள். பாரதியார் இணங்கவில்லை. ஆயினும் மாணவர்கள், பொறுமையற்றவர்களாய்,

" அப்பன் சரித்திரத்தைச் சொல்லாதே
கப்பறையுங் கையுமாய் நில்லாதே "

என்று பாடிக்கொண்டு திரிந்தார்கள். இதனை உணர்ந்த பாரதியார் தம் மாணவர்களை யழைத்து, "இன்று செய்தாற்றும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு" என்று பெரியோர்கள் மொழிந்திருக்கிறார்கள். நாம் நம் பகைவர்கட்கு இனியவை செய்யாமற் போயினும் தீமையைச் செய்யாமலாவது இருத்தல் வேண்டும்" என்று கூறி அடக்கிவிட்டார்.

சிறப்புப்பாயிரம்

பாரதியார் தமது நூலுக்குப் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் இருந்து,

"கோமேவு திருத்தில்லை கடாசப் பெருமான்தாள் கூடியுய்ந்த
பூமேவு போரன்பர் திருநாளைப் போவார்தம் புனிதச் சீரைப்
பாமேவு பலவகையி னிசைப்பாட்டால் இனிமையுறப் பாடியீந்தான்
ஏமேவு கோபால கிருட்டிணபா ரதியென்னு மினைவில் லோனே',

என்னுஞ் சிறப்புப்பாயிரத்தைப் பெற்றார்.

இவருடைய நூல்கள்

1. கந்தவேள் சரித்திரக் கீர்த்தனை
2. சிதம்பரக் கும்மி
3. திருநீலகண்டர் சரித்திரக் கீர்த்தனை
4. இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை

முதலியன இவருடைய நூல்களாம்.

இறுதி

ஆறுமுக நாவலர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, ஐயாறு நடேசையர், சுப்பிரமணிய தேசிகர் முதலிய பலர் இவருக்கு அறிமுகமானவர்களாக இருந்தார்கள். சிதம்பரம் பொன்னுசாமி தீட்சிதர், இராசரத்தினை தீட்சிதர், மாயூரம் இராமசாமி ஐயர், நடேச ஐயர், சுப்பிரமணிய ஐயர் என்னும் பலர் இவரிடம் இசைப்பயிற்சி செய்து இசைப் புலவர்களானார்கள். நல்வினையாளராகிய இவர் சிவராத்திரியாகிய நன்னாளில் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

---

2. கண்டலம் பாலசுந்தர முதலியார்

தோற்றம்

பாலசுந்தர முதலியார் 1860-ஆம் ஆண்டு மேத்திங்கள் எட்டாம்நாள் தோன்றினர். தந்தையார் பெயர் சிவானந்த முதலியார்; தாயார் பெயர் சண்முகசுந்தரம் அம்மாள்.

கல்வி

அகவை ஐந்து நிரம்பியபோது பள்ளியில் வைக்கப் பெற்றார். இவர் படிப்பதற்கு முதன் முதலாகச் சேர்ந்த பள்ளி தொண்டைமண்டலம் பள்ளி. அந்தப் பள்ளியில்

நடுத்தரப் பள்ளியாகவிருந்தது. அங்குச் சில ஆண்டுகள் பயின்றபின் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிற் சேர்ந்தார். பள்ளியில் ஆங்கிலம் தமிழ் முதலிய நூல்களின் பயிற்சியிலும் பிறவற்றிலும் இவரே தலைமாணாக்கராக இலங்கினர். அப்பொழுது அப் பள்ளிக்குத் தலைவராக அமர்ந்திருந்தவர் கன்னிங்காம் துரை. ஆங்கிலப் பயிற்சி மொழிபெயர்ப்புத் திறன் முதலியவைகளில் முதல்வராய் நின்று பரிசுகள் பெற்றார். மெட்ரிக்குலேஷன் தேர்வில் முதன்மையாகத் தேறினர். பிறகு மாகாணைக் கல்லூரி, நிறித்துவக் கல்லூரி முதலியவைகளிற் கற்றுக் கணிதம், வானநூல், நிலநூல் முதலியவைகளில் வல்லவராய்ப் பி. ஏ.த் தேர்வில் தேறினர்.

தமிழ்க் கல்வி

இவருக்குத் தமிழ் மொழியிடத்தில் பற்று மிகுதியாக இருந்தது. அந்நாளில் சிறந்த புலவராக விளங்கிய புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும் புராணங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு கற்றுத் தேறினர்.

அலுவல்

எல்லாவகையான கல்வியிலும் நன்கு தேர்ச்சி பெற்ற பின்னர் உயர்நிலைமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக வேலைபார்க்கத் தொடங்கினர். பிறகு அரசாங்க அலுவலகத்தில் பதினைந்தாண்டுகள் இருமொழி பேசுவோராக வேலை பார்த்தார். பிறகு மொழிபெயர்ப்பாளராக வேலை பார்த்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்வாளராக இருந்து பணி புரிந்தார். இடையிடை பேரவைகட்குச் சென்று சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர். தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் பள்ளியின் செயலாளராக

இருந்து அப் பள்ளியின் முன்னேற்றத்திற்குப் பலவகை யான வேலைகள் செய்தார். நடுநிலைப்பள்ளியாக இருந்த அதனை உயர்நிலைப்பள்ளியாகச் செய்தார். அப் பள்ளிக்குத் தாமே தலைவராக இருந்து நன்முக நடத்தினர். ஆசிரியர் களிடத்தில் ஏற்றத்தாழ்வு பாராட்டாது எல்லோரையும் ஒரே நிலையில் மதித்துப் போற்றினர். பள்ளியாசிரியர் கட்கு உரியகாலத்தில் ஊதியம் கிடைக்குமாறு செய்தார். அப் பள்ளிக்குக் கட்டிடம் முதலியவைகளைக் கட்டினர். மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுபாணலிலக்குச் சங்கம் ஆகிய வைகளில் உறுப்பினராக இருந்தார். மண்ணிப்பாகை என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலின் தருமச் செயலாள ராகவும் இருந்து பணியாற்றினர்.

மணமும் மக்கட்பேறும்

திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை இனிது நடத்தினர். திரிபுரசுந்தரி என்னும் மாதரசி வாழ்க்கைத் துணைவியாக அமைந்தாள். நான்கு ஆண் மக் களும் ஒரு பெண்மகளும் மக்கட் செல்வமாகத் தோன்றி னர்.

அறச் செயல்கள்

சென்னை கந்தகோட்டம், சாலிவாகனர் கோயில், கரி, திருத்தில்லை முதலிய பகுதிகளில் அருச்சனைக் கட் டளை ஏற்படுத்தினர். திருவொற்றியூர்த் திருக்கோயிலில் பிரதோடக் கட்டளை, சுந்தரர் திருவிழா முதலியவைகளுக் குப் பொருள் வழங்கினர். வேறு பல திருக்கோயில்கட் குத் திருப்பணி செய்தார். இறைவனைப் பெரிதும் போற்றி வழிபட்டதுடன் அவன்டியார்களையும் போற்றி வழிபட் டார்.

இரங்கோனில்

சைவச் சொற்பொழிவுகள் சில செய்தற்கு இரங்கோன் சென்றார். அங்கிருந்த நீதிமன்றத்தினர் இவருடைய திறமையைப் பாராட்டி இவரை இருமொழிப் பேச்சாளராக அமர்த்தினர். அங்கு அவ்வலுவலைச் சிலகாலம் பார்த்தார். சொற்பொழிவுகள் பல செய்து தமிழ்த்தொண்டும் செய்தார்.

இறுதி

இவ்வாறு பல துறைகளில் சிறந்து விளங்கிய இவர் தமது நாற்பத்தெட்டாம் அகவையில் 1908-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஏழாம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார். பூவை கலியாணசுந்தர முதலியார், மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், சக்காடு இரத்தினவேல் முதலியார் முதலியோர் இவருடைய பிரிவு குறித்து இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர்.

> "ஆங்கிலம் உணர்ந்தாய் அருந்தமிழ் உணர்ந்தாய்
> மேங்கிளர் சைவமும் மேதக உணர்ந்தாய்
> சங்கிலை உணரிலும் இறப்பினை நழுவி
> நீங்குவ தணராய் நீத்தது முறையோ."

என்பது மறைமலையடிகளுடைய இரங்கற்பாக்களில் ஒன்றாகும்.

௩. பிச்சுவையர்

தோற்றம்

சேது நாட்டைச் சேர்ந்த வேம்பத்தூரிலே பிச்சுவையர் 1850-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய குலம் அந்தணர் குலம். கல்விச்சிறப்பினால் இவருடைய வழி முறையினர்க்குப் பாரதி என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கியது.

கல்வி

பிச்சுவையர் இளமையிலேயே தக்க ஆசிரியரை யடுத்துக் கல்வியை நன்கு கற்றுச் செய்யுள் பாடுந்திற னடைந்தார். சிலேடைச் செய்யுட்களை விரைவாக இயற்றும் ஆற்றலை யடைந்திருந்தபடியால் இவருக்குச் சிலேடைப்புலி என்னுஞ் சிறப்புப்பெயரும் தக்கோர்களால் வழங்கப் பெற்றிருந்தது. [இவர் கல்விகற்றது பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணவராகிய வன்தொண்டரிடத்தே என்று தெரிகிறது.]

வாழ்க்கை

இவர் வள்ளலாக விளங்கியவர்கள்மீது செய்யுட்கள் இயற்றி நன்கொடை பெறுவதைக் கொண்டே தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டு காலந்தள்ளினார். இவரை யாதரித்த வள்ளல்கள் முறையூர் பழ. சி. சண்முகம் செட்டியார், முகவை யரசர் பாற்கர சேதுபதி, சிவகங்கை நாட்டுத்தலைவராக இருந்த முத்துவடுகநாததுரை, ஊற்று மலை பெருநிலக் கிழவராக விளங்கிய இருதயாலய மரு தப்பத் தேவர் முதலியோராவர்.

பாடல்கள்

இவர் சண்முகம் செட்டியாருடைய கைகளைப் புகழ்ந்து,

"வில்வம் எடுக்குங்கை வேண்டிடபொன் வீயுங்கை
செல்வத் திருப்பணியே செய்யுங்கை—செல்வனரும்
மாவனஞ்சேர் தென்முகைதனை மன்னும் வணிகருல
காவலனுஞ் சண்முகன்செங் கை."

என்று புகழ்ந்து பாடினர். மேற்படி செட்டியாருடைய வரிசைப்படியைப் புகழ்ந்து,

"சிந்தைக் கினைத்தபடி செந்தமிழ்க்கீ ரின்றபடி
வந்தவருக் கன்னம் வழங்குபடி—சந்ததமும்
சீர்த்தி முறைதனை செயசண் முகவணிக
பார்த்திபன்தன் வாயில் படி."

என்று புகழ்ந்து பாடினர்.

நோய்க்கு மருந்து

இவருக்கு ஒருமுறை வெட்டைப் பிடிப்பு என்னும் நோய் உண்டாயிற்று. அதனால் மிகவும் வருந்தினர். பிறகு முறையூர் சண்முகம் செட்டியாரை யடைந்து தமக்குற்ற நோய்க்கொடுமையைக் கூறினர். சண்முகஞ் செட்டியார் தம்முடைய மருத்துவர்களைக் கொண்டு தக்க மருந்துகளைக் கொடுத்து அந்நோயைத் தீர்க்கச் செய்தார். அதனால் மகிழ்ந்த பிச்சுவையர்,

"விட்டுக் கொடுச்சாத்தை வேண்டும் முறைசதனில்
கட்டுக் கொடுச்சாத்தைக் கண்கையிலிட்—டுட்டினமாம்
வெட்டைப் பிடிப்பை விலுவித்தான் சின்னையன் செய்
கட்டழகன் சண்முகமே கண்."

என்று செய்யுள்மூலம் தமது நன்றியறிதலைப் புலப் படுத்திக் கொண்டார்.

சிலேடை வெண்பாக்கள்

பிச்சுவையரும் சண்முகம் செட்டியாரும் மதுரைக் குச் சென்றார்கள். சோமசுந்தரப் பெருமானைத் தொழுது

போற்றினார்கள். செட்டியார் ஐயரைப்பார்த்துச் சோம சுந்தரக் கடவுளுக்கும் திங்களுக்கும் சிலேடையாக ஒரு வெண்பாப்பாட வேண்டுமென்றார். உடனே ஐயர்,

"அம்மலைவாய் மேவுகையால் ஆனவர வேகொளலால்
செம்மையுறு மானிடஞ்சேர் செய்கையால்—வெம்மையுறும்
மாமனையே வென்றோன் மருகன் உயர்கிரியில்
சோமனையே சந்திரனாச் சொல்."

என்று பாடினார். பிறகு செட்டியார் மீனாட்சி யம்மைக்கும் திருமண மண்டபத்திற்குஞ் சிலேடையாக ஒரு வெண்பாப் பாடச்சொன்னார். அப்பொழுது ஐயர்,

"தாணுவினை மேவுகையால் தங்கவனை போடுதலால்
சேணிலுயர் கற்பகஞ்சேர் சீர்த்தியால்—காணிலஞ்சேர்
காவைநிகர் சண்முகவேள் கார்க்கிரியில் தென்னவனீ
பாவைகலி யாணமண்ட பம்."

என்று பாடினார். ஒரு சமயம் ஐயருக்குச் செலவுக்குப் பணமில்லாமல் மிக நெருக்கடியுண்டாயிற்று. அப்பொழுது சண்முகம் செட்டியார்பால் அடைந்து,

"பணவரவைப் புற்றின் பணவரவென் றெண்ணும்
குணவரிடம் யான்போய்க் குறுகேன்—பணவரவைக்
கண்முகந்துண் ணப்பால் கடைந்தெடுத்த துங்கனெனும்
சண்முகபூ பாவா தரி."

என்று பாடினார். செட்டியார் தக்கவாறு பொருள் வழங்கி யனுப்பினார். பிறகு ஒருகால் ஐயருக்குக் கடன் நெருக்கடி மிகுதியாயிற்று. பலரிடத்திலும் கடன் வாங்கியிருந்தார். எல்லோரும் பணத்தை உடனே தரவேண்டும் என்று நெருக்கினார்கள். அப்பொழுது ஐயர்,

"சீர்மலி கற்பகத் தினைக்கொடை யால்வெலும்
ஏர்மலி செங்கரத் திரவியும் மதியும்
காணமுற் றோட நயந்திகழ் விரலில்
வாணலஞ் சேரும் வயிரமோ திரமும்

நாட்டினை மயக்கு நவமணிப் பிரபை
காட்டிய உருத்திராக் கப்பணி யழகும்
கவிஞரை நிதமயங் காதுகாப் பேன்எனச்
செவிதாங் கையிலொளி சேர்ந்தகங் கணமும்
கடலிடைத் துயில்கன காம்பர தாரியும்
உடலிடைச் சுற்ற உளத்தவாக் கொள்ளும்
வத்திரம் இலங்க வளமினாள் வீடென
நித்தியம் வசிக்கும் நிறைதரு மார்பினும்
வெற்றிசேர் புயத்தினும் விளங்கிய பனிநீர்
முற்றும்விட் டரைத்த முழுமணச் சந்தனம்
புழுகுசவ் வாது புனைந்தயோத் தியில்வரு
மனுகுல ரெகுபதி மானப் பீட்டனில்
பாவலர் வாழ்த்தப் பவனிகொள் தனத
நாவலந் தீவினில் நாவலர் எவர்க்கும்
அன்னமும் ஆடையும் அளித்திடுஞ் சண்முக
மன்னவ என்கடன் மாற்றல்உன் கடனே."

என்று நிலைமண்டில ஆசிரியப்பா ஒன்றின்மூலம் தமது குறையைத் தெரியப்படுத்திக் கொண்டார். செட்டியார் ஆகவேண்டிய உதவிகளைச் செய்தார்.

இரங்கற்பா

இவருக்குப் பொருள் உதவி செய்து ஆதரித்தவர்களில் இராமநாதபுரம் அரசர் பாற்கர சேதுபதியும் ஒருவர். அடிக்கடி பாற்கர சேதுபதியிடமுஞ் சென்று பொருளுதவி பெற்று வருவார். இவருடைய சிலேடைப் பாக்களின் நயத்தையும் விரைவில் பாடுந்திறத்தையுங் கேட்டு மகிழ்ந்து இவருக்குச் 'சிலேடைப்புலி' என்னும் சிறப்புப் பெயரை வழங்கியவரும் அவ்வரசரே. அவ்வரசர் 1903-ஆம் ஆண்டிற் காலமானார். அப்பொழுது இவருக்கு மிகுந்த வருத்த முண்டாயிற்று:

"மையினையுஞ் சிந்தா மணியினையும் வென்றகொடைக்
கையினையும் வாய்ப்பிரசங் கத்தினையும்—துய்யபுகழ்
நின்றைக்கா னத்தி நிகர்பாற் கரபூபா
என்றைக்குக் காண்போம் இனி."

"பார்புலம்ப நீயான் பதிபுலம்ப ஈசனடி
யார்புலம்ப நீவான் அடைந்தனையே—கூர்புலம்பு
மன்னு தனுக்கை மணிப்பாற் கரபூபா
என்னகுற்றஞ் செய்தோம் இசை."

என்னும் இரங்கற்பாக்களைப் பாடி உள்ளம் உருகினார்.

காதல் பிரபந்தம்

இவருடைய காலத்தில் சிவகங்கை நாட்டில் முத்துவடுக நாததுரை என்பவர் அரசராக இருந்தார். பிச்சுவையர் அவர்மீது காதல் என்னும் நூலைச்செய்து கொண்டு போய் அரங்கேற்றஞ் செய்தார். முத்துவடுக நாததுரை தக்கவாறு நன்கொடை வழங்கிப் போற்றினார். முத்துவீரப்பபிள்ளை என்பவர் முத்துவடுக நாததுரையின் அவைக்களப் புலவராக அமர்ந்திருந்தார். அவர் ஐயரைப்பார்த்து, "முத்துவடுக நாததுரை" என்பதை ஒரு வெண்பாவில் அமைத்து ஐந்து நிமிடத்திற்குள் ஒரு செய்யுள் இயற்ற வேண்டும்," என்று கூறினார். உடனே ஐயர், "**கவடுக நாதனையே கைதொழுது வாழ்முத், துவடுக நாத துரை**" என்று இறுதி இரண்டடிகளும் அமையுமாறு வெண்பாவைப் பாடி முடித்துவிட்டார். முத்துவீரப்ப பிள்ளையும் பிறரும் ஐயருடைய திறமையைப் பெரிதும் வியந்து பாராட்டினார்கள்.

ஐயரும் மாணவரும்

ஐயரிடம் சில மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரை ஒருமுறை அழைத்துக் கொண்டு ஊற்றுமலைக்குச் சென்றார். இருதயாலய மரு

தப்ப தேவர் கிருட்டிணை பகவானைக் குலதெய்வமாகக் கொண்டு போற்றிவந்தார். அக் கடவுளுக்கு ஆண்டு தோறும் திருவிழா முதலியனவைகளைச் சிறப்பாகச் செய்வார். பூசைக்குப் பலகாரங்கள் நிருதியாகச் செய்யப்படும். அவைகளைச் செல்பவர்கட்கெல்லாம் வழங்குவார். அத்தகைய திருவிழா நடைபெற்ற சமயத்தில்தான் பிச்சனையர் சென்றார்.

"தச்சனெரு நாடுசக்குத் தலைநுசுப்புச்
சாணகியூர் முத்தனைபூ சனையோர் மந்திரி
இச்சைகொளரும் வாத்தியமென் றினையின் நாப்பண்
எனக்களித்து மற்றவிரு பாலும் உண்சோர்
அச்சமறக் கல்லடையார் மான்கள் பூவை
ஆகவிரு தலத்தினின்மா லணிமுன் னைக
மச்சர்குரு நாதிமன்னர் சிறைவைத் தேத்து
மனவலிதை யாலயபூ மானீ தானே."

தபதி. மானடு. பார்வை. வசுதை. மத்தி. மிதுலை. சிப்பி. சபரி. பட்டி. தடாரி. இச் சொற்களின் நடுவெழுத்தைச் சேர்த்தால் பஞ் சுத்துப்பட்டா என்று வருதல் காண்க. நடுவெழுத்தலங்காரம் அமைந்த இப் பாட்டு முதலியனவைகளைப் பாடிக்கொண்டு சென்றார். நல்ல நன்கொடையும் கிருட்டிணபகவானுக்குப் படைக்கப்பட்ட பலகார வகைகளும் தாரளமாக அகப்பட்டன. பலகாரங்கள் நெய்யில் செய்யப்பெற்றவை நிருதியாக இருந்தன. அவைகளை மூட்டையாகக் கட்டித் தம்முடன் வந்திருந்த மாணவர் தலைமீது எடுக்கச் செய்துகொண்டு ஊரைநோக்கிப் புறப்பட்டார். அந்நாளிலே இந்நாளைப்போலப் பறந்து செல்லும் மோட்டார் பஸ்கள் இல்லை. ஆகலே இருவரும் கால் நடையாக நடந்து வழி கடந்து கொண்டிருந்தனர். பல காரமூட்டை மிகக் கனமாக இருந்தது. ஐயரின் மாணவர் பலகாரத்தை நன்கு தின்று திணறிக்கொண்டிருந்தார்.

வழியிலே ஓரிடத்தில் பலகார மூட்டையை இறக்கிவைத் தப் பிறகு மாணவரின் தலையிலேற்றினர். அம் மாணவருஞ் செய்யுள் பாடுந் திறம் உடையவர். அவர்,

"எச்சகுலும் புகழ்படைத்த தென்னூற்று மலைமருகப்
பேந்தன் போற்றும்
நச்சரவில் நடிப்பவர்க்கு நைவேதித் திட்டதிவ்ய
லாடு லட்டு
வச்சுவச்சுத் தின்றுதின்று வயிறுகுறை யாமல்மிக
வருந்தும் வேலை
இச்சுமையைப் பிச்சுவையர எண்தலையில் ஏற்றுவதும்
இயல்பு தானே?"

என்று பாடினர். இதனைக்கேட்ட பிச்சுவையர் விழுந்து விழுந்து நகைத்தார். இச் செய்யுளைப் பலரிடமும் கூறினர்

திருப்பெருந்துறையில்

பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருப் பெருந்துறைப் புராணம் பாடி அரங்கேற்றஞ் செய்த பொழுது பிச்சுவையரும் அரங்கேற்ற விழாவுக்கு வந்திருந் தார். வேறு பல புலவர்களும் வந்திருந்தார்கள். அப் பதியிலே கட்டளைத் தம்பிரானாக அமர்ந்திருந்தவர் சுப்பிர மணியத் தம்பிரான். பிச்சுவையர் சுப்பிரமணியத் தம்பி ரானைப் பார்ப்பதற்குச் சென்றார். சுப்பிரமணியத் தம்பி ரானைப் பார்ப்பதற்கு வண்டிதானடார் முதலிய பலர் வெளியே காத்திருந்தார்கள். உள்ளே சென்ற பிச்சு வையர் சுப்பிரமணியத் தம்பிரானைக் கண்டதும்,

"இன்தொண்டர் சூழ எழிலார்நின் சேவைசெய
வன்தொண்ட சோதனை வான்கள்சிலர்—இன்தொண்டு
பித்தர்க்கே செய்சுப் பிரமணிய நின்னேலைக்
கத்திலே வந்திருந்தார் கள்"

என்று பாடினர். இவர் வினாவாகப் பாடியதைக் கேட்டுச் சுப்பிரமணியத் தம்பிரான் இவரைப் பெரிதும் பாராட்டினர். அப்பொழுது திருப்பெருந்துறையில் மாணிக்க வாசகர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. மாணிக்க வாசகர் காலைப்பூட்டிய தேரில் திருவுலா வந்தார். தேரில் பூட்டிய காளைகளைப்பற்றி ஒரு செய்யுள் இயற்ற வேண்டு மென்று வண்தொண்டர் விரும்பினர். அவ்வளவில் பிச்சுணையர்,

"வீடுபெற்ற வாதவூர் வித்தகனார் தேரிழுக்கும்
மாடுபெற்ற பேறுபெற மாட்டுவமோ—நீடுலகில்
வித்தை அறியாமல் வீணை வேயுழல்தே
கத்தைச் சுமந்தலைத்தோர் கள்"

என்று பாடினர். இதனைக் கேட்டவர்கள் பாராட்டினர்கள்.

ஐயரும் தண்டபாணியடிகளும்

பிச்சுணையருடைய பேச்சுச் சில சமயங்களில், அஃதாவது அறிஞர்களோடு பேசத்தொடங்குஞ் சமயங்களில் பாட்டாகவும் வெளிப்படும். வண்ணச்சரபம் திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என்று வழங்கப்பெற்ற தண்டபாணியடிகளை ஐயர் ஒருகால் ஓர் ஊரிலே கண்டார். அப்பொழுது ஐயர் வேட்டி துவைத்துக் கொண்டிருந்தார். அடிகளாரை உசாவத் தொடங்கியவர், "சாப்பாடு எங்கே?" என்று கேட்க எண்ணினர்,

"பூமிதனில் எங்கும் புகழ்முருக தாசரெனும்
சாமிக்கு நேரே தனமெங்கே—

என்று அரைவெண்பாவால் கேட்டார். தண்டபாணியடிகளும் செய்யுட்களை எளிதாகப் பாடும் இயல்பு அமையப் பெற்றவர். ஆகவே அவர் உடனே,

—தேமிக்க

செந்தமிழின் சீரும் திருக்கைவேல் ஏந்திவரும்
கந்தனன்பும் உள்ளமனைக் கண்"

என்று பாட்டாகவே வெண்பாவை முடித்து மறுமொழி கூறினார். இவ் வுரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மிகுந்த களிப்படைந்தார்கள்.

கயவனைப் பாடியது

ஓர் ஊரிலே செல்வன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் சின்னப்பிள்ளை. அவனுக்குக் கல்வியறிவு அடியோடு இல்லை. மூடர்களுக்கெல்லாம் முடிமணியாகத் திகழ்ந்திருந்தான். அறிஞர்கள் யாரேனும் புகழ்ந்து பாடிக்கொண்டு சென்றால் தடியை எடுத்துத்தான் நன்கொடை வழங்குவான். இம் முழுமகன் அடித்தாலும் அடித்துவிடுவானே என்று எப்புலவர்களும் இவன் குடியிருக்குந் தெருவழியாகக்கூடப் போவதில்லை. அறிஞர்களிடம் இருந்து புகழ்ச்சிப் பாடல் பெறவேண்டுமென்று இப் பேதைக்கு எவ்வாறோ ஓர் எண்ணம் உண்டாகிவிட்டது. சின்னப்பிள்ளைக்குத் திடீரென்று பாட்டில் மோகம் உண்டாகியுள்ள செய்தி எப்புலவருக்குந் தெரியாது. "யாரேனும் புலவர்களைக் கண்டால் என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று தன் ஏவலர்கட்குக் கட்டளையிட்டிருந்தான். எப்புலவரும் சிக்கவில்லை. பிச்சுவையர் ஒருநாள் சின்னப்பிள்ளையின் ஊருக்குச் சென்றார். சின்னப்பிள்ளையும் பிச்சுவையரும் ஒருவரையொருவர் நன்றாக அறிவார்கள். ஆனால் பேச்சுப் பழக்கம் இல்லை. பிச்சுவையரைக் கண்டதும் சின்னப்பிள்ளையின் ஏவலர்கள் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். பிச்சுவையர் சின்னப்பிள்ளையிடம் செல்வதற்குச் சிறிதும் விரும்பவில்லை. ஆனால் சின்னப்பிள்ளையின் வேலைக்காரர்

களோ ஐயரை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு "வந்து தான் ஆகவேண்டும்" என்று மல்லுக்கட்டினர். ஐயர் "சரிதான், இன்று நமக்குப் பிடித்தது சனி, இக் கொடியவனிடம் இருந்து எளிதாகத் தப்பப் போகிறதில்லை. வகை தெரியாமல் வந்து மாட்டிக்கொண்டோம். எவ்வாறுவது தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டும்." என்று தமக்குள் முடிவு செய்துகொண்டு சின்னப்பிள்ளையிடஞ் சென்றார். சின்னப்பிள்ளை ஐயரைப்பார்த்து, "என்மீது ஒரு செய்யுள் பாடுங்கள்; தக்கவாறு பரிசளிக்கிறேன்" என்று கூறினன். "நீ அளிக்கப்போகிற பரிசு தடிப்பூசை தான். எனக்கு நன்றாகத் தெரியும்" என்று ஐயர் தம் முடைய மனதிலே எண்ணிக்கொண்டு,

"வாலேப மானைதயும் வாலெடுக்கும் ஞானியையும்
ஆலாலங் கொண்ட அரவினையும்—சீலமிலாப்
பேயினையுங் கொண்டுசின்ன பிள்ளையவா னைப்படைத்தான்
மாயனரு ளுக்கமல மன்"

என்று பாடினர். சின்னப்பிள்ளையவானைப் படைத்தான் என்பதை ஐயர் இசையோடு நீட்டிப் பாடியபோது சின்னப் பிள்ளைக்கு அளவுகடந்த மகிழ்ச்சி தலைகால் தெரியாமல் உண்டாகிவிட்டது. உடனே அவன் தன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலி ஒன்றை எடுத்து ஐயருடைய கழுத் திலே போட்டு ஆரவாரஞ் செய்தான். ஐயரோ, "நீ இவ்வாறு பரிசளிப்பாய் என்று தெரிந்திருந்தால் நன்று வே பாடியிருப்பேனே" என்று மனதிற்குள் எண்ணிய வராக விரைந்து அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டார். காரணம் என்ன தெரியுமோ? "திருமாலாலே படைக்கப் பெற்ற நான்முகனவன் கழுதையையும் நாயையும் நச்சுப் பொருந்திய பாம்பையும் நல்லொழுக்கமற்ற பேயையும் ஒன்றுக்கி இந்தச் சின்னப்பிள்ளையைப் படைத்தான்" என்று பொருளமைத்துப் பாடியிருந்ததுதான்.

குண நலன்கள்

ஐயர் சிறந்த குணநலன்கள் அமையப்பெற்றிருந்தார். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் ஐயருக்கு மிகுந்த அன்பும் குருபக்தியும் உண்டு. தம் ஆசிரியராகிய வன்தொண்டச் செட்டியாரையும் அவ்வாறே பாராட்டினர். இவர் வழிமுறையாகவே புலமைத்தன்மை அமையப்பெற்ற குடும்பத்தில் அமையப்பெற்றவராதலின் இவருடைய நாவில் கலைமகள் சிறப்பாக வீற்றிருந்தாள். இவர் மிகுந்த பொறுமைக் குணம் உடையவர். பொறுமைக்குணம் இவரிடத்தில் சிறிதும் இல்லை. தம்மை யாதரித்த வள்ளல்கள் எல்லோரிடமும் இவர் மிகுந்த நன்றியறிதலுடையவராக விளங்கினர். மற்றும் இவரிடம் சிறந்த குணநலன்கள் பல அமைந்து விளங்கின.

இயற்றிய நூல்கள்

இவர் அவ்வச்சமயங்களில் தனிப்பாடல்கள் பல இயற்றியதன்றித் தனி நூல்களுஞ் செய்தார். இவர் செய்த காகத் தெரியும் நூல்கள்:

1. முத்துவடுகநாததுணைமீது காதல் பிரபந்தம்
2. திருப்பரங்குன்றம் முருகன் ஆநந்தக்களிப்பு
3. பனங்குடிப் பெரியநாயகியம்மை பதிகம்
4. சங்கராச்சாரியார் பதிகம்
5. பொன்மாரிச் சிலேடை வெண்பா
6. மதுரை திரோட்டக யமகவந்தாதி
7. குன்றக்குடி சண்முகநாதர் உலா

முதலியன.

மக்கள்

இவருக்கு மக்கள் மூவர் உள்ளனர். அவர்களும் சிறந்த தமிழ்ப்புலமை அமையப்பெற்றவர்களாக விளங்கு

கின்றனர். தந்தையார் இயற்றிய நூல்களையும் பதிப்பித்து வெளியிடுகின்றனர்.

சமுத்துப்புலவரை எதிர்த்தது

யாழ்ப்பாண வடகோவைச் சபாபதி நாவலர் தேவகோட்டைக்கு வந்தார். அன்பர் சிலருடைய வேண்டுகோட்படி சொற்பொழிவு ஒன்று செய்யத் தொடங்கினர். பெரும்புலவர் வந்திருக்கிறாரே என்று பலபேர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். நாவலர் சொற்பொழிவு செய்த போது நாவலத்தன்மையைக் காட்டி நாவடக்கமில்லாமல் வன்தொண்டைச் செட்டியாரை மதியாமற் பேசினர். உடனே ஐயருக்குச் சினமுண்டாகிவிட்டது.

> "கதியோ கடலைப் பொருவதி காளுக்கு நாட்குறையும்
> மதியோ கதிர வனையொளி மாய்ப்பது மத்தெறிதண்
> தயிரியஞ் சொல்வது தாழ்ந்தசபா
> பதியோகம் வன்தொண்டர் முன்பாற் பிசகம் பண்ணுவதே."

என்னும் பாடலைப் பாடினர். உடனே எல்லோரும் புறப்பட்டுப் போய்விட்டனர். அவை கொடியிற் கலைந்தது.

இறுதி

இவர் 1910-ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்பின்னாகக் காலமானர். இவ்வரலாற்றுச் சுருக்கம் அன்பர்கள் சிலரிடம் கேள்விப்பட்டது எழுதப்பட்டது.

ச. பால்வண்ணை முதலியார்

தோற்றம்

திக்கெலாம் புகழும் திருநெல்வேலியைச் சேர்ந்த பேட்டையென்னும் ஊரில் 1866-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சண்முகசுந்தர முதலியார். இவருடைய குலம் தொண்டைமண்டலக் கொண்டைகட்டி வேளாளர் குலம்.

கல்வி

தொடக்கப்படிப்பை முடித்தபின் சீவைகுண்டத்தில் தம்முடைய மாதுலர் வீட்டில் இருந்து ஆங்கிலங் கற்றார். வைகுண்டபதிக் கவிராயர் என்பவரிடத்தில் இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்த தமிழ்ப்புலமையும் பெற்றார்.

வாழ்க்கை

கல்வி கற்றுத் தேறியபின் திருநெல்வேலியைத் தம் முடைய இருப்பிடமாகக் கொண்டார். அங்குச் சரசுவதி விலாசம் என்னும் பெயருடன் நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தினர். சைவசித்தாந்த நூல்களையுந் தக்க ரிடத்திலே கற்றுணர்ந்தார். சொற்பொழிவாற்றல், செய்யு ளியற்றுந் திறமை முதலியன நன்கு அமையப்பெற்று விளங்கினர். சமயநூல்கள் பலவற்றை அச்சிற் பதிப் பித்து வெளியிட்டார். மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினர் களில் ஒருவராகவும் இருந்தார். திருப்புகழ்ச் சுவாமிகள் என்னும் முருகதாச அடிகள் காலமானபோது,

"செல்லூதனில் தவப்புலமை நிரம்ப வாய்ந்து
நீடூமாத் தூரதனில் நிலவி வாழ்ந்தே
எல்லையிலா தூவியற்றி மார்பில் வேலோ
டெழிலாருங் கௌமாரத் திணைசந்து பூவில்

வெல்லலருங் கலிவென்று நீதான் விண்ணில்
வெற்றிகொளப் போயினையோ அலது வேலோன்
சொல்லலுநற் றிருவடிக்கீழ் தங்க வென்றே
சொன்முருக தாசவள்ளல் தூய கோவே.”

என்னுஞ் செய்யுளைப் பாடி இரங்கினர். தருமபுர ஆதீனத்தின் தென்னாட்டுக் காரியதரிசியாகவும் பணிபுரிந்தார். தருமபுர ஆதீனத்தலைவர் திருநெல்வேலிக்கு எழுந்தருளியபோது,

“எனக்கருளச் செம்மணியே இங்குவா என்ன
உனக்குரிய தன்மைவிட்டிங் குற்றாய்—தினக்கதனல்
மாணிக்க வாசகப்போர் வந்ததென்பேன் அன்பருனக்
காணிக்கை கொண்டவனே கான்.”

என்பது முதலிய பாடல்களைத் தலைவர்முன் பாடினர்.

இயற்றிய நூல்கள்

1. தருக்கசூத்திரம்
2. பிரசங்கதீபிகை
3. பண்டார மும்மணிக்கோவை
4. மெய்ஞ்ஞான சாரம்
5. பதிபசுபாசத்தொகையுரை
6. சித்தாந்த ஞானதீபாவளி

என்பன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

இறுதி

இப்பெரியார் 1908-ஆம் ஆண்டிற்குப்பின் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

5. கோபாலபிள்ளை

தோற்றம்

இவர் தஞ்சைமாவட்டத்திலேயுள்ள ஒரத்தநாட்டை சேர்ந்த முத்தாம்பாள்புரம் என்னும் ஊரினர்.

கல்வி

இவர் பள்ளிக்கல்வியைக் கற்றுத் தேறியபின் புலமைக் கல்வியைக் கற்க விரும்பினர். முதலில் முத்தாம்பாள்புரம் நாராயணசாமி உபாத்தியாயர் என்பவரிடத்தில் சில இலக்கண இலக்கியங்களைக் கற்றார். மிகுந்த இயற்கையறிவு நிரம்பப் பெற்றிருந்தபடியால் மேலும் பல நூல்களைக் கற்க விரும்பினர். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பெருமையைப் பலர் வாயிலாக அறிந்தார். அப்போது மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாயூரத்தில் தங்கியிருந்தார். கோபாலபிள்ளை மீனாட்சிசுந்தரம்பிள்ளையை அடைந்து தமக்கும் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். பிள்ளையவர்களும் இவர் வேண்டுகோளுக்கிணங்கித் தம் மாணவர்களுடைய கூட்டத்திலே சேர்த்து நூல்களைப் போதித்து வந்தார்.

எழுத்தாளர்

பணியேட்டிலே விரைவாக எழுதுவதில் கோபால பிள்ளை மிகவுந் தேர்ச்சிபெற்றவராக இருந்தார். ஆகவே மீனாட்சிசுந்தரம்பிள்ளை தாம் நூல்கள் இயற்றும்போது அவைகளை ஓலையில் எழுதுவதற்குக் கோபாலபிள்ளையை எற்படுத்தி யிருந்தார். கோபாலபிள்ளையும் பிள்ளையவர்கள் பாடல்களைச் சொல்லச் சொல்ல விரைவாக எழுதிப் புகழ் பெற்றார். ஒருநாள் ஒருவர் கோபாலபிள்ளையைப் பார்த்துப், "பணியோலையில் விரைவாக எழுதுவதில் நீர் மிகவும் கெட்டிக்காரர். உம்மைப்போல் விரைவாகவும் அழகாகவும்

எழுதுபவர்களைப் பார்க்க முடியாது" என்று புகழ்ந்தார். இப் புகழுரைகளைக் கேட்கவே கோபாலபிள்ளைக்கு மிகுந்த செருக்கு உண்டாயிற்று. அவர் தம்மைப் புகழ்ந்துரைத்த வரைப் பார்த்து, "ஆனாலும் என்ன? ஐயா அவர்கள் என்னுடைய கைத்தினவு தீருமாறு பாடல்களைச் சொல்லு கிறார்களில்லையே" என்று ஒருவாறு தற்பெருமையாகப் பேசினர். இம் மொழிகள் உண்டுவிட்டு உள்ளே படுத் திருந்த பிள்ளையவர்களின் காதுகளிலும் வீழ்ந்தன.

செருக்கறுத்தல்

ஒருநாள் காலையில் பிள்ளையவர்கள் நூல் இயற்றத் தொடங்கினர். கோபாலபிள்ளை எழுதிக்கொண்டிருந்தார். ஏழுமணியில் இருந்து பத்துமணிவரை நூல் இயற்றுவதும் பிறகு நீராடிவிட்டுப் பூசை முதலியவைகளைச் செய்வதும் வழக்கம். அன்று பிள்ளையவர்கள் மிகு விரைவாகப் பாடல் களைச் சொல்லிக்கொண்டு சென்றார். பத்துமணி ஆன பிறகும் வழக்கம்போல் எழுவில்லை. மேலும் பாடல்களை இயற்றிக்கொண்டே யிருந்தார். அன்று பாடலியற்றிச் சொல்லிய விரைவு மிகக் கடுமையாக இருந்தது. ஒன்பது மணிக்கே கோபாலபிள்ளைக்குக் கைவலிக்கத் தொடங்கி விட்டது. எப்பொழுது பத்துமணியாகும் என்று எதிர் பார்த்துக்கொண்டே எழுதிக்கொண்டிருந்தார்! பத்து மணியான பிறகும் பாடல் இயற்றுவது நிற்காமல் நடை பெறவே கோபாலபிள்ளைக்குக் கையில் இரத்தம் குழம்பி விட்டது. பல்லைக் கடித்துக்கொண்டே எழுதிக்கொண் டிருந்தார். மணி பதினொன்றும் பன்னிரண்டும் ஆகி விட்டது. அப்பொழுதும் பிள்ளையவர்கள் பாடலியற்று வதை நிறுத்தாமற் சொல்லிக்கொண்டு போகவே கோபால பிள்ளை ஏட்டையும் எழுத்தாணியையும் வைத்துவிட்டு எழுந்துவிட்டார். பிள்ளையவர்களின் முன் விழுந்து

பணிந்தார், "இனிமேல் என்னால் ஓர் எழுத்துக்கூட எழுத முடியாது. நான் எழுதுவதில் கெட்டிக்காரன் என்னும் ஆணவம் இன்றோடொழிந்துவிட்டது" என்றார். பின்னே பவர்களோ, "கை வலிக்கிறது என்று சொல்லியிருந்தால் முன்னரே நிறுத்தியிருப்பேனே! என் சொல்லவில்லை? நல்ல பகுதியாக இருந்தபடியால் வரையில் நிறுத்த மனம் வரவில்லை. சொல்லிக்கொண்டே யிருந்துவிட்டேன்," என்றார்.

அன்று நிகழ்ந்த செய்தியை உணர்ந்தவர்கள், "உமது தருக்கு அடங்கிற்றா?" என்று கோபாலபிள்ளையைக் கேலி செய்தார்கள். மேலும் சிலகாலம் கோபாலபிள்ளையால் எழுதமுடியாமல் போய்விட்டது. தாம் கெட்டிக்காரத் தன்மை வாய்ந்த எழுத்தாளர் என்னும் எண்ணமும் அன்றுமுதல் கோபாலபிள்ளையைவிட்டு நீங்கிவிட்டது.

---

௩. இலக்கண முத்தையா

தோற்றம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி தாலுகா பொம்மையாபுரம் என்னும் ஊரிலே 1861-ஆம் ஆண்டிலே இலக்கண முத்தையர் பிறந்தார். தந்தையார் பெயர் சரவணையர். தாயார் பெயர் சுப்பம்மாள்.

கல்வி

இவர் உரிய காலத்தில் பள்ளிக் கல்வியைப் பயின்று முடித்தபின் இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை எய்த விழைந்தார். அந்நாளிலே, மதுரைக்கு அண்மையில் உள்ள சோழவந்தான் சிண்ணிமடத்தில் சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார் கல்வி கேள்விகளில் சிறந்தவ

நாக விளங்கினர். அவரிடம் பலரோர் கல்விகற்றுச் சிறும் சிறப்பும் எய்தினர். இலக்கண முத்தையா சிவப்பிரகாச அடிகளை அடைந்து சிற்றிலக்கியங்களையும் பேரிலக்கியங் களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் நன்கு கற்றுத்தேறினர். இவருக்குப்பிறகு அரசன்சண் முகனர் அப்பெரியாரிடம் கல்வி கற்றார். எனவே அரசன் சண்முகனாரும் இலக்கண முத்தையாவும் ஓராசிரியரிடத்தே கல்வி கற்றவர்களாவர்.

வாழ்க்கை

இவருக்குத் திருமணம் நடைபெற்றது. ஆயினும் இரண்டோராண்டிற்குள் குடும்ப வாழ்க்கையைத் துறந்து தனிமை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். இவர் சிறந்த ஒழுக்கமுடையவர். சிறந்த நோன்புகளையெல்லாம் மேற்கொண்டொழுகினர். நாள்தோறும் சிவபூசைபுரிதலை வழக்கமாக மேற்கொண்டிருந்தார்.

மாணவர்

திருக்குறட் குமரேச வெண்பா என்னும் பெரிய நூலையும், தருமதீபிகை, பாஞ்சாலங்குறிச்சி வீரச் சரித் திரம், வீரபாண்டியம், அரும்பொருள் அழுகம், இந்தியத் தாய்நிலை முதலிய அரிய நூல்களையும் இயற்றியவரும், புலவர் உலகம் என்னும் பெயரோடு கம்பன் கலைநிலையை ஆராய்ந்து திங்கட்கொரு வெளியீடாக வெளியிடுபவரும் கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப்பெயர் பெற்றவரு மாகிய செகவீரபாண்டியன் அவர்கள் கல்வி கற்றது இந்த இலக்கண முத்தையாவிடமே.

இயற்றிய நூல்கள்

அரிமழம் சிவானந்த அடிகள் என்னும் பெரியார் ஒருவருடைய வேண்டுகோளின்படி சுங்குருமம்பையந்தாதி முதலிய நூல்களை இவர் இயற்றினர்.

"பையர வணிந்த வேணிப் பரமனுக் கொருசே யான
செய்யசெங் குரும்பை நாதன் திருவடி முடிமேல் கொண்டேன்
மையனல் போலும் கோல மறலிதீ வாரல் வந்தால்
உய்யலை நன்கு சொன்னேன் உண்மையுய்த் துணரு வாயே."

என்பது இவர் இயற்றிய பிறிற்றுப்பத் தந்தாதியில் ஒரு செய்யுளாகும்.

தன்மை

கல்விகற்க விரும்பித் தம்மை யடைந்தவர்கட்கு மிகு அன்போடு கற்பிக்கும் கடமையை இவர் மேற்கொண் டிருந்தார். கல்வி கற்காத பிறர் தம்மிடம் உரையாடுங் காலும் அவர்கள் பலனடையத்தக்க நல்லுரைகளை இடை யிடையே கூறுவார். ஆசிரியர்கட்குத் தெய்வங்கொள்கை அமைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அத்தெய்வங்கொள்கை இவர்பால் நன்கு அமைந்திருந்தது. இறைவனிடத்துமட்டுமல்லாமல் அவனுடைய அடியார்க ளிடத்தும் இவர் பேரன்புகொண்டிருந்தார். சிவனடியார் களைச் சிவனென்றே போற்றுவார். சிறியோரை இகழார். கல்வியறிவற்றவர்களும் இவரைக் கண்டால் மடமை நீங்கப் பெறுவர். அவ்வாறுதற்கு இவருடைய அறிவொளி ஏதுவாக அமைந்திருந்தது.

இறுதி

சிறந்த அறிஞராகத்திகழ்ந்த இவர் 1912-ஆம் ஆண்டு சூன்திங்கள் ஐந்தாம்நாள் இறைவன் திருவடி நீழலை யடைந்தார். இவருடைய பிரிவாற்றுமைக்கு வருந்திய செகவீர பாண்டியனர், இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர். அப் பாக்கள் குருவின்பிரிவு என்னும் பெயருடன் செகவீர பாண்டியனர் அவர்களுடைய இந்தியத் தாய்நிலை என்னும் அரிய நூலுள் வெளியாகியுள்ளன. அப் பாக்கள் பொருட்

செறிவும் உருக்கமும் இனிமையும் அமையப்பெற்றன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க.

"ஆதரவாய்க் கற்பிக்கும் அருள(து) எங்கே
ஐயாஎன் றெனையழைக்கும் அருமை எங்கே
கோதகலப் புகல்தருநன் மொழிகள் எங்கே
கொவ்வைவனைக் கனிந்தகுரு மணிவாய் எங்கே
பூதரம்போல் அசையாத புலமை எங்கே
பொய்யாமை முதலாய குணங்கள் எங்கே
ஆதிபரன் அடிமலர்க்கே உள்ளம் தந்த
ஐயனே இலக்கணமுத் தமிழர் வேந்தே." (க)

"வானுலகத் தவர் உன்னை எதிர்கொண் டேத்தி
வருகஇங்கு வருகஎன வாழ்த்தி னாரோ
தேனெழுகு தமிழாயலங்கல் செங்கண் மாலும்
திசைமுகனும் சிந்தையுவந் தன்பு கொண்டு
கானுலவு கொன்றையணி வேணி நாதர்
கழல்கண்டோய் உன்பெருமை கண்டோம் என்றே
ஆனபரி வோடழைத்தவ் வுலகுற் றாரோ
ஐயனே இலக்கணமுத் தமிழர் வேந்தே." (உ)

"சிலமுடன் ஒழுகிவரு செயல்கள் காட்டிச்
சித்தத்தைச் சுத்தமாத் திருத்தல் காட்டிக்
காலமிடம் கருதிவரு கருமம் காட்டிக்
கண்டவுயிர்க் கிதம்புரியும் கருணை காட்டி
ஞாலமறிந் தொழுகிவரு நயங்கள் காட்டி
நலம்பலவும் தெளிவாக நன்கு காட்டி
ஆலமர்ந்த பரன்காட்டும் அருமை காட்டும்
ஐயனே இலக்கணமுத் தமிழர் வேந்தே." (ங)

எ. அழகிரிசாமி

தோற்றம்

இவர் சேதுநாட்டிலே இராமநாதபுரத்தில் தோன்றியவர். பள்ளிக் கல்வியைப் பாங்குடன் பயின்று முடித்தபின் அவ்வூரில் இருந்த வேலாயுதக் கவிராயர் என்பவரிடம் சில சிறு இலக்கண இலக்கியங்களைக் கற்றார். மேலும் கல்வி கற்பதற்குத் தக்கவர்களைத் தேடிக் கொண்டிருந்தார். அந்நாளில் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை திருநெல்வேலியில் அமர்ந்து மாணவர் பலருக்குக் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பெருமையைப் பலர் வாயிலாகவும் கேள்வியுற்ற அழகிரிசாமி மீனாட்சிசுந்தரம் பிள்ளையை அடைந்து கல்வி கற்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்.

முட்டாள் பட்டம்

ஒருநாள் அழகிரிசாமி தம் உடன் பிறந்தார்களோடு பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். இவருடைய உள்ளம் கல்வியிலேயே அழுந்தியிருந்தபடியால் தண்ணீர் இறைக்கும் வேலையை நன்றாகச் செய்யாமல் இழுத்துப் பறித்துக் கொண்டிருந்தார். இதனைப்பார்த்த இவருடைய உடன் பிறந்தவர் சினங்கொண்டார். "நீ என்ன வடிகட்டின முட்டாளாக இருக்கிறாய்? தண்ணீர் இறைப்பதற்குக்கூட நன்றாகத் தெரியவில்லையே. நீ எவ்வாறு பிழைக்கப்போகிறாய்?" என்று கேட்டார்.

பிள்ளையவர்களை அடைதல்

உடனே அழகிரிசாமி தம்மை இகழ்ந்துரைத்தவர்களைப் பார்த்து, "நான் உங்களோடு சேர்ந்தபடியினாலேயே இவ்வாறு முட்டாளானேன். இன்னும் உங்களோடிருப்பே

னானால் பெரிய முட்டாளாகப் போய்விடுவேன்," என்று கூறிவிட்டு ஊரைவிட்டுப் புறப்பட்டார். திரிசிரபுரத்தை யடைந்து மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டார். தமக்கும் கல்வி கற்பிக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டு அவரிடமிருந்து கல்வி கற்கலானார். நுண்ணர்வு வாய்ந்தவராக இருந்தபடியால் இரண்டோராண்டுகளில் நல்ல தேர்ச்சியடைந்தார். பிறகு தமது ஊரையடைந்தார்.

ஆசிரியர்

ஊரையடைந்த ராசு நாம் கற்ற கல்விமூலமே வாழ்க்கை நடத்தவேண்டுமென்று முடிவு செய்தார். மாணவர் சிலரைச் சேர்த்து அவர்கட்குக் கல்விகற்பிக்கத் தொடங்கினார். கல்வி கற்பிக்கும் ஆற்றல் நன்றாக அமைந்திருந்தது. ஆகவே நல்ல போதகாசிரியர் என்னும் பெயரை அடைந்தார். இவருடைய போதனைத் திறமையை நன்குணர்ந்த பொன்னுச்சாமித் தேவர் தம் அருமைத் திருமகனாகிய பாண்டித்துரைக்கு இவரைத் தமிழாசிரியராக ஏற்படுத்தினார். பாண்டித்துரைக்குத் தமிழ் மொழியினிடத்திலே தணியாக் காதல் உண்டாகுமாறு தக்க முறையில் நன்றாகக் கற்பித்தார். இவர் கல்வி கற்பித்த திறமையைப் பின்னாளில் பாண்டித்துரைத் தேவர்,

"இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர் பிள்ளையவர்களுடைய மாணவர்களும் மாணவர்களின் வழிமுறையைச் சார்ந்தவர்களுமேயாவர். எனக்குத் தமிழாசிரியராக இருந்த நால்வர்களில், பிள்ளையவர்களுடைய மாணாக்கர் மூவர். அம் மூவர் அழகிரி ராசுவும், மதுரை இராமசாமிப் பிள்ளையும், திருவாவடுதுறை யாதீனவித்துவானாகிய பழநிக்குமாரத் தம்பிரானவர்களும்

ஆவர். அவர்களுள் அழகிரிசாமி என்பவர் பாடங் கற்பிக்கும் அழகும், தமிழ்நயத்தைச் சுவைபடப் புலப்படுத்தும் விதமும் அன்புடைமையும் சொல்லி யடங்குவனவல்ல. எனக்குத் தமிழில் பற்றுண்டா னது அவராலேயே. பின்னையவர்களுடைய குணவிசேடங்களையும் பாடல் நயங்களையும் அடிக்கடி சொல்லிக்கொண்டே யிருப்பார்.''

என்று பலரிடத்திலும் பாராட்டிப் பேசியிருக்கிறார். இவ்வாறு தமிழில் வல்லவராக இருந்த இவர் பாண்டித் துரைத் தேவருக்குக் கற்பித்தபின்னும் பலருக்குக் கல்வி போதித்துத் தமிழ்த்தொண்டு செய்தார். இவர் நூல் செய்ததாகத் தெரியவில்லை. காலமான ஆண்டு முதலிய வைகளும் விளங்கவில்லை.

அ. பாலகிருட்டிணை கவிராயர்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே மதுரைமா வட்டத்திலே உள்ள முறையூரில் அந்தணர் குலத்தில் எறக்குறைய நூறு பாண்டுகளுக்கு முன்பு பாலகிருட்டிணை கவிராயர் தோன்றினார். தக்கவர்களை அடுத்துக் கல்விகற்றுச் சிறந்த புலவராவர். வடமொழியிலும் வல்லவர். கோயிலில் மறை யோதுதல் இவருடைய தொழில். அதன்பொருட்டு இவருக்குப் பூதானமும் உண்டு. பிறந்த காட்குறிப்புக்கள் பார்ப் பதிலும் வல்லவர். பழ இராமன் செட்டியார் முதலியோர் இவர் காலத்தில் சிறந்த செல்வராகவும் கொடையாளிகளாக வும் விளங்கியிருந்தனர்.

அறச்சாலைக்கவி

இராமன் செட்டியார் சத்துருசங்காரநகரிலே அறச்சாலை ஒன்று அமைத்து வழிச்செல்வார்களின் பசி தீர உணவிடுதற்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது இவர்,

"திருமருவு முறைசைவளர் மீநலோசனவல்லி
சேவடி வணங்கி யேத்தித்
திகழ்பழநி யப்பவணி கேந்திரசு தாசுரன்
செய்தவத் தால்உ தித்த
செல்வனாஞ் சுப்ரமண் யக்குரிசில் சின்னையா
சீலமுறு பழநி யப்பன்
சீரான மூவர்க்கு மனுசனென வோங்கியாண்
சிங்கடா கைகள் செலுத்தி
பருவரதின் மதனமார்க் கண்டசிவ பத்திப்ர
தாபசெய துங்கன் என்னப்
பாருலகு ளோர்துதித் தகமகிழ நற்கீர்த்தி
பாலனஞ் செய்தெ னாளும்
பணிலங்கள் அடர்சத்ரு சங்கார நகர்மீது
பரிதிமதி யுளவ ரையிலும்
பண்புமிகும் அனசத்ர தர்மப்ர திட்டையும்
பண்ணிமனு விற்சி றந்து
தருவைந்தும் நாணமுற எக்கால வேளையும்
சந்தோட கரமா கவே
தாதா வெனப்பகரு மாதுலர்க் குதவுரவி
தனயனாம் கர்ன சமுகம்
தன்னுயிர் எனப்புவன மன்னுயிரை ரட்சணைசெய
தர்மரா சேந்திர சமுகம்
சத்யமொழி நிறைவுறப் பாலித்த குணவரிச்
சந்த்ரபூ பதியின் சமுகம்
கருணைதவ றாமலே சரணடைந் தோர்களைக்
காக்குமக ராச சமூகம்
காதலெனு நல்தமிழ்ப் பாமாலை சூடியெக்
காலுமகிழ் பால கிருட்ண

கவிராச னுக்குநவ நிதியாதி ஈந்துகுடி
காக்கின்ற வள்ளல் சமுகம்
கனகன்ஒப் பனையசெய ராமசா மிப்பிரபு
காண்டீபன் சமுகம் இதுவே."

என்னுஞ் செய்யுளைப் பாடினார்.

கிணறு

அந்நாளில் சரியாக மழை பெய்யவில்லை. தண்ணீர் கிடைக்காமல் மக்கள் பெரிதும் வருந்தினர். பலர் பல விடங்களில் கிணறு தோண்டினார்கள். கிணற்றில் தண்ணீர் ஊறவும் இல்லை. அதனால் மக்கள் தொல்லை மிகுதியாயிற்று. சண்முகம் செட்டியாருடைய பொருளுதவியைப் பெற்று இவர் ஒரு கிணறு வெட்டினார். இவருடைய கிணற்றில் இருந்துமட்டும் தண்ணீர் மிகுதியாக ஊறிற்று. அப்பொழுது இவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து,

"விண்முகத்தி னின்றீசர் சடையின் மீது
விளங்கிவரு கின்ற கங்கா நதியைப் போலும்
பண்முகப்பா வலர்இன்சொல் சுவையைப் போலும்
பங்கயமின் உலவுமுறைப் பதியின் மேவி
எண்முகத்துங் கீர்த்திபுனை ராம சாமி
எனும்வணிகப் பூமான்தன் இதயம் போலும்
சண்முகப்பேர் வாய்ந்தசய தீரன் செம்பொற்
றனிநிதியால் சலதிநிதி தனைக்கண் டோமே."

என்று பாடினார்.

திருமண உதவி

இவருடைய மைந்தனுக்குத் திருமணஞ் செய்ய வேண்டியதன்பொருட்டு மேற்படி இராமசாமிச் செட்டியாரிடத்தில் பொருள் உதவியை வேண்டி,

"நற்புகழ்சே ரும்முறைசை ராமநா தேந்திரனும்
கற்பகம்பார்த் தாலென் கலிதீரும்—அற்புதஞ்சேர்

கற்றகவி ஞோரைக் கனவினிலும் எண்ணாத
மற்றவர்பார்த் தால்தீரு மா?"

என்பது முதலிய செய்யுட்களைப் பாடினார். செட்டியார் திருமணம் முடித்தற்கு வேண்டிய பொருளை வழங்கினார். அதனால் உள்ளங்களித்த இவர்,

"நந்துலவுந் தென்முறைசை ராமநா தேந்திரநின்
சந்ததிகள் யாவுந் தழைத்திடவென்—மைந்தனுக்குப்
பூதானம் மேலாய்ப் புகழுகின்ற பூண்கன்னி
காதானம் செய்தாய் கனிந்து."

என்பது முதலிய செய்யுட்களால் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். இவர் சண்முகம் செட்டியார் மீது பாடிய பாடல்கள் பல.

பல வேண்டுகோள்கள்

இவருக்கு வீடு ஒன்று வேண்டியதாக இருந்தது. அப்பொழுது,

"மன்னா திருமக ளார்வணி காமணி யேதுதிமா
தென்னா கவிக்கு மகிழ்நிதி யேசெழுங் காருலவும்
பொன்னா கதிக்கும் மதனாபூ மாமுறைக் கண்ணிலகு
கன்னா மதிமனை தாதாநீ சண்முக காநிதியே."

என்னுஞ் செய்யுளைச் சண்முகம் செட்டியார் மீது பாடினார். மேற்படி செட்டியார் தக்க சமயத்தில் ஓர் ஆன் வழங்கியதைப் பாராட்டி,

"மீனவளார் முறைசைநக ரத்தில் மேவி
விளங்குவணி கோத்தமரில் விசயன் நேராம்
தானகர்னன் எனும்ராம நாத வள்ளல்
தவசுதன்அம் மால்கருப்பன் செட்டி பூமான்
மானபரன் பாலகிருட்ண கவிக்கிந் நாளில்
வசிட்டசுர பிக்குமேல் எனவ ழுத்த
வானவர்கோன் அகமகிழத் தந்து சிந்தா
மணியெனவே வாழ்வுற்று வளர்கின் றானே."

என்னுஞ் செய்யுளைக் கூறினர். மற்றும் பல சமயங்களில் பலவகையான பாடல்களைப் பாடினர்.

"முறையூர் என்னும் வளம்பதியில்
முகிலாய் வளர்சின் னையவணிகன்
முதிருந் தவத்தின் பலன்தானே
முதன்மைப் புதல்வன் ஆகிவந்தான்
தறையோர்ப் புகழிச் சண்முகவேள்
தயவுக் கிணைந்தா யடிமகளே
சாசம் புரிந்து நயம்பேசிச்
சந்தக் களபங் கற்பூரம்
மிறையே யகலப் பூசிமலர்
வேய்ந்து வெள்வெற் றிலைதுவர்க்காய்
வினாத்து கொடுத்துக் குளிர்மகர
வீணை வர்ணக் களமீட்டிக்
குறைவு தீர்க்கும் கற்பகத்தில்
கூறும் வல்லி சாதமென
குன்றும் இரண்டு புயங்களனனும்
கொழுகொம் பேறி வாழ்வாயே."

இவர் இயற்றிய நூல்கள்

இவர் சண்முகம் செட்டியார், சண்முகம் செட்டியார் குடைய தந்தை ஆகியோர் மீது,

1. காதல் பிரபந்தம்
2. விசயக் கும்மி
3. சித்திர கவி

முதலிய நூல்களும் தனிப்பாடல்களும் இயற்றி யுள்ளார்.

௯. பீமகவிப் புலவர்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே குன்றக்குடிக்கு அண்மையில் உள்ள செந்நெற்குடி என்னும் ஊரில் 1858-ஆம் ஆண்டில் பீமகவிப் புலவர் தோன்றினார்.

கல்வி

தொடக்கத்தில் பள்ளிக் கல்வியை நன்கு பயின்றார். பிறகு திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து அப்பொழுது சின்னப்பட்டத்தில் அமைந்திருந்த நமச்சிவாய தேசிகரிடத்தில் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமை பெற்றார். பிறகு ஊரையடைந்து பலருக்குக் கல்வி கற்பித்தார்.

வாழ்க்கை

இவர் காலத்தில் புலவர்கள் பெரும்பாலும் செல்வர்கள் சார்பிலேயே தங்கிக் காலங்கழித்தனர். அந்நாளில் முறையூர் சி. சண்முகஞ் செட்டியார் சிறந்த வள்ளலாக விளங்கியிருந்தார். பீமகவிப் புலவர் அடிக்கடி மேற்படி செட்டியாரிடஞ் சென்று அவரோடு அளவளாவிப் பெரும் பரிசில் பெற்றார். சண்முகஞ் செட்டியார் கொடைத்திறத்தை வியந்து,

"வீடெல்லாம் பொன்னாகும் வீதியெலாம் நெற்குவைகள்
நாடெல்லாம் கீர்த்தி நவிலக்கேள்—ஆடவர்தம்
கண்ணான கொடையதனில் கற்பகமே ஒப்பாவான்
வண்முறைசைச் சண்முகபூ மான்."

"விண்ணினிடை மேன்மையுற வேண்டின் மயிலேறு
சண்முகனை வாழ்த்தித் தயையுறுமின்—நண்ணுமனம்
எண்ணியசெம் பொன்வேண் டிகம்வேண்டின் வண்முறைசைச்
சண்முகனை வாழ்த்திடுமின் தான்."

"தண்டமிழின் மிக்கோன் சதுரன் வடமொழியைக்
கண்டு களிக்குங் கருத்துளோன்—தண்டமிழோர்
எண்ணமெலாஞ் சிந்தாம லெங்ஙறவேற் றுங்கொடையான்
வண்முறைசச் சண்முகபூ மான்."

"கல்லார்க்குக் கற்பிப்போன் காசொன்றுங் கைவசமே
இல்லாரை இந்திரன்போ லெசெய்வோன்—வல்லாய்கேள்
காமுறையூர் கையான் கமலத் திருக்கண்ணன்
மாமுறைசச் சண்முகபூ மான்."

என்று பாடினர். மற்றும் இவர் செட்டியார் மீது பாடிய பாடல்கள் பல.

சாப்பாட்டுச் செய்தி

இப் புலவர் முறையூரில் ஒருநாள் சாப்பிட்டுவிட்டு வந்த போது, வேம்பத்தூர்ப் பிச்சுப்பாரதிகள் என்னும் சிலேடைப்புலி பிச்சுவையர் இவரைப்பார்த்து, "எங்கே சாப்பிட்டீர்கள்? கறிவகைகள் என்ன?" என்று கேட்டார். இப் புலவர் உடனே,

"கதலிக்கா யின்கறியும் கத்தரிக்காய்க் கூட்டும்
பதமான மாவடுவும் பாங்காய்—இதமாகும்
நுண்ணமையொடும் உண்டோம் பொன் நாலுணர்வார்
சண்முகனார் சத்திரத்தில் தான்."

என்று மறுமொழி கூறினர். ஒருநாள் புலவர்கள் சிலர் "முன்னாளில் எத்தனையோ வள்ளல்கள் இருந்தார்கள். இந்நாளில் எவரும் ஆதரிப்பார் இல்லையே நாம் பாது செய்வோம்?" என்று சொல்லி வருந்தினர்கள். அப்பொழுது இவர் அவர்களைப் பார்த்து,

"தண்டமிழ்ப் புலவீர் முறைசமா நகரில்
சார்ந்திரு சண்முக வள்ளல்
அண்டர்வண் தருவின் அதிசமாம் விரல்கொள்
ஐயனை அருந்தமிழ் வைப்பைக்

கண்டபோ தமது மிடிகட லேகும்
கவிமழை பொழிந்திடின் மற்றும்
எண்டரு பெருமை உரைப்பதற் கென்ன
வேகமே இடரிலை எழுவீர்."

என்று பாடினார். இவரால் இயற்றப் பெற்ற நூல்கள்,

1. வாலைகடகம்
2. சிவபுரமான்மியம்
3. சிவபுரம் மீனும்பிகை பிள்ளைத்தமிழ்
4. செக்கற்குடி சண்முகநாதன் பிள்ளைத்தமிழ்
5. கோட்டி மாதவன் பிள்ளைத்தமிழ்
6. காரிகை வெண்பா
7. விசய சிந்தாமணி

என்பனவாம்.

---

50. மாகறல் கார்த்திகேய முதலியார்

தோற்றம்

மண்டியபுகழ்சேர் தொண்டை நன்னாட்டிலே மதராசு நகரத்திற்கு அண்மையில் உள்ள வேட்டூரிலே 1857-ஆம் ஆண்டிலே மாகறல் கார்த்திகேய முதலியார் பிறந்தார்.

கல்வி

கார்த்திகேயர் இளமைதொட்டே நன்னூனார்வு மிக்கவராக விளங்கினர். பள்ளிக் கல்வியைப் பாங்குறக் கற்றுத் தேர்ந்தபின்னர் மேலும் கல்வி கற்றலிலேயே தமது நாட்டத்தைச் செலுத்தினர். காஞ்சிபுரத்தில் சிறந்த தமிழறிஞராக விளங்கியிருந்த கணபதிப் பிள்ளை என்பவரிடம் இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை நன்கு கற்றுணர்ந்தார். செங்கற்பட்டில் சிறந்த இலக்கணப் புலவராக விளங்கியிருந்த பேறை சகநாதப் பிள்ளை என்பவரிடம்

தொல்காப்பிய நூலைச் சேனவரையர் உரை நச்சினார்க்கினி யர் உரை முதலிய உரைகளோடு ஐயந்திரிபறக் கற்றுணர்ந் தார். இலக்கண இலக்கியக் கலைகளிலே மட்டுமல்லாமல் காலக்கணிதம் (சோதிடம்) மருத்துவம் முதலியவைகளி னுங் கருத்துச் செலுத்தி அவைகளையும் ஓரளவுக்குப் பயின்றார்.

ஆசிரியத் தொழில்

தமிழ்மொழியிலே இவர் புலமை மிக்காராக விளங்கு தலைக் கண்டு சிலர் இவரைத் தமிழாசிரியத் தொழிலில் அமரும்படி வேண்டினர். அவர்களின் வேண்டுகோட் கிணங்கிய இவர் தியாலாசிகல் கல்லூரியில் தமிழ்ப் போ சிரியராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். மற்று பலர் தனிப்பட்ட முறையில் வீட்டிலே கல்வி பயின்று நன்னிலை அடைந்தனர். ஆசிரியத் தொழிலில் அமர்ந்திருந்தபோதும் தந் கடமை கல்லூரியோடு சரியாகப் போய்விட்டதுஎன்று எண்ணி அமைந்திராமல் அல்லும் பகலும் தமிழாராய்ச்சி யில் ஈடுபட்டார். அதனல் தமிழ்மொழியின் நூட்பங்கள் பல வெளியாகத் தொடங்கின. தாங்கண்ட கண்ட முடிபு களை முதலியார் தங்களிதழ்கள் செய்தித் தாள்கள் முத லியவைகளின் வாயிலாக வெளிப்படுத்தினர். அதனைப் பார்த்தவர்கள் முதலியாரைப் பாராட்டிப் பெரிதும் ஊக் கினர்.

மொழி நூல் வெளியிடுதல்

முதலியார் தாம் உழைத்துக் கண்டுபிடித்த முடிபுகள் பலவற்றை முதலில் இதழ்கள் வாயிலாக வெளியிட்டுத் தமிழ்மக்களின் எண்ணத்தை உணர்ந்துகொண்டபின் "மொழி நூல்" என்னும் பெயரோடு அதனை நூலாக வெளிப் படுத்தினர். அந்நூலுக்கு மு. சி. பூரணலிங்கம் பிள்ளை

பவர்கள் ஆங்கிலத்தில் அரிய முன்னுரை ஒன்று எழுதினர். அதனில் முதலியாரைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

பதிப்பாளர்கட்கு உதவி

நூல்கள் முதலியன திருத்தமாக வெளிவருதலிலிரும்பிய இவர் சென்னையில் சில பத்திரிகைகளுக்கும் நூல் வெளியிட்டாளர்கட்கும் அச்சுப்படிகளைப் பிழைதிருத்திக் கொடுத்து உதவி செய்தார். அதனால் நூல்கள் புத்தகங்கள் முதலியன பிழையில்லாமல் வெளிவருதற்கு வழியேற்பட்டது.

சமயச் சொற்பொழிவுகள்

இவருடைய கல்வித் திறமை சொல்லாற்றல் முதலிய வைகளை கண்குளிர்ந்த வெளியூராளர்கள் இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க விரும்பினர். அவர்களின் விருப்பத்திற்கினைங்கிய இவர் கூடலூர், தஞ்சை, மதுரை, வேலூர் முதலிய பல இடங்கட்குச் சென்று சொற்பொழிவுகள் செய்தார்.

நண்பர்கள்

புலமையிற் சிறந்து விளங்கிய இவருக்கு அறிஞர் பலருடைய நட்பு உண்டாயிற்று. கோ. வடிவேல் செட்டியார், மறைமலையடிகள், உ. வே. சாமிநாதையர், சிதம்பரம் சபாபதி நாவலர், குடியரசுக்கிழார் அ. சிதம்பரனார் முதலியோர் களர்த்திகேயருக்கு நண்பர்களாக விளங்கியிருந்தனர்.

இயற்றிய நூல்கள்

இவர் எழுதிய நூல்களில்

1. கச்சி இதழகல் அந்தாதி
2 வேளிர் வரலாற்று மறுப்பு

3. தமிழ்ச் சொல் விளக்கம்
4. தமிழ் விண்ணப்பம்
5. மொழிநூல்
6. ஆத்திசூடி முதற் சூத்திர விருத்தி
7. மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு

என்பன அச்சாகி வெளிவந்தன.

1. பழந்தமிழ்
2. மொழிநூல் விளக்கம்
3. நாவின் இயற்கை விளக்கம்
4. காரணப்பெயர்க் கொத்து
5. மொழிநூற் பெருக்கம்
6. மொழிநூற் சுருக்கம்
7. முதனிலை விளக்கம்
8. பிறமொழித் தொகுதி
9. மொழிநூற் சொற்பொழிவு
10. சொல்லாராய்ச்சி
11. சொற்பொருட் பேதம்
12. பழஞ்சொல் விளக்கம்
13. முதற்பா
14. திருக்குறள் மாட்சிமை
15. திருக்குறட் பயன்
16. அருங்குறள் விளக்கம்

என்பன எழுதப்பெற்று அச்சிடப்பெறாதன. இவற்றுட் சில முடிவுபெறாத நிலையிலும் இருக்கலாம். மற்றும் இவர்,

1. நன்னூல் நுட்பவிளக்கம்
2. இலக்கணக் குறிப்பு
3. சூரிய நீபிகை
4. திணை விளக்கம்
5. மனோதத்துவ நீபிகை
6. பொருணூல்
7. தமிழ்மொழி விளக்கம்
8. தமிழ்வெண்பா

9. சித்தனவை
10. புலவர் மருந்து
11. மருத்துவ நூல்
12. சோதிடநூற் சுருக்கம்
13. போசன தீபிகை
14. தொன்மை விளக்கம்
15. மரநூல்
16. மொழிநூற் சூத்திரம்
17. குடும்ப நூல்
18. மகிழ்வு நூல்
19. தமிழ்ப்பெரு விண்ணப்பம்
20. பிழைத்திருத்தக் கொத்து
21. அகத்தியர் வரலாறு
22. தேவார ஆராய்ச்சி
23. காலாயிரப் பிரபந்த அத்தியயன சூடாமணி
24. அறிவு நூல்
25. தொல்காப்பிய ஆராய்ச்சி
26. பஞ்சகாவிய ஆராய்ச்சி
27. சங்கநூலாராய்ச்சி
28. புராண ஆராய்ச்சி
29. சம்பந்தர் முதல் தேவார விருத்தி
30. திருமாகறல் முதல் தேவார விருத்தி
31. பூகோளம்
32. உரைச் செய்யுள்
33. யாழோர் கூட்ட மறுப்பு
34. அரும்பதக் கொத்து
35. நிகண்டோராய்ச்சி
36. ஆசாரக் கோவை விருத்தி
37. மழை நூல்
38. இயற்கைப் பொருள் விளக்கம்
39. இசை நூல்
40. பொருண்முறை யகராதி
41. காருண்ணிய தீபிகை
42. நன்னூற் காண்டிகையுரை

43. உழவு நூல்
44. பஞ்சாட்சர தீபிகை
45. உடற்கூறு
46. மனவிளக்கம்
47. அருஞ்சொற்பொருள்
48. சமய ஆராய்ச்சி
49. கல்வெட்டாராய்ச்சி
50. சொல்லியைபு விளக்கல் வெட்டு
51. சொல்லியைபு விளக்கச் செப்பேடு

என்னும் நூல்களை எழுதுவதற்குக் குறிப்புத்தாளை முதலில் எழுதித் தொகுத்துவைத்தார். அக்குறிப்புக்களை விரித்தெழுதித் தழுவத்தக்க ஆற்றல் வாய்ந்தவர்கள் விரித்தெழுதி நூலுருவாக்கலாம்.

இவருடைய கொள்கைகள்

1. "தமிழில் ஐகார ஔகாரங்கள் இல்லாத காலமும் உண்டு.
2. " எகர ஒகரங்கள் இல்லாத காலமும் உண்டு.
3. " �எகர ஒகரங்கள் இன்றி லகரம் ஒன்றுமே இருந்த காலமும் உண்டு.
4. " இயற்கை நகர மெய்யீற்றுச் சொற்களே நடைபெற்ற காலமும் உண்டு.
5. " ஐகார ஈற்றுச் சொற்கள் இல்லாத காலமும் உண்டு.
6. " றகர னகரங்கள் இல்லாத காலமும் உண்டு.
7. " சந்தியில்லாத காலமும் உண்டு.
8. " விகுதி முதலியன இல்லாத காலமும் உண்டு.
9. " சுற்றியலுகரமே இல்லாத காலமும் உண்டு.
10. " வரிவடிவில்லாத காலமும் உண்டு.
11. " வட்டெழுத்தே இருந்த காலமும் உண்டு.
12. " கோலெழுத்தே இருந்த காலமும் உண்டு.
13. " இயல்புப் புணர்ச்சியே இருந்த காலமும் உண்டு.
14. " வேற்றுமை இல்லாத காலமும் உண்டு.
15. " நிகழ்காலம் ஒன்றுமே இருந்த காலமும் உண்டு.

16. "தமிழில் ஆகார உயிரீற்றுச் சொற்களும் மகரலகரமெய் ஈற்றுச் சொற்களுமே இருந்த காலமும் உண்டு.
17. " ஒருமை பன்மை யென மூவகையெண்களின் வழக்கும் இருந்த காலமும் உண்டு.

ஒவ்வொரு காலத்திலும் பாழை வேறுபடுகிறது" என்பன முதலியவைகள் இவருடைய கொள்கைகளாகும்.

இறுதி

தமிழாராய்ச்சியை நடத்திக்கொண்டிருந்த இவர் அவ் வாராய்ச்சிகளெல்லாம் விட்டுவிட்டு 1916-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

கக. கரபாத்திர சிவப்பிரகாச அடிகள்

தோற்றம்

பாலாறு பாய்ந்து மேலான சிறப்போடு விளங்குவதும் எண்டிசை புகழும் மண்டிய புகழையுடையதுமாகிய தொண்டை வளநாட்டிலே, ஆறுமாமுக அண்ணல் விருப்போடுறையும் திருப்போரூரிலே 1874-ஆம் ஆண்டு (பவ ஆண்டு) ஆனித்திங்கள் பதினான்காம் நாள் கரபாத்திர சிவப்பிரகாச அடிகள் தோன்றினர். தந்தையார் பெயர் முத்துச்சாமிப் பக்தர்; தாயார் பெயர் செங்கமலத்தம்மாள். அடிகளார் தோன்றிய சமயம் வீரசைவம்.

கல்வி

ஐந்தாம் அகவையில் அடிகளார் பள்ளியில் வைக்கப் பெற்றார். முதலில் காளத்தி உபாத்தியாயர் என்பவரிடத்தில் சிறிதுகாள் கல்வியயின்றார். பிறகு சுப்பராயபக்தர் என்னும் வீரசைவ ஆசிரியரிடத்திலே கற்றார். இருவரிடமுங் கற்ற கல்வி உலகவாழ்க்கைக்கு ஓரளவு உதவக்கூடிய அளவினதாம்.

வெற்றிலை வாணிகம்

சிவப்பிரகாசருக்கு அகவை பதினைது நடந்து கொண்டிருந்தபோது தந்தையாராகிய முத்துச்சாமிப் பக்தர் இவ்வுலக வாழ்வை நீத்தார். சிவப்பிரகாசருக்கு உடன் பிறந்தவர் மூவர் இருந்தனர். சிறிதுகாள் அவர்களுடைய பாதுகாப்பிலே இருந்தார். பிறகு மூத்த தமையனர் சிவப்பிரகாசனைச் சென்னைமாநகருக்கு அழைத்துச் சென்று வெற்றிலை வாணிகத்திலே ஈடுபடுத்தினர். சிவப் பிரகாசர் மனம் நல்வழியைநாடி நின்றது. பிறவிப் பெருங் கடலைக்கடப்பதற்குத் துணைவாகிய தெப்பத்தை யடைதற்கு அவர் வழிதேடிக் கொண்டிருந்தார்.

சாது இரத்தின செட்டியார்

அந்நாளில் சென்னைமாநகரிலே சாது இரத்தின செட்டியார் என்பவர் வேதாந்தக் கலையில் வல்லவராக விளங்கியிருந்தார். அவர் தம்மை அடைந்தவர்கட்கு வேதாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் போதித்துக் கொண்டிருந்தார். சிவப்பிரகாசர் வெற்றிலை வாணிகத்தில் ஈடுபட்ட நேரம்போக எஞ்சிய நேரங்களில் வேதாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். மிகுவிரைவில் வேதாந்தக்கலையிலும் இலக்கண இலக்கியம் தருக்கம் முதலியவைகளிலும் வல்லவரானார். மனதை ஒரு முகப் படுத்தி அறிதுயிலில் அமர்தல் முதலிய யோகப்பயிற்சி யிலும் வல்லவரானார்.

திருமணத்திற்கு முயற்சி

சிவப்பிரகாசர் சென்னையில்தங்கி வெற்றிலைவாணிகஞ் செய்து கொண்டிருந்தபோது, சிவப்பிரகாசரின் தாயாரும் தமையனர் ஒருவர் தம்முடைய மனைவியோடுஞ் சென்னை யில் தங்கியிருந்தனர். சிவப்பிரகாசருடைய போக்கு

அவர்கட்கு மனக்கவலையை உண்டுசெய்தது. "இவன் துறவியாகப் போனாலும் போய்விடுவன். திருமணஞ் செய்து குடும்பக்கடலில் தள்ளிவிடின் கரையேற வழி காணாது நம்மைப்போல் இடருழப்பன். நாம் வேடிக்கை பார்க்கலாம்" என்று நினைத்து அதன்பொருட்டு அடிக்கடி முயற்சி யெடுத்தனர். சிவப்பிரகாசர் அம் முயற்சி களுக்குட் சிக்காது, "கானவன் வலையிற்பட்டுக் கைகுப்பி போடுமான்" ஓடிப்போக முடிவு செய்திருந்தனர்.

அறிதுயில்

ஒருநாள் இவர் தமது இட்டலிங்கத்திற்குப் பூசை செய்து கொண்டிருந்தபோது மனம் ஒருநிலைப்பட்டது. அறிதுயிலில் அமர்ந்து ஓவியப்படமைபோல் நீண்ட நேரம் அசைவற்றிருந்தார். இவருடைய தாயார் இவ ருடைய நிலைமையைக் கண்டு அஞ்சினர். உயிர்போய் விட்டதோ என்று ஐயுற்றார். தம்முடைய மகனிடஞ் செய்தியைத் தெரியப்படுத்தினர். அந்த இடத்தில் பலர் கூடி ஆரவாரஞ் செய்யத் தொடங்கினர். அறிவுமிக்க ஒருவர் சிவப்பிரகாசர் அறிதுயிலில் அமர்ந்திருப்பதை யுணர்ந்து மற்றவர்களை அப்புறப்படுத்தினர். இந்நாளில் வேதாந்த தருக்க இலக்கண இலக்கிய போதகாசிரியர் கோ. வடிவேல் செட்டியார், தத்துவாது சந்தான நூலின் மொழிபெயர்ப்பாசிரியர் முதலியோர் சிவப்பிரகாசருக்கு நண்பர்களாக அமைந்திருந்தனர்.

வெளியேறுதல்

சிவப்பிரகாசர் இல்லந்துறந்து வெளியேற எண்ணினர். தமது நோக்கத்தைத் தம்முடைய ஆசிரியராகிய இரத்தின சற்குருவிடம் தெரியப்படுத்தினர். அப் பெரியார். அகத்துறவு கொண்டு விளங்கியிருந்தாராகலின் அத்துறவே

கொள்ளல் அமையும் என்றனர். ஆனல் இப்பெரியார் புறத்துறவு கொள்ளவும் முடிவுசெய்தனர். தம் தாயார் தம்முடைய நோக்கத்திற்கு மாறுபாடாக இருந்தமையின் வேறொருவகையால் துறவுக்குத் தாயாருடைய உடன் பாட்டைப் பெற்றனர். பிறகு இல்லந்துறந்து திருவொற்றி யூரையடைந்து "பாரினத்தும் பொய்யெனவே பட்டினத் துப் பிள்ளையைப்போல் ஆருந்துறப்ப தரிதரிது" என்று தாயுமான அடிகளால் பாராட்டப்பெற்ற பட்டினத்தடி களின் திருக்கோயிலுக்குப்போய் இடுப்பில் அணிந்திருந்த வேட்டி முதலியவைகளை நீக்கிக் கோவணம் மட்டும் அணிந்து கொண்டார். தாமணிந்திருந்த இட்டலிங்கத்தை யெடுத்து அண்மையில் இருந்த திருக்குளத்தில் விட்டு விட்டார். பிறகு ஒருபுறத்தில் அறிதுயிலில் அமர்ந் திருந்தார். சென்னையில் இருந்த இவருடைய தமையனர் இவரைத் தேடிக்கொண்டு திருவொற்றியூர்வந்து கண்டு பிடித்தார். தம்பெரிய தமையனர் உள்ள திருப்போ ரூருக்கு அழைத்துக்கொண்டு சென்றூர். உடன்பிறந்தார் கள் இருவருக்கும் நீண்டநேரம் சொற்போர் நடைபெற்றது. சிவப்பிரகாசரை இந்நிலையில் இருந்து மாற்றுதல் அரி தென்று கண்ட மூத்த தமையனர், இவரை இவருடைய போக்குப்படி செல்லுமாறு விட்டுவிட்டார். கையையே ஏனமாகக் கொண்டு உணவினை வாங்கி, நின்ற நிலையிலேயே உண்டுவிட்டு விருப்பமான இடங்களில் அறிதுயிலில் அமர்ந்திருந்தார். அதுமுதல் இவருடைய பெயர் "கர பாத்திர சிவப்பிரகாச அடிகள்" என்று வழங்கலாயிற்று.

பலவிடங்களில் அறிதுயில்

பிறகு அடிகள் திருவான்மியூரையடைந்து இற்ற வழிபாடு செய்து விட்டுத் தனிமையான ஓரிடத்தில் தம்மைத்தாமே எண்ணி அறிதுயிலில் அமர்ந்திருந்தனர்.

அந்நாளில் அங்கு பறங்கிமலையடிகள், திருவான்மியூர் அடிகள், சாந்தாநந்த அடிகள் என்னும் பல பெரியோர்கள் தவக்குடில்கள் அமைத்துக் கொண்டு தவஞ்செய்திருந்தனர். அவர்கள் சிவப்பிரகாச அடிகளின் மேலாம் பக்குவத்தை உணர்ந்து, அடிகளின் அறிதுயிலுக்கு யாதும் இடையூறு நேராமல் பாதுகாத்தனர்.

அடியார்கள் திருக்கூட்டம்

அடிகளாரின் பெருமை சிறிது சிறிதாக யாண்டும் பரவத்தொடங்கியது. கோ. வடிவேல் செட்டியார், தத்துவராய சாந்தானம் அரங்கநாதம் பிள்ளை முதலியோர் சிவப்பிரகாசரின் மெய்யறிவுத் தன்மையை உள்ளவாறுணர்ந்தவர்களாகையால் அடிக்கடி சென்று அடிகளைப் பார்த்து மீண்டனர். அவ்வாறு இவர்கள் செல்லவே முருகேச முதலியார், முனியப்பசுவாமிகள், சிவராச நாயகர், சோமசுந்தர நாயகர் என்னும் பல அன்பர்கள் சென்று கண்டு வழிபடத் தொடங்கினர். நாளடைவில் மற்றும்பலர் அடிகளை அடைந்து வழிபட்டுத் தொண்டராயினர். மேலும் அடிகள் பரங்கேணிக்கடைக்கு அண்மையில் உள்ள பெருமாள்கோவில், செங்கல்வராய நாயகர் தோட்டம் முதலிய இடங்களில் அறிதுயிலில் அமர்ந்திருந்ததன்றி, வெளிமுகமான சமயங்களில் தம்மை யடைந்து குழுமியுள்ள அடியவர்கட்கு மெய்யறிவுரை களை வழங்கி அவர்களை நன்னிலைப்படுத்தினர். சிவப்பிரகாச அடிகள் தவப்பிரகாசத்தில் சிறந்துவிளங்கினமையால் சென்னைமா நகரில் வாழ்ந்திருந்த மக்கள்பலர் அடிகட்குத் தொண்டராயினர். செங்கல்வராய நாயகர் தோட்டத்தில் முதலில் அடிகள் மரங்களின் நிழல்களிலேயே அறிதுயிலில் அமர்ந்தருளுதல் வழக்கம். நாளடைவில் அன்பர்கள்

அடிகளாருக்குத் தவக்குடில் ஒன்றையும் அமைத்துக் கொடுத்தனர்.

வியாசர்பாடி

பிறகு அடிகள் சென்னைக்கு வடபால் உள்ள வியாசர் பாடியை அடைந்து மக்களின் ஆரவாரமில்லாத இடத்தில் தனித்துறைய எண்ணினர். அவ்வாறே அங்குள்ள தோட்டம் ஒன்றை அன்பர்கள் விலைக்குவாங்கி அதில் கட்டிடம் ஒன்றையும் அமைத்துக்கொடுத்தனர். ஆனால் அங்கும் எண்ணற்ற அடியார்கள் அடைந்து அடிகளாரின் அறிவுரையைப்பெற முற்பட்டனர். அடிகள் உலகினர்க் குப் பயன் தரத்தக்க பல செயல்களில் சுறுபட எண்ணினர்.

சாது மகாசங்கம்

சென்னை சூளையில் ஆநந்தாசிரம சாது மகாசங்கம் எனப்பெயரிய சங்கம் ஒன்றை அமைத்து, அச் சங்கத் தின் வாயிலாக அறிவுரைகளை மக்கட்கு அடிகள் வழங்க முற்பட்டதோடு, தகுதிவாய்ந்த அறிஞர்களைக் கொண்டும் வழங்கச் செய்தனர். இதனால் சென்னைமா நகரத்து மக்கள் மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து நன்மைகள் பல அடையலாயினர்.

நூல்கள் இயற்றல்

மெய்யறிவு நெறிக்குப் பொருந்திய நூல்கள் சிலவற்றை உலகிற்கு அளிக்கவேண்டும் என்னும் எண்ணம் அடிகட் குண்டாகியது. வீட்டு நெறியிலே பயில்வார்க்குப் பயன் படுமாறு "மகாவாக்கிய இரகசியம்" "ஞானசித்தர் சகாயம்" என்னும் நூல்களை இயற்றினர். வேதாந்த நூல்கள் பல வற்றை ஆராய்ந்தும், பிற இலக்கிய நூல்களை ஆராய்ந்தும் வேதாந்த வீட்டு நெறிக்கு உரிமையான பாடல்களை யெல்

லம் ஒருங்கு தொகுத்து அந்நூலுக்கு "வேதாந்த மதச் சிந்தாமணி" என்று பெயரிட்டு அன்பர்களின் பொருளுதவியைக் கொண்டு வெளிப்படுத்தச் செய்தனர். இந்த ஒரு நூலைப் பெற்றவர்கள் பல நூல்களிலும் உள்ள வேதாந்தக் கருத்துக்களை ஒருங்குணர்ந்து பெரும்பயன் அடைதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மற்றும் வேதாந்த உலகிற்குப் பெருந்தொண்டு செய்யவேண்டுமென்று எண்ணிய அடிகள், வடமொழி தென்மொழி ஆகியவைகளில் வல்லுநராக விளங்கிய வீர. சுப்பைய அடிகள் என்னும் பெரியாரைக் கொண்டு ஆத்மபுராணம் என்னும் அரிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து வெளிப்படுத்தினர். மற்றும் பல வேதாந்த நூல்கள் சிவப்பிரகாச அடிகளாரின் பெரு முயற்சியால் தமிழுலகில் வெளிவந்தன.

மாணவர்கள்

அடிகளாரிடம் எண்ணற்ற மாணவர்கள் இல்லறத்தார்களாகவும் துறவிகளாகவும் அமைந்திருந்தனர். அடிகளார் ஆண் பெண் என்ற பேத நோக்கமற்ற பெரியாராக விளங்கியிருந்தமையின் பெண்பாலர்களும் அருளுரை பெற்று நல்வழிப்பட்டனர். சகசாநந்தர் என்பவர் திருத்தில்லையிலே தாழ்த்தப்பட்ட மக்கட்குச் செய்துவரும் அரும்பெருந் தொண்டைத் தமிழ் நாடேயன்றி இந்தியா முழுவதுமே நன்கறியும். காந்தியடிகள் முதலியோர் தீண்டாமை விலக்கை எவ்வளவோ காலத்திற்குப்பின் கொண்டுவந்தனர். சிவப்பிரகாச அடிகளாரோ 1910-ஆம் ஆண்டுகட்கு முன்னரே தீண்டாமை விலக்கைக் கொண்டுவந்து விட்டார். சகசாநந்தர் சிவப்பிரகாச அடிகளாரின் பெருமையை உணர்ந்து அவரையடைந்தனர். மெய்யறிவுச் செல்வாக்கட்குச் சாதிபேதம் இல்லை. நன்மை தீமையில்லை. அறிவாளிகட்கும் அப்படியே. இதனை வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில்,

"கற்ற வர்க்கும் லெறி றைத்த கன்னி யர்க்கும் வண்மைகை
உற்ற வர்க்கும் ஸீர ரென்று யர்த்த வர்க்கும் வாழ்வுடைக்
கொற்ற வர்க்கும் எண்மை யான கோதில் ஞான சரிதரம்
ஈற்ற வர்க்கும் ஒன்று சாதி நன்மை நீமை இல்லையால்."

என்று குறப்பிடுகிறார்.

சாதிபேதம் உண்மையில் இல்லை. அது பொய் என்பதை உணர்ந்த சிவப்பிரகாச அடிகள் சகசாநந்தரைத் தம் குழந்தையென மதித்து அன்பு பாராட்டி அறிவுரைகளை வழங்கியதுடன் தம்மையடுத்திருந்த அறிஞர்களைக் கொண்டும் நூல்களைக் கற்பிக்கச் செய்தனர். அடிகளாரைச் சூழ்ந்திருந்த அறிஞர்கள் பெரும்புலவர்கள். ஆயினும் மெய்யறிவு பெற்றவர்கள் அல்லர். அவர்கள் தொடக்கத்தில் சகசாநந்தரை மனமுருகமாக வெறுத்ததன்றி அடிகளாரிடம் வெளிப்படையாகவும் வெறுத்துரையாடத் தொடங்கினர்கள். சாதிப்பேயினைற் பற்றப்பட்ட அவர்களுடைய செயல் முதலில் அடிகளாருக்குப் பிடிக்காமலிருந்தது. ஆயினும் அவர்களை யெல்லாம் காளையிலில் அடிகளார் தமது அருளாற்றலால் வழிக்குக் கொண்டுவந்து விட்டார். சகசாநந்தரும் பல நூல்களைக் கற்று உலகிற்குப் பயன்பட்டு வருகிறார்.

அடிகளார் பெருமை

அடிகளாரிடத்தில் வெறுப்பும் பகைபுங்கொண்ட சிலர் அடிகளாருக்கு ஒருமுறை நஞ்சு கலந்த உணவைக் கொடுத்து உண்ணச் செய்துவிட்டனர். உடற் பாதுகாப்பில் கவனமற்றிருந்த அடிகளாரை அந் நஞ்சு பாதஞ் செய்ய வில்லை. ஒருமுறை அடிகளாரை விரியன் பாம்பு ஒன்று கடித்து விட்டது. "விரியுடிந்தால் விரியன் கடிக்கும்" "உண்ணை விரியன் கடிக்க" என்பன உலகப் பழமொழிகள்.

ஆயிஞம் விரியனின் கொடிய நஞ்சு அருள்வள்ளலாராகிய சிவப்பிரகாச அடிகளாரை யாதுஞ் செய்யவில்லை.

இறுதி

அடிகளார் இறுதிவரை தம்மையடைந்த அன்பர்கட்கு வீட்டு நெறியை உரைத்தருள் செய்து கொண்டிருந்து, 1918-ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் உத்திராட நாளில் வீடு பேற்றையடைந்தனர். அடிகளாரின் பிரிவு குறித்துப் பல அன்பர்கள் இரங்கற்பாக்கள் பாடினர்.

இரங்கற்பா

திருத்தில்லையில் இருந்த பரஞ்சோதியடிகள் என்னும் பெரியார்,

"கண்ணலும் கனியும் கலந்தமு தனைய
கவின்பொழி மதுரவா சகமும்,
இன்னலே ஒழிய அடியவர்க் குதவும்
எழில்பொழி கமலவா சனமும்,
பண்ணரு மறையின் பொருளினை எளிதில்
பண்பினர்க் குதவுவல் லபமும்,
சின்னமில் வடிவும் காண்குநாள் என்றே?
சிவப்பிர காசனன் மணியே."

என்பது முதலிய பாடல்களைப் பாடினர்.

52. மு. ரா. கந்தசாமிக் கவிராயர்

தோற்றம்

இவர் முகவூர் இராமசாமிக் கவிராயருக்கு மூன்றாவது மைந்தராகப் பிறந்தார். இளமையில் தந்தையிடம் கல்வி கற்றார். பிறகு திருவாவடுதுறை ஆதீனத்தை யடைந்து நமசிவாயத் தம்பிரானிடம் கல்வி பயின்றார்.

வாழ்க்கை

கல்வியில் தேர்ச்சியடைந்தபின் உடுமலைப்பேட்டையை அடைந்து போர்டு உயர்நிலைப்பள்ளியில் பத்தாண்டுகள் தமிழாசிரியராக இருந்தார். பிறகு அதை விட்டுவிட்டு மதுரையை அடைந்து 'விவேகபோதம்' என்னும் அச்சுக் கூடத்தை ஏற்படுத்தி நூல்கள் பலவற்றை வெளியிடத் தொடங்கியதுடன் 'விவேகபோதம்' என்னும் பத்திரிகையையும் நடத்தினார்.

தனிப்பாடல்கள்

இவர் நூல்கள் பல செய்திருப்பதுடன் தனிப்பாடல் களும் பல செய்திருக்கிறார். வெற்றிலைக்கும் பத்திரிகைக்கும் சிலேடையாக,

> "மேவக் கமழுக்கும் மெல்லப் படிக்கநண் ணும்
> ஓவுதலில் பாகுசுவை ஒத்திருக்கும்—பூவுலகின்
> வெற்றிலைக்குப் பத்திரிகை மேவுநிகர் கைலாச
> நற்சுகுண மேவியமன் னர்."

என்னுஞ் செய்யுளைப் பாடினார். முனைறடூர் சண்முகம் செட்டியார்மீதும் பல பாடல்கள் பாடியுள்ளார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களோடு பழக்கம்

பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்கும் கவிராயருக்கும் ஒருங்கிய பழக்கமிருந்தது. மீனாட்சி

சுந்தரம் பிள்ளையவர்கள் மிக விரைவாகச் செய்யுள் இயற்று வதைப் பார்த்து மிக வியப்படைந்தார். "ஒவ்வொருவரும் செய்யுள் இயற்றுதற்கு எவ்வளவோ தொல்லைப்படுகிறார்கள்.

ஓலை தேடி எழுத்தாணி தேடியாள்
துய்ந்தி ருக்கு மிடந்தேடி யேயொரு
மூலை தேடி யிருந்ததன் மூக்குக்கண்
ணுடி தேடி முகத்திற் பொருத்தியே
மாலை தேடி வருமட்டு மோர்கவி
வந்த தென்றுவரைந்து வழுத்துவன்
சாலை நீடிய பாப்பாங் குளத்துக்குத்
தக்க சொக்கலிங் கக்கவி ராயனே.

என்று முன்னே ஒரு புலவர் பாடியிருப்பது எவ்வளவோ உண்மையாக இருக்கிறது. அவ்வாறாக நீங்கள் இவ்வாறு கவிச்சாபமாக இருக்கிறது மிகு புதுமை புதுமை" என்று கூறிப்பாராட்டிப் போற்றினர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர் களும் கவிராயரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டினர்.

திருமண வாழ்த்து

முத்துராமலிங்க சேதுபதிக்குத் திருமணம் நடை பெற்றபோது,

"சேதுகட்டி அணிவகுத்துத் தாதுவிட்டுக்
கெடுஞ்சமரஞ் செய்தே வென்று
நீதிபற்று இல்லாதத்துக் குரிமையுற்ற
தாசரதி திறனன் றன்றுல்
சேதுகட்டிப் பவனிவந்து நீதிபொழிந்து
மகிழ்ந்தறஞ்செய் சிறப்புப் பெற்றுய்
நீதிபற்றிப் புவிபுரக்க வந்தமுத்து
ராமலிங்க நிருப ரோதே."

என்பது முதலிய செய்யுட்களால் திருமண வாழ்த்துக் கூறினர்.

விவேகபாநு

மதுரையில் விவேகபாநு என்னும் பத்திரிகையைத் தொடங்கிப் பல ஆண்டுகள் சிருஞ்சிறப்புமாக நடத்தினர். அக்காலத்தில் இருந்த அறிஞர்கள் பலர் இப்பத்திரிகையில் கட்டுரை யெழுதினர்கள்.

இயற்றிய நூல்கள்

1. வியாசத்திரட்டு இரண்டுபாகம்
2. திருப்பேரூர்த் திரிபந்தாதி
3. பவானிவேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ்
4. கருமலையாண்டவர் துதிமஞ்சரி
5. குமண சரித்திரம்
6. அரிமழத்தல புராணம்
7. கம்பராமாயண ஆரணிய காண்டவுரை
8. தனிச் செய்யுட் சிந்தாமணி

என்பன இவருடைய நூல்களாம்.

இறுதி

இவர் செட்டிமார் நாட்டில் பலவிடங்களில் அருமையான சொற்பொழிவுகள் செய்து செட்டிமார்களாலும் நன்கு போற்றிப் பாராட்டப்பெற்றார். இவ்வாறு பலவழிகளிலும் சீரிய செந்தமிழ்த்தொண்டு செய்து விளங்கிய இவர், 1918-ஆம் ஆண்டிலே இவ்வுலக வாழ்வைத்துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

66. அப்துல்காதிறு ராவுத்தர்

தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டில் இனையான்குடி என்னும் ஊருக்கு அண்மையில் உள்ள சேதுகுடி என்னும் ஊரில் 1877-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினான்பதாம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் கலிங்கி பீரா கனி ராவுத்தர்.

கல்வி

கல்வி கற்கத் தொடங்கிய இவர் பள்ளிக்கல்வியை எப். ஏ. வரையில் கற்றார். சூளாம் காதிறு நாவலர் என்னும் முகமதியப் புலவரிடத்தில் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றுத் தேறினார். செய்யுளியற்றும் திறம் இளம் பருவத்திலேயே நன்கு அமைந்தது. தமது சமய நூல் களையும் கற்றுத் தேறினர்.

நூல்கள்

செந்தமிழ்ப் புலமையுஞ் செய்யுள் பாடுந் திறமையும் நன்கு கைவரப் பெற்ற இவர்,

1. மதுரை பஞ்சரத்தினம்
2. நாமகள் நவமணி மாலை
3. சேதுகுடிச் சிங்கார வழிநடைச் சிந்து
4. கட்டோம்பு அத்திவர வழிநடைச் சிந்து
5. நாகூர் நாயகர் தீர்த்தனை சதகம்.

முதலிய நூல்களைப் பாடினர்.

வாழ்க்கை

ஆங்கில அறிவுந் தமிழறிவும் நிரம்பப் பெற்ற இவர் பொதுவாழ்வில் மிகுதியாக ஈடுபட்டார். இனையான்குடி நீதிமன்றத் தலைவராக இருந்தார். சிவகங்கை தாலுகா

போற்று உறுப்பினராகவும், மதுரைமாவட்டப் போற்று உறுப்பினராகவும் அமர்ந்து பொதுநலப் பணிகள் பல ஆற்றினர். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களில் ஒருவராக இருந்து ஆண்டு விழாக்களிற் சொற்பொழிவுகள் செய்தார். செந்தமிழ்ப் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதினர். உ. வே. சாமிநாதையருக்கு மகாமகோபாத்தியாயர் என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கியபோது இவர்,

"மருதவளஞ் செறிகுடந்தை மாநகர்க்கு
மாமகத்தால் வருமாண் பெண்ணைப்
பொருவலிலாத் தமிழ்பயிற்றி வந்தனின்ற
லுஞ்சீர்த்தி பொருந்துந் தன்மை
கருதிமகா மகோபாத்தி யாயவெனும்
பட்டநிற்குக் கவினத் தந்தார்
திருவளர்மன் னவர்சாமி நாதவள்ளால்
நின்போலச் சிறந்தார் யாரே."

"என்னதா னங்களிலும் அன்னதா
னஞ்சிறந்த தென்பார் பல்லோர்
அன்னதா னத்தினிலும் அரியதுவித்
தியாதானம் அதனை நாளும்
நன்னர்செய்தீ தோன்றுநகர்க் குத்தமதா
னப்பெயரை என்கா ராய்ந்து
சொன்னவர்தம் மதிவலிதாம் சாமிநா
தப்பெயர்கொள் சொல்வல் லோனே."

என்பன முதலிய பாடல்களால் வாழ்த்துக் கூறினர். தந்தையாகிய கலிங்கமீராகனி ராவுத்தர் காலமானபோது,

"நேர்ந்தவைகு பான்மாசம் பதினேந்தாம்
தினமசறு நேரந் தன்னில்
சார்ந்தபெருங் கணைக்கின்விதம் சிதரத்தல்
முந்தலுறாத் தருவில் நின்பேர்

சேர்ந்தவினைப் பயன்முதலாப் பொறித்தவிலை
உதிர்ந்ததென்ன செய்வேமம் அந்தோ
சோர்ந்துதுயர் அடைகின்றோம் கலிங்கமீ
ராகனியுத் துங்க கோவே."

என்பது முதலிய பாடல்களால் இரங்கற்பாப்பாடி வருந் தினர். ஆசிரியராகிய குலாம்காதிறு நாவலர் காலமான போது,

"தாயினும்பே ரன்புடையாய்த் தந்தையினும்
அறிவுமிகத் தந்தாய் உண்மை
வாயினுஞ்சீர் மனத்தினுஞ்சோர்ந் தடக்கமுரு
எடுத்ததென வாழ்ந்தாய் என்றால்
ஆயினுந்தேர்ந் திருந்தகுலாம் காதிறுநா
வலனேனம் அரங்கை நோக்கி
நீயினுந்தான் வருவாயோ வாராயோ
ஒருவார்த்தை நிகழ்த்தி வாயே."

என்பது முதலிய பாடல்களைப் பாடி வருந்தினர்.

இறுதி

இவர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாகத் தெரியவில்லை.

கசு. வெ. குப்புசாமிராசு

தோற்றம்

"சோழுவளநாடு சோறுடைத்து" என்று புகழப்பட்ட சோழுவள நாட்டிலே தஞ்சைமாநகரிலே பிரமாநந்த அடிகள் என்று பிற்காலத்திற் பெயர் சிறந்து விளங்கிய வெ. குப்புசாமிராசு அவர்கள் கலி 4968-க்குச் சரியான அட்சய ஆண்டு பங்குனித் திங்கள் இரண்டாம் நாள் வியாழக்கிழமை பிறந்தார். தந்தையார் பெயர் வெங்கிடசாமி ராசு. தாயார் பெயர் பாப்பம்மாள். குலம் ராசு என்று பட்டம் வழங்கும் சத்திரியர் குலம்.

கல்வி

அகவை ஐந்து நிரம்புவதற்கு முன்னரே தந்தையார் இவர்க்குத் தாமே கல்வி கற்பிக்கத் தொடங்கினர். தகுந்த ஆசிரியரையும் ஏற்படுத்திக் கற்பிக்கச் செய்தார். பன்னிரண்டாம் ஆண்டுவரை தமிழ், தெலுங்கு, வடமொழி, மராட்டி, கன்னடம் முதலிய பல மொழிகளையுங் கற்றுணர்ந்தார். பிறகு சிலகாலம் ஆங்கிலம், இந்தி, மலையாளம், சிங்களம், வங்காளி முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தார். முன்மாதிரிமுறைப்படியும் மிக்காராக விளங்கியபடியால் எம் மொழியையும் எளிதாகக் கற்றுத் தேறினர்.

இளமையில் தவநிலை

இவருடைய மனம் இளமையிலேயே பரம்பொருளை நாடியது. அரும்பொருள் பரம்பொருளே என்று உறுதி யாக நம்பினர். அடிக்கடி பரணை நினைந்து நிட்டை கூடுதல் இவருக்கு வழக்கமாகிவிட்டது. பழம் பிறப்பில் விட்ட தவக்குறையினல் தோன்றிய பெரியாராகளின் அப் பிறப் பில் விட்ட குறையையே நிறைவேற்றத் தொடங்கினர். மறை முடிவு (வேதாந்தம்) நூல்களை நன்கு கற்றார். இவர் சிறுவராக இருக்கும்போது வீட்டிலுள்ளவர்களோடு படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். நள்ளிரவில் விழித்துக்கொண்ட தாயார் குப்புசாமியைப் பார்த்தபோது இவர் நிட்டை செய்துகொண்டிருக்கக் காணப்பட்டார். தாயார் இவரைப் பார்த்து, "அப்பா! குப்புசாமி! என் உறங்காமல் உட் கார்ந்துகொண்டிருக்கிறாய்?" என்று உசாவினர். அதற்கு இவர், "சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் படுத்துக்கொண்டார். இவ்வாறு அடிக்கடி இவர் நிட்டை செய்வது வழக்கமாகிவிட்டது. தமக்கு கேர்ந்துள்ள பிறவித் துன்பத்தை எண்ணி எண்ணி இவர்

அடிக்கடி வருந்தினர். இவருடைய உற்றார் உறவினர்கள் இவர் வயிற்று வலியால் துன்பப்படுகிறார் போலும் என்று எண்ணிக்கொண்டார்கள்.

திருமணம்

இவருடைய ஒருவகையான போக்கைக் கண்ட உறவினர், இவருக்குத் திருமணஞ் செய்து வைத்துவிட்டால் செம்மையாக இருப்பார் என்று எண்ணிக்கொண்டார்கள். அதனை பதினெட்டு முடிந்ததும் நற்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற திருட்டிணம்மாள் என்னுங் கிளி மொழியைத் திருமணஞ் செய்து வைத்தனர். பற்றற்றிருந்த இவர் தாமரையிலை தண்ணீர்ப் இடப்பதுபோல் சிறிதுகாலம் வீட்டில் இருந்தார். பிறகு ஐந்தாறு ஆண்டுகள் தாம் இருக்குமிடம் தாய் தந்தையர்கட்குக்கூடத் தெரியாமல், திருவிடைமருதூர், திருவையாறு முதலிய இடங்களில் மறைவாகத் தங்கி இறைவழிபாடு நிட்டை முதலியன செய்துகொண்டிருந்தார்.

மாணவர்

திருவையாறு, திருவிடைமருதூர் முதலிய ஊர்களில் இவர் மறைவாக அமர்ந்து மறைமுடி பொருளை நாடியிருந்த காலத்தில் இவருக்கு மாணவர் பலர் ஏற்பட்டனர். அவர்களில், திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவரும் நற்குணங்களெல்லாம் நன்கு அமையப் பெற்றவரும் கல்வி கேள்விகளிற் சிறந்தவருமாகிய ஆறுமுகம் பிள்ளை என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் இவருடனேயே இருந்து இவருக்கு ஆகவேண்டிய பணிகளை யெல்லாம் புரிந்துகொண்டிருந்தார்.

கடவுள் உணர்வளித்தல்

பின்னர் குப்புசாமிராசு திருவிடைமருதூருக்கு அண்மையில் உள்ள மூங்கில் வனத்தில் எவருங் காண

முடியாத இடத்தில் கிட்டை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவரை எவரும் கண்டு உணவளிக்கவில்லை. பசிநோயினால் வருந்தி இரண்டு மூன்று நாட்கள் கழித்துக் கண்ணைத் திறந்து பார்த்தார். திருவிடை மருதூரில் எழுந்தருளிய மருதவாணப் பெருமான் முதிய அந்தண வடிவங்கொண்டு இவருக்கு முன்னே தோன்றினர். "அப்பா! பசியால் கனைத்திருக்கிறாய். இவ்வுணவினை உண்டு களைப்புத் தீர்வாயாக. எவரும் கண்டு பிடிக்க முடியாத இவ்விடத்திலே தங்கியிராதே. திருவிடை மருதூருக்குச் சென்று அவ்விடமே தங்கியிருப்பாயாக," என்று கூறி மறைந்தார். அவர் மறைந்த பின்னரே வந்தவர் கடவுள்; தந்திருவுருவை மறைத்து மறையவராய் இவ்வாறு வந்துள்ளார் என்று அறிந்து வியந்தார்.

குருகைத

தஞ்சை அரண்மனையில் உள்ள சரசுவதிமால் என்னும் நூல்நிலையத்தில் ஒருமுறை இவர் நூல்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது குருகைத என்னும் அரியநூல் ஒன்று கிடைத்தது. அதுமுதல் இவர் தமக்குத் தக்க ஆசிரியர் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். தஞ்சை அரசரின் குலகுருவின் வழிமுறையில் தோன்றி மெய்யறிவுச் செல்வராக விளங்கியிருந்த விட்டுணுபாவா என்னும் பெரியோரைப்பற்றி ஒருநாள் உணர்ந்தார். அவரது திருமுன்னையடைந்து கீழேவீழ்ந்து வணங்கினர். அருளுரை கூறியருள வேண்டுமென்று பெரிதும் வேண்டிக் கொண்டார். அப்பெரியார் இவருடைய பக்குவத்தை நன்குணர்ந்து அறிவுரை கூறியருளினர். அதுமுதல் இவருக்கு வேதாந்த நூல்களின் பொருள்களெல்லாம் நன்கு விளங்கின.

நூல்கள் இயற்றுதல்

குப்புசாமிராசுவின் மனப்பக்குவத்தையும் இலக்கண இலக்கியப்பயிற்சியையும் விட்டுணுபாவா நன்குணர்ந்தார். உலகிற்கு உதவியாக அமையுமாறு நூல்கள்பல இயற்றுக என்று கட்டளையிட்டார். ஆசிரியருடைய கட்டளையை மேற்கொண்ட இவர் வடமொழி வேதாந்த நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் உலகத்திற்குப் பெருந் தமிழ்த்தொண்டு புரிந்தார்.

வடநாடு செல்லுதல்

இவருடைய மனைவியார் குழந்தைகள் இருவர் தாயார் ஆகியோர் பரகதியடைந்தனர். பிறகு இவர் காசிக்குச் செல்ல எண்ணினார். தமது கருத்தைத் தந்தையாருக்குத் தெரிவித்தார். தந்தையார் தமது காலத்திற்குப்பின் செல்லலாம் என்று தடுத்தார். சென்று விட்டு உரியகாலத்தில் திரும்பிவிடுவதாகக் கூறி உடன்பாடு பெற்றுப் புறப்பட்டார். வட நாட்டில் பலஊர்கட்குச் சென்றார். பலமொழிகளையும் நன்குணர்ந்த இவருக்குப் பலர் பழக்கமானதுடன் இவருடைய அறிவுரைகளையுங் கேட்டு மகிழ்ந்தனர். துவாரகை, மதுரா, பிருந்தாவனம் ஹரித்துவாரம் முதலிய இடங்களைப்பார்த்து ஹரித்துவாரத்தில் மேளாவுக்குத் தங்கியிருந்தார். பிறகு தமிழ் நாட்டிற்குத் திரும்பினார்.

பல அன்பர்கள்

பரஅறிவு சான்ற இவருக்குப் பலர் மாணவர்களாகி வேதாந்த நூல்களைக் கற்றுத்தெளிந்தனர். அவர்களுள் இராமசாமி ஐயா என்பவர் இவர்பால் இலக்கண இலக்கியங்களையும் வேதாந்த நூல்களையும் நன்கு கற்றுச் சீரிய புலமை யடைந்து கீதாசாரத் தாலாட்டு முதலிய நூல்

கட்குச் சிறந்த உரையும் இயற்றினர். இவர் தம்முடைய ஆசிரியர்மீது,

அஞ்சைவெல் லடியார் அமரர்மால் பிரமர்
அளப்பருங் காணங்கள் தற்சூழ்
மஞ்சைவெல் குழலி உமைசிறார் மகிழ
மருவிடங் கைலவிட் டெழுந்து
தஞ்சையில் மனுட வடிவுகொண் டெமது
தனைதவிர்த் தருட்குரு வாகி
விஞ்சைசால் குப்பு சாமிமா முனியாய்
விளங்கிடும் பரனடி பணிவாம்.

என்னும் இதுமுதலிய பாடல்களைக் குருவணக்கமாகப் பாடியுள்ளார்.

பொதிகை மலைக்குப் போதல்

இவர் தம் மாணவர்கள் பலரோடு தென்னட்டிலுள்ள சிவப்பதிகட்கும் வழிப்படியணைந் தென்றார். பலவிடங்களையும் பார்த்துக்கொண்டு திருக்குற்றாலத்தை யடைந்தார். சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். வழக்கம்போல் ஒருநாள் விடியற் சாமநேரத்திற்கு எழுந்து சிறிது தொலைவில் காலைக்கடனை முடிப்பதற்குச் சென்றார். மாணவர் ஒருவர் கைவிளக்கை யெடுத்துக் கொண்டு சென்றார். ஓரிடத்தில் இவர் உட்கார்ந்து வெளிக்கிருந்து கொண்டிருந்தார். சில அடிகட்கு அப்பால் புலியொன்று இவர்களை விறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றது. அது எச்சமயத்திலும் மேலே பாய்ந்து விடக்கூடும் என்று எண்ணிய மாணவர் தம் ஆசிரியரைப்பார்த்து, "அடிகள்! அதோ பாருங்கள் புலியொன்று நம்மிருவர்மீதும் பாய்வதற்கு முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது," என்று கூறினர். இதனைக் கேட்ட குரு மாணவனைப் பார்த்து, "அப்பா! அஞ்சாதே, நாம் இவ்வுலகில் எதையும் பார்த்து அஞ்சுதல்கூடாது.

அலைகளும் நம்மைமக்கண்டு அஞ்சவேண்டியதில்லை. நீ கற்ற நூல்களெல்லாம் மறந்துவிட்டாயோ; எங்கும் பரவியுள்ள பிரமந்தான் புலிக்குள்ளும் பரவியுள்ளது. நாம் வேறு புலிவேறு அல்ல. புலியே நாம்; நாமே புலி. அப்புலியின் பொருட்டு நாம் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. இவ்வுடல் அழியவேண்டியகாலம் வருங்கியிருப்பின் அழியட்டுமே! இதைப்பற்றி நாம் அஞ்சுவானேன்," என்று கூறினர். புலி சிறிதுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தன்வழியே சென்று விட்டது.

நூல்கள் வெளியிடுதல்

பிறகு இவர் தஞ்சையை அடைந்து 'சங்கரவிலாச சாரதா மந்திரம்' என்னும் பெயரோடு நூல் வெளியிட் டகம் ஒன்று தொடங்கித் தாம் எழுதிய நூல்களெல் லெல்லாம் அச்சிற்பதிப்பித்து வெளியிட்டார். தம் மாணவர்களில் தக்கவர்களை நூல் வெளியிட்டுக் காரியங்களைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். மீண்டும் ஒருமுறை வடநாட்டிற்குச் சென்றார். ஹரித்துவாரத்தில் கனகல் என்னுமிடத்தில் உறைந்திருக்கும் அடியார்கள் திருக் கூட்டத்தோடு சின்னாள் உறைந்திருந்தார். பிறகு பத்ரி நாராயணம், பிரமகபாலம், கங்கை பிறக்குமிடம் முதலிய இடங்கட்கெல்லாம் சென்று திரும்பினர்.

இறுதி

பிறகு இவர் விவகாரங்களின்றிப் பரமிட்டை கூடி அமைதியாக நாட்கழித்து 1921-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் முதல்நாள் வெள்ளிக்கிழமை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இரட்டியார் தலையூருக்கடுத்த சிக்கத்தம்பூர் என்னும் ஊரில் வீடுபேறடைந்தார்.

யாக்கையை அவ்விடமே சமாதிவைத்துக் கோயில்கட்டி வழிபாடு செய்து வருகின்றனர். இப்பெரியார் பிற்றை நாளில் பிரமாநந்த அடிகள் என்னும் பெயரோடு விளங்கினார். இவர்மீது அன்பர்களால் நான்மணி மாலை முதலிய வணக்க நூல்களும், பாடல்களும் இயற்றப் பெற்றுள்ளன.

இவர் இயற்றிய நூல்கள்

1. பஞ்சதசப்பிரகரணம்
2. சீவன்முத்தி விவேகம்
3. பாலபோதம்
4. விருத்திரத் திநாவலி
5. நாநாசீவ வாதக்கட்டளை குறிப்புரை
6. ஷை செய்யுள்
7. விவேகசிந்தாமணி
8. சங்கர நீலகண்டாசார்ய சம்வாதம்
9. ஹடயோகப் பிரதீபிகை
10. சிவயோகப் பிரதீபிகை
11. அட்டாங்க யோகசூத்திரம்
12. யோக தாராவலி
13. நாரதபத்தி சூத்திரம்
14. பாணினிவியாகரணம் தமிழ்வியாக்கியானத்துடன்
15. அபரோட்சாநுபூதி
16. ஆத்மபோதமும் தத்துவபோதமும்
17. பஞ்சீகரணம் முதலியன
18. குருபுசங்க தோத்திரம்
19. பிரச்நோத்தா ரத்திநமாலை
20. சதாசாரம்
21. ஆத்மநாத்ம விவேகம்
22. சிவஞானபோத உரைநடை
23. ஞானவாசிட்ட உரைநடை
24. கைவல்லியோபநிடதம் (செய்யுள்)
25. அமிர்தபிந்தூபநிடதம் (செய்யுள்)
26. சுகரகசியோபநிடதம் (செய்யுள்)

27. கந்தோபநிடதம் (செய்யுள்)
28. தத்துவமசி மகாவாக்கிய உபதேசம்
29. சுருதி சட்லிங்க சங்கிரகம்
30. நந்திகேஸ்வர காசிகை
31. உத்தரகீதை
32. பகவத்கீதை முதலிய மொழிபெயர்ப்பு
33. தேவிகீதை
34. குருகீதை
35. இராம கீதை
36. கணேசகீதை
37. சிவஞானபோதலகு பீகை
38. சர்வஞானோத்தரம்
39. சிவபஞ்சாட்சர விளக்கம்
40. வைணவ அட்டாட்சர மந்திரார்த்த சங்கிரகம்
41. சகத் குரு வரலாறு (செய்யுள்)
42. ஷை உரைநடை
43. கீதாசாரத்தாலாட்டுரை
44. பிரமவித் தாசீர்வாதபத்ததி
45. பிரமநாமாவலி (செய்யுள்)
46. விசாரசந்திரோதயம்

கரு. சங்கரதாசர்

தோற்றம்

முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தமிழ் வளர்ச்சிக்கு நற்றொண்டு புரிந்த சங்கரதாசர் என்னும் நாடகத் தமிழறிஞர், திக்கெலாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்திலே தூத்துக்குடியிலே 1867-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 22-ஆம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் தாமோதரக் கணக்கப்பிள்ளை. தாமோதரக் கணக்கப்பிள்ளை கல்வி கேள்விகளிற் சிறந்து தமிழ்ப் புலவராக விளங்கினார். இராமாயணச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். ஆகவே

மக்கள் அவரை, "இராமாயணப் புலவர்" என்னும் காரணைச் சிறப்புப் பெயரால் குறிப்பிட்டனர்.

கல்வி

தந்தையார் தம் மகனுக்குக் கல்வியை நன்கு கற்பித்தார். அந்நாளில் தண்டபாணி அடிகள் என்னும் பெரியார் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர். வண்ணம் பாடுவதில் அவர் வல்லவராகையால் அவருடைய பெயர் வண்ணச் சரபம் எனவும், முருகனிடத்துப் பேரன்பு பூண்ட பெற்றிமையால் முருகதாச சுவாமிகள் எனவும் வழங்கி நின்றது. சங்கரதாசர் அப் பெரியாரிடம் பல நூல்களைப் பாடங் கேட்டுத் தமிழறிவை வளர்த்துக்கொண்டார். செய்யுள் செய்யுந் திறமையும் நன்கு உண்டாகியது. இவர் தண்டபாணி யடிகளிடம் பாடங் கேட்டபோது உடுமலைச் சரபம் முத்துச்சாமிக் கவிராயர் என்பவரும் அடிகளாரிடங் கல்வி பயின்றார்.

வாழ்க்கை

சங்கரதாசர் சிறிது நாள் தூத்துக்குடியில் கணக்காக வேலை பார்த்தார். பிறகு நாடகத்துறையில் நுழைந்தார். சிறிது காலம் நாடக வேலைகள் செய்தார். பிறகு பல பதிகட்குச் சென்று நாடகத்தைப்போல் சுற்றினர். அப்பொழுது இவருடைய பெயர் சுவாமிகள் என வழங்கியது. மீண்டும் மான்பூண்டியாபிள்ளை என்பவருடைய விருப்பப்படி நாடகத் துறையில் நுழைந்து பணிபுரியத் தொடங்கினர். நாடக சபைகளில் நடிகர்களைப் பழக்கும் ஆசிரியர் வேலையை மேற்கொண்டார். இவருடைய தொண்டு பல நாடகசபைகளுக்குக் கிடைத்தது. எண்ணற்ற மாணவர்கள் இவரிடம் பயிற்சி பெற்றுச் சிறந்த நடிகர்களாயினர்.

மாணவர்கள்

நாடகத்துறையிற் சிறந்து விளங்கிய முனிசாமிநாயுடு, செகநாத நாயுடு, சாமிநாத முதலியார், சீனிவாச ஆய்வார், நடேசபத்தர், கோவிந்தசாமிப் பிள்ளை, சி. கண்ணையா, சி. எஸ். சாமண்ணை ஐயர், மகாதேவ ஐயர், சூரியநாராயண சாகவதர், சுந்தரராவ், கே. எஸ். அனந்தநாராயண ஐயர், கே. எஸ். செல்லப்ப ஐயர், பைரவசுந்தரம் பிள்ளை, சீனிவாச பிள்ளை முதலியோர் இவரிடம் பயிற்சி பெற்றுப் புகழுடன் விளங்கிய மாணவர்களாவர்.

நாடகக் குழு

'சமரச சன்மார்க்க சபை' என்னும் பெயரோடு இவர் தாமே ஒரு நாடகச் சபையைச் சில ஆண்டுகள் நடத்தினர். இந் நாடகசபையிலும் பல் பயிற்சி பெற்றுச் சிறந்து விளங்கினர்கள். கிட்டப்பா முதலியோர் இச் சபையில் பயிற்சி பெற்றவர்கள். பெரிய நடிகர்கள் நாளடவில் தமது விருப்பம்போல் ஆடல் பாடல்களை மேற்கொண்டார்கள். ஆகவே சங்கரதாசர் சொன்னபடி அடங்கி நடக்கக் கூடிய சிறுவர்களைக் கூட்டி நாடகப் பயிற்சியளிக்கத் தொடங்கினர். இதன் பிறகு நாடகப்பயிற்சிக்குளல்லாச்சபைகளும் சிறுவர்களையே சேர்த்துப் 'பால' என்னும் பெயரையும் இணைத்து நாடக சபைகளை நடத்தலானார்கள். சங்கர தாசரால் நடத்தப்பெற்ற நாடக சபைகள் "பாலமீனரஞ் சனி சபை," "தத்துவமீனலோசனி சபை" முதலியன. இன்று தமிழ்நாட்டிலே புகழ்பெற்று விளங்கும் நவாப் டி. எஸ். இராசமாணிக்கம், டி. கே. எஸ். சகோதரர்கள் ஆகியோர் சங்கதாசரால் பயிற்சியளிக்கப் பெற்றவர்கள். மற்று இக் காலத்தில் தமிழ்நாட்டில் வேறுள்ள நாடக சபைகளும் சங்கதாசரின் வழிமுறையைச் சேர்ந்ததாகவே இருக்கும்.

நாடகப் புலமை

இவர் நாடகப்புலமை நன்கு அமையப் பெற்றவர் உரைநடை, பாட்டு, ஆகிய எல்லாவற்றையும் அழகிய எளிய நடையில் அமைப்பதில் வல்லவர். இவருடைய பாடல் களில் சிறந்த கருத்துக்கள் நிறைந்திருக்கும். எதுகை மோனை முதலிய நயங்கள் அமைய எழுதுவதில் வல்லவர். ஒருமுறை ஒருநாள் இரவில் நூற்றுக்கு மேற்பட்ட பாடல் கள் உரைநடைகள் முதலியவைகள் அமைந்த நாடகம் ஒன்றை எழுதி முடித்து விட்டாராம். அதனைப் பார்த்த வர்கள் வியந்து பாராட்டி மகிழ்ந்தனராம்.

மாபாவியோர் கூடிவாழும் மதுரை

கோவலன் கதையைச் சங்கரதாசர் நாடகமாக எழுதி னர். சிலம்பை விற்பதற்கு மதுரைக்குப் போக வேண்டாம் என்று கண்ணகி கோவலனைத் தடுப்பதாக எழுதி,

"மாபாவி யோர்கூடி வாழும் மதுரைக்கு
மன்னு போகாதீர் இன்று."

என்று பாடலும் அமைத்தார். நாடகம் அரங்கேற்றுதல் மதுரையில் நடந்தது. மேற்கண்ட அடிகள் பாடப்பட்டன. மதுரைமாநகரார் பதறினர்கள். "எங்கே சங்கரதாசர் கொண்டுவா மேடைக்கு," என்று கூக்குரலிட்டார்கள். மறுகணம் சங்கரதாசர் மேடைமீது தோன்றினர். "அன்பர்களே! அமைதியாக இருங்கள்," என்று வேண்டிக் கொண்டு மாபாவியோர் கூடி வாழும் மதுரை என்பதற்கு உரை சொல்லத் தொடங்கினர். மா, என்னும் சொல் திருமகளைக் குறிக்கும். பா, என்னுஞ் சொல் கலைமகளைக் குறிக்கும். வி, என்னும் சொல் மலைமகளைக் குறிக்கும். ஆகவே மாபாவியோர் கூடிவாழும் மதுரை என்றால் கல்வி செல்வம் முதலிய எல்லா நலமும் ஒருங்கமையப் பெற்றவர்

கள் சுங்கி வாழும் மதுரை என்று பொருள். இவ்வாறு கொள்ளாமல் மா-பெரிய பாவியோர்-தீவினையாளர்கள் கூடி வாழும் மதுரை என்று பொருள் கொள்ளக் கூடாது. மிகுந்த தீவினையாளர்கள் எவ்வாறு வாழ முடியும்?" என்று பொருள் விரித்தார். அவையில் ஆரவாரமும் கைதட்டலும் பலமாயின. எல்லோரும் சங்கரதாசரின் புலமையைப் பாராட்டினர்கள். முன்வரிசையில் அமர்ந்திருந்த மதுரைத்தமிழ்ச் சங்கப்புலவர் ஒருவர் எழுந்து, "நீங்கள் எந்தக்கருத்தில் எழுதியிருந்தாலும் சரி; உங்களுடைய புலமையைப் பாராட்டிப் போற்றுகிறோம்," என்றார்.

நடிப்பு

இரணியன், எமன், இராவணன் முதலியவர்களாகக் கோலம் பூண்டு நடிப்பதில் சங்கரதாசர் மிக வல்லவராக விளங்கினர். இவருடைய நடிப்பை நடிப்பு என்றே நவில முடியாது. நல்ல உடற்கட்டும் எடுப்பான தோற்றமும் உடைய இவர் அஞ்சத்தக்க கோலங்களைப் போட்டுக் கொண்டு மேடைமீது தோன்றினால் பார்ப்பதற்கு அச்சம் உண்டாகுமாம். சிறுகுழந்தைகள் அலறுவார்களாம். ஒரு முறை சங்கரதாசர் சாவித்திரி நாடகத்தில் எமன் கோலம் பூண்டு நடித்தாராம். சத்தியவானுடைய உயிரைப் பற்றிக் கொண்டுவர முடியாமல் திரும்பிய கிங்கரர்களை எமன் சினந்து சிறுங்கட்டத்தில் வீரவெறியுடன் சுச்சலிட்டுக் கையிலிருந்த சூலப்படையை ஓங்கித் தரையில் அடித்தாராம். இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த ஓரம்மையார் அஞ்சியலறுவே அதிர்ச்சியுண்டாகிக் கருப்பந் சிதைந்து போய்விட்டதாம். அன்றுமுதற்கொண்டு அக்காட்சி நடை பெறுஞ் சமயத்தில் நாடகக்காரர்கள் மேடைக்கு வந்து, "அஞ்சத்தக்க காட்சி நடைபெறப்போகிறது. கர்ப்பிணி

கள் யாரேனும் இங்கிருந்தால் இக்காட்சி முடிவுபெறும் வரையில் வெளியிற் போயிருந்துவிட்டு வாருங்கள்," என்று சொல்லி வேண்டிக்கொள்வார்களாம். இவ்வாறு இவருடைய நடிப்புத் திறமையைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

ஒருநாள் நாடகமேடை நாடகம் நடைபெற்றதாம். சங்கரதாசர் தம்முடைய உடல் முழுவதற்கும் கறுப்பு நிறம் பூசிக்கொண்டு அதன்மேல் எண்ணெயையுந் தடவிக்கொண்டு பளபளப்பான கருநிற மேனியுடன் மேடையில் தோன்றி சனீசுரனாக நடித்தாராம். பிறகு அதிகாலை நான்கு மணிக்கு அப்படியே வேடத்தைக் கலைக்காமலே எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒரு கிணற்றுப்பக்கம் சென்றாராம். அப்பொழுது சிறு இருட்டில் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு எதிரே ஒரு பெண் வந்தாளாம். அவள் இவருடைய தோற்றத்தைப் பார்த்துவிட்டு அஞ்சி நடுங்கி மார்படைத்து அந்த இடத்திலேயே மாண்டுபோனாளாம். இவ்வாறு பல நிகழ்ச்சிகள் அடிக்கடி ஏற்படவே சங்கரதாசர் வெறுப்படைந்து நடிக்குந் தொழிலை விட்டுவிட்டு மற்றவர்களைப் பழக்கும் ஆசிரியத் தொழிலைமட்டும் மேற்கொண்டிருந்தாராம்.

புலமைத் திறம்

சங்கரதாசர் சங்க நூல்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து கற்றிருந்தார். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு, குறுந்தொகை முதலிய நூல்களில் உள்ள சிறிய கருத்துக்கள் அடிக்கடி இவருடைய உரையாடல்களில் வெளிப்படும். சங்கரதாசர் இலங்கைக்குச் சென்றபோது பெரும்புலவர்கள் நிறைந்த

மாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்தில், சிலர் இவருடைய புலமையை ஆராய எண்ணினர். பல கேள்விகள் கேட்டனர். அவைகட்கெல்லாம் இவர் எளிதாக மறுமொழி கூறினர். சங்கத்தார் இவருடைய புலமைத் திறத்தைப் பாராட்டி வலம்புரிச் சங்கம் ஒன்றைப் பரிசாகத் தந்து போற்றினர்.

உதவி

மற்றவர்கட்கு இவர் உதவிசெய்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். இத்தகைய சீரியபண்பு இல்லாவிட்டால் மற்றவர்களை முன்னேற்றும் பணியில் முன்னிற்க முடியாதன்றே? செய்யும் உதவியை மறைமுகமாகச் செய்தலாகிய நல்லியல்பும் இவர்பால் குடிகொண்டிருந்தது.

இறுதி

இவ்வாறு உலகிற்குப் பணிபுரிந்திருந்த இவர் 1922-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 13-ஆம் நாள் தமது ஐம்பத்தைந்தாம் அகவையில் புதுச்சேரியில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். முத்தமிழ்த் தொண்டுசெய்த இப்பெரியாரது வரலாற்றை இப்பெரியோரால் முன்னுக்கு வந்த டி. கே. எஸ் சகோதரர்களில் ஒருவராகிய திரு. டி. கே. சண்முகம் சிறியநூலாக எழுதிவெளிப்படுத்தி யுள்ளார். அந்நூலில் இருந்தே இச்சுருக்கம் எழுதப்பட்டது.

இயற்றியுள்ள நாடக நூல்கள்

1. அபிமன்யு சுந்தரி
2. பார்வதி கல்யாணம்
3. பிரபுலிங்க லீலை
4. வள்ளி திருமணம்
5. பாதுகா பட்டாபிஷேகம்
6. இலங்கா தகனம்
7. அல்லி அர்ச்சுனா

8. சிறுத்தொண்டர்
9. சதி அநுசூயா
10. பவளக் கொடி
11. சலோசனை சதி
12. மணிமேகலை
13. மிருச்சகடி
14. சீமந்தினி
15. சாவித்திரி
16. கோவலன்
17. பிரகலாதா
18. சோமியோவும் சூலியத்தும்

---

88. இரெட்டியப்பட்டி அடிகள்

தோற்றம்

பாண்டிவள நாட்டிலே நெல்லை மாவட்டத்திலே கோவிற்பட்டிக்கு வடகிழக்கே 28 கல் தொலைவில் உள்ள நாகலாபுரம் இரெட்டியப்பட்டியிலே கலி சகுந்தை-க்குச் சரியான நள ஆண்டு புரட்டாசித் திங்கள் இரண்டாம் நாள் 1856-ஆம் ஆண்டு செப்படம்பர்த் திங்கள் 16-ஆம் நாள் இரெட்டியப்பட்டி அடிகள் என்னும் பெரியார் தோன்றியருளினார். தந்தையார் பெயர் வீரபத்திர பிள்ளை; தாயார் பெயர் ஆவுடையம்மை. அடிகளார் தோன்றிய குலம் சைவ வேளாளர் குலம். அடிகளாருக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர் சுப்பிரமணியம் என்பது.

கல்வி

இப்பெரியாரிடம் இயற்கையாகவே தெய்வத்தன்மை அமைந்திருந்தது. சிறுபிள்ளைப் பருவத்தில் எல்லாப் பிள்ளைகளையும் போலன்றித் தனிச் சிறப்புடன் கண்டோர் வியக்கும் வண்ணம் நடந்து கொண்டார். பள்ளிக்குச்

செல்லத்தக்க அகவையை அடைந்ததும் பள்ளிக்கூடத்திற் குச் சென்றார். திண்ணைப் பள்ளியாகிய அதிலே அடிகளார் சில ஆண்டுகள் ஓதினர். பிற்காலத்தில் வேறு எவரிடமும் கல்வி பயிலவில்லை. ஆயினும் கல்வகன் பாவற்றையும் கண் குணர்ந்த புலமைத் திறத்தைப் பெற்றார். இவரது அருட் புலமையைக் கண்டவர்கள் இவர் ஓதாதுணர்ந்தார் என்று முடிவுசெய்தார்கள்.

குடும்பத் தொழில்

சுப்பிரமணியத்திற்கு அகவை பதினாறாயிற்று. இவர் குடும்பத்தொழிலில் ஈடுபட வேண்டுமென்று தாய் தந்தையர் விரும்பினர். குடும்பத்தொழில் வேளாண்மை செய்தல். சிறிது காலம் அத்தொழிலைப் புரிந்தார். அதனில் வெறுப்பு ஏற்பட்டது. தாத்துக்குடிக்கு வண்டிகட்டிச் சென்று அரிசி மூட்டைகள் வாங்கிவந்து சிறிது காலம் வாணிபஞ் செய்தார்.

மதுரையை அடைதல்

வாணிபத்துறையில் இவர் அருளாளராக நடந்து கொண்டது தாய் தந்தையர்கட்குப் பிடிக்கவில்லை. சிறிது வெறுப்புடன் இருந்தனர். இவர் புறப்பட்டு மதுரையை அடைந்தார். முகமதியர் கடையொன்றில் கணக்கராக அமர்ந்தார். அக் கடையின் வாணிகம் வளர்ந்து செல்வம் மிகுந்தது.

திருமணம்

உறவினர் சுப்பிரமணியத்தைத்தேடி மதுரையில் கண்டுபிடித்தனர். அவர் வேறு எங்கும் ஓடிப்போகாமல் பார்த்துக்கொண்டனர். தாற்காட்டை யேற்படுத்திவிட்டால் எங்கும் ஓடமாட்டார் என்று எண்ணித் திருமணஞ் செய்து வைத்தனர். சில ஆண்டுகள் சென்றன. சுப்பிரமணியம்

அதிகாலையில் நீராடுதல், இறைவழிபாடு செய்தல், நிட்டை சாதித்தல் முதலிய உயரிய பழக்கவழக்கங்களை மேற்கொண்டார். ஆனைமுகக் கடவுளுடைய அருட்காட்சியும் இவருக்கு ஏற்பட்டது. அப்பெருமான் மீது,

"மதுரா புரிவடக்காய் வையைநதித் தென்பால்
சதுரார் ரயில்பாலம் தன்மேற்காய்—எங்கும்
கதித்தோங்கும் செங்கெல்சூழ் கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தாய்என் உள்ளத் துறை."

என்னும் வெண்பாவைப்பாடினர். இவருடைய ஒழுகலாறுகளைக் கண்டோர் அடிகள் என்று அழைக்கத் தொடங்கினர். நாளடைவில் இடுகுறிப்பெயர் மறைந்து இரெட்டியப்பட்டி அடிகள் என்னும் பெயர் வழங்கத் தொடங்கியது.

பம்பாய்க்குச் செல்லுதல்

கடையின் உரிமையாளர்கள் நல்லவருவாய் வரக்கூடிய வாணிகம் ஒன்றைப் பம்பாயில் தொடங்க எண்ணினர்கள். அங்குச்சென்று அதனை நன்கு நடத்துவதற்குத் தக்கவர் சுப்பிரமணிய பிள்ளையென முடிவுசெய்து பம்பாய்க்கு அனுப்ப எண்ணினர். அடிகளார் ஆங்குஞ்சென்று ஓராண்டுவரையில் பணி புரிந்து திரும்பினர்.

வெளிப்படுதல்

அடிகள் மதுரையை அடைந்தார். முன்னையிலுஞ் சிறந்த மெய்யறிவாளராக மக்களுக்குக் காட்சி தந்தார். மெய்யறிவுத் துறையின் பொருள்நலங்கள் அமைந்த பாடல்கள் பல உள்ளத்திலிருந்து வெளிப்பட்டன. இருந்தாற்போல் இருந்து அடிகளார் பேசாநிலையை மேற்கொண்டு விட்டார். அடிகளாரின் அன்பர்களும் பொதுமக்களுந் திகைப்படைத்து வருந்தினர். திடீரென்று ஒருநாள் மதுரையை விட்டு வெளிப்பட்டு விட்டனர். அடிகளா

ருடைய அன்பர்கள் அடிகளாரைப் பல விடங்களினுந் தேடியலைந்து வருந்தினர்.

பொதிகையில் தவம்

மதுரையை விட்டுப் புறப்பட்ட அடிகளார், திருநெல்லை, திருச்செந்தூர் முதலியசிவப்பதிகளில் இறைவழிபாடுசெய்து கொண்டு பொதிகை மலையை அடைந்தார். திருக்குற்றாலத் திறைவனைப் போற்றி வணங்கி வழிபட்டார். மக்களின் கூட்டஞ் சேராத ஓரிடத்தில் அமர்ந்து தவஞ் செய்ய எண்ணினார். குற்றாலநாதர் திருக்கோவிலில் இருந்து ஏறக் குறைய இரண்டுகல் தொலைவில் உள்ளது சண்பகமாதேவி நீர் வீழ்ச்சி. அந் நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் மக்கள், நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைந்துள்ள குகையொன்றில் தங்கி ஏறக்குறைய ஓராண்டு அருந்தவம் புரிந்தார்.

தாய் வழிபாடு

"தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். முற்றத்துறந்த பட்டினத்தடிகள் தாய்க்கு இறுதிக்கடன்களைச் செய்தார். தாயின் உள்ளம் வருந்துமே என்று எண்ணிய அடிகள் புறப்பட்டு இரெட்டியப்பட்டியை அடைந்தார். இவரைக் காணாது வருந்தியிருந்த உறவினர் கண்டு களித்தனர். அடிகளார் தாயைப்போற்றி வழிபட்டுக்கொண்டு அவ்விடமே தங்கியிருந்தார்.

வியத்தகு நிகழ்ச்சிகள்

அடிகளார் இரெட்டியப்பட்டியை அடைந்து தங்கியுள்ளார்கள் என்னும் செய்தி மதுரையில் இருந்த அடிகளாரின் அடியவர்கட்குத் தெரிந்தது. புறப்பட்டு இரெட்டியப்பட்டிக்குச்சென்று அடிகளாரைப் போற்றி மகிழ்ந்தனர்.

அடிகளாரிடம் வியத்தகு நிகழ்ச்சிகள் பல விளங்கின. நச்சு நோயைப் போக்குதல், பேய் பிசாசுகளை விரட்டல், உடற்பிணிகளை அகற்றுதல் ஆகியவைகளைத் திருநீற்றினால் இயற்றிக் கொண்டிருந்தனர். அடிகளாரின் அன்னையார் இவ்வுலகவாழ்வைத் துறந்தார். அவருடைய உடலை நில மகளின் திருவயிற்றில் அடக்கம் செய்தார்.

மீண்டும் பொதிகை செல்லுதல்

தாயாரின் பொருட்டே ஊரில் அமர்ந்திருந்த அடிகளார் ஒன்றரைத் திங்கள்வரை மனதை ஒருமுகப் படுத்தி நிட்டையிலமர்ந்தார். அங்கு உறவினர்களின் தொல்லை மிகுதியாயிற்று. ஆகவே அடிகளார் மீண்டும் பொதிகை மலையை அடைந்து தவத்தில் அமர்ந்தார். இறைவனருளை முற்றிலும் பெறும் வரையிலும் தவத்திலேயே அமர்ந்திருந்தார். இறைவன் திருவருள் நன்கு கை கூடியது. அதன் பிறகு தவத்தை விட்டு எழுந்தார். உலகத்தில் உள்ள மக்கட்கு அருள்செய்யும் பொருட்டு ஊர் ஊராகச் சென்றார்.

அடிகளார் கொள்கை

நாட்டு மக்களுக்கு அடிகளார் புதிய கொள்கையொன்றை வெளியிட்டனர். அதிகாலையில் எழுந்து ஐந்துமணிக்குள் குளிர்ந்த தண்ணீரில் நீராடுதல் வேண்டும். ஊனுண்ணுதல் கூடாது. மரக்கறி உணவையே உண்ணுதல் வேண்டும். ஐவகைத் தீமைகளில் (பஞ்சமாபாதகம்) ஒன்றாவது தன்னிடம் நேராமல் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும். வெள்ளிக்கிழமையை விரத நாளாகக்கொள்ள வேண்டும். எவ்வகையான நோய் வந்தாலும் சரி தண்ணீரில் குளிப்பதை நிறுத்துதல் கூடாது. வெந்நீரை அருந்துதலுங்கூடாது. மருந்துகளைச் சாப்பிடக்கூடாது. நோய்

வந்த சமயமாயின் மாலையிலும் நீராடுதலை மேற்கொள்ளுதல் வேண்டும். பிள்ளைபெற்ற மாதர்களும் எவ்வகையான மருந்துக்களையும் உண்ணக்கூடாது. குழந்தை பிறந்தவுடன் தாயையும் சேயையும் தண்ணீரில் குளிப்பாட்டுதல் வேண்டும். பிள்ளைபெற்ற மாதர்கள் உடல் நலம் குன்றியிருப்பின் மாலையிலும் நீராடும்படி செய்தல் வேண்டும். மருந்தானது இயற்கைக்கு மாறுபட்டது. இறைவன் திருவருள் ஒன்றைமட்டும் உறுதியாக நம்பியிருந்தாற்போதும். நமக்கு வரும் நோய்கள் பழவினையின் பயனாக வருகின்றன. நாம் நல்வினையாளர்களாக இருப்போமாயின் நமக்கு நோயோ பிற தீமைகளோ எச்சமயத்திலும் உண்டாகமாட்டா. காலங்களில் நல்ல காலம் தீய காலம் என்று இல்லை. எல்லாக்காலமும் நல்லகாலந்தான். காரியக்கேடு நேரிடுமாயின் அது தீவினையின் பயன்." என்பன முதலிய வைகள் அடிகளாரின் கொள்கைகளாக இருந்தன. இதனை அடிகளார் மக்கட்கு அறிவுறுத்தினர்.

பன்னடைதல்

அடிகளாரின் கொள்கைகளிற் சில அருஞ்சத்தக்கனவாக இருத்தலைக் கண்டு சிலர் அஞ்சினர். அடிகளார் தாமே இம் முறைகளை மக்களிடம் நடைமுறையில் நடத்திக் காட்டிக் கைமேற் பலனுண்டாகச் செய்தனர். இதனால் எளிதாகப் பயன் விளைதலைக் கண்டு எண்ணற்ற மக்கள் இக் கொள்கையைப் பின்பற்றி நடந்து நல்ல பலன் பெற்றனர். முதலில் அஞ்சியவர்கள் பிறகு வியக்கத்தக்க வாறு பலன் உண்டாதலைக்கண்டு மிகுந்த இறும்பூதடைந்து அடிகளார் செயற்கரிய செய்யும் பெரியார் என்று பாராட்டிப் போற்றலாயினர். கோயிலில் உள்ள சிலைகளுக்கு முழுக்கு வழிபாடு திருவிழா முதலியன நிகழ்தலைப்போல அடிகளார்க்கும் பல ஊர்களில் திருவிழாக்கள் நிகழ்ந்தன.

அடிகளார் சென்ற வரலாற்றும் ஆட்கொண்ட அடியார் கட்கும், இயற்றிய புதுமைகளுக்கும் ஒரு கணக்கு வழக்கு இல்லை.

இதுதி

அருணகிரி பெரியாராக எண்ணற்ற புதுமைகளைச் செய்து விளங்கிய அடிகளார் துந்துபி யாண்டு (1923) மார்கழித்திங்கள் இருபத்தெட்டாம் நாள், தமது அறுபத் தாறும் அகவையிலே தாம் தோன்றிய இரெட்டியப்பட்டி யிலேயே இறைவனோடு இரண்டறக் கலந்தார். பிறகு அடிகளார் திருவுடல் அடக்கஞ்செய்யப்பட்டுக் கோயிலுங் கட்டப்பெற்றது.

கஎ. சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்

தோற்றம்

இவர் மூகவூர் இராமசாமிக் கவிராயரின் இரண்டாவது மைந்தராகப் பிறந்தார். இளமைக் கல்வியைக் கற்று முடித்தபின் திருவாவடுதுறை ஆதீனத்தை யடைந்து இரண்டாவது சந்நிதானமாக எழுந்தருளியிருந்த நமசிவாய தேசிகரிடம் முறையாகக் கல்வி கற்றுத் தேறினர். பிறகு அவ் வாதீனப் புலவராக அமர்ந்து பலருக்குக் கல்வி கற்பித்தார்.

மதுரையில்

பாண்டித்துரைத்தேவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்தியபின் கவிராயர் அச் சங்கத்தோடு ஒருங்கிய தொடர்புகொண்டார். சங்கத்திலே எண்ணற்ற ஓலைச் சுவடிகள் குவிந்திருந்தன. அவைகளை ஆராய்ந்து சரியான பாடத்தை முடிவுசெய்து அந் நூல்களை அச்சிற் பதிப்

பித்து வெளியிடுதற்குத் தக்கார் ஒருவரைச் சங்கம் நாடியது. கவிராயர் அவ் வேலையை மேற்கொண்டு பல நூல்களை ஆராய்ந்து குறிப்புக்களுடன் சுத்தப்பதிப்பாக வெளியிடச் செய்தார்.

தனிப்பாடல்கள்

இவர் அவ்வச்சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள் பல. சேற்றூர்த் திருவிழாவில் இவர் ஒவ்வோராண்டினுஞ் செய்யுட்கள் கூறுவது வழக்கம். அவ்வாறு கூறிய பாக்கள் பல தனிச் செய்யுட் சிந்தாமணியில் சேர்க்கப்பட்டுள்ளன.

கரிவலம்வந்த நல்லூர்

தம் நண்பர் நால்வருடன் இவர் ஒருமுறை கரிவலம் வந்த நல்லூருக்குச் சென்றிருந்தபோது,

"தருவையா னகஞ்சநிதி என்னுமுத்துச்
சாமியெனுந் தருமன் முன்னந்
திருவையா னகமுழங்க வேட்டநெல்லை
யப்பமுகில் செந்தில் தேவாம்
துருவையா னகக்குமர சாமிசுப்பி
ரமணியநூல் சுகனும் இயானும்
கருவையான் நகரமதைக் கண்டதனால்
காண்கிலமக் கருவைத் தானே."

என்னுஞ் செய்யுளைப் பாடினார். திருக்குற்றாலத்திற்குச் சென்றிருந்தபோது,

"கற்றால மாதக்கங் கண்டனை யென்று கயவர்க்குப்பாச்
சொற்றால மாதவ மாமோ புலவிர் துதிக்கைக்கிந்த
நற்றால மாதகு மென்னுமுன் னோனை நயந்துபெற்ற
குற்றால மாதலத் தானையன் பாற்சென்று கூறுமினே."

"வடவரு விப்புனன் மூழ்கவு நின்னை வணங்கடியார்
உடனமர் வாழ்க்கை பெறவுமிப் பாவிக்கும் உண்டுகொலோ

கடகரி மாமுகன் தந்தையென் றுயுன் கருணைவந்து
திடமுற நானென் றறியேன்குற் றுலத் திகம்பரனே."

என்னுஞ் செய்யுட்களைப் பாடினர்.

திருமணம்

திருவாவடுதுறை ஆதீனப் புலவராக விளங்கிய இவருக்கு இவர்காலத்தில் ஆதீனத்தலைவராக இருந்த சுப்பிரமணிய தேசிகர் திருமணம் முதலியவற்றிற்குத் தக்கவாறு பொருள் வழங்கினர். சிவப்பதிகட்கு யாத்திரை செய்தல், மாணவர்கட்கு இலக்கண இலக்கியங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் போதித்தல் முதலிய செயல்களிலேயே இவருடைய வாழ்நாளின் பெரும்பகுதி கழிந்தது.

குதிரைக்குட்டி பெறுதல்

இவருடைய தந்தையாராகிய இராமசாமிக் கவிராயர் இராயப்பன்பட்டி ராயப்ப உடையாரைப் பார்க்கச் சென்றபொழுது இளைஞராக இருந்த இவரும் உடன் சென்றிருந்தார். இராமசாமிக் கவிராயருக்குக் குதிரையொன்றை நன்கொடையாக வழங்கிய உடையார், இளைஞராகவிருந்த இவருடைய அறிவுத் திறமையையும் ஆராய்ந்து பார்த்து இவரை நோக்கிக் "குட்டிக்கவிராயர் இந்தக் குட்டிக்குதிரையைப் பரிசாகப் பெறுக" என்று கூறி ஒரு குதிரைக்குட்டியைக் கொடுத்தார். அப்பொழுது இவர்,

"குட்டிக் குதிரையினைக் குட்டிக் கவிராயர்
இட்டமுடன் கொள்கவென்று ரீந்ததனால்—வட்ட
உலகுபுகழ் ராயப்பா ஒன்றல்ல வாசி
பலவாகக் கொள்வனினைப் பார்."

என்று வெண்பா ஒன்றை அந்த உடையாரிடங் கூறினர்.

கவிராயர் பண்பு

இவரிடங் கல்வி கற்றவர்கள் பலர் பெரும்புலவராகச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தனர். இவர் பொருளுக்காக

ஒருவரையும் புகழார். அன்பற்றவர்களிடம் என்றும் அணுகார். நூல்கள் பலவற்றைப் பரிசோதித்துத் தமிழ்ச் சங்க வாயிலாக வெளியிட்டதன்றி இவர் தனி நூல் எதுவுஞ் செய்ததாகத் தெரியவில்லை.

இறுதி

இறுதிவரை மதுரையில் தமிழ்ச்சங்கநூற் பரிசோதக ராக இருந்த இவர் 1927-ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் பதினெண்காம் நாள், இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

கஅ. முத்துராமலிங்க சேதுபதி (உ)

தோற்றம்

இவர் முன்னர்க் கூறிய முத்துராமலிங்க சேதுபதியின் பேரர். இராச ராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி என்று வழங்கப்பட்டார். 1889-ஆம் ஆண்டு சூன் திங்கள் நாலாம் நாள் பிறந்தார். கல்வி கற்றுச் சிறப்புடன் விளங்கினர். 1910-ம் ஆண்டு சூன் திங்கள் மூன்றாம் நாள் முடி சூடினர்.

வாழ்க்கை

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவர். பல பெருங் கழகங்களில் அவையோர் வியக்குமாறு பேசியவர். தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். அட்டாகபந்தம் முதலிய ஓவியப் பாக்களை விரைவாகப் பாடியவர். தனிப் பாடல்கள் பல இயற்றியிருக்கிறார். 1915-ஆம் ஆண்டு முதல் இறுதிவரையிலும் சென்னை சட்டசபையில் தமிழ் நாட்டு நிலச்சுவான்தார்களின் ஆணையாளராக இருந்து பொதுக்காரியங்களில் ஈடுபட்டு எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றவர். தமிழ்ப்புலவர்களிடத்துப் பேரன்பும்

பெருமதிப்பும் உடையவர். மு. இராகவையங்கார், ந. இராகவ ஐயங்கார், உ. வே. சாமிநாதையர் முதலியவர்கட்குத் தக்கவாறு உதவிசெய்து போற்றினர்.

இறுதி

எல்லா நலங்களும் இனிதுபெற்றுச் சிறந்து விளங்கிய இவர் 1928-ஆம் ஆண்டில் (விபவ ஆண்டு ஆடித்திங்கள்) இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது மறைவு புலவர்கட்குப் பிருந்த கலக்கத்தை உண்டாக்கியது. இரங்கற்பாக்கள் பாடி உள்ளம் வருந்தினர். சிலருடைய இரங்கற்பாக்களை சண்டுக் காண்க.

உ. வே. சாமிநாதையர்

" தங்குவளக் கைலையிடம் சார்ந்தனையோ செங்கரத்தில்
சங்குடைய செங்கணைவன் தனதுலகு சார்ந்தனையோ
கொங்குமிகு கடம்பணியும் குகனுலகு சார்ந்தனையோ
எங்குநடந் தனைநவிறி இராசரா சேந்திரனே."

" கலையில்புகழ் மிகுசேது காவலவன் ஒருசிறிதும்
புலையில்குணம் உறாச ராசபுர வலன்தனையித்
தலையிலிருந் தகற்றிடச்செய் தறுகண்மை யுடைக்கலியான்
வலையில்பெருங் கொடுமையினி மாறவருள் இறையவனே."

ந. இராகவ ஐயங்கார்

" மண்ணியநா டனைத்தினிலும் வந்தவர்பா வங்கழுவும்
புண்ணியநா டெனுஞ்சேதுப் பொருவில்தமிழ்த் திருநாடு
நண்ணியநீள் தவமனைய ராசரா சேச்சுரனே
விண்ணியல்நா டாளவுநீ விரும்பினையோ சென்றனையால்."

" தாயலறத் தம்பியழத் தங்கையழச் சிற்றப்பன்
கூயலறக் குலமகளிர் குழைந்தலறச் சிறுவருடன்
சேயலற நீவானில் சிறப்பயர்தல் வழக்கன்றால்
ஞாயிறலர் குலமுதலே ராசரா சேச்சுரனே."

மு. இராகவஐயங்கார்

" தண்டமிழாம் அணங்குதனைத் தாங்குமொரு
தலைவனின்றித் தளர்ந்த காலை
மண்டுதுயிர் இருளகல வந்தருள்பாற்
கரன்பினுவா மதியில் தோன்றும்
எண்டகுசீர்ச் சேதுபதி இராசரா
சேசவள்ளால் இந்நாள் உன்னைக்
கண்டிலமால் யாங்கொளித்தாய் காசினியின்
நிலையிதுவோ காணுங் காலே."

குகமணிவாசகசரணாலய அடிகள்

" பூபால னாப்பிறந்து புகழ்பால னாகியிந்தப் புவனம் போற்ற
மாபாலம் ஒன்றினைமா னாமதுரை வைகைதனில் வழங்கிமின்னும்
மாபால னடிமறவா நிறையுளத்த மயிர்ப்பால வழிதோ யாது
காபாலி உலகமது சென்றனையோ நின்போல்வார்
[காணேன் ஐயா."

" மாட்சிமிகும் புதுவைநகர் மார்த்தாண்ட
பைரவப்பேர் மன்னன் வாழும்
காட்சிதனைக் கண்டனையோ கலந்துறைந்து
மகிழ்ந்தனையோ கவின்சேர் ஞாலம்
தாட்சியின்றி முறைபுரிந்த தமிழ்வேந்தர்
நீரிருவர் தழுவி னீரோ
மாட்சிமிகும் நுந்தையொடு முன்னோரும்
வரவேற்று மகிழ்ந்திட் டாரோ."

சர்க்கரைப் புலவர்

" புவிவேந்தர் மணிமகுடம் புனைகழலாய்
தனுக்கோடி புரக்குங் கோவே
கவிவேந்தர் கலியகலக் கனகமழை
பொழியுமிருகை யுளோய்கட்
செவிவேந்தன் பிலத்தொளிக்கச் செந்தமிழா
தியகலையில் சிறந்தாய் செல்வச்
சிவிவேந்தன் அனையமுத்து ராமலிங்கேந்
திரசுவர்க்கம் சென்றிட்டாயோ."

கூ. கே. எஸ். சீனிவாச பிள்ளை

தோற்றம்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரியலூர்க்கு அண்மையில் உள்ள கிழக்கொழூர் என்னும் சிற்றூரிலே சீனிவாசபிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் சிவசிதம்பரம் பிள்ளை. இவருடைய குலம் கார்காத்த வேளாளர் குலம்.

கல்வி

தொடக்கப்பள்ளிப் படிப்பை முடித்தபின்னர் திருச்சியில் உள்ள கல்லூரி ஒன்றிற் சேர்ந்து சிலகாலம் படித்தார். அதன்பிறகு கும்பகோணம் கல்லூரியிற் கற்று எப். ஏ தேர்வில் தேர்ந்தார். பிறகு திருச்சியில் மாவட்டத் தலைவர் அலுவலகத்தில் எழுத்தாளராக அமர்ந்தார். அலுவலில் இருக்கும்போதே வழக்கறிஞர் தொழிலுக்குத் தனிப்பட்ட முறையில் படித்தார். தேர்வு ஒன்றுக்குப் பணங்கட்டினர். அலுவல் மிகுதியாலும் பலவகைத் தொல்லைகளாலும் தேர்வுக்குத் தாம் பணங்கட்டியிருத்தலை அடியோடு மறந்தே போனர். தேர்வுக்கு நான்கே நாட்கள்தான் இருந்தன. ஒருநாள் ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டு அறச்சாலை (சத்திரம்) ஒன்றுக்குச் சென்றார். அங்கு ஒருவர் தேர்வுக்குப் படித்துக்கொண்டிருத்தலைக் கண்டார். அப்பொழுதுதான் இவருக்குத் தாமும் தேர்வுக்குப் பணங்கட்டியிருக்குஞ் செய்தி நினைவுக்கு வந்தது. உடனே பாடங்களையெல்லாம் படிக்கத் தொடங்கினர். தேர்வுக்கு எழுதி வெற்றியும் பெற்றுவிட்டார்.

வழக்கறிஞர் வேலை

முதன்முதலாக நாகப்பட்டினத்தில் வழக்கறிஞராக வேலைபார்க்கத் தொடங்கினர். மிகு விரைவில் பேரும் புகழும் பெற்றுவிட்டார். புகழ்பெற்ற பின்பு நாகையை

விட்டுத் தஞ்சையை அடைந்து தொழிலை நடத்தினர். பெரிய வழக்கறிஞராகி விட்டார். இவருக்குக் கீழ் பல பேர் வழக்கறிஞர்களாக இருந்தார்கள். அவர்களுள் தமிழ வேள் உமாமகேசுவரம் பிள்ளையும் ஒருவர்.

தமிழ்ப்பயிற்சி

ஆங்கிலத்தை விடத் தமிழினிடத்திலே இவருக்கு மிகுந்த பற்று ஏற்பட்டது. குடந்தைக் கல்லூரியில் இவர் கல்வி கற்றுக்கொண்டிருந்தபொழுது அங்கு, பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களுடைய மாணவராகிய தியாகராசச் செட்டியார் தமிழாசிரியராக இருந்தார். அவரிடம் தனிப்பட்ட முறையில் பல இலக்கண இலக்கியங்களைக் கற்றுணர்ந்தார். அதனல் இவருக்குத் தமிழ்ப்புலமையும் நன்கு அமைந்தது. பல நூல்களையும் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். வடமொழிப் பயிற்சி தமிழ்ப்பயிற்சிக்கு இன்றியமையாத தென்பதை யுணர்ந்து அம் மொழியையுங் கற்றுத் தேறினர்.

பொதுநலப்பணி

புகழ்பெற்ற வழக்கறிஞராக இருந்தபோது மூன்று முறை முனிசிபல் தலைவராக இருந்து பொதுநலப் பணிகள் பல செய்தார். முதன்முறை தலைவராக இருந்தபோது தான் வின்ஞற்றங்கரையில் தண்ணீர் நிலையத்தை அமைத்தார். பயிர்த்தொழிலைக் குறித்துப் பலவகையான ஆராய்ச்சிகள் நடத்தினர். பொருட்காப்பு நிலையங்கள் (பாங்கிகள்) பல ஏற்படச் செய்தார். நூல்நிலையம் முதலியவைகட்கு ரூபா எண்ணூயிரத்திற்குமேல் நன்கொடை வழங்கினர்.

பட்டங்கள்

சினிவாச பிள்ளையின் புகழையும் பொதுநலத் தொண்டையும் அரசியலார் அறிந்தனர். இவருக்குப் பட்டங்கள்

வழங்கிச் சிறப்பு செய்யவேண்டும் என்று எண்ணினர்கள். முதலில் இராவ் சாகிப் என்னும் பட்டத்தை வழங்கினர் கள். பிறகு இராவ் பகதூர் என்னும் பட்டத்தைக் கொடுத் தார்கள்.

தமிழ் வரலாறு

இவர் கல்வெட்டு ஆராய்ச்சியில் வல்லுநர். பல ஆண்டு கள் முயற்சி செய்து தமிழ் வரலாறு என்னும் நூலை எழுதி னர். இந்நூலுக்கு உ. வே. சாமிநாதையரும், திரு நாரா யண ஐயங்காரும் பல குறிப்பக்கள் வழங்கினர்கள். உட னிருந்து எழுதி உதவி செய்தவர்கள் உலகநாத பிள்ளை, குடந்தை உ. சா. வேங்கடராமையர் ஆகியோர். தமிழ் வரலாறு முதற்பாகம், இரண்டாம் பாகம் என இரண்டு பகுதிகள் 1922-ஆம் ஆண்டில் வெளியாயின. இப் பகுதி களைத் தம் தமிழாசிரியர் தியாகராசச் செட்டியாருக்கு உரிமைப் படுத்தினர். மூன்றும் நாலாம் பாகங்கட்கும் குறிப்புக்கள் எழுதி வைத்திருந்தாராம். அவை செல் லரித்து வீணாயின என்று சிலரும், களவு போய்விட்டன என்று சிலரும் கூறுகின்றனர். மறைந்துபோன பகுதிகள் வெளிவராமற்போனது தமிழ்நாடு செய்த தவக்குறைவு என்றே சொல்லவேண்டும். அப் பகுதிகளை எழுதி முடிப்ப தற்குள் உடல்நலங் குன்றிவிட்டபடியால் இவரால் அப் பகுதிகளை எழுத முடியவில்லை. உலகநாதபிள்ளை எழுதிய சரசுவதிமால் நூல்நிலையப் பட்டியலை ஆராய்ந்து இவர் திருத்தமுற்ற செய்து கொடுத்தார்.

தஞ்சையின் பெருமை

தஞ்சையின் பெருமை அங்குள்ள சரசுவதிமால் நூல் நிலையத்தாலுற் சிறந்து விளங்குகிறது என்றல் பொருந் தும். இந் நூல்நிலையத்தைச் சென்னைக்குக் கொண்டு

போய் அரசாங்க நூல்நிலையத்தோடு இணைத்துவிடுதற்குச் சில் முயன்றனர். 1918-ஆம் ஆண்டில், இவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்திச் சிளர்ச்சி செய்து நூல் நிலையம் தஞ்சையைவிட்டுப் போகாமல் காத்துத் தஞ்சை யின் பெருமையை நிலைநிறுத்தினர்.

திருமணம் இல்லை

"பேய் கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ளல் ஆகாதே' என்று தணிகைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் திருவாய் மலர்ந்தருளினார். அதையெண்ணியோ அல்லது வேறு காரணத்தைத் முன்னிட்டோ இவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. தம் இளவலின் மகளாகிய சுபாதினி என்னும் பிள்ளையை வளர்ப்புப் பிள்ளையாகக் கொண் டிருந்தார்.

நண்பர்கள்

சோமசுந்தர பாரதியார், திரு-வி. கலியாணசுந்தர முதலியார், உ. வே. சாமிநாதையர், சரவணபவானந்தம் பிள்ளை ஆகியோர் இவருக்கு நண்பர்களாக இருந்தனர்.

பண்பு

திருமணம் இல்லாதவராக வினங்கிய இவர் தாம் முயன்று தேடிய பொருளைப் பொதுநலப் பணிகட்கும் புலவர்கட்கும் தக்கவாறு வழங்கி வள்ளலாகவும் வினங்கி னர். உயர்குடிப் பிறந்தவராகிய இவர் யாருக்கும் எத் தகைய தீமையையும் செய்தவரல்லர். ஏழை எளிய வர்கள் இவரைத் தம் தந்தையைப்போல் பாராட்டினர்கள். இவர்பால் பாடங் கேட்டவர்கள் பலர். அவர்களுள் குறிப் பிடத் தக்கவர்கள்: உலகநாதபிள்ளை, சாலியமங்கலம் மு. சாம்பசிவ நாயினர், தஞ்சைக் கீழவீதி தோட்டம் மீனாட்சி சுந்தரமுதலியார் முதலியோராவர்.

தூக்கிச் செல்கிறோம்

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கூட்டம் ஒன்றுக்கு இவரை அழைத்துச் செல்ல உமாமகேசுரம் பிள்ளை, குமரசாமிப் பிள்ளை ஆகியோர் எண்ணினர். இவரிடம் சென்று 'வர வேண்டும்' என்று வேண்டினர். அப்போது இவர் சிறிது உடல்நலம் குன்றியவராக இருந்தார். ஆகவே அவர், "உடல்நலமில்லையே என்ன செய்வது?" என்றார். அழைக்கச் சென்றவர்கள், "அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். தூக்கிக்கொண்டு செல்கிறோம்" என்றனர். சங்கத்தின் வாயிலை யடைந்ததும் தூக்கிக்கொண்டும் போயினர். இதனால் இவருடைய புலமைத்திறம், மற்றவர்கள் இவர்பால் கொண்டிருந்த மதிப்பு முதலியவைகளை நன்குணரலாம்.

இறுதி

எண்பதாம் ஆண்டு வரையில் வாழ்ந்திருந்த இவர் 1929-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

உ0. சிவானந்தசாகர யோகீசுவரர்

தோற்றம்

சிவானந்தசாகர யோகீசுவரர் என்று பின்னாளிற் பெரும் புகழ்பெற்ற இவருடைய பிள்ளைப்பெயர் கிருட்டிண மூர்த்தி. இவர் தஞ்சை மாவட்டத்திலே நாகப்பட்டினத்திலே ஏறக்குறைய தொண்ணூறு யாண்டுகட்கு முன்னர்த் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் அண்ணாவையர். இவர் நாகபட்டினத்திலே கப்பல் வணிகர் ஒருவரிடம் அலுவலில் அமர்ந்து குடும்பத்தை நடத்தினார். கிருட்டிணமூர்த்தி சிறுவராக இருக்கும்போதே அண்ணா

வையர் இவ் வுலகவாழ்வைத் துறந்தார். அகவை மூன்று நிரம்பப் பெற்றிருந்த கிருட்டிணமூர்த்தி தம்முடைய தமையனார் ஒருவரின் ஆதரவில் வளர்ந்தார்.

கல்வி

யோகீசுரரின் தமையனார் பெயர் சுப்பராயர். அவர் தமிழில் நல்ல அறிவுபெற்றுச் செய்யுள் இயற்றக்கூடிய திறமும் பெற்று விளங்கினர். மிகுதியாக ஆங்கிலங் கற்கவில்லை. சிறிதே கற்றிருந்தார். ஆயினும் அந்த அறிவைக் கொண்டே முதலில் தென்னிந்திய இருப்புப்பாதை அலுவலகத்தில் கணக்கராக அமர்ந்தார். பிறகு புகைவண்டி நிலையத் தலைவரானார். அதன்பிறகு தாசில்தாரும் ஆனார். அவர் முருகக் கடவுளிடத்தில் பேரன்புடையவர். அவர் தம் இளவலாகிய கிருட்டிணமூர்த்திக்குத் தாமே தமிழ்க் கல்வியை நன்கு கற்பித்ததுடன் ஆங்கிலக் கல்வி கற்றற் பொருட்டுப் பள்ளிக்கும் அனுப்பிவைத்தார்.

இளமையிற் புலமை

கிருட்டிணமூர்த்தி அகவை பத்தை அடையுமுன்னரே நிகண்டு, திருக்குறள், நன்னூல், பாரதம், பாகவதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய நூல்களைப் பயின்று செய்யுளியற்றக்கூடிய நல்ல புலமைத் திறத்தை யடைந்தார். பதினைந்தும் அகவை முடிவதற்குள் மெட்ரிக் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இலக்கண இலக்கியங்களில் மேலும் வல்லவரானதுடன் அட்டாவதானமுஞ் செய்ய வல்லவரானார். பிறகு அரசினர் போதனமுறைப் பாடசாலையிற் சேர்ந்து ஆசிரியத் தேர்விலும் தேறினர். மற்றும் அணிநூல், வேதாந்த சித்தாந்தநூல் முதலியவைகளை ஓதியுணர்ந்து பேரவைகளில் பெருஞ் சொற்பொழிவு செய்யக்கூடிய திறமையையும் அடைந்தார்.

வாழ்க்கை

பிறகு இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இவருக்கு மனைவியாக வாய்த்த மங்கையும் தமிழை நன்கு கற்றுணர்ந்து செய்யுள் இயற்றத்தக்க திறமையைப் பெற்றுள். இவர்களுடைய மக்கட்பேறாக இரண்டு பெண்குழந்தைகள் தோன்றினர். அவர்கள் குழவியாயிருக்கும்போதே மனைவிண்ணுலக வாழ்வைப் பெற்றுள். கிருட்டிணமூர்த்தி இல்வாழ்க்கையில் இறங்கியதும் திருத்தில்லையில் சீனிவாச சாத்திரி என்பவரால் அந் நாளில் நடத்தப்பெற்ற 'பிரம வித்தியா' என்னும் பத்திரிகைக்கும், சென்னைமாநகரில் சை. இரத்தின செட்டியாரால் நடத்தப்பெற்ற, 'ஆரிய சனப்பிரியன்' என்னும் கிழமைப் பத்திரிகைக்கும் உதவியாசிரியராக அமர்ந்து பல அரிய கட்டுரைகளை எழுதினர்.

யோகீசுவராதல்

மனைவியார் காலமானபின் கிருட்டிணமூர்த்தியாருக்கு உலக வாழ்க்கையில் உவர்ப்பும் சலிப்பும் வெறுப்புந் தோன்றின. அவருடைய உள்ளம் பற்றற்ற நிலையை அடைந்தது. அவர் பல வேதாந்த சித்தாந்த நூல்களை நன்கு கற்றுத் தேறியிருந்தமையின் துறவிபோன்ற நிலையை அடைந்தார். தம்முடைய இரண்டு குழந்தைகளையும் தமையனார் வீட்டிலே விட்டுவிட்டுத் தாம் பல விடங்கட்கும் இறைவழிபாட்டு நோக்கமாகச் சென்றார். பொதிகைமலையை அடைந்து அங்கே சில ஆண்டுகள் தங்கினர். யோகம், வைத்தியம், மாந்திரீகம் முதலியவைகளை நன்கு கற்றுணர்ந்தார். அதுமுதல் இவருடைய பெயர் சிவானந்தசாகர யோகீசுரர் என வழங்கத் தொடங்கியது. பொதிகைமலையில் தங்கியிருந்த காலத்தில் பெரியார் சிலரையடைந்து அவர்களால் மெய்யறிவுரையும் பெற்றார். பிறகு மீண்டும் இல்லத்தையடைந்து தம் புதல்விகளோடு

திருச்சிராப்பள்ளியில் சுராயணபிள்ளை என்ற செல்வ ஒருவருடைய ஆதரவிலே சிலகாலந் தங்கியிருந்தார்.

ஆசிரியராதல்

யோகீசுரர் கல்வியறிவிற் சிறந்தவர் என்பதை யுணர்ந்த பலர் இவரிடங் கல்வி கற்றுச் சிறந்தனர். அவ்வாறு சிறந்தவர்களில் தஞ்சை செயின்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த சேதுராம பாரதியார் என்பவர் ஒருவர். மற்றும் பலர் பல விடங்களில் தமிழாசிரியர்களாயினர். பிறகு யோகீசுரர் 1898-ஆம் ஆண்டில் சென்னை மாகறையடைந்து ஆரியன் உயர்நிலைப்பள்ளியில் பதினைந்தாண்டுகள் தமிழாசிரியராக இருந்தார். பிறகு சென்னையை விட்டுப் பல சிவப்பதிகட்கும் சென்று கடவுளை வழிபட்டு மீண்டுஞ் சென்னையை அடைந்தார்.

இறுதி

பள்ளிக்கூட வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின் பத்திரிகைகட்குக் கட்டுரை வரைதல் மாணவர்கட்குக் கல்வி போதித்தல் ஏழை எளியவர்கட்கு இயன்ற உதவி புரிதல் முதலிய நற்செய்கைகளில் ஈடுபட்டார். இவருடைய கட்டுரைகள் பல ஆனந்தபோதினி திங்கள் தாளில் வெளியாகியுள்ளன. அவைகள் பெரும்பாலும் ஞான நெறியையே போதித்து அன்பர்கட்கு நல்லறிவு புகட்டும் மெய்ஞ்ஞானக் களஞ்சியமாக விளங்கின. 1930-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலே இவர் சில மாணவர்கட்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, "முருகா!" என்று கூறிய நிலையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து முருகன் திருவடி நீழலை யடைந்தார்.

14. சச்சிதாநந்த யோகீசுரர்

தோற்றம்

1864-ஆம் ஆண்டில் சச்சிதாநந்த யோகீசுரர் பிறந்தார். இவருடைய இல்லறப்பெயர் குப்புசாமி முதலியார் என்பது. இவர் தோன்றிய குலம் துளுவ வேளாளர் குலம். காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் பள்ளியில் கல்வி கற்றுத் தேறினர்.

வாழ்க்கை

இவர் சென்னை சூளையில் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். திங்களொன்றுக்கு இருநூறு முந்நூறு வெண் பொற்காசுகள் ஊதியம் கிடைக்கக்கூடிய வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார். நாளடைவில் இவருக்கு உலக வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றியது. அடிக்கடி யோக நெறியிலே ஈடுபட்டார். 1912-ஆம் ஆண்டில் இவருடைய வாழ்க்கைத் துணைவியாரான பெருந்தேவியம்மையார் இறைவன் திருவடி நீழலை யடைந்தார். அதன்பிறகு இவர் வியாசர் பாடியை அடைந்து அங்கிருந்த சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார்பால் அருளுரை பெற்றார். அவ்வடிகள் இவருக்குச் சச்சிதாநந்தம் என்று பெயர் கொடுத்தருளினர்கள்.

துறவு

பிறகு துறவியாக வெளிப்பட்ட யோகீசுரர் கடப்பைக்குச் சென்றார். அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்பொழுது, "சிவப்பிரமைக்கிய வேதாந்த ரகசியம்" என்னும் நூலை எழுதினர். பிறகு வேறு சில நூல்களையும் எழுதினர். அதன்பிறகு கடப்பைக்கு நாற்பது மைல் தொலைவில் உள்ளதும், நான்கு மலைகளுக்கு நடுவில் அமைந்ததும் ஆகிய கடிகோட்டை என்னுஞ் சிற்றூரில்

சிலகாலம் தங்கி யிருந்தார். அதன்பிறகு சென்னைக்கு இருபது மைல் தொலைவில் உள்ள பஞ்செட்டி என்னும் ஊரில் மடம் அமைத்துக்கொண்டு அங்குச் சில ஆண்டுகள் இருந்தார். பிறகு இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல திங்கள்கள் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். இவருடைய நூல்களைப் படித்த பலர் இவருக்கு மாணவர்களாயினர். பிறகு இவர் பெங்களூரையடைந்து அங்குத் தம் மாணவர்களால் கட்டப்பெற்ற மடாலயத்தில் அமர்ந்து அடியார்கள் பலருக்குந் திருவருள்புரிந்துகொண்டு தங்கினர். இவர் ஏகாம்பரநாதரைப் பல ஆண்டுகள் மனவழிபாடாக வழிபட்டுத் திருவருட்பேறு கைவரப்பெற்றார். இவருடைய சீவப்பிரமைக்கிய வேதாந்த ரகசியம் என்னும் நூல் பல பதிப்புகள்வரை வெளியாகி நாடெங்கும் நன்கு பரவியது.

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. சிவப்பிரமைக்கிய வேதாந்த ரகசியம்
2. கிருட்டிணர்ச்சுன உரையாடலாக எழுதப்பட்ட பகவத்கீதை
3. கபீர்தாசர் வரலாறு
4. யோகாப்பியாசம் செய்ய வேண்டிய முறைகளைப் போதிக்கும் நூல்
5. மனதை நிறுத்தும் நூல்
6. தத்துவ பரிசோதனை அன்னதான பலன்
7. சரீர தேவாலய ரகசியார்த்த பாரிசாதம்
8. தம்முடைய முன்பிறப்பு இப்பிறப்பு வரலாறு
9. சனன மரண இரகசியம்.

முன்பிறப்பு

யோகீசுரர் தாம் முன்பிறப்பில் கிறித்துவ சமயத்திற் பிறந்து பாதிரியாக வாழ்ந்திருந்த வாழ்க்கைத் தோற்றத்தை, யோக நெறியால் கண்டுணர்ந்ததாக எழுதியிருக்கிறார்.

---

௨௨. அரங்கசாமி ஐயங்கார்

தோற்றம்

அரசியல் அறிஞராகவும் பத்திரிகாசிரியராகவும் விளங்கிய அரங்கசாமி ஐயங்கார் சோழவள நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே நன்னிலம் சிறு பிரிவிலுள்ள எருக்காட்டூர் என்னுஞ் சிற்றூரிலே 1877-ஆம் ஆண்டு சூன் திங்கள் பதினாறும் நாள் (ஈசுவர ஆண்டு ஆனித்திங்கள் நான்காம் நாள்) பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அழகுசிங்கய்யங்கார் என்று பெயர் வழங்கிய நரசிம்ம ஐயங்கார்.

கல்வி

அரங்கசாமி ஐயங்கார் திண்ணைப் பள்ளிக்கூடத்திலே கல்வி கற்கத் தொடங்கினார். இக் காலத்தைப்போல் அக் காலத்தில் ஊர்கள்தோறும் உயர்நிலைப் பள்ளிகள் இல்லை. உயர்தரக் கல்வி கற்பதெனின் பெரிய நகரங்கட்குச் சென்றுதான் கற்கவேண்டும். அரங்கசாமி ஐயங்காருடைய நெருங்கிய உறவினர்கள் நாகப்பட்டினத்தில் இருந்ததால் அரங்கசாமி ஐயங்கார் கல்வி கற்பதற்கு நாகபட்டினத்திற்குச் சென்றார். கிறித்துவப்பள்ளி ஒன்றிற் சேர்ந்து கல்வி பயின்றார். பிறகு கோவை, சென்னை முதலிய இடங்கட்குச் சென்று கல்வி கற்றார். இவர் சென்னை மாகாணக் கல்லூரியிற் கல்வி பயின்றபோது புகழ்பெற்ற அறிஞர்களான, சார்ச் ஹென்ரிஸ்டூவர்ட், பில்டர்பெக், ஜி. எச். ஸ்டூவர்ட், சோன்ஸ் டாக்டர் சத்தியநாதன், எச். ஜே. ஆலன், சேஷகிரி சாத்திரிகள் முதலியோர் அங்கு ஆசிரியர்களாக அமர்ந்திருந்தனர். 1897-ஆம் ஆண்டில் நார்த்விக் பரிசையும் கார்டன் பரிசையும் பெற்றார். அதே ஆண்டில் வழக்கறிஞர் தேர்வுக்காகச் சட்டக் கல்லூரியிற்

சேர்ந்தார். மூன்றாண்டுகள் அங்குப் படித்தார். அப்போது டி. வி. சேஷகிரி ஐயர் முதலிய பேரறிஞர்கள் இவருக்கு ஆசிரியர்களாக அமைந்தனர். சட்டங்களின் அடிப்படைப் போக்குகளை அறிந்து கொள்வதில் ஐயங்கார் மிகுதியாகக் கருத்துச் செலுத்தினர். நீதிநூல்கள் ரோமன் சட்ட நூல்கள் ஆகியனவைகளில் இவருக்கு மிகுந்த பற்றுதல் இருந்தது. இந்திய அரசியற் செய்திகளையும் நன்கு ஆராய்ந்தார். 1901-ஆம் ஆண்டில் பி. எல் தேர்வில் வெற்றிபெற்றார்.

வழக்கறிஞர்

ஐயங்கார் தஞ்சை மாநகரிலே வழக்கறிஞராகத் தொழில் புரிவதென்று முடிவுசெய்தார். சிறிது காலத் திற்குள் தமது உழைப்பாலும் அறிவாற்றலாலும் சிறந்த வழக்கறிஞர் என்று பலராலும் போற்றப்பெற்றார். சிற் றூர்க் கணக்கப்பிள்ளை ஒருவருக்கு நேர்ந்த சிக்கலான தொல்லையொன்றை மிக எளிதில் போக்கினர்.

இந்து பத்திரிகையில் வேலை

ஐயங்கார் சிறிது காலமே வழக்கறிஞராக இருந்து நல்ல புகழ் தேடினர். சென்னையில் இவருடைய உறவினர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் கஸ்தூரி ஐயங்கார். அவர் இந்து பத்திரிகையைத் தாம் விலைக்கு வாங்கி நடத்தத் தொடங்கினர். அதற்கு மேலாளராகவும் (மானே சர்) உதவியாசிரியராகவும் தக்கார் ஒருவரைத் தேடினர். அத் தொழிலுக்கு அரங்கசாமி ஐயங்காரே தக்கவரென்று அவருக்குத் தோன்றியது. உடனே இவரைச் சென்னைக்கு அழைத்து இந்து பத்திரிகையின் உதவியாசிரியராகவும் மேலாளராகவும் அமர்த்தினர். ஐயங்கார் அப் பதவியில் அமர்ந்து அரிய பணி புரிந்தார். இவருடைய மேற்பார்வை

யில் "இந்து" நன்முக மடைபெற்று வளர்பிறைத் திங்களைப் போல் வளர்ச்சியடைந்தது. ஐயங்கார் அச்சுக் கோப்பது முதல் தலையங்கம் எழுதுவதுவரையில் எல்லா வேலைகளி லும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.

நூல் வெளியிடுதல்

அரசியல் நிகழ்ச்சிகளில் அக் காலத்திய மக்கள் அவ்வளவாகக் கருத்துச் செலுத்தவில்லை. எல்லா மக்களும் அரசியல் நிகழ்ச்சிகளில் கருத்துச் செலுத்துவதற்கு ஏதுவாக நூல் ஒன்று வெளியிட வேண்டும் என்று எண்ணினார்! 1909-ஆம் ஆண்டில் "இந்திய அரசியல்" என்னும் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்த நூல் அரசியற்கலையில் வல்லுநர் எல்லோருடைய பாராட்டுதலை யும் பெற்றது.

கன்னாம்பாடி அரசு

அந்நாளில் மைசூர் அரசாங்கத்தினர், மைசூருக்கு அண்மையில் காவிரியில் அணையொன்றைக் கட்டிக் காவிரி நீரை அங்குத் தேக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சென்னை சர்க்காரும் இதற்கு உடன்பட்டு உடன்பாடு கொடுத்து விட்டனர். இதனல் திருச்சி தஞ்சை ஆகிய மாவட்டங்களில் உள்ள நிலக்காரர்கட்குத் தீமையேற்படு மென்று பத்திரிகை வாயிலாகப் பலகட்டுரைகள் எழுதி நிலக்காரர்களை விழிப்படையச் செய்தார்.

சுதேசமித்திரன் ஆசிரியர்

சுதேசமித்திரன் பத்திரிகையைப் பற்றி நாம் மிகுதி யாக இக்காலத்தில் கூறவேண்டியதில்லை. நாற்பதுக்குத் தொண்ணூறு மக்கள் வரையில் அப் பத்திரிகையைப் படித்து நாட்டு நடப்பு உலக நிகழ்ச்சி முதலிய பல செய்திகளையும் அறிந்து கொள்கிறார்கள். எத்தனையோ

காளிதழ்கள் தோன்றினாலும் சுதேசமித்திரனைப்போல் வேறெப் பத்திரிகையும் மக்களுடைய மனதைக் கவர்ந்த தாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் சுதேசமித்திரன் செய்திகளை நன்கு ஆராய்ந்து உண்மையானவை என்று முடிவு செய்பவைகளை மட்டும் வெளியிட்டு மக்களுடைய ஆதரவைப் பெற்றிருப்பதுதான். இப் பத்திரிகையை அந் நாளில் சுப்பிரமணிய ஐயர் என்பவர் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கு வயதை முதிர்ந்து விட்ட படியாலும் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதற்கு உடல்நிலை இடங்கொடாத படியாலும் பத்திரிகையைத் தக்கார் ஒருவரிடம் சேர்த்துவிட எண்ணினார். அவ் வேலைக்குத் தகுதியானவர் அரங்கசாமி ஐயங்காரே என்று முடிவு செய்தார். 1915-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் சுதேசமித்திரன் அரங்கசாமி ஐயங்கார் வசம் வந்தது. இந்த பத்திரிகையில் தமக்கிருந்த பொறுப்பை விட்டு விட்டுச் சுதேசமித்திரனைச் சிறப்பாக நடத்தத் தொடங்கினர். சுதேசமித்திரனுடைய புகழ் அதன் பின்னரே நாடெங்கும் பரவத்தொடங்கியது. சுதேச மித்திரன் வாயிலாக ஐயங்கார் தமிழ்நாட்டிற்குச் செய்த தமிழ்த் தொண்டு அளவிடற்கரியது.

பொதுவுடைமை விளக்கம்

1917-ஆம் ஆண்டில், பொதுவுடைமை விளக்கம் என்னும் விரிவான நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந் நூலைப் படித்தவர்கள் இந்தியாவின் அரசியல், செல்வ நிலைமை, வரவு செலவு ஏற்பாடு முதலிய செய்திகளை மிக எளிதாக உணர்ந்து கொண்டார்கள். இந்திய அரசியல் நூலைப் போலவே இந்நூலும் அறிஞர் பலருடைய பாராட்டையும் மிகுதியாகப் பெற்றது.

பலவகைப் பணிகள்

ஐயங்கார் பத்திரிகைப்பணி ஒன்றோடு அமைந்து விடவில்லை. அரசியல் துறையிலே பெரும்பங்கெடுத்துக் கொண்டு கல்லை வேலைசெய்தார். பண்டித மோதிலால் நேரு பல சமயங்களில் இவருடைய உதவியைப் பெற்றிருக் கிறார். தஞ்சை நிலக்கிழார்களின் பொருட்டுப் பெரிதும் பாடுபட்டுப் பல நன்மைகளைச் செய்திருக்கிறார். நாடு உரிமைபெற்று இன்று சிறந்து விளங்குவதற்கு ஐயங் காருடைய அரும்பணியும் பெருந்துணையாக அமைந்தது என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

இறுதி

பத்திரிகைத் தொண்டு பிற தொண்டு, முதலியவை களின் மிகுதியால் ஐயங்கார் நோய்க்கு ஆளானார். உட லாற்றலுக்குமேல் பணியாற்றல் மிகுந்து விட்டபடியால் நொந்து வருந்தினர். 1934-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் நான்காம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து பரமபத மடைந்தார். இவருடைய பிரிவு குறித்து அந்நாளில் இருந்த பெரிய தலைவர்களும் பொதுமக்களும் மன முடைந்து பெரிதும் வருந்தினர்கள்.

உக. குன்னூர்க் குமரசாமி முதலியார்

தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டிலே சிவில்லிபுத்தூர்ச் சிறு பிரிவிலே உள்ள குன்னூரில் 1850-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பழனியப்ப முதலியார். செல்வப் பெருக்கின் மிகுதியினால் இவருடைய வீட்டிற்குப் பெரியவீடு என்று இன்றும் பெயர் வழங்கி வருகிறது.

கல்வி

உரிய காலத்திலே இவர் கல்வியை நன்கு கற்றார். தமிழ்ப்புலவர்களிடத்திலே பேரன்பு கொண்டு இடைவிடாது பழகி அவர்களிற் பலரை நண்பர்களாகக் கொண்டிருந்தார். இதனல் இவருக்குத் தமிழிற் பயிற்சியும் செய்யுள் பாடுந்திறமும் உண்டாயின. இசைப் பயிற்சியும் நன்கு அமையப்பெற்றவர். தாலுக்காப் போர்டு சில்லாப் போர்டு முதலியவைகளில் உறுப்பினராக இருந்தார். மற்றும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் புலவராகவும் உறுப்பினராகவும் இருந்தார். வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாருக்கு இவர் மைத்துனர். மு. ரா. அருணைசலக் கவிராயர், சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. ரா. கந்த சாமிக் கவிராயர், கவிராச நெல்லையப்ப பிள்ளை, அழகிய சொக்கநாத பிள்ளை, எட்டையபுரம் மு. க. மீனட்சி சுந்தரம் பிள்ளை, சின்னிகுளம் அண்ணுமலை செட்டியார் முதலியோர் இவருக்கு நண்பர்களாவர். இவர் பெருஞ் செல்வராக விளங்கியபடியால் எத்தகைய அலுவலையும் மேற்கொண்டு வாழ்க்கையை நடத்தவேண்டு மென்ற நிலைமை யேற்படவில்லை.

வாழ்க்கை

இவருடைய வாழ்க்கை புலவர்களோடு அளவளாவி மகிழ்தலிலேயே செலவாகியது. புலவர்கள் அனைவரும் தந்தம் உயிர்நண்பர் என்று கருதுமாறு எல்லோரிடத்திலும் ஒரே தன்மையான அன்புகாட்டி ஒழுகினர். புலவர் பெருமக்கட்குத் தம்மால் இயன்ற உதவியும் புரிந்தார். இவர் இசையுடனே தாம் பாடும் பாட்டுக்களின் பொருளையும், இனிய சுவையுள்ள பகுதிகளையும் தாம் உணர்ந்து இன்புறுதல் போல் கேட்போரும் உணர்ந்து இன்புறுமாறு

பாடுந்தன்மை உடையவராக இருந்தபடியால், இவர் பாடுதலைக் கேட்பவர்கள் இசையின்பத்தையும் இலக்கிய இன்பத்தையும் ஒரே சமயத்தில் நுகர்வார்கள்.

வெ. ப. சு. முதலியாரோடு

வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 1878-ஆம் ஆண்டில் சென்னையில் ஆங்கிலக்கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அப்போது குமரசாமி முதலியார் சென்னைக்குச் சென்று சுப்பிரமணிய முதலியாரோடு சிலநாட்கள் தங்கியிருந்தார். அந்நாளில் சென்னையில் இருந்த புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் மிக இனிமை ததும்பத் திருவிளையாடற் புராணச் சொற்பொழிவைச் சூளை சிங்காரவேலு முதலியார் வீட்டில் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார். அச் சொற்பொழிவைக் கேட்பதற்குச் சென்ற வெ. ப. சுப்பிரமணிய முதலியார் குமரசாமி முதலியாரையும் உடனழைத்துக்கொண்டு சென்றிருந்தார். திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு முடிந்த பிறகு சுப்பிரமணிய முதலியார் சிங்காரவேலு முதலியாருக்கும் சபாபதி முதலியாருக்கும் குமரசாமி முதலியாரை அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் சில பாடல்களைப் பாடுமாறு கூறினர்கள். குமரசாமி முதலியார் மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதியில் இருந்து ஒரு செய்யுளைப் பாடினர். இவர் பாடியதைக் கேட்டு மகிழ்ந்த செல்வரும் புலவரும் மேலும் சில பாடல்களைப்பாட வேண்டுமென்று கேட்டார்கள். குமரசாமி முதலியாரும் பாடினர். அந்தாதியில் பெரும் பகுதி பாடப்பட்டது. மணியும் இரவு இரண்டுவரையில் ஆகிவிட்டது. நேரம்போவது தெரியாமல் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் பிறகு மணியைப் பார்த்துத் திடுக்கிட்டார்கள். இவருடைய இசைவன்மையை

யும் பொருள் விளங்குமாறு பிரித்துப் பாடும் பாவன்மையையும் அவர்கள் பெரிதும் பாராட்டினர்கள். அந்நாளில் மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி சென்னையில் அகப்படவில்லை பாலகவால் ஊருக்குச் சென்றபிறகு சில படிகள் வாங்கியனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இயற்றிய செய்யுட்கள்

செய்யுளியற்றுவதில் தேர்ந்து விளங்கிய இவர் நூல்கள் யாதுஞ்செய்யவில்லை. ஆயினும் நண்பர்கட்கு எழுதுங் கடிதங்களைப் பெரும்பாலுஞ் செய்யுளாக எழுதுவார். வெ. ப. சுப்பிரமணிய முதலியாருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வரும் பாடல்களை எழுதியனுப்பினர்.

"பந்தாரங்க முகைவிழிழும் பாலெணக்கொள்
குறவள்ளி பங்க ரெப்போ
தந்தாரங்கம் வீசுகடல் தொானியடக்கத்
தமிழ்முழங்கும் தூய செந்தில்
கந்தாரங்க மதிற்பூதி கலைவலென
அணிபவர்க்குங் கடவுள் வேதத்
தந்தாங்க முபதேசித் தருள்குமர
குருபரன்தன் அருளினாலே."

[பந்து அரம் கம்; பந்துமுகை, அரம் விழி, கம்-ஐம்பால், கம்முகில். தாரங்கம் - அலை. செந்தில் - திருச்செந்தூர். அங்கமதில்-உடலில்.]

"இவ்வியன்தன் இயலுலகில் எவருமவர்
தமடபணிஇ ராச வாழ்வும்
இவ்வியலு ணகாரஞ் சிதஞ்சிறந்தென்
பறிவறிந்த சிறாரும் என்றும்
அவ்வியமி லாதவர்பே ராக்கம்போல்
வளர்ந்திடுதீர்க் காயு ளுஞ்சீர்
எவ்வியலு மேன்மேலும் இணையின்றிப்
பெருகிவளர்ந் திடுக மாதோ."

மேற்படியார் இயற்றிய அகலிகை வெண்பாவைப் பார்வை யிட்டு,

" ககனமளாஞ் சோலைவெள்ளக் காலூரன் மேலோர்
புகழ்சுப் பிரமணிய பூபன்—அகலிகை
வெண்பா அமுதை விருந்தாப் புலவர்குழாம்
உண்பான் அளித்தான் உவந்து."

என்னும் பாடலைச் சிறப்புப் பாயிரமாக அளித்தார். ஊற்று மலைப் பெருநிலக்கிழார் இருதயாலய மருதப்ப தேவரைப் பார்க்கச் சென்றபோது,

" கணக்கஞ்சங் கரநிகரும் கருங்குழல்கண்
டங்கணுறு கணிகை மாதர்,
இணக்கஞ்சங் கரமனையார் இயல்பெனநீத்(து)
இல்லறமே ஏற்றெந் நாளும்,
வணக்கஞ்சங் கரன்தாளில் வைத்துமகிழ்
பவகனகம் வழங்குந் திவ்ய
மணக்கஞ்சங் கரமெனக்கொண் மருதப்ப
பூபதியே மன்ன ரேறே!"

: பொதியமலைக் குறுமுனிவன் புகன்றதமிழ்
அமுதமெனப் போற்றும் வீரைப்
பதியமலை யாததிறல் இருதயா
லயசுகுண பாண்டி யாஇத்
ததியமலை அருள்பெறுநின் சமுகதரி
சனம்பெறுநல் தகைமை தந்த
துதியமலை வாயுகந்த குகன்கருணை
தனையென்என்று சொல்லு வேனே."

என்னும் பாக்களைப் பாடினார்.

இறுதி

வெ. ப. சுப்பிரமணிய முதலியாருக்கு உறவினராகிய இவர் சுப்பிரமணிய முதலியாரைப் போலவே நீண்டகாலம் வாழ்ந்திருந்து எண்பத்தைந்தாம் அகவையில் 1935-ஆம்

ஆண்டு டிசம்பர்த் திங்கள் முப்பதான்றாம்நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

இரங்கற்பா

இவருடைய பிரிவு குறித்து வருந்திய பல புலவர்கள் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர். அவைகளுள், மு. சா. அருணாசலக் கவிராயர் அவர்கள் பாடிய இரங்கற்பாக்கள் சிலவற்றைக் கீழே காண்க:

"வில்லிகைர்ப் பக்கத்துக் குன்னூர்வாழ்
சுமரசுவா மிக்கோ மானே
நல்லியலாம் ஆசாரம் ஒழுக்கம்உப
காரம்அன்பு கலம்வல் லார்க்கும்
சொல்லியருட் குணம்படைத்தில் லறம்புரிந்து
நான்தோறுந் துணையாங் கல்வி
மெல்லியதுண் ணறிவடைத்து பிறர்புகழ
வீற்றிருந்த மேலோன் நீயே." (அ)

"கேட்டவர்தம் உளமகிழச் சங்கீத
ஞானத்தின் கிளர்ச்சி பொங்கப்
பாட்டவள வும்பழுத்துப் பொருள்சொல்லீ
வசப்படுத்தும் பான்மை பெற்றாய்
கூட்டமிகும் உயர்புலவர் கடுவிருந்து
மூதற்பேசுங் குணமும் பெற்றாய்
வாட்டமறும் இன்சொல்லால் யாவரன்பும்
வாவவழைத்து வாழ்ந்தாய் நீயே." (ஆ)

"இந்தஉட லோடுந் திரும்பிவரும்
ஊர்க்கேகில் இனைய தன்பம்
வந்தமர மாட்டாதே ஒருபொழுதும்
திரும்பிவரா வானேர் ஊர்க்கு
முந்தநீ சென்றதனால் விசாரசா
காத்திலே சூழ்ந்தி னேம்யாம்
எந்தவித மானாலும் மரணமன்றி
இதற்குமருந் தில்லை அந்தோ." (இ)

உ.சா. அ. சண்முகஞ்செட்டியார்

தோற்றம்

அணியாருலகில் தணியாப் புகழ்மலி செட்டிமார் நாட்டில் ஒட்டிமிளிர்தலால், அண்டரும் புகழுங் கண்ட னூர் புதுவயலில் சண்முகஞ் செட்டியார் 1873-ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் பதின்மூன்றும்நாள் பிறந்தார். தந்தையார் பெயர் அண்ணுமலைச் செட்டியார். இவர் தோன்றிய குலம் தனவணிகர் குலம்.

கல்வி

தொடக்கத்தில் பள்ளிக்கல்வியை நன்கு கற்றுத் தேறிய இவர் அறிஞர் ஒருவரை அடுத்துப் புலமைக் கல்வியையும் நன்கு கற்றுத் தேறினர். செய்யுள் பாடுந்திறம் கருவிலேயே அமையப்பெற்றிருந்த இவர், இனிய செய்யுள் களை விரைவாகப் பாடுவதிற் சிறந்து விளங்கினர்.

வாழ்க்கைத் துறை

புலமைத்திறம் சிறந்து விளங்கிய இவர் வாழ்க்கையின் முற்பகுதியில் பர்மா முதலிய வெளிநாடுகட்குச் சென்று பொருள் தேடுந் துறையில் ஈடுபட்டார். வாழ்க்கைக்கு வேண்டிய அளவு பொருள் தேடினர். பிறகு பொருள் தேடுந் துறையைவிட்டு அருள்தேடுந் துறையிற் கருத்தைச் செலுத்தினர்.

நூல்கள் இயற்றல்

புதுவயலை அடுத்து அளகை என்னும் சிவப்பதி ஒன்று சிறந்து விளங்குகிறது. அவ்வூர் இந்நாளில் சாக் கோட்டை என்று வழங்கப்பெறுகிறது. அப்பதியில் எழுந் தருளிய இறைவன்மீதும் இறைவிமீதும் அளகை அட்டப் பிரபந்தம் என்னும் நூலைப் பாடி அன்பர்களுடைய உதவி

மிலுள் வெளிப்படுத்தினர். பாடல்கள் மதுரம் பொருந்தியவை:

"பாவலருந் தென்பாண்டி நாட்டாசி யாவென்று
பனிபடு மலர்க்கை தாங்கிப்
பங்கயச் செல்வியும் பாரதியும் முன்செலப்
பல்லாண்டு புலவர் கூறச்,
சாசன முயர்த்தகஞ் சுகிமாத சோடுபுகழ்
சாற்றுமா கதருமேவச்
சந்தமறை சொல்லியந் தணர்வாழ்த்த அதிர்முரசு
சலாசி போன்முழங்க;
அராவெணும் பாதலத் தரசொடு விண்ணரசர்
அவனியாள் அரசர் மருவி
அன்பினெடு சுவாகதம் பேசிமகிழ் வாகின்
அடிமலர் வணங்கி நிற்க,
மாளமென் றொருகுடை நடந்துவான் கொதுவிற்கு
வந்தமா தரசி வருகவே
வணமருவும் அளகையுமை எமையடிமை கொண்டமா
மாகதக் குயில் வருகவே."

என்பது அளகை உமையம்மை பிள்ளைத் தமிழில் ஒரு பாட்டு.

"மஞ்சிற் பொலிகுழல் அஞ்சொற் கிளியின
வஞ்சிக் கொடிநிகர் இடைமாதர்
வஞ்சத் தலையெனுள் பந்தித் திடவடி
வந்தித் தனுதினம் உழல்வேனை
நஞ்சிற் படுகணை உந்தித் தொறுபல
நந்தப் பொருகளம் அதிலேகா
நந்திற் பொலிகரன் நங்கைக் கிடமருள்
நஞ்சிற் பரணருள் குமரேசா
பஞ்சிற் றிகழும்உன் அஞ்சித் றடிமிசை
யைம்புற் றலைழியெனும் இடரேதா
பம்புற் றலிவிரி கவ்கைச் சதகனி
பண்புற் றுயர்வரம் இனையோனே

கஞ்சிப் பதிபொரு செந்திற் றலைகிகர்
கந்திற் புயல்படு வளமேசர்
கம்பைத் திருநகர் அன்புற் றுறைறிவ
கங்குற் பவருக பெருமாளே."

என்பது கம்பை முருகன் திருப்புகழில் ஒரு பாட்டு. அளகை அட்டப் பிரபந்தத்தில் அடங்கியன.

1. அளகைக் கலிவெண்பா
2. அளகை வெண்பா மாலை
3. அளகைச் சிலேடை வெண்பா
4. அளகை வெண்பாவந்தாதி
5. அளகைப் பதிற்றுப்பத்தந்தாதி
6. அளகை அலங்காரம்
7. அளகை உலையந்தாதி
8. அளகை உலையம்மை பிள்ளைத்தமிழ்

பிற நூல்கள்

9. சித்திவிநாயகர் மாலை
10. கைலாச விநாயகர் அந்தாதி
11. பழநியாண்டவர் மாலை
12. கம்பை நான்மணி மாலை
13. கம்பை முருகன் திருப்புகழ்

பண்டிதமணி பாராட்டு

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் சண்முகஞ் செட்டியாருடைய பெருமையையும், கல்விச் சிறப்பையும் பாராட்டிப் பேசுவர். இவருடைய நூல்களையெல்லாம் படித்துப்பார்த்து,

"மதிவளர்செஞ் சடைப்பெருமான் மண்ணுலகில்
உயிர்கள்நலம் மருவி வாழத்
தகிவளரும் இலிங்காதி தாயதிரு
உருக்கொடுவீற் றிருக்குந் தொண்மைப்

பதிபலவுட் பழம்பதியாம் பாண்டிநாட்
டெழின்மிகுசீர் பலவும் ஓங்கி
நிதிவளரும் அளகையும்ஒன் றப்பதிவாழ்
இறைவியொடு நிமலற் கேற்ப. (க)

"எட்டுவகைப் பிரபந்தம் இனிமைமிகு
தமிழ்மொழியால் யாத்து மேலும்
தட்டறநற் சித்திவிநா யகர்மாலை
முதலைந்து தகவிற் செய்து
மட்டவிழ்தா மரையனைய அவ்விறைவர்
திருவடிக்கண் மகிழ்விற் சேர்த்தான்
இட்டமறிந் துயிர்க்கருளும் இறைவனைத்தன்
உளத்திருத்தும் இயல்பான் மிக்கோன்." (உ)

"அவ்வளகைக் கயல்நிலவு புதுவயலாம்
அணிநகரில் அன்பு சான்ற
திவ்வியமார் வணிககுலச் செம்மல்அண்ணா
மலைபயந்த சீர்சால் செல்வன்
அவ்வியமில் நெஞ்சத்தான் தமிழ்பயின்று
கவிபாடும் ஆற்றல் மிக்கான்
செவ்வியநற் குணநிறைந்த சண்முகனும்
பெயர்படைத்த கீர்த்தி யோனே."

என்னுஞ் சாற்றுக்கவிகளை வழங்கினார்.

இறுதி

இவர் அறுபத்தேழாம் அகவை வரை வாழ்ந்திருந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

உரு. டி. என். சேஷாசல ஐயர்

தோற்றம்

டி. என் சேஷாசல ஐயர் 1891-ஆம் ஆண்டு தோன்றி னர். பி.ஏ.பி.எல் வரை கல்வி கற்றுச் சிறந்த புலமையடைந்து சென்னை புரசையில் இனிது வாழ்ந்திருந்தார். ஐயர் வழக் கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினர். அவ் வாழ்க்கை இவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

போதுநலத்தொண்டு

மக்களுக்குக் கலையறிவை வளர்த்துத் தொண்டு செய் வதிலேயே இவருடைய உள்ளம் சென்றது. 1913-ஆம் ஆண்டில் புரசையில் இராப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கினர். அப் பள்ளியில் தொழிற்சாலையில் பணி புரிந்த ஆடவரும் சிறுவரும் மிகுதியாக வந்து கல்வி கற்றார்கள். தொடக்கத்தில் எழுத்து வாசனையற்றவர்களின் தொகுட்டுத் தொடங்கப்பெற்ற அப் பள்ளி நாள்தோறும் நனி வளர்ந்து சிறப்புற்றது. ஆண்டுதோறும் புதிய புதிய வகுப்புகள் தொடங்கப் பெற்றன. நாளடைவில் தமிழ் இலக்கண இலக்கியங்களும் கற்பிக்கப்பட்டன. அப் பள்ளியிற் கல்விகற்ற பலர் சிறந்த புலமைநலம் பெற்றனர். தமது பணி நாட்டுமக்களுக்குப் பயன் மிகுத்தலையறிந்த ஐயர் மேலும் பல இடங்களில் பள்ளிகளை உண்டாக்கித் தகுதியானவர்களைக் கொண்டு நடத்தினர். நாளடைவில் ஐயருடைய தமிழ்த்தொண்டும் வகுப்பும் சென்னையெங்கும் பரவத்தொடங்கின.

வெளியூர்கள்

ஐயருக்குக் கலைவளர்ச்சியில் ஆர்வம் பெருகிக் கொண்டே !சென்றபடியால், காஞ்சிபுரம், தேவகோட்டை, வில்லிபுத்தூர், மேலச்சிவபுரி முதலிய இடங்கட்குஞ்

சென்று பள்ளிகள் ஏற்படுத்தி நடத்தினர். இலக்கண இலக்கியங்களில் இவர் மிக வல்லவராக இருந்தபடியால், நள வெண்பா, புறநானூறு, கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களைக் கேட்பவர் மனதில் பசுமரத்தாணிபோல் நன்கு பதியுமாறு கற்பித்தார். இவரிடம் ஒருமுறை ஒரு பாடலையோ தூலையோ பாடங்கேட்டவர்கள் அந் நூலில் வல்லவர்களாகிப் பாடஞ் சொல்லக்கூடிய ஆற்றலையும் பெற்று விடுவர். தமிழ்நாடு முழுவதற்கும் தமிழ்த் தொண்டைப் புரிதற்குத் தக்கவழி யாதென்று எண்ணமிட்டார். கல்லை முடிவு ஒன்று உள்ளத்தில் தோன்றியது.

கலை நிலையம்

தாம் ஒரே இடத்தில் இருந்தாலும் நாடெங்கும் சென்று தமிழ் போதிப்பதற்குப் பத்திரிகை மிகவுஞ் சிறந்த கருவியென்று முடிவு செய்தார். அம் முடிவின் படியை 1928-ஆம் ஆண்டில் 'கலா நிலையம்' என்னும் இலக்கியக் கழகம் வெளியீட்டைத் தொடங்கினர். கல்லை தாளில் கல்லை எழுத்தில் அப் பத்திரிகையை நடத்தினர். கம்ப ராமாயணம், சூளாமணி, நளவெண்பா முதலிய நூல்களுக்கு ஆசிரியர்கள் பாடஞ் சொல்லுவதைப்போல் விரிவுரை எழுதி வெளியிட்டார். அவைகளைத் தொடர்ந்து படிப்பவர்கள் புலமை நலம் எய்துதற்குத் தக்கவாறு அவ்வுரைகள் அமைந்தன.

நாடகக்கலை

ஐயருக்கு நாடகக்கலையிலும் உள்ளம் சென்றது. கலா நிலையத்தில் சில நாடகங்களை எழுதி வெளிப்படுத்தினர். தம் நண்பர்களுடைய துணையைக்கொண்டு சிறந்த முறையில் நாடகங்களையும் நடத்தினர். நாமும் நடிகராக நடித்தார். இவருடைய நடிப்புத் திறமையும் நாடக முறைகளும் எல்லோராலும் நன்கு பாராட்டப் பெற்றன.

திரு. வி. க. பாராட்டு

ஒருநாள் ஐயர் கலிலையப் பற்றிச் சொற்பொழிவு ஒன்று செய்தார். அஃது அவருக்குரிய தனிச் சிறப்போடு விளங்கியது. அப்போது அங்கிருந்த திரு. வி. கலியாண சுந்தர முதலியார் எழுந்து, "நான் இங்கு வந்ததால் ஒன்று தெரிந்துகொண்டேன்; அஃதாவது, கலிபில்லாவிடத்துக் கவலை, கவலையில்லாவிடத்துக் கலி, என்பதுதான் அது.' என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

பேச்சுத் திறமை

ஐயர் தெளிவாகவும் இனிமையாகவும் பேசுவதில் வல்லவர். ஒருகால் இவர் ஞானியார் அடிகளாருடனும், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியாருடனும் சேர்ந்து காஞ்சிபுரத்தில் ஒரு சொற்பொழிவு செய்தார். சைவராகிய அடிகளார் ஒரு புறமும் வைணவராகிய அண்ணங்கராச்சாரியார் ஒருபுறமுமாகக் கும்மிருபக்கத்தி னும் இருக்கக்கண்ட இவர், "இன்று நாம் புலிப்போத்தும் புல்வாயும் ஒரே குளத்தில் நீர் உண்ணக் காண்கிறோம்," என்று நகைச்சுவை ததும்பக் கூறி அங்கிருந்தவர்களினை வரும் மகிழுமாறு செய்தார். ஞானியாரடிகள் ஐயருடைய பேச்சுத்திறமையை வியந்து, "இவர் பேசுவது புத்தகம் படிப்பதுபோல இருக்கிறது. புகைவண்டித் தண்டவாளங் களைப்போல் ஒரே ஒழுங்கான பேச்சு, இவரைப்போல் பேசுபவர் மிக அரியர்," என்று வியந்து பாராட்டினர்.

மேலைச்சிவபுரி

ஒருகால் ஐயர் மேலைச்சிவபுரிக்குப் புறப்பட்டார். நண்பர் ஒருவரோடு பிராட்வேயில் இருந்து புறப்பட்ட அவர் பல் ஏறுவதற்குச் சென்றார். பிராட்வேயில் காற் சந்தியின் நடுவிற் சென்றபோது, இரண்டு பக்கங்களில்

இருந்து இரண்டு பல்கள் விரைவாக வந்தன. அவை ஐயரும் அவருடைய நண்பரும் சென்றுகொண்டிருக்கும் சமயத்தில் இருபக்கத்திலுமிருந்து தொடங்கி விட்டன. ஒருகணம் தவறினல் மறுகணம் இருவரும் அவைகளால் அடிப்பட்டு மாண்டிருப்பர். தெய்வச் செயலாக இரண்டும் சட்டென்று நிறுத்தப்பட்டபடியால் ஒரு மயிரிழையில் உயிர்தப்பினர். அங்கு நின்றபடியே ஐயர் தம்முடைய நண்பரைப்பார்த்து நகைத்து, மேலே கையை வீசிக்காட்டி, "நாம் இந்நேரம் மேலைச்சிவபுரி (விண்ணுலகம்) போய்ச் சேர்ந்திருப்போம். பல்கள் நின்றுவிட்டபடியால்தான் போகவில்லை," என்றார். இவருடன் இருந்த நண்பர் இதனைக் கேட்டு, "இத்தகைய ஆபத்துக்காலத்திலும் ஐயர் நகைச் சுவையுடன் பேசுகிறாரே," என்று வியந்தார்.

கடவுளுக்கு அடுத்தபடி

ஐயர் எல்லா நற்குணங்களும் இனிது அமையப்பெற்றவர். ஐயருடைய குணநலத்தை அவருடைய பகைவர்களும் போற்றிப் பாராட்டினர். இவர் தீய எண்ணங்கட்குத் தமது உள்ளத்தில் இடமே கொடுக்கமாட்டார். இவருடைய தன்மையைக் குறித்து இவருடைய நண்பர் ஒருவர், சொல்லின் செல்வர் திரு. சேதுப்பிள்ளையவர்களோடு உரையாடிக்கொண்டிருந்தாராம். அப்போது பிள்ளையவர்கள், "அவர்கள் கடவுளுக்கு அடுத்தபடியாயிற்றே," என்று பாராட்டிப் பேசினாராம். இதிலிருந்து ஐயருடைய பண்பு நலங்களை இனிதுணர்ந்து கொள்ளலாம்.

படக்காட்சித்துறையும் இறுதியும்

ஐயர் பேசும்படக்காட்சிகளைப் பிடிப்பதிலும் கருத்துச் செலுத்தினர். அதன்பொருட்டு முயற்சிசெய்து படங்கள் பிடித்தார். ஆனல் அப் படங்கள் வெளிவருவதற்கு

முன்னரே ஐயர் இவ்வுலக வாழ்வைத் துறக்க நேர்ந்தது. உழைப்பின் மிகுதியால் இரத்த நாளங்கள் வெடித்துக் குருதியைக் கொட்டவே 1938-ஆம் ஆண்டில் தமது நாற்பத்தேழாம் அகவையில் இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

இயற்றிய நூல்கள்

1. ஏமாங்கதத் திலவாசன்
2. கப்பராமாயண உரை
3. சூளாமணி உரை
4. நளவெண்பா உரை

முதலியன இவருடைய நூல்கள். எழுதிய நூல்கள் பல வெளிவராமலும் போயின.

உரு. மு. பொ. சுவாமூர்த்தியா பிள்ளை

தோற்றம்

பாண்டிவளநாட்டிலே நெல்லைக்கு அண்மையில் உள்ள முன்னீர்ப்பள்ளம் என்னும் ஊரிலே 1861-ஆம் ஆண்டு சூன் திங்கள் நான்காம் நாள் (கொல்லம் 1036-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் உரு-ஆம் நாள்) சுவாமூர்த்தியா பிள்ளை பிறந்தார். தந்தையார் பெயர் பொன்னம்பலம் பிள்ளை. தாயார் பெயர் சிதம்பரவடிவு அம்மையார். தந்தையாராகிய பொன்னம்பலனார் சிறந்த அறிஞர். மாணவர் பலருக்கு நூல்களைப் போதித்தார். சோதிடத்திலும் (காலக் கணிதம்) மாதிடம் உடையவர்.

கல்வி

சுவாமூர்த்தியார் சிறுபருவத்திலேயே கல்வி கற்கத் தொடங்கினர். முன்னீர்ப்பள்ளத்தில் அந்நாளில் நடந்த

வடமொழிப் பாடசாலையில் வடமொழி நூல்களைக் கற்றார். பிறகு தமிழ் கற்பிக்கும் பாடசாலையில் தமிழைக் கற்றார். அதன்பின் நெல்லைமாநகரில் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கில மொழி கற்றுத் தேறினார். அதன்பிறகு தமிழ் நூல்களைக் கருத்துடன் கற்கத் தொடங்கினார். திருக்குறள், நாலடியார், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைத் தந்தையார் உதவியுடன் கற்றார்.

திருமணம்

ஈசுரமூர்த்தியாருக்கு அகவை பதினேழு நிரம்பிய போது அறம்வளர்த்த அம்மையார் என்னும் மடமங்கையை வாழ்க்கைத் துணைவியாகக் கைப்பற்றினார். பெண் மகவொன்றும் ஆண்மகவொன்றும் பிறந்தன. ஆண்மகவு குழந்தைப் பருவத்திலேயே இறைவன் திருவடிநீழலை அடைந்தது. பெண்மகவுக்குச் சிதம்பரவடிவு என்று பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து உரிய காலத்தில் திருமணஞ் செய்துவைத்தனர்.

தமிழாசிரியத் தொழில்

தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலியவைகளை நன்கு கற்றுணர்ந்த ஈசுரமூர்த்தியார் கல்லூரிகளில் தமிழாசிரியராகத் தொழில் புரியத் தொடங்கினார். 1888-ஆம் ஆண்டு முதல் 1894-ஆம் ஆண்டுவரை பாளையங்கோட்டை இந்து உயர்தரப் பாடசாலையில் தொழில் புரிந்தார். 1894-ஆம் ஆண்டுமுதல் 1901-ஆம் ஆண்டு வரையில் தூத்துக்குடி என்னும் திருமந்திரநகர் செயின்டு சேவியர் உயர்தரப் பள்ளியில் தொழில் புரிந்தார். 1904-ஆம் ஆண்டு முதல் 1916-ஆம் ஆண்டுவரையில் சீவில்லிபுத்தூர் சி. எம். எஸ். உயர்தரப்பள்ளியில் அலுவலாற்றினார். 1918-ஆம் ஆண்டு முதல் 1920-ஆம் ஆண்டுவரை சென்னை இராயபுரம் நார்த்

விக் பெண்கள் கல்லூரியில் தொழில் புரிந்தார். மேலும் திருநெல்வேலியில் சி. எம். கல்லூரியிலும் இந்துக் கல்லூரியிலும் சிலகாலம் தமிழாசிரியராக இருந்தார். மற்றும் மேடைத்தளவாய் முதலியாரவர்கள் மக்களுக்கும் ஆங்கிலம் தமிழ் முதலியவைகளைக் கற்பித்தார்.

இலங்கைச் செலவு

ஈசுரனார் முன்னரே ஒருமுறை இலங்கைக்குச் சென்றிருந்தார். மீண்டும் 1899-ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சென்று கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களையும் அழகுமிகுந்த துறைமுகங்களையும் சிவனொளி பாதத்தையும் கண்டு மகிழ்ந்து வந்தார்.

நண்பர்கள்

ஈசுரமூர்த்தியாருக்கு நண்பர்கள் பலர் அமைந்திருந்தனர். அவர்களெல்லாருடனும் இவர் அடிக்கடி அளவளாவி மகிழ்வார். திருமணம் முதலிய நன்மைகள் அவர்கள் இல்லங்களில் நிகழும்போது வாழ்த்துப் பாடல்கள் வழங்குவர். சாக்காடு முதலிய தீமைகள் நிகழும்போதோ இரங்கற்பாக்கள் பாடி இவரும் வருந்துவார். தூத்துக்குடி பொ. முத்தையபிள்ளை மகன் கலியாணசுந்தரம் பிள்ளைக்குத் திருமணம் நிகழ்ந்தபோது,

" அன்புருவாம் மெய்ப்பொருளை அன்பகத்தி லேநினைந்து
அன்பும் உருக இறைஞ்சுவோம்—இன்புருவாம்
மங்கையர்க்கோர் கல்லரசை மன்னன் மணவழகன்
மங்கலமாக் கொள்வான் மகிழ்ந்து."

என்று திருமண வாழ்த்துக் கூறினார். இலக்குமணப்பிள்ளை என்பவருக்கும் வள்ளியம்மை என்னும் மங்கைக்கும் திருமணம் நிகழ்ந்தபோது,

" அறம்வளர்த்த அன்னை அடிதொழுவாம் அன்பின்
திறனுணர்ந்து தேர்ந்து தெளிந்தே—மறநீக்(கும்)
இலக்குமண வள்ளற் கிசைந்தவள்ளி இல்லம்
நலக்குணங்கள் ஓங்க நயந்து."

என்று வாழ்த்துக் கூறினார். இவ்வாறு இவர் கூறிய வாழ்த்துக்கள் பல.

இரங்கற்பாக்கள்

திருநெல்வேலி மேலைத்தேர்த்தெரு ஈசுரமூர்த்திக் கவிராயர் காலமானபோது,

" அண்ணா அருந்தவமே! அன்பே! என் பேராளா!
பண்ணார் பழந்தமிழின் பாவரசே!—எண்ணாத
எண்ணி இரங்கவைத்தாய் எம்மான் இணையடியை
நண்ணினையோ நாளும் நயந்து?"

" காசுற லாவ திலையெனும் உண்மையைக் கண்டுணர்ந்தே
பாசுரம் பாடியே பண்பினர்க் கீந்து புகழ்படைத்தான்
தேசுற வாழ்ந்து சிவநேசங் கொண்டு திகழ்ந்தகவி
ஈசுர மூர்த்தி அடைந்தான் இறைவன் எழிற்பதமே."

என்றும், தம் மாணவரில் ஒருவராகிய திருச்செந்தூர் வேயீன்ற முத்துப்பிள்ளை யென்பவர் காலமானபோது,

" தாயீன்று வந்ததுபோல் தக்கார்க் குவப்பளித்த
வேயீன்ற முத்தே விழுமியனே—சேயிழந்த
ஆவினைப்போல் யானிங் கலமரவைத் தெங்கொழிந்தாய்
நாவினயம் உள்ளாய் நவில்."

" மாணவனாய்த் தம்பியாய் மற்றெனக்குத் தோழனுமாய்
நாணாதெவ் வூழியமும் நல்கினையே—வாணாளில்
உன்னோ டிருக்கையில்யான் உற்றமகிழ்ச்சியைப்போல்
எந்நாள் உறுவேன் இனி."

என்றும் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினார். இவ்வாறு இவரால் பாடப்பெற்ற இரங்கற்பாக்கள் பல.

தனிப் பாடல்கள்

இவர் தம் நண்பர்களுடனும் பிறருடனும் உரையாடி மகிழும்போது இடையே தனிப்பாடல்களையும் இயற்றுவார். டி. கே. சிதம்பரநாத முதலியார் ஆராய்ச்சித் திறமும் வாக்கு வன்மையும் நன்கு அமையப்பெற்றவர். அவரோடு உரையாடிக்கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. டி. கே. சியும், இவரும் நெருங்கிய நண்பர்கள். ஒருநாள் இருவரும் நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். பொழுதுபோனதே தெரியவில்லை. அப்போது இவர்,

" அல்லும் பகலும் அசையா தெனைவருத் தும்பொழுதே
செல்வன் சிதம்பர நாதன் செவிக்கமு தூட்டுகையில்
வெல்லும் முயலையும் வென்றோடு வாய்வெகு வேகத்தினால்
செல்வேன் அவனிடம் சொல்வேன் சூதைவெல்
[வேனானையே."

" மேதிபோல் மாசுணம்போல் மெல்லத் தவழ்ந்து நீ
போதீயென் றாலும்போ காப்பொழுதே—ஓதியுயர்
நாதன் சிதம்பரனும் நானும்உரை யாடுகையில்
காதமேன் சென்றாய் கடிது."

என்று பாடினார்.

இயற்றிய நூல்கள்

இவர் சிறு நூல்கள் பல இயற்றியுள்ளார். திருவள்ளுவர் திருக்குறளிடத்தில் பெரும்பற்றுக் கொண்டு அதனை அல்லும் பகலும்போற்றுபவர். தம் தோட்டத்திற்குத் 'திருவள்ளுவர் தோட்டம்' என்று பெயரிட்டார். திருக்குறள் 133 அதிகாரத்தின் கருத்துக்களையும் அமைத்து நீதி நெறித் தாலாட்டு என்னும் சிறுநூல் ஒன்றை இயற்றினார்.

நிலையாமை

" நிலையில்லா வாழ்வை நிலையுடைய தாக எண்ணி
அலைவுதருந் தீங்கியற்றல் ஆகாது கண்மணியே."

பேதைமை

" தெரி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையைப்போல் பேதையுண்டோ பேசாய்என்
[கண்மணியே."

இவ்வாறு மேற்படி நீதிநெறித் தாலாட்டு அமைக்கப்பெற் றுள்ளனை. மற்றும் இவர், மெய்ப்பொருட் கும்மி, திரு வருள் விளக்கம், அகராதி மாலை, இராசகுடும்ப வரலாறு, நாட்டுப்பெண் கும்மி, கைலாசம் பிள்ளை வரலாறு முதலிய சிறு நூல்களை எழுதி வெளியிட்டார்.

இவருடைய கொள்கைகள்

சுயராஜ்த்தியாருடைய கொள்கைகள் மிகச் சிறந்தன வாக விளங்கின. கடவுள் ஒருவன் உளன். அன்பே கட வுளின் வடிவமாகும். அவனை மனத்தால் இறைஞ்சுதலே சிறந்தது. உருவழிபாடு மனப்பக்குவத்தைப் பொறுத் தது. பெருமையும் சிறுமையும் பிறப்பினால் இல்லை. செய் தொழில்களாலேயே இவைகள் உண்டாகின்றன. தம்மால் இயன்ற அளவு மக்கட்கு உதவி செய்வது சிறந்த இன்பத் திற்கு ஏதுவாகும். கெல்லியில் பிரமசாரி ஒன்றை இவ ருடைய நண்பர் ஒருவர் ஏற்படுத்தினர். இவர் அச்சபையில் உறுப்பினராகவும், அமைச்சராகவும், போதகாசிரியராகவும் இறுதிவரையில் இருந்து சிறந்த தொண்டு புரிந்தார். பெண் கல்வியைப் பரப்புவதில் இவர் பேரூக்கம் கொண்டிருந்தார். மனப்பயிற்சியும் கல்லொழுக்க விழுப்பமும் மக்கட்கு இன்றி யமையாதனவென உரைப்பார். இவர் தம் உற்றார் உற வினர்களோடு ஒற்றுமையுடையராய் வாழ்ந்திருந்தனர் என்பர்.

உ எ. உலகநாத பிள்ளை

தோற்றம்

சோழவள நாட்டிலே, தஞ்சைமா நகரிலே, எல்லை யம்மன் கோவில் தெருவிலே, வேப்பமரச் சந்திலே உள்ள சுமது இல்லத்திலே, ஆபிரகாம் பண்டிதர் காலத்தில் இலக்குமணப் பிள்ளை என்னும் பெயருடையவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் சிறந்த சித்த மருத்துவர். இவ ருடைய சித்த மருத்துவத் திறமையைப் பாராட்டி இவர் பால் சேரன்பு கொண்டவர்களில் ஆபிரகாம் பண்டிதரும் ஒருவர். இலக்குமணப்பிள்ளை தமிழ் மருத்துவத்திலும் கைதேர்ந்தவராதலின் மூலிகைகளின் பயனை நன்குணர்ந்து பயன்படுத்தி மக்களுக்கு நன்மைபுரிந்து வந்தார். இந்த இலக்குமணப்பிள்ளையின் அருமைத் திருமகனே உலகநாத பிள்ளை ஏறக்குறைய என்பது ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினர்.

கல்வியும் அறிவுரையும்

பள்ளிக்கல்வியைப் பாங்குடன் பயின்று தேர்ந்தபின் னர் மூனிசிபல் அலுவலகத்தில் கணக்கராக அமர்ந்தார். இவர் கல்வி பயன்றது தாயபேதுரு பள்ளியில் என்பர். அலுவலில் அமர்ந்தும் தமிழ்நூல்களை நாள்தோறும் மிகுந்த கருத்துடன் தாமே பயின்றார். ஐயம் ஏற்படின் ஆபிரகாம் பண்டிதரிடமும் வேறு சில புலவர்களிடமும் கேட்டுணர்ந்து கொள்வார். இதனால் இவருக்குச் சிறந்த தமிழ்ப்புலமை உண்டாயிற்று. 1908-ஆம் ஆண்டில் கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக ஏற்படுத்தினர்கள். இங்குத் தமிழாசிரியராக இருக்கும் போது ஆபிரகாம் பண்டிதர் வீட்டில் காலை ஆறரைமணி முதல் ஒன்பது மணிவரையில் இருந்து தமிழ் இலக்கி

யத்தில் உள்ள இசைப்பகுதிகளை யெல்லாம் திரட்டிக் கொடுத்துக் கருணைமிருத சாகர நூலுக்கு உதவிசெய்தார்.

முதற் கரிகாற்சோழன்

பண்டிதரோடு நூலாராய்ச்சி செய்துகொண்டிருந்த காலத்தில் முதற்கரிகால் சோழனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்தார். 1911-ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழா கா. ரா. கமலிவாய முதலி யார் தலைமையில் கூடியது. அப்பொழுது உலகநாத முதலியார் கரிகாற்பெருவளத்தானைக் குறித்து ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர். பிறகு இவ் வாராய்ச் சிச் சொற்பொழிவை விரிவாக்கி, "முதலாம் கரிகாலன்" என்னும் பெயரோடு 1913-ஆம் ஆண்டில் அச்சிற் பதிப் பித்து வெளியிட்டார். இதனைக் கே. எஸ். சிவஞான பிள்ளைக்கு உரிமைப்படுத்தினர்.

கன்றும் கனியுதவும்

கன்றும் கனியுதவும் என்னும் நூலை 1917-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். அரசர்கள் அறிஞர் களுக்குக் "கிலாத்" என்னும் சிறப்பு வழங்கும் முறை உண்டு. அதன்பொருட்டுத் தமிழ்ப்பகுதிச் சென்னைப் பல்கலைக்கழகம் நால்வரைத் தெரிந்தெடுத்தது. அந், நால்வர்கள்: உ. வே. சாமிநாதையர், திருநெல்வேலி இந்து கலாசாலை சுப்பிரமணியபிள்ளை, திரு. நாராயண ஐயங்கார் இல. உலகநாதபிள்ளை ஆகியோராவர். இதன் நிமித்த இவர் தாம் எழுதிய கன்றும் கனியுதவும் என்னும் நூலில் அரசர் ஐந்தாம் சார்ச்மீது அரச வாழ்த்துப் பாடியுள்ளார்.

சாவித்திரி

1923-இல் சாவித்திரி என்னும் நூலை மாணவர் உலை கடை எழுதிப் பழகுதற்கேற்ற படி எழுதி வெளியிட்டார்.

திருவையாறு

காளைடவில் உலகநாத பிள்ளையின் புலமைத்திறம் எங்கும் பரவத் தொடங்கியது. இந் நாளில் திருவையாறு அரசர்கல்லூரியில் தமிழ் வகுப்புத் தொடங்கப்பெறவே, 1924-ஆம் ஆண்டில் மேற்படி கல்லூரியில் விரிவுரையாள ராக ஏற்படுத்தப்பட்டார். இங்கிருக்கும்போது, முதலாம் இராசராசசோழன் என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

நால்நிலையப் பட்டியல்

தஞ்சை சரசுவதிமால் என்னும் நூல் நிலையத்தைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்கலாம். அந் நூல்நிலையத் திற்கு அந்நாளில் தகுதிவாய்ந்த பட்டியல் (விளக்கம்) இல்லை. நூல் நிலையத்தில் உள்ள ஏட்டுச்சுவடிகளை யெல் லாம் ஆராய்ந்து பார்த்துப் பட்டியல் ஒன்று எழுதி முடிக்கும் வேலை இவரிடம் கொடுக்கப்பட்டது. அந்த ஓலைச் சுவடிகளைப் படித்துப் பார்த்து விளக்கம் எழுதி வெளியிடுவதென்றால் அவ்வேலை எளிமையான வேலை யன்று. இவர் அவ் வேலையை ஒப்புக்கொண்டு செய்யத் தொடங்கினர். 1925-ஆம் ஆண்டில் முதற்பகுதி இரண் டாம் பகுதி என்னும் இரண்டு பகுதிகளையும் 1926-ஆம் ஆண்டில் மூன்றாம் பகுதியையும் எழுதிக் கொடுத்துப் புத்தக வடிவில் வெளியிடச் செய்தார். இப் பட்டியலால் நால்நிலையத்தில் உள்ள நூல்களைக் குறிக்கச் செய்தி தெரிந்து கொள்ளுதல் மிக எளிதாயிற்று.

அணுமான் இராமதாதன்

1927-ஆம் ஆண்டில் அணுமான் இராமதாதன் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். மற்றும் இவரால் கபிலர் என்னும் நூல் எழுதி வெளியிடப்பட்டதுடன் சித்தாந்தாதி என்னும் நூலுக்கு உரையும் எழுதி வெளியிட்டார்.

பொழில் தொண்டர்

1927-ஆம் ஆண்டுமுதல் 1931-ஆம் ஆண்டுவரை, காந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப் பொழிலுக்குத் தொண்டராகப் பணிபுரியத் தொடங்கிப் பல கட்டுரைகள் எழுதினர். இக் காலத்தில் கே. எஸ். சீனிவாசபிள்ளை தமிழ் வரலாறு என்னும் நூலை எழுதினர். உலகநாத பிள்ளை தமக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம் தமிழ் வரலாறு எழுதுவதற்குத் தம்மால் இயன்ற உதவியைப் புரிந்தார்.

பொன்னை

இவருடைய சோழன் கரிகாலன் என்னும் ஆராய்ச்சி நூல் அறிஞர்களுடைய பாராட்டைப் பெற்றது. பரிசும் பொன்னையும் வழங்கினர். தம்முடைய முன்னேற்றத் திற்கு மூலகாரணராக இருந்த ஆபிரகாம் பண்டிதர்மீது இவருக்குப் பேரன்புண்டாயிற்று. நன்றிபாராட்ட வேண்டு மென்று எண்ணினார். மறுநாட் காலையில் 6 மணிக்குப் புறப்பட்டு ஆபிரகாம் பண்டிதர் வீட்டிற்குச் சென்றார். பண்டிதர் இவ் வுலகத்தில் இல்லை. அவர் காலமாகிப் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. உலகநாதபிள்ளை பண்டிதர் தாம் இல்லையே அவருடைய வீட்டிற்கு ஏன் என்று சிறிதும் எண்ணவில்லை. வீட்டிற்குச் சென்றார். பண்டித ருடைய பெரிய நிழலோவியம் (போட்டோ) வீட்டில் இருந்தது. அதன்முன்பு நின்றுகொண்டு, "நான் தமிழி னிடத்தே பற்றுக்கொண்டு அதனை நன்கு கற்று இன்று இவ் வுலகத்திலே பலராலும் பாராட்டப்பெற்றுப் பரிசு களைப் பெற்றுச் சிறப்புடன் விளங்குதற்குக் காரணமான பெரியீர்! நான் அடையும் சிறப்புக்களை யெல்லாம் நீங்கள் பார்க்காமல் போனீர்களே!" என்று கூறி அழுது புலம்பித்

தமது நன்றியறிதலைக் காட்டிவிட்டுத் திரும்பினர். இதனை உணர்ந்தவர்கள் வியந்தனர்.

சொல்லோவியம்

வாசகர்களே! நீங்கள் உலகநாதபிள்ளை அவர்களை உடனே பார்க்க விரும்புகிறீர்களா? புறக்கண்ணால் பார்க்க முடியாது. புறக்கண்ணின் உதவிகொண்டு இதனைப் படித்து மனக்கண்ணால் பாருங்கள். உலகநாதபிள்ளை குட்டையாக இருப்பார். நிறம் கறுப்பு. எடுப்பான தோற்றமுடையவர். முகத்தில் எப்பொழுதும் தமிழ் ஒளி வீசிக்கொண்டே யிருக்கும். சிறிய குடுமி தலையை அழகு படுத்திக்கொண்டிருக்கும். வேட்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டிக்கொண்டும் சட்டை போட்டுக்கொண்டும் தலையில் தலைப்பாகை வைத்துக்கொண்டும் இருப்பார்.

குண நலன்கள்

நேர்மையானவர். அமைதியாகவும் எளிமையுடனும் நடந்துகொள்வார். அஞ்சா நெஞ்சினர். தம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவிபுரிவார். புலவர் வகுப்புப் படித்தற்குப் பலருக்கு உதவி செய்தார். பாடம் கேட்பதற்குத் தம் வீட்டிற்கு வருபவர்கட்கு அன்போடு பாடஞ் சொல்லுவார். அன்புள்ளம் படைத்தவர். இவரால் பலருக்குத் தமிழ்ப்பற்று உண்டாயிற்று. "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் கூறியிருக்கின்றார். விருந்தோம்புதல் என்னும் திருந்திய பண்பாடு இவர்பால் மிகுதியும் உண்டு. இல்லத்திற்கு வருபவர்கள் காபியேனும் சாப்பிட்டுச் செல்லுமாறு செய்வார்.

பழக்கம்

நாவன்மையும் அறிவுதுட்பமும் பெறும்பொருட்டு நாள்தோறும் வடக்குவாசல் காளியம்மனையும், தண்டாயுத

பாணிக் கடவுளையும் தவறுத வணங்குவார். வாணாள் முடிவுவரையில் எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே இருந்தார். நாள்தோறும் உடற்பயிற்சி செய்வார். மற்றும் பலரையும் உடற்பயிற்சி செய்யுமாறு ஊக்கினர். நாள் தோறும் பெரிய கோவிலுக்குச் சென்று கல்வெட்டு ஆராய்ச்சி செய்து வருவார்.

உரைநடை

உரைநடை வளர்ச்சியுறுத அந்நாளில் இவர் நல்ல உரை நடையில் எழுதினர். திரு. வி. கலியாணசுந்தர முதலி யார், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் முதலியோர் இவருடைய உரைநடையைப் பாராட்டி இருக்கின்றனர். இவருடைய உரைநடைச் சிறப்புக்கு கன்றாங்கனியுதவும் நல்ல ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஓய்வு

1933-ஆம் ஆண்டில் திருவையாறு அரசர் கல்லூரியி லிருந்து ஓய்வுபெற்றுத் தஞ்சைக்கு வந்தார். 1934, 35-ஆம் ஆண்டுகளில் மறுமுறையும் தஞ்சை கலியாணசுந்தரம் டியர்ஸ்லேப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அங்கிருந்து விலகியபின் தமிழாராய்ச்சி செய்தல், தமிழ்ப் பொழிலுக்குக் கட்டுரையெழுதல் முதலிய பணி களில் தமது காலத்தைச் செலவிட்டார். சில ஆண்டுகள் புலவர் வகுப்புத் தேர்வாளராக இருந்தார். அன்பர் பல ருக்குக் கம்பராமாயணம் முதலிய நூல்களைப் பாடஞ் சொன்னார்.

இறுதி

1939-ஆம் ஆண்டில் இவருடைய மனைவியார் இறை வன் திருவடி நீழலை யடைந்தார். இவர் மனைவியைப்

போற்றியொழுகும் பெற்றியுடையவராதலின் மனைவியார் பிரிவு இவருடைய உள்ளத்தைக் கலக்கியது. அன்றியும் இவருடைய மக்கள், "மகனறிவு தந்தையறிவு" என்பதைப் பொய்யாக்கிவிட்டனர். தம்முடைய மக்கள் நன்முகத் தமிழ் கற்றுத் தம்மைப் பார்க்கிலும் மிகுந்த சிறப்படைய வேண்டும் என்று எண்ணியிருந்த இவருடைய எண்ணம் வீணாகிவிட்டது. சிறுவர்கள் கல்வியை நன்கு கற்காது போயினர். இதனல் மனம் வருந்திய இவர் மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்து தமது அறுபத்து நான்காம் அகவையில் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

உ அ. சத்தியமூர்த்தி

தோற்றம்

தஞ்சை மாவட்டத்தில் திருப்பெருந்துறைக்கு அண்மையில் உள்ள செம்மணம் பொட்டல் என்னுஞ் சிற்றூர் சத்தியமூர்த்தியின் தந்தையாராகிய சுந்தர சாத்திரிகள் என்பவருடைய ஊராகும். சத்தியமூர்த்தி 1887-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினேழாம் நாள் (சார்வரித்து ஆண்டு ஆவணித்திங்கள் நான்காம்நாள்) பிறந்தார். சுந்தர சாத்திரிகள் வாழ்க்கையை நடத்துவதற்கு வழிதேடிப் புதுக்கோட்டை நாட்டில் வசித்து வந்தார். சத்தியமூர்த்தி பிறந்த ஊர் திருமயம். தாயாருடைய பெயர் சுப்புலட்சுமியம்மாள்.

கல்வி

ஐந்தாம் ஆண்டில் சத்தியமூர்த்தி கல்விப்பயிற்சியைத் தொடங்கினர். தொடக்கப்பள்ளியில் கல்வி பயின்று கொண்டிருக்கும்போதே எட்டாவது அகவையில் தந்தை

பார் சுந்தர சாத்திரிகள் விண்ணகம் சென்றார். தாயார் ராகிய சுப்புலட்சுமியம்மையார் மைந்தன் கல்வியில் மிகுந்த கருத்துச் செலுத்தினர். ஊரில் இருந்த திலபுலம், தம் மூடைய நகைகள் முதலியவைகளை விற்றுச் சத்தியமூர்த்தி யைப் பி. ஏ. வரையில் படிக்கவைத்தார். புதுக்கோட்டை அரசர் கல்லூரி, சென்னை கிறித்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியவைகளில் கற்றுப் பட்டம் பெற்றார்.

அரசியலில் நுழைதல்

சத்தியமூர்த்தி பி. ஏ. வகுப்பில் கல்வி கற்றுக்கொண் டிருக்கும்போதே அரசியல் துறைகளில் கருத்தைச் செலுத்தினர். 1907-ஆம் ஆண்டில் சென்னைக் கடற் கரையில் விபின்சந்திரபால் செய்த சொற்பொழிவைக் கேட்டு நாட்டுப் பற்றுக்கொண்டு கடுமையாக உடுபட்டார். வெளிநாட்டுத் துணிகட்குத் தீவைத்தெரித்தல் முதலிய வைகளுக்குந் துணைநின்றார். 1908-ஆம் ஆண்டில் சென்னை யில் காங்கிரசு கூடியபொழுது தொண்டர் படையிற் பணி புரிந்தார். இதே ஆண்டில் மதுராந்தகத்தில் கூடிய மாநாடு ஒன்றில் சொற்பொழிவு செய்யத் தொடங்கினர். இம் மாநாட்டில் அவர் ஆற்றியதே முதலாவது சொற்பொழிவு. பிறகு இவருடைய சொற்பொழிவு இந்திய நாடு எங்கும் நடைபெறத் தொடங்கியது. 1917-ஆம் ஆண்டில் கல்கத் தாவில் காங்கிரசு மாநாடு கூடியபொழுது அச்சுச்சட்ட அடக்குமுறையைத் தாக்கி ஒரு பெரிய சொற்பொழிவு செய்தார். அச் சொற்பொழிவு எல்லோராலும் பெரிதும் பாராட்டப்பெற்றது. 1918-ல் காஞ்சிமாநகரில் சமூகசனி தேவியின் தலைமையில் மாநாடு ஒன்று கூடியது. அன்னி பெசன்ட், சர். சி. பி. இராமசாமி ஐயர், அருண்டேல், வாடியா, சீனிவாச சாத்திரியார் முதலியோர் அங்குக் கூடி

யிருந்தனர். மேற் கூறப்பெற்றவர்கள், "மாண்டேகு சீர் திருத்தத்தை வரவேற்க வேண்டும். போரில் பிரிட்டனுக்கு உதவிசெய்ய வேண்டும்," என்று பேசினர்கள். சத்தியமூர்த்தி எழுந்து, "இங்கிலாந்து நமக்கு உரிமை கொடுக்காவிட்டால் நாம் போரில் அதற்கு உதவி செய்யக் கூடாது," என்று பேசி முடித்து மேற்கூறியவர்களுடைய கொள்கைகளை யெல்லாம் மடக்கிவிட்டார்.

தூதர்

1919-ஆம் ஆண்டில் இலண்டனுக்குச் சென்ற காங்கிரசு தூதக்கூட்டத்தில் இவரும் ஒருவராகச் சென்றார்.

உரிமைச் சொற்பொழிவு

1920-ஆம் ஆண்டிலே தமிழ் நாட்டில் உள்ள பேரூர் சிற்றூர் முதலிய எல்லா இடங்கட்குஞ் சென்று உரிமைப் போராட்டத்தின் கட்டாயத்தைப்பற்றிப் பல சொற் பொழிவுகள் செய்தார். இதனல் நாட்டு மக்கள் விழிப் படைந்து உரிமையின் பெருமையை உள்ளவாறுணர்ந் தார்கள்.

இலண்டனில் உரிமைச் சொற்பொழிவு

1925-ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக இலண் டனுக்குச் சென்றார். அங்கும் பல இடங்களில் இந்தியா விடுதலையடைய வேண்டியதைக் குறித்துப் பல சொற் பொழிவுகள் செய்தார். அச் சொற்பொழிவுகளில் ஆங்கி லேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று காரசாரமாகப் பேசினர். ஒரு கூட்டத்தில் ஓர் ஆங்கி லேயன் இவரைப் பார்த்து, "ஆங்கிலேயர்களாகிய நாங்கள் இந்தியாவை விட்டுவிட்டு வந்துவிட்டால் அங்குக் கொள்ளை யும் கொலையும் மலிந்து குழப்பமாகிவிடுமே! அப்போது

என்ன செய்வீர்கள்?'' என்று கேள்வி கேட்டான். உடனே இவர், ''ஆங்கிலேயன் உலகத்துக்கு ஊர்க்காவலனுகப் பிறந்தவன் அல்லன்,'' என்று மறுமொழி கூறினர். கேள்வி கேட்டவன் வாயடங்கினன்.

ஒருவன் கேட்டான்

ஒருமுறை மாகாண மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் தலைமை தாங்கினர். மத்தியமாகாணத்தில் காங்கிரசுக்காரராக இருந்தாம்பே என்பவர் காங்கிரசுக்குத் தீமை செய்து அரசாங்கத்தோடு ஒன்றுபட்டு அதிகாரப் பதவிபெற்ற சமயம் அது. எஸ். சீனிவாச அய்யங்காரை எதிர்த்து, ச. வெ. இராமசாமி நாயக்கர், சுரேந்திரநாத் ஆரியா, எஸ். இராமநாதன் முதலியோர் பேசினர். மத்திய மாகாணத்தில் தாம்பே காங்கிரசுக்குத் தீமை செய்துவிட்டபடியால் காங்கிரசுக்கட்சிக்காரர்களை நம்பக்கூடாது என்று முற்கூறியவர்கள் பேசினர். சீனிவாச அய்யங்கார் தனிமையாக அகப்பட்டுக்கொண்டு விழித்தார். திடீரென்று சத்தியமூர்த்தி தோன்றினர். ''வடநாட்டில் ஒருவன் கெட்டுபோய்க் காங்கிரசுக்குத் தீமை செய்துவிட்டால் எல்லோரும் கெட்டு விடுவார்களா? நானூறு பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட காங்கிரசுக் கட்சியில் மற்றை முந்நூற்றுத்தொன்ணூற்றெண்பதுபேரும் தாய்மையான உள்ளத்துடன் விளங்குகின்றோம். ஆனல் எப்பொழுதும் பட்டம் பதவி என்று அலைந்து அரசினரோடு குலாவி நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இந்த எதிர்க்கட்சிக்கு எங்களைக் குறை கூற வாயேது?'' என்று அறிமானவைப்போல் முழங்கினர். எதிர்க்கட்சிக்காரர்கள் மறுமொழிகூற வகையற்று வாயடங்கினர்கள்.

பலவகை நிகழ்ச்சிகள்

சத்தியமூர்த்தியின் புகழ் இந்நாட்டில் மட்டுமன்று; வெளிநாட்டிலும் நன்கு பரவியிருந்தது. "காங்கிரசின் சார்பாகச் சட்ட சபைக்குச் சத்தியமூர்த்தி ஒருவர்மட்டும் போனல் போதுமானது," என்று காந்தியடிகள் கூறினர். மகாத்மா காந்தி சட்ட சபைகளையும் நீதி மன்றங்களையும் கல்லூரிகளையும் ஆதரிக்காமல் ஒதுக்கிவிடவேண்டுமென்று சொன்னது சத்தியமூர்த்திக்குப் பிடிக்கவில்லை. மன்னார்குடியில் ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது காந்தியின் புதுதத்திட்டத்தைத் தாக்கிப் பேசினர். நினைவில்லாமலோ அன்றி வேண்டுமென்றே, "காந்தி சொல்லுகிறான்" என்று ஒருமையில் பேசிவிட்டார். ஒருமையில் பேசியது சிலருக்குப் பொறுக்கவில்லை. கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. "காந்தியடிகளை அவன் இவன் என்று பேசக்கூடாது," என்று கூக்குரலிட்டனர். இவ்வெதிர்ப்பை அடக்குவதற்குச் சத்தியமூர்த்தி ஒன்றும் எண்ணவிடவில்லை "இராமன் காட்டிற்குச் சென்றான்," என்று சொல்லுகிறோம். "கண்ணன் வெண்ணெய் திருடினான்," என்று சொல்கிறோம். இதனல் இராமனையும் திருட்டினையும் நாம் இழிவுபடுத்தவில்லை. இராமனையும் திருட்டினையும்போல் காந்தியடிகளையும் நான் கடவுளாகவே மதிக்கிறேன்," என்றார். எதிர்ப்பு இருந்தவிடந் தெரியாமல் அடங்கிவிட்டது.

சென்னைக் கிறித்துவக் கல்லூரி மாணவர் சங்கத்திற்குச். உஸ்மான் செயலாளராக வருவதைப் பலர் விரும்பவில்லை. இதைச் சிலர் சத்தியமூர்த்தியிடம் கூறினர். உடனே சத்தியமூர்த்தி மேடைக்கு எழுந்து சென்றார். "நீங்கள் சர். உஸ்மானைப் பார்த்திருப்பீர்கள்: அவரைப் பார்க்கா

தவர்கள் இங்கு யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி யாராவது இருந்தால் அவர்கள் உடனே போய்ப் பாருங்கள். (சர். உல்மான் பருத்த உடலுடையவர்.) செயலாளர் என் ரூல் வேலைகள் செய்யவேண்டும். நான்கு இடங்கட்குப் போகவேண்டும். சர், உல்மான் செல்ல முடியுமா? அவரைப் பார்த்து முடிவு செய்யுங்கள்," என்று பேசினர். சர். உல்மானைச் செயலாளராக்க முயன்றவர்களின் முயற்சி தோல்வியடைந்துவிட்டது.

மாகாண சட்டசபைத் தேர்தலுக்கு முன்பு சவகர் லால்நேரு, சென்னைக்கு வந்தார். திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. "காங்கிரசு மாசபையில் பதவி ஏற்பதென்று முடிவு செய்யப்பட்டால், என் செல்வாக்கு, பலம் முதலிய யாவற்றையும் பயன் படுத்தி அதனை எதிர்ப்பேன்," என்று சவகர்லால் நேரு வீரமுழக்கஞ் செய்தார். இறுதியில் சத்தியமூர்த்தி பேசினர். "நேருவுக்குள்ள செல்வாக்கு எனக்கு இல்லை. ஆனல் நானும் என்னுடைய முழுப்பலத்தையும் பயன்படுத்தி பதவியேற்புக்குப் போராடுவேன்," என்று பேசினர். நேரு பக்கத்தில் இருக்கும்போது இவ்வாறு பேசக்கூடிய மாபெரும் வீரராக விளங்கியவர் சத்தியமூர்த்தி ஒருவர் தாம்.

மாறுபாடு

ஒரு கூட்டத்தில் சத்தியமூர்த்தி சொற்பொழிவு செய்துகொண்டிருக்கும்போது, "ஓர் அலுவலில் ஆங்கிலே யன் பார்த்தால் அவனுக்கு இரண்டாயிரம் வெண்பொற் காசுகள் கூலி. அதே அலுவலை நான் பார்த்தால் எனக்கு எண்ணூறு வெண் பொற்காசுகள்தாம் கூலியாகக் கிடைக் கும். இம் மாறுபாடு எதனல் தெரியுமா? அவன்தோல் வெளுப்படைம்; என்தோல் கறுப்பாம்," என்று பேசினர்.

பலவகைப் பணிகள்

சத்தியமூர்த்தி பலவகைப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். ஊராளுமன்ற உறுப்பினராகவும், பல்கலைக் கழக உறுப்பினராகவும் இருந்து தொண்டுகள் செய்தார். உரிமைப் போர்களில் கலந்து பன்முறை சிறைக்குச் சென்றார். மத்திய சட்டசபைத் தேர்தலில் சுர். இராமசாமி முதலியாரை எதிர்த்துத் தோற்கடித்தார். 1939-ஆம் ஆண்டில் சென்னை நகரத்து மேயராக அமர்ந்து பலவகைகளில் மக்களுக்குப் பெருதவிபுரிந்தார். பூண்டிநீர்த்தேக்கத் திட்டத்தை ஏற்படுத்திக் குடிதண்ணீருக்கு நல்ல வசதி செய்தார்.

கலைத் தொண்டு

நாட்டு விடுதலையிலேயே முழுநாட்டத்தையுஞ் செலுத்தித் தொண்டுசெய்த இவர் கலைத்துறையை அடியோடு மறந்துவிடவில்லை. பி. ஏ. வரையில் கற்ற இவர் சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். நாடகக் கலை முத்தமிழுள் ஒன்று. நாடக வளர்ச்சியில் ஈடுபட்டும் உழைத்தார். நாடகங்கள் பலவற்றில் வேடம்பூண்டு நடிகராக நடித்திருக்கிறார். அந் நாடகங்களை எழுதியவர்களோடு தாமும் கலந்து நாடகம் எழுதும் வேலையையும் செய்திருக்கிறார். இவருடைய நடிப்புப் பலராலும் புகழப் பெற்றிருக்கிறது. ஒரு முறை இவர் கூட்டமொன்றில் பேசியபோது, "நம்முடைய இலக்கியங்களில் வேடிக்கையும் நகைச்சுவையும் பொதிந்து கிடக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் ஒருவகையான மூடப் பற்று நம்முடைய சமயத்தைப் பிடித்துக்கொள்ள அதனால் நம்முடைய நிலைமை தாழ்வையடைந்துவிட்டது. சுப்பிரமணிய பாரதியாரின் மேதைபோல் தமிழர்கள் திரும்பவும் அரசியல் வாழ்க்கையிலும் கலை வாழ்க்கையிலும் ஓர் உயர்ந்த

நிலையைப் பெற்று வருகின்றனர்," என்று பேசினர். சத்திய மூர்த்தி அரசியல் துறை ஒன்றில்மட்டுமே வல்லவரென்று பலர் எண்ணியிருக்கலாம். ஆனால் அவர் எல்லாத்துறை யிலும் வல்லவர். எந்தச் சமயத்தில் எப் பொருளைப்பற்றி யார் பேசவேண்டுமென்று விரும்பினாலும் இவர் உடனே அப் பொருளைப்பற்றித் தட்டுத் தடையின்றிப் பேசத் தொடங்கிவிடுவார். இவர் சமயச் சார்பாகச் செய்த சொற் பொழிவுகள் பல. வேதாந்த சித்தாந்தத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினால் கேட்பவர்கள் எளிதில் அறிந்துகொள்ளு மாறுபேசுவார். இவர் தம்முடைய ஒரே பெண்ணை இலட் சுமியிடத்தில் பேரன்புகொண்டிருந்தார். சிறையிலிருந்த காலங்களில் பல கடிதங்கள் மகளுக்கு எழுதினர். அவை கள் இலக்கியச் சுவை அமைந்தவை. அக் கடிதங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர்.

அன்பு

சத்தியமூர்த்தியின் தாயார் தம் மகனிடம் பேரன்பு கொண்டிருந்தார். தம்முடைய மகனை நன்னிலைக்குக் கொண்டுவர அவர்பட்ட அல்லல்கள் பல. தாயின் தனி அன்பைக் கண்ட சத்தியமூர்த்தி தாமும் தாயாரிடத்தில் பேரன்புகொண்டிருந்தார். தாயார் தமக்குச் செய்த பேருதவிக்கும் கொண்டிருந்த பேரன்புக்கும் அறிகுறியா கப் புதுக்கோட்டைக் கல்லூரியிலோ சென்னைக் கல்லூரி யிலோ தினவுக்குறியாகப் பரிசோ, பதக்கமோ அளிப்ப தற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தார். அவ்வெண்ணம் நிறைவேறுமலே போய்விட்டது.

இறுதி

சிறைவாசம் இவருடைய உடலநலத்திற்குப் பிடிக்க வில்லை. அடிக்கடி நோயடைந்து துன்புற்றார். 1943-ஆம்

ஆண்டில் சிறையிலிருக்கும்போதும் அவரை நோய்பற்றியது. இனிமேல் சத்தியமூர்த்தி பிழைத்தல் அரிது என்பதை உணர்ந்த அரசினர் அவரை விடுதலை செய்தனர். சென்னைப் பெரிய மருத்துவ சாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருக்கையில் 1943-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் இரவு ஒரு மணிக்கு இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அப்பொழுது இவருக்கு அகவை ஐம்பத்தாறு. இவருடைய மறைவைக்கேட்டுத் தமிழ்நாடு முழுவதுமே துன்பக்கடலுள் ஆழ்ந்து வருந்தியது. சத்தியமூர்த்தியின் தொண்டினை மக்கள் மறவாமல் என்றென்றும் வாழ்த்துகின்றனர்.

உ௯. வயிநாகரம் அ. இராமநாதச் செட்டியார்

தோற்றம்

செட்டிமார் நாட்டிலே அமராவதிப்புதூரிலே வழிவழியாகப் புகழ் படைத்த வயிநாகரம் குடும்பத்திலே 1855-ஆம் ஆண்டிலே இராமநாதச் செட்டியார் பிறந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்று புலமை நிரம்பப் பெற்றார்.

கடிதப் பாடல்கள்

அறிவிற் சிறந்து விளங்கிய இவர் இனிய செய்யுட்களை விரைந்து பாடும் ஆற்றலையும் நன்கு பெற்றிருந்தார். இவர் காலத்தில் இருந்த புலவர் பெருமக்களும் செல்வர்களும் இவருக்கு அரிய நண்பர்களாக அமைந்திருந்தனர். முறையூர் பழ. சி. சண்முகம் செட்டியார் இவருடைய ஆருயிர் நண்பராக இயைந்து நின்றார். சண்முகம் செட்டியாருடைய முதுகிலே கட்டியொன்று புறப்பட்டுச் சின்னாள் தொல்லையளித்துப் பின் குணமாகியது. அதனை உணர்ந்த இவர்,

" விண்முகமெல் லாம்புகழும் வீயாக் கொடைபடைத்த
சண்முகநண் பாகின் தனியுடம்பில்—புண்முகமாய்
ஓர்சிரங்கு தோன்றி உறுத்தியதிக் நாள்காறும்
ஆர்சொலவுங் கேட்டேன் அலன்."

" அங்கயற்கண் அம்மை அனையுமண வாளன்அடிப்
பங்கயத்தை அர்ச்சனைசெய் பான்மையால்—துங்கமிகு
சாந்துபட்டர் சொல்லச் சவுக்கியங்கேட் டுக்களித்தேன்
ஈந்தவருக் குண்டோ இடர்."

" இன்னமும்எம் ஆலவாய் ஈசன் கருணையினால்
பன்ன வருஞ்சகல பாக்கியமும்—எந்நலமும்
ஆகுகமே ருக்கிணையாய் அல்லல்வரி னும்நசித்துப்
போகுககா ணாதுபனி போல்."

என்னுஞ் செய்யுட்களை எழுதியனுப்பினார்.

இக்குடும்பத்தினர் திருக்கோயில் திருப்பணிகள் செய்வதிற் புகழ்பெற்றவர்கள். ஏறக்குறைய இருபத்தைந்து லட்சரூபா வரையில் செலவழித்துத் திருப்பணி செய்தவர்கள். தருமபுர ஆதீனத்திற்கு உரிமையான திருக்கோயில்கள் இருபத்தேழு. அவைகளிற் சில நன்கு பாதுகாக்கப் பெறாமல் இருக்கின்றன என்றும் அவைகளைத் திருப்பணி செய்து பாதுகாக்கவேண்டும் என்றும் ஆதீனத் தலைவருக்கு இருபத்துமூன்று பாக்கள் கொண்ட விண்ணப்பம் ஒன்றைச் செய்தார்.

" திருக்கயிலா யத்திருந்து வந்தபரம்
பரையாகிச் சிவஞானத்தின்
பெருக்ககலாத் தருமபுரத் தெழுந்தருளிப்
பெரியர்குழாம் பெரிதுஞ் சூழக்
குருக்கிளர்எம் சொக்கலிங்கம் பதந்தொழுஞ்சுப்
பிரமணிய குருவே நீ நெஞ்
சிருக்கையிலெங் களுக்குமொரு குறைவருமோ
சுகக்கடலில் இருக்கின் றேமால்."

" துஞ்சாத புகழ்மதுரை மீனாட்சி
இறைசோம சுந்த ரேசர்க்(கு)
எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி
பொருட்செலவால் இயற்றி யுள்ளோம்
அஞ்சாத படியிருபத் தெட்டாண்டு
கமிட்டியினில் அரசு செய்தேன்
செஞ்சாலி வயல்அமரா வதிபுத்தூ
ரினிற்பிறந்து சிறந்து ளேனால்."

என்பன அவற்றுள் இரண்டு பாடல்களாகும்.

இயற்றிய நூல்கள்

இவர் அவ்வச்சமயங்களில் தனிப்பாடல்கள் பல பாடினார். அவைகளில் சிலவற்றைக் கவிதைம்லர் என்னும் பெயருடன் சிலர் தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர். மற்றும் இவர் நூலாக இயற்றியன மதுரை யமகவந்தாதி, மயூரகிரிக் கலம்பகம், நாட்டரசன்கோட்டை கண்ணுடையம்மன் பதிகம், கொன்னையூர் மாரியம்மன் பதிகம், அரியக்குடி வாகனக்கவி, நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு முதலியன.

மேகவாகனம்

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றபோது இவருக்கும் அழைப்பிதழ் வந்தது. விழாவுக்குச் செல்வதற்குக் கார் அகப்படவில்லை.

" வஞ்சமில்லை கோபமில்லை பொறாமையில்லை
வெறுப்புமில்லை வருதற்காவல்
கொஞ்சமில்லை மேகவா கனமுடையார்க்
கென்னையங்கு கூட்டிக் காட்டும்
நெஞ்சமில்லை சமீபமில்லை கால்நடக்க
முடியவில்லை நெடும்பாட் டுக்குப்
பஞ்சமில்லை என்றாலும் மணியேமன்
னிப்பெனக்குப் பண்ணு வாயே."

என்னும் பாடல்மூலம் தாம் வாழுமிடமாதலின் காரணத்தைத் தெரியப்படுத்தியதுடன் மன்னிப்புங் கேட்டுக் கொண்டார். மேகவாகனம் - கார்.

கூசாப்பாட்டு

செ. முருகப்பா ஒருநாள் இவர் இல்லில் தங்கியிருந்தார். புறப்பட்டுச் சென்றபோது தமது தண்ணீர்க் கூசாவை அங்கு வைத்துவிட்டுப் போய்விட்டார். கூசாவைக் கண்ட செட்டியார் பின்வரும் பாட்டை முருகப்பாவுக்கு எழுதியனுப்பினர்.

" கூசாது பேரறங்கள் செழுந்தமிழில்
எடுத்துரைக்கும் குணத்தின் மிக்காய்
நீசாது போல்எழுந்து சென்னல்விடி
காலையிலே நீங்கிச் சென்றாய்
பேசாது போவதுண்டோ முருகப்ப
சன்மணியே பேச்சு வல்லாய்
கூசாதுப் புவாக விளக்கியிங்கே
வைத்துள்ளோம் கொடுப்போம் என்றே."

தமிழ்ச்சங்கத்தில் பாடியது

ஓராண்டில் தமிழ்ச்சங்க விழா கடைபெற்றது. அப்பொழுது இவர் பின்வரும் பாடலை இயற்றி அங்குப் படித்தார்.

" பிறந்த சங்கத்தை எடுத்துயிர் கொடுத்துப்
பின்னோர் சிறுதொனி கேட்பார்
இறந்த சங்கத்தை எடுத்துயிர் கொடுத்த
தெங்களும் முழங்கிடக் குறித்தான்
சிறந்த சங்கத்தை மேற்படுந் தொகையில்
செறிந்தசெந் தாப்புல வீர்கான்!
நிறந்த சங்கத்தை எந்தினேன் அனைய
நெடுந்தகைப் பாண்டிமன் னனே."

இறுதி

இவர் பெரும்பாலும் மதுரையையே தமது இருப்பிட மாகக் கொண்டு தங்கி இறைவழிபாடு செய்துகொண்டிருந் தார். இவர் தருமபுர ஆதீனப்புலவராக விளங்கியதுடன் அவ்வாதீனத் தலைவர்மீது பல பாடல்கள் பாடியுள்ளார். சிறந்த செந்தமிழ் அறிஞராக விளங்கிய இவர் 1944-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

---

60. மணிவாசக சரணலய அடிகள்

தோற்றம்

மணிவாசக சரணலய அடிகள் என்னும் பெரியார், சண்டிய புகழ்சேர் பாண்டிநன்னாட்டின்கண் சேதுகாவலர் பாதுகாவலில் அடங்கிய தென்னங் கோட்டைப் பகுதியிலே வேப்பங்குளம் என்னும் ஊரிலே ஆங்கிலம் 1885-ஆம் ஆண்டுக்கு நேரான பார்த்திப ஆண்டு ஆவணித்திங்கள் ஆறும்நாள் இவ்வுலகில் தோன்றினர். அடிகளார் தோன்றிய குலம் கள்ளர் குலம். தந்தையார் பெயர் சோணைமுத் தம்பலகாரர். தாயார்பெயர் இலக்குமியம்மாள்.

பாட்டனர்

அடிகளாரின் பாட்டனர் சிறந்த யோகியாகவும் ஞானியாகவும் விளங்கியிருந்தார். அவர் கம்பராமாயணம் முதலிய காவியங்களையும், வேதாந்த நூல்களையும் நன்கு ஓதியுணர்ந்தவர். ஞானசிவ வாதக்கட்டளை என்னும் நூலை ஆராய்ந்துக் களிப்பாகப் பாடியவர். சின்னைய தேசிகர் என்னும் பெயரினர்.

இளமைப்பருவம்

சின்னைய தேசிகர் அருளால் தோன்றிய மணிவாசக சரணலை அடிகள் இளமைப்பருவத்தில் ஆண்டவன் எனப் பெயரிடப்பட்டார். ஐந்தாம் ஆண்டிற் கல்வியைக் கற்கத் தொடங்கினர். இளமைக் கல்வியைக் கற்றுணர்ந் தார். அகலை பன்னிரண்டிலேயே கொழும்பு இரங்கூன் முதலிய இடங்கட்குச் சென்று காட்டுக் கோட்டை நகர தனவைசியர் கடைகளில் கணக்கப்பிள்ளையாகவும் மேலாளராகவும் அமர்ந்து தொழில் பார்த்துப் பெரும் பொருளீட்டினர். அரும்பொருளே பெரும்பொருள் என்று மயங்கிவிடாமல் பரம்பொருளிடத்திலும் பரம்பிலா அன்புகொண்டு போற்றினர்.

புலமைக் கல்வி

கல்வியை நன்கு கற்றுத்தேற வேண்டும் என்று எண்ணினர். வாசுதேவ நல்லூர் மணிமுத்து ஓதுவார் என்பவரிடம் நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் முதலிய சைவ இலக்கிய நூல்களையும் பழுதறப்பயின்று பண்பிற் சிறந்து விளங்கினர்.

மணிவாசகரிடம் அன்பு

இவர் மணிவாசகரிடம் மட்டிலாக் காதல் கொண்டார். திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் நாள்தோறும் பாராயணம் பண்ணுமல் உணவருந்த மாட்டார். அடிக்கடி திருவாசகத்தை ஓதி உள்ளம் உருகுவார். சைவசித்தாந்த நூல்களையும் கற்றுணர்ந்தார்.

அறிஞர்மாட்டன்பு

ஆத்திசூடி விருத்தியுரையாசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளை, காவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைத்

கனியரசு வேங்கடாசலம் பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் முதலிய தமிழ்ப்பெரு மக்களிடத்தே தனியாக்காதல் கொண்டு பெருநட்புப் பூண்டவர்.

திருமடம்

கல்லலில் திருமடம் ஒன்று அமைத்து அதற்கு மணிவாசக நிலையம் என்று பெயரிட்டு அதில் உறைந்திருந்தார்.

தேர்த் திருப்பணி

கல்லலில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரப் பெருமானுக்கு நாட்டார்களின் உதவியையும் கொண்டு ஓரழகிய தேரைச்செய்து முடித்தார். தேரைச் செய்யும்பொழுது சிவகங்கைக்கடுத்த கீழப்பூங்குடியில் இருந்த பெருஞ் செல்வராகிய இராமையா அம்பலகாரர் என்பவர் கைம்மாறு கருதாமல் பெருதவிசெய்தார். அவருடைய நன்றியைப் பாராட்டு முகத்தான் 'இயன்மொழி வாழ்த்து' என்னும் நூல் ஒன்றைப்பாடினர். இது நல்ல சொற்சுவையும் பொருட்சுவையும் அமையப்பெற்றது.

துறவறம்

இவர் தமக்கு ஐம்பதாவது அகவை (ஏறக்குறைய) நடக்கும்போது குன்றக்குடி மேலமடத்துத் தலைவர் கணபதிச் சுவாமிகள் என்னும் பெரியார்பால் சந்நியாசம் பெற்றுத் துறவுபூண்டு மணிவாசக சரணலயர் என்னும் பெயரை மேற்கொண்டார்.

தமிழ்த்தொண்டு

துறவறம் பூண்டபின் அடிகளார் தமது காலத்தைப் பொதுநலத் தொண்டுகளிற் செலவிட்டார். செய்யுள் நூல்கள் பல இயற்றினர். சொற்சுவை பொருட்சுவை

சிறந்து விளங்கவும் விரைவாகவும் சந்தம் பிழையாமலும் பாடுதலில் இவர்மிகவும் வல்லவர். இவர் முருகக்கடவுள் மீது போன்பு கொண்டவராதலின் அக் கடவுள்மீது பல வண்ணப் பாக்களையும் பதிகங்களையும் பாடியுள்ளார். நயம்பொருந்திய இவருடைய பாடல்கள் படிப்பவர்கட்குக் களிப்பை விளைப்பன.

"சிந்தாடை யாயுலவு நந்தாத காரணியர்
சிந்தாகு லாதி யறவே
சிங்கார மானபல கந்தாவு மாமலைகள்
சென்றேறி யாடு மினையோய்
கந்தாகு மாசிவ மைந்தாவ டாதுமலை
கண்டாள் தனது சுதனே
கன்றுத வாழ்வதுற வந்தாண்டு ளினின்வினை
கண்டோட வேகு ருபரா
பைந்தோகை யோடுமயி னின்றேறு லாவுபொழில்
பங்காரு மாமலை யுளாய்
பண்டாய மாமறைகள் நின்றே பராவவளர்
பண்பான் வேத முதல்வா
தந்தான தானவென நின்றாடு மாணடியர்
தண்பாத மேவ வருள்வோய்
சந்தார் விராலிமலை வந்தார் பராவவளர்
தந்தாரும் ஆறு முகனே."

என்பது அடிகள்பாடிய பதிகப்பாடல்கள் பலவற்றுள் ஒன்றாகும். இவருடைய நூல்களைப் பாராட்டி ந. மு. வேங்கடசாமி நாட்டார், கா.சுப்பிரமணிய வேங்கடாசலம் பிள்ளை முதலியோர் சிறப்புப் பாயிரங்கள் வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளனர்.

இரங்கற்பா

இவர் சேதுமன்னர் முத்துராமலிங்க சேதுபதியிடம் பெருமதிப்புடையவராக விளங்கினர். அவர் காலமான வொழுது,

"பூபால னாப்பிறந்து புகழ்ப்பால னாகியிந்தப்
புவனம் போற்ற
மாபாலம் ஒன்றினைமா னாமதுரை வைகைதனில்
வழங்கி மின்னும்
மாபாலன் அடிமறவா நிறையுளத்த மயிர்ப்பால
வழிதோ யாது
காபாலி உலகமது சென்றனையோ நின்போல்வார்
காணேன் ஐயா."

"மாட்சிமிகும் புதுவைநகர் மார்த்தாண்ட
வைரவப்பேர் மன்னன் வைகும்
காட்சிதனைக் கண்டனையோ கலந்துறைந்து
மகிழ்ந்தனையோ கவின்சேர் ஞாலம்
தாட்சியின்றி முறைபுரிந்த தமிழ்வேந்தர்
நீர்இருவர் தழுவி னீரோ
மாட்சிமிகும் நுந்தையொடு முன்னோரும்
வரவேற்று மகிழ்ந்திட் டாரோ."

என்பன முதலிய இரங்கற் பாக்களைப் பாடி வருந்தினார்.

இயற்றிய நூல்கள்

1. திருப்பரங் குன்றப்பதிகம்
2. திருச்செந்தூர்ப் பதிகம்
3. திருப்பழநிப் பதிகம்
4. திருவேரகப் பதிகம்
5. பழமுதிர் சோலைப் பதிகம்
6. குன்றுதோறாடற் பதிகம்
7. குன்றக்குடிப் பதிகம்
8. குமரமலைப் பதிகம்
9. விராலிமலைப் பதிகம்
10. கொடுமளூர்ப் பதிகம்
11. கழுகுமலைப் பதிகம்
12. கதிர்காம மலைப்பதிகம்
13. எட்டிகுடிப் பதிகம்
14. திருச்சிக்கற் பதிகம்

15 புன்னிருக்கும் வேலூர்ப்பதிகம்
16. திருத்தணிகாசலப் பதிகம்
17. செந்தமிழ் சாட்டுச்சிறப்பு
18. சேலகத் தேவர் பதிகம்
19. தலம்பெற்றநாயகி பதிகம்
20. திருக்கண்ணீசர் பதிகம்
21. அழகியநாயகி பதிகம்
22. எக்கலாதேவி பதிகம்
23. முருகக்கடவுள் விண்ணப்பம்
24. அண்ணபூரணி அட்டப்பிரபந்தம்
25. முருகக்கடவுள் வண்ணம்
26. இயன்மொழி வாழ்த்து

முதலியன இவர் இயற்றிய நூல்கள்.

மாணவர்க்குதவி

கல்வி கற்ற மாணவர் பலர்க்கு அடிகளார் கல்வுதவி புரிந்தனர். பண்டித, சித. நாராயணசாமி அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் கல்வி பயின்றபோது தக்கவாறு உதவி புரிந்தார். கல்வி கற்கும் மாணவர்கட்குத் தமிழ்க் கல்லூரி ஒன்றை அமைக்கவேண்டுமென்பது அடிகளாருடைய எண்ணமாக இருந்தது. அவ்வெண்ணம் முற்றுப் பெறவில்லை.

இறுதி

அடிகளார், 1944-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் எட்டாம் நாள் (தாரண ஆண்டு ஆடித்திங்கள் 24உ) அரிய லோகுக்கு அடுத்த முருக்கன்குடி என்னுஞ் சிற்றூரில் இறைவன் திருவடிநீழலை யடைந்தார்.

கழக வெளியீடு: அகக

தமிழ்ப் புலவர் வரிசை

[பதினைந்தாம் புத்தகம்]

சிரியர்:

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Oct., 1956

THAMIZHP PULAVAR VARISAI - XV

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
I/140, BROADWAY, MADRAS - I.

Head Office :

98, EAST CAR STREET, : : TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அவை அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மை யுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தன்னலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக் கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம்நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறு களையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்ல சீரிய தொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலமை வரிசையில் இதுகாறும் பதினெந்து புத்தகங் கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் பதினேழாம் புத்தகமாகும்.

இதன்கண் நம்பிகளி முதல் வரதநஞ்சையபிள்ளை ஈறாக உடு புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங் களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற் றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த திரு. கூ. அ. ராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் கன்றி உரித்தாகுக.

சென்னைக் கல்வித்துறை இயக்குநர் (Director of Public Instruction) இப் புலவர் வரிசை நூல்களை வாங்கும்படி உயர் நிலைப் பள்ளிகட்கும், கல்லூரிகட்கும், பொதுநூலகங்கட்கும் அறிக்கை அனுப்பியிருப்பதைத் தெரிவித்துக்கொள்ளு கின்றோம்.

இதனையும் முதல் பதினெந்து புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப் பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

தொடக்கம்

தமிழ்ப்புலவர் வரிசை என்னும் பெயரில் இதுவரை பதினொன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. இது பதினைந்தாவது பகுதியாகும். தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளெல்லாம் மறைந்து விடாமல் வரிசையாக எழுதச்செய்து பாதுகாக்கவேண்டும் என்னும் நோக்கம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் திருமிகு வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கு நீண்ட காலமாக இருந்துகொண்டிருந்தது. முதலில் தமது நோக்கத்தைச் சேக்கிழார் சகோதரர் முதலியாருக்குத் தெரிவித்து ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் முதலியோருடைய வரலாறுகளை எழுதச் செய்து அவைகளை ஒழுங்குபடுத்துமாறு எம்மிடம் தந்தனர். நான் அவ்வரலாறுகளைக் காலப்போக்கிற்கு ஏற்றவகையில் அமைத்துக், கூடிய வரையில் தனித்தமிழில் எழுதி முதலில் மூன்று பகுதிகளை முடித்தேன். அவைகள் மூன்றும் 1947, 1948-ஆம் ஆண்டில் வெளியாயின. பிறகு ஐந்தாண்டுகள்வரை இவ்வேலை நடைபெறவில்லை. மீண்டும் இவ்வேலை 1953-ல் தொடங்கப்பெற்று மூன்று ஆண்டுகளில் பன்னிரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன.

அமைப்புமுறை

இவ்வரிசையில், நூல்கள் எழுதிப் புகழுடன் விளங்கியிருந்து மறைந்த புலவர்களுடைய வரலாறுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. விரிவான வரலாறு எழுதப் பெற்றுத் தனி நூலாக வெளிவந்துள்ள புலவர்களின் வரலாறுகள் இந்நூலில் சுருக்கமாகவே அமைக்கப் பெற்றுள்ளன. காரணம் விரிவான வரலாற்றை அறிய விரும்புவோர் தனிநூல்களைப் படித்துக் கொள்ளலாம் என்பதுதான்.

வரலாறுகள் தொகுத்தல்

மேனாட்டுப் புலவர்களின் வரலாறுகள், அப்புலவர்கள் உலகில் வாழ்ந்திருக்குங் காலத்திலேயே எழுதிப் பாதுகாக்கப் படுகின்றன. நமது நாட்டிலேயோ அத்தகைய பழக்கம் இல்லை. காலஞ் சென்ற தமிழ்த் தாத்தா, உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமது வரலாற்றைத் தாமே எழுதி வெளிப்படுத்தத்

தொடங்கிய பிறகுதான், வேறு சிலரும் இம்முறையைப் பின் பற்றத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு தமிழறிஞர்கள் தம் வரலாற்றைத் தாமே எழுதிவைப்பது தமிழ்த் தாய்க்கு அரிய தொண்டாகும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

நிற்க, வரலாறுகளின் இன்றியமையாமையை நமது நாட்டார் இன்னுஞ் சரியாக உணர்ந்து கொண்டதாகத் தெரிய வில்லை. புலவர்களின் வரலாற்றோடு நாட்டின் வரலாறும் பின்னிக்கிடக்கின்றது என்பது சங்கப் புலவர்களின் வரலாற்றையும், ஔவையார், புகழேந்தியார், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலான வர்களுடைய வரலாறுகளையும் கூர்ந்து நோக்குவார்க்குத் தெள்ளிதிற் புலனும். வரலாறுகள் தொகுக்கத் தொடங்கிய போது அவைகள் எளிதாகக் கிடைத்துவிடவில்லை. தேனீக் கள் மலர்தோறுஞ் சென்று தேன்தொகுப்பதுபோல் பலவிடங் கட்குஞ் சென்று நூல்களைத் தேடியும் அறிந்தவர்களிடமிருந்து குறிப்புகள் பெற்றும் தொகுக்கவேண்டியதாயிற்று. பலருடைய வரலாறுகள், தோன்றிய காலம் மறைந்த காலம் முதலிய எதுவுந் தெரியாமல் காணப்பட்டன. அவ்வரலாறுகளை நன்முக ஆராய்ச்சி செய்து காலம் முதலியவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. முதலில் வரலாறுகளை உருவாக்கிக்கொண்டால் பிறகு காலப்போக்கில் எல்லாவற்றையுந் தெரிந்தமைத்துக்கொள்ளலாம் என்று கிடைத்த வரலாறுகளை உடனுக்குடன் வெளியிட்டிருக்கிறோம்.

திருப்புகழ்ச் சாமி, முருகதாசசாமி என்று பெயர் வழங்கிய வண்ணச் சரபம் தண்டபாணியடிகள் இயற்றியருளிய புலவர் புராணத்தில் இருந்து பல வரலாறுகள் எடுக்கப் பெற்றன. இப்புராணத்தில் வரலாற்றுச் செய்திகள் காணப்பட்டதே யன்றிக் காலம் முதலியன விளக்கமாகவில்லை. அவைகளை அவ் வாறேதான் இத்தொகுதிகளிலுஞ் சேர்த்திருக்கிறேன். நூல் களின் முகப்பில் நூலாசிரியருடைய வரலாற்றையும் சிலர் எழுதிச் சேர்ப்பதுண்டு. இவ்வாறு பல நூல்களின் முகப்பில் இருந்தும் வரலாறுகள் அகப்பட்டன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி முதலிய திங்கள் வெளியீடுகளில் இருந்து சில வரலாறு கள் கிடைக்கப்பெற்றன. காலஞ் சென்ற உ. வே. சாமிநாதையர் அவர்களால் எழுதப்பெற்ற மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வரலாற்றில் இருந்தும் சில குறிப்புகள் அகப்பட்டன. மற்றும் ஆட்சிப் பொறுப்பாளர் அவர்கள் தாமும் பொறுத்து முயன்று பல நண்பர்களிடமிருந்தும் வரலாறுகள் வாங்கிக்கொடுத்தார்கள். நான் மதுரை, மன்னர்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நூல் நிலையங்களில் உள்ள நூல்களைப் பார்த்தும் சில வரலாறு களைத் தொகுத்தேன். அறிஞர் பெருமக்களின் நினைவாக வெளிப்

படுத்தப் பெற்ற நினைவு மலர், மணிவிழா மலர் முதலியனவும் வரலாறு தொகுத்தற்குப் பயன்பட்டன.

என் அன்பிற்குரிய அடிகளாரும் சிதம்பரம் மௌனகுருசுவாமிகள் ஆதினத் தலைவருமாகிய உயர்திரு. சபாபதி சுவாமிகள் அவர்கள் தமது ஆதினநூல் நிலையத்தில் இருந்து பல வரலாறுகள் உதவியருளினர்கள். தஞ்சைமாவட்டம் மன்னர்குடியில் உள்ள கோட்டூர் இரங்கசாமி முதலியார் இலவச நூல்நிலையத்தில் இருந்து நூல்நிலையக் காப்பாளர் திரு. பாலகிருட்டிணை முதலியார் அவர்களும், திரு. அ. இளங்கோவன் அவர்களும் பல வரலாறுகள் கிடைக்கச் செய்தனர். பலவான்குடியில் உள்ள என் நண்பரும் மாணவருமாகிய திரு. மெ. வெ. வேலப்ப செட்டியார் அவர்களும், பல வரலாறுகள் தேடித்தந்தனர். மற்றும் என்னுடைய நண்பர்கள் பலரும் வரலாறு தேடித்தந்தனர். சென்னை ரெவின்யூபோர்டு ஆபீசில் சூபிரண்டாக விளங்கும் திரு. பச்சையப்பன் அவர்கள் சில வரலாறுகள் தந்துதவியதோடு, மேலும் பல வரலாறுகள் தேடித்தருவதாகவும் உரைத்தனர். இவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, கழகச் சார்பாகவும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நல்லவேலை

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களை நான் கழகந்தொடங்கிய காலம் முதலாகவே அறிவேன். இவர்கள் நாம் எடுத்துக்கொள்ளும் செயலைச் செவ்வையாகச் செய்து முடிக்கும் திண்ணிய திறனினர். அவ்வக் காலங்கட்கு ஏற்ற முறையில் நூல்களை வெளிப்படுத்துவதிலும் வல்லவர். இவர்களுடைய சலியா உழைப்பினால் தான் கழகம் இன்று உயரிய முறையில் சிறந்த தமிழ்ப் பணி செய்து வருகிறது. இவர்கள் தமிழ்ப் புலவர் வரலாறுகளைப் பாதுகாத்தற்கு முன்வந்து செய்யும் பணியைப் பலரும் போற்றிப் பாராட்டுகின்றனர். மேலும் போற்றிப் பாராட்டுவார்கள். பெயர்கூட அறியப் பெறாமல் மறைந்து கிடந்த பல புலவர்களின் வரலாறுகளை எல்லோரும் கண்குளிர்ந்து போற்றுமாறு செய்து விட்டார்கள். இதுவரையில் 380 புலவர்களின் வரலாறுகள் வரை வெளிவந்துள்ளன. பழைய புலவர்களின் வரலாறுகளில் இன்னும் ஏறக்குறைய முந்நூறுவரை அகப்படலாம். பழைய புலவர்களின் வெளிவராத வரலாறுகளையும் தற்காலப் புலவர்களில் நூல்கள் எழுதிப் புகழ்பெற்று விளங்கும் புலவர்களின் வரலாறுகளையும் அறிந்துள்ள நண்பர்கள் எழுதியனுப்புவார்களானால், அவ்வரலாறுகளெல்லாம் மறையாமற் பாதுகாக்கலாகும்.

நான் பல புலவர்களோடு தொடர்கணக்கிலும் ஆண்டுக்கணக்கிலும் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அத்தகையோருடைய முழு வரலாறுகள்கூட இப்பொழுது எனக்குத் தெரியாமற் போய் விட்டன. ஆகவே இத்துறையில் நண்பர்கள் கருத்துச் செலுத்து மாறு வேண்டிக்கொள்ளுகிறேன். புலவர் பெருமக்களின் நிழற் படங்களும் தொகுக்கப்படுகின்றன. நிழற்படங்களையும் அனுப்பித்தரின் சமயம்போல் பயன்படுத்துவதற்கு மிக உதவி யாக இருக்கும்.

தமிழ்ப்புலவர்கள் அகரவரிசை

காலம், வரலாறு, ஊர் முதலியன அறியப்படாமல் பல புல வர்களைப் பற்றிக் குறிப்புக்களும் செய்திகளும் நூல்களின் மூல மாகவும் வரலாறுகளின் மூலமாகவும் அறியப் பெறுகின்றன. இத்தகைய புலவர்களின் செய்திகளையெல்லாம் ஒன்றுகச் சேர்த்து அகரவரிசையில் வெளிப்படுத்துவது என்னும் நோக்கத் தோடு தொகுத்துவைக்கப் பெறுகின்றன. நானடைவில் இது வெளிவரும்.

முடிவுரை

இவ்வரிசையில் சமயகுரவர்கள் ஆழ்வார்கள் ஆகியோர் களின் வரலாறுகள் சேர்க்கப் பெறவில்லை. இவர்களுடைய வர லாறுகள் தனிநூலாகப் பலராலும் எழுதப்பட்டுள்ளமையின் எல்லோரும் நன்குணர்வர் என்பதே காரணமாகும். அகப்படும் வரலாறுகளை உடலுக்குடன் உருவாக்குவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தபடியால், இவைகளைக் காலமுறைப் படி ஒழுங்கு படுத்தவில்லை. புதிதாகக் கிடைத்துவரும் குறிப் புக்களோடு இனிமேல் இவைகளைக் காலமுறைப்படி ஒழுங்கு செய்து வெளிப்படுத்தக்கூடும். இவ்வரலாற்று நூல்வரிசையை ஏற்றுப் பாராட்டும் அன்பர்கள் எல்லோருக்கும் எனது நன்றி யறிதலை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பைந்தமிழ்ப் பண்ணை,
கருப்பக்குளம்,
தஞ்சைமாவட்டம்.
25-10-56.

சு. அ. இராமசாமிப் புலவர்.

உள்ளுறை

		பக்கம்
க.	சம்பிகாவலி	1
உ.	சிதம்பரம் ஞானப்பிரகாசர்	5
ஊ.	முத்தமிழ்க்கவி வீராசாமி முதலியார்	7
சு.	வீரபத்திரப் புலவர்	9
எ.	கார்மேகக் கவிஞர்	15
சு.	ஆத்மநாத தேசிகர்	20
ஏ.	அழகுமுத்துப் புலவர்	22
அ.	மதுரகவி பாரதியார்	27
கூ.	கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள்	28
கo.	சோணைசல பாரதியார்	38
கக.	கவிருஞ்சை பாரதியார்	41
கஉ.	மதுரைச் சபாபதி முதலியார்	49
கஊ.	முத்துச்சாமி அய்யர்	52
கசு.	சிதம்பர பாரதியார்	54
கஎ.	பிச்சை இபுராகிம் புலவர்	56
கஏ.	சாது நாராயண தேசிகர்	61
கஅ.	பொன்னையா முதலியார்	65
கஆ.	ஆ. முத்துக்கும்பி பிள்ளை	66
கஈ.	து. அ. கோபிநாத நாயர்	71
உo.	வீரைசவக் கணேசனைப் கவிராயர்	78
உக.	ஆறுமுக அடிகள்	81
உஉ.	பிச்சையா நாவலர்	83
உஊ.	ஸ்ரீகப்பையா ஞானதேசிகர்	88
உசு.	திரு. வி. உலகநாத முதலியார்	93
உஎ.	பொன்னம்பல் சிவம்	99
உஏ.	வி. கு. கடராசன்	104
உஅ.	சிவபாதசுந்தரம்	108
உஆ.	பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்	112
உஈ.	வையாபுரிப் பிள்ளை	117
ஊo.	வரத கஞ்சைய பிள்ளை	127
	பதினைந்து புத்தகங்களிலும் வெளிவந்துள்ள 380 புலவர் பெருமக்களின் பெயர் அகராவரிசை	145

தமிழ்ப் புலவர் வரிசை

[பதினைந்தாம் புத்தகம்]

6. நம்பிகாளி

தோற்றம்

தொண்டைமண்டலத்திலே வல்லம் என்னும் ஊரிலே இடையர் குலத்தில் நம்பிகாளி என்னும் புலவர் பல நூற் றாண்டுகளுக்கு முன்பு தோன்றினர்.

கல்வி

இவர் கல்வியைத் தக்கவர்களிடத்திலே நன்கு கற்றுச் சிறந்த புலமைபெற்று விளங்கியதுடன் வாக்குப் பலிதம் உள்ளவராகவும் இருந்தார். தமது வாக்கால் ஒன்றினை ஆக்கவும், அழிக்கவும் வல்லவர். இவர் பல நாடுகட்குஞ் சென்று செல்வர்களிடத்திலே நன்கொடைபெற்று வாழ்க்கை நடத்துதலையே தமது தொழிலாகக் கொண் டிருந்தார்.

தம்மையே விற்றுப் பரிசளித்தல்

நம்பிகாளி காலத்திலே தொண்டைமண்டலத்தில் நெற்குன்றவாண முதலியார் சிறந்த வள்ளலாகத் திகழ்ந் திருந்தார். இவர் வேண்டுவார் வேண்டுவதை இல்லையென் னுமல் வழங்குவார். தம்மிடம் வருபவர்கள் வாய்திறந்து

கேட்பதற்கு நாணினால் எழுதிக் காட்டட்டும் என்னும் எண்ணமுடையவராய்த் தம் வீட்டு முற்றத்திலே மணலைக் கொட்டிப் பரப்பியிருந்தார். வருகிற புலவர்கள் வாய் திறந்து கேட்பதற்கு நாணினால் தமது விருப்பத்தை அம் மணலிலே எழுதிக் காட்டித் தமக்கு வேண்டியதைப் பெற் றுச் செல்வர். இவ் வள்ளலின் செயலைத் தொண்டை மண்டல சதகத்தார் தமது சதகத்தில்,

"உணலைப் பகும்பொன் முதலான வற்றை உதவிப்பின்னும்
நுணலைச்சை உள்ளவர் கேட்கவும் கூசுவர் கொல்லெனவே
எணலைக் கருதி எழுதிவைப் பீரென இன்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள் ளான்தொண்டை மண்டலமே."

என்று பாடியுள்ளனர். நம்பிகாளி நெற்குன்றவாணரின் வள்ளன்மையை நன்கு அறிந்திருந்தபடியால் இவரிடம் பரிசு பெற்றுச் செல்லலாம் என்று எண்ணி வந்தார். புலவர் வந்த சமயத்தில் வள்ளலிடம் பொருள் இல்லை. தம்மை ஒருவனுக்கு விலைபேசி விற்று அதனால் கிடைத்த பொருளை நம்பிகாளிக்குக் கொடுத்தனுப்பினர். தாம் விலையான செய்தியைத் தம்மனைவிக்கு,

"கற்குங் கவிவல்லே யாதவர் கோன்நம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன் றமுமம் மரபும்எக் காளும் நிலவிற்கவே."

என்னுஞ் செய்யுளை எழுதியனுப்பினர். இச் செய்தி,

"பன்னுந் தமிழ்க்கவன் மாமனை தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்தத்தன் பேர்நிறுத்த
மன்னுந் தமிழும் உரைத்தான் அவன்தொண்டை மண்டலமே."

என்னுந் தொண்டைமண்டல சதகப் பாடலாலும் உறுதி யாகின்றது.

பட்டமரந் தளைக்கப்பாடுதல்

நம்பிகாளி கொங்கு மண்டலத்தில் உள்ள நெடுவூர் என்னும் ஊருக்குச் சென்றார். இவரோடு வைதேட்டுக் காரர்களும் மற்றும் பலரும் சென்றனர். நம்பிகாளி மிகுந்த வாக்குவன்மை உடையவர் என்பதை நெடுவூரில் இருந்த அந்தணர்கள் கேள்வியுற்றார்கள். ஆயினும் அவர்கள் நம்பவில்லை. அழுக்காறு கொண்டு புலவரையும் தமிழ்மொழியையும் பலவாறு இகழ்ந்துரைத்தார்கள். "தமிழ்மொழியும் தமிழ்ச்செய்யுட்களும் தெய்வத் தன்மை நிரம்பப் பெற்றிருப்பது உண்மையாயின் பட்டுப் போன இம்மரம் தளைத் தோங்குமாறு ஒரு செய்யுள் பாடும். பாட்டினால் பட்டமரந் தளிர்த்துவிடுமானால் தமிழ்மொழியையும் உங்களையும் சிறப்புடன் போற்று கிறோம்," என்றார்கள். நம்பிகாளி அந்த அந்தணர்களை ஒருபொருட்படுத்த வில்லையாயினும் மாணவர்கள் அந்த அந்தணர்களுடைய ஆணவத்தை யடக்கித் தமிழ்மொழி யின் சிறப்பை நிலைநாட்ட வேண்டும் என்று மிகவும் வேண்டிக் கொண்டார்கள். அவ்வளவில் நம்பிகாளிப்புலவர்,

"தெய்வத் தமிழென்னும் செம்மொழியும் அம்மொழிசேர்
செய்விப்பர் தேவ ரெனல்தேறத்—தெய்வம்
சுரந்தளிக்கும் மாநெடுவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க வின்று வளர்த்து."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். அவ்வளவில் பட்டுப் போய் அடுப்பெரித்தற்குத் தகுதியாகக் காய்ந்துநின்ற மரம் பசுமையாய்த் தளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலுங்கியது. இதனைக் கண்ட அந்தணர்கள் மிகுந்த அச்சமடைந்தார்கள். இப் புலவனிடம் குறும்புகள் செய் வோமாயின் அழிந்தொழிவது திண்ணம் என்று உணர்ந் தார்கள். நம்பிகாளியைப் பலவாறு புகழ்ந்து பாராட்டிப்

போற்றி மகிழ்ந்தார்கள். இச்செய்தி கொங்குமண்டல சதகத்தில்,

"பரந்த கடலுல கெல்லாம் அறியப் பரமசிவன்
நிரந்தர மாயருள் சண்முக வேலனன் னேயத்தினால்
புரந்தரன் போற்றும் நெடுவூரிற் காளிப் புலவன்பட்ட
மரந்தழை யக்கவி பாடிய துங்கொங்கு மண்டலமே."

என்று கூறப்பட்டுள்ளது.

தனிப்பாடல்கள் நூல்கள் முதலியன

அருட்புலவராகிய இவரால் பாடப்பெற்ற தனிப் பாடல்கள் பல. நூல் யாதுஞ் செய்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. காலப் போக்கில் மேலுஞ் சில தனிப் பாடல்கள் அகப்படலாம்.

இவர் பெருமை

அருள்பெற்ற அறிஞராகிய இவரிடத்தில் அக்காலத்தினர் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். பெரும் வள்ளலாகவும் புலவராகவும் விளங்கியிருந்த நெற்குன்றவாண முதலியார் தம்மையே விற்று இவருக்குப் பொருள் வழங்கினார் எனின், இவருடைய பெருமையைப்பற்றிக் கூறவேண்டுமோ? இவர் காளிதேவியை வழிபட்டு அத் தேவியின் திருவருள் பெற்றபடியினால்தான் வாக்குப் பலிதமுள்ளவராக விளங்கினர் என்று சிலர் கூறுப. காளி என்பது காளிதேவியின் அருள்பெற்றபடியினால் அமைந்ததாகவும் இருக்கலாம்.

உ. சிதம்பரம் ஞானப்பிரகாசர்

தோற்றம்

சூழமண்டலத்தில் உள்ள வீணைகானபுரத்திலே சாலி வாடி நகரத்திலே, காக்காத்த வேளாளருள்ளே முடி தொட்ட வேளாளராகிய பாண்டி மழவர் குலத்திலே நாலூறு ஆண்டுகட்கு முன்னே ஞானப்பிரகாசர் தோன்றினர். இவர் இளமைப் பருவத்தில் தானே கல்வியை நன்கு கற்றுத்தேறி அறிஞர்களுடைய கூட்டுறவை மிகுதியாக மேற்கொண்டு நல்வழியிலே நடந்து கொண்டிருந்தார்.

சிதம்பரத்தை அடைதல்

பிறகு தமது நாட்டைவிட்டுப் புறப்பட்டுத் தென் தமிழ் நாட்டிற்கு வந்தார். திருப்புகலூரையடைந்து அங்கிருந்த ஆதிசைவராகிய பெரியண்ண சுவாமிக் குருக்கள் என்பவரிடத்திலே தீட்சை முதலியன பெற்றுக்கொண்டு திருத்தில்லையை அடைந்தார். "தீர்த்தம் என்பது சிவ கங்கையே" என்று புகழ்ந்தோதப்பெற்ற சிவகங்கையிலே மூழ்கிக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டு அவ்விடத்தில் சிலகாலந் தங்கியிருந்தார்.

வடமொழி கேட்டல்

பிறகு தில்லையில் இருந்து கௌட தேசத்தை யடைந்தார். அங்கே வடமொழிப் புலமைவாய்ந்த அந்தணத் துறவி யொருவர் மாணவர் பலருக்குத் தருக்க, மீமாம்ச, வேதாந்த நூல்களைக் கற்பித்துக்கொண்டிருந்தார். அவர் மாணவர்களுக்கு அவைகளைக் கற்பிக்குந்தோறும் அவற்றை ஞானப்பிரகாசரும் கருத்தூன்றிக்கேட்டு வருவாராயினர். ஒருகான் அவ்வாசிரியர் இவரைப் பார்த்து, "உம்முடைய பெயர் யாது? நாடு யாது? எண்டுக் கற்பிப்பன உமக்கு

விளங்குகின்றனவா?" என்று கேட்டார். இவர், "நன்றாக விளங்குகின்றது" என்று மறுமொழி கூறியதுடன் அவர் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்தவாறு விடையளித்தார். இவருடைய ஆற்றலைக் கண்டு அவ்வாசிரியர் மிகுந்த விருப்பமடைந்தார். இவரைத் தம் மாணவர் கூட்டத்திற்குத் தலைவராக்கி மேலுங் கற்பித்து வருவாராயினர். இவர் ஓராண்டுக்குள்ளே எல்லாவற்றையும் நன்கு கற்றுச் சிறந்த புலமையடைந்தார். ஆசிரியர் இவரைப் பார்த்து, "நீர் நூல்கள் செய்வதற்கு வல்லவராயினீர்," என்று சொன்னார். இவர் ஆசிரியரிடத்திலே விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

துறவியாதல்

புறப்பட்ட இவர் திருக்கைலாய பரம்பரையில் உள்ள திருவண்ணாமலை யாதீனத்தை யடைந்தார். அப்பொழுது அங்கே எழுந்தருளியிருந்த ஞானதேசிகரிடத்திலே துறவு பெற்றுச் சிவாகமப் பொருள்களை யெல்லாம் நன்கு அறிந்தார்.

நூல்களும் உரையும் இயற்றல்

பிறகு இவர் பௌட்கராகமவிருத்தி, சிவஞான போதவிருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக சாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி டான்பிய சங்கிரகம் என்பவைகளை வடமொழியில் இயற்றினர். சிவஞான சித்தியாருக்கு ஓர் உரை செய்தார். அந்த உரையின் முகப்பில்,

"சிவமுற நமக்கு முந்திச் சுத்திவத் திரானைச் சிந்தித்(து)
உவமையில் சிவனெனப் பிள்ளா உமைகுரு குலங்கண் மற்றென்
இவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறும் உரை உரைப்பாம் முன்னுரை நலங்கொளார்க்கே."

என்னும் செய்யுளைச் செய்துள்ளார்.

இறுதி

பிறகு ஞானப்பிரகாசர் திருத்தில்லையை அடைந்து கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டு அங்கிருந்தார். ஒருநாள் ஞானப்பிரகாசருடைய அடியவர் ஒருவர் தாமிருக்கும் இடத்திற்குப் பக்கத்திலே ஓரிடத்தில் நிலத்தில் பெருந்தானைப் பொருள் இருப்பதைக் கண்டு அச் செய்தியை ஞானப்பிரகாசருக்குத் தெரிவித்தனர். ஞானப் பிரகாசர் அப் பொருளை எடுத்து அவ்விடத்திலே ஒரு குளத்தை வெட்டுவித்தனர். அக் குளம் இன்றும் ஞானப் பிரகாசம் என்னும் பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கிறது. அக் குளத்தின் கரையிலே மடம் ஒன்றை அமைத்து அதில் தங்கியிருந்த இவர் ஒரு பங்குனித் திங்கள் பூச நாளிலே இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

ங. முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்

தோற்றம்

முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார், அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் பெண் வயிற்றில் பிறந்தவர். இவர் செங்கற்பட்டுக்கு அண்மையில் உள்ள பொன்விளைந்த களத்தூரிலே நம்மாழ்வாருடைய திருவருளாலே பிறந்தார். இவர் பிறந்த சில காலத்திற்குள் தந்தையை இழந்தார். அந்நாளில் கலகம் ஒன்று உண்டாயிற்று. அக் கலகத்திற்கு அஞ்சிய இவருடைய தாய் இவரைத் தூக்கிக் கொண்டு ஊரை விட்டுத் தென்திசை நோக்கி ஓடினள்.

திருவருள்

குழந்தையோடு நோக்கிச் சென்றமாது, திருக்கண்ணமங்கை என்னும் திருமால் திருப்பதியின் அண்மையில்

உள்ள ஓர் ஆற்றினது நடுவே குடிசை போட்டுக்கொண்டு தங்கியிருந்தனள். அவ்வாற்றில் திடீரென்று பெருவெள்ளம் வந்தது. வெள்ளத்தைக் கண்ட தாய் குழந்தையை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டனள். குழந்தையை அப்பதியில் எழுந்தருளிய அபிடேகவல்லித்தாய் பால் கொடுத்து வளர்த்தனள். அத் தாயாருடைய திருவருளாலே இவர் முத்தமிழையும் இளமையிலேயே ஐயந்திரிபற அறிந்தார். உடனே அத் தாயார்மீது, "திருக்கண்ணமங்கைமாலே" என்னும் நூலை இயற்றினர். மேலும் சிலகாலம் அப் பதியிலேயே தங்கியிருந்தார்.

தொண்டை நாடடைதல்

பிறகு இவர் தொண்டைநாட்டை யடைந்து வசித்திருந்தார். ஒருமுறை காஞ்சிபுரத்திற்குச் சென்று அப்பதியில் எழுந்தருளிய வரதராசப்பெருமானையும் பெருந்தேவித் தாயாரையும் போற்றிப் பணிந்தார். இருவர்மீதும் பஞ்சரத்தினம் என்னும் நூலைப் பாடினர். இவருடைய கழுத்தில் திருமாலினது திருமாலே தானே விழுந்தது. வைணவர்கள் அதைக் கண்டு மிகுந்த வியப்படைந்தார்கள். இவருக்குப் பரிவட்டம் முதலியன சாத்திச் சிறப்புச் செய்தார்கள். மேலும் அவ்விடமே தங்கியிருக்கச் செய்தனர்.

இயற்றிய நூல்கள்

1. திருக்கண்ணமங்கைமாலை
2. வரதராசர் பஞ்சரத்தினம்
3. பாலுகர்க் கலம்பகம்
4. செய்யூர்ப் பிள்ளைத்தமிழ்
5. திருவேங்கடக் கலம்பகம்.

முதலியன இவருடைய நூல்கள். இவர் தனிப்பாடல்களும் பலசெய்துள்ளார். இவருடைய பாட்டுகளாகிய அந்த

கக் கவி வீரராகவ முதலியார் பாடல்களும் இவருடைய பாடல்களும் மாறுபாடு காணமுடியாதபடி கலந்திருப்பன வாகத் தெரிகிறது. இவர் இயற்றிய திருவேங்கடக் கலம்பகத்தில் இருந்து ஒரு செய்யுளை அடியிற் காண்க.

"மேகந்தவழ் காவேவளர் நாகங்கமழ் பூவே
வேலைக்கெழு திரையேயறல் சாலத்திகழ் கரையே
ஏகும்பட வினமேகழி போகுங்களி யனமே
இளமைச்சிறு கயலேயென துளமிக்கது மயலே
ஆகந்துள வணிவார்தின மாகம்புவி பணிவார்
அணிபொற்றுகி லுடையாருயர் பணிவெற் பினையுடையார்
மாகந்தர வுருவார்வரு மோகங்கெட மருவார்
மனமுந்தெரி யாதேயவர் சினமுந்தெரி யாதே."

ச. வீரபத்திரப் புலவர்

தோற்றம்

தங்கிய புகழ்சேர் கொங்கு மண்டலத்தில் திருச்செங் கோடு என்னும் ஊரில், ஏகாலியர் மரபில் ஏறக்குறைய முந் நூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர் வீரபத்திரப் புலவர் தோன்றினர்.

கல்வி

பழம் பிறப்பின் நல்வினைப் பயனால் கல்வியை நன்கு கற்றுத் தேறிச் சிறந்த புலமையடைந்து விளங்கினர். பல ஊர்களுக்குஞ் சென்று தாம் பெற்ற கல்வியறிவை எல் லோருக்கும் பயன்படுமாறு அறிவுரைகள் கூறிப் போதித் தார்.

ஆனூர்ச் சர்க்கரையைக் காணுதல்

நொய்யலாற்றுக் கரையை அடுத்து ஆனூர் என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது. அவ் வூரிலே அந் நாளில் சர்க்

கரை மன்னருடையார் என்னும் செல்வர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் வள்ளன்மையை மேற்கொண்டிருந்தபடியினல் அவருடைய பேரும் புகழும் எல்லாவிடங்களிலும் பரவியிருந்தன. வீரபத்திரப் புலவர் ஆனூர்ச் சர்க்கரையைக் காணவிரும்பினர். புறப்பட்டு ஆனூரை யடைந்து சர்க்கரையைக் கண்டார். சர்க்கரை தம் பெயருக்கேற்பப் புலவரை இனிது போற்றினர். இருவரும் பல செய்திகளைக் குறித்து நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருந்தார்கள். பிறகு உள்ளே சென்று புலவருக்கு உணவிடும் பொருட்டு ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார் சர்க்கரை.

கோணன்வேலை

சர்க்கரைமன்னருடையார் உள்ளே இருக்கும்போது புலவர் வெளியே அமர்ந்திருந்தார். அப்பொழுது கோளன் ஒருவன் உள்ளே இருந்து வெளியே வந்தான். அவன் மெதுவாகப் புலவரிடம்போய், "ஐயா! உங்களுக்கு உணவு படைப்பதற்கு இன்னும் சிறிது நேரம் ஆகும் என்று எண்ணுகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான். புலவர் இந்தக் கோளுரையைக் கேட்டார். அவருடைய மனம் பலவாறு எண்ணத் தொடங்கிவிட்டது. உள்ளே சர்க்கரைமன்னருடையார் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாரோ அல்லது நாம் வண்ணமாக இருப்பதால் வெளியே வைத்துச் சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. உள்ளே சென்றவர் வெகுநேரமாக வெளியே வராமலிருப்பதற்குக் காரணம் என்ன என்று எண்ணமிட்டார். அவருடைய உள்ளத்திலே வருத்தமும் சினமும் உண்டாயின. மதிப்பற்ற இடத்தில் புகுப்பதும், வசிப்பதும் இழிவு என்று முடிவு செய்தார். அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியே சென்றார்.

புலவர் மாற்றம்

சர்க்கரைமன்றுடியார் உணவுபடைத்த பின் புலவரை யழைத்தற்கு வெளியே வந்து பார்த்தார். புலவரைக் காணவில்லை; தேடினர். புலவர் புறப்பட்டுச் செல்வதாகச் செய்தியறிந்தார்; விரைந்து ஓடினர்; சென்றுகொண்டிருக்கும் புலவரைக் கண்டார். அவரைப் பார்த்து, "ஐயா! என் இவ்வாறு புறப்பட்டுவிட்டீர்கள்? என்ன குறை நேர்ந்தது. என்னுடைய பிழையைப் பொறுத்துத் தெரிவியுங்கள்," என்று மிகவும் வருந்திக் கேட்டார். புலவர் மன்றுடையாரைப் பார்த்து, 'எதிர்த்தோர்க்கு மிண்டன்; வித்துவான்களுக்குத் தொண்டன்,' என்னும் விருதை உங்களுடைய முன்னோர்கள் அடைந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு உங்களிடத்திற்கு வந்தேன். பேசிக்கொண்டிருந்துவிட்டு உள்ளே சென்ற நீங்கள் உணவருந்திக்கொண்டிருப்பதாக உங்களுடைய வேலைக்காரர்கள் மூலமாக அறிந்தேன். வந்த விருந்தினரைப் போற்றி உணவு ஊட்டிய பிறகு தாம் உண்ணவேண்டியது நல்ல குடிப் பிறந்தவர்களின் கடமை. இத்தகையோர்கள் தாம் விண்ணுலகப் பதவியைப் பெறுவார்கள். 'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு,' என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியிருப்பதைத் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா? அன்றியும், "உண்ணுங்கள் உண்ணுங்கள்," என்று சொல்லிப் போற்றுதவர்களுடைய இல்லத்திலே உண்ணலாமா? இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் உங்களுடைய இல்லத்தில் உண்பது தக்கது அன்று என்று எண்ணித் திரும்பி விட்டேன். ஒரு புலவன் ஒருவரிடஞ் செல்வது செல்லப்பெற்ற இல்லத்தாளுக்குச் சிறப்பை விளைப்பதற்காம். இதற்கு முன் புலவர்கள் புகழ்ந்து பாடியிராவிடில் நான் என் உங்களைத் தேடி

வருகிறேன்? வரும் வழியில் எத்தனை லட்சம் பேர் இருக்கிறார்கள்? அவர்களிடத்திற்கெல்லாம் சென்று தங்காமல் உங்களைத் தேடி வந்து உங்களுடைய தமிழார் வத்தை முன்னிட்டுத்தானே?" என்று முகஞ் சோர்ந்து மொழிந்தனர்.

சர்க்கரையார் சமாதானம் கூறுதல்

புலவர் புகன்றதைக் கேட்ட சர்க்கரையார் புலவரைப் பார்த்து, "ஐயா புலவர் திலகமே! புலவர்களின் குலம் பிறப்பு முதலியவைகளைப்பற்றி உசாவுதல் முறைமையல்லவே. முனிவர்களின் தவஞானங்களைத்தானே மக்கள் தெரிந்துகொள்கிறார்கள். புலவர்கள் தமது அறிவுரைகளாலும் நூல்களாலும் உலகத்திற்கு உதவி செய்து பயன் விளைப்பவர்கள் என்பதை நான் நன்றாக உணர்ந்துள்ளேன். நான் தங்களைச் சிறிதும் இழித்துரைக்கவில்லை. இதனை எவ்வாறு வேண்டுமாயினும் நான் மெய்ப்பிப்பதற்குக் காத்திருக்கிறேன்," என்று கூறினர்.

காய்ந்த நெய்யிற் கைவிடுதல்

இவ்வாறு சர்க்கரையார் இயம்பிய உரைகளைக் கேட்ட புலவர், "நீங்கள் என்னை இழித்துரைக்கவில்லை யென்பது உண்மையாயின் நெய்யை நன்றாகக் கொதிக்கவைத்து அதிலே கையைத் தோய்த்துச் சத்தியஞ் செய்யுங்கள்," என்று கூறினர். உடனே சர்க்கரையார் நெய்யை ஓர் ஏனத்தில் நன்றாகக் கொதிக்க வைத்து, "நான் உங்களைச் சிறிதும் இகழவில்லை," என்று உரைத்தனர். கொதித்துக் கொண்டிருந்த நெய் சர்க்கரையார் கைக்கு எத்தகைய ஊறுபாட்டையும் செய்யாதிருத்தலைக் கண்ட புலவர் ஒரு வாறு மனநிறைவு கொண்டனர்.

சர்க்கரை எச்சில்வாய் கழுவுதல்

பிறகு இருவரும் ஒன்றுக அமர்ந்து உணவருந்தினர். மேலும் புலவர் சர்க்கரையாரைப் பார்த்து, "ஐயா சர்க்கரையாரே! நீங்கள் சத்தியஞ் செய்தும் என்னுடைய மனதிற்கு நன்றுக நிறைவுண்டாகவில்லை. எனது எச்சில் வாயையும் கழுவிவிடுவீராயின் முற்றுந் தெளிவேன்," என்று மொழிந்தனர். சர்க்கரையார் புலவர் உரையைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். புலவருடைய எச்சில் வாயைக் கழுவிச் சுத்தஞ் செய்துவிட்டார்.

காதல் நூல் இயற்றுதல்

சர்க்கரைமன்றாடியாருடைய இச் செயல் புலவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அந்த வள்ளலின்மீது காதல் என்னும் பிரபந்தம் ஒன்றைப் பாடி அரங்கேற்றஞ் செய்தார். சர்க்கரைமன்றாடியார் மிக மகிழ்ந்து புலவருக்குப் பெரும்பரிசில் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

இந் நிகழ்ச்சியை இப் புலவர் தாமியற்றிய காதல் நூலில்,

"தூசார்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க இல்லையென
நேசமுட னேகாய்ந்த நெய்யதனிற் கையை விட்டோன்."

என்று பாடியுள்ளார். மேலும், இப் புலவரோ அல்லது வேறு யாரோ,

"மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—இகழ்ந்தானான்
வையவில்லை என்றுசொல்வி மண்டலமெ லாந்துதிக்க
நெய்யிலே கையைவிட்டான் நேர்ந்து."

என்று இந் நிகழ்ச்சியை அமைத்துப் பாடியுள்ளனர். மேலும் பலர் இந் நிகழ்ச்சியைத் தாம் பாடிய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். பொன்னங்கால் அழுத கவிராயர்

இரகுநாத சேதுபதி சமத்தான தளவாய் அண்ணுமலைப் பிள்ளைமீது,

"சீலகு மான்மணிப் பாய்சுமக் தான்கம்பர்
சிலேகை பாண்டியன் ஏந்திலன்
செல்வமுயர் கச்சியப் பன்உதை பொறுத்தனன்
திகழ்சுட்டி சோமன் ஈந்தான்

தாரிலகு குமணனும் தலைகொடுத் தான்சிவன்
தானுமொரு அதை சென்றான்
சர்க்கரையும் எச்சில்வாய் கழுவினன் காளத்தி
தனதிருகை புற்றில் விட்டான்

பேரிலகு கம்பனும் விரலாழி யீந்தனன்
பெரியவன் பெண் கொடுத்தான்
பிணிமுகத் தோன்கீர னைப்புரக் தான்பேதை
முதுகிலனம் ஒருவ னிட்டான்

பாருலகில் இத்தமிழ்க் குத்தொண்டு செய்தபோர்
பார்க்கில் கணக் கில்லையே
பராசர் பணிகின்ற அண்ணு மலைக்குரிசில்
பாதத்தை வருடி னனே.'

என்று பாடிய செய்யுளிலும் இச் செய்தியைக் குறிப்பிட் டுள்ளார்.

இறுதி

இப் புலவர் சர்க்கரைமன்றுடியார்மீது பாடிய காதல் என்னும் நூலைத் தவிர வேறு நூல் இயற்றியதாகத் தெரிய வில்லை. இவ் வரலாற்று நிகழ்ச்சியைக் கார்மேகக் கவிஞர் தாம் பாடிய கொங்குமண்டல சதகத்தில்,

"முகஞ்சோர்ந் தகன்றிடும் எகாலிப் பாவலன் முன்னின்றே
இகழ்ந்தேதன் இலையைய என்று சுடுசெயினிற் கையைவிட்
டெகந்தே புணுமெச்சில் வாயைக் கழுவி உவப்பியற்றி
மிகழ்ந்தே புகழ்பெறு சர்க்கரை யுங்கொங்கு மண்டலமே."

என்று பாடியுள்ளார். வீரபத்திரப் புலவரைப்பற்றிய பிற செய்திகள் விளக்கமாகவில்லை.

ஏ. கார்மேகக் கவிஞர்

தோற்றம்

கொங்குமண்டலத்திலே விசயமங்கலம் என்னும் ஊரிலே சைன அந்தணகுலத்திலே ஏறக்குறைய இருநூற் றைம்பது யாண்டுகட்கு முன் கார்மேகக் கவிஞர் தோன்றினர். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் சினேந்திரன். இவருடைய தந்தையார் பெயர் பதுமராப அய்யர். இந்தப் பதுமராப அய்யர் அவ் வூரில் எழுந்தருளிய சந்திரப்பிரப தீர்த்தங்கரர் ஆலயத்தில் பூசைசெய்து வரும் வழிமுறை யினர்.

கல்வி

சினேந்திரன் தம்முடைய தந்தையாரிடத்தில் வட மொழி தென்மொழி எனுமிருமொழியையும் நன்கு பயின்றார். இவருடைய கிரகவாற்றல் மிக வியக்கத்தக்கதாக இருந்தது. இருமுறை படித்தல் அல்லது கேட்டலால் எவ்வளவு கடினமான செய்யுட்களும் இவருக்கு மனப்பாட மாகிவிடும். இவர் தாம் படிக்கும் நூல்களில் இருந்து ஐயத்தை வினவுவாரானால் பெரிய அறிஞர்கள் தாம் ஆராய்ச்சி செய்து விடையளிக்குமாறு இருக்கும். இவருடைய அறிவுக்கூர்மையைக் கண்டவர்களனைவரும் வியந்து கொண் டாடினர்.

செய்யுள் இயற்றல்

சினேந்திரர் கல்வி கற்றுச் சிறப்புடன் இருக்கும் போது தெருங்கிய பங்காளிகள் வாழ்ந்திருந்த பூந்துறை என்னும் ஊருக்குச் சென்றார். சிலர் இவருடைய கல்வித் திறமையை ஆராய்ந்துபார்க்க எண்ணினர். சைன சமயச் சார்பாக ஒரு வெண்பா இயற்றுமாறு கூறினர். உடனே இவர்,

"பச்சை மணிவடிவாய்ப் பார்விசுவ சேனனகம்
மெச்சு மகவாய் வெளிவந்த—உச்சிதனாம்
பாரிச நாதன் பதநினைந்தோர் வாழ்வரே
சீரிசைநூல் இன்பஞ் சிறந்து."

என்று மனப்பாடஞ்செய்த பாடலைக் கூறுவதுபோல் மிகு விரைவாகக் கூறினார். இதிற் சமய உணர்ச்சி மிகப் பொதிந்துகிடத்தலைக் கண்டு அங்குள்ளவர்கள் மனங்களித்தார்கள். சைவம் முதலிய ஏனைய சமயநூல் ஆராய்ச்சியை அறிய விரும்பி முருகக்கடவுள்மீது ஒரு செய்யுள் பாடுமாறு கூறினர். இவர் உடனே,

"ஆறு விழியிலுறும் ஆறுபொறி நீர்க்கரையில்
ஆறுமக வாயொன்றாய் அன்னைசத்தி—வீறுகொடு
ஆறுபடை வீடுற் றசுரரறத் தேவர்தொழும்
ஆறுமுகன் நம்மையளிப் பான்."

என்று பாடினார். மிகு இளமைக்காலத்திலேயே பொருட்செறிவான செய்யுட்களை விரைவிற் கூறும் வன்மையோடு சமயப் பொறுமை இருத்தலையுங் கண்டு மனமகிழ்ந்தார்கள்.

சேதுநாடு சேறல்

பிறகு சினேந்திரர் தம்முடைய தாயைப் பெற்றவர்கள் வாழ்ந்திருக்கும் சேதுநாட்டில் உள்ள அனுமந்தக்குடிக்குச் சென்றார். ஆருகத சமயநூல்களை முறையோடு கற்றுத் தேறினார். பிறகு பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு முதலிவைகளுக்குச் சென்றார். அங்குச் சைவம் முதலிய மற்றைச் சமயநூல்களையும் கருவி நூல்களையும் நன்றாகக் கற்றறிந்தார்.

கார்மேகக் கவிஞர்

தாம் கற்றவைகளை ஆங்காங்கு எடுத்துஉரைத்துஉரைத்துச் சொன்மாரியும் பாமாரியும் பொழிந்தார். இவருடைய

கல்வித் திறத்தைக் கண்ட அறிஞர்கள் இவரைக் கார்மேகம் என்று புகழ்ந்துரைத்துக் கொண்டாடினர். அதுமுதல் இவருடைய பெயர் கார்மேகக் கவிஞர் என்றே எங்கும் வழங்கலாயிற்று.

திருமணம்

இளமைக் காலத்திலேயே செய்யுள் இயற்றல், பொருள் கூறல், சொற்பொழிவு செய்தல் ஆகியவைகளில் திறமை பெற்றுப் பல இடங்களினும் வாழ்ந்திருந்த இவர் மீண்டும் தமது ஊராகிய விசயமங்கலத்தை அடைந்தார். அப்போது இவருக்கு அகவை இருபது நிரம்பியது. இவருடைய பெற்றோர்கள் இவருக்குத் திருமணஞ் செய்துவைக்க எண்ணினர். மைசூரைச் சார்ந்த கொல்லாபுரத்தில் சாந்தம் என்னும் பெண்ணைத் திருமணம் புரிந்தார். மாமனர் இல்லத்திற் சிலகாலம் தங்கியிருக்க நேர்ந்தது. பிறகு கொல்லாபுரத்தை விட்டுப் புறப்பட்டுத் தம்மூரான விசயமங்கலத்திற்கு வந்துசேர்ந்தார்.

நூல் இயற்றுதல்

நாம் பிறந்த இக் கொங்குமண்டலத்தின் பெருமைகளெல்லாம் நன்கு விளங்கி நூல் ஒன்று செய்யவேண்டும் என்று இவர் எண்ணினர். அந் நூலைச் செய்தற்பொருட்டுக் கொங்குநாட்டுப் பெருமைகளைக் காட்டுஞ் செய்திகளெல்லாம் தொகுத்து வைத்துக்கொண்டதன்றிப் பல இடமும் உசாவி நாட்டிலுள்ள பழைய வரலாறு முதலிய வைகளையும் அறிந்துகொண்டார். பிறகு கொங்கு மண்டல சதகம் என்னும் நூலைப் பாடி முடித்து அரங்கேற்றஞ் செய்தார். நூலைக் கேட்டவர்கள் மகிழ்ந்து பாராட்டிப் பலவாறு சிறப்புச் செய்தார்கள். கொங்கு மண்டல சதகத்தைத் தவிர இவர் வேறு நூல் செய்ததாகத்

தெரியவில்லை. தனிப்பாடல்கள் பலவற்றை அவ்வக் காலங்களில் பாடியுள்ளார்.

தனிப் பாடல்கள்

களவாய் இராமப்பையர் என்பவர் முன்னிலையில் சத்திரியனுக்கும் காஞ்சிதனுக்குஞ் சிலேடையாக,

"முடிவாங்கி வைத்து முதுமங் கலனை
வடிகத்தி யத்த மருவீப்—படிபுகழ்ச்
சத்திரம் வைத்துள்ள தாத்தாவ்ரா மையாகேள்
சத்திரியன் சோஞாலி தன்."

என்னும் வெண்பாவைப் பாடினர். பிறகு ஒரு சமயத்தில் ஓலைச்சுவடிக்கும் ஒணைனுக்கும் சிலேடையாக,

"வரிகள் கடுமையாய் வல்லவனை யுற்று
பெரியதலை கால்கொம்பைப் பெற்று—மருவுதலால்
கோணுமே லுயுத கொப்பணமே லேசுவடி
ஒணைநே ராமென் றுணர்."

என்று பாடினர். ஆனூர்ச் சர்க்கரையைப் புகழ்ந்து,

"நீர்ப்பா சனைகன் னிலந்தியும்
நேரும் சாவு வாழ்வுகளில்
பார்ப்பார்க் களித்தோர் பேறெங்கே
பார்த்தோம் புலவர்க் கிழிபழங்கூம்
வார்ப்பா சேணும் பூமியுள
வரையும் புகழ்ச்சி யோங்குமெனும்
நேர்ப்பாக் கற்றோர்க் குதவுதமிழ்
நேயா ஆனூர்ச் சர்க்கரையே."

என்று பாடினர். வீமணக் கவிராயர் எனைவரைப் ராராட்டி,

"வீமண மாவுசிறு காலமுகா
ழுழுதாது மென்றாட்டுவ
வீமனவி ழாவிளைபூம் பொழில்திகழும்
செங்கோட்டின் மேவிவீர

வீமணவோ வணனருளால் பகைதனறி
கிமிடகவி வினம்பவல்ல
வீமணரா வலனெது சல்லாப
மொழியமுது விரும்பினேனே."

என்று பாடினர்.

வீமணக்கவிராயர்

திருச்செங்கோட்டில் இருந்த வீமணக் கவிராயர் என்பவர் கார்மேகக் கவிஞரைப் பார்க்க வந்தார். அப்போது,

" தனையவிடா மறையொளித்த பேட்டடியில்
சூட்டனந்தன் தலகீ ழாக
வனையவணங் கப்புலவி கீங்குவன
வயல்விசய மங்கை யோக்கு
இனையசத் திரப்பிர நாயகரை
யேத்திமனத் திடரை யெல்லாம
தனையவரு கார்மேகக் கவியாசே
வந்தனன்நின் காண என்றே."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினர்.

வெளியீடு

கார்மேகக் கவிஞரால் இயற்றப்பெற்ற கொங்கு மண்டல சதகம் உரை கதைக் குறிப்பு முதலியவைகளோடு திருச்செங்கோடு தி. அ. முத்துசாமிக் கோனரால் வெளியிடப் பெற்றிருக்கிறது.

55. ஆத்மநாத தேசிகர்

தோற்றம்

சோழவள நாட்டிலே திருத்துறைப்பூண்டிக்கு வடக்கில் உள்ள வேளூர் என்னும் ஊரில் ஆத்மநாததேசிகர் 1650-க்கும் 1728-க்கும் இடைப்பட்ட காலத்திலே வாழ்ந்திருந்தார். இவருடைய குலம் பரம்பரைச் சைவ ஆசாரியர் குலம்.

கல்வி

இவர் தக்க காலத்திலே தக்க அறிஞர்களிடத்திலே இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்த புலமையடைந்து விளங்கியிருந்தார்.

சோழமண்டல சதகம்

வேளூருக்கு அண்மையில் உள்ள சித்தாய்மூர் என்னும் ஊரில் அந்நாளில் அருணைசலவேள் என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அச் செல்வனும் ஆத்மநாத தேசிகரும் ஒருங்கிய நண்பர்களாக விளங்கியிருந்தனர். செல்வன் புலவரைப் பார்த்து நமது சோழமண்டலத்தின் பெருமைகள் நன்கு விளங்குமாறு நூல் ஒன்று செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ஆத்மநாததேசிகர் சோழமண்டலத்தில் வாழ்ந்திருந்த பெரியார்கள் செய்திகளை யெல்லாம் தொகுத்துச் சோழ மண்டல சதகம் என்னும் பெயருடன் நூல் ஒன்று செய்தார். பிறகு பெரிய பாவை ஒன்று கூட்டி அருணைசலவேள் அந்நூலை அரங்கேற்றச்செய்து தேசிகருக்குப் பெரும் பொருள் வழங்கினன். இச் செய்திகள் மேற்படி சதகத்தின் நாற்பத்தாட்டினாலும் சிறப்புப் பாயிரத்தாலும் பெறப்படுகின்றன.

சிறப்புப்பாயிரம்

"கொண்டலங் கரத்தில் வேளாண்
குலத்தில்வக் கதித்த கோமான்
கண்டலம் பொழில்சூழ் சித்தைக்
கனவரு ணைச லேந்திரன்
அண்டலர் பரவுக் காவை
ஆத்மநா தன்செய் சோழ
மண்டல சதகங் கொண்டு
வண்புகழ் நிறுத்தி னனே."

நூலுவது பாட்டு

"சுத்த குலசோ ழியருமுடி
சூட்டுங் காணி யாளர்களும்
கத்த ரெனவே வரவழைத்துக்
கலிக்குக் கனக மழைபொழிந்தே
சித்த ரெனும்பொன் வைத்தவர்ச்சித்
திதியிற் சதகம் அரங்கேற
வைத்த அருணை சலராயன்
வாழ்வாம் சோழ மண்டலமே."

பொருள்

இச் சதகத்தினுள், சிதம்பரம், திருவாரூர், சிரங்கம் முதலிய பதிகள் பாராட்டப்பெற்றிருப்பினும் தாடு இந்நாட்டில் வாழ்ந்திருந்த நாயன்மார் வள்ளல்கள் முதலியோரும் பாராட்டப் பெற்றிருக்கின்றனர். இந் நூல் பாடப்பெற்றோர் வரலாறு முதலிய குறிப்புக்களுடன் இலக்கண விளக்க பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகரால் 1916-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பெற்றிருக்கிறது.

எ. அழகுமுத்துப் புலவர்

தோற்றம்

சோழவள நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே நாக பட்டினத்திலே ஏறக்குறைய இருநூறு வாண்டுகட்கு முன் அழகுமுத்துப் புலவர் தோன்றினர். இவர் தோன்றிய நாள் வைகாசித் திங்கள் விசாகம். தந்தையார் பெயர் அம்பலவாண செட்டியார்; தாயார் பெயர் சிவகாமசுந்தரி அம்மையார். இவரோடு நால்வர் உடன்பிறந்தார் தோன்றினர்.

தந்தையார்

தந்தையாராகிய அம்பலவாண செட்டியார் நாகையில் உள்ள முருகக்கடவுள் திருக்கோயில் ஒன்றில் அறுவல் பார்த்துக்கொண்டிருந்தார். எக்காரணம் பற்றியோ அம்பலவாண செட்டியார் தம் புதல்வர் அழகுமுத்தவுக்கு நீண்டநாள் கல்விப்பயிற்சி பளிக்காமல் இருந்துவிட்டார்.

முருகக்கடவுளிடம் அன்பு

அழகுமுத்து கல்வியறிவைப் பெறுவிடினும் முருகக் கடவுளிடத்திலே பேரன்புடையவராக இருந்தார். எப் பொழுதும் ஆறெழுத்தருமறையை எண்ணி முருகனை வழி பட்டுக்கொண்டிருந்தார். இடைவிடாமல் முருகக் கடவுளுடைய திருமுன்னரே அமர்ந்திருந்தார். சிலகாலங் களுக்குப் பின் இவருடைய தந்தையார் காலமானார். தந்தையார் பார்த்துவந்த வேலையை இவர் பார்க்குமாறு தருமத்தலைவர் சாற்றினர். அழகுமுத்தவும் அவ்வாறே பார்க்கலானார். இவரிடத்தில் தெய்வீகத்தன்மைகள் சில அடிக்கடி காணப்படலாயின. இதனைக் கண்டவர்கள் இவரிடத்தில் அச்சமும் அன்பும் கொண்டு ஒழுகலாயினர். இரவில் முருகக்கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவை

பண்டி வேறு எதனையும் உண்ணவிரதத்தையும் இவர் மேற் கொண்டிருந்தார்.

முருகன் திருவருள்

ஒருநாள் இரவிற் பனிமிகுதியாகப் பெய்து கொண்டிருந் தது. அதனல் கனாப்புற்ற இவர் குளிர்தாக்காத இடமாகப் பார்த்துச் சென்று ஊர்திகள் (வாகனங்கள்) வைக்கப்பட் டிருந்த இடத்தில் படுத்து நன்கு உறங்கிவிட்டார். கள்ளிரவு வழிபாடு முடிந்தபின்னர் குருக்கள் முதலாயினோர் இவரைக் கூப்பிட்டுப் பார்த்தனர். இவர் பாதும் மறுமொழி கொடாமற் போகவே வீட்டிற்குப் போய்விட்டார் போலும் என்று எண்ணியவர்களாய்க் கோயிலைத் திருக்காப்பிட்டுக் கொண்டு தத்தம் இருப்பிடங்கட்குச் சென்று விட்டனர். வெகுநேரம் கழித்து அழகுமுத்தர் விழித்துக்கொண்டார். கோயிலைப் பூட்டிவிட்டு எல்லோரும் போய்விட்டதை அறிந் தார். இவருக்குப் பசி கோல் மிகுதியாக இருந்தது. "முருகா பசி மிகுதியாக இருக்கிறதே பாது செய்வேன்?" என்று திருமுருகன் திருமுன்பு முறையிட்டுவிட்டுத் திருமுன்பே படுத்துக்கொண்டார். முருகப்பெருமான் அழகுமுத்த வுக்குத் திருவருள் செய்யத் திருவுளம்கொண்டார். அழகு முத்தவுக்கு வழக்கம்போல் உணவு கொடுத்து வரும் கோயிற் குருக்கள் பிள்ளையைப்போல் வடிவங்கொண்டு அழகுமுத்தவுக்குமுன் தோன்றினர். "என்ன அழகு முத்து?" என்று உசாவினர். அழகுமுத்த தாம் உறங்கி விட்ட செய்தியை உரைத்தார். பசி மிகுதியாக இருப்பதால் உணவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருவருள் பெறுதல்

குருக்கள் பிள்ளையைப்போல் வடிவங்கொண்டுவந்த முருகப்பெருமான் உணவும் தண்ணீரும் வழங்கினர். அழகு

முத்து அதனையுண்டு பசித்துன்பமும் பிறவித்துன்பமும் நீங்கப்பெற்றார். அழகுமுத்துவின் உள்ளம் மிகுந்த களிப்பினால் பூரிப்படைந்திருந்தது.

புலமை பெறுதல்

முருகக்கடவுள் அழகுமுத்துவைப் பார்த்து, "ஏ அழகுமுத்து! ஏதாவது பாட்டுப்பாடுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். அழகுமுத்து மானிடச்சட்டை தாங்கியுள்ள அறுமுகப்பரமனை நோக்கி, "ஐய! கல்வியறிவற்ற எளியேன் எக்கடவுளைக் குறித்து எவ்வாறு பாடுவேன்?" என்றார். உடனே ஐயராக வந்த மெய்யர், ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளுந் தோன்ற மயிலூர்தியின் மீது காட்சி கொடுத்தார். "அன்பனே! நான் தான் மெய்கண்டவேலவன்; என்னையே குறித்துப்பாடுவாயாக," என்று வரங்கொடுத்து மறைந்தருளினார். அக்கணமே இவருக்குச் செய்யுள் பாடும் ஆற்றல் உண்டாகியது. உடனே முருகன் மீது பாடத் தொடங்கி,

"பொன்பூத்த நூ புரப்பாதமும் புரிபூத்தமார் பீராறுதோள்
முன்பூத்தகணமுன் னான்குடன்முடி யாறுகைவடி வேலுமாய்
கொன்பூத்தஎன் னிதயத்திலே குடிகொண்டருள் கூர்வாய்குற
மின்பூத்தபா காசண்முகா வேலாயுத வேலாயுதா."

என்று தொடங்கி நூறுபாடல்களை மெய்கண்ட வேலாயுத சதகம் என்னும் பெயருடன் பாடி முடித்தார். மறுநாள் காலையில் கோவில் திறக்கப்பட்டது. காளமேகம்போல் இவர் கவிமழை பொழிந்து கொண்டிருப்பதைக் கண்டு எல்லோரும் மிகுந்த வியப்படைந்தனர். இவர் திருவருள் பெற்ற செய்தியை அறிந்தவர்கள் எல்லோரும் இவரைப் பாராட்டிப் போற்றலானார்கள்; இவர் சிறப்பையெங்கும் சொல்லி வாழ்த்தலானார்கள்.

புலவர்

அதுமுதல் யாவரும் இவரை அழகு முத்துப்புலவர் என்று சிறப்பாகக் கூறலானார்கள். ஒருவன் பொதுவான ஒரு மனிதனாக இருப்பானையின் அவனை யாரும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். அவனே அருள்பெற்று விடுவானின் உலகோர் அவனைத் தெய்வமாகவே போற்றி மதித்து வழிபடத் தொடங்கிவிடுவர். இஃது உலக இயற்கை. ஆகவே அருள்பெற்ற அழகுமுத்துப் புலவரைப் பலரும் போற்றுதலைக் குறித்துக் கேட்கவும் வேண்டுமோ?

தாலக்கள் பாடுதல்

பிறகு அழகுமுத்துப் புலவர் முருகக் கடவுளின்மீது அருணகிரிநாதருடைய திருப்புகழ்ப் பாடல்களைப் போன்ற பாடல்கள் பலவற்றைப் பாடினர். காயாரோகணப் பெருமான்மீது காயாரோகணக் குறவஞ்சி என்னும் தாலப் பாடினர்.

இறுதி

முருகக் கடவுளின் திருவருளைப் பெற்றபிறகு அழகு முத்துப் புலவருக்கு மெய்யறிவு மிகுதியாகியது. அடிக்கடி முருகனை எண்ணி அறிதுயிலில் அமர்ந்திருந்தார். திருமணஞ் செய்து கொள்ளாமலே காலங்கழித்தார். சிவப்பதிகட்கு யாத்திரை செய்ய எண்ணி வடநாடு சென்றார். வடநாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிச் சீர்காழியை அடைந்து இறைவழிபாடு செய்து கொண்டிருந்தார். ஒரு மடத்தில் தங்கியிருந்தபோது இவருக்கு முடிவு காலம் நெருங்கியது. உயிர் உடலைவிட்டுச் சென்றது. இதே சமயத்தில் நாகையில் மெய்கண்ட வேலவர் கோயிலில் மாலைக் காலம் நடந்துகொண்டிருக்கும்போது குருக்கள் முதலிய பலர் அழகுமுத்துப் புலவர்

திருக்கோயிலுக்குள் முருகனை நோக்கிச் சென்றதைப் பார்த்தார்கள். ஆனல் அவர் மீண்டு வெளிப்படாமல் மறைந்ததை யுணர்ந்து பெருவியப்படைந்தார்கள். பின்னர் நன்முக உசாவியதில் அதே வேளையில் அழகுமுத்துப் புலவர் சீர்காழியில் இறைவன் திருவடி நீழலிற் கலந்ததையும் உணர்ந்து திருவருளைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்திருந்தார்கள். இவருடைய உடல் சீர்காழியில் சமாதியைத்துக் கோயில் கட்டப்பட்டது.

இவர் இயற்றிய நூல்கள்

க. மெய்கண்ட வேலாயுத சதகம்.
உ. காயாரோகணக் குறவஞ்சி.
ங. மெய்கண்ட வேலாயுத உலா.
ச. திறப்புகழ்.

இவருடைய திறப்புகழ்ப் பாடலில் ஒன்றை அடியிற் காண்க.

"அருணை தந்தருள் பெருமை தந்தருள்
புலமை தந்தருள் நிலைமை தந்தருள்
அழகு தந்தருள் குழவி தந்தருள் அதல்லாதே

அறிவுதந்தருள் பொறுமை தந்தருள்
இளமை தந்தருள் வளமை தந்தருள்
அரசு தந்தருள் தவசு தந்தருள் அதுகூடலா

ஒருமை தந்தருள் மகிமை தந்தருள்
இருபு யங்களில் அகில் வளைந்தவர்
உறவு தந்தருள் உணர்வு தந்தருள் எனவேதான்

உரைசெய் யுந்தொறும் இனிய தொண்டர்கள்
அகம கிழ்ந்திட முகம லர்ந்திட
உதவும் உன்செயல் விதா னங்களை அறியேனே

தருமசந்தர வருண பங்கய
வதன மண்டலம் இலகு குண்டல
தருவெனுந் தொடை யொடுக டம்பணி இருதாளா

சமர புங்கவ விசய சம்பிரம
அமரர் தன்சிறை விடும சஞ்சல
சரவணந் திகழ் கருணை யங்கடல் எறும் வீர

செருமு கன்தொறும் அசுரர் தன்கினை
மடிய வென்றவ னிணைய வம்பினை
நிவனி டம்பெறு கௌரி சுந்தரி தருபால

சிகைய யம்பதி தணிகை யம்பதி
மயிலை யம்பதி கதிரை யம்பதி
திருவி ளங்கிய வரணை யம்பதி முருகோனே

அ. மதுரகவி பாரதியார்

தோற்றம்

இவர் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டிவள நாட்டிலே பெருங்கரை என்னும் ஊரிலே மறையவர் குலத்திலே தோன்றினர். இவருக்கு இடப் பெற்ற பிள்ளைப்பெயர் கணபதி சுப்பையர்.

மதுரகவியாதல்

பிறகு கணபதி சுப்பையர் மதுரைமா நகரையடைந்து அங்கயற்கண்ணியையும் சொக்கலிங்கப் பெருமானையும் போற்றி வழிபட்டுக்கொண்டு அவ்விடத்திலேயே தங்கி யிருந்தார். அங்கயற்கண்ணியம்மையின் திருவருளால் இசைப் பாடல்கள் பாடும் ஆற்றல் உண்டாயிற்று. அது முதல் இசைப்பாடல்கள் பலவற்றைப் பாடிக் கொண்டிருந் தார். ஒரு சமயத்தில் இராமநாதபுரத்தில் இருந்து சேது பதியின் அமைச்சர் முத்திருளப்பபிள்ளை என்பவர் கடவுள் வழிபாட்டிற்காக மதுரைக்கு வந்தார். அப்போது அவர் மீது இவர் சில இசைப்பாடல்களைப் பாடினர். அவ் வமைச்சர் இவருடைய இசைப் பாட்டை வியந்து பாராட்டி

மதுரகவி என்னும் பெயரைக் கொடுத்தோடு பலவகை யான நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

வாழ்க்கையும் இறுதியும்

பிறகு இவர் சிவகங்கை இராமநாதபுரம் முதலிய இடங்கட்குச் சென்று அரசர்கள்மீதும் பெருஞ்செல்வர் கள் மீதும் இசைப் பாடல்கள் பாடி நன்கொடை பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். பிறகு ஆயிரத்து எண் ணூறும் ஆண்டுத் தொடக்கத்தில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவர் பாடிய இசைப்பாடல்களில் பெரும்பாலானவை மறைந்து போயின. சிலவற்றை மட்டும் தொகுத்து "மதுரகவி பதங்கள்" என்னும் பெயரோடு அச்சிட்டு வெளியிட்டிருக் கின்றனர்.

---

5. கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள்

தோற்றம்

பாண்டிவளநாட்டிலே திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள கங்கைகொண்டான் என்னும் ஊரிலே ஆங்கிலம் 1831-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் மூன்றாம் நாளுக்குச் சரியான கர ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபதாம் நாள் கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள் என்னும் பெரியார் தோன்றினார். இவர் தோன்றிய குலம் அந்தணாளர்குலம். தந்தையார் பெயர் எக்கேளுசுவர சிவன். தாயார் பெயர் காமாட்சியம்மையார்.

கல்வி

இப் பெரியார் இறைவன் திருவருளைப் பெரிதும் பெற் றவர். முற்பிறப்பின் தவக்குறைவால் உலகத்தில் தோன்றி

யவர். இப் பெரியாருக்கு அகவை இரண்டு நிரம்புவதற்கு முன்னரே தாய்தந்தையர் இறைவனடி சேர்ந்தனர். இப் பெரியாரையும் இவருடன் பிறந்தார்களையும் மாமன் வேங்கட சுப்பையர் என்பவர் அழைத்துச் சென்று வளர்த்தார், ஐந்தாம் ஆண்டில் இப்பெரியார் பள்ளிக்கு அனுப்பப் பெற்றார். ஆசிரியர் ஒருவர் இப் பெரியாருக்கு உலக வழக்கப் படி வடமொழி தென்மொழி ஆகியவைகளைக் கற்பித்தார். தாம் கற்கத் தொடங்கிய நூல்களையெல்லாம் இப்பெரியார் மிக எளிதாகக் கற்றுக்கொண்டார். ஏழாம் ஆண்டில் உபயனம் கடைபெற்றது. பின்னர் கிருட்டிண கனபாடிகள் என்னும் பெரியாரிடத்தில் மறை நூல்களையும் அற நூல்களையும், தருக்கம், இலக்கணம், ஆராய்ச்சி, இதிகாசம் முதலியவைகளையும் நன்கு கற்றுணர்ந்தார். தென்மொழிப் புலமை வடமொழிப் புலமை என்னும் இருமொழிப் புலமையும் நன்கு அமைந்தது.

மெய்யறிவு பெறல்

எவ்வளவு கல்வி கற்கினும் மெய்யறிவைப் பெறுதலரிதாயில் எல்லாம் பொய்யறிவாகவே முடியும். இதனை நன்குணர்ந்த இப் பெரியார் ஞானசிரியரை யடைந்து மெய்யறிவைப் பெற விரும்பினர். வீரவநல்லூரில் சிறந்துவிளங்கிய சுந்தர சாத்திரிகள் என்னும் பெரியாரை யடைந்து வேதாந்த நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்தார். ஞதசம்மிதை என்னும் நூலை நாள்தோறும் பாராயணஞ் செய்தார்.

திருமணம்

மறைகளையும் மறைமுடிவுகளையும் நன்கு கற்றுணர்ந்த இவர் சிறிய ஒழுக்கமுறையில் தலைநின்றார். இவருடைய நல்லொழுக்கம் முதலிய உயரிய பண்புகள் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்தன. ஒழுக்கம் மனித

றுக்கு மேன்மையைத் தருவதன்றே? இவருடைய மாமன் இவருக்குத் திருமணஞ் செய்துவைக்க விரும்பினர். எல்லா நலங்களும் ஒருங்கமைந்த சானகி என்னும் மாதை மறைமுறைப்படி மணஞ்செய்துவைத்தார். மனைவியாரோடு இல்வாழ்க்கையை நடத்தப் புகுந்த இவர் விருந்தினர்ப் பேணல், சிவபூசை புரிதல் முதலிய நற்செயல்களையெல் லாம் மேற்கொண்டு இல்வாழ்வார்க்கோர் எடுத்துக்காட்டாக விளங்கலானார்.

மேலும் மெய்யறிவு பெறல்

இல்வாழ்க்கையை மேற்கொண்ட இப் பெரியார் மேலும் மெய்யறிவுபெற விழைந்தார். அடைச்சாணி என்னும் சிற்றூரில் இருந்த விசுவேசுர சாத்திரிகள் என்னும் பெரியானை அடைந்து வணங்கிப் போற்றினர். அப்பெரியார் நன்முக மெய்யறிவு கைவரப் பெற்றவர். உண்மை ஞானி. அவர் இப் பெரியாருக்கு மெய்யறிவு கைவருமாறு அறி வுரை வழங்கியருளினர். அதனல் சுந்தர அடிகளாருக்கு ஆன்ம ஞானம் உண்டாகியது. அறிதுயிலில் அமரும் உயிரியதிலே மிக எளிதாகக் கைகூடியது. அதன்பின் இப் பெரியாருக்கு உலகப்பற்று நீங்கியது. தம்முடைய மனை வியாருக்கும் வீடுபேற்றுநெறியை விளக்கி அருள்புரிந்தார். அவ்வம்மையாருக்கு மிக எளிதாகவே தத்துவஞானம் கைகூடியது.

சிவப்பதிகட்குச் செல்லுதல்

பிறகு இப்பெரியார் சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் செல்லுதற்கு எண்ணினர். அன்பர் கூட்டத் துடன் புறப்பட்டார். பொதிகைமலை, திருச்செந்தூர் முத லிய இடங்கட்குச் சென்றார். ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் முழுகினர்; இறைவழிபாடு செய்தார்.

செல்லுமிடங்களிலெல்லாம் சூதசம்மிதைச் சொற்பொழிவும் இறைவனைப் போற்றி இன்னிசை பாடுதல் முதலியனவும் அன்பர்களின் முயற்சியால் நடைபெற்றன. தமது ஊருக்குத் திரும்பிச் சிலகாலந் தங்கியிருந்தபின் இறைவழிபாட்டின் பொருட்டு வடநாட்டிற்குச் செல்ல எண்ணினார். நல்லடியார்களோடு புறப்பட்டார். மதுரை, திருவானைக்கா, திருவையாறு, மாயூரம், சீர்காழி, திருத்தில்லை, பழமலை, திருக்காளத்தி முதலிய சிவப்பதிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டு காசியை அடைந்தார். அங்குக் கங்கையாடுதல், இறைவழிபாடுசெய்தல் முதலியவைகளைச் செய்து கொண்டு சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு புறப்பட்டுப் பாண்டி நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

சூதசம்மிதைச் சொற்பொழிவு

சிவபெருமானுடைய பெருமையை நன்கு விளக்குவதாகிய சூதசம்மிதையினிடத்திலே இப் பெரியாருக்கு மிகுந்த பற்றுண்டு. நாள்தோறும் அதனைப் பாராயணஞ் செய்ததுடன் பலவிடங்களினும் சூதசம்மிதைச் சொற்பொழிவுகள் நடத்திக் கொண்டிருந்தார்.

துறவு

அடிகளார் சுத்தமல்லி என்னுஞ் சிற்றூரிலே சூதசம்மிதைச் சொற்பொழிவு நடத்திக்கொண்டிருந்தார். அச்சொற்பொழிவு இரண்டு மூன்று நாட்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருநாள் அடிகள் வெளியே வந்தார். பூணூல் குடுமி இரண்டையுங் களைந்தெறிந்துவிட்டு உள்ளே சென்றார். அவையினர் வியப்படைந்து திகைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அடிகளார் அவையோரைப் பார்த்து "எப்பொழுது ஒரு மனிதனுக்கு மனவுறுதி யுண்டாகிறதோ அப்பொழுதே துறவை மேற்கொள்ளவேண்டும்"

என்று மறை நூல்சள் கூறுவதை அவர்களுக்கு எடுத்துரைத்தார். இக் காலத்தில் அடிசளார்க்கு அகவை இருபத்து மூன்றுதான்.

வியக்கத்தக்க புதுமைகள்

பத்தமடையில் ஐந்தாண்டு நிரம்பப் பெற்றிருந்த ஒரு சிறுவன் வாய்க்காலில் வீழ்ந்து இறந்து போனான். சிறுவனுடைய பெற்றோர் குழந்தையைக் காணாமல் இரவெல்லாம் தேடினர். மறுநாள் பிற்பகலில் வாய்க்காலில் வீழ்ந்து இறக்கும் தறுவாயில் கிடத்தலைக் கண்டனர். எவ்வளவோ மருத்துவஞ்செய்து பார்த்தும் சிறுவன் பிழைத்தெழவில்லை. அதனால் அவர்கள் மிகுந்த துன்பப்பட்டு வருந்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுந்தர அடிகள் அங்கு வந்தார். வருந்தியழுது கொண்டிருப்பவர்களைப் பார்த்து வருந்தவேண்டாம் என்றார். சிறுவனின் உடலைத் தனியிடம் ஒன்றுக்குக் கொண்டு சென்று மந்திரத் தண்ணீரை உடலில் தெளித்தார்; நெற்றியில் திருநீறிட்டார்; சிவபிரானைச் சில பாடல்களால் போற்றி வணங்கினார். சிறுவன் உறங்கி விழிப்பவன்போல் பிழைத் தெழுந்தான். அந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் எல்லோரும் அடிகளாரிடத்தில் அச்சமும் பேரன்புங் கொண்டனர்.

இறைவன் உணவிடுதல்

அடிகளார் சிறிதுகாலம் பரநிட்டையில் இருக்க எண்ணினார். கோடகநல்லூருக்குச் சென்றார். தாமிர பருணி யாற்றின்கரையில் உள்ள நாணற் காடுகளில் தங்கி நிட்டைபுரிந்து வந்தார். இப் பெரியாரின் இருப்பையறிந்து அன்பர்கள் உணவு கொடுத்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் எவரும் உணவு கொண்டுபோய்க் கொடுக்கவில்லை. இறைவன் ஓர் அந்தணக்கோலம்பூண்டு நாணற்புதருக்குச்

சென்றார். அடிகளாரைக் கூப்பிட்டார். உணவு கொடுத்து உண்ணச்செய்து இன்னுரையாடிக் கொண்டிருந்தார். அந்நிலையிலேயே திடீரென்று மறைந்துபோனார். வந்தவர் அன்னம் பாலிக்குந் தில்லைப் பொன்னம்பலவன் என்பதை உணர்ந்து போற்றி மகிழ்ந்தார் நம் அடிகளார்.

உள்ளங்கையில் தீ

ஒருநாள் பல அன்பர்கள் அடிகளாரோடு உரையாடிக் கொண்டிருந்தனர். அடிகளார் உணவு உண்ணும் முறை யைக் குறித்து அன்பர்கட்கு உரைத்துக் கொண்டிருந்தார். "உள்ளங்கையில் தீ இருக்கிறது. ஆகவே உள்ளங்கையில் படுமாறு உணவு உண்ணுதல் கூடாது. அவ்வாறு உண்பது இழிவானவர்களுடைய உணவுக்கு ஒப்பானதாகும்," என்று உரைத்தார். அச்சமயத்தில் மிக முதியரான ஆதிசைவக் குருக்கள் ஒருவர் அவ்விடத்திற்கு வந்து, "அடிகாள்! கோயிலில் அடுப்பு மூட்டுதற்குத் தீக் கொண்டுவந்தேன். மழையினால் தீயணைந்து விட்டது, தங்களுடைய அடியார் களில் யாரையேனும் தெருவுக்கு அனுப்பிச் சிறிது தீ வாங் கிக் கொண்டு வந்து கொடுக்குமாறு சொல்லுங்கள்," என்று சொன்னார். அடிகளார் தம்முடைய அடியார்களில் ஒருவ ரைப் பார்த்து, "தடிவீரன் கோயில் தெருவிற்குச் சென்று ஒருப்பு எடுத்துக் கொண்டு வந்து கொடு" என்று சொன் னார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஓரன்பர் அடிகளா ரைப் பார்த்து, "அடிகாள்! தாங்கள் சிறிது நேரத்திற்கு முன் உள்ளங்கையில் தீ இருப்பதாகத் திருவாய் மலர்ந் தருளினீர்களே; அதன்படி உள்ளங்கை ஒருப்பை வர வழைத்துக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். அடிகளார், "அவ்வாறே வரவழைத்துக் கொடுப்போம். தாங்கள் மேலே போட்டிருக்கிறீர்களே மேல்துண்டு

அதனைக் கொடுப்பீர்களா?" என்று கேட்டனர். அந்த அன்பர், "அப்படியே கொடுக்கிறேன்" என்று சொல்லி மேலே போட்டிருந்த புதுச் சரிகைத்துண்டை எடுத்துக் கொடுத்தார். அன்று தீபாவளியானதையால் விலையுயர்ந்த புதிய கோடித்துண்டு ஒன்றை அவர் மேலே போட்டிருந்தார். அடிகளார் அத் துண்டை வாங்கித் தமது உள்ளங் கையில் தேய்த்தார். துண்டில் தீப்பிடித்துக்கொண்டது. தமது துண்டில் தீப்பிடித்துக்கொண்டதைக் கண்டதும் அந் நண்பர் 'அந்தோ விலையேறப்பெற்ற துண்டாயிற்றே' என்று எண்ணித் துண்டில் பிடித்த தீயை அணைக்கமுயன்றார். அடிகளார், "அத் துண்டைத் தீக்கடவுளுக்கே கொடுத்துவிடுக" என்று கட்டளையிட்டனர். துண்டு முழுவதும் எரிந்தது. குருக்கள் அதில் இருந்து தீயெடுத்துக்கொண்டு சென்றார். அடிகளாரிடம் வாய்கொடுத்துத் துண்டிழந்த நண்பர் தம்முடைய குற்றத்தைப் பொறுக்குமாறு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

சகத்குருவும் அடிகளாரும்

அடிகளார் திருநெல்வேலியில் தங்கியிருக்கும்போது சிருங்கேரி மடாதிபதி சகத்குரு சங்கராச்சாரியார் திருநெல்வேலிக்கு எழுந்தருளினார். சகத்குருவின் அடியார்கள் திருநெல்வேலியில் இருந்த அன்பர்கட்கெல்லாம் சகத்குருவின் வருகையைக்குறித்துத் திருமுகம் அனுப்பி வரவழைத்தார்கள். அவர்கள் சுந்தர அடிகளாரிடம் மாறுபாடான மனப்பான்மை கொண்டிருந்தபடியால் அடிகளார்க்குமட்டும் திருமுகம் அனுப்பாமல் விட்டுவிட்டனர். சகத்குரு சுந்தர அடிகளார் தம்மைமதிக்காமையை உணர்ந்தார். சில அன்பர்களை அனுப்பி வரவழைத்தார். அடிகளார் வந்ததும் தகுந்த இருக்கை கொடுத்து அதில்

அமரச் செய்ததுடன், அடிகளார் இறைவனுடைய திருவருட் செல்வம் பெற்ற மெய்ஞ்ஞானி என்பதை அங்குள்ள வர்கட்கு எடுத்துரைத்தார். கேட்டவர்கள் அடிகளாரின் பெருமையை உணர்ந்துகொண்டு தமது மடமைக்கு நாணினர்.

அகத்தியர் காட்சி

அடிகளார் பொதியமலைக்குச் சென்று சிறிது காலம் அருந்தவம் இயற்றிக்கொண்டிருந்தனர். ஒருநாள் முனிவர் ஒருவர் அடிகளாருக்குக் காட்சி தந்து சென்றனர். அவர் அகத்திய முனிவரே என்று அடிகளார் பிறகு ஒருவாறு உணர்ந்து கொண்டனர்.

பல திகழ்ச்சிகள்

அடிகளார் பல வியக்கத்தக்க புதுமைகளைச் செய்து கொண்டு பலவிடங்களிலும் சுற்றிக்கொண்டிருந்தனர். பல அன்பர்கள் அடிகளாருடைய தொண்டர்களாகி அருளுரை பெற்று யோகநிட்டை கைவரப்பெற்றனர். இறைவன் பல முறை அடிகளாருக்கும் அடிகளாருடைய மாணவர் கூட்டத்திற்கும் உணவு கல்கித் திருவருள் புரிந்து காப்பாற்றியருளினர். அடிகளாருடைய பெருமையை நன்குணர்ந்த மக்கள் அடிகளாரின் செல்வழியொழுகிச் சிறப்புப் பெற்றனர். திருவையாறு முதலிய ஏழு சிவப்பதிகட்கு அடிகளாருடைய முயற்சியினல் ஒரே நாளில் குடமுழுக்கு நடைபெற்றது. அக் குடமுழுக்கிற்குப் பொருள் பெறும் பொருட்டு அடிகளார் திருவாவடுதுறை சென்றபோது அங்கிருந்த பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டனர். அடிகளாரைக் கண்டவுடன் புலவர் அவர்கள் போற்றிப்பணிந்து திருநீறு பெற்று அவளவளாவி மகிழ்ந்தனர். முன்னம்மணிய தூளாசிரியராகிய

சுந்தரம் பிள்ளையவர்கட்கு ஞானசிரியராக அமைந்து அரு ளுரை வழங்கியருளிய பெரியாரும் சுந்தர அடிகளே யாவர்.

நூல்கள்

அடிகளார் தம்மையடைந்த அன்பர்கட்குப் போதித் தருளும் பொருட்டு நூல்கள் சிலவற்றை இயற்றினர். மகா வாக்கியச் சுருக்கம், வேதாகமம், சம்பிரதாயப் பிரகரணம், மனோநாச மார்க்கம், சுவாநுபூதி ரசாயனம், சுவா நுபவரச மஞ்சரி என்பன அடிகளாரால் இயற்றப்பெற்றவை. இவைகளுள் சுவாநுபூதி ரசாயனத்தில் உலகத்தின் தோற் றம், ஆசிரிய மாணவ முறைமை, மெய்யறிவு பெறுதற் குரிய வழிகள், சுவாநுபவத்தில் வரும் சச்சிதானந்தத்தின் நிரூபணம், துவைத சமயம், விசிட்டாத்துவைதம், வேதாந்தத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள ஒற் றுமை வேற்றுமை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. சுவா நுபவரச மஞ்சரியில் பஞ்சகோசங்களின் இலக்கணம் முதலிய பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

இறுதி

அடிகளார் பலவிடங்களிலும் சுற்றிக்கொண்டு இறுதி யில் செட்டிநாட்டிலே உள்ள அரிமளம் என்னும் ஊரையடைந்தனர். அங்கு அடிகளாருக்கு அடியார்கள் பலர் இருந்தனர். அங்குச் சிலகாலம் தங்கியிருந்தனர். ஆண்டே தமது உடலை மறைக்கவேண்டுமென்பது அடி களார் எண்ணம். அதன்படி 1878-ஆம் ஆண்டு (ஆங்கிலம்) ஐப்பசித் திங்கள் ஆறாம்நாள் பிரமசௌரூபத்தில் கலந்தார். அப்பொழுது அடிகளாருக்கு அகவை நாற்பத்தேழு. பிறகு அடிகளாரின் அன்பர்கள் அங்கு உடலைச் சமாதி வைத்துக் கோயில் முதலியன அமைத்து வழிபட்டு வரலாயினர். இளைப்புலவர்களாக விளங்கியிருந்த மகா வைத்தியநாத

ஐயர், அவருடைய தமையனார் இராமசாமி ஐயர் முதலியோர் அடிகளாருடைய அடியார்களாவர். அடிகளாருடைய சமாதிக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றபோது இராமசாமி ஐயர் பல பாடல்களைப் பாடினார். அவற்றுள் சில:

கலிவிருத்தம்

பொன்பொழி அரிமளமாம் பொன்புரி நிகர்புரியில்
முன்பொழி அருண்மிகுநின் முண்டக மலரடியில்
அன்பொழி கொடியனுநின் அன்பர்க ளொடுவரலால்
துன்பொழி தரவருள்வாய் சுந்தர குருமணியே. (க)

எந்தைநின் வடிவுறவே எங்கணும் இசைபெறவே
இந்திர நகர்வளமே இங்குறும் அரிமளமே
சந்தனின் அடியிணையே சந்ததம் ஒருதுணையே
சுந்தர குருமணியே சுந்தர குருமணியே. (உ)

புன்செயல் பலபுரிவேன் புந்திசெல் வழிதிரிவேன்
உன்செயல் எனநினையேன் உய்ந்தெழு நிலைபுனையேன்
என்செயல் இவையொழியேன் இங்குன திசைமொழியேன்
துஞ்சலில் நெறிபணியேன் சுந்தர குருமணியே. (ங)

கட்டளைக்கலித்துறை

பொன்னார் கயிலை மலைமேல் அமர்ந்து புவிபுகழப்
பின்னாவ லூரில் உதித்தரன் தோழரென் பேருமடைந்
தந்நாளிற் கோடக நல்லூரில் தோன்றி அரிமளமாம்
தென்னாட் டினிலமர்ந் தாயருள் சுந்தர தேசிகனே. (ச)

கல்வித் திருவையும் செல்வத் திருவையும் காதலர்க்குச்
சொல்வித் தடைவித் தருளவல் லாய்என் துயர்களைவாய்
நல்வித் தியாநிதி யாகிய மேலவர் நாடுமுத்திச்
செல்விக் கினிய தலைவாஎன் சுந்தர தேசிகனே. (ஜ)

வான்மாரி நோக்கும் பயிரெனத் தாய்தன் மதுரமுலைப்
பான்மாரி நோக்கும் மகவென உள்ளம் பதைத்துவிழி
தான்மாரி பெய்ய உடல்புள கிப்பநின் தண்ணருளாம்
தேன்மாரி நோக்கும் எனக்கருள் சுந்தர தேசிகனே. (ஞ)

60. சோணைசல பாரதியார்

தோற்றம்

சோணைசல பாரதியார் காஞ்சிமாநகரிலே தோன்றினர். இவர் வாழ்ந்திருந்த காலம் திட்டமாகத் தெரியவிடினும் அண்ணமைக் காலத்திலேதான் வாழ்ந்திருந்தார். இவருடைய வரலாற்றுக் குறிப்பைத் தமிழ்க்கலையில் எழுதிய நிரு. அருணைவடிவேல் முதலியார் காலம் முதலிய வைகளை விளக்கமாக எழுதாத காரணம் தெரியவில்லை.

கல்வி

பாரதியார் பழங்கால முறைப்படி இலக்கண இலக்கிய நூல்களையும் சமயநூல்களையும் தக்காரிடத்தே நன்கு கற்றுத் தேறினர். இனிய செய்யுட்களை விரைந்துபாடும் திறமை இவர்பால் சிறந்து விளங்கியது. இவர் பாடல் இயற்றும் விரைவு மனப்பாடஞ் செய்த பாடலைச் சொல் லுவதுபோல் இருக்கும் என்பர். கற்றருடன் உரையாடு வது இன்பம் பயக்கும் என்பதைப் பலரும் நன்கு அறிவர். இவருடன் உரையாடுதல் உவகையை விளைப்பதாக இருக் கும். இவர் புராண விரிவுரைகளும் பிற சொற்பொழிவு களும் கேட்டோர்ப் பிணிக்குந் தகையவாய் அமைந் திருந்தன.

குமரகோட்டம் புலவர்

கல்வியைக் கற்றவர்கள் பொருளீட்டுவதிற் பெரும் பாலும் உள்ளத்தைச் செலுத்துவது வழக்கம். ஆனால் பாரதியார் இதற்கு நேர்மாறாக இருந்தார். மக்களைப் பாடும் வழக்கத்தை இவர் மேற்கொள்ளவில்லை, கடவுளைப் பாடும் வழக்கத்தையே மேற்கொண்டிருந்தார். காஞ்சியில் உள்ள குமரகோட்டத்து முருகப் பெருமான்மீது பேரன்

புடையவர். அத் திருக்கோயிலுக்குப் பலவகையான தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தமையின் மக்களால் "குமரகோட்டப் புலவர்" என்று கூறப்பெற்றார்.

அருணாசலத்திடம் அன்பு

பாரதியாருடைய குடியினர் அருணாசலம்பதி இறைவனுக்கு அடிமைத்திறம் பூண்டவர்கள். பாரதியாரும் அவ்வாறே அடிமைத்திறம் பூண்டு விளங்கினர். அரியபாடல்களினை அண்ணாமலையார்மீது பாடி அச்சிலேற்றிப் பலருக்கும் விலை யிலாதளிக்கும் திருத்தொண்டினையும் மேற்கொண்டு விளங்கினர்.

நூல்கள் இயற்றுதல்

காஞ்சிமாநகரில் எழுந்தருளிய ஏகாம்பரநாதர் மீதும் காமாட்சியம்மை மீதும் முருகப் பெருமான்மீதும் புகழ் நூல்கள் பல இயற்றிப் பாடினர். அந் நூல்களிற் சில அச்சேறி வெளிவந்தன. சில அச்சேறாமல் எழுத்துப்படி யாகவே இருக்கின்றன.

கம்பைச் சந்திதிமுறை

பாரதியார் குமரகோட்டப் பெருமானது பூசை வழி பாட்டிற்குச் சிற்சார் ஒன்று வகுக்கவெண்ணினர். அதன்பொருட்டு நாட்டுக் கோட்டைச் செட்டியார் களிடம் பொருள் திரட்ட எண்ணினர். புறப்பட்டுப் பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கம்பை என்னும் நகரத் தில் எழுந்தருளிய முருகப் பெருமான்மீது புகழ்நூல்கள் சில இயற்றவேண்டுமென்று செட்டியார்கள் சிலர் விரும் பினர். அவர்களுடைய விருப்பப்படி நூல்கள் சிலவற்றை இயற்றிக் கம்பைச் சந்திதிமுறை என்னும் பெயரிட்டு அரங் கேற்றினர்.

இயற்றிய நூல்கள்

1. திருக்கச்சியேகம்பர் திரிபந்தாதி
2. கச்சிக்கம்பர் வெண்பா
3. கம்பைச் சந்திமுறை

முதலிய பலநூல்கள் இவரால் இயற்றப் பெற்றனவாம்.

கம்பை பிள்ளைத்தமிழ்

"ஞண்சார்ந்த பாணியும் காகபா ணியும்வின்ணில்
உறுகுலிச பாணி யுந்தாழ்ந்(து)
ஓவாமல் அஞ்சலிசெய் பாணியொடு துதிகயிலை
உற்றகல் லால்நி முற்கீழ்
ஞண்சார்ந்த ஞைகாதி நால்வருக் கறஞெறி
யினைப்பாணி காட்டி யிணையா(து)
இணைசூல பாணிக்கு மகவாயும் உபதேசம்
இனிதுரைசெய் வடிவு மாற்றி
மண்கூர்ந்த கிழவுருத் தண்டபா ணியினண்மி
மகிழுமங் குசபா ணியா
லால்யானை யாண்மருட் டித்தெனித் தருள்கூர்ந்து
மற்றுமொர் இராவள் ளிமான்
தண்காந்த ளம்பாணி பற்றுவன சப்பாணி
சப்பாணி கொட்டி யருளே
சம்பகா டவிமருவு கம்பைமா நகர்முருக
சப்பாணி கொட்டி யருளே."

கம்பைவெண்கூரம்

"அத்தனை வேலனி அத்தனைத் தோகைவை பத்தனைமெய்ச்
சத்தனைக் கோழித்து சத்தனைப் பத்திவ சத்தனைச்சிக்
கத்தனை அண்பர கத்தனைக் கம்பைய கத்தனைமா
சித்தனை முன்னருச் சித்தனை யோதரி சித்தனையே."

கக. கவிகுஞ்சர பாரதியார்

தோற்றம்

கவிகுஞ்சர பாரதியார் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற பிறகு இயற்பெயர் மறையப்பெற்ற இவர், இராம நாதபுரம் மாவட்டம் சிவகங்கை நாட்டைச் சேர்ந்த பெருங் கரை என்னும் ஊரில் 1810-ஆம் ஆண்டு (ஆங்கீரச) ஆடித் திங்களிலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய பாரதியார்.

முன்னோர்கள்

சுப்பிரமணிய பாரதியாருடைய முன்னோர்கள் முதலில் திருநெல்வேலி மாவட்டத்திலே வாழ்ந்திருந்தவர்கள். இவருடைய முன்னோர்களுக்கு அந்நாளில் இருந்த இராம நாதபுரம் அரசர் இரகுநாத சேதுபதி என்பவர் பெருங் கரை என்னும் ஊரைத் தானமாக வழங்கியபடியால் அதில் வந்து குடிபுகுந்தார்கள். இவர்களுடைய வழிமுறையில் தோன்றியவர்களிற் பெரும்பாலோர் புலவர்களாகவே விளங்கிச் சிறந்திருந்தார்கள். இவர்களுள் கோடீசுர பாரதி என்பவர் ஒருவர் தென்மொழி வடமொழி எனும் இரு மொழியிலும் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்திருந்தார். அவருடைய மகனாகத் தோன்றியவர்தாம் கவிகுஞ்சர பாரதியின் தந்தையாகிய சுப்பிரமணிய பாரதியார்.

முருகன் திருவருள்

சுப்பிரமணிய பாரதியாருக்கு நீண்டகாலமாக மகப் பேறு உண்டாகவில்லை. அதனால் அவர் மிகுந்த மனவருத் தங்கொண்டார். தமது ஊருக்கு அண்மையில் உள்ள கொடுமளூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய முருகப் பெருமானைத் தம்முடைய எண்ணம் நிறைவேற வேண்டுமென்று போற்றி வழிபட்டு வந்தார். பாரதியா

ருடைய மனைவியாரும் பலவகையான நோன்புகளை மேற் கொண்டு முருகக் கடவுளைப் போற்றிவந்தார். முருகக் கடவுளுடைய திருவருளினாலே முற்கூறிய ஆண்டில் கவிகுஞ்சர பாரதியார் பிறந்தார்.

கல்வி

இவர் தகுந்த பருவத்தில் கல்விகற்கத் தொடங்கினர் மிகு இளமையிலேயே தமிழிலும் வடமொழியிலும் கல்லை புலமை பெற்றார். செய்யுள் பாடுந் திறமையும் நன்முக அமைந்தது. இசை பாடுவதிலும் மிகுந்த தேர்ச்சி பெற் றிருந்தார். அக்காலத்தில் பெரும் புகழ்பெற்று விளங்கிய மதுரகவி என்பவரோடு மிகநெருங்கிப் பழகி வந்தமையால் இவருக்குப் பன்னிரண்டாம் அகவையிலேயே இசைப் பாடல்கள் பாடும் போற்றல் உண்டாயிற்று.

மக்களைப்பாடாத மாண்பு

முருகக் கடவுள் அளித்த புலமையை இவர் நல்ல வழி யில் பயன்படுத்தினர். தமது குலதெய்வமான முருகக் கடவுள்மீதும் மீனாட்சி சுந்தரேசுவர்மீதும் மற்றைக் கடவு ளர்மீதும் பாடுவதில் பயன்படுத்தினரே யல்லாமல் மக்க ளைப் பாடுவதிற் சிறிதும் பயன்படுத்தவில்லை. இவருடைய உள்ளம் பக்குவப்பட்டிருந்தபடியால் மக்களைப் பாடி மட மைக்கு உள்ளாகவில்லை.

தருமசாத்தனார் பங்கு

இவருடைய பதினெட்டாவது அகவையில் இவருக்குக் கடுமையான காய்ச்சல்நோய் உண்டாயிற்று. இதனால் உடல்மெலிந்து பலங்குன்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந் தார். ஓர் இரவில் அச் சிற்றூர்க் கடவுளான தருமசாத்தர் இவருடைய கனவில் தோன்றினர். தன்மீது ஒருதால்

பாடினால் காய்ச்சல் நோய் தீரும் என்று கூறினர். மறு நாட் காலையில் கணிகுஞ்சரம் விழித்தெழுந்தார். முன் உண்டாகியிருந்த தளர்ச்சி சோர்வு முதலியன குறைந்து உள்ளக் கிளர்ச்சியும் தெண்பு வளர்ச்சியும் நன்றாக உண்டாகியிருப்பதைக் கண்டார். தமக்கு உடல் தெளிவடைந் திருப்பதற்குக் காரணம் தருமசாத்தாவினுடைய தண் ணளி என்று எண்ணினர். அக் கடவுள்மீது பள்ளு என் னும் நூல் ஒன்றை இரண்டொரு நாட்களுக்குள் பாடி முடித்தார். பிறகு அக் கடவுளுக்குச் சிறப்பான முழுக்கு, பூசை முதலியவைகளை நடத்தி அக்கடவுளின் திருமுன்பு அரங்கேற்றினர். காய்ச்சல் நோய் இரண்டொரு நாட் களில் அடியோடு நீங்கிவிட்டது. அதுமுதல் இவர் காலத் திலும் பிறகு வழிமுறையினர் காலத்திலும் அக் கடவுளுக் குச் சிறப்பான பூசை வழிபாடு முதலியன செய்து வருகிறார்கள்.

நூல்கள் இயற்றல்

தெய்வத்தின்மீது பாடல்கள் இயற்றுவதால் சிறந்த பயனுண்டாவதைக் கண்ட இவர் மதுரை அங்கயற்கண்ணி மீது "அடைக்கல மாலை"யும் "கயற்கணி மாலை"யும் பாடி னர். திருப்பதி வேங்கடாசலபதிமீது "திருவேங்கட மாலை"யும் திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது ஒரு "குறவஞ்சி"யும், "திருமுக விலாசமும்" இன்னும் பல தனிப்பாடல்களும் இசைப்பாடல்களும் பாடினர். தமது வீட்டில் அடிக்கடி சிறப்பான பூசை வழிபாடு முதலியன செய்தார்.

கணிகுஞ்சரம்

இவருடைய பாடல்களையும் இசைகளையும் கேட்ட வர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடினர். நாளடைவில்

இவருடைய சீர்த்தி எல்லாவிடங்களிலும் பரவலாயிற்று. அந்நாளில் சிவகங்கை நாட்டுக்குத் தலைவராக இருந்த கௌரி வல்லப மகாராசர் என்பவர், இவருடைய இனிசப்பாடல்கள் சிலவற்றைத் தமது நாட்டு இசைப்புலவர்கள் பாடக் கேட்டார். பாரதியவர்களைத் தமது அவைக்கு வரவழைத்தார். இவரியற்றிய பாடல்களைத் தம்முடைய புலவர்களுக்கு முன்னே பாடியரங்கேற்றஞ் செய்யச்செய்தார். அரசருக்கு மிருந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. தகுந்த நன்கொடை வழங்கிச் சிறப்புச்செய்தார். மேலும் "கவிருஞ்சரம்" என்னும் சிறப்புப் பெயரும் வழங்கினர். தமது அவைக் களப் புலவர்களுக்குள் ஒருவராக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அரசருடைய வேண்டுகோளுக் கிணங்கிய கவிருஞ்சர பாரதியார் சிவகங்கையிலேயே வந்து தங்கி வாழலானார். கௌரிவல்லப அரசர் காலத்திலும், அவருக்குப்பிறகு பட்டத்திற்கு வந்த சத்ரபதி போதகுரு அரசர் காலத்திலும் ஆதரிக்கப்பெற்று அவ்விடமே தங்கி யிருந்தார்.

வேங்கைக்கும்மி

ஒருசமயம் அரசர் வேட்டைக்குச் சென்றார். பதினைந்து வேங்கையொன்றைக் குத்திக்கொன்றார். அத் தீரச் செயலைக் குறித்து அந் நாட்டுப் புலவர்கள் எல்லோரும் புகழ்ந்து பாடினார்கள். அப் பாடல்கள் எல்லாவற்றினுள் ளும் பாரதி பாடிய "வேங்கைக்கும்மி" என்னும் பாடலே ஒன்பான்வகை இனிமைகளும் பொதிந்து மிக வியக்கத் தக்கதாக அமைந்திருந்தது. அதனை அரசர் நன்கு மதித் தத் தமது அவையில் அரங்கேற்றஞ்செய்து அதற்கு நன்கொடையாகக் "கொட்டக்கச்சியேந்தல்" என்னும் ஒரு சிற்றூரைத் தானமாகக் கொடுத்தார். ஆடையணிகலன்கள்

முதலியவைகளும் வழங்கிச் சிலைகளிலேற்றி நகர்வலமும் செய்வித்தார்.

இராமநாதபுரஞ் செல்லுதல்

இவ்வாறு சிவகங்கையில் சில ஆண்டுகள் சென்றன. இவர் இங்கிருந்த காலத்தில் இராமநாதபுரத்தில் முத்து ராமலிங்க சேதுபதி அரசு புரிந்திருந்தார். அவர் கவிகுஞ்சரத்தின் பெருமைகளையெல்லாம் கேள்விப்பட்டார். தமது அவைக்கு வரவழைத்து இவர் இயற்றிய பாடல்கள் நூல்கள் முதலியவைகளைச் சொல்லக்கேட்டு மகிழ்ந்தார். வியந்து பாராட்டிப் பலவகையான நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச்செய்தார். தமது அவைக்களப் புலவர்களில் ஒருவராக இருக்கச் செய்து தம்மிடமே வைத்துக்கொண்டார். முத்துராமலிங்க சேதுபதியின் தமையனாராகிய பொன்னுசாமித்தேவரும் பலவாறு பாராட்டிப் பெருமைப்படுத்தினர். இவ்வாறு இவர் இரண்டிடங்களினும் சிறப்புப்பெற்று விளங்கியிருந்தார்.

கந்தபுராணக் கீர்த்தனை

இவருடைய அறிவாற்றலும் கடவுள்பக்தியும் தெளிந்த கல்வியறிவும் பொன்னுசாமித் தேவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. இவரைக் கொண்டு சிறந்த நூல் ஒன்றை இயற்றுவிக்கவேண்டுமென்று எண்ணினர். இராமாயண இசைப்பாடல்களைப்போல் கந்தபுராணத்தையும் இசைப்பாடலாகச் செய்யவேண்டுமென்று எண்ணினர். தமது எண்ணத்தைக் கவிகுஞ்சரத்திற்குத் தெரியப்படுத்தினர். தமது காலத்தை முருகப்பெருமான் திருப்பணியில் செலவிடுதற்கு இது மிகவும் வாய்ப்பு என்று எண்ணிய பாரதியார் மிகுந்த மகிழ்ச்சியுடன் இணங்கினர். தமது உடன்பாட்டைத் தெரிவித்தார். அப்பொழுதே

தேவர் கந்தபுராணச் சுருக்கம் ஒன்றைப் பாரதியிடம் கொடுத்தார்.

ஊருக்குச்சென்று பாடுதல்

பலவகையான ஆரவாரங்கள் இடையறாது நிறைந்துள்ள முகவையில் இருந்தால் இக் காரியத்தை நன்றாகச் செய்து முடிக்க முடியாது என்று எண்ணினார். தமது எண்ணத்தைச் சேதுபதிக்கும் தேவருக்கும் தெரியப்படுத்தினார். அமைதியான இடத்தில் தனித்திருந்தால்தான் நூல் செம்மையாக அமையும் என்பதை உணர்ந்த அவர்கள் இவருடைய எண்ணத்திற்கு இணங்கினார்கள். பாரதி இருவரிடமுஞ் செலவு பெற்றுக்கொண்டு தமது ஊரான பெருங்கரையை அடைந்து அங்கே தங்கினார். அப்பொழுது இவருக்கு அகவை ஐம்பத்தைந்து. ஐந்தாண்டுகளில் கந்தபுராணக்கீர்த்தனையைப் பாடிமுடித்தார். இவருடைய உள்ளம் மேலும் பண்பட்டு அமைதியை அடைந்திருந்தது. அதற்குப்பின் அரச அவைக்குப் போகாமல் இல்லத்திலேயே இருந்து தெய்வ வழிபாடு முதலியவைகளைச் சிறப்பாகச் செய்துகொண்டிருந்தார். இசைப் பாட்டை இராமநாதபுரஞ் சென்று அரங்கேற்றவும் இல்லை.

புகழ்

இவருடைய மருகர் ஆத்மநாத பாகவதர் என்பவரும் சிறந்த இசைப்புலவராக விளங்கியிருந்தார். அவர் கந்தபுராணக் கீர்த்தனையைப் பலவிடங்களினும் பாடி இசைப் பொழிவு செய்தார். அதனால் தென்னாடுகளில் கந்தபுராணக் கீர்த்தனை பலவிடங்களினும் பரவிக் கவிகுஞ்சரத்திற்கு மிகுந்த புகழை யுண்டாக்கியது. தமது இசைப்பாட்டைப் பலரும் புகழ்ந்து கொண்டாடுதலைக் கேள்வியுற்ற இவர் புகழ்ச்சியையே பெரிய நன்கொடையாக மதித்து மிக

மகிழ்ந்திருந்தார். இவருடைய வாக்கை அருள்வாக்கு என்று எல்லோரும் மதித்துப் போற்றினர்கள்.

மழை பொழியப் பாட்டு

எத்தனையோ பெரியோர்கள் இறைவன்மீது பாட்டுப் பாடி மழை பொழியச் செய்திருக்கின்றனர். இவருடைய ஊரில் ஒருமுறை மழை பெய்யாமல் பயிர்கள் வாடின. அப்பொழுது கவிகுஞ்சரபாரதி,

"கந்தநீ தந்தகொட்டக் கச்சி யேந்தல்
கணையைமறிச் சான்வயலின் கதிர்க ளுக்கு
வந்தமழை பொழிந்துசெக்கெல் விளைந்து நன்றாய்
மனைநிறைந்து பரிபூர்ண மாக என்றன்
சிக்கைமகிழ்ந் தனதுசங்கீர்த் தனங்கள் பாடித்
தினந்தினமும் பசனைசெய்து சேம மாகச்
சந்ததிகள் மேன்மேலும் குறைவில் லாமல்
சகலஎன முந்தலைழக்கத் தயைசெய் வாயே."

என்னும் பாடலைப் பாடினர். உடனே பிருந்த மழைபெய்து ஊரின் குறை தீர்ந்தது.

எருமை மிழக்கப் பாட்டு

ஒருமுறை இவருடைய வீட்டில் இருந்த எருமை ஒன்றுக்கு நோய்கண்டு சாகக்கிடந்தது. எந்தச் சிறிய காரியத்திற்கும் தெய்வத் திருவருளையே துணையாக நம்பி யிருந்த இவர் தமது வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானை நோக்கி,

'வேலவனே செம்பொன் மிலெகொடுத்து வாங்கியவென்
பாலெருமைக் குற்றிடுந்துன் பங்கனைத்தீர்த்—தேலுலையாய்
வாலெடுத்து வீசி மடிசுமக்க மேண்மேலும்
பால்கறக்கச் செய்வாய் பரிந்து."

என்னும் வெண்பாவைப் பாடினர். எருமை நோய் நீக்கிப் பிழைத்துக்கொண்டது. இத்தகைய தனிப்பாடல்கள் பல வற்றை இவர் பாடியிருப்பதாகத் தெரிகிறது.

பிச்சுவையர்

கவிகுஞ்சரபாரதியின் காலத்தில் வாழ்ந்திருந்த புலவர் களும் இவரைத் தெய்வமாகவே கொண்டாடியுள்ளார்கள். காள மேகம் போல் யாண்டும் பாமழை பொழிந்துகொண்டு திரிந்த வேம்பத்தூர்ப்பிச்சுவையர் ஒருசமயம் இவரிடத்தில் திருநீறு வாங்கி நெற்றியில் அணிந்து கொண்டவுடனே,

"நெற்றி தனில்அணிந்தேன் நீங்கினேன் கன்மவினை
எற்றிவிட்டேன் இன்பநிலை எய்தினேன்—முற்றுணர்ந்த
கந்தனருள் பெற்ற கவிகுஞ் சரமறையோன்
தந்த விபூதி தனை."

என்னும் வெண்பாவைப் பாடினர்.

இறுதி

1894-ஆம் ஆண்டில் (ஆயிரம் பிறைகண்ட என்பத்து நான்காவது அகவையில்) இவருக்குச் சதாபிடேகம் கடை பெற்றது. அதன்மேலும் இரண்டு ஆண்டுகள் சென்றபின் (1896) எளிளம்பியாண்டு கார்த்திகைத் திங்களில் தமது என்பத்தாறுவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

இயற்றிய நூல்கள்

1. தருமசாத்திரம்
2. அங்கயற்கண்ணி அடைக்கலமாலை
3. கயற்கணிமாலை
4. திருவேங்கடமாலை
5. அழகர் குறவஞ்சி
6. திருமுக விலாசம்
7. வெங்கைக் கும்மி
8. கந்தபுராணக் கீர்த்தனை

என்பன. இவருடைய கந்தபுராணக் கீர்த்தனையைப் பாராட்டி, தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், முறையூர் கிருட்டிணை பாரதியார், உ. வே. சாமிநாதையர், மதுரை வித்துவான் சுந்தரேசுவர ஐயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், சிவகங்கை கணபதியா பிள்ளை முதலியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர்.

கஉ. மதுரைச் சபாபதி முதலியார்

தோற்றம்

மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் என்னும் இப் பெரும் புலவர் 1837-ஆம் ஆண்டில் திருக்குளந்தை நகரில் சைவ வேளாளர் மரபிலே பிறந்தார்.

கல்வி

தக்க காலத்தில் பள்ளிக்கல்வியை நன்கு கற்றுத் தேறினார். பிறகு அறிஞர்களையடுத்துப் புலமைக் கல்வியையும் நன்கு கற்றுத் தேறினார்.

பெரும்புலவர்

சபாபதி முதலியார் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் ஆழ்ந்து கற்றுச் சிறந்த பேரறிவு பொருந்தி விளங்குதலைக் கண்ட தக்கார் சிலர் முதலியாருக்கு மகாவித்துவான் என்னும் பட்டம் வழங்கினர்.

ஆசிரியத் தொழில்

முதலியாரின் புலமைத் திறத்தைக் கண்ட அரசினர் இவரை அரசாங்கப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினர். முதலியார் அவ் வேலையை இருபத்திரண்டு யாண்டுகள் பார்த்துப் பிறகு அரசினரின் உதவி பெற்றார். இவர் வேலையை விட்டு விலகியது 1889-ஆம் ஆண்டில் என்பர். வேலையை விட்டு விலகியபின் ஓய்வு எடுத்துக் கொண்டு தமது காலத்தை வீணாகப் போக்கவில்லை. நூலாராய்ச்சி செய்வதிலும் மாணவர்கட்கு அருங் கல்விச் செல்வத்தை யளிப்பதிலும் தமது காலத்தைச் செலவிட்டார். தமிழ் மொழியை அன்றி ஆங்கில மொழியிலும் வடமொழியிலும் இவருக்குத் தக்க பயிற்சி இருந்தது.

மாணவர்கள்

இவர் ஓய்வு பெற்று மாணவர் பலருக்குக் கைம்மாறு கருதாது கல்வி போதிக்கத் தொடங்கியதும் இவரிடத்தில் பலரோர் கல்வி கற்கத் தொடங்கினர். பின்னரில் தமிழ்ப் புலமைத் திறத்தில் தனித்தலைமை பெற்று விளங்கிய வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் 1885-ஆம் ஆண்டில் இவரிடம் கல்வி கற்கத் தொடங்கினர். அப்போது இவரோடு இருபதின்மருக்கு மேற்பட்டவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். அவர்களிற் பெரும்பாலார் சிறந்த புலவர்களாயினர்.

நூல்கள்

இவர் தமது ஊராகிய திருக்குளந்தையில் இருந்த போது அவ்வூர் முருகக் கடவுள்மீது, "திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்," என்னும் நூலை இயற்றினர். இந் நூல் 1896-ஆம் ஆண்டில் வடகரை பெருநிலக்கிழார் இராமபத்திர நாயுடு என்பவருடைய பொருளுதவியால் அச்சிடப்பட்டு வெளியாகியது. மதுரையில் இருந்த காலத்தில் திருப்பரங்குன்றம் முருகக் கடவுள்மீது "திருப்பரங்குன்றத் தந்தாதி" என்னும் நூலை யமகம் பொருந்தியதாக இயற்றினர். மதுரைப் பெருமான்மீது "மதுரைமாலை" என்னும் நூலைப் பாடினர். இந் நூல் முதல் ஐம்பது பாடல்களும் முன்னீரடிகளும் பின்னீரடிகளும் தனித்தனி யமகமடக்கு வாய்ந்துள்ளன. இறுதி ஐம்பது பாடல்களும் முன்னீரடிகள் சிலேடையும் பின்னீரடிகள் யமகமடக்கும் அமைந்து விளங்குகின்றன. இந் நூலைக் குறித்து இவருடைய மாணவராகிய பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூ. சாத்திரியார்),

"மாமதுரை மாலை மடக்கோ டியமகமும்
காமர் சிலேடையும் காட்டிமுதற்—பாமருவத்

தண்டமிழா சான்எம் சபாபதிப்பேர் வள்ளல்சுவைக்
கண்டமிழ்தாத் தந்தான் கனிந்து."

என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

யாகமடக்கு

"மஞ்சரங்க மாவேய் மணிக்கொடிசேர் மன்றுதொறு
மஞ்சரங்க மாவேய் மதுரையே—விஞ்சுசடா
பாரத்து வாசத்தார் பற்றுடையார் வீடுபெறும்
பாரத்து வாசத்தார் பற்று."

சிலேடை

"காவலருஞ் சோலைக் கருங்குயிலும் யோகினரு
மாவிரதங் கொள்ளு மதுரையே—மேவுகற்ப
மாநீற்றி னாணிறைவன் மாயனயன் போற்றிடுபெம்
மாநீற்றி னாணிறைவன் வைப்பு."

இறுதி

அறிவுக் கடலாக விளங்கிய இவர் 1898-ஆம் ஆண்டில் தமது அறுபத்தோராவது அகவையிலே (ஆனித் திங்களிலே) இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

66. முத்துச்சாமி அய்யர்

தோற்றம்

மதுரையில் இருந்த இவர் ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் நன்கு கற்றுத் தேறினர். ஆங்கிலத்தில் எம். ஏ. என்னும் பட்டம் பெற்றார். இருமொழிப் புலமையும் இவனிடத்தில் நன்கு அமைந்திருந்தது. இனிய தமிழ்ச் செய்யுட்களை விரைந்து பாடுவதில் நல்ல திறமை இவருக்கு அமைந்திருந்தது.

அறிவுரை

நல்ல புலமை பெற்று விளங்கிய இவர் பாடசாலைப் பரிசோதகர்க்குத் துணையாளராகத் தொழில்புரிந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரையில் தமிழ்ப்புராதன சரித்திர ஆராய்ச்சிச் சங்கம் ஆகியவைகளில் உறுப்பினராக இருந்தார். பாண்டித்துரைத் தேவரால் தோற்றுவிக்கப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த கருத்துச் செலுத்தி வாணாள் முழுவதும் உழைத்தார். மக்கட்கு இவர் புரிந்த நன்மைகள் பல.

அறிஞர்கள் தொடர்பு

இவர் காலத்தில் வாழ்ந்திருந்த அறிஞர்கள் எல்லாருடைய நட்பும் இவருக்கிருந்தது. தமிழ்க்கலை வல்லார்க்கு இவர் எழுதுங் கடிதங்கள் முழுவதுமோ அன்றி ஒரு பகுதியோ அல்லது தொடக்கமோ செய்யுள் வடிவமாக இருக்கும். காலமான அறிஞர்கள் பலர்மீது இரங்கற் பாக்கள் பாடியுள்ளார்.

தனிப்பாடல்கள்

இவர் அவ்வச்சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள், திருமண வாழ்த்து, இரங்கற்பா, பொதுவான செய்திகள்

அமைந்த பாடல்கள் ஆகியனை பல. அனைவகனை யெல்லாம் தொகுத்து வகைப்படுத்தி, "தனிப்பாக்கோவை," என்னும் பெயருடன் நூலாக வெளியிட்டுள்ளார். இவர் பாடிய சிலேடைப் பாடல்கள் சிலவற்றை அடியிற் காண்க,

[கடனுக்கும் குழந்தைக்குந் சிலேடையாகப் பாடியது]

"எண்ணிலா தெங்கும் இரைந்தே அலைதரலால்
கண்ணுறுபன் முத்தனனி கல்கலால்—விண்ணுறுலகம்
தண்மதிகண் ணுறுற்றக்கால் தாமெழுச்சி கொள்வலால்
ஒண்மதியும் ஆர்கலியும் ஒப்பு."

(அ-ரை.) எண்ணிலாது - எண்ணமில்லாமல், கணக்கில்லாமல். அலைதரல் - அலைதல், அலைவீசுதல். எழுச்சி - உவகை; பொங்கிமேலெழுதல். ஆர்கலி - கடல்.

[காப்பிக்கும் கணிகைக்குஞ் சிலேடையாகப் பாடியது]

"முன்னெளி நிற்பழுக்கம் முற்றுவித்துச் சார்ந்தோனைத்
தன்னடிமை யாக்கித் தனைப்படுத்துப்—பின்னர்ப்
பிணிமல்கச் செய்விக்கும் பெற்றியால் பொல்லாக்
கணிகையொடு காப்பியொப்பாங் காண்."

(அ - ரை.) தனைப்படுத்து - பிணித்து. பெற்றி - தன்மை, பெருமை.

[தாயைக்கும் அறிவிலிக்குஞ் சிலேடையாகப் பாடியது]

"சோருமும் தாமரையும் செந்தமிழ்நல் கல்லாளும்
நேராகு மாறு நிகழ்த்தக்கேள்—நேரிழாய்!
விற்றிகழும் தாமரையும் முட்டாள் விரிதமிழ்நல்
கற்றிலளு முட்டாளே காண்."

(அ - ரை.) நேராகுமாறு - ஒப்பாகுந் தன்மையை. நேரிழாய்!- (மகடூஉ முன்னிலை) பெண்ணே! முட்டாள் - முன்னோடு கூடியது ஆள், அறிவிலி.

இயற்றிய நூல்கள்

1. பதுமினி
2. பொருளதிகார ஆராய்ச்சி
3. தற்காலப் பெரியோர் வரலாறு
4. கதையும் பாட்டும்
5. தனிப்பாக்கோவை.

முதலியன இவருடைய நூல்கள். இந் நூல்களை இவரே அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்.

இறுதி

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த இவருடைய பிற செய்திகளும் காலமான ஆண்டு முதலியனவைகளும் விளக்க மாகவில்லை. இவர் து. அ. கோபிநாத ராயர் காலமான போது பாடிய இரங்கற்பாக்களை, கோபிநாத ராயர் வரலாற் றில் காண்க.

---

௧௯. சிதம்பர பாரதியார்

தோற்றம்

பாண்டிமா நாட்டில் திருப்பூவணத்திற்குத் தென் கிழக்கேயுள்ள மழவராயனேந்தலிலே மறையவர் குலத்திலே நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னே சிதம்பர பாரதியார் தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய தீட்சிதர்.

சுப்பராமையர்

சிதம்பர பாரதியாரோடு உடன் பிறந்தவர்கள் நால்வர். அவர்களுள் சுப்பராமையர் என்பவர் மூத்தவர். இந்தச் சுப்பராமையர் தமிழ்க்கல்வியை நன்முகக் கற்றுணர்ந்து சிறந்த புலமையடைந்து திகழ்ந்தார். நாறு அவதானங் களைப் புதுக்கோட்டை அரசர்முன்பு செய்து அவரால்

தோடா, வீரசங்கிலி, சால்வை, பல்லக்கு முதலிய பரிசுக ளடைந்து சிறந்தவர்.

சிதம்பர பாரதி

சிதம்பர பாரதியார் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்ப் புலமையையும் பெற்றுச் சிறந்த புலவராகத் திகழ்ந்திருந்தார். அடிக்கடி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று தமது புலமையைக் காட்டிச் சிறந்த பரிசுகள் பெற்றுவந்தார். திரிபு, யமகம், சிலேடை, சந்தம் முதலியவைகளைப் பாடுவதில். இவர் மிகவல்லவர். இவர் பல இசைநூல்கள் இயற்றினர்.

துறவு

இவர் கல்வியறிவிற் சிறந்து விளங்கியமையின் உள்ளம் தூய்மையடைந்து விளங்கியது. அதன் பயனகத் துற வறத்தையடைந்து சிதம்பர அடிகள் என்னும் பெயருடன் விளங்கியிருந்து எவிளம்பியாண்டு ஆடித்திங்களில் இறை வன் திருவடிநீழலை யடைந்தார்.

இயற்றிய நூல்கள்

1. பெரியபுராணைக் கீர்த்தனை
2. உருக்குமணி கலியாணம்
3. துருவ சரித்திரம்
4. குசேல சரித்திரம்
5. அம்புலீட சரித்திரம்
6. நாணைனந்தப் பேரின்பக் கீர்த்தனை
7. மதுரை மீனாட்சியம்மை பலசந்தக் கும்மி
8. திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பலசந்தக் கும்மி
9. மயூரகிரிநாதர் வண்ணம்

இவர் இயற்றிய பெரியபுராணக் கீர்த்தனைப் பாடல் ஒன்றைக் அடியிற் காண்க:

விருத்தம்

"பெரும்பவனி வந்துமணித் திருக்கோயில்
புகுந்துசிங்கப் பிடாரால் தாங்கி
விரும்பவனி அரசர்பணி ஆதனத்தில்
பாதுகுல வேந்தன் பத்திக்
கரும்பவனி தயமகிழ்ந்துற் றுலகமெலாம்
காக்கவுண்பர் கனாக்காத் தின்பம்
தரும்பவனின் னையுவுல்லை எறிபத்தர்
காணியெனச் சார்ந்தார் தாமே."

கரு. பிச்சை இபுராகிம் புலவர்

தோற்றம்

திரிசிரபுரத்திற்கு அண்மையில் உள்ள அரசங்குடி என்னும் சிற்றூரில் 1863-ஆம் ஆண்டில் இபுராகிம் புலவர் பிறந்தார். இவருடைய சமயம் முஸ்லீம் சமயம். தந்தையார் பெயர் காதிறுசா ராவுத்தர். தாயார் பெயர் மதார்பீபீ அம்மையார்.

வளர்ப்புத் தந்தை

இவருடைய மூன்றாவது அகவையில் தந்தையார் இறந்தார். தாயார் இவரை அழைத்துக்கொண்டு 1866-ஆம் ஆண்டில் திரிசிரபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அதிராம் பட்டினத்தைச் சேர்ந்த ஆசியார் இராவுத்தர் என்பவர் அந்நாளில் திருச்சியில் வாணிகஞ் செய்துகொண்டிருந்தார். இபுராகிம் புலவரின் தாயார் ஆசியார் இராவுத்தரை மறுமணம் புரிந்துகொண்டார். ஆகவே ஆசியார் இராவுத்தர் இபுராகிம் புலவருக்கு வளர்ப்புத் தந்தையானார். ஆசியாரிடம் செல்வம் மிகுதியாக இருந்தது.

கல்வி கற்றல்

ஆசியார் இராவுத்தர் தம்முடைய வளர்ப்பு மைந்தனைப் பள்ளியில் வைக்கத்தொடங்கினர். வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு தின்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். பின்னாளில் பெரும்புலவர்களாக விளங்கிப் புகழ்பெற்ற அறிஞர்களிற் சிலர், முன்னாளில் பள்ளிக்கூடம் போகாத சண்டிகளாகக் குறும்புசெய்து கொண்டு திரிந்தவர்களென்று அவர்களுடைய வரலாறுகள் கூறும். பிச்சைஇபுராகிம் புலவரும் அக் கூட்டத்தில் சேர்ந்தவரானர். பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் செல்லமாட்டார். வலுக்கட்டாயமாகப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய்த் தள்ளினால் மற்றைப் பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பார். ஊரார் இவரைக், "குறும்பன்" என்றும், "முரடன்" என்றும், "அடங்காப்பிடாரி" என்றும் கூறி மாறுகடந்துகொண்டார். மற்றைப் பிள்ளைகளுக்கு இரத்தக் காயங்களை உண்டுசெய்து மகிழ்வார். இவருடைய வளர்ப்புத் தந்தையார் செல்வராகச் சிறந்து விளங்கியபடியால் இவரை யாரும் கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் அஞ்சினர்.

புலமைக் கல்வி

முதலில் முரடர்களாகவும் பொல்லாதவர்களாகவும் இருப்பவர்கள் காலப்போக்கில் நல்லவர்களாக மாறிவிடுவது உலக இயற்கை. இபுராகிம் புலவரும் பிரு விசையில் நல்லவராக மாறிவிட்டார். அந் நாளில் உறையூரில் முத்து வீர ஆசாரி என்பவர் ஒருவர் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். அவர் முத்துவீரியம் என்னும் பெயரோடு இலக்கண நூல் ஒன்றுஞ் செய்தவர். சிலருடைய தூண்டுதலின்மீது பிச்சைஇபுராகிம் முத்துவீர ஆசாரியிடஞ் சென்று இலக்கண இலக்கியங்களை முறைமையாகவும் ஒழுங்

காகவும் பயின்றார். அகவை பதினைந்து நிரம்புவதற்குமுன் நிறைந்த தமிழ்ப்புலவரானார்.

வாழ்க்கை

புலவரின் வளர்ப்புத் தந்தையார் மிகுதியாகச் செல்வந் தேடியிருந்தபடியால் புலவருடைய வாழ்க்கை இனிதாக நடந்துகொண்டிருந்தது. இவர் தாம் கற்ற கல்வியைத் தமது ஆண்டவன்மீது புகழ்நூல்கள் பாடுவதில் செலவிட்டார். இவர் இருவகைச் செல்வமும் பெற்று விளங்குவதைக் கண்ட புலவர்கள் பலர் இவர்மீது செய்யுள்கள் இயற்றிக் கொண்டுவந்து பரிசுபெற்றுச் சென்றனர். புலவருக்குத் திருமணம் அடுத்தடுத்து நடைபெற்றது. மனைவியர் மூவர். ஆண்மக்கள் ஐவர்; பெண்மக்கள் எழுவர். பெருங் குடும்பத்தை உண்டாக்கிக்கொண்டு வள்ளலாக வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்தபடியினாலும், தன் மருமகள் வாழ்ந்திருந்தபடியினாலும் திருமகள் புலவரை விட்டுப் பிரியத் தொடங்கினள்.

ஆசிரியத் தொழில்

புலவர், வாழ்க்கையை மேற்கொண்டு நடத்துதற் பொருட்டுத் தமது முப்பத்தாறுவது அகவையில் எஸ். பி. சி. கல்லூரியில் தமிழாசிரியராகத் தொழில்புரியத் தொடங்கினர். ஒன்பதாண்டுகள் தமிழாசிரியராகப் பணி புரிந்தார்.

மன்னர்கள் நன்கொடை

புலவரின் புகழ் திக்குகள்தோறும் சென்றது. இராமநாதபுரம் அரசர், எட்டையபுரம் அரசர் முதலியோர் இவரை வரவழைத்து இவருடைய புலமைத்திறத்தை நன்கு கண்டுணர்ந்து தக்கவாறு பரிசில்கள் வழங்கிப் பாராட்டினர்.

தமிழ்ச்சங்க உறுப்பினர்

இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அச் சங்கத்தின் முன்னேற்றங் கருதிப் பல வேலைகள் செய்தார். இறுதிவரை தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராக இருந்தார்.

தமிழ்த்தொண்டு

இவர் கிறித்துவக் கல்லூரியில் வேலை பார்க்கத் தொடங்குவதற்குமுன் அஃதாவது தமது பதினெட்டாவது அகவை முதல் இலக்கண இலக்கியங்களைப் பலருக்குங் கற்பித்தார். இவரிடம் ஏறக்குறைய நூற்றைம்பது மாணவர்கள் படித்தார்கள். இலக்கணப்புலமையை நன்முகப் பெற்றிருந்தபடியால் மாணவர்கட்கு இலக்கணத்தை இனிமையும் எளிமையும் அமைந்த முறையில் தக்கவாறு போதித்தார். இலக்கணத்தைக் கண்டு அஞ்சிய பலர் இப் புலவருடைய போதனைத்திறனால் அவ்வச்சம் ஒழிந்து இலக்கணத்தை எளிதாகக் கற்றுக்கொண்டனர். தொண்டிமவுனகுரு மஸ்தான், சின்னத்தம்பி இராவுத்தர், மீனாட்சி சுந்தரப்பண்டிதர், சந்தக்கவி சாமிநாதப் பிள்ளை, மதுரை முத்துப்பண்டிதர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தரப்பண்டிதர், கம்பப் பீர்முகம்மதுப் போவலர், உறையூர் சிந்திரகவி ஸையது இமாம்போவலர், வித்துவான் அமிர்தசுந்தரனாதப் பிள்ளை, மதுரகவி சுப்பராயப்பிள்ளை, வைத்தியலிங்கம் பிள்ளை, விசயரங்கம் பிள்ளை, கண்ணுடிப் புலவர் முதலியோர் இவரிடம் தமிழ் கற்றுத் தேறியவர்கள்.

இறுதியும் ஈமச் சடங்கும்

இவர் கிறித்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்துகொண்டிருக்கும்போது தமது நாற்பத்தைந்தாவது அகவையில் 1908-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத்

துறந்தார். தமிழறிஞர்களும் பிறரும் இவருடைய மறைவு குறித்துப் பெரிதும் வருந்தினர். அறிஞர்கள் இரங்கற் பாப் பாடி இரங்கினர். இவர் இவ்வுலக வாழ்வைத் துறந்து பிரமமாகக்கிடக்கும்போது சென்னைக் கிறித்துவ சங்கப் போர்டில் இருந்து "உமது தமிழ்த்தொண்டைப் பாராட்டி ஊதியத்தை 150-ல் இருந்து 250 ஆக உயர்த்தியிருக் கிறோம்" என்று அறிவிப்பு வந்ததாம்.

இயற்றிய நூல்கள்

1. பகுதாது பாமாலை
2. ஆதமலை திருப்புகழ்
3. வெள்ளாங்குளத்தார் அவுலியாமாலை
4. திருமதினத்துக் கலம்பகம்
5. திருமதினத்துப் பதிற்றுப்பத்தந்தாதி
6. ஈகூர் பிள்ளைத்தமிழ்
7. மகபூப் சுபகானிமாலை
8. நாயகத் திருப்புகழ்
9. நத்தகவ்லி யாண்டவர்கள் பிள்ளைத்தமிழ்
10. சீதக்காதிப்பதிகம்
11. மொகிதீன் ஆண்டவர் மாலை
12. திருமதினத்து வெண்பா வந்தாதி
13. திருமதினத்து மாலை
14. திருமதினத்து யமக வந்தாதி

என்பன இவரால் இயற்றப் பெற்றவைகளில் சில.

௧௬. சாதுநாராயண தேசிகர்

தோற்றம்

வேதாந்தப் புலமையையும் இலக்கண இலக்கியப் புலமையையும் ஒருங்கே பெற்று விளங்கிய இவர், வடார்க்காடு மாவட்டம் இராயவேலூரிலே, 1851-ஆம் ஆண்டு சனவரித் திங்களுக்குச் சரியான சாதாரண ஆண்டு தைத் திங்களிற் பிறந்தார். தந்தையார் பெயர் இலட்சுமைய நாயகர். தாயார் பெயர் சேடம்மாள்.

கல்வி

இவருக்கு அகவை ஒன்பது நடந்துகொண்டிருக்கையில் தந்தையார் விண்ணுலகடைந்தனர். தாயார் இவருடைய உடலை வளர்த்தலோடு அறிவை வளர்ப்பதிலும் கருத்துச்செலுத்தினார். சுப்பைய ரெட்டியார் என்பவரைக் கொண்டு தெலுங்கு கற்பிக்கச் செய்தார். இவர் மிகு விரைவாகத் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டார். இவர் மிகு விரைவாகத் தெலுங்கு கற்றுக்கொண்டதைக் கண்ட இவருடைய தெலுங்கு ஆசிரியர் இவரைத் தம்முடைய ஆசிரியரான இராமசாமி நாயுடுவிடம் அனுப்பித் தமிழ்க்கல்வி கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். இராமசாமி நாயுடு இவருக்குப் போதிய அளவு தமிழ்க்கல்வி கற்பித்தார்.

வேதாந்த நூல் கற்றல்

இவருடைய பதினாறாவது அகவையில், இவர் குடியிருந்த வீட்டில் உள்ளவர்கட்கு வைணவாச்சாரியார் ஒருவர் திதிசெய்து வைத்தலைக்கண்ட இவர், "வீடுபேறு இதனால் உண்டாகமாட்டாது" என்று கூறி எள்ளி நகையாடினர். இவரது செயலைக்கண்டு இவருடைய தாயார் இவரைச்

சினைந்து வைதது கண்டித்தனர். அப்பொழுது எதிர்வீட்டுத் திண்ணையிலே அதிதியாக ஒரு பெரியவர் வந்து தங்கியிருந் தார். அவர் அகத்திய முனிவரின் வழியடியார். ஞான சுந்த நாதமுனி அடிகள் என்னும் பெயருடையார். இவரை இவருடைய தாயார் வைது கண்டித்தலைக்கண்ட அப் பெரி யார் இவருடைய தாயாரைப் பார்த்து, "அம்மா! இவனை எளிமையான பையனை என்னாதே. இவன் சிறந்த அறி வாளி. இவன் இயம்புவது உண்மைதான். இவனுக்கு அரையணாக் கொடுப்போமாயின் நான் ஒரு புத்தகம் வாங்கிக் கற்பிக்கிறேன்," என்று கூறினர். பெரியவர் கூறியதற்கு அம்மையார் உடன்பட்டனர். அடிகளார் நாநா சிவ வாதக் கட்டளை என்னும் வேதாந்த நூலை வாங்கிக் கற்பித்துச் சிலகாலம் உடனிருந்தனர். பிறகு வேதாந்தத்தின் உண் மைப்பொருளை உணர்த்திவிட்டுச் சென்றனர்.

மேலுங்கற்றல்

அதுமுதல் இவர் மேன்மேலும் வேதாந்த நூலை நன்கு கற்றுணரலானார். தெலுங்கு மொழியின் துணையால் வட மொழியையும் அதில் உள்ள வேதாந்த நூல்களையும் கற் றுணர்ந்தார். தமிழ்மொழியில் கற்காமலிருந்த நூல்களை யெல்லாம் தாமே ஆய்ந்துணர்ந்து தெளிந்தார்.

அறிவன்

வேதாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றுச்சிறந்த புலமையடைந்திருந்த இவர் திருவள் ளூர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து மாண வர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

திருமணம்

இவருடைய தாயார் இவர் திருமணஞ்செய்துகொண்டு குடும்பவாழ்க்கையில் ஈடுபடவேண்டும் என்று எண்ணினர்.

தமது நோக்கத்தை மைந்தனுக்குத் தெரியப்படுத் தினர். உற்றார் உறவினர்களும் அவ்வாறே செய்யுமாறு வற்புறுத்தினர்கள். வேதாந்த நிலையில் உள்ளத்தைச் செலுத்திய இவர் "தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தேன் அந்தோ காலமெலாம்" என்று காலத்தைத் தொலைக்க விரும்பாதிருக்கும் நிலையினராயினும் மற்றவர் களுடைய வேண்டுகோளுக்காக ஒருவாறு இணங்கினர். திருமணம் புரிந்து திருவள்ளுவர்போல் இல்வாழ்க்கையை நடத்தினர்.

சொற்போர்

முகமதிய சமயத்தினரோடும் கிறித்துவ சமயத்தின ரோடும் வைணவ சமயத்தினரோடும் சொற்போர்கள் நிகழ்த்தி, அவர்களைச் சொற்போரில் வென்று மிகுந்த புகழ் பெற்றனர்.

ஞானசிரியர்

யாண்டும் அத்வைத சமயத்தை நன்முகப் பரப்ப வேண்டுமென்பது இவருடைய நோக்கமாக இருந்தது. பல விடங்களிலும் வேதாந்தச் சொற்பொழிவுகள் பல செய் தார். மெய்யன்போடு தம்மையடைந்தவர்களுக்கு வேதாந்த வித்தினையக் கற்பித்தார்.

பண்பு

இவர் கற்றுங்கொழுகும் நற்றிறம் முற்றும் அமையப் பெற்றவர். யாண்டும் பொறுமையையே மேற்கொள்பவர். பொய்ம்மொழி புகலுதலையறியாப் புனிதர். எந்நாளும் பிரமவடிவமாகவே இலங்கியிருந்தார். இவருடைய ஒவ் வொரு மொழியும் வேதாந்தத்தின் நுண்பொருளை விளக்கும்.

நூல் இயற்றல்

அநுபவானந்த தீபிகை என்னும் வேதாந்த நூலை இவர் இயற்றினர். அந்நூல் வேதாந்தப்பொருள் நன்கு அமையப்பெற்றது. இரண்டு பூன்று பகுதிகளாக ஆயது. அந்நூலைப்பாராட்டி, காஞ்சிபுரம் இராமாநந்தயோகி, திருமயிலை சண்முகம் பிள்ளை, மணிமங்கலம் திருவேங்கடமுதலியார், பவழை தக்கவேலையர், சீயபுரம் வேலாயுதமுதலியார் என்னும் பலர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். முதற்பகுதி சதுக செய்யுட்களையும், இரண்டாவது பகுதி நுவசு செய்யுட்களையும் கொண்டு விளங்குகின்றன.

"அண்டடகி ரண்டமிசைந் தமிழ்வர்எங்கள் பெருமான்
அநுதினமும் சாட்சியறி வாயிலகும் பெருமான்
தண்டகுண அசுரர்குடி மாளவைத்த பெருமான்
தயகுணச் சுரர்தமக்குத் துணையிருக்கும் பெருமான்
பண்டைமலத் திமிரமிறப் பதமளிக்கும் பெருமான்
பரந்தாம ஞெய்ப்பிறவிப் பயமறுக்கும் பெருமான்
தொண்டர்தமக் கருள்வான்பல் வடிவெடுக்கும் பெருமான்
தரிசறவெற் கருளவெளி தோன்றுடெரு மானே."

என்பது இரண்டாந் திருமுறையில் ஒரு பாட்டு.

இறுதி

இப்பெரியார் தமது அறுபதாம் அகவையில் 1911-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 25-ஆம் நாள் (சாதாரண ஆண்டு தை 13) வீடுபேற்றை யடைந்தனர்.

கஎ. பொன்னையா முதலியார்

தோற்றம்

இவர் ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் புதுவையில் தோன்றிக் கல்வி கேள்விகளில் சிறந்தவராக விளங்கினர். இவருடைய தந்தையார் பெயர் முத்து முதலியார். இலக்கண இலக்கியங்களோடன்றி வேதாந்த சித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றறிந்தார். வடமொழி உணர்ச்சியும் இவரிடம் நன்றாக அமைந்திருந்தது.

ஆசிரியர்

தம்மையடைந்த மாணவர்கட்கு வேதாந்த சித்தாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் போதிப்பதிலேயே இவர் தமது காலத்தைப்போக்கினர். இவரிடம் கல்விகற்ற பல் சிறந்த புலமை நலத்தையடைந்தனர்.

நூல்கள் இயற்றல்

இவர் தமது காலத்தைப் பெரும்பாலும் நூல்கள் இயற்றுவதில் செலவிட்டார்.

1. விநாயகர் அநுபூதி
2. விநாயகர் அலங்காரம்
3. விநாயகர் திருப்புகழ் போற்றிக்கலிவெண்பா
4. மயிலாசல முருகர் மும்மணிக்கோவை
5. குருத்தோத்திர பஞ்சகம்
6. இலக்குமியம்தாதி
7. சிவாகந்த லகரி
8. தேவிமானத பூசை
9. சித்சத்தியட்டகம்
10. தட்சணாமூர்த்தியட்டகம்
11. சுகாட்டகம்
12. மோட்ச சாதன பஞ்சகம்
13. சிவோக பஞ்சகம்

14. மகிடா பஞ்சகம்
15. திருக்குத்திருசிய விவேகம்
16. ஆத்மபோதம்

முதலியன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவருடைய நூல்களைப்பாராட்டி, சிவசுப்பிரமணிய தேசிகர், சிதம்பரம் சண்முக அடிகள், குணமங்கலம் பச்சையப்ப முதலியர் என்னும் பலர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்கள்.

"தேகமிந் தியக்கள் புந்தி திகழ்மனம் பகுதி யாதி
பாகமாம் இவற்றி னென்றும் பகர்விலட் சணமாய் நின்று
சோகமாம் அவற்றின் வித்தி சாட்சியாய்த் துலங்கு கின்ற
ஏகமாம் பிரத்யக் கான்மா இறைவன்போன் றுணைவேண்டும்."

என்பது இவர் இயற்றிய ஆத்மபோதப் பாடலுள் ஒன்றாகும்.

இறுதி

பிறகு இவர் துறவறத்தைக் மேற்கொண்டு சிவாகந்த மூர்த்தி என்னும் பெயருடன் விளங்கியிருந்தார். இவர் காலமான நாள் முதலியன விளக்கமாகவில்லை.

கா. ஆ. முத்துத்தம்பி பிள்ளை

தோற்றம்

சோழவளநாட்டிலே உள்ள மாணிப்பாய் என்னும் ஊரில் 1858-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினெட்டாம் நாள் ஆ. முத்துத்தம்பி பிள்ளை பிறந்தார். தந்தையாருடைய பெயர் ஆறுமுகம் பிள்ளை. இவருடைய குலம் வேளாளர் குலம். தந்தையாராகிய ஆறுமுகம் பிள்ளை கடவுளிடத்தில் அன்பும் நல்லொழுக்கமும் அமையப்பெற்றவர். இச்சீரிய குணங்கள் முத்துத்தம்பி பிள்ளையிடமும் அமைந்

திருந்தன. முத்துத்தம்பி பிள்ளையின் மூன்றோர்கள் சில தலைமுறைகளாக உயர்ந்த நிலையில் விளங்கியிருந்தனர்.

கல்வி

மானிப்பாய்க்கு அண்மையில் உள்ள சித்தார் ஒன்றில் இவருடைய கல்விப்பயிற்சி தொடங்கியது. தொடக்கப் பள்ளியில் கற்கவேண்டியவைகளைக் கற்றுக்கொண்டபின் யாழ்ப்பாணம் நடுநிலைப்பள்ளியில் இவருடைய மேற் படிப்புத் தொடங்கியது. இங்கு இவருடைய கல்விப் பயிற்சி பலவழிகளிலும் முன்னேறிச் சிறந்தோங்கியது. ஒரு துறையில் பணிபுரிதற்கான திறமையை அடைந்தார்.

அறிவல்

இலங்கை எஸ்டேட் கம்பனியாரால் நாவலப்பிட்டி மலையில் நடத்தப்பெற்ற பள்ளி ஒன்றில், 1876-ஆம் ஆண்டு தமிழாசிரியராகப் பணிபுரியத்தொடங்கினர். ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார். அத் தொழிலில் இவருக்குப் போதிய ஊதியம் கிடைத்தது. ஆயினும் இவர் இந்தியாநாட்டிற்கு வரவேண்டும் என்னும் எண்ணத்தை மேற்கொண்டிருந்தார். 1880-ஆம் ஆண்டு இலங்கையை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

இந்தியாவில் வேலை

"தான் சென்ற திசைக்குப் பாழ்நட்டோரை இன்மை" என்று அறநூல் முறையிடுகின்றது. இதன்பொருள் நண்பர்களில்லாத ஊருக்குச்சென்றால் தொல்லையேற்படும் என்பது. நண்பர்களையும் உறவினர்களையும் தம்மையறிந் தவர்களையும் பெற்றிராத இந்தியாவுக்கு வந்த இவர் தொடக்கத்தில் மிகத் தொல்லைப்பட்டார். ஆயினும் அத் தொல்லைகளைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. தமது உழைப்பினாலேயே முன்னுக்கு வரவேண்டும் என்னுந்திடம்

படைத்த உள்ளத்தோடு மிக ஊக்கமாக ஆக்க வேலைகளில் ஈடுபட்டார். பலவகையான தொல்லைகளுக்கு இடையிலும் தமிழை மறக்கவில்லை. எப்பொழுதும் தமிழ் நூல்களைப் படிப்பதிலேயே தமது காலத்தைப் பெரிதும் செலவிட்டார்.

திருத்துறைப்பூண்டியில் வேலை

தஞ்சை மாவட்டத்திலேயுள்ள திருத்துறைப்பூண்டியில் அழகியநாதன் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய மக்களுக்குத் தமிழ் பயிற்றும் ஆசிரியராக இவரை ஏற்படுத்தினர்கள். இத் தொழிலால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதற்கு இயலாது என்பதை இவர் நன்றாக உணர்ந்திருந்தும் சிறிது காலம் அந்த வேலையை ஏற்றுக்கொண்டு பார்த்தார்.

நாகபட்டினத்தில் வேலை

மேற்கூறிய வேலையில் இருந்து விலகி நாகபட்டினத்தையடைந்தார். அங்கிருந்த ஆண்டர்சன் கம்பெனியில் நல்ல ஊதியத்தில் எழுத்தாளராகவும் கணக்காளராகவும் தொழில் புரியத்தொடங்கினர்.

ஆசிரியத் தொழில்

அந்நாளில் பொறையாற்றில் "சத்தியாபிமானி" என்னும் பெயருடன் பத்திரிகையொன்று தொடங்கப்பெற்றது. பத்திரிகையைத் தொடங்கிய உரிமையாளர், முத்துத்தம்பிபிள்ளையை அழைத்து, அப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்து இவரும் ஆசிரியராக இருந்து நல்ல பணிபுரிந்தார். உரிமையாளருடைய உளம் உவக்குமாறு இவர் தமது கடமையை நிறைவேற்றியபடியால், அவர் உளம் மகிழ்ந்து பெரிய தொகையை நன்கொடையாக

வழங்கினர். அத் தொகையைத் தமிழ் இலக்கியப் பணிக்குப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

சென்னையில் அச்சகம்

முத்துத்தம்பி பிள்ளை 1885-ஆம் ஆண்டு சென்னை மாநகருக்குக் குடியேறினர். ஆண்டர்சன் தெருவில் "சூபிலி அச்சகம்" என்னும் பெயருடன் அச்சகம் ஒன்றைத் தொடங்கி நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். கனிதாசன் வாழ்க்கை வரலாற்றை வடமொழியில் இருந்து மொழிபெயர்த்துப் பல பதிப்புகள்வரை வெளியிட்டார். சீரிய முறையில் நூல்கள்பல இவ்வச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன. 1890-ஆம் ஆண்டில் விக்டோரியா இயற்கை வரலாற்றுக் கழகத்தின் உதவியாளராக இலங்கைக்கும் சென்னை மாகாணத்திற்கும் ஏற்படுத்தப்பெற்றார்.

தாய்நாடடைதல்

1893-ஆம் ஆண்டில் இலங்கைக்குத் திரும்பி யாழ்ப்பாணத்தை யடைந்தார். வண்ணார் பண்ணையில் இருந்த ஆறுமுக நாவலரின் வீட்டை விலைகொடுத்து வாங்கி அதற்கு "நாவலர் கோட்டம்" என்று பெயரிட்டார். வார்டு அன் தேவி என்னும் பெயரோடு மருந்துக்கடையும் புத்தகக் கடையும் ஒருங்கு அமைய ஒரு கடையைத் தொடங்கினர். ஓழிவு வேளைகளில் மருத்துவத்தைக் கற்று வல்லவராகவும் ஆனர். "நாவலர் அச்சகம்" என்னும் பெயருடன் அச்சுக்கூடம் ஒன்றையுந் தொடங்கினர்.

தமிழ்த் தொண்டு

இவர் பல நூல்களைப் பதிப்பித்தார். இலகுபோதம் என்னும் தலைப்பில் பல பாடப்புத்தகங்களை வெளியிட்டார். இவருடைய உரைநடை எளிமையும் இனிமையும் அமைபப்

பெற்றதாக விளங்கும். இவர், அபிதான கோசம் என்னும் பெயரோடு அகரவரிசை நூல் ஒன்றை எழுதிவெளியிட்டார். இந்நூல் பெயர் விளக்கம் தெரிந்துகொள்வதற்கு உறுதுணையாக அமைந்து விளங்குகிறது. 1883-ஆம் ஆண்டில் "இலங்கை வரலாற்றுச் சுருக்கம்" என்னும் நூலை எழுதி வெளிப்படுத்தினர். ஆங்கிலத்திற்கு ஆங்கிலமும் தமிழும் பொருளாக அமைந்த அகரவரிசை நூல் ஒன்றை எழுதி வெளிப்படுத்தினர். இந்நூல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பேருதவியாக அமைந்து அவர்களால் புகழப்படுவதாயிற்று. மற்றும் பல நூல்களை இயற்றியும் மொழிபெயர்த்தும் வெளியிட்டார். பாரதச் சுருக்கம் என்னும் நூல் மக்கள் அனைவரும் பாரதக் கதையை எளிதாக உணர்ந்து இன்புறுவதற்கு ஏற்றவாறு அமைந்து எல்லோராலும் போற்றப்பெற்றது. மாணவர்கள் எளிய நடையில் தமிழ் இலக்கண இலக்கியப் புத்தகங்களைப் படித்து அணர்ந்து கொள்ளுமாறு, எளிய நன்னூல், சிவஞானம் இலக்கண நூல் என்னும் நூல்களை எழுதினர்.

பரிசு

அச்சகத்தொழிலில் இவருடைய பெருமையைப் பாராட்டி 1912-ஆம் ஆண்டில் அகில இலங்கைப் பொருட்காட்சி, வெள்ளிப் பதக்கத்தை இவருக்குப் பரிசாக வழங்கியது.

மருத்துவப் பத்திரிகை

"தமிழ் மருத்துவச் செய்தி" என்னும் மாதவெளியீடொன்றையும் இவர் நடத்தினர்.

பணிகள்

மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலத்தில் இருந்து அதன் வளர்ச்சியின் பொருட்டும் இவர் உழைத்

தார். தேர்வாளராகவுஞ் சிலகாலம் பணியாற்றினர். சென்னை அரசாங்கத்தார் வெளியிட்ட அகரவரிசை தயாக்கும் உதவி செய்தார். பொதுவாழ்விலும் இவர் ஈடுபட்டார். சைவப்பற்று, சிவவழிபாடு, செந்தமிழ்த் தொண்டு முதலியன இவரிடஞ் சிறந்தோங்கின.

இறுதி

1917-ஆம் ஆண்டில் நோய்கொண்டு ஆறுதிங்கள் வருந்திய இவர், ஐம்பத்தொன்பதாவது அகவையில் அதே ஆண்டில் நவம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

இயற்றிய நூல்கள்

1. அபிதான கோசம்
2. இலங்கை வரலாற்றுச் சுருக்கம்
3. ஆங்கில—ஆங்கிலத் தமிழ் அகரவரிசை
4. யாழ்ப்பாண வரலாறு
5. பாரதச் சுருக்கம்
6. இலக்கண நூல்கள் முதலியன இவரால் இயற்றப் பெற்றன.

கஉ. து. அ. கோபிநாதராயர்

தோற்றம்

சோழுவள நாட்டைச் சேர்ந்த துறையூரில் இருந்து சிரங்கத்திற்கு வந்து வாழ்ந்த மகாராட்டிர மாத்துவ அந்தணரது உயர்ந்த குடும்பம் ஒன்றில் கோபிநாதராயர் 1872-ஆம் ஆண்டிற் பிறந்தார்.

கல்வி

திருச்சிராப்பள்ளியில் உள்ள ஆங்கிலக் கல்லூரியிற் கல்விபயின்று இளமைப் பருவத்திலேயே பி. ஏ. த் தேர்வில்

தேறினர். பிறகு இரசாயன நூல் கல்வியைக் கற்று ளம், என என்ற பட்டத்தை 1899 ஆம்-ஆண்டில் பெற்றார். வட மொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பிற மொழிகளையுங் கற்றார்.

ஓவியக்கலை உணர்வு

ஓவியத் துறையிலும் இவருக்குச் சிறந்த புலமை இளமைப் பருவத்திலேயே அமைந்திருந்தது. இவர்தாம் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தே பலநிறத் தீட்டிய ஓவியம் ஒன்றை எழுதினர். அதன் அழகுஞ் சிறப்பும் பலராலும் பாராட்டப் பெற்றது. ஓவியக்கலைவல்ல அலை யினர் அப் படத்தைப் புகழ்ந்து பொன்பதக்கம் ஒன்றை நன்கொடையாக வழங்கினர். அப் படம் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இன்றும் விளங்கிக் கொண் டிருத்தலைக் காணலாம்.

அறிவுரை

மேற்கூறப்பட்ட கலைவன்மைகளுடன் சாசன பரி சோதனைத் திறமும் இவருக்குச் சிறப்பாக அமைந்திருந் தது. பழைய கல்வெட்டுகள் முதலிய பண்டைக் காலச் செய்திகளை ஆராய்ந்தறிவதிலும் அதைக் குறித்து மேலும் ஆராய்ச்சி செய்வதிலும் விருப்பமும் ஊக்கமும் இவருக்கு மிகுதியாக இருந்தன. ஆகவே அரசாங்க சாசன இலாகா வில் 1902 ஆம் ஆண்டில் ஓர் அறிவுரைப்பெற்று அமர்ந்தார். ஆயினும் இவர் அவ்வறிவுரை நெடுங்காலம் மேற்கொண் டிருக்கவில்லை. ஊக்கமும் உழைப்பும் உள்ள சிறுவராக இருந்தமையின் அவ்வறிவுரை விட்டு நீங்கித் தமது மன விருப்பம்போல் ஆராய்ச்சியை நடத்தலானார்.

ஆராய்ச்சியும் உழைப்பும்

ஆராய்ச்சியில் அவாவும் ஊக்கமுங்கொண்ட இவர் தமது கைப்பொருளைச் செலவிட்டு நாட்டின் பல பாகங் களுக்குஞ் சென்று கல்வெட்டுகள் செப்புத் தகடுகள் முதலியனவைகளைக் கண்டு பிடித்து ஆராய்ச்சி நடத்தினர். அவ்வாறு செய்த ஆராய்ச்சியில் வரலாற்று துட்பங்கள் பல தெரியலாயின. அவ் வாராய்ச்சிச் செய்திகளை ஆங்கிலப் பத்திரிகை தமிழ்ப் பத்திரிகை முதலியனவைகளில் வெளிப் படுத்தினர். இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல மதுரைச் செந்தமிழ் வெளியீட்டில் வெளியாயின. தமிழ் நாட்டின் பழைய வரலாறுகளை ஆராய்ச்சி செய்து வெளி யிடுவதில் இவருக்கிருந்த ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் மிகப்பெரிது. வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்ன டம் முதலிய பலமொழிப் பயிற்சிகள் இவருக்கிருந்தது இவருடைய சாதன ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாயின. பிறரால் கண்டுபிடிக்க முடியாதவாறு வடிவு சிதைந்தும் எழுத்துக் குளறியும் இறுக்கலாகவும் இருந்தவைகளை யெல் லாம் எளிதாக இவர் கண்டுபிடித்த திறமையைக் கண்ட பலர் இவர் இத் துறை ஆராய்ச்சிக்கென்றே இவ்வுலகில் உட லெடுத்தவர் என்று பாராட்டிப் பேசினர்.

ஓவியப்பயிற்சியின் உதவி

இவர் பெற்றிருந்த ஓவியப்புலமை இவருடைய சாதன வரலாற்று ஆராய்ச்சித் துறையைப் பெரிதும் அதிகப்படுத்தி நின்றது. பழைய செய்திகளைக் குறிக்கும் உருவங் களையோ சிலைகளையோ இவர்கண்டால் அவற்றின் படிகள் எடுத்தற்குரிய கருவிகளின் உதவியில்லாமலே உள்ளது உள்ளபடி தமது கையினாலேயே எழுதிவிடும் ஆற்றல் இவ ருக்கு அமைந்திருந்தது மேலும் நிழற்படம் எடுக்குந் துறையிலும் இவருக்குப் பழக்கம் மிகுதியாக இருந்தது.

திருவநந்தபுரத்தில் வேலை

1902-ஆம் ஆண்டில் திருவநந்தபுரம் அரசாங்கத்தினர் சாசன இலாகா ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தினர். திருவாங்கூர் அரசர் இராயருடைய சாசன ஆராய்ச்சிப் புலமையைப் பற்றிப் பலராலும் கேள்விப்பட்டார். அவ்விலாகாவின் தலைவராக இராயரை அரசரே ஏற்படுத்தினர். இராயர் அவ்வலுவலைத் தமது ஆயுள்வரை பார்த்துக்கொண்டிருந்து கண்டுபிடித்த ஆராய்ச்சி உண்மைகள் பல. தாமிர சாசனங்களும் கல்வெட்டுகள் பலவும் இவரால் கண்டறியப்பட்டன.

நூல் எழுதுதல்

"மலையாள மொழி சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்நாட்டில் இல்லை; தமிழ்மொழியே அந்நாட்டுக்குரிய மொழியாக இருந்தது. காலப்போக்கில்தான் மலையாளமொழி தமிழ்மொழியில் இருந்து மாறுபாடுகளோடு தோன்றிற்று. அந்நாட்டுத் தலைவர்களும் மக்களும் தமிழ் மக்களில் இருந்து வேறுபட்டவர்களல்லர்," என்னும் இத்தகையே முடிவுகளைத் தாம் ஆராய்ச்சியாற் கண்டறிந்து, "திருவாங்கூர்ச்சாசனத் தொடர்" என்னும் நூலாக ஆங்கிலத்தில் எழுதினர். பண்டைத் தமிழ் எழுத்துக்கள் காலந்தோறும் வேறுபட்டு வழங்கிய முறையை விவரப்படங்களுடன் நன்கு விளக்கி இவரால் அந் நூல்தொகுதியில் எழுதப்பெற்ற சிறந்த ஆராய்ச்சியுரை எல்லோரும் போற்றிப் பாராட்டத்தக்கதாகும்.

விக்கிரகத்துவம்

திருவாங்கூரில் அலுவலில் இருக்கும்போதே சிற்பத் துறையிலும் இவர் மிகுந்த ஊக்கமெடுத்து உழைத்தார். இதன்பொருட்டுக் கிடைத்தற்கரிய சிற்ப நூல்களையும்

ஆகமங்களையும் தொகுத்து ஆராய்ச்சி செய்தார். "விக்கிரக தத்துவம்" என்னும் பெருநூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளிப்படுத்தினர். நம் நாட்டுக் கோயில்களிலும் கற்கட்டிடங்களிலும் அமைந்த உருவங்கள் சிலைகள் முதலியவற்றின் சிற்ப உண்மைகளை அவற்றின் வரலாற்றுக் குறிப்புகளுடனும் உருவப் படங்களுடனும் எழுதிப் பதிப்பிக்கப்பெற்ற இந்நூல் உலகம் முழுவதும் போற்றத் தக்க சிறப்புடையதாகும். சிற்ப வரலாறு ஓவியக்கலை முதலியவைகளில் வல்ல இவரைப்போன்ற பெருஞ் சிறப் புடையோர்க்கல்லது மற்றையோர்க்கு இத்தகைய அருஞ் செயல்கள் செய்து முடித்துப் புகழ்பெறற்கு மிக அருமை யாகும்.

சமயத்திறன்

திருவரங்கத் திருப்பதியிற் பிறந்து வளர்ந்த இவர் வைணவசமய வரலாறுகளிலும் பழக்க வழக்கங்களிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் தெரிந்தவர்களைக்கொண்டு நடத்தப்பெறும் "மணியையர் உபந்நியாசத்தொடர்" என்னும் சொற் பொழிவை அச் சங்கத்தார் விருப்பப்படி இவர் செய்யத் தொடங்கியபோது வைணவசமய வரலாற்றைப்பற்றி விரிவாகச் சொற்பொழிவு செய்தலையைப் பலரும் அறிவர்.

பிறர் மதிப்பு

இராயருடைய பேரறிவையும் பரந்த ஆராய்ச்சித் திறமையையும் நன்குணர்ந்த பிறநாட்டறிஞர்களும் இவரிடத்தில் பெருமதிப்புக் காட்டிப் புகழ்ந்து போற்றினர்.

சோழ வமிச சரித்திரம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திய பாண்டித் துரைத்தேவர் இராயரிடத்தில் பெருமதிப்பும் பற்றும்

வைத்திருந்தார். இராயரைக்கொண்டு சோழமன்னர்களது குலமுறை வரலாற்றை எழுதி வெளியிடவேண்டும் என்னும் நோக்கம் தோலுருக்கிருந்தது. தமது எண்ணத்தை இராயருக்கு அறிவித்தார். இராயர் தமது முழுத்திறமையையும் ஆராய்ச்சித்திறத்தையுங்காட்டிச் சோழவமிச சரித்திரச் சுருக்கத்தை எழுதிக்கொடுத்து வெளியிடச்செய்தார்.

இவருடைய பண்புகள்

தம்மோடு பழகும் எல்லோருடைய உள்ளத்தையுங் கவரும் நற்றிறம் இராயரிடம் அமைந்திருந்தது. அருங்கலை விநோதராகிய இவருடைய ஒளி முகத்தில் எப்போதும் அறிவுச்சுடர் ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. ஓயா உழைப்பென்பது இவருடன் பிறந்து வளர்ந்த குணங்களுள் ஒன்று. இவர் தம்முடைய உழைப்புக்குப் பிறர் பாராட்டி மகிழும் மகிழ்ச்சியையே ஊதியமாக எண்ணியிருந்தார். சாசனங்களில் இருந்து எழுதப்பெறும் வரலாற்றுச் செய்திகள் ஒரு பக்கமாகச் சாய்வுபெறுது நேரிய முறையில் அமையுமாறு கருத்துச்செலுத்தியே இவர் பெரும்பாலும் எழுதுவார். பிறர் எழுதுவதில் தவறுகண்ட விடத்தில் அதனைக் கண்டித்தெழுதுவதற்குச் சிறிதும் பின்வாங்கார். இவருடைய உழைப்புச் சென்னை மாகாணத்திற்குப் பயன்பட்டிருக்குமாயின் எத்தனையோ கல்வெட்டும் தாமிர சாசனங்களும் ஆராயப்பட்டு வெளிவந்திருக்கும். அவ்வாறு நடவாமற் போனது குறித்துப் பலர் மனங்கவன்றனர்.

இறுதி

சாசனப் புலவராகிய இவர் தொடர்ந்து தமது வேலையை இவ்வுலகிற் செய்யுமாறு கூற்றுவன் விடவில்லை. 1919-ஆம் ஆண்டில், இவருடைய நாற்பத்தேழாம் அகவையிலே தன்னோருக்கழைத்துக் கொண்டனன். அப்

பொழுது அறிஞர்கள் பலரும் அடைந்த வருத்தம் அளவிட் டுரைத்தற் கரியது. பலர் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர். மதுரையில் இருந்த முத்துச்சாமி ஐயர் என்பவர் பாடிய இரங்கற்பாக்களிற் சிலவற்றை அடியிற் காண்க.

"அந்தோ தமிழகத்துக் கந்தகக்கூற் றின்றிழைத்த
சிந்தா குலக்கொடுமை செப்புந் தரமன்றே
கந்தாக் கலேக்கோபி நாதா! எம் எதமில்சீர்
முந்தார் மறையோய்! முடிந்தாய் நடுவயதில்
மூதறிரு சற்குணனீ முடிந்தாய் நடுவயதில்." (க)

[அ - ரை. சிந்தாகுலம்—துன்பம். கந்தக—அழியா.]

"தேசசரித்திரத்துறையில் தேர்ச்சியொடா ராய்ச்சிமிகும்
ஆசைசலி யாவூக்கம் ஆமிவற்றிற் குண்போல்வார்
மாசறுநீ செய்சோழ வம்சசரித் திரநூல்போல்
தேசுறுவோய் ஆசறுபன் னூல்தருமுன் சென்றனையே
சிலேக்கலையாய் சிறப்பிற்பன் னூல்தருமுன் சென்றனையே."

[அ - ரை. மாசற—குற்றமற. சிலேக்கலை—கல்வெட்டு.]

"வண்டமிழாங் கிளந்தெலுங்கு வடமொழிக்கே ளளமுரிமை
கொண்டுளசன் னடப்புலமை கூர்ந்துகல்வெட் டாராய்ச்சி
எண்டகுசித் திரங்கீதம் படம்பிடித்தல் என்பவற்றில்
பண்டிசி காமணியே! பார்துறந்தெங் குற்றனையோ
பாவலர்கா வலரேங்கப் பார்துறந்தெங் குற்றனையோ." (ங)

[அ - ரை. வண்டமிழ்—வளப்பம் பொருந்திய தமிழ். கேரளம்—மலையாளம்.]

"திருவனந்த புரநாட்டில் சிலாசா சனத்தலைமை
மருவிநந்தம் பெரியோர்கள் வாழ்காலந் தருவியெழில்
உருவநந்தாச் செல்வாக்கோ டுறுபொருள் நுண் மதிநட்பாம்
திருவநந்தம் டெருகுகையில் செம்மால்நீ சென்றனையே
தெருமரலுற் றியாமழுங்கச் செம்மால்நீ சென்றனையே."

[அ - ரை. சிலாசாசனம்—கல்வெட்டு. தருவி—தேடி. அநந்தம்—மிகுதியாக.]

இராயருடைய நூல்கள்

இராயர் பெரும்பொருள் செலவிட்டுப் பல அரிய நூல்கள் தொகுத்துவைத்திருந்தார். அந் நூல்களையும் அவர்தம் ஆராய்ச்சியில் கண்டெழுதி வைத்திருந்த குறிப்புக்களையும் இவருடைய குடும்பத்தாரிடம் இருந்து தகுந்த விலைகொடுத்து வாங்கிச் சாசன இலாகாவில் சேர்த்துவைத்துள்ளனர்.

உ0. வீரசைவக் கனகசபைக் கவிராயர்

தோற்றம்

வீரசைவக் கனகசபைக் கவிராயர் சோழவளநாட்டிலே திருவேரகம் என்னும் சுவாமிமலையிலே வீரசைவ மரபிலே தோன்றினர். இவருடைய முன்னோர்களும் நூல்களியற்றிய சிறந்த புலவர்களாக விளங்கியிருந்தனர்.

கல்வி

இவர் பள்ளிக் கல்வியைப் பாங்குறப் பயின்ற பின்னர் சபாபதி ஐயர் என்பவரிடத்தில் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேறிச் சிறந்த புலமையடைந்தார். இவருடைய ஆசிரியர் சபாபதி ஐயர் என்பது,

"துறையறியா எளியேனுக் கிலக்கியமும்
இலக்கணமும் தலக்க மேவு
நிறையதுவுந் தமிழறியுங் கவிரர்கண்முன்
சார்வுறுமிந் தெறியு நல்கிக்
குறையகற்றி யெனையாளுங் கோமானைப்
எழுந்தருள்செய் குருவாய் வந்த
மறையவர்சி காமணியாம் சபாபதிஐ
யன் திருத்தாள் மன்னி வாழ்வாம்."

என்று உடையார்பாளையத் தலபுராணத்தில் ஆசிரிய வணக்கங் கூறியிருத்தலால் பெறப்படுகிறது.

சமத்தானப் புலவர்

கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய இவருடைய புகழ் யாண்டும் பரவியது. இவர் காலத்தில் உடையார் பாளையத்தில் கச்சி உவரங்க பூபதி என்னும் பெருநிலக் கிழார் சிறந்து விளங்கியிருந்தார். கவிராயர் பெருநிலக் கிழார்மீது பல அரிய செய்யுட்களை இயற்றிக்கொண்டு போய் அரங்கேற்றினர். இவருடைய கல்வித் திறமையைக் கண்டு களித்த பெருநிலக்கிழார் இவரைத் தமது சமத்தானப் புலவராக ஏற்படுத்தினர். அந்நாள் தொட்டுக் கவிராயர் பெருநிலக்கிழாருடைய அவைக்களத்திற் சொற் பொழிவுகள் பல செய்து சிறந்த புகழுடன் விளங்கியிருந்தார்.

கம்பராமாயணச் சொற்பொழிவு

கம்பராமாயணத்தைக் கேட்போர் மனமகிழுமாறு சுவையுடன் சொற்பொழிவு செய்வதில் இவர் சிறந்து விளங்கியபடியால், இவருக்குக், 'கம்பராமாயணப் பிரசங்கி' என்னும் பெயரும் வழங்கியது. பலவிடங்கட்குஞ் சென்று கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

புராணம்

உடையார்பாளையம் என்னும் முற்கபுரிக்குப் புராணம் இயற்றவேண்டும் என்று பெருநிலக்கிழார் விரும்பினர். வடமொழியில் இருந்த புராணத்தை, இராசாச் சாத்திரி என்னும் வடமொழி அறிஞரைக் கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச் செய்து என்னூற்று இருபத்தைந்து செய்யுட் களில், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, மைமிசாரணியப் படலம், முற்கபுரி கேள்விப் படலம், பிரமா பூசித்த

படலம், அங்காரகன் பூசனைப் படலம், இராகவன் பூசனைப் படலம், அருச்சுனன் பூசனைப் படலம், வேதாள உருவீக்க படலம், தர்ச்சகன் பூசனைப் படலம், செமதக்கினி முனிவர் பூசனைப் படலம் என்னும் பதினெரு படலங்களமைந்த புராணமாகப் பாடினர். இத் தலைப் பராசக்தி, உ. வே. சாமிநாதையர், திவ்விலாபக முதலியார், சோமசுந்தரம் பிள்ளை முதலிய பலர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

இறுதி

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த இவருடைய காலம், பிற செய்திகள் முதலியன விளக்கமாகவில்லை.

இயற்றிய நூல்கள்

1. கங்கைகொண்ட சோளேச்சரத் தலபுராணம்
2. குழுமூர்த் தலபுராணம்
3. உடையார்பாளையத் தலபுராணம்
4. பெண்ணையாற்றுத் தலபுராணம்
5. திருப்புன்கூர்த் தலபுராணம்
6. திருக்களப்பூர்த் தலபுராணம்
7. பெரியபுராணச் சுருக்கக் கலிவெண்பா
8. கடம்பர்கோயில் பிள்ளைத்தமிழ்
9. மணத்தட்டைப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ்
10. சிவஞானபாலைய சுவாமிகள் மாலை
11. குருநமசிவாய மாலை
12. திருவேரக மாலை
13. கதையளையகி மாலை
14. கணக்கர் மாலை
15. தருமகர்த்தா மாலை
16. சண்முகவ்வடியம்மன் பதிகம்
17. சாமிநாதசாமி பதிகம்
18. சுப்பிரமணியர் பதிகம்
19. பத்தினைகல்லூர் அம்மன் பதிகம்

ஆகியவை இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவைகளிற் பெரும்பாலானவை அச்சாகி வெளிவந்துவிட்டன.

உக. ஆறுமுக அடிகள்

தோற்றம்

ஆறுமுக அடிகள் என்னும் இப் பெரியார் கொல்லம் 1050-இல் நிகழ்ந்த யுவ ஆண்டுச் சித்திரைத் திங்கள் இருபத்திரண்டாம்நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராசபாளையம் தோப்புப்பட்டியில் பிறந்தார். தந்தையார் பெயர் நெல்லிக்குமார சூப்பனர். தாயார் பெயர் சிவநாயகி அம்மையார்.

பாலகனி

இவர் நான்காவதாண்டிலேயே கல்வி கற்கத் தொடங்கினர். செய்யுள் பாடுந்திறம் கருவிலேயே அமைந்திருந்தது. அகவை ஏழு நடந்துகொண்டிருக்கும்போதே செய்யுள்கள் இயற்றத் தொடங்கிவிட்டார். பன்னிரண்டாவது அகவையில் பூசை, இறைவழிபாடு முதலியன செய்யலானார்.

திருமணம்

இருபத்துநான்காவது அகவையில் பேய்ச்சிமுத்து அம்மையார் என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்து இல்லறம் நடத்தத் தொடங்கினர். ஐந்தாறு ஆண்டுகள் வரையில் இல்வாழ்க்கையை இனிது நடத்தினர். இவருடைய உள்ளம் இல்வாழ்க்கையில் படியவில்லை. இல்லந் துறந்து துறவியாகி வெளிப்படுதற்கு எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

துறவு

> “ துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
> வுட்டா கழியு மெனின் ”

என்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாக்கு இருபத்தெட்டாம் அகவையில் இல்லந் துறந்து வெளியே

புறப்பட்டார். அந் நாளில் தொண்டைவள நாட்டிலே காஞ்சிமா நகரிலே நிச்சல இராமாநந்த சுவாமிகள் என்னும் பெரியார் சிறந்த மெய்யறிவாளராகத் திகழ்ந்திருந்தார். ஆறுமுகனார் இராமாநந்தரை அடுத்து அருளுரை பெற்றுத் துறவியானார்.

நூல்கள் இயற்றல்

வடலூர் இராமலிங்க அடிகளிடத்தில் பேரன்பு கொண்ட இவர், திருவருட்பிரகாச வள்ளலாராகிய அவரிடத்தில் பெரும் பற்றுக்கொண்டார். வள்ளலாருடைய வரலாற்றைப் புராண முறையாக முந்நூறு பாடல்களாகச் செய்துமுடித்தார்.

"ஆதிவா ரத்திற் சித்திரை ஆருரட் சத்தி ரத்தில்
சோதியோர் உருவம்ஆகித் தயாநிதித் தந்தை தாய்க்கு
நீதியும் அளியும் என்றும் நிலைத்திட மருதூர் என்னும்
கோதிலா ஊரில் வந்து குழவியாய் உதித்தார் வள்ளல்."

என்பது வள்ளலார் பிறப்புக் கூறும் பாடலாகும். மற்றும் இவர் மூவாயிரம் பாடல்களடங்கிய சிதாகாச சாகரம், குரு வருட்புகழ் என்னும் நூல்களையும் இயற்றியருளினர். வள்ளலார் புராணத்தைப் பாராட்டித் தருக்கவேதாந்த போதகாசிரியராயிருந்து காலஞ்சென்ற கோ. வடிவேல் செட்டியார்,

"கொள்ளுநெறி தள்ளுநெறி குவலயத்தோர்
தமகுணாததக குருவாய வந்த
தெள்ளியசீர் வள்ளலார் புராணமொன்று
சிறப்பனைத்துஞ் செறிந்து தோன்றக்
கள்ளமெறி காணுத ஆறுமுக
சாமியென்பான் கனக்கச் செய்தான்
எள்ளலிலா இந்நூலை எற்றுணர்வார்
பனிவினறி எய்து வாரே."

என்று பாடியுள்ளார்.

கருத்துக்கள்

இவர் பாடியுள்ள சிதாகாந்த சாகரம், வள்ளலார் புராணம், குருவருட்புகழ் ஆகிய நூல்களில் வேதாந்தக் கருத்துக்களும் ஆத்மாநுபவ இரகசியங்களும் மிகத் தெளிவாக அமைந்துள்ளன. சொன்னேக்கு, பொருணேக்கு, தொனடைநோக்கு முதலியனவைகளும் நன்கு அமைந்துள்ளன.

இறுதி

பெய்யறிவுப் புலமையுஞ் செந்தமிழ்ப் புலமையும் நிறைந்து விளங்கிய இவர் தொண்டை வளநாட்டிலே, ஆறுகாட்டை யடுத்த தாசர்புரம் என்னுஞ் சிற்றூரில் தம்மால் உண்டாக்கப்பட்ட திருமடத்தில் எறக்குறைய மூப்பதாண்டுகளுக்கு முன் இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

---

22. பிச்சையா நாவலர்

தோற்றம்

இப் புலவர், சண்டிய புகழ்சேர் பாண்டி மாநாட்டில் பொதியமலையை அடுத்து விளங்கும் மலையடிக் குறிச்சி என்னும் சிற்றூரிலே சைவவேளாளர் குலத்திலே எறக்குறைய நூற்றிருபது யாண்டுகட்கு முன்னர்த் தோன்றினர். தந்தையார் பெயர் அருணாசலம்பிள்ளை.

கல்வி

அக்கால முறைப்படியே கல்விகற்கத் தொடங்கிய இவர் இலக்கண இலக்கியங்களையும் கணக்கு முதலியனவை களையும் தக்காரிடத்திலே கற்றுச் சிறந்த புலமை யடைந்து திகழ்ந்தார். இவருடைய முன்னோர்கள் தலைவன் கோட்டை என்னும் நாட்டில், தாருகாபுரம் என்னுஞ் சிற் றூரிலே கணக்கப்பிள்ளை வேலை என்னும் அலுவலைப் பார்த்

தைக் கொண்டிருந்தனர். நாவலர் தாமும் அவ்வேலையை மேற்கொண்டு கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். கணக்குவேலை ஒன்றிலேயே தமது முழு நேரத்தையுஞ் செலவிட்டு விடாமல் மேலும் மேலும் நூல்களை ஆராய்ந்து தமது அறிவினை வளர்த்துக்கொண்டு வந்தார்.

முருகன் திருவருள்

இவர் முருகப்பெருமானிடத்தில் பேரன்புடையவர்.

"எத்தொழிலைச் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே---வித்தகமாய்
நாதிவினை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்"

என்னும் பட்டினத்துப் பிள்ளையார் திருவாக்கிற் கேற்பத் தாம் கணக்கப்பிள்ளைவேலை முதலியனவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் முருகன் திருவடிகளிடத்திலேயே தமது முழுக்கருத்தையுஞ் செலுத்தியிருந்தார். அக் கடவுள்மீது அடிக்கடி பாடல்கள் பல இயற்றிப் புகழ்ந்து பாடினர். ஒருநாள் முருகன் இவருடைய கனவிலே தோன்றித் திருவருள் புரிந்து மறைந்தான். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு செய்யுளை இனிமையாகவும் விரைவாகவும் பாடும் ஆற்றல் இவருக்கு மிகுதியாயிற்று. பெரும் பாலும் கடவுளைப் பாடுதலிலேயே தமது கடமையாகக் கொண்டார். சிறிது காலத்தில் தமது கணக்கப்பிள்ளை வேலையையும் வெறுத்து மறுமைக்கான வழியிலேயே தமது முழுநேரத்தையும் போக்கினர்.

தலபுராணம்

இவருடைய அருட்புலமையை நன்குணர்ந்த பலர் தாருகாபுரத்திற்குப் புராணம் பாடவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அப் புராணச் சுவடி வடமொழியில்

இருந்தனைத் தக்கவர்களைக் கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச் செய்து பிறகு தாம் அதனை எண்ணூற்று முப்பத்தாறு செய்யுட்கள் கொண்ட புராணமாகப் பாடி முடித்தார். இப் புராணம், பாயிரப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம், மைதிசாரணியப் படலம், புராண வரலாற்றுப் படலம், பதிகப் படலம், தல விசேடப் படலம், தீர்த்த விசேடப் படலம், மூர்த்தி விசேடப் படலம், திருக் கயிலாயப் படலம், பராசர முனிவர் தவம்புரி படலம், சேர சோழ பாண்டியர் பிணக்குத்தீர்த்த படலம், சேர சோழ பாண்டியர் காட்சிப் படலம், நாரதமுனிவர் தவம்புரி படலம், மாணபரன் வழிபடு படலம், மாணபரன் மகப்பேறு பெற்ற படலம், மாணபரன் உபதேசம்பெற்று முத்தி யடைந்த படலம், வேதாரத்தமன் குட்டரோகந் தவிர்ந்த படலம், முனிவர்கள் அருச்சனைப் படலம் என்னும் பத்தொன்பது படலங்கள் அமையப்பெற்றது. சொற் சுவை பொருட்சுவைகளில் சிறந்து விளங்குவது :

"பத்தியுடன் அகம்நெகிழ்ந்து கமழ்ந்திடுபன்
மலர்தூவிப் பரவி யாடித்
தத்திவரும் அருவியெனத் தன்செழுங்கண்
ணீர்சொரிந்து தனிமே லொருரும்
நத்திடவே நல்லனியின் இன்னிசையால்
துதிபுரிந்து நாடி நின்று
மத்திசனர் அடிபரவு மெய்யடியார்
போல்விளங்கி மல்குஞ் சூதம்."

என்பது இப் புராணத்தின் தல விசேடச் செய்யுளில் ஒன்றாகும். இந் நூலைப் பாராட்டிச் சுப்பிரமணியக் கவிராயர், சிவகிரி மகாலிங்கக் கவிராயர், கோட்டையூர் கந்தசாமிப் புலவர், பொய்கைநகர் திருமலையாண்டிக் கவிராயர், சேற்றூர் சிவசிதம்பர தேசிகர், புளியங்குடி முத்துவீரக் கவிராயர் முதலிய பல புலவர்கள் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

வெளியிடுதல்

நூலை இயற்றியோர் முயற்சிசெய்து அதனை வெளிப் படுத்தாதொழியின் அந்நூல் அப்படியே சிலகாலம் இருந்து பிறகு மறைந்தொழிந்து போதலும் உண்டு. இதனை நன்கு உணர்ந்த இவர் பல ஊர்கட்குஞ் சென்று பெருமுயற்சி செய்து பொருள் திரட்டி அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார்.

மதுரை யாதீன வித்துவான்

இவருடைய புலமைத் திறத்தை நன்கறிந்த மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர், இவரைத் தமது ஆதீன வித்துவானாக்கிப் பெருமைப்படுத்தினர்.

தனிப்பாடல்

நாவலர் தமது நூலை வெளியிடுதற்காகப் பொருள் முயற்சிசெய்து கொண்டிருந்த காலத்தில் திருவாரூர்க்குச் சென்றார். அங்கு அப்பொழுது துடிசைகிழார் அ. சிதம் பரனர் அலுவலில் இருந்தார். நாவலரும் துடிசைகி ழாரும் நெருங்கிய நண்பர்கள். நாவலர் திருவாரூர்க்குச் சென்றசமயத்தில் அங்குக் கந்தர்சட்டி விழா நடை பெற்றுக்கொண்டிருந்தது. முருகக்கடவுளின் ஊர்வலத் தைக் குறித்து ஒரு செய்யுள் இயற்றவேண்டும் என்று ஒருவர் வேண்டிக்கொண்டார். அச் செய்யுள் இயற்றுதலைக் குறித்து நாவலர் சிறிதும் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. மனப்பாடஞ்செய்துள்ள பழைய பாடலைப் பாடுவதைப் போல்,

"திருத்த மனத்தின் கௌரியம்மை
சிந்தைமகிழுத் தந்தை கொண்டு
விருத்த வடிவைத் தாமெடுத்து
விளங்கும் உலகோர் வியப்புறவே

பொருத்த குறத்தி வள்ளிமணம்
புரிவான் கருதி ஆருரில்
கருத்தன் முருகன் பவனிவர
கண்டோம் பிறவி விண்டோமே."

என்னும் செய்யுளை விரைந்து பாடினர். இவர் விரைந்து செய்யுள் பாடியதைப் பலரும் பாராட்டினர்.

ஆசிரியர்

செய்யுளியற்றல் முதலிய பல வேலைகளோடு, தமிழ் கற்க விரும்பிய அன்பர்கட்குத் தமிழ்நூல்கள் பலவற்றைப் பாடஞ்சொல்லி அவர்கட்குத் தமிழறிவையும் ஊட்டினர். இவரிடம் கல்வி கற்றுத் தேர்ந்து சிறந்தவர்கள் பலர்.

மகன்

இவருடைய மகனுகத் தோன்றிய சங்கரநாராயண பிள்ளை என்பவரும் நன்கு கல்விகற்றுச் சிறந்த தமிழ்ப் புலமையடைந்து விளங்கினர். தம் தந்தையார் இயற்றிய தாருகாவனப் புராணத்தைப் பாராட்டி,

" தந்தைதாய் குருதெய்வம் கருணை வேந்தும்
தாணுகி எனைப்புரக்கும் தவத்தோர் போற்றும்
எந்தைதிரு வாக்காலிச் சூதக் காவின்
இறைமகிழப் புராணமினி திசைத்தான் தோற்று
வின்றதெனை யான்புகழ்தல் மடமைச் சம்பு
வியந்துதிங்கள் தனக்கரசாம் மேன்மைப் பட்டம்
தந்ததொக்கும் இதன்பெருமை உணர்ந்து மெச்சும்
தரங்கலோமா மகளாரிய தக்கோர்க் காமே."

என்னுஞ் செய்யுளைச் சாற்றுக்கவியாகப் பாடினர்.

இறுதி

இந் நாவலர் காலமான ஆண்டு முதலியன விளக்க மாகத் தெரியவில்லை.

இவர் இயற்றிய நூல்கள்

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள் பல. அவற்றுள்:

1. காருகாபுரத் தலபுராணம்
2. நாதகிரிப் பதிகம்
3. நாதகிரிமாலை
4. நாதகிரி யந்தாதி
5. நாதகிரி மான்மியம்
6. நெஞ்சறி விளக்கம்
7. வண்ணக்கவி

என்னுஞ் சிலவற்றின் பெயர்மட்டும் நமக்குத் தெரிகின்றன.

உக. வீரசுப்பைய ஞான தேசிகர்

தோற்றம்

நியாயச் சந்திர வேதாந்த பாஸ்கர மகாமண்டலேசர வீரசுப்பைய ஞான தேசிகர் எனப் பெயர் வழங்கிய இப் பெரியார், கொங்குமண்டலத்திலே கோயம்புத்தூருக்கு அண்மையில் உள்ள வேட்டைக்காரன்புதூர் என்னுஞ் சிற்றூரிலே ஏறக்குறைய தொண்ணூறு ஆண்டுகட்கு முன் தோன்றியருளினர். தந்தையார் பெயர் மருதாசலம் பிள்ளை. தாயார் பெயர் அம்மணி யம்மாள்.

கல்வி

உரிய பருவத்தில் பள்ளிக்கனுப்பப்பெற்ற இவர் ஆங் கிலமும் தமிழும் நன்கு கற்றுணர்ந்தனர். பிறகு மருத்து வத் துறையில் தொழில்புரிந்துகொண்டு சிறப்புடன் இருந் தனர்.

ஆனைமுகக் கடவுள் வழிபாடு

இவர் இளமைதொட்டே ஆனைமுகக் கடவுளிடத்தில் அன்பு கொண்டு அக் கடவுளைப் போற்றி வழிபடுதலே மேற்

கொண்டனர். தொடக்கத்தில் பள்ளித் தேர்வுகளில் இடை யூறில்லாமல் வெற்றியடைதல் வேண்டும் என்னும் நோக்கத் தோடு வழிபடத் தொடங்கிய வழிபாடு நாள்தோறும் வளர்ந்துகொண்டே வந்தது. ஆனைமுகப்பெருமான் இவருக்கு எல்லா நன்மைகளையும் இனிது வழங்கியதோடு அழிவிலாப் பேறுகிய வீடுபேற்றையும் அருளத் திருவுளங் கொண்டார். இல்லந் துறந்து துறவியாக வெளிப்படச் செய்தார்.

துறவியாதல்

இல்லத்தைத் துறந்து வெளிப்பட்ட இவர் பொதிய மலையை அடைந்து ஆங்குத் தவஞ் செய்ய எண்ணினர். அவ்வாறே பொதியமலையை அடைந்து ஆனைமுகக் கடவுளை எண்ணிச் சிறிது காலம் அருந்தவம் புரிந்துகொண்டிருந் தார். ஆனைமுகக்கடவுள் இவர் மெய்யறிவு நூல்களைக் கற்று வீடுபேற்றை அடைதற்காம் வழியைக் காட்டினர்.

கோவிலூர் செல்லுதல்

அந் நாளில் கோவிலூர் மடாலயத்திலே வீரசேகர ஞான தேசிகர் என்னும் பெரியார் மெய்ஞ்ஞானச் செல்வ ராக விளங்கியிருந்தார். அவரிடம் அருளுரைபெற்று மெய்ஞ்ஞானச் செல்வம் பெற்றவர் பலர். அத்தகையோரில் ஒருவராகிய பனமூர்ப்பட்டி அருணாசல அடிகள் என்னும் பெரியார் பல சிவப்பதிகளிலும் இறைவழிபாடு செய்து கொண்டு குற்றாலத்தையடைந்து அங்குத் தங்கியிருந்தார். இவர் சுப்பைய ஞான தேசிகரின் நற்குண நற்செயல்களையும் கல்வியறிவுச் சிறப்பையும் கண்டு மகிழ்ந்தார். மெய்யறிவு நூல்களைக் கற்கச்செய்தால் மேலுந் சிறப்படைவார் என்று எண்ணினர். இவரைப் பார்த்துக், "காரைக்குடிக்கு அண்மையில் கோயிலூர் என்னும் ஊர் ஒன்று இருக்கிறது.

அங்கு வேதாந்த மடாலயம் எனப் பெயரிய மடம் ஒன்று உள்ளது. அம் மடத்தில் இந் நாளில் வீரசேகர ஞான தேசிகர் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர் ஒருவர் ஞான சிரியராக அமர்ந்திருக்கின்றனர் நீவிர் அப் பெரியாரை யடைந்து அறிவுநூல்களைக் கற்றுணர்ந்து அருந்தவம் புரிவீராகில் பிறவிக்கடலைக் கடந்து வீடுபேற்றை யடைந்து பிறவாப்பேற்றை யடையலாம்,'' என்று இன்னுரை இயம்பினர். அப் பெரியார் உரை நல்லுரையாக இருந்தபடியால் இவர் உடனே புறப்பட்டு வழியில் உள்ள திருநெல்வேலி மதுரை. முதலிய இடங்களில் இறைவழிபாடு செய்து கொண்டு கோவிலூரையடைந்து ஞானதேசிகரைப்போற்றி வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தனர்.

அறிவு நூல் கற்றல்

வீரசேகர ஞானமா முனிவர் இவருடைய தகுதி யறிந்து அறிவுநூல்களாகிய கட்டளை, கைவல்லிய நவநீதம், பகவத்கீதை, ஞானவாசிட்டம் முதலிய நூல்களைக் கற்பித் தருளினார். இவ்வாறு கோயிலூரில் சில ஆண்டுகள் தங்கிய பின் காசி முதலிய வடநாட்டுப் பதிகளைக் காணவும் வட மொழி இந்தி முதலிய மொழிகளைத் தெரிந்துணரவும் எண்ணிக் குருவின் உடன்பாடுபெற்றுக் காசியை யடைந்து சில ஆண்டுகள் தங்கி வடமொழி இந்தி முதலிய மொழி களை யுணர்ந்து, அம் மொழிகளிலுள்ள அறிவு நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். பிறகு தென்னாடடைந்தார். பிறகு பலவிடங்களிலும் அறிவுநூற்பொருளை விளக்கிச் சொற்பொழிவுகள் பல செய்து மக்கட்கு நல்லறிவூட்டினர்.

நூல்கள் இயற்றல்

அந் நாளில் சென்னைமாநகரில் கரபாத்திர சிவப்பிரகாச அடிகள் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர், வடமொழி

இந்தி முதலிய மொழிகளில் உள்ள வேதாந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நாடெங்கும் பரவச் செய்தல் வேண்டும் என்னும் பெரு நோக்கங்கொண்டிருந்தனர். அப் பெரியார் இவரைக் கொண்டே நூல்களை மொழிபெயர்க்கச் செய்தனர். அது முதல் இவர் மொழி பெயர்ப்பு நூல்களைச் செய்வதிலும் நூல்கட்கு உரைகள் வரைவதிலும், உரைநடை நூல்கள் செய்யுள் நூல்கள் முதலியன இயற்றுவதிலும் தமது காலத்தை யெல்லாம் செலவிட்டனர். சென்னை சூளையில் ஆநந்தாசிரம சாது மகா சங்கம் என்னும் இருப்பிடத்தில் தங்கி நூல்கள் இயற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

மடாலயத் தலைமை

திருவாரூரில் மடப்புறம் என்னும் இடத்தில் உள்ள தட்சணாமூர்த்தி சுவாமிகள் மடத்தின் தலைமைப் பதவியையும் ஏற்று அம் மடாலயத்தின் கட்டிடங்கள் முதலியவைகளைச் சீர்திருத்தியமைத்து அம் மடாலயத்தைச் சிறப்புடன் விளங்கச் செய்தனர்.

மாணவர்கள்

அடிகளார் அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டிருந்தமையின் எண்ணற்றோர் அடிகளாருடைய அருளுரைகளைக் கேட்டு மாணவர்களாயினர். மற்றும் அடிகளாருடன் உறைந்து கூணைசாநந்த அடிகள், அநந்தாநந்த அடிகள், சண்முகாநந்த அடிகள் முதலிய பலர் அறிவு நூல்களை நன்கு கற்றுணர்ந்தனர்.

இறுதி

வேதாந்த சமயத்திற்கு அரும்பெரும் பணி புரிந்திருந்த அடிகளார் 1931-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்களிலே வீடுபேற்றை யடைந்தனர். அடிகளாருடைய உடல்

தங்கியிருந்த இடத்திற்குப் பக்கத்தில் அடக்கஞ் செய்யப் பட்டுத் தொண்டர்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

நூல்கள்

அன்பர்களுடைய வேண்டுகோளின்படி மொழி பெயர்த்தனவும் உரையெழுதினவும் செய்யுளாக இயற்றப்பட்டனவுமானவை :

1. சிவமகிமைத் தோத்திரம் செய்யுள்
2. வேதசார சமுத்தரணம் செய்யுள்
3. வேதாந்த டிண்டிமம் செய்யுளும் உரையும்
4. ஆத்ம வித்யா விலாசம் செய்யுள்
5. வேதாந்த சாரம் உரைநடை
6. உபதேச சதத்ரி உரைநடை
7. கண்டன கண்டகாத்தியம் உரைநடை
8. வேதாந்த சித்தாந்த முக்தாவலி உரைநடை
9. நியாயகாரிகாவலி செய்யுளும் உரையும்
10. ஆத்ம புராணம் உரைநடை
11. பகவற்கீதை கூடார்த்த தீபிகை உரைநடை
12. பஞ்சாக்கர பாடியம் உரைநடை
13. லகுயோகவாசிட்டம் (2000 செய்யுளுக்கு) உரை
14. கங்காலகரி மூலமும் உரையும்
15. தருக்காமிருதம் உரைநடை
16. பிரஸ்தான பேதம் உரைநடை
17. பர்த்ருருகரி வைராக்கிய சதகம் செய்யுள்
18. பஞ்சதசி 5 பிரகரணம் செய்யுள்
19. சித்தாந்த லேச சங்கிரகம் உரைநடை
20. கணேச கீதை செய்யுளும் உரையும்
21. வாசிட்டம் உரைநடை
22. வீரசேகரமாலை
23. கொற்றவாளீசுரர் அந்தாதி
24. திருநெல்லையம்மை யந்தாதி
25. பார்சாதவதேசர் பதிற்றுப்பத் தந்தாதி

26. அபிர்தவல்லிமாலை
27. சிக்கல் செல்வவிநாயகர் செம்பொன் மணிமாலை
28. சொர்ணபுரீசுரர் மாலை
29. சௌந்தரியநாயகி மாலை
30. சௌந்தரியநாயகி பிள்ளைத்தமிழ்
31. மதுரை அரசப்பசுவாமிகள் வரலாறு
32. சுப்போ தண்டாயுதபாணி மாலை
33. சங்கரத்வேலியர் வாய்ப்பூட்டு.

உ-ம். திரு. வி. உலகநாதமுதலியார்

தோற்றம்

திரு. வி. கலியாணசுந்தரனாரின் தமையனாராகிய திரு. வி. உலகநாத முதலியார் 1881-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பன்னிரண்டாம்நாள் துள்ளம் என்னுஞ் சிற்றூரிலே பிறந்தார். தந்தையார் பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர் பச்சையம்மாள். இவருடைய முன்னோர்கள் வாழ்ந்திருந்த ஊர் திருவாரூர் ஆதலின், திரு என்பது இவருடைய பெயருக்கும் இவருடைய இனவலாகிய கலியாணசுந்தரர் பெயருக்கும் முன்னல் அமைந்து நின்றது.

கல்வி

துள்ளம் சிற்றூரில் பத்தாண்டுகள்வரை உலகநாதர் தம் தந்தையாரிடத்தே பண்டைக்கால முறைப்படி கல்வி பயின்றார். எண்சுவடி, பொன்னிலக்கம், அந்தாதிகள், கலம்பகங்கள், நிகண்டு முதலியனவைகளைப் பயின்றார். பிறகு தந்தையார் சென்னைமாநகர்க்குக் குடிபெயர்ந்து விடவே, உலகநாதர் சென்னையில் வெஸ்லி கல்லூரியில் ஏழாம் வகுப்புவரை படித்தார்.

அறிவுரை

ஏழாம் வகுப்போடு பள்ளிக் கல்வியை நிறுத்திய உலகநாதர், சென்னை மஸ்லச்சாலையில் இருந்த பால்டர் அச்சகம், வோ அண்டு கம்பெனி, மெட்ராஸ் டைம்ஸ் முதலிய பெரிய அச்சகங்களில் வேலை பார்த்தார். பல அச்சகங்களில் வேலை பார்த்து நல்ல பழக்கத்தைப் பெறவே ஓர் அச்சகத்தை நடத்துதற்கு வேண்டிய அறிவுத் திறன் இவருக்கு அமைந்தது.

திருமணம்

1901-ஆம் ஆண்டில் உலகநாதருக்குத் திருமணம் நடைபெற்றது. ஆலப்பாக்கம் சிதம்பர முதலியார் என்ப வருடைய புதல்வி இராசாம்பாள் அம்மையார் என்பவர் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார்.

இலக்கண இலக்கியங் கற்றல்

உலகநாதர் வெஸ்லி கல்லூரியில் கல்வியின்றபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை அங்குத் தமிழாசிரிய ராக வேலைபார்த்துக் கொண்டிருந்தார். உலகநாதர் பள் ளிப் படிப்பை விட்டபிறகும் கதிரை வேலருடைய தொடர்பு நீடித்துக் கொண்டிருந்தது. ஓய்வு ஏற்படும் போதெல்லாம் கதிரைவேலரிடஞ் சென்று இலக்கண இலக்கியங்களை முறைமையாகப் பயின்று வந்தார். இக் காலத்தில் இவருடைய இளவல் கலியாணசுந்தரரும் கதிரைவேலரிடம் இலக்கண இலக்கியங்களைப் பயின்று கொண்டிருந்தார். கதிரைவேலர் சென்னையைவிட்டு நீங்கி வேற்றூர்கட்குச் சென்று பிறகு பரமனடி சேர்ந்தார். கதிரைவேலர் காலமான பிறகு உலகநாதர் வேறு எவரிட மும் பாடங்கேட்க விரும்பவில்லை. தாமாகவே பல நூல் களைப் பயின்று அறிவைப் பெருக்கிக்கொண்டார். புலமைத்

திறம் வேண்டிய அளவு உண்டாகியது. பலநூல்களைப் பிழையறப் பதிப்பிக்கவும் பத்திரிகைகளை நன்முக நடத்தவும் வல்லவரானார்.

பக்தசன சபை

முதலில் உலகநாதர் கடவுட் கொள்கை முதலியவற்றில் அழுத்தமான பற்றுக் கொண்டிருக்கவில்லை. நாளடைவில் இறையன்பு அடியார்பத்தி முதலியன உண்டாயின. 1903-ஆம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டையில் தம் ஆசிரியரான கதிரைவேற் பிள்ளையைக் கொண்டு "பால சுப்பிரமணிய பக்தசன சபை" என்னும் பெயருடன் சபை ஒன்றை அமைத்தார். இதற்கு இவருடைய நண்பர்கள் பலர் பக்கத்துணையாக இருந்தனர். சபையை அமைத்தது மட்டுமல்லாமல் அச்சபையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தார். சபையின் அமைச்சராகவும் தலைவராகவும் இருந்தார். சபையில் அடிக்கடி சொற்பொழிவுகள் இவராலேயே நடத்தப்பெற்றன. கந்தபுராணச் சுருக்கத்தைத் தமது செலவில் சபையின் வெளியீடாக வெளியிட்டார். இக்காலத்தில் முதலியார் வைசயந்தி அச்சுக்கூடத்தில் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார்.

பதிப்பகமும் அடக்கவிலைப் பதிப்பும்

ஸ்பென்சர் கம்பெனியில் கணக்காளராகத் தொழில் புரிந்துகொண்டிருந்த கலியாணசுந்தரர் சிலகாரணங்களை முன்னிட்டு அவ் வேலையைவிட்டு நீங்கினர். சொந்தத்தில் பதிப்பகம் ஒன்றை அமைத்து நூல்களை வெளியிட வேண்டும் என்பது கலியாண சுந்தரருக்கும் உலகநாதருக்கும் நோக்கமாக இருந்தது. இந் நோக்கத்தைத் தம் நண்பர்களோடு கலந்து ஆராய்ந்தனர். 'உமாபதி குருப் பிரகாசம் பிரஸ்' என்னும் பெயரோடு அச்சுக்கூடம் ஒன்

றைத் தொடங்குவதென்றும் நூல்களை வெளியிடுவதென்றும் முடிவாகியது. 1909-ஆம் ஆண்டில் இராயப்பேட்டையில் அச்சுக்கூடம் அமைக்கப்பட்டது. பெரிய புராணம், திருமந்திரம் முதலிய நூல்கள் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிடப் பெற்றன. சில காரணங்களால் அச்சகம் விற்கப்பட்டது. உலகநாதர் மாதவன் அலைசலும் அச்சுக்கூடத்தில் வேலை பார்க்கத் தொடங்கினர். கலியாணசுந்தரர் பள்ளியில் தமிழாசிரியராக வேலைபார்க்க லானார்.

சாது அச்சுக்கூடம்

திரு. வி. கலியாணசுந்தரனார் தேசபக்தன் பத்திரிகையின் ஆசிரியராகச் சிறிது காலம் வேலைபார்த்தார். பிறகு சுவசக்தி பத்திரிகையைத் தொடங்கினர். சுவசக்தி பத்திரிகையை அச்சிடுவதற்குச் சாது அச்சுக்கூடம் திறவப் பட்டது. கலியாணசுந்தரனார் திருப்பப்படி உலகநாதரே அவ்வச்சுக் கூடத்தை நடத்தும் பொறுப்பை மேற் கொண்டு இறுதிவரையில் நடத்தினர். சைவசித்தாந்த மகாசமாசத்தார் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்ட தேவார திருவாசக நூல்களெல்லாம் உலகநாதர் தமது சாது அச்சுக்கூடத்தில் செவ்வையாக முடித்துக் கொடுத்தார். சித்தாந்தம் பத்திரிகைக்கு ஆசிரியராக அமைந்து நின்று அப் பத்திரிகையை நன்கு நடத்தினர்.

மக்கட்பேறு

உலகநாதருக்கு மக்கட் செல்வமாக ஓராண்மகனும் இரண்டு பெண்மக்களும் தோன்றினர். மகனுடைய பெயர் பாலசுப்பிரமணியன். அவன் இளமையிலேயே இறைவன் திருவடி நீழலை எய்தினன். இதனால் உலகநாதரும் கலியாணசுந்தரரும் பெரிதும் மனம் வருந்தினர்.

உலகநாதரின் உயரிய பண்புகள்

எத்தகைய தொல்லை நேரிலும் மனங்கலங்காத் திண்மை உலகநாதரிடம் அமைந்திருந்தது. இவருக்குச் சினம் எழுமாயின் அது சில விநாடிக்குள் அடங்கிவிடும். இவர் சோதிடக் கலையிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தார். முருகப் பெருமானிடத்தில் இவருக்கு அளவுகடந்த பக்தி யுண்டு. அதன் காரணமாகவே தம் செல்வமைந்தனுக்குப் பாலசுப்பிரமணியன் என்று பெயரிட்டிருந்தார். பாம்பன் குமர குருதாச அடிகட்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பும் பற்றும் உண்டு. அடிகளார் காலமானபோது முதலியார் சில செய்யுட்களைப் பாடினர். தம்முடைய இல்லத்திற்கு வரும் எல்லோரையும் விருந்தளித்துப் போற்றுவதில் முதலியார் மிகுந்த ஊக்கமுடையவர்.

மணிவிழா

1941 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 10 ஆம் நாள் இவருக்கு அகவை அறுபது நிரம்பியது. அக்கால் அன்பர்கள் மணிவிழாக் கொண்டாடி இவரைப் பாராட்டினர். அப்பொழுது மணிவிழா மலர் ஒன்றும் வெளியிட்டனர். அம்மலரில் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடாலயத் தலைவர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகள், கீழைக்கிழார் தெய்வசிகாமணி முதலியார், மயிலைக் கிழார் இளமுருகனார், நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை முதலிய பலர் முதலியாரைப் பாராட்டி எழுதியுள்ளனர். மற்றும் பல அறிஞர்கள் வாழ்த்துப் பாடல்களும் பாடினர்.

"செம்மைமுது குன்றப்பேர்ச் செம்மலோன் செய்தவமே
இம்மை தழைக்கும் இசைநிறீஇ—மெய்ம்மை

உழைப்பிற் குடியோம்பும் ஒள்ளியதின் னம்மை
இமைத்தகோன் பேரம்வாழ் வே.

என்பது சண்முகானந்த அடிகளார் இயற்றிய ஆறு பாடல் கொண்ட ஒன்று.

" திருவருள் நிறைந்த தமிழகம் புரிந்த
திருத்திய தவத்திரு ஆரூர்
தருமதி விருத்தா சலப்பெருந் தகைக்கும்
சற்குணச் சின்ன மையார்க்கும்
மருவிலா உலக நாதமேவள் திருவி
மாகவி யாணசுந் தரனார்
இருவரும் மகவாய்த் தோன்றிய போதே
எங்கள்மா நிலம்பெற்ற நிசையே."

என்பது, சென்னை அகத்தியர் குருகுலம் சுவாமி அருணகிரி நாதர் அவர்களால் பாடப்பெற்ற பதினெரு பாடல்களுள் ஒன்று.

" கலைநிறை செல்வி எல்லாம்
கவினுறத் தெளிந்து செந்தேன்
அலையெனச் சுவைகொ ழிக்கும்
அழகொளிர் எழுத்தால் சொல்வால்
நிலைபுகழ் ஒளியி னேங்கி
நிலவுகல் யாண சுந்தரன்
உலவிலுன் தம்பி என்னின்
உரைப்பதுன் புகழை என்னே."

என்பது, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களால் பாடப்பெற்ற ஒன்பது பாடல்களுள் ஒன்று.

" பலதொல்கட் குரையளித்தாய் பல்லோர்க்கும்
அறிவுரைகள் பாலிக்கின்றாய்
கலைமேவும் பணிபணியாக் கொள்வோனைப்
பணிபணியே நாடி நின்றாய்

தலமேவும் சைவசித்தாந் தப்பெயர்கொள்
பத்திரிகை தழைக்க நல்கும்
வலவாகீ நாள்நாளும் இருமைநலம்
எய்திநன்கு வாழ்க மாதோ."

என்பது சேலம் சலகண்டபுரம் ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற ஏழு பாடல்களுள் ஒன்று. இன்னும் இவ்வாறு, வையாபுரிப் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், கமலநாத முதலியார், முருக இலக்குவனார், சோம இராமலிங்க தேசிகர், குகபூரீ, புழலி திருநாவுக்கரசு முதலியார் என்பவர்களும் வாழ்த்துப்பாக்கள் பாடி வாழ்த்தினர்.

இறுதி

இவ்வாறு சிறப்புப்பெற்று விளங்கிய இவர், மணி விழாவுக்குப்பின் நான்கு ஆண்டுகள் தமிழ்ப்பணி சிவப்பணி ஆற்றி 4—7—1945-இல் அம்மை அம்பலவாணர் திருவடி நீழலடைந்தனர்.

உரு. பொன்னம்பல சிவம்

தோற்றம்

திக்கெலாம் புகழ்ந்திடு தென்பாண்டி நாட்டிலே கொம் பாடி என்னும் ஊரிலே எறக்குறைய அறுபத்தைந்தாண்டு கட்கு முன்னர்ப் பொன்னம்பலசிவம் தோன்றினர்.

கல்வி

இளம் பருவத்தில் குலசேகரன் பட்டினத்தில் தங்கி யிருந்தார். அவ் விடத்திலேயே பள்ளிப்படிப்பைத் தொடங் கினர். பள்ளிப்படிப்பு ஒருவாறு முடிந்தபின் தெண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கிச் சிறுவர் பலருக்குக் கல்வி போதித்தார்.

இல்லத்துறத்தல்

இவருடைய மனம் இல்வாழ்வை வெறுத்து நல்வாழ்வை நாடியது. நடத்திய பள்ளியை நிறுத்திவிட்டு இல்லத்தை விட்டு வெளிப்பட்டார். மடாலயங்கள் சிலவற்றிற் சென்று தங்கினர். அங்கிருந்த அறிஞர்கள் பல் வேதாந்த நூல்களை ஓதியுணர்ந்தார். மேன்மேலும் இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் ஆராய்ந்து கொண்டேயிருந்தபடியால் புலமைத்திறம் உண்டாயது. செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவாய்பெற்றவராய்த் தனிப்பாடல்கள் பல இயற்றினர்.

மறைவனத்திறைமாலை

சிறிதுகாலம் திருமறைக்காட்டிலே தங்கியிருந்தார். அப்பொழுது ஆங்கெழுந்தருளிய இறைவன்மீது மறைவனத் திறைமாலை என்னும் நூலைப் பாடினர்.

காளையார்கோயில்

பிறகு காளையார்கோவிலை யடைந்து அங்குள்ள வேதாந்த மடாலயத்தில் பல ஆண்டுகள் உறைந்தார். உலகன்பட்டி இலக்குமண அடிகள் என்னும் சைவசித்தாந்த அறிஞர்பால் சித்தாந்த நூல்கள் சிலவற்றைக் கற்றுணர்ந்தார்.

பலவான்குடி

பிறகு பலவான்குடி என்னும் ஊரையடைந்து அங்குள்ள திருவாசக மாடசாலையிற் சிறிதுகாலம் தங்கி அன்பர்கள் பலருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தார். அங்கெழுந்தருளிய குமரவிநாயகர் என்னும் பிள்ளையார்மீது குமரவிநாயகர்பதிகம் என்னும் நூல் ஒன்றும், குன்றக்குடி முருகப்பெருமான்மீது குமரபஞ்சகம், அகராதி மாலை என்னும் நூல்களையும் பாடினர். அங்கிருக்கும் போது பலவிடங்கட்குஞ் சென்று சொற்பொழிவு

செய்தலே மேற்கொண்டிருந்தார். மெ. வெ. வேலப்ப செட்டியார் என்னுந் தனவணிகர் ஒருவர் இவரிடம் அன்பு பூண்டு நற்றொண்டராக விளங்கினர். அதனல் அவருக்குக் கல்வியில் ஆர்வந்தோன்றி நாளடைவில் நூல்கள் பல வற்றைக் கற்று அவரும் அறிஞராஞர்.

கதிர்காமச் செலவு

அன்பர் பலருடைய உதவியைக் கொண்டு கதிர்காமஞ் சென்றுவர எண்ணினர். பலரிடத்தும் தமது பாவன்மை யைக் காட்டி நன்கொடைகள் பெற்றார். வே(வெ)ங்கடா சலஞ் செட்டியார் என்னும் தனவணிகர் ஒருவரிடஞ் சென்று,

"எங்கடா தாவிருக்கும் எழிற்கதிர்கா மஞ்சென்று
சங்கடா டவிகளைகான் தாண்டியருள் பெறுவதற்குத்
திங்கடா னெனுமுகத்தாய் திகழ்பலவான் குடிவாழ்வாய்
வெங்கடா சலப்பெரியாய் மிகுபொருள்தான் சுவாயே."

என்று பாடினர். இவ்வாறு இவர் பாடிய பாடல்கள் பல. அவைகளெல்லாம் தொகுத்து எழுதிவைக்கப்பெறுமையால் மறைந்து போயின.

தனிப் பாடல்கள்

செய்யுள் இயற்ற வேண்டும் என்று எண்ணினுல் போதும். உடனே இவருக்குச் செய்யுள் கடகடவென்று புறப்பட்டுவிடும். பிறகு ஓய்வு ஒழிவு இல்லாமல் பாடிக் கொண்டேயிருப்பார். இந் நூலாசிரியராகிய சு. அ. இராம சாமிப் புலவர் அந் நாளில் பத்திரிகைகள் பலவற்றில் பல வகையான கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்தார். அக் கட்டுரைகளிற் சிலவற்றைப் படித்து மகிழ்ந்த இவர்,

"சுரைஆ ராம சாமியொன்று சொல்கின்றேன்
தேனைபோ லாவெனத்தித் திக்கநீ—பேனை

பிடித்தெழுதி விட்ட பெரும்பேப்பர்த் தாளைப்
படித்தடைந்தேன் நல்ல பயன்."

என்று ஒருநாள் செய்யுள் ஒன்றைக் கூறினர்.

கூத்தப்பிரான்மீது பாட்டு

ஒருநாள் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது,

"கடத்தானை உரியனைச்சங் கடத்தானை
யாதழியார் கனைகண் கோம்பும்
திடத்தானைப் பனிவரைமா திடத்தானைத்
திரைசெறிநீர் உறைசடாம
குடத்தானை ஒருதிருக்குக் குடத்தானை
யனைக்கொழிய வழியில் என்னை
கடத்தானை மணிமன்றில் கடத்தானைக்
கண்டுதொழு தெய்ந்தேன் காணே.

என்று புதிய பாட்டொன்று புறப்பட்டது.

[ஓ - ன். கடத்து ஆனை உரியனை-மதம்பொருந்திய யானைத் தோலை ஆடையாகக் கொண்டவனை; சங்கடத்தால் ஐயாது - துன்பத்தால் வருந்தாமல். பனிவரைமாது - உமையவள். சடா மகுடத்தானை - சடாமகுடம் பொருந்தியவனை. குக்குடத்தான் ஐயனை - முருகன் தந்தையை.]

பழநித்தண்டாயுதபாணிக் கடவுள்மீது பின்வரும் நடுவெழுத்தலங்காரத்தைப் பாடினர்.

பன்னிருசீராசிரிய விருத்தம்

"ஒருவிதநோய் ஒருகருவி உறுங்காமர்
சுகமில்லான் அக்க தேவி
உலகீன்றான் இவ்வறுசொல் நடுவெழுத்தா
தெனக்கருள்வாய் உடனும் பன்னீர்

உருவெழுக்கைக் கரத்தமைத்தும் சித்தமைத்தும்
திருக்கழுத்தில் ஒக்கச் சேர்த்தும்
ஒளிரிழையா கத்தரித்தும் மேற்போர்த்தும்
பிறப்பிடமா ஒருகாற் கொண்டும்
பெருமையுடன் விளங்குமுக்கட் பெருஞ்சோதி
பெற்றெடுத்த பெரிய வாழ்வே
பேசருமைத் தருகிகர்த்து மாசில்வளம்
பலகொடுத்துப் பிறங்கா நின்ற
தருணிறையும் பழநிவளர் உறைதண்ட
பாணியே சகசா னந்தத்
தடங்கடலே மடங்கலந்தார் இடம்பொருந்தாக்
கடம்பணிந்த தனிச்செவ் வேளே."

[ஒருவிதநோய் கபம் கம் - தலை. ஒருகருவி அரம் அம் - கண்கை. காமர் காமர் கார் - கருமை. சுகமில்லான் அசுகி அபி - பாம்பு. அக்கதேவி தோகல் தோல்-யானைத் தோல். உலகீன்றாள் அம்மை அமை - மூங்கில்.]

நூல்கள்

தனிப்பாடல்கள் பல இயற்றியதன்றி இவர் செய்த நூல்கள்,

1. மறைவனத்திறைமாலை
2. தேசிய தீதக்கொத்து
3. சுமார விநாயகர் பதிகம்
4. சுமார பஞ்சகம்
5. அகரா திமாலை
6. அகரா திக்குறள்

முதலியன.

இறுதி

முருகக் கடவுள்மீது மிகுந்த பேரன்புகொண்ட இவர் திருநெல்வேலி குறுக்குத்துறையை அடைந்து சிலகாலம் முருகனைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். பிறகு

பழநிமாநகரை அடைந்து தண்டபாணியைப் போற்றி வழி பட்டுக்கொண்டு அவ்விடமே நிலையாக இருந்தார். 1952-ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வுலகவாழ்வைத் துறந்து முருகன் திருவடிநீழலை அடைந்தார். இவரிடத்துப் பேரன்பு கொண்டிருந்த மெ. வெ. வேலப்ப செட்டியார் என்பவர்,

"பண்ணு பெருங்கவிதைப் பாவலனும் பார்த்துரைக்கும்
பொன்னம் பலசிவந்தான் போயினனும்—என்னே!
விதிதான் மதியிழந்து வேறுலகஞ் சேரச்
சதிசெய்து பார்த்தாலே தான்."

என்று வருந்திச் செய்யுள் ஒன்றைத் தம் நண்பர் ஒருவருக்கு எழுதியனுப்பினர்.

உ சு. வி. சூ. நடராசன்

தோற்றம்

பரிதிமாற் கலைஞன் என்று தமது பெயரைத் தமிழில் மொழிபெயர்த்த சூரியநாராயண சாத்திரியாருடைய அருந்தவப் புதல்வராகத் தோன்றிய வி. சூ. நடராசன் ஆங்கிலம் 1899-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13-ஆம் நாள் சென்னையிற் பிறந்தார்.

கல்வி

நடராசன் தமது நான்காவது அகவையிலேயே தந்தை யாரை இழந்தார். தகுந்த அகவையில் கல்வி கற்கத் தொடங்கிய இவர் 1917-ஆம் ஆண்டில் மதுரையில் எஸ். எஸ். எல். சி. தேர்வை முடித்தார். இவர் விருப்பப் பாடமாக எடுத்துக் கொண்டது வரலாறு. தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு விண்ணப்பம் போட்டார். இதற்கிடையே உயிலம்பட்டி போர்டு உயர்

நிலைப்பள்ளியில் பதினேழு ரூபாய் ஊதியத்தில் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. இவருக்குத் தமிழில் தகுந்த பயிற்சியிருந்தது. இவர் உயர்நிலைப்பள்ளியில் மாணவராக இருக்கும்போது தமிழ்ப்பேராசிரியர் ம. கோபாலகிருட்டிணன் ஐயர் இவருக்குத் தமிழாசிரியராக அமைந்திருந்தார். தமிழில் மிகவல்லவரான அவர் 'விவேகோதயம்' என்னும் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார். அப் பத்திரிகைக்கு கதை, கட்டுரை, கவிதை முதலியன எழுதினர். இதனாலும் கோபாலகிருட்டிணன் ஐயரது பழக்கத்தாலும் இவருக்குத் தமிழறிவு தழைத்தது. மேலும் கோபாலகிருட்டிணன் ஐயர் இவருக்குத் தனிப்பட்ட முறையில் தமிழை நன்கு போதித்து இவருடைய தமிழறிவை வளர்த்தார். நடராசன் ஆரம்பபடிவத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது எழுதிய 'கதைப் பூங்கொத்து' என்னும் கதை நூல் ஒன்று ஐந்தாம் படிவ மாணவர்கட்குப் பாடப் புத்தகமாக அமைந்ததாம். இத்தகைய வேலைகளை இவரைத் தமிழாசிரியர் வேலைக்குத் தகுதியாக்கின.

மருத்துவக் கல்வி

தமிழாசிரியர் வேலைக்குக் கட்டளைவந்த அதே சமயத்தில் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இடமிருக்கிறதென்றும், வந்தசேரலாம் என்றும், உதவி கிடைக்கும் என்றும் செய்தி வந்தது. உசிலம்பட்டிக்குச் சென்று தமிழாசிரியர் வேலையை ஒப்புக்கொள்வதா; தஞ்சைக்குச் சென்று மருத்துவம் பயில்வதா? என்று எண்ணமிட்டார். பிறகு தஞ்சைக்குச் சென்று மருத்துவம் பயில்வதென்று முடிவாகியது. தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மூன்று ஆண்டுகளும், மதுரை மருத்துவப் பள்ளியில் இரண்டாண்டுகளும் பயின்றார். படிப்பதற்கான எல்லாவகையான செலவுகளையும் அரசினர் ஏற்றுக்கொண்டனர்.

1923-ஆம் ஆண்டில் மருத்துவப் பரீட்சையில் தேர்வு பெற்று எல். எம். பி. என்னும் பட்டத்தைப் பெற்றார்.

தொழில்

பிறகு இவர் உசிலம்பட்டி தாலுகா போர்டு சானிடரி இன்ஸ்பெக்டராக ஏற்படுத்தப் பெற்று அங்கு வேலை பார்க்கத் தொடங்கினர். பிறகு மதுரையில் சுகாதார இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார். பிறகு செங்கற்பட்டில் ரூரல் சானிடேஷன் சுகாதார அலுவலாளர் வேலை கிடைத்தது. பிறகு இராமேசுவரம், திருநெல்வேலி, காரைக்குடி, தேவகோட்டை, கண்ணனூர், இராசபாளையம், பாளையங்கோட்டை, பொடிநாயக்கனூர், பழனி ஆகிய ஊர்களில் நகர சுகாதார அதிகாரியாகப் பணியாற்றத் தொடங்கி நல்ல வேலை செய்தார்.

திருமணம்

1926-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செல்லம்மாள் என்னுந் செல்வியைத் திருமணம் புரிந்து இல்வாழ்க்கையையும் நல்வாழ்க்கையாக இனிது நடத்தினர். மக்கட் செல்வமாக ஐந்து பெண்மக்களும் ஓராண்மகனும் தோன்றினர்.

தமிழ்த்தொண்டு

"மகனறிவு தந்தையறிவு" என்பர் முன்னோர். இதன் பொருள் ஓராண்மகனுக்கு அமைந்துள்ள அறிவு அவனுடைய தந்தையின் அறிவேயாம் என்பது. இம் மொழி எல்லா இடங்களிலும் பொருந்தாமற் போனாலும் ஒருசில இடங்களிலாவது பொருந்தி விடுகிறது. தந்தையாகிய சூரியநாராயண சாத்திரியாருக்கு இருந்த தமிழ்ப்பற்றும் தமிழறிவும் நடராசனிடத்திலும் நன்கு அமைந்திருந்தன. இவர் சுகாதார அதிகாரி வேலையை மேற்கொண்டு ஊரூராக

அலைந்து திரிந்தபோதிலும் தமிழ்த் தொண்டை மறக்க வில்லை. ஒல்லும் வகையால் எல்லாம் தமிழ்ப்பணியைச் செல்லுமிடங்களில் செய்துகொண்டே யிருந்தார். புகழ் பெற்ற தமிழறிஞர் ஒருவருடைய மகன் என்று அறிஞர் களும் இவரைப் பாராட்டிப் போற்றினர்கள். தமிழ் நாட் டுப் பத்திரிகைகள் பலவற்றிற்குக் கட்டுரைகள் எழுதினர். பள்ளிப் பிள்ளைகளுக்கான பாடநூல்களையும் உப பாட நூல்களையும் எழுதி உதவினர். அவைகளை இவருடைய இளவலாகிய சுவாமிநாதன் நன்முறையில் பதிப்பித்து வெளி யிட்டார். நடராசன் மொழிபெயர்ப்புகள் செய்வதிலும் கதைகள் கட்டுரைகள் முதலியன வரைவதிலும் வல்லவர். இவர் தமிழ் அகரவரிசை நூல் ஒன்றைப் பெரிதாக எழுதி முடிப்பதற்குத் திட்டம் போட்டு அவ்வேலையையும் செய்து கொண்டிருந்தார். ஆனல் அவ்வேலை முடிவுபெறவில்லை.

இறுதி

பழனியில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும்பொழுது இவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. சிறிது காலம் ஓய்வுபெற்றுக்கொண்டு அமைதியாக இருந்தார். ஓய்வு, தொடர்ந்த பெரும் ஓய்வாக முடிந்துவிட்டது. 1953-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாள், திடீரென்று மாரடைப்பினல் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண் ணுலகம் புகுந்தார்.

இவர் எழுதிய நூல்கள்

1. கதைப் பூங்கொத்து
2. பைசா நாடகம்
3. கதம்பம்
4. காதற் கன்வன்

உ எ. சிவபாத சுந்தரம்

தோற்றம்

செந்தமிழ்த் தொண்டும் சிவநெறித் தொண்டும் புரிந்த சிவபாதசுந்தரம், சுழுவளநாட்டில் புலோலி கிழக்கு என்னும் ஊரிலே, 1878-ஆம் ஆண்டு மார்கழி நான்காந் தேதி பிறந்தார். தந்தையார் பெயர் சுப்பிரமணிய பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மை. சிவபாதசுந்தரத்தின் குடும்பத்தினர் பலரும் செந்தமிழ்ச் செல்வர்களாகவே விளங்கியிருந்தனர். தந்தையாராகிய சுப்பிரமணியபிள்ளை ஆசிரியராகவும் அருங்கலை விநோதராகவும் விளங்கியிருந்தார்.

கல்வி

சிவபாதசுந்தரம் தொடக்கக் கல்வியைத் தமது ஊரிலே படித்து முடித்தார். சுப்பிரமணியபிள்ளையோடு உடன்பிறந்த கணபதிப்பிள்ளை என்பவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஆகவே சிவபாதசுந்தரம் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்குத் திருவனந்தபுரத்திற்குச் சென்றார். அங்கிருந்துகொண்டே சென்னைப் பல்கலைக்கழக எப். ஏ. தேர்வில் எழுதித் தேர்ச்சி பெற்றார். பிறகு திருச்சிராப்பள்ளிக்குச் சென்று செயிண்ட் சோசப் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார்.

ஆசிரியத் தொழில்

பட்டம் பெற்று யாழ்ப்பாணத்திற்கு மீண்டபின் உறவினர் ஒருவருடைய பள்ளியிலே ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். சில காலத்திற்குப் பிறகு திருகோணமலை செயிண்ட் சோசப் பள்ளியில் தலைமையாசிரியராக அமர்ந்தார். அங்கு இரண்டே ஆண்டுகள் பணியாற்றினர். பிறகு, செல்லப்பா என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட விக்டோரியா கல்லூரியின் முதல் தலைமை யாசிரியராகச் சில

காலம் பணியாற்றினர். பிறகு சில ஆண்டுகள் கழித்து அக் கல்லூரியின் தலைமைப் பதவியை ஏற்று 1933-ஆம் ஆண்டுவரை பணியாற்றினர். இவருடைய முயற்சியில் கல்லூரி மிகுந்த சிறப்புடன் வளர்ந்தோங்கியது.

பணி

இவர், கணிதம் தருக்கம் இவ் விரண்டையுமே தமது விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டு கல்வி பயின்றிருந் தாலும் எல்லாப் பாடங்களையும் நன்றாகப் போதிக்குந் திறமை பெற்றிருந்தார். எவ்வகையான பாடத்தையும் எளிமையாகவும் மாணவர்களுடைய உள்ளத்திலே பதியு மாறும் போதிப்பார். இவருடைய வகுப்பிலே அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஒருங்கே பொருந்தியிருக்கும். மாணவர்கள் இவர்பால் பணிவுடனும் அன்புடனும் நடந் துகொண்டனர். இவர் மாணவர்களைத் தம் அன்பினால் நடத்திச் சென்றார். பெரும்பாலான மாணவர்கள் இவரு டைய பெயரைக்கூட அறிந்திருக்க மாட்டார்கள். மாண வர்கள் இவரைப் "பி. ஏ. மாஸ்டர்" என்றே உரைத்து வந்தனர். மாணவர்களே அன்றி மாணவர்களுடைய பெற்றோர்களும் சிவபோதசுந்தரத்தைப் பெரிதும் மதித்துப் பாராட்டினர்கள்.

சைவப்பணி

சிவபோதசுந்தரத்தின் நோக்கம் முழுவதும் சைவப்பணி யிலேயே படிந்திருந்தது. கோயில்களில் உயிர்கள் பலி யிடப் பெறுவதைக் கண்டித்தார். இவருடைய முயற்சியி னால் பல விடங்களில் உயிர்ப் பலிகள் ஒழிக்கப் பட்டன. சைவப் பாடசாலைகளைத் தொடங்குவதில் இவர் மிகுந்த விருப்பங் கொண்டிருந்தார். மூல்லை சைவப் பிரகாச வித் தியாசாலை தோன்றுவதற்கு இவர் மூலகாரணமாக

இருந்தார். இவருடைய முயற்சியில் வேறு பல இடங்களிலும் சைவ வித்தியாசாலைகள் தோன்றின.

இந்துக் கல்லூரியில் வேலை

விக்டோரியாக் கல்லூரியின் தற்காலிகப் பணியில் இருந்து விடுபட்டுப் பிறகு தொடர்ந்து பணியேற்கும் காலம் வரை இடைப்பட்ட காலத்தில் மானிப்பாய் இந்து கல்லூரியிற் சில காலம் பணியாற்றினர். பிறகு கொழும்புக்குச் சென்று சர். பொன்னம்பலம் இராமநாதனால் நடத்தப் பெற்ற கொச்சிக்கடை பொன்னம்பலம் பள்ளியின் தலைமை யாசிரியராகப் பணிபுரிந்தார்.

நூல்கள் இயற்றல்

கல்வியதிகாரியாக இருந்த டாக்டர் பெரேரோ என்பவர் இவருடைய அறிவாற்றலையும் பண்பையும் பெரிதும் புகழ்ந்து இவரிடம் அடிக்கடி சொற்போரிடுவார். ஆசிரியப் பயிற்சிமுறை என்னும் சிறிய தமிழ்நூல் ஒன்றை வெளியிட்டார். இதனை இலங்கை அரசினர் ஆசிரியப் பயிற்சிக்குரிய பாடப் புத்தகமாக்கினர். உளநூல், தருக்க நூல் என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டார். இவை களும் எல்லோராலும் போற்றிப் பாராட்டப் பெற்றன. ஆங்கிலத்தில் தருக்கத்தின் இன்றியமையாமை என்னும் நூலையும் வெளிப்படுத்தினர். சைவசமயத்தின்பாற் கொண்ட அன்பினால் சைவநூல்கள் பலவற்றை இயற்றித் தக்காங்கு சைவத்தொண்டாற்றினர். 1933-ஆம் ஆண்டில் இவர் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்றார். ஆயினும் தமது உழைப்பில் இருந்து சிறிதும் ஓய்வுபெற வில்லை. இவருடைய இந்துசமயக் கொள்கை என்னும் ஆங்கிலநூல் மேல் நாட்டாரின் மதிப்பையும் நன்கு பெற்றது. மற்றும் இந்நூலைக் காசிப் பல்கலைக் கழகத்தார் சைவசித்தாந்த தத்துவப்பாடமாக எம். ஏ.-க்குத் தேர்வு

வைத்தனர். இவரால் ஆறுமுக நாவலர் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றும் எழுதி வெளியிடப்பெற்றது. தமது இறுதி நாட்களில், "சைவசமயத்தின் பெருமை" என்னும் பெயருடன் நூல் ஒன்றைத் தம்முடையவுடன்பிறந்தாரது வேண்டுகோளின்படி எழுதத் தொடங்கி எழுதி முடித்தார்.

இறுதி

சைவசமயத்தின் பெருமை என்னும் தமது இறுதி நூலை எழுதி முடித்தபின், அதனை வெளியிடுதற்கு வேண்டும் பணியினைச் செய்யத் தொடங்கினர். ஆயினும் நோயினாலும் முதுமையினாலும் வெளியிட்டு முடிக்காமலே 1953-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14-ஆம் நாள் தமது எழுபத்தைந்தாம் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

இயற்றிய நூல்கள்

தமிழ்

க. ஆசிரியப்பயிற்சிமுறை
உ. ஆறுமுக நாவலர் வரலாறு
ஊ. உளநூல்
எ. சைவசிரியா விளக்கம்
ஞ. சைவசமயசாரம்
சு. தருக்கநூல்
ஏ. சைவசமயத்தின் பெருமை
அ. திருவாசகமணிகள்
கூ. திருப்பெருவடிவம்
கo. திருவருட்பயன்
கக. கந்தபுராண விளக்கம்

ஆங்கிலம்

1. இந்துசமய சைவக் கொள்கை
2. தருக்கத்தின் இன்றியமையாமை.

உஅ. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

தோற்றம்

1891-ஆம் ஆண்டு சூன் திங்கள் இருபத்தாறும் நாள், பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியார் இவ்வுலகில் தோன்றினர். இவருடைடய தாயார் பெயர் அலங்காரம் அம்மையார். தந்தையார் பெயர் பாரிப்பாக்கம் முனிசாமி முதலியார்.

கல்வி

கண்ணப்பமுதலியார் தமது மூன்றும் அகவையிலேயே பள்ளியிற் சேர்க்கப்பட்டு விட்டார். தொடக்கத்தில் பாரிப்பாக்கத்தில் இருந்த ஒரு திண்ணைப்பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினர். பிறகு தொண்டைமண்டலம் உயர் நிலைப் பள்ளியிற் சேர்ந்து பயின்றார். பிறகு 1905-ஆம் ஆண்டில் எழும்பூர் ஓவியக் கல்லூரியிற் சேர்ந்து ஓவியக் கலை பயிலத் தொடங்கினர். 1908-ஆம் ஆண்டில் ஓவியக் கல்லூரியின் தலைகள் ஒன்றில் சென்னை மாகாணம் முழுதிற்கும் முதல்வகுப்பில் முதல்வராகத் தேறி இருநூற்று நாற்பது வெண்பொற்காசுகள் பரிசு பெற்றார்.

பால சைவசபை

இவருக்கு அகவை பதினைந்து பதினாறு நடந்து கொண்டிருக்கும்போது இவரும் இவருடைய நண்பர்கள் நாற்பது பேர்களும் ஒன்று சேர்ந்து இருக்கம் ஆதிமூல முதலியாருடைய உதவியைக்கொண்டு, "பால சைவசபை" என்னும் பெயருடன் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினர்கள். அக்காலத்தில் இளைஞர்களுடைய சங்கம் இல்லை. திரு. வி. க. அவர்களும் அவர்களுடைய தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் அவர்களும் இச் சங்கத்திற் கலந்து சொற்பொழிவுகள் செய்து சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள்.

மணி திருநாவுக்கரசர்

இனைஞர் சங்கத்தார் மணி திருநாவுக்கரசு முதலியாரை ஆசிரியராகக்கொண்டு இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார்கள். அதனால் எல்லோருக்கும் தமிழறிவும் தமிழ்ப்பற்றும் நாள்தோறும் வளர்ந்தோங்கின.

மனமும் மக்கட்பேறும்

இளம் பருவத்திலேயே தந்தையை இழந்த முதலியார் தாயையும் இழந்தார். பதினெட்டாம் அகவையில் மங்கையர்க்கரசி என்னும் பெண்மணியை மணந்து இல்வாழ்வில் புகுந்தார். வாழ்க்கைத் துணைவியாக அமைந்த மாதரசி எல்லாக் குண நலன்களாலும் சிறந்து விளங்கினர். மக்கள் சிலர் தோன்றினர். கல்வியறிவிற் சிறந்து விளங்கிய கண்ணப்ப முதலியார் நண்பர்களோடு கலந்தறவாடுவதிலும் உயர்ந்து விளங்கினர். முதலியாருடைய தோற்றம் எத்தகையோரையும் கவரத்தக்கது. பேசும்போது பிறருடைய பேச்சைப் பொறுமையோடு கேட்பார். பேசுபவர்களுடைய மனம் கோணுதவகையில் நன்முறையில் மறுமொழி கூறுவார். இவருக்குச் சமயப்பற்று குலப்பற்று முதலிய எல்லாப் பற்றுக்களும் உண்டு. ஆயினும் பிறருடைய உள்ளம் புண்படும் வகையில் உரையாடவோ நடந்துகொள்ளவோ மாட்டார்.

அறிவும் தொழிலும்

முதலியார் நல்ல புலமையைப் பெற்றிருந்தார். கல்லூரிகளில் பேராசிரியராக அமர்ந்து பணிபுரியத்தக்க அறிவாற்றலைப் பெற்றிருந்தும் அரசினருடைய சில அளவை அலுவலகத்திலே தொழில் புரிந்தார். அலுவலில் உயர்வு பெறவேண்டிய சமயத்தில் அலுவலில் இருந்து நீப்பு பெற்றார்.

துன்பமாலை

தம் மக்கட்குத் திருமணம் புரிந்து வைத்தபின் தாம் அமைதியாக இருந்து நல்ல நூல்கள் இயற்றலாம் என்று இவர் திட்டமிட்டுக்கொண்டு அதற்கான குறிப்புக்களையும் எழுதித் தொகுத்துக்கொண்டு வந்தார். ஆனால் துன்பங்கள் ஒன்றையடுத்து ஒன்று தொடர்ச்சியாக வந்து கொண்டே யிருந்தன. அதனால் மனத்துன்பம் அதிகரிக்கப்பெற்ற இவர் மிகுதியாக நூல் எழுதும் பணியில் ஈடுபடவில்லை.

சைவசித்தாந்தப்பணி

சைவத்தில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த முதலியார் சிவஞானசித்தியார் வகுப்பு ஒன்றை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்திப் பல அன்பர்கட்குச் சைவசித்தாந்த அறிவை ஊட்டினார். சமயங் கிடைக்கும்பொழுதெல்லாம் சைவசித்தாந்த சபைகட்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இவருடைய சொற்பொழிவுகள் யாவும் தமிழ் மணமுஞ் சிவ மணமுங் கமழப்பெற்றனவாகவே விளங்கின.

தமிழ்ப்பணி

பலவகைப்பட்ட துன்பத் தொடர்களாற் சூழப்பெற்ற இவர் அவைகளுக்கிடையே தமிழ்ப்பணியையும் இயன்ற வரையில் செய்துகொண்டே யிருந்தார். பல பத்திரிகைகட்குக் கட்டுரைகள் வழங்கினர். காலத்தால் முந்தியது திருவெம்பாவையா திருப்பாவையா என்னும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் திருவெம்பாவையே முற்பட்டது என்று தக்க சான்றுகளுடன் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதி முடித்தார். பிறகு ஆராய்ச்சிகள் செய்து 'தமிழ்த் திருமணம்' என்னும் நூல் ஒன்று எழுதினர். திருவொற்றியூரில்

எழுந்தருளியுள்ள வடிவுடையம்மன்மீதில் "திருவொற்றி யூர் வடிவுடையம்மன் அருள் வேட்டல்" என்னும் அரிய செய்யுள் நூல் ஒன்றைப் பாடினர். அந் நூலின் தமிழ்ச் சுவை எல்லோராலும் பாராட்டக்கூடிய உயர்ந்த நிலையில் சிறந்து விளங்குகிறது:

"திருவார் பொழில்சூழ் திருவொற்றித்
தியாகப் பெருமான் திருவருளே!
மருவார் குழலார் மடமயிலே!
மகிழ்பே ரின்பம் பொழிமுகிலே
தருவார் தெய்வத் தடம்பொழிலே
தமிழாம் அமுதப் பெருங்கடலே
உருவார் அழகின் மலர்க்கொடியே
ஒளியார் வடிவாம் பிடைமணியே."

"தென்ன துடைய சிவபெருமான்
திகழும் ஒற்றிச் செந்தேனே!
மின்னார் உருவப் பொற்கொடியே!
மேகக் குழலார் முழுமதியே!
என்ன வதனின் நின்னெழுத்தும்
என்னெஞ் சதனில் நின்வடிவும்
மன்ன ஒளிர அருள்புரிவாய்
மகிழ்வார் வடிவே மலர்தருவே!"

என்பன அந் நூலில் உள்ள நூற்றொரு பாடல்களில் இரண்டு பாடல்களாம். இந் நூலைத் திரு. வி. க. அவர்கள்,

"பாரிப் பாக்கம் எழுசைவப்
பரிதி பசுமைத் தமிழ்த்திங்கள்
வேரி அருவிக் கலைச்சோலை
வேதத் தென்றல் குணக்குன்று
மாரி என்னைக் கண்ணப்ப
வள்ளல் பொழிந்த மலர்மணிகள்
வாரி ஒற்றித் தாயணிந்தாள்
வாழ்த்திக் காண்க மானிலமே."

என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

பலவகைத் தொண்டுகள்

முதலியார், பூவிருந்தவல்லி வேளாளர் சங்கம், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், சென்னைச் சைவ சித்தாந்த சமாசம், மாணவர் மன்றம் முதலிய பலவகைக் கழகங்களில் கலந்துகொண்டு ஒல்லும்வகையில் தொண் டாற்றினர். சித்தாந்தம் பத்திரிகைக்குச் சிறிது காலம் ஆசிரியராக இருந்தார். 'தமிழரசு' 'நல்லாசிரியன்' 'சிவானந்தபோதினி' முதலிய பல பத்திரிகைகளில் கட் டுரைகள் வரைந்தார்.

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. திருவெம்பாவை ஆராய்ச்சி
2. தமிழர் திருமணம்
3. வடிவுடையம்மன் அருள்வேட்டல்
4. சிவஞானபோத விளக்க உரைநடை (ஒரு பகுதி)
5. பூவை. கலியாண சுந்தரர் வரலாறு
6. மாணிக்கவாசகர் நாடகம்

முதலியன.

குறிப்புக்கள்

தமது வாழ்க்கைக் குறிப்புக்களை 26-6-1891 முதல் 13-12-1933 வரை குறித்து வைத்துள்ளார்.

இறுதி

பலவகைத் துன்பச் சூழல்கட்கிடையே தமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் செய்துகொண்டிருந்த இவர் தமது அறுபத்து நான்காவது அகவையிலே 1955-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் இருபத்தொன்றும் நாளாகிய திருவாதிரை நன்னாளிலே, இவ் உலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

உ.வே. வையாபுரிப் பிள்ளை*

தோற்றம்

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள சிக்கநரசய்யன் கிராமம் என்னுஞ் சிற்றூரிலே 1888-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 13-ஆம் நாள் வையாபுரிப்பிள்ளை பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சரவணப் பெருமாள் பிள்ளை.

கல்வி

இவர் தம்முடைய தொடக்கப் படிப்பை கணபதிப் பிள்ளை என்னும் ஆசிரியரிடத்திலே தொடங்கினர். தொடக்கக்கல்வியை ஒருவாறு முடித்தபின் ஆங்கிலப் பாடசாலைப் படிப்பும் திருநெல்வேலியிலேயே கிடைபெற்றது. அப்பொழுது இவரோடு உடன் பயின்ற மாணவர்கள் க. அ. நீலகண்ட சாத்திரியார், பெ. நா. அப்புச்சாமி ஐயர், பி. ஸ்ரீ ஆச்சாரியா முதலியோராவர். பள்ளியில் சுப்பிரமணியக் கவிராயர், சிவராம பிள்ளை என்பவர்கள் தமிழாசிரியர்களாக இருந்து தமிழ் கற்பித்தனர். பள்ளியைத் தவிரத் தனிப்பட்ட முறையிலும் தமிழறிஞர்கள் சிலரிடத்தில் தமிழ்கற்கும் பேறும் இவருக்குக்கிட்டியது. அத்தகையோருள் பாம்பன் குமரகுருதாச அடிகளும் ஒருவராவர். அவர் அக் காலத்தில் குறுக்குத்துறையிற் சிலகாலம் தங்கியிருந்தார். அப்பொழுது இவர் அப் பெரியாரை அடுத்துச் சிலநூல்களைப் பாடங்கேட்டார். யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரும் நெல்லையில் வந்து தங்கிய காலத்தில் அவரிடமும் சில நூல்களை ஓதியுணர்ந்தார். சைவத்தொடர்புடைய சிலநூல்களை இவர் இளமைப் பருவத்திலேயே கற்கும்படியான நற்பேறும் கிட்டியது. இப்படிப் பலவாறு

---

* திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் தினமணியில் எழுதிய குறிப்பைக்கொண்டு எழுதப்பட்டது.

தமிழ்க்கல்வியைப் பயின்று தமது தமிழறிவை வளர்த்துக் பெருக்கிக்கொண்டார்.

சென்னையில் கல்வி

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் இவர் சென்னை மாநகரை அடைந்து மேல்படிப்புப் படிக்கத் தொடங்கினர். கிறித்துவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்தார். வரலாற்றையும் பொருளாதாரத்தையும் சிறப்புப்பாடமாக எடுத்துக் கொண்டு படிக்கலானர். இருந்தமிழ்ப்புலமையில் பெருந்திறமை வாய்ந்திருந்த மறைமலையடிகள் இவருக்குத் தமிழாசிரியராக அமர்ந்திருந்தார். தமிழ்க்கல்வியை ஊக்கத்துடன் இவர் பயிலுதலைக்கண்டு மறைமலையடிகள் இவர்பால் மிகுந்த பற்றுக்கொண்டார். கல்லூரித்தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக அமைந்து சிறந்தமுறையிற் பணிபுரிந்தார். சென்னையில் அந் நாளில் சிறந்து விளங்கிய தி. த. கனகசுந்தரம் பிள்ளை முதலிய தமிழறிஞர்களிடமெல்லாம் நெருங்கிப்பழகலானர். பி. ஏ. தேர்வில் சென்னை மாகாணத்தில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்றுச் சேதுபதியின் தங்கப்பதக்கத்தைப் பரிசாகப்பெற்றார். ஓலைச்சுவடிகளைப் படிக்கத்தொடங்கி ஓலைச் சுவடிகளைப் படிப்பதிலும் தெளிவடைந்தார். அச்சில் வெளிவந்த நூல்கட்கும் ஓலைச்சுவடிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்தார். அச்சிற் பதிப்பவர்கள் மாறுபாடுகள் செய்திருந்தால் அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஊக்கங்கொண்டு அச்சில் வெளிவந்த நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் ஒப்பிட்டுப்படித்து மாறுபாடுகளைக் கண்டுபிடித்தார். இதனால் ஓலைச்சுவடியை அச்சில் பதிக்கத்தொடங்கியவர்கள் அச்சங்கொண்டு விழிப்பாயினர். இவர் ஓலைச்சுவடியோடு ஒப்பிட்டுப்படித்துப் பார்த்த சங்க நூல்கள் பல.

மணமும் சட்டம்படிப்பும்

1912-ஆம் ஆண்டு சூன்திங்களில், இவருக்குத் திருமணம் நடந்தேறியது. வாழ்க்கைத் துணைவியின் ஊர் திருவனந்தபுரத்தைஅடுத்த பலராமபுரம். மணமானபின் திருவனந்தபுரத்தில் தங்கிச் சட்டக்கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டத்தேர்வில் வெற்றிபெற்றார்.

தொழில்

சட்டத்தேர்வில் தேறியபின் திருவனந்தபுரம் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில்புரியத் தொடங்கினர். இவ்வூரில் பல தமிழன்பர்கள் இவருக்கு நண்பர் களானார்கள். அவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர்கள் நீதிபதி சேஷையர், கனிமணி தேசிகவினாயகம் பிள்ளை, கே. என். சிவராசப்பிள்ளை, பண்டித முத்துச்சாமிப் பிள்ளை, இசையரசு இலட்சுமணப் பிள்ளை முதலியோராவர்.

அலுவலும் ஆராய்ச்சியும்

அந்நாளில்[1] அங்கிருந்த தமிழறிஞர்கள் புத்தன் சுந்தையில் சைவப்பிரகாசசபை என்னும் பெயருடன் அலுவ லொன்றை அமைத்திருந்தனர். மேற்கூறிய அறிஞர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஞாயிற்றுக்கிழமைதோறும் திருக்குறள் முதலிய இலக்கியங்களை முறைமையாக ஆராய்ச்சி செய்தார்கள். இவருடைய தந்தையார் வட மொழியையுங் கற்றுக்கொள்ளுமாறு இவரை இளமைப் பருவத்தில் தூண்டினர். அதன்படி இவர் வடமொழியை யும் வேண்டிய அளவு கற்றிருந்தார். அதுவும் நூலாராய்ச்சிக்கு இன்றியமையாத்தாயாக நல்லதாயி புரிந்து நின்றது. திருவனந்தபுரத்து மொழியாகிய மலையாளத்தையும் இவர் இங்குக் கற்றுணர்ந்துகொண்டார்.

எழுத்தாளரும் பதிப்பாசிரியரும்

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய மனோன் மணீயத்தை 1891-ஆம் ஆண்டில் முதல் பதிப்பாகத் தாமே வெளியிட்டிருந்தார். அப்பதிப்புக் கிடைப்பது அருமையாக இருந்தது. பல்கலைக்கழகத்தார் மனோன்மணீயப்பகுதிகளைப் பாடமாக வைத்தபோது மூலத்திலும் உரையிலும் மாறு பாடுகள் சில நிகழ்ந்திருந்தன. எல்லாவற்றையும் இவர் நன்கு ஆராய்ந்து 1922-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளிப்படுத்தினர். இவருடைய பதிப்பு எல்லோராலும் போற்றிப் பாராட்டப்பெற்றது. செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் அடிக்கடி ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எழுதினர்.

தெல்லியில் வேலை

1923-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தமது உயராகிய நெல்லையிலேயே வழக்கறிஞராகத் தொழில் புரிய எண்ணினர். திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். திருநெல்வேலியை அடைந்ததும் திருவனந்தபுரத்தில் செய்துவந்த நூலாராய்ச்சி தமிழாராய்ச்சி முதலியவைகளை இங்குத் தொடங்கினர். டி. கே. சிதம்பரநாத முதலியார், சக்கரபாணி நம்பியார், வேதநாயகம்பிள்ளை, அநந்தராம ஐயங்கார் முதலிய தமிழன்பர்களோடு தமிழ் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்திவந்தார். இங்குக் கம்பராமாயண ஆராய்ச்சிதான் முதன்மையாக நடைபெற்றது. நெல்லையில், "கம்பர்கழகம்" என்னும் பெயருடன் கழகம் ஒன்றை அமைத்து அதில் அடிக்கடி கம்பராமாயணச் சொற்பொழிவு ஆராய்ச்சி முதலியவைகளை நடத்தியதோடு கம்பர் விழாவையும் சிறப்பாக நடத்தினர். விழாவுக்கு ரா. இராகவ ஐயங்கார் தலைமை தாங்கினர். 'கம்பன் திருநாள்' என்பதைப்பற்றி

இவர் கட்டுரை ஒன்றை எழுதிப் படித்தார். அக் கட்டுரையை எல்லோரும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

சென்னையில் அகராவரிசைவேலை

சென்னைப் பல்கலைக்கழகத்தாருடைய ஆதரவில் நடந்து வந்த தமிழ் அகராவரிசைக்குப் பதிப்பாசிரியர் ஒருவர் 1926-ஆம் ஆண்டில் தேவைப்பட்டார். அப்பொழுது அகராவரிசைக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் வழக்கறிஞர் திருட்டிணசாமி ஐயர். இவர் பதிப்பாசிரியரை ஏற்படுத்துவதற்குத் தகுதியானவர் யாவரென்று தம்முடைய நண்பர்களோடு கலந்து எண்ணினர். வையாபுரிப்பிள்ளையின் நண்பராகிய பெ. நா. அப்புச்சாமி ஐயர் இவருடைய பெயரைக் குறிப்பிட்டதோடு இவருடைய கல்வியறிவுத் தன்மையையும் பெருமையையும் விரிவாக எடுத்துரைத்தார். அகராவரிசைக் குழுவினர் இவரையே ஏற்படுத்தலாம் என்று மனநிறைவு கொண்டனர். 1926-ஆம் ஆண்டு சுவம்பர்த்திங்களில் இவர் பதிப்பாசிரியர் வேலையை ஏற்றுக் கொண்டார். திரு. மு. இராகவையங்கார் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும், வை. மு. கோபாலகிருட்டிணமாச்சாரியார் வடமொழி தமிழ் இரண்டிலும் தேர்ச்சிபெற்ற பண்டிதராகவும், ஆங்கிலப்பகுதிக்குத் துணையாக இ. எஸ். வரதராசையர், சுந்தரமூர்த்தி என்பவர்களும் நியமிக்கப்பட்டனர்.

வேலை விரைந்து முடிந்தது

இந்த அகராவரிசை வேலை 1913-ஆம் ஆண்டில் சாண்ட்லர் என்னும் பெயருடைய பாதிரியார் ஒருவருடைய தலைமையில் தொடங்கப்பெற்றதாயினும் இவர் பதிப்பாசிரியராகச் சென்றபோது அகராவரிசையின் முதல் தொகுதிதான் வெளிவரக்கூடிய நிலையில் இருந்தது. காரணம் வேலை தருந்தமுயற்சியின்றி ஆமை நடையைப்போல் வெகு மெது

வாகநடந்துகொண்டிருந்ததுதான். இவர் பதிப்பாசிரியராகச் சென்றபின் வேலை விரைந்து நடக்கத் தொடங்கியது. எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துகொண்டு, வெளிவரவேண்டியிருந்த ஐந்து தொகுதிகளையும் ஏறக்குறையப் பத்து ஆண்டுகளில் வெளிவரச் செய்தார். இடையில் அகரவரிசை வேலைக்குத் தக்கதுணையான நிகண்டு, வெளிவராத பழைய நூல்கள் முதலியவைகளை ஒழுங்குபடுத்தி வெளிவரச்செய்தார்.

தமிழ்த்துறைக்குத்தலைமை

1936-ஆம் ஆண்டில் அகரவரிசை வேலை முடியத்தக்க நிலையில் இருந்தது. அப்பொழுது தமிழாராய்ச்சித்துறையின் தலைமைப்பதவி காலியாக இருந்தது. பலர் அவ்வேலையைப் பெறுதற்குப் போட்டியிட்டனர். போட்டிகட்கு இடையில் இவருக்கே அவ்வேலை கிடைத்தது. ஏறக்குறையப் பத்து ஆண்டுகள்வரை அவ்வேலையில் அமர்ந்திருந்தார். தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் வேலையை ஏற்றுக் கொண்டபிறகு அகரவரிசையின் ஏழாவது தொகுதியையும் முடித்தார்.

பிரெஞ்சு முதலிய மொழிகள்

இவர் பிரெஞ்சு, செர்மன் முதலிய மொழிகளையுங் கற்றுத் தேர்ந்தார். செர்மன் மொழியில் தேறித் தேர்வுப் பத்திரமும் பெற்றார்.

இராவ்சாகிப்

1938-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் இவருக்கு இராவ் சாகிப் என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்புச் செய்தார்கள்.

நூல்கள் கட்டுரைகள் முதலியன

பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பல நூல்கள் வெளிவந்தன. தமிழாராய்ச்சித்துறைக்கு வந்த மாணவர்கட்கு

அத்துறையில் தக்க வழிகாட்டியாக இருந்து அவரவர்கள் எடுத்துக்கொண்ட பொருள்பற்றி நன்கு ஆராய்ந்து எழுதுவதற்குத் தகுந்தவாறு அறிவுரைகள் கூறி வழிகாட்டினர். இலக்கியம் பற்றியும் இலக்கணம் பற்றியும் கவிதைகள் முதலியன பற்றியும் மொழிபைப் பற்றியும் பலவகையான ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவ்வப்பொழுது எழுதிப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டு வந்தார். சில சமயங்களில் கதைகளையும் பத்திரிகைகட்கு எழுதுவார்.

ஓய்வுக்குப்பின் நூல்வேலைகள்

பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைத் தலைவர் வேலையிலிருந்து ஓய்வுபெற்றபின் முழுநேரத்தையும் நூல் வேலையிலேயே செலவிடலானார். தமது கட்டுரை கதை முதலியவைகளை நூல்வடிவாகத் தொகுத்து வெளியிடத் தொடங்கினர். பலநூல்கள் வெளிவரத் தொடங்கின. இவர் பெரியனவும் சிறியனவுமான பல நூல்களை இளமைக் காலத்திலிருந்தே வெளியிடத் தொடங்கி விட்டார். அவ்வாறு வெளிவந்த நூல்கள் பல.

திராவிட மொழிகளில் ஆராய்ச்சி

1946-ஆம் ஆண்டில் நாகபுரியில் நடந்த கீழ்க்கலை மாநாட்டில் திராவிடப் பகுதிக்குத் தலைமை தாங்கினர். தாம் நிகழ்த்திய ஆங்கில உரையை Research in Dravidian Languages என்னும் பெயருடன் தனிநூலாக வெளியிட்டார். இதனுடைய தமிழ்மொழி பெயர்ப்பு திராவிட மொழிகளில் ஆராய்ச்சி என்னும் பெயருடன் தனிநூலாக வெளிவந்திருக்கிறது.

காஞ்சி சுவடி

1949-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத் தாரின் அழைப்பிற்கு இணங்க அங்குச் சென்று தமிழிலக்

இயலாளர்களில் காலியகாலம் பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பேராசிரியர்

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த திரு. மு. இராகவ ஐயங்காரவர்கள் 1951-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றபோது பல்கலைக் கழகத்தார் அவ் வேலைக்கு இவரை அழைத்தனர். மூன்று ஆண்டுகள் அவ் வேலையைப் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு அவ்வேலையைப் பார்க்கத் தொடங்கினர். காலியகாலம் பற்றிய தமிழ் ஆராய்ச்சியைப் பல்கலைக்கழகச் சார்பில் அச்சிடத் தொடங்கினர். ஒரு சிறுபகுதி அச்சிடப் பட்டது. 1954-ஆம் ஆண்டு செப்டம்பரில் பல்கலைக்கழக வேலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்னைக்குத் திரும்பினர். காந்தி நகரில் உள்ள தமது இல்லத்தில் தங்கி மேலும் நூல் வேலைகளைத் தொடங்கினர். பேராசிரியர் வேலையை விட்டுத் திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டபொழுது அவ்வூர்த் தமிழர்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டிச் சிறப்புச் செய்தார்கள்.

ஆங்கிலத்தில் தமிழ்த் தொண்டு

தமிழ் மொழிக்கு இவர் ஆங்கிலத்திலும் தொண்டு செய்திருக்கிறார். தமிழ் வரலாறு பெருமை முதலியவைகளைப் பற்றி ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார். 1946-ஆம் ஆண்டு முதல், இந்திய வரலாற்றுச் சபை என்னும் அமைப்போடு தொடர்பு கொண்டிருந்தார். இந்தச் சபை இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் வரலாற்று நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறது. இத் தொகுதிகளில் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி எழுதும் பொறுப்பை இவர்

மேற்கொண்டிருந்தார். கி. பி. மூன்றாவது வரையில் உள்ள முதற் பகுதியையும் அதன் பிறகு கி. பி. எண்ணூற்று நாற்பத்தைந்து வரையில் உள்ள இரண்டாம் பகுதியையும் எழுதி வந்தார். மேற்கொண்டு வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இவருடைய பதிப்புச் சிறப்புகள்

இவருடைய பதிப்புக்கள் யாவும் தனிச் சிறப்புடையனவாக விளங்கும். ஒவ்வொரு நூலும் நூற்பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாத அகரவரிசை ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியவைகளைக் கொண்டனவாக விளங்கும்.

இறுதியும் பண்பும்

இறுதிவரையில் தமிழ்த் தொண்டிலேயே ஈடுபட்டிருந்த இவர் 1956-ஆம் ஆண்டு பிப்ரவரித் தங்கள் பதினேழாம் நாள் தமது அறுபத்தெட்டாம் அகவையில் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வைப் பெற்றார். இவருடைய இறுதிக் காலத்தில் செய்து வந்த தொண்டுகள் முற்றுப் பெறாமல் நின்று விட்டன. இவர் சிறந்த அறிவாளி. அடக்கமும் பொறுமையும் அமையப் பெற்றவர். புகழை ஒரு பொருட் படுத்தாதவர். தாம் எடுத்துக்கொண்ட வேலையைச் செம்மையாகச் செய்து முடிக்கும் சீரிய பண்பு இவரிடம் நன்றாக அமைந்திருந்தது. இவருடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1955-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்களில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் கவர்னரைக்கொண்டு கேடயம் அளித்தும் பெருமைப் படுத்தினர்.

பாராட்டுப் பாடல்

இவர் அவ்வக் காலங்களில் அன்பர்கள் சிலரைப் பாராட்டிப் பாடல்கள் பாடியிருக்கிறார். அவைகளுள் திரு. வி.

உலகநாத முதலியார் . அவர்களின் மணி விழாவின்போது பாடிய வாழ்த்துப் பாடல்

"சைவ சமயத் தனித்தொண்டன் தாங்கருஞ்சீர்த்
தெய்வத் தமிழின் திருத்தொண்டன்—வையத் (து)
இறைவ னெனும்போரான் இனியான் இனிதே
உறைகழெடி னழி உவந்து."

என்பதாம்.

இவர் இயற்றியனவும் பதிப்பித்தனவுமான நூல்கள்

1. மனோன்மணீயம்
2. இலக்கியச் சிந்தனைகள்
3. தமிழன் மறுமலர்ச்சி
4. சிறுகதை மஞ்சரி
5. தமிழர் பண்பாடு
6. இலக்கிய உதயம் (இரண்டு பகுதிகள்)
7. இலக்கியதீபம்
8. இலக்கிய உலகம் (இரண்டு பகுதிகள்)
9. கம்பர் காவியம்
10. திராவிடமொழிகளில் ஆராய்ச்சி
11. காவியகாலம்
12. இலக்கிய மணிமாலை
13. சொற்கலை விருந்து.

௩௦. அ. வரதநஞ்சைய பிள்ளை

தோற்றம்

"நீர்க்காவிச் சட்டையினால் போர்த்த தேகம்
நினைவெல்லாம் தமிழாக ஆன நெஞ்சம்
சோர்வின்றித் தொண்டாற்றச் சுற்றுங் கால்கள்
சுடர்க்கவிகள் வடிக்கின்ற பொற்க ரங்கள்
கூர்ந்தெதையும் நோக்குகின்ற விழிகள் யாரும்
கும்பிட்டால் தலைவணங்கும் அடக்கப் பண்பு
சார்ந்தாரைச் சாரவைக்கும் இனிமை கொண்டான்
சால்புடையான் வரதநஞ்சைப் புலமை யோனே."

என்று திரு. செம்பியன்மாணிக்கம் அவர்களால் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டப் பெற்ற வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், கொங்குமண்டலத்திலே சேலம் மாவட்டத்தின்கண் உள்ள பெருமாள்பாளையம் என்னுஞ் சிற்றூரிலே, 1877-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் நாளுக்குச் சரியான, ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் பதினெட்டாம்நாள் பிறந்தார். தந்தையார் பெயர் அப்பாச்சாமிப் பிள்ளை, தாயார் பெயர் வரதாயி அம்மை. இவர் தோன்றிய குலம் வேளாண் குலத்துக் கருணிகர் மரபு.

கல்வி கற்றல்

வரதநஞ்சையர் ஐந்தாம் அகவையில் பள்ளியில் அமர்த்தப் பட்டார். இவருடைய தந்தையார் பள்ளிக் கூடம் வைத்துப் பிள்ளைகள் பலருக்குக் கல்விகற்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தபடியால் இவரும் தந்தையாருடைய பள்ளியிலேயே கல்வி கற்கலானார். மூன்று திங்கள்களில் தமிழ்நெடுங்கணக்கைக் கற்றுக் கொண்டார்.

நினைவாற்றலுக்கு

சிறுவர்களுக்கு நினைவாற்றல் மிகக் குறைவாக இருக்கும். சிறுவர்களுடைய நினைவாற்றலை வளர்ப்பதற்கு அக்

காலத்துக் கணக்காயர்கள் பலவழிகளைக் கையாண்டார்கள். வரதநஞ்சையப் பிள்ளையின் தந்தையாராகிய கணக்காயர் தமது பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் மாலையில் வீட்டிற்குச் செல்லும்போது ஒவ்வொரு பையனிடமும் ஒவ்வொரு மலரின் பெயரைச் சொல்லியனுப்புவார். மறுநாள் காலையில் பிள்ளைகள் பள்ளிக்கு வந்ததும் அவரவர்கட்குச் சொல்லப்பெற்ற மலரின் பெயரைக் கேட்பார். சரியாகச் சொல்லாமல் தப்பாகச் சொன்னவர்கட்குத் தக்கவாறு பிரம்படியும் கிடைக்கும். வரதநஞ்சையர் மிகு இளமைப் பருவத்திலேயே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி முதலிய நீதிநூல்களையும்; மூன்றிலக்கம், இரண்டிலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, தண்டலையார் சதகம், நீதிசாரம் முதலிய நூல்களையும் நன்முகக் கற்றுக்கொண்டார். இவர் தமது தன்னுணர்வில் நன்கு படித்தாரே யன்றி இவருடைய தந்தையார் தம்முடைய மகன் என்று தனிப் பட்ட முறையில் சிறப்பாக யாதுங் கற்பிக்கவில்லை. தம்முடைய மகன் படிப்பில் தந்தையாராகிய கணக்காயர் கருத்துச் செலுத்தாமலே யிருந்தார். ஆயினும் மற்றவர் கள் வரதநஞ்சையருடைய கல்வித்திறத்தைக் கண்டு கணக் காயர் தம்முடைய மகனுக்கு மட்டும் நன்முகக் கல்வி கற் பிக்கிறார் என்று குறை கூறினர்கள்.

பாட்டியார்

இவருடைய தந்தையைப் பெற்ற பாட்டியார் நன்முக எழுதப் படிக்கத் தெரிந்தவர். அவர் தம்முடைய பெயர னுக்குப் பாரதம், இராமாயணம் முதலிய இதிகாசக் கதை களைக் கூறி அறிவுறுத்தியதுடன் பல கதைகளையுஞ் சொல்லி அறிவுறுத்தினர்.

இவருக்கு அகவை எழு முடியும் வரையிலும் வேறு உடன்பிறந்தார்கள் யாரும் பிறக்கவில்லை. ஆகவே, இவர்

ஏழாண்டுவரையிலும் தாய்ப்பால் குடித்துக் கொண்டிருந்தாராம். தண்ணீர் குடித்துவிட்டு வருவதாகத் தந்தையாராகிய கணக்காயரிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்று தாய்ப்பால் குடித்துவிட்டுத் திரும்புவாராம். தாய்ப்பாலே நின்று கொண்டே குடித்ததாகப் பின்னாளில் கூறியிருக்கிறார்.

தொலுங்கு கற்றல்

இவருடைய தந்தையார் தனிப்பட்ட முறையில் ஒரு சிறுவனுக்குத் தெலுங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். வரதநஞ்சையருக்கும் தெலுங்கு கற்க வேண்டுமென்னும் ஆர்வம் உண்டாயிற்று. இவருடைய தந்தையார் மிகக் கண்டிப்புள்ளவர். அவரிடம் பொருந்தி வரதநஞ்சையர் தமது விருப்பங்களைக் கூற மாட்டார். ஆகவே, தம்முடைய விருப்பத்தைத் தாயாருக்கும் பாட்டியாருக்குந் தெரியப் படுத்தினர். அவர்கள் இவருடைய தந்தையாரிடத்திலே அச் செய்தியைக் கூறினர். அதற்குத் தந்தையார், "அவன் தமிழை நன்றாகப் படித்தால்போதும். தெலுங்கு படிப்பதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்," என்று கூறிவிட்டார். வரதநஞ்சையர் தெலுங்கு கற்க வேண்டும் என்னுந் தமது எண்ணத்தை மாற்றிக்கொள்ள வில்லை. தம் தந்தையாரிடம் தெலுங்கு படிக்குஞ் சிறுவனிடம் தம் தந்தையார் இல்லாத சமயங்களில் ஒவ்வொரு தெலுங்கு எழுத்தாகக் கற்றுக் கொண்டார். எல்லா எழுத்துக்களையும் நன்கு கற்றுக்கொள்ளவே தெலுங்குமொழியை எழுத்துக் கூட்டிப் படிக்கும் திறமையுண்டாகி விட்டது. ஒரு திங்களுக்குள் தெலுங்கு மொழியை இவ்வாறு கற்றுக் கொண்டார். ஆறு திங்களுக்குள் தெலுங்குப் புத்தகங்களை எடுத்துப் படிக்கும்படியான நிலைமையை அடைந்து விட்டார்.

தந்தையார் அறிதல்

தம் மகன் தெலுங்கு கற்றுக்கொண்ட செய்தி தந்தையாருக்குத் தெரியாது. தந்தையார் வீட்டில் இல்லாத சமயத்தில் ஒரு நாள் தெலுங்குநூல் ஒன்றை எடுத்து வாய்விட்டு உரக்கப் படித்துக்கொண்டிருந்தார். வெளியே சென்றிருந்த தந்தையார் அச்சமயத்தில் வீட்டிற்கு வந்து விட்டார். தம் மகன் தெலுங்கு படிப்பதைச் சிறிது நேரம் மறைவாக வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு கனைத்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார். தந்தையைக் கண்ட தனயர் தாம் படித்துக் கொண்டிருந்த தெலுங்கு நூலை எறிந்துவிட்டு ஓடியொளிந்தார்.

குறும்பு

தாயாரும் பாட்டியாரும் வரதநஞ்சையரை அருமை பாராட்டிச் சிறப்புடன் வளர்த்தார்கள். இதனால் இவருக்குக் குறும்பு செய்யும் குணம் உண்டாகியது. தந்தையார் பள்ளிக்கூடத்திற்கு வராமல் வெளியூர்களுக்குச் சென்றிருக்குங்காலங்களில், இவர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியருடைய இருப்பிடத்திலே அமர்ந்துகொள்ளுவார். மற்றைய மாணவர்களைக் கண்டிப்பார், தண்டிப்பார். வீட்டில் இருந்து தின்பண்டங்களைக் கொண்டுவருமாறு கூறுவார். தம்மோடு கூட விளையாட வருமாறு அழைப்பார். நாளடைவில் இச் செய்தி இவருடைய தந்தையாரின் காதுகளுக்கு எட்டி விட்டது. தாம் ஊரில் இல்லாத காலங்களில் பள்ளிக்கூடத்திற்குப் போகக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டதன்றி வேறொருபையனைத் தலைமாணாக்கனாகவும் ஏற்பாடு செய்துவிட்டார்.

பூசைக்குப் பின்

இவருடைய தந்தையார் செம்பினாலாகிய பிள்ளையார் உருவச்சிலை ஒன்றைவைத்துப் பூசிப்பது வழக்கம். பூசை

முடிவில் செபஞ் செய்வது தோத்திரம்பாடுதல் முதலியவை கனைச் செய்வார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த இவருக்கு நாமும் பூசை செய்யவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. அதற்குத் தகுந்த சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். தந்தை ஊரில் இல்லாத சமயத்தில் ஒரு நாள் அந்த ஆனைமுகக் கடவுளைத் தாமும் பூசித்து வழிபட எண்ணினர். தாயாரும் பாட்டியாரும் தடுத்தும் கேளாமல் விநாயகர் உருவச்சிலை இருந்த பெட்டியை எடுத்து எதிரே வைத்துக்கொண்டு பூசை பண்ணத் தொடங்கினர். தந்தையாரைப் போலவே தாமும் நீராடித் திருநீறு பூசிக் கண்மணிமாலை யணிந்து கொண்டார். ஆனைமுகக் கடவுளுக்குத் திருமுழுக்கு முதலியனவைகளைச் செய்து கற்பூர ஒளி முதலியன காட்டித் தாம் அறிந்த தேவாரப் பாடல்கள் சிலவற்றை ஓதிக்கொண் டிருந்தார். இந்தப் பூசையினையாட்டு இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. "பூசை வேளையில் காடி புகுந் தது" என்று உலகத்தார் பழமொழி ஒன்றைக் கூறுவார் கள். அஃது இவருடைய செயலிலே உண்மையாகி விட்டது. வெளியே சென்றிருந்த தந்தையார் திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டார். மைந்தனுடைய செயல் மட் டற்ற மகிழ்ச்சியை அளிப்பதற்குப் பதிலாகப் பெருஞ் சினத்தை உண்டாக்கிவிட்டது. தந்தையைக் காணவே மைந்தர் எழுந்தார். பின்னங்கால் பிடரியில் படுமாறு முழு ஆற்றலையும் காட்டிப் பிடித்தார் ஓட்டம். தந்தை மைந்தனைத் தாக்குதற்கு எண்ணினர். பூசனிக்காய் அளவு பருமனுள்ள கல் ஒன்றைத் தாக்கிக் கொண்டு விரட்டினர். இவர் ஓரிடத்தில் ஒளிந்திருந்து தந்தையா ருடைய சினம் ஒருவாறு தணிந்த பிறகு வீட்டிற்குத் திரும்பினர்.

தந்தையார் மரிவு

இவருக்கு அகவை ஒன்பதும் இவருடைய தம்பி கந்த சாமிக்கு அகவை ஒன்றும் நடந்துகொண்டிருக்கும்போது தந்தையார் தமது நாற்பதாவது அகவையில் இறைவன் திருவடி நீழலையடைந்தார். குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இவருடைய தலையில் விழுந்தது. அந்த இளம் பருவத்திலேயே கணக்காயர் வேலையை மேற்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்தி அதனால் வரும் வருவாயைக் கொண்டு காலங்கழிக்கலானார்.

மேலும் தமிழ் கற்றல்

சில ஆண்டுகளுக்குப்பின் இவருடைய தாயாரும் காலஞ் சென்றார். பல இடங்களிலும் பள்ளிக்கூடம் வைத்துக் காலந்தள்ளிக்கொண்டிருந்த இவர் மேலும் தமிழ் நூல்களைக் கற்கத்தொடங்கினர். தந்தையார் வைத்திருந்த புத்தகங்களை யெல்லாம் எடுத்துப்படிக்கலானார். முதலாவ தாக இவர் படிக்கத்தொடங்கியது கைடதம். அப் புத்தகம் மூலமும் உரையுமாக இருந்ததால் அதனைத் தாமே கற்றார். தெரியாத சொற்களின் பொருளை அகராதியைப்பார்த்து அறிந்துகொண்டார். பள்ளிக்கூடவேலை போக ஒழிந்த நேரங்களிலெல்லாம் நூலும் கையுமாக இருக்கலானார். இவ்வாறு பாரதம் கம்பராமாயணம் முதலிய பல நூல்களைக் கற்றுணர்ந்தார். இலக்கண நூல்களைத் தகுந்த ஆசிரியரிடம் பாடங் கேட்டுணர விரும்பினர். ஆனால் அந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தகுந்த ஆசிரியர் அகப்படாமல் வருந்தினர்.

முருகன் திருவருள்

பதினைந்தாம் அகவைமுதல் நல்லிப்பாளையம் என்னும் ஊரில் பள்ளிக்கூடம் ஒன்று வைத்து நடத்தினர். இவ்வூர்

நாமக்கல்லுக்கு அண்மையாகையால் விடுமுறை நாட்களில் அங்குச்சென்று உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள தமிழாசிரியர் களோடு கலந்து அளவளாவவும் இலக்கணங்களில் ஐயமேற் பட்டவைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வழியேற் பட்டது. இச் சமயத்தில் தாமே தனிப்பாடல்களை இயற்றவுந் தொடங்கினர். இவர் தமக்கு ஐயமானவைகளைப் பிற புலவர்களிடங்கேட்டால் அஃது அவர்களுக்கும் ஐயமானவைகளாகவே யிருக்கும். ஆகவே, இவர் அது யாதாக இருக்குமென்று எண்ணமிட்டுக்கொண்டு உறங்கு வார். கணவில் ஒரு தோற்றம் உண்டாகும். ஓர் ஆசிரியர் போற்று பலகையில் எழுதி விளக்குவதைப்போலத் தெரியும். விழித்துக்கொண்டு நூல்களை எடுத்துப்படிப்பார். ஐயம் நீங்கித் தெளிவு ஏற்படும் அதுதான் உண்மைப் பொருள் என்று உறுதிகொள்வார். அவ்வாறு நிகழ்வது முருகன் திருவருளே என்று மகிழ்வார்.

ஆசிரியத் தேர்வு

பிறகு ஏரகுடி என்னும் ஊருக்குச்சென்று ஆசிரியத் தொழில் பார்க்கத்தொடங்கினர். அகவை ஐம்பதுள்ள முதியவர் ஒருவரும் ஆசிரியராக வேலைபார்ப்பதற்காக வந்திருந்தார். ஊரினர் கணக்காயர் இருவருடைய அறிவுத் திறமையையும் ஆராய்ந்து தகுந்தவர்களை ஆசிரியராக அமர்த்துவது என்று முடிவு செய்தனர். தேர்வு தொடங் கிற்று. அகவை பதினைந்துள்ள இவரும் ஐம்பது வயதுள்ள மற்றொருவரும் போட்டியிடுதலைக் காண்பதற்கு மக்கள் பலர் கூடினர்கள். நூல்களைக் கற்ற சிறந்த அறிவுடைய ரெட்டியார் ஒருவர் தேர்வு வேலையை நடத்தலானார்.

" ஊதைகொள் குரும்பைமிசை சங்கிலுலவே யேற்றி
வாதையது சித்திலம் மடுத்தரிசி பெய்தே

போதினைக் காம்பல்கள் புதுக்கணன் மடுத்துப்
பேதையர்கள் சிற்றில்வினை யாடல்பெரி தெங்கும்."

என்னும் நல்லாப்பின்னை பாரதச் செய்யுளைப் படித்துப் பொருள்கூறுமாறு முதலில் முதியவரிடம் தேர்வைத் தொடங்கினர். அம் முதியவர் பாட்டைப் படித்துவிட்டுப் பொருள்கூறத் தொடங்கினர். "இது சிறு பெண்கள் சிற்றிலைமைத்துச் சிறுசோறுக்கி வினையாடுந் செய்தியைக் கூறுகிறது. சங்கை உலைப்பாத்திரமாகவும் தேங்காய் நீரை உலை நீராகவும் முத்துக்களை அரிசியாகவும், செவ்வாம்பல் மலரை நெருப்பாகவும் கொண்டு வினையாடுகிறார்கள் என்பது இதன் திரண்டபொருள்," என்று கூறினர். எல்லோரும் இரெட்டியாருடைய முகத்தைப்பார்த்தார்கள். இரெட்டியாரோ உதட்டைப்பிதுக்கினர். பிறகு பொருள் கூறிய வரைப்பார்த்து, "இளநீரே உலையாக எங்கே ஐயா கூறியிருக்கிறது?" என்று கேட்டார். முதியவர் குரும்பை மிசை என்று சொல்லியிருக்கிறதன்றே என்றார். அதற்கு இரெட்டியார், "குரும்பைமிசை என்றால் குரும்பை நீர் என்ற பொருள்? எல்லாம் சரிதான். இஃதொன்றில்தான் தவறிவிட்டீர்" என்று சொன்னார். பிறகு வரதராஜரைப் பார்த்து, "ஊறைதெளி குரும்பை மிசை" என்பதற்குப் பொருள் யாது? என்று கேட்டார் உடனே இவர், "ஊறை-காற்று: காற்றால் உதிர்க்கப்பட்டுக்கிடந்த குரும்பைகளை அடுப்புக்கற்களாக அமைத்து அதன்மேல் உலை ஏற்றுகிறார்கள். அவர்கள் கூறிய மற்றைப்பொருள் ஒக்கும்" என்று விடையிறுத்தனர். கூடியிருந்தவர்கள் "இவர் அகவை இளைஞராயினும் அறிவில் முதியவராக இருக்கிறார்" என்று சொல்லிப் பாராட்டினர்கள். மேலுஞ் சில கேள்விகள் கேட்கப்பட்டன. இறுதியில் இவரே ஆசிரியத்தொழிலுக்கு ஏற்படுத்தப் பெற்றார்.

தனிப்பாடல்

ஒருகால் இவரும் இவருடைய நண்பர் ஒருவரும் முருகக்கடவுளைப்போற்றி வழிபடும் பொருட்டுச் செட்டிக் குளம் என்னும் ஊருக்குச் சென்றார்கள். அப்பொழுது இவர் தம் நண்பர் விரும்பியவாறு,

"மட்டுத் தளையவிழ் குல்லையந் தாம மணிநிறத்தோன்
இட்டப் படுமரு கன்கதிர் வேற்கை இளையவன்வாழ்
செட்டிக் குளம்வந்து சேவிக்கின் றோம்அச் சிவனருளும்
செட்டிக் குளம்வரு மோபுன்கண் யாவையும் தீர்த்திடற்கே."

என்னும் செய்யுளைப் பாடினர். இதனைக் கேட்டு நண்பர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

இலக்கணம் கற்றல்

அளறூரில் நாகலிங்கம்பிள்ளை என்னும் பெயருடைய தமிழறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் சங்க நூல்களையும் நன்கு பயின்றவர். வரதநஞ்சையர் விடுமுறை நாட்களில் மேற்படி அறிஞரிடஞ்சென்று தொல்காப்பியத்தில் விளக்கந் பகுதிகளைமட்டும் கேட்கலானார். அவர் முகமலர்ந்து இன் சொற் கூறிப் பாடஞ்சொன்னார். இவர் நட்பமாகக்கேட்கும் கேள்விகளைக் கேட்டு வியந்து புகழ்ந்தார். "எத்தனையோ பேர் என்னிடம் பாடங்கேட்டனர்; உன்னைப்போல் நுட்ப மாக ஆழ்ந்து கற்றவர் எவரும் இலர். உன் கேள்விகள் ஆழ்ந்து கற்கவேண்டும் என்று அறிவுறுத்துவன வாயிருக் கின்றன," என்று சொல்லி இவரைப் பெரிதும் பாராட்டினர். நன்றாக ஆராய்ச்சி செய்து இவருடைய கேள்விகட்கு விடை யளிப்பதோடு, "இதன்மேலும் பொருள் இருக்கலாம். நீயும் நன்றாக ஆராய்ந்து தெரிந்துகொள்," என்று கூறுவார்.

இலக்கியம் கற்றல்

தனையூருக்கும் ஏரக்குடிக்கும் இடையில் சிக்கத் தம்பூர் என்னும் பெயருடைய ஊர் ஒன்று இருக்கிறது. அவ்வூரில் முத்தவீரமெட்டியார் என்னும் பெயருடைய இலக்கியப்புலவர் ஒருவர் இருந்தார். அவர் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களிடமும் பழகியவர். அவரிடம் இவர் ஆரியப்புலவர் பாகவதம், திருவிளையாடல் புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களிற் சில பகுதிகளைப் பாடங்கேட்டார்.

தமிழ்த்தொண்டு

இவருடைய நண்பர்கள் சிலர் இவருடைய புகழும் பெயரும் நிலவுலகத்திலே நிலைத்து நிற்பதற்காக ஏதேனும் ஒரு நூல் செய்யவேண்டும் என்றனர். "குசேலர் வரலாறு குசேலோபாக்கியானம் என்னும் பெயரோடு பாடப் பட்டிருப்பதைப் போலத் துருவனுடைய வரலாற்றைத் 'துருவோபாக்கியானம்' என்னும் பெயருடன் பாடலாம்" என்று தமது எண்ணத்தையும் புலப்படுத்தினர். இவர் அவ்வாறே செய்யத் தொடங்கித் துருவோபாக்கியானம் என்னும் பெயருடன் முந்நூறு பாடல்கள் வரை பாடினர். திருச்செங்கோட்டில் எழுந்தருளிய நாரீஸ்வரர் என்னும் பிள்ளையார்மீது மும்மணிமாலை ஒன்று பாடினர். நயனகிரி வரதராசர்மீது பதிகம் ஒன்று பாடினர். இவரிடம் பலர் தமது நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பெற்றுச்சென்றனர்.

சேடாசலக்கவிராயர்

அந் நாளில் காங்கேயம் என்னும் ஊரில் சேடாசலக் கவிராயர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் எண்வகை அவதானமும் செய்வார். வினைந்து கவி பாடுவதில் வல்லவர். இசைப் பயிற்சியும் உண்டு. இசைப் பாடல்கள், வழிநடைச்சிந்துகள் போன்ற சிறிய நூல்களை

நன்ருகச் செய்வார். இவர் ஒரு காரியத்னத முன்னிட்டு வரதநஞ்னசயரிடம்வந்தார். இவரோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தார். அவர் இயற்றிய பாடல்களனக் கேட்டு மகிழ்ந்தார். தாம் இயற்றிய பாடல்களனயும் அவருக்குக் கூறினர். பிறகு இவர்,

"கார்நிறமாம் பத்துக்கால் காணுேம்பார் வாயெட்டுச்
சேர்நிற்கும் கல்லாரைச் சேருமே—ஏர்நிக்க
ஆடும் பணமென்ருல் அஞ்சக்கை மூடுமினத
நாடியுரைப் பீர்புலவீர் நன்கு."

என்னும் வெண்பா ஒன்னற இயற்றினர். சேடாசலக் கவிராயனரப் பார்த்து, "இஃதொரு பனழய செய்யுள். நன்ருக ஆராய்ச்சி செய்து பார்த்தேன். பொருள் விளங்கவேயில்னல. தெய்வத்னதப்போலத் தாங்கள் வந்தீர்கள். இதன் பொருனளத் தாங்கள் விளக்கியருள வேண்டும்," என்று சொல்லித் தாம் இயற்றிய செய்யுனள நீட்டினர். கவிராயர் இச் செய்யுனளப் பலமுனற படித்துப் பார்த்தார். கருநிறம், பத்துக்கால், எட்டுவாய், நல்லோனரச் சேரும், ஆடும், பணம் என்ருல் அஞ்சக்கனைய மூடிக்கொள்ளும் என்று எளிதாகக் காணப்பட்டதே தவிரப் பொருள் இன்னது என்று அறியமுடியவில்னல. நன்ருக எண்ணமிட்டுப்பார்த்தார். "பிறகு சொல்லுகிறேன்" என்ருர். கவிராயர் வந்த காரியத்னத இவர் இனிது நினற வேற்றினர்.

பொருள் விளக்கம்

மறுநாள் கவிராயனரப்பார்த்து, "நேற்றுக் கூறிய பாட்டின் பொருள் விளங்கிவிட்டதா?" என்று உசாவினர். கவிராயர் இவனரப்பார்த்து "இரவில் உறக்கமின்றி எண்ணிப் பார்த்தேன். அஃது என்னேயும் எய்க்கின்றது. விளங்கவில்னல. நீர் கேட்பதைப்பார்த்தால் அதன் பொருள்

உமக்குத் தெரியும்போல இருக்கிறது. இப் பாடல் யாரால் இயற்றப்பெற்றது? உண்மையை ஒளிக்காமல் உரைத்தல் வேண்டும்," என்று வற்புறுத்தினர். இவர் நகைத்துக் கொண்டே, "வேலி என்னுடையதுதான்; என்னுடைய பிழையைப் பொறுத்தருளுங்கள்; நான் இயற்றிய பாட்டின் பொருள் திருமால்" என்றார். கவிராயர், "எவ்வாறு? பொருத்திக் காட்டுங்கள் பார்ப்போம்," என்றார். இவர், "நீங்களே பொருத்திப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். கவிராயர், "கார்—கருநிறம் சரி. பத்துக்கால் என்றால் என்ன?" இவர், "பத்துக்கால் என்பதோடு-காணும் பார்வாய், என்பதைச் சேர்த்து நிறுத்துங்கள்." கவிராயர், "பத்துக் கால் காணும் பார்வாய் - பத்துமுறை இவ்வுலகிலே பிறப்பு எடுக்கும். அடடா! இப்படியா என்னை ஏமாற்றுகிறீர்?" இவர், "எட்டுச்சீர் நிற்கும்-நல்லாரைச் சேரும்." கவிராயர், "எண்வகைச் சிறப்புக்களும் பொருந்திய எட்டுத் திருமகளிரையும், (அட்டலட்சுமிகளையும்) தருவும்." சரி ஆடும் பணம்-என்றால் அஞ்சக்கை மூடும்-இதன்பொருள் என்ன? இவர், "இதுதான் கல்வியாழத்தைக் காணும் அளவுகோல்; பணம் என்றால் பாம்பின் படம். கவிராயர் ஓகோ அப்படியா? இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. படம் எடுத்து ஆடுகின்ற பாம்பைக் கண்டால் அம் சக்கை - அழகிய கண்களை மூடிக்கொண்டு உறங்கத் தொடங்கிவிடும். புலவர்களை ஏமாற்றுவதற்கென்றே இப் பாட்டைப்பாடி உருவாக்கினீர் போலும்! எனக்கே திக்கு முக்காடிப் போய்விட்டதே" என்றார். இவர், "நான் ஒரு தும்புக்கவி ஆகையால் இவ்வாறு செய்தேன்" என்றார். கவிராயர், "இப்படியும் சில பாடல்கள் வேண்டும். இதுமாப் புடைய புலவர்களுக்கு இது சரியான வாய்ஆப்பு, மயக்கப் பொருள் தந்து எல்லோரையும் மருட்டிவிடும்" என்றார்.

பக்கோடை

பிறகு கவிராயர் வரதநஞ்சையரைப் பார்த்து ஒரு பாடல் சொல்லத்தொடங்கினர். ஒரு கணத்துக்குள்,

"கஞ்சத்து வந்த கலமகண்சேர் நின்கலியால்
கெஞ்சத் துவந்தனம்யாம் கோன்மையுடன்—குஞ்சமுறை
மாவரத நஞ்சையபூ மாதநகு வாழுபுயதா
மாவரத நஞ்சையபூ மா."

என்னும் ஒருசெய்யுளைப் பாடிநன்கொடையாக வழங்கினர். பிறகு இவரும் சேடாசலக் கவிராயரைப் புகழ்ந்து ஒரு செய்யுள் பாடினர்.

திருமணம்

இவருக்கு அகவை இருபத்து மூன்று நடந்துகொண் டிருந்தபோது பிலவ ஆண்டு வைகாசித்திங்களில் திருமணம் நடைபெற்றது. இவருடைய நண்பர்களும் செல்வர்களும் தக்கவாறு உதவிசெய்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

பாட்டு

ஒருமுறை காட்டுப்பாளையம் மிட்டாதார் இவரைப் பார்த்து, "ஐயா! வேல் என்று தொடங்கி வேல் என்று முடியுமாறு முருகக்கடவுள்மீது ஒரு செய்யுள் இயற்ற வேண்டு"மென்றனர். இவர் உடனே,

"வேலேந்தும் கையுடைய வித்தகனே மாதரியப்
பாலேந்தி ஊட்டியவாம் பல்வாயா—மாலேந்தும்
பூஞ்சோலைக் காளிகைப்பு ணணியனே நின்னோமற
வேஞ்சால நீயுமற வேல்."

என்று பாடினர்.

பொடிப் பாட்டு

இவர் கோயம்புத்தூருக்குச் சென்றிருந்தபோது அங் கிருந்த பொடிக்கடைக்காரர் ஒருவர் பொடியின்மீது

சிலபாடல்கள் பாடவேண்டும்என்று வேண்டிக்கொண்டார் இவர்,

"மலையைப் பெரிய மத்தாக்கி
வளரோ டதிரை இடைப்பெய்தே
அலையைக் கடைந்து தான்பொன்கொண்
டன்றுதேவர் வாய்க்கமுதம்
மலியத் தந்த கோபால
சாமி பின்னும் வந்துபுகை
இலையைக் கடந்து பொன்கொண்டெம்
லுக்குக் கமுதம் ஈந்தானே."

"முன்னுசி கூறி மறையோர்கள்
கோயம்புத் தானிலில்வாழ்
மன்னுசி கேட்ட குணமணி
யேயென வாழ்த்துகொண்டைக்
கன்னுசி வாக்கிய கோபால
பூபதின் கைப்பொடிதான்
சன்னுசி நாசிக்கும் யாசிக்கும்
தன்மையைத் தந்திடுமே."

என்றுஞ் சில பாடல்களைப் பாடினர். அப்பொடிக்கடைக் காரர் இவர் கோயம்புத்தூர் செல்லும்போதெல்லாம் நல்ல பொடியாக இடித்து இவருக்கு இனமாகக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதுவே பாட்டுக்கு நன்கொடை.

கணக்குவேலை முதலியன

இவர் பெருநிலக்கிழாரின் பிள்ளைகள் சிலருக்குக் கல்வி கற்பித்தார். ஊர்க்கணக்குவேலையும் இவரை யடைந்தது. இராமாயணம் முதலிய நூல்களைச் சொற்பொழிவு செய்து பட்டாபிடேகமும் நடத்திக் தக்கவாறு நன்கொடை பெற்றார்.

கரந்தைத் தொடர்பு

வரதநஞ்சைய பிள்ளையவர்களின் பேரும் புகழும் எல்லாவிடங்களிலும் பரவி நின்றன. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவராக இருந்த த. வே. உமாமகேசுரன் பிள்ளை இவருடைய கல்விச் சிறப்பு முதலியவைகளை அறிந்து அடிக்கடி வரவழைத்துச் சொற்பொழிவுகள் செய்யச் செய்தார்.

பாராட்டு

இவருக்கு 'ஆசிரியர்' என்னும் பட்டத்தை அளிக்க வேண்டும் என்று இலத்திவாடிமிட்டா பெருநிலக்கிழார் விரும்பினர். தக்காரைக்கொண்டு அளிக்கச் செய்வதே சிறந்தது என்று முடிவு செய்து கரந்தைத்தமிழ்ச் சங்கத்திற்குத் தெரியப்படுத்தினர். சங்கத்தினரும் அவருடைய எண்ணத்தை முழுமனத்தோடு ஏற்றுக்கொண்டனர். பெருநிலக்கிழார் தங்கத்தோடா ஒன்றில் இவருடைய பெயரையும் அதனை வழங்கும் தம்முடைய பெரையும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பெயரையும் பொறித்து கா. ரா. நமச்சிவாய முதலியார் தலைமையிற் கூடிய கரந்தைத் தமிழ்ச் சங்க விழா ஒன்றில் அளிக்கச்செய்தார். அப்பொழுது இவருடைய இளவல் அ. கந்தசாமிப் பிள்ளை முதலிய பலர் இவரைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் அங்குப் படிக்கப் பட்டன. அப்பொழுது இவர் பெருநிலக்கிழாரைப்பாராட்டிப் பல செய்யுட்கள் பாடினர். அப்பொழுது பாடியவைகளுள்,

"செந்தார்ப் பசுங்கிளியே சின்னச்சா மிப்பூமான்
வந்தா தரிப்பதுதாழ் வாயிடினும்—கந்தாமே
தன்னகர்ப்பே ரென்னோடு சாற்றுவரே னும்போதும்
மன்னிலத்தில் வாடியென்றோர் வாக்கு."

என்பதும் ஒன்றாகும். மற்றும் சங்கத்தாரையும் வாழ்த்தினர்.

தமிழரசி குறவஞ்சி

காரைக்குடித் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நிகழும்போது தமிழரசி குறவஞ்சி என்னும் நூல் ஒன்று இயற்றி அரங்கேற்றஞ்செய்ய வேண்டுமென்று த. வே. உமாமகேசுவனார் இவருக்கு ஒரு கடிதம் எழுதினர். முதலில் இவர் அவ்வாறு குறவஞ்சி நூல் இயற்றும் எண்ணமிலாதவராக மறுத்துரைத்தும் தமிழுலகின் வற்புறுத்தலுக்காக நான்கே நாட்களில் குறவஞ்சியைப் பாடி முடித்து வெள்ளிவிழாக் கூட்டத்தில் நிறைவேற்றினர். அவைத் தலைவராகத் திருப்பாதிரிப்புலியூர் நாவரசரடிகள் அமர்ந்திருந்தார். ஆங்கிலமும் தமிழும் வல்ல பல அறிஞர்கள் கூடியிருந்தனர். அவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர்கள், காரைக்கலியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள், காவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் முதலியோர்களாவர்.

"உலகெலாம் பாவுதமிழ் அரசிகுற
வஞ்சியெம தணைக்க டங்கி
நிலவுமா ருண்புரிபு மெனத்துணிந்து
போற்றுகிற்பாம் கெடிய கூற்ற
உலைபுருவ வேற்கைச்செப் தன்னையொரு
குறவஞ்சி எப்தத் தோன்றும்
மலைபுரையும் கடகளிற்று மாமுகத்துப்
பண்ணவனூர் மலர்த்தான் மாதோ."

என்பது குறவஞ்சியின் காப்புச் செய்யுளாகும்.

நாவரசரடிகள்மீது பாட்டு

திருப்பாதிரிப்புலியூர் நாவரசர் அடிகட்கு அரசர் நாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தபோது அடிகளாரின்

அருந்தமிழ்ப் பணியையும் சொல்வண்மையையும் பெருமை யையும் பாராட்டிச் சில பாடல்களை இவர் செய்தளிப்பினர்.

அம்மானை

"சீரார் புலிசைச் சிவஞான சண்முகனார்
ஏராரோர் வேளைமுனிந் திருப்பவர்காண் அம்மானை
ஏராரோர் வேளைமுனிந் திருப்பவரே யாமாயின்
கோரையெவ் வேளையவர் கேசிப்பார் அம்மானை
கேசிப்பார் செவ்வேளை நித்தமுங்காண் அம்மானை."

என்னும் அம்மானைப்பாட்டு அப் பாடல்களில் ஒன்றாகும்.

கட்டுரைகள்

செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், சிவநேசன் முதலிய பல பத்திரிகைகட்கு, இவர் பல கட்டுரைகள் எழுதி நல்ல தொண்டு செய்திருக்கிறார். சிவநேசன் பத்திரி கையில் இவரால் எழுதப்பெற்ற கட்டுரைகளைப் படித்து நற்பயன் பெற்றவர்கள் பலர்.

பொதுவான பண்புகள்

தமிழிலே மட்டுமன்றி வடமொழி தெலுங்கு முதலி யவைகளிலும் இவர் நல்ல புலமையுடையவர். இவருடைய இல்வாழ்க்கைக்கு ஏற்ற மனைவியார் அமைந்தமையின் வாழ்க்கையைச் சிறப்புற நடத்தினர். இவருக்கு அமிர்தம், தெய்வயானை, இலட்சுமி என்னும் பெண்மக்களும்; இராம லிங்கம் என்னும் ஆண்மகனும் மக்கட் செல்வமாகத் தோன்றினர். இவர் பள்ளிக் கணக்காயராக இருந்த கொண்டே நாட்டுக்கணக்கு இசைப்புலமை தமிழ்ப்புலமை சோதிடப்புலமை முதலிய எல்லாவற்றையும் ஒருங்கே பெற்றிருந்தார். மற்றும் வேதாந்த சித்தாந்த நூல்களிலும் தக்கவாறு தேர்ச்சி பெற்றிருந்தார். இவருடைய எல்லாத் திறமைகளையும் நன்குணர்ந்தே "புலவோன்" என்னும்

சிறப்புப் பெயரும் வழங்கப் பெற்றிருந்தது. இவரிடம் பல மாணவர்கள் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமைத் தேர்வுகளில் வெற்றி பெற்றுக் கலைக் கழகங்களில் தமிழாசிரியராகப் பணிபுரிகின்றார்கள். இவருடைய இளவலாகிய அ. கந்தசாமிப் பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தேர்வுகளான பிரவேசம் பாலபண்டிதம் பண்டிதம் என்னும் மூன்று தேர்வுகளிலும் முதல்வராகத் தேறித் தங்கத் தோடா பரிசு பெற்றவர். அவருக்கு ஆசிரியராகக் கற்பித்தவரும் இவரே.

கலைத்தொண்டு

செய்யுள் பாடல் உரைநடை எழுதல் முதலிய தனைகளில் இளமைக் காலத்திலேயே இவர் இறங்கிவிட்டார். கருணிக புராணம் என்னும் நூலைப் பிழை திருத்திச் சுத்தப் பதிப்பாக வெளியிட்டதோடு கீழ்க்கண்ட நூல்களையும் இயற்றியிருக்கிறார்.

1. திருவேளாபாக்கியானம்.
2. மனவாசிய மாலை.
3. நாரீ விநாயகர் மும்மணிமாலை.
4. நயனகிரி வரதராசர் பதிகம்.
5. தமிழரசி குறவஞ்சி.

மற்றும் பல நூல்கள் எழுத்துச் சுவடியாக இருக்கின்றன.

இறுதி

எல்லாத் துறையிலும் சிறந்து விளங்கிய இவர் தமது எழுபத்தொன்பதாம் அகவையிலே 1956-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினேராம்நாள் மண்ணுலக வாழ்க்கையைத் துறந்து விண்ணகம் புகுந்தார்.

பதினைந்து புத்தகங்களிலும் வெளிவந்துள்ள

380 புலவர் பெருமக்களின் பெயர் அகரவரிசை

		புத்தக எண்
	அகோரமுனிவர்	10
	அண்ணுமலை ரெட்டியார் (சென்னிகுளம்)	5
	அதிவீரராம பாண்டியர்	2
	அநந்தாளியப்பர்	13
5.	அநந்தபாரதி ஐயங்கார்	11
	அபிராம பட்டர்	6
	அப்துல்காதிறு ராவுத்தர்	14
	அமிர்த கவிராயர் (பொன்னங்கால்)	4
	அம்பலவாண தேசிகர் (துறைசை)	10
10.	அம்பலவாண நாவலர்	10
	அரங்கசாமி ஐயங்கார்	14
	அரங்கநாத முதலியார் (பூண்டி)	3
	அரசகேசரி	6
	அரசஞ்சண்முகனார் (சோழவந்தான்)	7
15.	அருணகிரிநாத அடிகள்	2
	அருணாசலக்கவிராயர் (சிகாழி)	3
	அருணாசலக்கவிராயர் (மு. ரா.)	10
	அழகிய சிற்றம்பலக்கவிராயர் (மிதிலைப்பட்டி)	4
	அழகிய சொக்கநாத பிள்ளை	6
20.	அழகிரிராசு	14
	அழகு முத்துப்புலவர்	15
	அவிநாசிப் புலவர்	11
	ஆண்டிப் புலவர்	13
	ஆதிமூல முதலியார் (இருக்கம்)	9
25.	ஆத்மநாத தேசிகர்	15
	ஆபிரகாம் பண்டிதர் (தஞ்சை)	9
	ஆலாலசுந்தரம் பிள்ளை (கா.)	11

		புத்தக எண்
	ஆறுமுக அடிகள்	15
	ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்)	3
30.	ஆறுமுகம் பிள்ளை (முதுகுளத்தூர்)	13
	இரட்டைப்புலவர்	2
	இரமண மகரிஷி	12
	இராகவ ஐயங்கார் (ரா.)	12
	இராசம் ஐயர்	9
35.	இராசகோபால ஐயங்கார் (வே.)	12
	இராசேசுவரி அம்மையார்	8
	இராமகவிராயர்	11
	இராமசாமி ஐயர் (இசைப் புலவர்)	13
	இராமசாமிக் கவிராயர் (மு.)	13
40.	இராமசாமிக்கவுண்டர் (சேலம்)	9
	இராமசாமி ராசு	11
	இராமச்சந்திர கவிராயர்	11
	இராமநாதச் செட்டியார். அ. (வயிரநாகரம்)	14
	இராமானுசக் கவிராயர்	6
45.	இராமலிங்க அடிகள் (வடலூர்)	3
	இராமலிங்கத் தம்பிரான் (புலிக்குட்டி)	13
	இராமலிங்க அடிகள் (சதானிய மடம்)	9
	இரெட்டியப்பட்டி அடிகள்	14
	இலக்கண முத்தையா	14
50.	இலிங்கப்ப ஐயர்	11
	இன்பகவிப் புலவர்	4
	சுரமூர்த்தியா பிள்ளை (மு. வை.)	14
	சுழத்துக்குச்சென்ற இரு புலவர்கள்	6
	உமறுப்புலவர்	5
55.	உமாபதி சிவாச்சாரியார்	4
	உமாமகேசுவரன் பிள்ளை (தமிழவேள்)	12
	உலகநாத பிள்ளை (தஞ்சை)	14
	உலகநாத முதலியார் (திரு. வி.)	15
	ஒட்டக்கூத்தர்	2
60.	ஒளவையார்	1

		புத்தக எண்
	கச்சியப்ப சிவாச்சாரியார்	4
	கச்சியப்ப முனிவர்	4
	கடிகை முத்துப்புலவர்	4
	கண்ணப்ப முதலியார் (பாரிப்பாக்கம்)	15
65.	கண்ணுச்சாமிப் பிள்ளை (காழி. சிவ.)	9
	கதிரேசச் செட்டியார் (பண்டிதமணி. மு.)	8
	கதிரைவேற் பிள்ளை (நா.)	10
	கந்தசாமி அடிகள் (சிரவணாபுரம்)	7
	கந்தசாமிக் கவிராயர் (முகலூர்)	13
70.	கந்தசாமிக் கவிராயர் (மு. நா.)	14
	கந்தசாமிப் பிள்ளை (ச. மு.)	13
	கந்தசாமிப் புலவர்	13
	கந்தசாமி முதலியார் (போதிலூர்)	11
	கந்தசாமி முதலியார் (பூசை)	11
75.	கந்தசாமி முதலியார் (மோகூர்)	9
	கந்தசாமி முதலியார் (சாத்தூர்)	8
	கந்தசாமியார் (நா.)	12
	கந்தப்ப ஞானதேசிகர்	13
	கந்தப்பையர் (திருத்தணிகை)	8
80.	கம்பர்	1
	கருணைப்பிரகாசர்	11
	கருப்பையாப் பாவலர் (கொட்டாம்பட்டி)	13
	கருவூர்த்தேவர்	6
	கலியாணசுந்தர முதலியார் (பூவை)	7
85.	கலியாணசுந்தர முதலியார் (திரு. வி.)	7
	கல்லாடர்	6
	கவிகுஞ்சர பாரதியார்	15
	கவிராச பண்டிதர்	4
	கனந்தைக்குமரன்	11
90.	கனகசபைக்கவிராயர் (வீரசைவர்)	15
	கனகசபைப் பிள்ளை (வி.)	6
	கனகசுந்தரம் பிள்ளை (தி. த.)	7
	கன்னைய நாயுடு (ஆ. வி.)	12

		புத்தக எண்
	கார்த்திகேய முதலியார் (மாகறல்)	14
95.	கார்மேகக் கவிஞர்	15
	கால்டுவெல்	6
	காளமேகப் புலவர்	2
	கிருட்டிண ஐயர் (கனம்)	13
	கிருட்டிண பிள்ளை	6
100.	கிருட்டிணமாச்சாரியார் (சே.)	9
	கிருட்டிணமூர்த்தி (கல்கி)	8
	குகனேரியப்ப நாவலர்	4
	குப்புச்சாமி ராசு (வெ.)	14
	குமரகுருதாச அடிகள் (பாம்பன்)	5
105.	குமரகுருபரர்	2
	குமாரசாமி தேசிகர்	11
	குமாரசாமிப் பிள்ளை (ம. ரா.)	9
	குமாரசாமிப்புலவர் (சுன்னகம்)	7
	குமாரசாமி முதலியார் (சேலம்)	9
110.	குமாரசாமி முதலியார் (குன்னூர்)	14
	குமாரதேவர்	4
	குருகையூர் வைணவப்புலவர்	5
	குருஞான சம்பந்தர்	10
	குருநமச்சிவாயர்	6
115.	குழந்தைக்கவிராயர்	8
	கூழங்கைத்தம்பிரான்	4
	கைலாச பிள்ளை (சிற்.)	10
	கைலாச பிள்ளை (த.)	10
	கோபாலகிருட்டிண பாரதியார்	14
120.	கோபால பிள்ளை	14
	கோபிநாதராயர் (து. அ.)	15
	கோவிந்தசாமிப் பிள்ளை (ச. க.)	9
	கோவிந்த பிள்ளை (திருச்சிரபுரம்)	.11
	கோவிந்தராச முதலியார் (கா. ர.)	7
125.	கோவிந்தராசனார் (சீனி)	11
	சகதேவ முதலியார் (சேலம்)	8

		புத்தக எண்
	சங்கரசித்தாமணிப் புலவர்	12
	சங்கர தாசர்	14
	சங்கரசுப்பிரமணியப்புலவர்	6
130.	சங்கர பண்டிதர்	10
	சச்சிதானந்த யோகிசுவர்	14
	சடகோப ஐயங்கார்	11
	சண்முகசுந்தர முதலியார் (வல்லி)	9
	சண்முகஞ் செட்டியார் (அ.)	14
135.	சண்முகம் பிள்ளை (திருமயிலை)	8
	சண்முகம் பிள்ளை (வ. சு.)	9
	சதாசிவச் செட்டியார் (கயப்பாக்கம்)	10
	சத்திமுற்றப் புலவர்	6
	சத்தியபூர்த்தி	14
140.	சந்திரசேகர கவிராச பண்டிதர்	11
	சபாபதி நாவலர்	8
	சபாபதி முதலியார் (மதுரை)	15
	சபாபதி முதலியார் (புரசை) —	8
	சபாபதி முதலியார் (காஞ்சி)	13
145.	சபாரத்தின முதலியார் (குல.)	9
	சம்பந்த சரணாலயர்	4
	சம்பந்த முனிவர்	13
	சயங்கொண்டான்	2
	சரவணக்கவிராயர் (அட்டாவதானம்)	6
150.	சரவணபவானந்தம் பிள்ளை	9
	சரவணப்பெருமாட் கவிராயர் (க.)	8
	சரவணப்பெருமாட் கவிராயர் (உ.)	13
	சர்க்கரைப்புலவர் (பொன்னேட்டி மாலை)	10
	சர்க்கரைப்புலவர் (இரண்டாவது)	10
155.	சலசலோசனர்	9
	சவராயலு நாய்கர்	13
	சவாதுப்புலவர்	13
	சற்குணர் (ச. து.)	9
	சாந்தலிங்க அடிகள்	10

		புத்தக எண்
		10
160.	சாந்துப்புலவர்	
	சாமிநாதையர் (உ. வே.)	7
	சாமிநாதையர் (சி. வி.)	10
	சிதம்பர அடிகள் (திருப்போரூர்)	2
	சிதம்பரநாத முதலியார் (டி. கே. சி.)	8
165.	சிதம்பரநாத முனிவர்	11
	சிதம்பர பாரதியார்	15
	சிதம்பரம் பிள்ளை (ப.)	9
	சிதம்பரம் பிள்ளை (மதுரை)	12
	சிதம்பரம் பிள்ளை (வ. உ.)	7
170.	சிதம்பரனார் (துடிசை இழார்)	8
	சிவகுருநாத பிள்ளை (ந.)	12
	சிவக்கொழுந்து தேசிகர்	8
	சிவசம்புப் புலவர்	7
	சிவஞான முனிவர்	3
175.	சிவஞானம் பிள்ளை (சே.)	12
	சிவஞான யோகிகள் (விருத்தை)	9
	சிவபாதசுந்தரம்	15
	சிவப்பிரகாச அடிகள் (வியாசர்பாடி)	14
	சிவப்பிரகாசர் (துறைமங்கலம்)	3
180.	சிவப்பிரகாசர் (சித்தர்)	10
	சிவாக்கிர யோகிகள்	11
	சிவாநந்தசாகர யோகீசுவரர்	14
	சிவாநந்த யதீந்திரர்	12
	சிற்றம்பல நாடிகள்	10
185.	சின்னக்குட்டிப் புலவர் (மாலை)	8
	சின்னத்தம்பிப் புலவர் (யாழ்ப்பாணம்)	6
	சின்னைய செட்டியார் (வீர. லெ.)	13
	சீனிவாச ஐயங்கார் (தி. செ.)	12
	சீனிவாச பிள்ளை (கே. எஸ்.)	14
190.	சுந்தர அடிகள் (கோடகநல்லூர்)	15
	சுந்தரதாசப் பாண்டியர்	13
	சுந்தர முதலியார் (முத்து)	10

		புத்தக எண்
	சுந்தரம் பிள்ளை (பெ.) (மனோன்மணீயம்)	3
	சுப்பிரமணிய ஐயர் (வ. வே.)	4
195.	சுப்பிரமணியக் கவிராயர் (சே. ரா.)	14
	சுப்பிரமணியதாசு (இருக்குறள் அவதானி)	9
	சுப்பிரமணிய தீட்சிதர்	5
	சுப்பிரமணிய தேசிகர்	11
	சுப்பிரமணிய பாரதியார்	5
200.	சுப்பிரமணிய பிள்ளை (வ. த.)	9
	சுப்பிரமணிய பிள்ளை (கா.)	9
	சுப்பிரமணிய முதலியார் (வெ. ப.)	7
	சுப்பிரமணிய முனிவர் (தொட்டிக்கலை)	10
	சுப்பைய ஞானதேசிகர் (வீர.)	15
205.	சுவாமிநாத தேசிகர்	5
	சுவாமிநாத பண்டிதர்	8
	சூலியன் வின்சோன்	12
	செந்திலைதையர் (காசிவாசி)	10
	செந்தில்நாயக அடிகள் (மாதை)	7
210.	செய்குத்தம்பிப் பாவலர்	7
	செல்லியா (வண்ணை)	9
	செல்வக்கேசவராய முதலியார்	7
	செவ்வந்திநாத தேசிகர்	12
	சேக்கிழார்	4
215.	சேஷாசல ஐயர் (டி. என்.)	14
	சேந்தனார்	6
	சேரமான்பெருமாள்	6
	சேஷாசல முதலியார்	10
	சைவ எல்லப்ப நாவலர்	4
220.	சொக்கநாதப் புலவர்	12
	சொக்கலிங்கச் செட்டியார் (காரைக்குடி)	7
	சோணைசல பாரதியார்	15
	சோமசுந்தர குரு	13
	சோமசுந்தர தேசிகர் (கு.)	9
225.	சோமசுந்தர நாயகர்	8

		புத்தக எண்
	சோமசுந்தரம் பிள்ளை (ம. நா.)	10
	சோலைய அடிகள்	13
	ஞானப்பிரகாசர் (சிதம்பரம்)	15
	ஞானப்பிரகாசர் (கமலை)	4
230.	ஞானப்பிரகாசர் (கல்லூர் சுவாமி)	12
	ஞானியார் அடிகள்	7
	தண்டபாணிப் பிள்ளை (நாகை)	9
	தண்டபாணியடிகள் (மாணை)	5
	தத்துவப்பிரகாசர்	4
235.	தத்துவராய அடிகள்	4
	தலைமலைகண்ட தேவர்	6
	தாண்டவராயத் தம்பிரான்	13
	தாண்டவராய முதலியார் (வித்துவான்)	8
	தாமோதரம் பிள்ளை (சி. வை.)	3
240.	தாயுமானவர்	3
	தியாகராசச் செட்டியார்	6
	திரிகூடராசப்பன் கவிராயர்	8
	திருச்சிற்றம்பலம் பிள்ளை	11
	திருநாவுக்கரசு முதலியார் (மணி.)	7
245.	திருமூலர்	6
	திருவம்பல தேசிகர்	13
	திருவேங்கடநாதர் (மாணை)	11
	தில்லைநாயக முதலியார் (தில்லை)	12
	தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை	13
250.	தேசிகவிநாயகம் பிள்ளை (கவிமணி)	8
	தேவராச பிள்ளை	13
	நடராசர் (சே.)	11
	நடராசன் (வி. சூ.)	15
	நடேச சாத்திரியார் (பண்டிதை)	11
255.	நடேச முதலியார் (மு.)	12
	நந்திக்கலம்பக ஆசிரியர்	6
	நமசிவாயப் புலவர்	6
	நமசிவாயப் புலவர் (பூனை)	11

		புத்தக எண்
	நமச்சிவாய முதலியார் (கா.)	7
260.	நம்பிகாளி	15
	நம்பியாண்டார் நம்பி	4
	நல்லசாமிப் பிள்ளை (ஜே. எம்)	9
	நல்லசிவன் பிள்ளை	7
	நல்லாப்பிள்ளை	6
265.	நவநீதகிருட்டிணை பாரதியார்	9
	நாகலிங்க முனிவர் (காஞ்சி)	7
	நாராயண ஐயர்	11
	நாராயண ஐயங்கார் (திரு)	12
	நாராயணசாமி ஐயர் (பின்னத்தூர்)	8
270.	நாராயண தீட்சிதர்	8
	நாராயண தேசிகர் (சாது)	15
	நிரம்பவழகிய தேசிகர்	4
	நீலாம்பிகையம்மையார் (நாகை)	8
	நெற்குன்றவாண முதலியார்	5
275.	பகழிக்கூத்தர்	6
	படிக்காசுத் தம்பிரான்	3
	பட்டினத்து அடிகள்	2
	பத்திரகிரியார்	15
	பரஞ்சோதியார்	11
280.	பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடல்)	4
	பரமசிவத்தம்பிரான்	11
	பரிதிமாற் கலைஞர்	4
	பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்	1
	பலராமையர் (ந.)	1
285.	பழனியப்ப பிள்ளை (தி. ஞா.)	1
	பாண்டித்துரைத்தேவர்	
	பாலகிருட்டிணை கவிராயர்	1
	பாலசுந்தர முதலியார் (தண்டலம்)	1
	பாலசுப்பிரமணியக் கவிராயர்	
290.	பால்வண்ண முதலியார் (மு)	1
	பாலுகவி அடிகள்	1

		புத்தக எண்
	பிச்சுவையர் (வேம்பத்தூர்)	14
	பிச்சுவையர் (கல்போது)	12
	பிச்சை இபுராகிம் புலவர்	15
295.	பிச்சையா காவலர்	15
	பின்னப்பெருமான் ஐயங்கார்	5
	பீமகவிப்புலவர்	14
	புகழேந்திப்புலவர்	1
	புதுமைப்பித்தன்	9
300.	புராணத் திருமலைநாதர்	6
	பூசைத்தாயார்	11
	பூரணலிங்கம் பிள்ளை (மு. சி.)	8
	பூவராகம் பிள்ளை (ஆ.)	12
	பெருமாள் கவிராயர் (திருக்குருகை)	4
305.	பேரம்பலப்புலவர்	9
	பொய்யாமொழிப் புலவர்	2
	பொன்னம்பல அடிகள்	6
	பொன்னம்பலக் கவிராயர்	12
	பொன்னம்பலசிவம்	15
310.	பொன்னம்பலம் பிள்ளை (க. சு.)	8
	பொன்னம்பலம் பிள்ளை	11
	பொன்னுச்சாமித்தேவர்	5
	பொன்னைய முதலியார்	15
	போப்பையர்	6
315.	மணிவாசக சரணாலய அடிகள்	14
	மண்டலபுருடன்	11
	மதுரகவி	13
	மதுர கவிராயர் (1)	11
	மதுரகவி பாரதியார்	15
320.	மதுரைநாயகம் பிள்ளை	10
	மயிலைநாதர் பிள்ளை	3
	மழவை மகாலிங்கையர்	13
	மறைமலையடிகள்	7
	மனோன்மணியம்மையார்	8

		புத்தக எண்
325.	மாசிலாமணி தேசிகர்	10
	மாணிக்க நாயக்கர் (பா. வே.)	8
	மாம்பழக்கவிச்சிங்க நாவலர்	4
	மீனாட்சிசுந்தரம் பிள்ளை (மகாவித்துவான்)	3
	மீனாட்சிசுந்தரக் கவிராயர் (முகவூர்)	10
330.	முத்தப்ப செட்டியார் (பாடுவாய்)	10
	முத்துக்குட்டிப்புலவர்	6
	முத்துக்குமாரத் தம்பிரான்	9
	முத்துசிவன் (ஆ.)	12
	முத்துச்சாமி ஐயர்	15
335.	முத்துச்சாமி ஐயங்கார்	13
	முத்துச்சாமி ஐயர் (வண்டானம்)	12
	முத்துச்சாமிப் பிள்ளை (தேவிபட்டினம்)	13
	முத்துச்சாமிப் பிள்ளை (புகழ்)	9
	முத்துச்சாமிக்கோனார்	7
340.	முத்துத்தம்பி பிள்ளை (ஆ.)	15
	முத்துத்தாண்டவராய பிள்ளை (சிக்காழி)	9
	முத்துத்தாண்டவர்	6
	முத்துராமலிங்க சேதுபதி (க.)	13
	முத்துராமலிங்க சேதுபதி (உ.)	14
345.	முருகப்புலவர் (சர்க்கரைமுத்து)	10
	வசைகவியாண்டான் புலவர்	6
	வடமலையப்ப பிள்ளையன்	8
	வடிவேல் செட்டியார் (கோ.)	12
	வரதகஞ்சைய பிள்ளை (அ.)	15
350.	வரதுங்கராம பாண்டியன்	13
	வரந்தருவார்	13
	வன்தொண்டர்	11
	விசயரங்க முதலியார் (பம்மல்)	8
	விசுவநாத பிள்ளை (வி.)	10
355.	விபுலாநந்த அடிகள்	7
	விருத்தாசல ரெட்டியார் (செங்கணம்)	11
	வில்லிபுத்தூரார்	2

		புத்தக எண்
	வீரகவிராசர்	5
	வீரகவிராயர் (வெண்பாப்புலி)	12
360.	வீரபத்திரப்புலவர்.	15
	வீரபாண்டியப்புலவர்	5
	வீரமாமுனிவர்	6
	வீரராகவ முதலியார் (அந்தகக்கவி)	3
	வீரராகவ முதலியார் (முத்தமிழ்க்கலி)	15
365.	வெள்ளியம்பல உபாத்தியாயர்	11
	வெள்ளியம்பலவாணத் தம்பிரான்	4
	வென்றிமாலைக் கவிராயர்	10
	வேங்கடசாமி நாட்டார் (பண்டித க. மு.)	9
	வேங்கடரமண தாசர் (சாமக்குளம்)	11
370.	வேங்கடாசலம் பிள்ளை (கரந்தைக்கவியரசு)	12
	வேங்கட்டராயனூர் காயுடு	13
	வேதகிரி முதலியார் (களத்தூர்)	12
	வேதநாயக சாத்திரியார்	8
	வேதநாயகம் பிள்ளை (ச.)	5
375.	வேலாயுத முதலியார் (தொழுவூர்)	10
	வேலுச்சாமிப் பிள்ளை (வெண்பாப்புலி)	8
	வேலைய அடிகள்	11
	வைத்தியநாத நாவலர் (இலக்கண விளக்கம்)	3
	வைத்தியநாதையர் (மகா)	13
380.	வையாபுரிப் பிள்ளை (ச.)	15